# இவர் எவ்வளவு பெரியவர்

## எபிரெயர் நிருபத்திற்கு விளக்கவுரை



இரா. கிருஷ்ணன் குட்டி

# இவர் எவ்வளவு பெரியவர்

எபிரெயர் நிருபத்திற்கு விளக்கவுரை

# இவர் எவ்வளவு பெரியவர்

எபிரெயர் நிருபத்திற்கு விளக்கவுரை

*ஆசிரியர்*

**திருவட்டார் இரா. கிருட்டிணன் குட்டி**

*பதிப்பாசிரியர்*

**ந. ஜான் ஜெயானந்தம்**

**மோரியா ஊழியங்கள்**

**தபால் பெட்டி எண் 2540**

**சென்னை - 600 030**

Publication No: 002

**முதல் பதிப்பு 2006**

Copyright: © R. Krishnan Kutty 2006

**இவர் எவ்வளவு பெரியவர்**

(எபிரெயர் நிருபத்திற்கு விளக்கவுரை)

*ஆசிரியர்*

**இரா. கிருட்டிணன் குட்டி**

*பதிப்பாசிரியர்*

**ந. ஜான் ஜெயானந்தம்**

Moriah Ministries
Post Box No. 2540
Sheboy Nagarï
Chennai - 600 030, India
Phone: 91-044-2622 4010

Moriah Ministries
C/o Bethany Gospel Hall
16 North Street, Mannarpuram
Tiruchirappali - 620 020
Tamil Nadu, India

Email: <moriahministries@gmail.com>

Cover Design: Concept Mr. N. John Jeyanandam

Graphics: Sungrafixs, <sungrafixs@yahoo.com>

Typeset by: Moriah Ministries

Printed by: J. R. Printech

## ஆசிரியர் உரை

*சற்றேனும் திட்டமிடாது,* எதிர்நோக்கற்ற ஒரு சூழ்நிலையில் எழுதியதே, “இவர் எவ்வளவு பெரியவர்” என்னும் எபிரெயர் விளக்கவுரை நூல். என் அன்பு உடன்பிறப்பு பால் இம்மானுவேலின் அழைப்பிற்கு இசைந்து, தமிழகத்திலுள்ள வடமலாபுரத்தில் 1996-ம் ஆண்டில் நிகழ்ந்த குறுகிய கால திருமறைப் போதனை அரங்கின் இறுதி நாட்களில் நானும் பங்கேற்றேன். அவ் வமையம் ரோமருக்கு எழுதிய நிருபத்தினின்று பாடங்களை நடத்த விரும்பு வதாகத் தெரிவித்தேன். ஆனால் அந்நிருபத்தினின்று தமிழகத்திலுள்ள திருமறை ஆசிரியருள் முன் வரிசையிலுள்ள, மார்த்தாண்டம் ஒய். ஜோன்சு அவர்கள் ஏற்கனவே அதை எடுத்தாயிற்று எனவும், எபிரெய நிருபத்தினின்று வகுப்புகள் எடுக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார். இதற்கு நானும் இசைந்து, எபிரெயருக்கு எழுதிய நிருபத்தினின்று இறை இயேசு கிறிஸ்து எனக்கீந்த பேரருளுக்கேற்ப வேத போதனைகளைப் புகட்டினேன்.

குறுகிய நாட்களுக்குள், எளிதில் புலப்படும் வண்ணம், எளிய உரைநடை யில், எபிரெய நிருபத்தினின்று வேத பாடங்களை எடுத்தமைக்கு அங்குள்ள உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி வரும் திருவாளர் பி. சொர்ணராஜ் அவர்கள் பெரிதும் பாராட்டினார். அதுவுமன்றி, அவ்வகுப்பு களில் கொடுத்த விளக்கவுரையை நூல்வடிவில் வெளிக்கொணர திரு. ஜோண்சு அவர்கள் மிகுந்த ஊக்கமளித்தார். காலங்கனிந்தது. . . நூல் வடிவு பெற்று, உருவெடுத்தது.

தமிழகத்தில் கல்வி கற்றோர் கணக்கற்றோர்; எனினும் காதல் கதைகளைப் படிக்கவும், கலைக் காட்சிகளைக் கண்டிடுமளவிற்கு, கருத்துச் செழிப்பும், நெறிச் செல்வமுடைய நூல்களைக் கற்பதில்லை; காலத்தையும் நேரத்தையும் செலவிடு வதுமில்லை. ஆன்மீக ஆதாயமற்ற, காலத்தால் அழிகின்ற, கற்பனைக் கதை களிலும், கைப்பிடியில்லாத கத்தியைப்போன்ற கலைகளில் தலை சாய்த்து கனவு காண்போரும் எண்ணிலடங்காதோர். அத்தகையோர் கட்டுவடம் போன்ற கண் ணியமான கருத்து நெறி நூற்களைக் கண்ணுறுவதில்லை, கற்பதுமில்லை. சராசரி மனிதர்கள் மட்டுமன்றி, பெருவாரியான கிறிஸ்தவ விசுவாசிகளுங்கூட இன்னாட் களில் ஆவியை வலுவாக்கும் நன் நூற்களை வாசிப்பதில் பின்தங்கிய நிலை யிலேயே உள்ளனர். பாடற் ஒலி நாடாவை வாங்குவதற்குப் பரவசங்காட்டுவர்!

ஆனாலும் பக்தி விருத்திக்குரிய ஆன்மீக நூற்களை வாங்க முன்வருவோர் குறைவே. பிரசுரிக்கப்படும் நூற்கள் விற்பனையாவதும் சிரமமே. எனவே எழுத் தாளர்கள் இத்தகைய நூற்களை இயற்றவும், கிறிஸ்தவ வெளியீட்டாளர்கள் அவற்றை வெளியிடவும் தயங்குகின்றனர்.

திருமறை நூல்களுள் தூய யோவான் எழுதிய அருட்செய்தி நூல், தூய லூக்கா எழுதிய இரு நூல்கள், தூய பவுல் ரோமருக்கு எழுதிய நிருபம், ஆகியவை என்னை வெகுவாகக் கவர்ந்துள்ள நூல்களாகும். ஆனால் யூதர் களுடைய பலி முறைமைகளையும், ஆசாரிய அருட்பணிகளையும் சித்திரித் துள்ள எபிரெயருக்கு எழுதிய நிருபத்தை விளக்குவதற்கு நான் இதுவரை பேரார்வங்காட்டியதில்லை.

எபிரெய நிருப ஆசிரியர் பழைய ஏற்பாட்டு நூலில், குறிப்பாக மோசே யின் ஐந்தாகமங்களில் நுட்பமான அறிவுடையவர்; இந்நிருபத்தின் வாயிலாக, அவற்றின் மறை பொருளையும், அந்த நிழல் சித்திரங்களில் புனைந்துள்ள மெய்ப்பொருளினைத் தெளிவாக வெளிக்கொணர்ந்துத் தெளிவூட்டிய ஆசிரிய ரின் தர்க்க திறனாய்வும் போற்றற்கரியதாம். மார்டின் லூதர் கூறினாற்போன்று, இந்நூலின் ஆக்கியோன் அலெக்சாந்திரியாவில் தோன்றிய,ஆவியின் அன லுள்ள, ஆய்வு திறனும்,சொல்வளமும் மிக்க, ஒரு மறைநூல் மாமேதை என் பதே, என் பணிவான கருத்தாகும்.

வான்தூதர்கள், இறைவாக்கினர்கள், மோசே, யோசுவா, தலைமை ஆசா ரியர், இறை கூடாரம், மற்றும் பலிமுறைமைகள், பண்டிகைகள், உடன்படிக்கை கள் போன்ற அனைத்தையும் விட **"இவர் எவ்வளவு பெரியவர்"**; ஆம்! இறையோன் இயேசுவே எவ்வகையிலும் மிகமிக உன்னதமானவர். இதைப் பறைச் சாற்றுகின்ற இவ்விளக்கவுரையின் வாயிலாக,"கிறிஸ்தவ விசுவாசிகள் இயேசுவை அறிகிற அறிவில் வளர்ந்தோங்கி, அவருடைய மகிமையைக் கண்ணுற்று ஆன்மீக மேம்பாடு அடைந்து, சாட்சிகளாய் அவருக்கு எங்கும் தொண்டாற்றிட, பழைய ஏற்பாட்டின் மெய்ப்பொருளாயுள்ள கர்த்தர் கிறிஸ்தேசு உதவுவாராக" என்ற மன்றாட்டுடன் வாசகர் கரங்களில் இந்நூலை வைக்கிறேன்.

இந்நூலினை வெளியிடக் கிடைக்கப்பெற்ற இறையருளுக்காகத் துதித்து இதை எழுதுவதில் என்னை ஊக்குவித்த உடனூழியர் ஜோன்சு அவர்களுக்கு மீண்டும் என் இதய நன்றிகள்! இந்நுலை நல்ல முறையில் அழகிய வடிவில் அச்சிட்டு,வெளியிட முன்வந்துள்ள மோரியா ஊழியத்தாருக்கும் என் இதயம் கனிந்த நன்றியை உரித்தாக்குகிறேன். இந்நூல் விசுவாசிகளின் ஆன்மீக நலனுக்கு உதவிட ஊக்கமாய் மன்றாடுகிறேன். எல்லாத்துதியும், புகழும், மேன் மையும் இறைவன் இயேசுவுக்கே, ஆமென்!

கடமற்றம், மார்ச்சு 2006

இரா. கிருட்டிணன் குட்டி

## *பதிப்பாசிரியர் உரை*

***கிறிஸ்தவ*** இறைமக்களின் ஆவிக்குரிய விசுவாச வளர்ச்சிக்கும் மேன்மைக்கும் ஏற்ற முறையில், இனிய தமிழில், சத்தியத் திருமறையின் கோட்பாடுகளை விளக்கும் பிரசுரங்கள் வெகு குறைவே! ஆயினும், உணர்ச்சி வசப்படுத்தும் கருத்தாழமற்ற கற்பனைக் கதைகளும், தங்களது ஊழிய மேன்மைகளைப் பறைசாற்றும் நூல்களும், பத்திரிக்கைகளுமே இந்நாட்களில் பரவலாக வெளிவருகின்றன. இத்தகைய நூல்கள், படிப்போரின் ஆன்மீக வளர்ச்சிக்கேற்ற பலமான ஆகாரம் வழங்குவதில்லை (1 கொரி. 3:2; எபி. 5:14). இச்சூழ்நிலையில் ஆழ்ந்த திருமறைப் போதனைகள் கொண்ட இறைநூலாக இவ்விளக்கவுரை வெளிவருவது வரவேற்கத்தக்கது. அவ்வரிசையில் இந்நூல் முதன்மை இடத்தைப் பெறுகிறது எனக்கூறின் மிகையாகாது.

இதன் ஆசிரியர் தேவ ஊழியர் திரு. இரா. கிருட்டிணன் குட்டி அவர்கள் தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கு ஆற்றும் அரும் பெரும் திருப்பணியாக இது அமைவதால், தமிழ்க்கிறிஸ்தவப் பெருமக்கள் அன்னாருக்குப் பெரிதும் கடமைப் பட்டுள்ளனர்.

இவ்விரிவுரையின் ஆசிரியர் இதைத் தன் நுண்ணிய அறிவுடனும், பரந்த இறை அனுபவத்துடனும் மட்டுமல்ல, பல ஆங்கில வேதாகம விளக்கவுரைகளையும், ஆராய்ச்சி நூல்களையும் படித்து அவைகளைத் துல்லியமாகத் துருவி ஆய்ந்து, தள்ளுவனவற்றைத் தள்ளியும், தேவையானவற்றைச் சேர்த்தும் அழகுற எழுதியுள்ளார். ஆழமான போதனைகளையும், நீண்ட எபிரெய நிருபத்தில் அடங்கியுள்ள சத்தியங்களையும், பழைய உடன்படிக்கையில் நிழலுருவகச் சித்திரமாக அமைந்துள்ள நபர்கள், முறைமைகள், பண்டிகைகள் யாவும் எடுத்துக்காட்டும் மெய்ப்பொருளையும் அழகாகவும், தெளிவாகவும் எடுத்து இவ்வுரையில் விவரித்துள்ளார். இதைப்படிப்போர் அனைவரும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தினால் உருவாக்கியுள்ள புதியதோர் உடன்படிக்கையின் ஆவிக்குரிய சிறப்பான இறைச்சத்தியங்களை எளிதில் புரிந்துகொண்டு, அவைகளை அனுபவமாக்கிக் கொள்ளும்வகையில் இந்நூல்

வரையப்பட்டுள்ளது. பல்சுவை விருந்தை அன்புடன் அழகாக அடுக்கி இலையில் பரிமாறும் வண்ணம், ஆரோக்கியமான போதனைச் சத்தியங்களை நம் முன்பாக கவர்ச்சியாகப் பரப்பி, ஆத்துமப் பசியைத் தூண்டி விடுவதாக இவ் விளக்கவுரை அமைந்துள்ளது.

நம் ஆசிரியர் இவ்விளக்கவுரைக்கு அளித்திருக்கும் முன்னுரை நமக்கு ஓர் அரும்பெரும் பொக்கிஷப் பெட்டகமாகும். இதில் அநேக அரிய விவரங்கள் அடங்கியுள்ளன. அப்போஸ்தலனாகிய பவுலே இந்நிருபத்தை ஆக்கியோனாக இருக்கக்கூடும் என்று ஆக்கப்பூர்வமான கருத்துடையவனாக நான் இருப்பினும், இவ்விரிவுரை ஆசிரியர் எழுதியுள்ள *"இந்நிருபத்தை ஆக்கியோர் யார்?"* என்ற பகுதி ஒரு பெரும் ஆராய்ச்சியாக அமைந்துள்ளது. இத்தகைய சிந்தனையாளர்கள் நம் தமிழ் நாட்டுத் திருச்சபைகளில் குறைவே. தங்கள் சொந்த அனுபவங்களை நம்பி, தத்தம் மனவிருப்பத்தின்படி பற்பல திக்கிலும் மக்களை இழுத்துச் செல்லும் கவர்ச்சிப் போதகர்கள் பெருகியுள்ள இந்நாட்களில், இறை மக்களை நல்வழிபடுத்தி, தகுந்த ஆரோக்கியமான உபதேசங்களை வழங்கும் அருமையான போதனைத் தலைமுறையை எழுப்ப இது பெரிதும் உதவும்.

எபிரெயருக்கு எழுதிய நிருபத்தில் அடங்கியுள்ள கருத்துகளை யாவரும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் அதைப் பகுதி பகுதியாகப் பிரித்து, பத்தி பத்தியாக இதில் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்நூலாசிரியர் பற்பல ஆசிரியர்களின் எழுத்துகளை மேற்கோள் காட்டி, தன் சிந்தனைகளுக்கு வலுக்கொடுத்திருப்பது இவ்விரிவுரையின் ஒரு சிறப்பு அம்சமாகும். மேலும் வேதப்பண்டிதர்களுக்கிடையில் பெரும் பிரச்சனைக்குரியனவாக விளங்கும் எச்சரிக்கைகள் இந்நிருபத்தில் ஐந்து உள. அவ்வெச்சரிக்கைகளை இந்நூலாசிரியர் தனித் தனியாகக் குறிப்பிட்டு, தகுந்த விளக்கங்களைக் கொடுத்து, சிக்கல்களைப் போக்கி, அவற்றை ஒவ்வொரு விசுவாசியும் தேவனிடமிருந்து பெரும் தேவ எச்சரிப்புகளாக்கி, நம் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு ஆதாரமாக்கித் தந்துள்ளது இப்புத்தகத்தின் மற்றொரு சிறப்பு.

இவ்வகையில், இவ்விளக்கவுரை தமிழ்க் கிறிஸ்தவ மக்களுக்கு ஓர் அரும் பெரும் இறைக் கொடையாகும். குறிப்பாக ஆங்கிலம் அறியாத நிலையில், அம்மொழியில் பெருக்கமாக பரவியிருக்கும் புத்தகங்களில் எடுத்து வழங்கியுள்ள அருமையான இறைச் சத்தியங்களையும், வியாக்கியான போதனைகளையும் அனுபவிக்க இயலாதவாறு, தமிழ் மொழி மட்டுமே தெரிந்திருக்கும் தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கு, இது பெரும் ஆசீர்வாதத்தைக் கொண்டு வருமென்பதில் ஐயமேதுமில்லை.

இதன் கைப்பிரதியை அச்சேற்றுவதற்கான பொறுப்பை மார்த்தாண்டம் சகோதரர் ஒய். ஜோன்ஸ் அவர்கள் என்னிடம் ஒப்படைத்தார். கர்த்தருடைய பெரிதான கிருபையினாலும், மற்றும் என்னுடனிருந்த சில அன்புச் சகோதரர் களின் உதவியுடனும் இது பிரசுரத்திற்குத் தயாராயிற்று. இதற்காகப் பெற்றுக் கொண்ட தேவ கிருபைக்காகவும், ஏற்ற உதவிகளுக்காகவும் நான் என் கர்த்த ரைப் பணிந்து துதிக்கிறேன். ஆசிரியரின் மொழி நடையிலும், வாக்கிய அமைப்புகளிலும் தேவையான சில மாற்றங்கள் செய்யவேண்டிய அவசியம் எழுந்தது. கருத்துக்கோர்வைக்காக ஆசிரியரின் சிந்தனைக்கு மாற்றம் வருவிக் காத வகையில், ஆங்காங்கு சிற்சில பகுதிகளை ஒழுங்கு படுத்தியுள்ளேன். வாசகர்கள் இறைச்சத்தியங்களை எளிதில் புரிந்துக்கொள்ளும் வகையில் பக்கம் 132-ல் காண்கிறது போல், கட்டம் கட்டி சில சத்தியங்கள் விளக்கப்பட்டிருக்கின் றன. போதனையோடுள்ள சில கருத்துக்களும், ஆசிரியரின் அனுமதியுடன் தெளிவு படுத்தப்பட்டிருக்கின்றன.

ஆழ்ந்த அறிவும், சிந்தனைகளுடன் கூடியதும், ஆரோக்கியமான உப தேசங்கள் கொண்டதுமாய், விசுவாசியை உறுதிப்படுத்தி வலுவாக்கும் வகையில், இறைச்சத்தியங்கள் பல ஏந்தி, அதை உள்ளவாறு விளக்கும் ஓர் அரும்பெரும் பெட்டகமாக இவ்விளக்கவுரை உள்ளது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம் திருநாம மகிமைக்காக இந்நூலைப் பயன்படுத்துவாராக என்ற விண்ணப்பத் துடன் வாசகர்முன் அர்ப்பணிக்கிறோம்.

சென்னை,
மார்ச்சு, 2006.

ந. ஜான் ஜெயானந்தம்

## *வாழ்த்துரை*

கிறிஸ்துவுக்குள் என் அன்புச் சகோதரர் கிருஷ்ணன் குட்டி அவர்கள் எழுதியுள்ள இவ்விளக்கவுரையை விசுவாசிகளாகிய கிறிஸ்தவப்பெரு மக்களுக்கு அறிமுகம் செய்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். என் உடன் ஊழியராகிய இவரை நான் கடந்த 45 ஆண்டுகளாக நன்கு அறிவேன். அவர் மலையாளத்திலும்,தமிழிலும் சிறந்த இறையியல் பேச்சாளர். மலை யாளத்தில் அரிய பல நூற்களை இயற்றியுள்ளார்; சில விருதுகளையும் பெற்றுள்ளார்.

நம் தமிழ் மொழியில் நல்ல இறையியல் நூற்கள் பல இல்லையே என்ற ஏக்கம் பல ஆண்டுகளாக எனக்கிருந்தது. இந்நூல் என் உள்ளத்தின் வாஞ்சை யைத் தணித்துள்ளது.

புதிய ஏற்பாட்டில் உள்ள எபிரேயருக்கு எழுதிய நிருபம் எளிதில் புரிந்து கொள்ளக்கூடியதொன்றல்ல எனப்பலரும் கருதி, அதை ஒதுக்கி விடுகின்றனர். இதைத் தெளிவுபடுத்தித்தரும் ஏற்ற நூற்கள் தமிழ் மொழியில் இல்லை. இக் குறையைக் கிருஷ்ணன் குட்டி அவர்கள் நிவர்த்தி செய்துள்ளார். இதனைப் பகுதிகளாகப்பிரித்து,எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையியல் விளக்கி யிருப்பது தமிழ் நாட்டுக் கிறிஸ்தவர்களுக்கு ஓர் அரிய வெகுமதியாகும்.

இந்நிருபத்தை ஆக்கியோன் யார் என்பது உறுதியாகாத நிலையில், அது ஏன் அவ்வாறு உறுதிப்படுத்த இயலாதிருக்கிறதென்பதனைப் பற்றிய ஆசிரியரின் ஆய்வு மிகவும் பயனுடையது ஆகும். கிறிஸ்தவப் பெரியோர் களுக்கிடையே சர்ச்சைக்குரிய போர்க்களமாகக் காணப்படும் 6-ஆம் மற்றும் 10-ஆம் அதிகாரங்களை, ஆசிரியர் அழகிய எளிய முறையில் நன்கு விளக்கி யுள்ளார். இந்நிருபத்தில் மையமாக அமைந்துள்ள ஏழாம் அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் படவுருவகமானவர் மெல்கிசேதேக்கு ஆவர். பழைய ஏற்பாட்டில் இவர் சடுதியாகத் தோன்றி மறைந்துவிடுபவராகவே காட்சியளிக் கிறார். அவருடைய ஆசாரிய ஊழியத்தைப்பற்றிய மேன்மையான தெளிவான குறிப்புகள் 7-ஆம் அதிகாரத்திலேயே உள்ளன. பல கேள்விகள் எழுப்பக்கூடிய இவ்வதிகாரத்திற்கு எளிய அரிய விளக்கங்களைக் கொடுத்திருப்பது இப்புத்தகத்தின் சிறப்பாகும்.

இந்நிருபத்திற்கு ஆங்கில மெழியில் அருமையான விளக்கவுரை நூற்கள் பல உள. அவைகளைப் படிக்கவியலாத தமிழ்க் கிறிஸ்தவர்கள் பல நூற்களுக் குச்சமமாக உள்ள இவ்விளக்கவுரையைப்படித்து பயனடைவர் என்பது உறுதி. நாம் அருமையாகப் பெற்றுள்ள திருமறையை ஊன்றிப்படிக்க விரும்பும் ஆர்வமுள்ள ஒவ்வொரு கிறிஸ்தவனின் கரங்களிலும் அவசியம் இருக்க வேண்டிய புத்தகம் இது. மற்றும் திருச்சபைகளில் வேதபாடத்தைப் போதிப்பதற்குப் பேருதவியாகவும் இது அமையும்.

எபிரேய நிருபத்தின் நடுநாயகமாக உள்ள ஒப்பற்ற இறைத்திருகுமாரன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உன்னத நாமம் இந்நூலின் மூலம் மகிமையடைவதாக.

மார்த்தாண்டம்,

ஏப்பிரல் 2006.

ஓய். ஜோஸ்ப்

## *இந்நூலாசிரியரைப்பற்றி*

**தென்குமரி மாவட்டத்தில்** வரலாற்றுப்புகழ் திருவட்டாரில் 1932-ஆம் ஆண்டு பிறந்த திரு. கிருஷ்ணன் குட்டி அவர்கள், தன் குடும்ப பாரம்பரிய இந்து மதப்பக்தியில் வளர்க்கப்பட்டார். பின்னர் இவர் பொதுவுடமைக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டு, ஒரு கம்யூனிசத் தொண்டராக விளங்கினார். அச்சூழலில் அவர் தன் இருபத்தைந்தாவது வயதில் இறை வார்த்தையாகிய பரிசுத்த வேதாகமத்தை வாசிக்க நேரிட்டது. அதன் விளைவாக மெய் இறைச்சத்தியத்தை அறியும் வாய்ப்பைப்பெற்று, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே மெய்வாழ்வு எனக்கண்டு கொண்டார். இது அவரது வாழ்க்கையை முற்றும் மாற்றிவிட்டது. இயேசு கிறிஸ்துவைத் தன் ஆன்ம இரட்சகரும், ஆண்டவரும், இறைவனுமாக ஏற்றுக்கொண்டு, அவர் சேவைக்கே தன் வாழ்க்கையை முற்றும் அர்ப்பணம் செய்துள்ளார்.

இவர் ஒரு சிறந்த பேச்சாளர்; வேத போதகர். தமிழ் நாட்டிலும் கேரளாவிலும் பல இடங்களில் கிறிஸ்தவச் சபைகளில் இறைச்செய்தியைக் கொடுத்து உழைத்து வருகிறார். பிற மதங்களின் நூற்களைக் கற்றறிந்துள்ள இவர் அவைகளின் போதனை, வரலாறு, தத்துவங்கள், கராச்சாரங்கள் ஆகியவற்றை ஆய்ந்து அனைத்து மத போதனைகளிலும் வல்லுநராகத் திகழ்கிறார். திரு மறைக் கோட்பாட்டை இவர் எங்கும், எவருக்கும் தைரியமாக உயர்த்திப் பிடித்து, பறைசாற்றி வருகிறார்.

மலையாள மொழியில் நாற்பதிற்கும் அதிகமான நூற்களை எழுதி, கிறிஸ்தவ இலக்கியத்துறையில் ஒரு முத்திரை பதித்துள்ள இவரைப் பாராட்டி, கேரளாவைச்சேர்ந்த "கிறிஸ்தவ இலக்கிய அக்கடமி", "கோட்டயம் மக்கள் மன்றம்" ஆகியோர் விருதுகளை வழங்கியுள்ளனர். இவருடைய மலையாளப் படைப்பாகிய "ஈசுவரன் மனிதன் கிறிஸ்து", "கிறிஸ்தவ வீட்ஷணம்" (கிறிஸ்தவக் கண்ணோட்டம்) ஆகிய நூற்களுக்குக் கேரளக் கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்தார் விருதுகள் வளங்கியுள்ளனர்.

## *நன்றி உரை*

***இப்புத்தகத்தின்*** அச்சுக் கோப்பைப்படித்துப் பிழைகளைப் போக்கியும், இலக்கணத் தவறுகள்ள அகற்றியும், மொழி நயத்தை ஊட்டியும், சில வாக்கிய அமைப்புகளுக்கு வேறுவடிவு கொடுத்துத் தெளிவாக்கியும், இவ்வாறு பெரிதும் உதவியுள்ள கிறிஸ்துவுக்குள்ளான சகோதரர்கள் பலர். அவர்கள் அனைவருக்கும், மற்றும் பிழைகள் நீக்கிக்கொடுத்த முனைவர் யா. தா. பாசுகரதாசு அவர்களுக்கும் என் உள்ளார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்நூலுக்கு மதிப்புரை வழங்கியுள்ள இறைப்பணியாளர் ஓய். ஜோன்சு, அவர்களுக்கும் என் உள்ளங்கனிந்த பாராட்டுகள். இப்புத்தகம் முழுவதையும் கணிப்பொறியில் ஏற்றி, ஏற்ற புத்தகவடிவு அமைத்துக்கொத்த திரு. ப. ஜான் வெஸ்லிக்கும் என் நன்றி உரித்தாகுக.

*ந. ஜான் ஜெயானந்தம்*

# பொருளடக்கம்

## முன்னுரை


1. நூலின் தலைப்பு 1
2. ஆக்கியோன் 2
3. ஆக்கியோனின் எழுத்து வன்மை 13
4. இந்நிருபம் யாருக்கு எழுதப்பட்டது? 14
5. இந்நிருபத்தின் நோக்கம் 17
6. எழுதிய காலமும், இடமும் 19
7. எபிரெயர் 21


## நிருபத்தின் பிரிவுகள்

### பகுதி 1

### புதிய உடன்படிக்கையின் நாயகர் — பழைய உடன்படிக்கைத் தலைவர்களைக் காட்டிலும் மேலானவர் (1:1 – 7:28)


**I.** புதிய உடன்படிக்கையை வெளிப்படுத்தியவர், பழைய உடன்படிக்கையை வெளிப்படுத்தியவர்களிலும் மேலானவர் (1:1–2:18) 23

1. இயேசு கிறிஸ்து இறைவாக்கினர்களிலும் மேலானவர் 1:1-3 24
2. இயேசு கிறிஸ்து திருத்தூதர்களைக் காட்டிலும் மேலானவர் 1:4-14 - 2:5-18 31

*முதலாம் எச்சரிக்கை (2:1-4)* 39

3. இயேசு கிறிஸ்துவினால் மட்டுமே இரட்சிப்பு 2:5 - 2:18 45

**II.** பழைய உடன்படிக்கையின் அப்போஸ்தலர்களிலும் இயேசு கிறிஸ்து மேலானவர். (3:1 - 4:13)

1. இயேசு கிறிஸ்து மோசேயைவிட மேலானவர் 3:1-6 57

***இரண்டாம் எச்சரிக்கை (3:7-19)*** 62

2. இயேசு கிறிஸ்து யோசுவாவைவிட மேலானவர் 4:1-13 68
3. விசுவாசிகளுக்கு இனி வரப்போகும் இளைப்பாறுதலின் காலம் (4 : 9-11) 71

## பகுதி 2

## புதிய உடன்படிக்கை நாயகரின் ஊழியமும், அதன் மேன்மையும் (4:14–7:28)


I. இயேசு கிறிஸ்து பழைய ஏற்பாட்டு உடன்படிக்கையின் ஆசாரியர்களிலும் மேலான ஆசாரியர். (4:14-6:20) 75

1. இயேசு கிறிஸ்துவின் ஆசாரியத்துவத்தின் மேன்மை 4 : 14-16 76

2. தலைமை ஆசாரியருக்குரிய தகுதிகள் 5:1-4 80

3. இயேசு கிறிஸ்துவில் இந்தத் தகுதிகள் எவ்விதம் நிறைவேறின 5:5-10 82

*மூன்றாம் எச்சரிக்கை (5:11-6:12)* 87

4. வாக்குத்தத்தங்களில் உள்ள பற்றுறுதி 6:13-20 102

II. இயேசு கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான ஆசாரியத்துவமாம் (7:1-28)

1. மெல்கிசேதேக்கின் முறைமை 7:1-10 106

2. இயேசு கிறிஸ்து மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான தலைமை ஆசாரியர் 7:11பகுதி 3-28 112


## பகுதி 3

## புதிய உடன்படிக்கை பழைய உடன்படிக்கையைவிட மேலானது (8:1–9:28)


I. புதிய உடன்படிக்கையின் மேன்மை (8:1-13)

1. புதிய ஆசாரியரின் மேன்மை 8:1 123

2. மெய்யான பரலோகக் கூடாரத்தின் மேன்மை 8:2-5 124

3. புதிய ஆசாரியத்துவத்தின் மேன்மை 8:6 126

4. புதிய உடன்படிக்கையின் மேன்மை 8:7 127

5. பழைய உடன்படிக்கை உருவழிந்து போயிற்று 8:8-13 127

6. பழைய, புதிய உடன்படிக்கைகளுக்கிடையே உள்ள வேறுபாடுகள் 132

II புதிய உடன்படிக்கை அருட்பணி, பழைய அருட்பணியிலும் மேலானது (9:1–28)

1. பழைய உடன்படிக்கையின் பொருள் 9:1-10 **134**

2. புதிய உடன்படிக்கையாகிய அருட்பணியின் மேன்மை 9:11-28 **143**

3. புதிய உடன்படிக்கைக்குரிய மத்தியஸ்தரின் மேன்மை 9:15-17 **146**

4. புதிய உடன்படிக்கை இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் பிரதிஷ்டைபண்ணப்பட்டது 9:18 - 22 148 **148**

## பகுதி 4

## புதிய உடன்படிக்கையின் பலி, பழைய உடன்படிக்கை முறைமையின் பலிகளிலும் மேலானது (10:1–39)

**I.** பழைய பலிகளின் பயனின்மையும், கிறிஸ்து ஒப்புக் கொடுத்த பலியின் மேன்மையும். (10:1-18)

1. புதிய ஏற்பாட்டுப்பலி, பழைய முறைமையாயுள்ள பலிகளின் மெய்ப்பொருள் ஆகும் . 10:1-4 **157**
2. பழைய ஏற்பாட்டுப் பலி முறைமைகளின் மெய்ப் பொருளே புதிய ஏற்பாட்டுப் பலி. 10:5-10 **159**
3. கிறிஸ்துவின் ஒரே பலியும், அதன் மேலான தன்மைகளும். 10:11-18 **164**

**II.** இயேசு கிறிஸ்துவே தேவனின் திருச்சமூகத்திற்குச் செல்லுவதற்குரிய ஒரே பாதை (10:19-25)

1. புதியதும் ஜீவனுள்ளதுமான பாதை 10:19 **166**
2. புதிய பாதையின் வாயிலாகப் பெறுகின்ற மேலான உரிமைகள் 10:20-22 **167**
3. விசுவாசிகளின் கடமைகள் 10:22 - 25 **168**

*நான்காம் எச்சரிக்கை (10:26-31)* **170**

**III.** உறுதியாக நிலைத்திருப்பதற்குரிய அறைகூவல் (10:32-39)

1. விசுவாசிகள் கடந்த கால வாழ்க்கையை நினைத்துக் கொள்ளுதல் 10:32-34 **176**



2

2. விசுவாசிகள் நிகழ்கால வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டியவைகள் 10:35,36 177

3. விசுவாசிகள் ஒளிமயமான எதிர்காலத்தை எதிர் நோக்குதல் 10:37-39 178

## பகுதி 5

## விசுவாச வாழ்க்கையின் மேன்மை (11:1–12:29)

I. விசுவாசத்தின் இயல்பு நிலை (11:1-3) 181

1. விசுவாசத்திற்கு ஒரு விளக்கம் 11:1 182

2. விசுவாசத்தின் சான்று 11:2 183

3. விசுவாசத்தின் ஆதாரம் 11:3 183

II. விசுவாச வாழ்க்கைக்குத் திரளான சாட்சிகள் (11:4-40)

1. ஆபேல் முதல் நோவா வரை 11:1-7 185

2. ஆபிரகாம் முதல் யோசேப்பு வரை 11:8-22 189

3. மோசேயும் ஏனையோரும் 11:23-31 195

4. விசுவாச செயல்முறைகளுக்கு மேலும் சில எடுத்துக்காட்டுகள். 11:32-38 200

5. விசுவாசத்தின் பூரண நிறைவு 11:39,40 205

III. விசுவாசத்தில் நிலைத்திருத்தல் (12:1-29)

1. விசுவாசத்தின் குறிக்கோளும், நியமமுமான இயேசு கிறிஸ்துவும் 12:1,2 207

2. விசுவாசிகளின் கடமைகள் 12:3,4 212

3. விசுவாசத்தின் பயிற்சி 12:5-17 213

4. இரு உடன்படிக்கைகள் – ஓர் ஒப்பீடு 12:18-24 221

*ஐந்தாம் எச்சரிக்கை (12:25, 26)* 225

5. புதிய உலகத்தோற்றம் - "இன்னும் ஒருதரம்" 12:27-29 226

## இறுதி அன்பின் அறிவுரை (13:1–25)

I. உடன் சகோதரர்களோடுள்ள நம் கடமைகள் பற்றிய ஓர் அறிவுரை (13:1-6) 228

II. ஆவிக்குரிய நமது கடமைகள் பற்றிய அறிவுரை (13:7-2)

1. நடத்தினவர்களைப் பின்பற்றுங்கள் 13:7, 8 232

2. அந்நிய போதனைகள் 13:9 234

3. பலிபீடமும் பலிகளும் 13:10-16 234

4. கீழ்ப்படிந்து அடங்குங்கள் 13:17 238

5. ஜெபத்திற்கான அறைகூவல் 13:18,19 239

III. முடிவுரை

1. இறுதி வாழ்த்துரை 13:20,21 241

2. வாழ்த்துதலும், ஆசிவழங்குதலும் 13:22-25 242

மேற்கோள் அடிக்குறிப்புகள் 245

# எபிரெய நிருபத்தில் கிறிஸ்துவில் நாம் பெறும் மேன்மைகள்

1. அதிக நன்மையான நம்பிகை 7:19
2. சிறப்பான உடன்படிக்கை 8:6
3. மேன்மையான வாக்குத்தத்தம் 8:6
4. சிறப்பான பலி 9:23
5. மேன்மையான பரம தேசம் 11:16
6. மகிமையான உயிர்த்தெழுதல் 11:35

# கிறிஸ்துவின் ஊழிய மேன்மை

***1. உன்னத ஆசாரியர்***

வரப்போகிற நன்மைகளுக்குரிய ஆசாரியர். 9:11

***2. மேன்மையான கூடாரம்***

பெரிதும் உத்தமுமான பரலோகக் கூடாரம். 9:11

***3. மேன்மையான பலி***

தம்முடைய பழுதற்ற சொந்த இரத்தம். 9:12

***4. உன்னத முறை***

ஒரேமுறை செலுத்தப்பட்ட முழுமையான பலி. 9:12-14

***5. மேன்மையான ஆசீர்வாதம்***

நமக்கான நித்திய மீட்பு. 9:12

***6. மேலான உறுதி***

நித்திய ஆவியினாலான நிச்சயம். 9:14

***7. உன்னத விளைவு***

செத்த கிரியைகளற்ற, ஊழியத்திற்கான சுத்திகரிப்பு.
9:14

# எபிரெய நிருபத்தின் பிரிவுகள்

| இறை சத்தியம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கிறிஸ்துவின் ஆள்தத்துவமும் அவரின் மேன்மையும் | | | கிறிஸ்துவின் ஊழியமும் அதன் மேன்மையும் | | | | |
| கிறிஸ்து இறை வாக்கினர்களிலும் மேலானவர் | கிறிஸ்து வான் தூதர்களிலும் மேலானவர் | கிறிஸ்து மோசே யோசுவாவைவிட மேலானவர் | கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் | கிறிஸ்துவின் உடன்படிக்கை | கிறிஸ்துவின் பலியும், தூய அகஊழியமும் | கிறிஸ்து ஒருவரே இறை பாதை | கிறிஸ்துவில் நிலை நிற்பதற்கான அறைகூவல் |
| 1:1-3 | 1:4-2:18 | 3:1-4:13 | 4:14-7:28 | 8:1-8:28 | 9:1-10:18 | 10:19-25 | 10:26-39 |

| வாழ்க்கை நடைமுறை | | | | |
|---|---|---|---|---|
| கிறிஸ்தவ விசுவாச வாழ்க்கையின் மேன்மை | | | | |
| விசுவாசத்தின் விளக்கம் | விசுவாச வாழ்க்கைக்குச் சாட்சிகள் | விசுவாசத்தில் நிலைத்திருத்தல் | அன்பில் நிலைத்திருத்தல் | இறுதியுரை |
| 11:1-3 | 11:4-40 | 12:1-29 | 13:1-13:17 | 13:20-25 |

# இயேசு கிறிஸ்துவின் ஊழியமாகிய பலியின் மேன்மையும் முழுமையும்

1. "சிறப்பான ஒரே பலி" – மீண்டும் மீண்டும் அவசியமில்லாத மேன்மையான ஒரே பலி. 10:12

2. "உட்கார்ந்தார்" – யூத ஆசாரியர்கள் எப்பொழுதும் நின்று கொண்டே ஊழியம் செய்ய வேண்டும். செலுத்தப்பட்ட பலியின் நோக்கம் முற்றிலும் நிறைவேறிவிட்ட நிலையில் அமர்ந்தார். 10:11,12

3. "தேவனுடைய ஆசனத்தின் வலப்பக்கம் அமர்ந்தார்" – தேவன் அடைந்த பரம திருப்தி வெளிப்பட்டது. 10:12

4. "தம்முடைய பகைவரைப் பாதபடியாக்கிப்போடும் வரை" – அவர் காத்துக் கொண்டிருக்கிறார். 10:13

5. "ஒரே பலியினாலே" முழுமையாக்கியுள்ளார் – பரிசுத்தமாக்கப் படுகிறவர்களை என்றென்றும் பூரணப்படுத்தியுள்ளார். 10:14

6. பரிசுத்த ஆவியானவரின் ஒப்புதலும் சாட்சியும் – பரிசுத்த ஆவியானவர் நமக்கு சாட்சி கூறுகிறார். 10:15,16

7. அதிதூய அகத்தில் நுழையும் தைரியம் – புதிய ஜீவனுள்ள வழி இப்பொழுது நமக்காகத் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது 10:19

# இவர் எவ்வளவு பெரியவர்

எபிரெயர் நிருபத்திற்கு விளக்கவுரை

## முன்னுரை

**கிறிஸ்தவத்திற்கு** அடித்தளமாயுள்ள நூல் '*விவிலியம்*' அல்லது '*பரிசுத்தவேதாகமம்*' என்று அழைக்கப்படுகிறது. 66 நூற்களைக் கொண்ட இத்தூய திருமறை நூலின் புதிய ஏற்பாட்டுப் பகுதியில், வரலாற்று நூற்கள் 5, போதனைகளோடு கூடிய அறிவுரை நூற்கள் 21, மற்றும் தீர்க்கதரிசன நூல் 1, ஆக இவ்வண்ணம் 27 நூற்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் போதனைப் பகுதியாக உள்ள நிருபங்களில் உட்பட்டதே எபிரெயருக்கு எழுதிய நிருபம் ஆகும். இந்நிருபம் "பொது நிருபங்கள்" என்ற வகைக்கு உட்படாது. "இது பழைய ஏற்பாட்டு முறைமைகளினின்று, புதிய ஏற்பாட்டு முறைமைக்கு நம்மை வழி நடத்துகின்ற ஒரு திருப்புமுனையாக அமைந்துள்ளது" என்று H.C. தீசன் (H. C. Thissan) என்பார் குறிப்பிட்டுள்ளார்.[1] முனைவர் ரீஸ் (Dr. Rees) கூறினாற்போன்று, "இந்நூல் ஒரு கட்டுரையைப் போன்று துவங்கி, சொற் பொழிவாகத் தொடர்ந்து, கடிதமாக நிறைவுறுகிறது." இதன் ஆக்கியோனே இதனை "புத்திமதியான வார்த்தைகள்" எனக் கூறியுள்ளார் (13:22). டயஸ்மான் (Deissmann) என்பார், இந்நிருபத்தை "அனைத்து நிருபங்களிலும் அதிக குறிப்பிடத்தக்க நிருபம் இது" என்கிறார். ஆம்! இது பவள மாலையாக அமைந் துள்ள நிருபங்களுக்கிடையில் ஒரு முத்தாகப் பளிச்சிட்டு மிளிர்கின்றது!

பல ஆழ்ந்த வேத போதனைகள் நிறைந்து, தவறான பல கருத்துக்களையும், முறைமைகளையும் கண்டித்துத் திருத்துவதாகவும், பல எச்சரிப்புகளுடனும் பொருளாழம் கொண்டுள்ள ஒரு சிறப்புமிக்க நீண்ட நிருபமாக இது அமைந் துள்ளது.

### 1. நூலின் தலைப்பு

"எபிரெயர்களுக்கு எழுதிய நிருபம்" என்னும் இக்காலத்திய தலைப்புச் சொல் முந்தின கையெழுத்து நகல்களில் இல்லை. பிற்கால கையெழுத்து நகல்களைத் தயாரித்தோர், "எபிரெயர்களுக்கு" என்னும் இத்தலைப்பினை இணைத்திருக்க வேண்டும் என்பதே வேதவல்லுநர்களின் கருத்து. இரண்டாம் நூற்றாண்டின்

இறுதியினின்று இத்தலைப்பு வழங்கிவருகிறது. "எபிரெயர்களுக்கு" என்னும் தலைப்பினை அலெக்சாந்திரியா நாட்டு வேத வல்லுநர்களாகிய பந்தேனஸ் (Pantaenus), கிலேமெந்து (Clement) மற்றும் ஓரிஜென் (Origen) போன்றோர் ஒப்புக்கொண்டுள்ளனர். ஆகவே, இத்தலைப்பு கிரேக்க வேதாகமத்தில் மட்டுமன்றி பிறமொழியாக்கங்களிலும் காணப்படுகின்றது என்கிறார், தியோடோர் ஸான் (Theodor Zahn)[2]. பிற்காலத்தில் அங்கீகரிக்கப்பட்ட பழைய ஜேம்ஸ் அரசன் ஆங்கிலத் திருப்புதலில் இது "அப்போஸ்தலனாகிய பவுலின் நிருபம்" என்னும் திருத்திய தலைப்பைக் காண்கிறோம்.

## 2. ஆக்கியோன்

இந்நூல் ஆக்கியோன், தன் பெயரை இதனுள் குறிப்பிடாததால், இந்நிருபத்தை எழுதியவர் யார் என்பதனைப் பற்றி உறுதியான ஒரு விடைபகர இது வரை இயலவில்லை. ஆகையால் ஆக்கியோனைப் பற்றி எழுந்த யூகங்கள் அனேகம்! அனேகம்! பவுல், பர்னபா, லூக்கா, ரோமாபுரி கிலேமெந்து, பிரிஸ்கில்லாள், சில்வான், பிலிப்பு (அப். 8:5) மற்றும் அப்பொல்லோ போன்ற பெயர்கள் அநுமானிக்கப்படுகின்றன. இவர்களுள் பண்டைய நாட்களினின்றே பவுல், கிலேமெந்து என்போரின் பெயர்களும், தெர்த்துலியன் காலம் (Tertullian A.D. 150-230) முதல் பர்னபாவின் பெயரும், மார்டின் லூதரின் காலம் முதற்கொண்டு அப்பொல்லோவின் பெயரும் முதலிடம் பெற்றுள்ளன.

இந்நிருபத்தை எழுதியவர் பிரிஸ்கில்லாள் என்று பீக் (Peake) என்பார் சொல்ல, ஜெர்மானிய நாட்டு வேத ஞானியாகிய 'அர்னாக்கு' (Harnak) என்பார் ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் இணைந்து எழுதியது எனக்கூறியுள்ளனர்.[3] 'இருஸ்மஸ்' என்பாரின் கணிப்பின்படி, இதனை எழுதியவர் "ரோமாபுரி கிலேமெந்து" (Clement of Rome) ஆவார்.[4] இதனை இயற்றியவர் லூக்காவாகவே இருக்கக்கூடுமென்று கால்வினும் (Calvin), "திலித்சும் (Delizeu) கருத்துக்கூறியுள்ளனர். முற்காலத்தினின்று முதல் வரிசையில் உள்ள பவுலையும், பர்னபாவையும், மற்றும் மார்டின் லூதரின் காலம் முதற்கொண்டு அப்பொல்லோவையும் பற்றிய மறைநூல் அறிஞர்களின் கருத்துக்களை நாம் இங்கே ஆய்ந்து பார்க்கவிருக்கின்றோம்.

இதற்கு முன்னதாக இயற்றியோனைக் குறித்து இந்நிருபத்தின் உள்ளடக்கத்தினின்று காணும் சில விவரங்களைக் கருத்தாகக் கவனிப்போம்:

1. இதனை எழுதியவர் ஒரு சிறந்த யூதர்.
2. கிரேக்க மொழியை நன்கு கற்றறிந்தவர்.

3. பழைய ஏற்பாட்டு நூலை நன்கு கற்றுத்தேறியவர்.

4. பழைய ஏற்பாட்டு நூலினிலுள்ள மேற்கோள்களை கிரேக்க (செப்துவசின்ட், LXX -- எழுபதின்மர்) மொழியாக்கத்தினின்று எடுத்தாண்டுள்ளார்.

5. அலெக்சாந்திரியா நாட்டு தத்துவக் கோட்பாட்டிலும் அவர் திறனாய்வு பெற்றவர்.

6. தீமோத்தேயுவின் நண்பர்

7. வாசகர்கட்கு நன்கு அறிமுகமானவர்.

8. வாசகர்களிடம் அன்பும் ஆதரவும் பெற்றவர்.

9. பவுலின் எழுத்துகளால் ஈர்த்துக்கொள்ளப்பட்டவர்.

10. கிறிஸ்தவ போதனையைக் கேட்டறிந்த இரண்டாம் தலைமுறையைச் சேர்ந்தவர்.[5]

மேற்கூறிய தகுதிகளில் பல பவுல், பர்னபா, அப்பொல்லோ ஆகியோருக் குப்பொருந்துபவைகளாகும். ஆயினும் ஐந்தாவது குறிப்பு சிறப்பாக பர்னபா வுக்கும், பத்தாவது குறிப்பு குறிப்பாக பவுலுக்கும் பொருந்தும். அனைத்துக் குறிப்புகளும் அப்பொல்லோ ஒருவனுக்கே தகும்.

## *ஆக்கியோன் பவுலா?*

இந்நிருபத்தை ஆக்கியோன் பவுல் என்னுங்கருத்து அலெக்சாந்திரியா நாட்டினில்தான் முதன் முதலில் எழுந்தது. கிலேமெந்தின் குருவாகிய பந்தேனஸ்சின் நாட்களினின்றே எபிரெயர் நிருபத்தை பவுலே எழுதினார் என அலெக்சாந்திரியா நாட்டவர் எண்ணி வந்தனர். "பவுல் எபிரெய வாசகர்களுக்கு என்று எபிரெய மொழியினில் எழுதிய இந்நிருபத்தை, லூக்காதான் கிரேக்கர் களுக்கென்று கிரேக்க மொழியினில் பெயர்த்தெழுதினார்" என கிலேமெந்து குறிப்பிட்டுள்ளார். இதனை திருச்சபையின் வரலாற்று ஆசிரியராகிய யூஸிபியஸ் (கி.பி. 265-339) மேற்கோள்காட்டியுள்ளார்.[6] "இது கிலேமெந்தின் தனிப்பட்டதொரு கருத்தாயிராமல் அலெக்சாந்திரியா சபையின் ஒட்டுமொத்த கருத்தாகும்" என்கிறார் போற்றற்குரிய எபிரெய நிருப விரிவுரைஞர் வெஸ்ட்காட்.

"நான் என் கருத்தைக் கூறட்டும். ஏனெனில் இதன் சான்றுகள் பலவும் அப்போஸ்தலனுக்கே ஏற்றதாகும். ஆயினும் உரைநடையும், மொழிநடையும் காண்கின், ஒருவர் தன் ஆசிரியரின் கூற்றை, தன் நினைவிலிருந்து அல்லது நினைவுக் குறிப்பேடுகளிலிருந்து எழுதிய வண்ணமாயுள்ளது. இந்நிருபத்தை இயற்றியோன் பவுலே என ஏதேன் சபைகள் ஏற்றுக்கொள்ளுமாயின், அவ்

வண்ணமே அவர்கள் கருதட்டும். இதற்குக் காரணமில்லாமல் இல்லை. நமது முன்னோர்கள் இது பவுலினுடைய நிருபம் என்றனர். ஆனாலும் இந்நிருபத்தை இயற்றியோன் யார் என்கிற உண்மையை தேவன் ஒருவரே தெளிவாக அறிவார்"[7] என்பது ஓரிஜென் (கி. பி. 185-254) என்பவரின் கருத்து ஆகும்.

உரோமை நகரப் பேராயரான கிலேமெந்தினால் இது ஆக்கப்பட்டது என ஒரு சிலரும், மூன்றாவது நற்செய்தி நூலையும் அப்போஸ்தலருடைய நடபடிகளாகமத்தையும் எழுதிய தூய லூக்காவே இதை ஆக்கினார் என வேறு சிலரும் கூறியுள்ளனர். இதனை யூஸிபியஸ் சாட்சியப்படுத்தியுள்ளார்.[8]

தூய திருமறையின் புதிய ஏற்பாட்டில் ஒரு நூலை தேவன் அருளிய திருஇறைவாக்காக (Cannon) ஏற்றுக்கொள்ள வேண்டுமெனில், அந்நூல் அப்போஸ்தலருள் யாரேனும் ஒருவர் எழுதியிருத்தல் அவசியமென்ற ஓர் கருத்து அக்காலத்தில் நிலவிற்று. எனவே எபிரெய நிருபம் தேவ வார்த்தையே என்று அங்கீகாரம் பெற அப்போஸ்தலன் ஒருவர் அதனை எழுதியுள்ளான் என்று தெளிவுறுத்தவேண்டியக் கட்டாயநிலை அக்காலத்தில் நிலவியிருந்தது. ஆகவே எபிரெய நிருபத்தை எழுதியது யார் என்ற இக்காரியத்தில் ஓர் இறுதி முடிவு ஏற்படாதிருக்கையில், யூஸிபியஸ், "பவுலின் நிருபங்கள் 14 உண்டு" எனக்கூறி உறுதிப்படுத்தியுள்ளார். பவுலின் நிருபங்கள் 14 எனவும், இவையாவும் தேவனுடைய திருவார்த்தைகளாகிய நூற்கள் எனவும் அத்தானாஸியோஸ் (கி. பி. 367) உறுதிப்படுத்தியுள்ளார். அதுமுதற்கொண்டு, கிரேக்க வேத விரிவுரையாளர்களிடையே, "பவுலின் நிருபங்கள் 14" என்பது ஏற்புடையதாயிற்று".[9] கிலேமெந்து, ஓரிஜென், யூஸிபியஸ் போன்றோரின் ஒப்புதலைத் தொடர்ந்து, திருச்சபையின் ஏனையப் பெரியோர்களும் அதனை ஒப்புக்கொள்ளலாயினர். இவையன்றி, உறுதியான பிற ஆதாரங்கள் ஏதுமில்லை.[10]

அதன் பின்பு, அகத்தியனும், ஜெரோமும், இந்நிருபத்தை ஆக்கியோன் பவுலே என்றனர். தொடர்ந்து, மறைநூல் வல்லுநர்களின் மூன்று பேரவைக் கூடுகைகளிலும் (ஹிப்போ கி. பி. 393, கார்த்தேஜ். கி. பி. 397, கி. பி. 419), இக்கருத்திற்கு ஒப்புதல் கிடைத்தது. தோமையார் இந்நூலை ஆக்கினார் என்று சிலரும் மற்றும் சில வேத வல்லுநர், "திறமை வாய்ந்த லூக்கா, எபிரெய மொழியிலிருந்து கிரேக்க மொழியினில் பெயர்த்தெழுதினார்" என்கிறார்.[11]

இவைகளுக்குப் பின்பு சபைகளில் சீர்திருத்தம் (reformation) நிகழ்ந்த காலம் வரையிலும் கிறிஸ்தவர்கள் இக்கருத்தினையே ஏற்றுக்கொண்டிருந்தனர்.

## ஆக்கியோன் பவுல் என்போர் கூறும் நூலின் உள்ளடக்க நியாயங்கள்:

1. பவுலின் நிருபங்களில் காணப்படும் சில மொழித் தொடர்களையும், நடைகளையும், சிந்தனைகளையும் எபிரெயர் நிருபத்திலும் காணமுடிகிறது:

### இயேசு கிறிஸ்துவைப் பற்றியவை

| | |
|---|---|
| எபி. 1:4 | பிலி. 2:9 |
| எபி. 2:10 | ரோமர் 8:39 |
| எபி. 8:1 | எபே. 1:20-21; ரோமர் 8:3,4; கொலோ. 3:1 |

### இயேசு கிறிஸ்துவின் திருப்பணி பற்றியவை

| | |
|---|---|
| எபி. 7:27 | எபே. 5:2 |
| எபி. 8:6, 9:15, 12:24 | கலா. 3:19, 20 1 தீமோ. 2:5 |

### வேத வாக்கியங்கள் பற்றியவை

| | |
|---|---|
| எபி. 2:2 | கலா. 3:19 |
| எபி. 2:3, 4 | ரோமர் 15:18 |
| எபி. 4:12 | எபே. 6:17 |
| எபி. 7:18 | ரோமர் 8:3 |
| எபி. 8:5, 10:1 | கொலோ. 2:17 |

### விசுவாசிகளுக்குரிய அறிவுரை பற்றியவை

| | |
|---|---|
| எபி. 3:1 | பிலி. 3:14, 2 தீமோ. 1:9 |
| எபி. 5:12, 13 | 1 கொரி. 3:1 |
| எபி. 6:18, 12:1-3,12 | 1 கொரி. 9:24, 25, பிலி. 3:14 |
| எபி. 10:32 | பிலி. 1:30, கொலோ. 2:12 |
| எபி. 10:33 | ரோமர் 12:9, 12 |
| எபி. 11:13 | எபே. 2:19 |
| எபி. 12:3 | கலா. 6:9 |
| எபி. 12:14 | ரோமர். 12:18 |
| எபி. 12:22 | கலா. 4:25, 26 |
| எபி. 13:1-5 | எபே. 2:3-5, ரோமர் 12:9 |
| எபி. 13:10 | I கொரி. 9:13; 10:18 |
| எபி. 13:16 | கலா. 6:9 |

*ஜெப வேண்டுதல் பற்றியவை*

| | |
|---|---|
| எபி. 13:18 | எபே. 6:20 |

*ஆசீர்வாத வார்த்தைகள்*

| | |
|---|---|
| எபி. 13:20,21 | ரோமர் 16:24; 2 கொரி. 13:11; பிலி. 4:9; 1 தெச. 5:23 |

2. பழைய ஏற்பாட்டில் உள்ள சில பக்தர்களையும், நிகழ்ச்சிகளையும் பவுல் தன் நிருபங்களில் சுட்டிக்காண்பித்து புதியஏற்பாட்டு உண்மைகளை உறுதிப்படுத்தினாற்போன்றே, இந்நிருபத்திலும் கையாளப்பட்டுள்ளது.

3. பவுல் தன் நிருபங்களில் ஆபகூக் 2:4-ஐ மேற்கோளாக எடுத்துக் காட்டியுள்ளார் (ரோமர் 1:17, கலா. 3:11). இதே மேற்கோள் எபிரெயர் நிருபத்திலும் உள்ளது (எபி. 10:38).

4. இயேசு கிறிஸ்துவின் ஆள்தன்மையையும் (Personality), செயல் முறைமைகளையும் குறித்து பவுல் தனது நிருபங்களில் கூறின முறையே இந்நிருபத்திலும் கடைபிடிக்கப்பட்டுள்ளது.

5. பவுலின் நிருபங்களில் அறிகிறதற்கு அரிதான கருத்துக்கள் உள்ளதாக பேதுரு தன் இரண்டாம் நிருபத்தில் 3:15,16-ல் நினைவூட்டியுள்ளார். பேதுருவின் இக்கூற்று எபிரெய நிருபத்தைப் பற்றியதாகும் எனவும், அதிலும் குறிப்பாக எபி. 6:4-8; 10:2-31 என்னும் வேத வாக்கியங்களைப் பற்றியதாகும் எனவும் சில வல்லுநர்கள் கருதுகின்றனர்.

6. பவுலின் பல நிருபங்களிலும் தன் விசுவாசகுமாரன் தீமோத்தேயுவைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளது போன்றே (2 கொரி. 1:1; கொலோ. 1:1; 1 தெச. 3:2; 1 தீமோ. 1:2; 2 தீமோ. 1:1), இந்நிருபத்திலும் தீமோத்தேயுவைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது (13:23).

7. பவுல் தன் நிருபங்களுக்கு அடையாளமாகக் கூறியுள்ள ஆசீர்வாத வசனம் எபிரெய நிருபத்திலும் உள்ளது (2 தெச. 3:17,18; 1தெச. 5:28, கலா. 6:18; எபே. 6:24; பிலி. 4:23, தீத்து 3:15, பிலே. 25; எபி. 13:25).

8. முடிவுரையில் காணப்படும் ஒருமைப்பாடு.

அ) வாசகர்களின் ஜெபத்தை வேண்டிக்கொள்ளுவதில் (எபி. 13:18; ரோமர் 15:30; எபே. 6:18,19; கொலோ. 4:3, 4).

ஆ) வாழ்த்துதல் வழங்குவதில் (எபி. 13:24, ரோமர் 16:5; 1 கொரி. 16:23).

இக்கருத்துகளுக்கு ஏற்பப் பிற்காலத்திய வேத நிபுணர்களுள் ஜெ. என். டார்பி, கெல்லி, பிரவுண், அடோல்ஃப், நீடவுட், அயன்சைடு, காபலின், ஆதம் கிளார்க்கு மற்றும் எர்ட்மான் போன்றோர் இந்நிருபத்தின் இயற்றுரிமை அப்போஸ்தலனாகிய பவுலுடையதென்பதே ஏற்புடையது எனப்பல காரணங் களைச் சுட்டிக்காட்டி வலியுறுத்தியுள்ளனர்.

## ஆக்கியோன் பவுல் அல்ல என்பதற்குரிய நூலின் உள்ளடக்க ஆதாரங்கள்:

1. பவுல் தாம் எழுதிய அனைத்து நிருபங்களிலும் தனது பெயரைக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் எபிரெயர் நிருபத்தில் மட்டும் ஆக்கியோனாகிய தன் பெயரைக் குறிப்பிடவில்லை.

யூதர்களுக்கு பவுலைப் பற்றிய ஒரு தெளிவான அபிப்பிராயம் உண்டு. அது அவர்களுக்கு இந்நிருபத்தை வாசிக்க தடங்கலாயிருக்க வேண்டாம் என்ற எண்ணத்தினாலும், யூத சமயத்தை முறியடிக்க முயலுகின்ற ஒரு முரட்டு மனிதனாக தம்மைக் குறித்து யூதர்கள் எண்ணியிருந்தபடியினால், யூதர்களிடம் தனக்கு அன்பும் நன்மதிப்பும் உண்டெனக்காட்டும் பொருட்டும் அவர் தம் பெயரை குறிப்பிடவில்லை என்று சிலர் கூறுகின்றனர். ஆனால் இந்த நியாயத்தை ஏற்க இயலாது. பவுலைப் போன்ற ஒரு முன்னணி அப்போஸ்தலன் இலை மறை காய்போல, தன்னை மறைத்து எழுதுவார் என்று சிந்திப்பதற்கு இடமில்லை.

2. உரைநடையும் மொழிநடையும் பவுலின் நடைக்கு எதிரிரானது எனச் சில வேத அறிஞர்கள் சுட்டிக் காண்பிக்கின்றனர்.[12]

3. பவுல் பழைய ஏற்பாட்டு மேற்கோள்களைத் தொகுக்கையில் பெரும்பாலும் எபிரெய மொழியிலான பழைய ஏற்பாட்டு நூலைப் பயன்படுத்தியுள்ளார். ஆனால் எபிரெய நிருபத்திலோ, பழைய ஏற்பாட்டின் கிரேக்க (LXX -- எழுபதின்மர்) மொழி பெயர்ப்பு நூலே பயன்படுத்தப்பட்டுள்ளது.

4. மேற்கோள்களை எடுத்துரைக்கையில், “எழுதியிருக்கிறபடி” (ரோமர் 1:17; 3:4; 1 கொரி. 1:30) என்று வேதஞ்சொல்லுகிறது. (ரோமர் 10:11), மோசே சொன்னான் (ரோமர் 10:9), ஏசாயா சொல்லுகிறான் (ரோமர் 10:20), தாவீது சொல்லியிருக்கிறார் (ரோமர் 11:10), என்றெல்லாம் தனது நிருபங்களில் பவுல் சொல்லியுள்ளார். ஆனால் எபிரெய நிருபத்தில் ‘ஒரு இடத்திலே ஒருவன் சாட்சியாக’ (2:6), ‘பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறபடியே’ (3:7), என்று குறிப்பிடப்பட்டு உள்ளது. இவை பவுலின் பாணியினின்று மாறுபட்டுள்ளது.

5. பவுல் எழுதியுள்ள நிருபங்களில் "கிறிஸ்து இயேசுவுக்குள்", "நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து" என்னுஞ் சொற்றொடர் சரளமாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. அவற்றுள் "கர்த்தர்" என்னும் சொல் ஏறத்தாழ 600 முறைகள் பயன் படுத்தப்பட்டுள்ளது. ஆனால் எபிரெய நிருபத்தில் "கர்த்தர்" என்னுஞ் சொல் ஓரிருமுறை மட்டுமே (2:3, 7:14) படுத்தப்பட்டுள்ளது.

6. பவுல் எழுதியுள்ள நிருபங்களில் இயேசு கிறிஸ்துவின் மரணம், உயிர்த் தெழுதல், திருச்சபையைப் பற்றிய போதனைகள், சபையில் எழும் பிளவுகள் மற்றும் இடறல்கள் போன்ற அனைத்தும் விரித்துரைக்கப்பட்டுள்ளன. ஆனால் எபிரெயர் நிருபத்தில் இயேசு கிறிஸ்துவின் விண்ணக ஊழியங்கள் பற்றி மட்டுமே விளக்கப்பட்டுள்ளன.

7. பவுலின் நிருபங்களில் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுதல் பற்றி விளக்கியிருக்கையில், எபிரெய நிருபத்திலோ, பழைய ஏற்பாட்டிலுள்ள ஆசரிப்புக் கூடாரம், ஆசாரியத் திருப்பணி மற்றும் பணிகள் போன்றவற்றிற்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளன.

8. "அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்ட இவ்வளவு பெரிதான இரட்சிப்பு" (எபி. 2:34) என்று பவுல் எழுதியிருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் பவுல் கர்த்தரிடத்தினின்று நேரில் கேட்டவராயிற்றே (1 கொரி. 11:23; கலா. 1:11-24). ஆனால் எபிரெய நிருப ஆக்கியோனோ கர்த்தரிடமிருந்து நேரில் கேட்டவர்கள் வாயிலாக, தெரிந்துகொண்டு எழுதிய ஒருவனாக இருக்க வேண்டும்.

9. தீமோத்தேயு "விடுதலையாக்கப்பட்டான்" என்னுங்கூற்று (13:23) இந்நிருபம் பவுலால் ஆக்கப்பட்டது என்பதற்குச் சான்றாகுமா? உரோமானியக் காவலினின்று பவுல் தீமோத்தேயுவுக்கெழுதிய இரண்டாம் நிருபத்தில் "நீ சீக்கிரமாய் என்னிடத்தில் வர ஜாக்கிரதைப்படு" (2 தீமோ. 4:9,21) என்று உள்ளதே! ஆதலால் எபி. 13:23-ல் வரும் இக்கூற்று, பவுலின் மரணத்திற்குப் பின்னர் நிகழ்ந்திருக்க வேண்டும் என நினைப்பதற்கு இடமுண்டு.[13]

## *ஆக்கியோன் பவுல் அல்ல என்பதற்குரிய புறம்பான ஆதாரங்கள்:*

1. உரோமானிய கிலேமெந்து இந்நிருபத்தை நன்கறிந்தவர். பிற்காலத்தில் கிலேமெந்து எழுதிய நிருபங்களில் எபிரெய நிருபத்தினின்று அநேக மேற்கோள்களைத் தொகுத்துள்ளார். ஆயினும் ஆக்கியோன் யார் என்பதை மட்டும் அவரும் எடுத்துக் கூறவில்லை.[14]

2. பவுல் இந்நிருபத்தை எழுதியுள்ளார் என்பதற்கு, பழங்காலக் கிரேக்க நூல்களிலும் கூட எவ்விதத் திடமான ஆதாரமும் காணவில்லை.[15]

3. முற்காலத்தில் உரோமானிய கிலேமெந்து இந்நூலை இயற்றினார் என்னும் கருத்தும் நிலவியிருந்ததால், பவுலின் இயற்றுரிமை ஐயத்திற்குரியதாகிறது.

4. பவுலே இந்நூலை இயற்றினான் என்பது முதல் இரண்டு நூற்றாண்டுகளில் எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்படாத ஒரு கருத்து ஆகும்.

5. ஓரிஜென் ஒரு மறை நூல் மாமேதை. அவரே ஆக்கியோனைப் பற்றி ஆணித்தரமாகச் சொல்லாமல் "தேவன் ஒருவரே அறிவார்" எனக் கூறியிருக்கிறார்.[16]

6. இந்நூல் தேவன் அருளிய வார்த்தையாகவே ஒப்புக்கொள்ள வேண்டு மாயின் அதை ஓர் அப்போஸ்தலன் எழுதியிருக்க வேண்டுமென்று யூஸிபியஸ் வித்திட்டதையே, அத்தானாஸியோஸ் (கி. பி. 367) போன்றோரும், பிற கிரேக்க எழுத்தாளர்களும் பின்பற்றலாயினர்.

7. பர்னபா, இந்நிருபத்தை எழுதினார் என்னுங்கருத்தினைக்கொண்டுள்ள தொர்த்துல்லியன், பவுல் இந்நிருபத்தின் ஆசிரியர் என்பதை நிராகரித்துள்ளார்.

8. முந்தைய காலத்தில், உரோமானிய கிலேமெந்துவே இந்நிருபத்தை எழுதினார் என்னுமொரு கருத்து நிலவியிருந்ததால் பவுல் இதை எழுதியிருப்பார் என்பதற்கு எதிரிடையான ஒரு சான்றாக நாம் எடுத்துக்கொள்ளலாம்.[17]

9. மாழ்ஸியன் என்பார் தொகுத்துள்ள "பவுலின் நிருபங்கள்" என்ற நூலில் எபிரெய நிருபம் இணைக்கப்படாதிருக்கிறது".

10. C. I. ஸ்கோஃபீல்டு, தமது உலகப் புகழ்பெற்ற "புதிய ஸ்கோஃபீல்டு ஒத்தவாக்கிய அகராதி வேதாகமத்தில்" (The New Scafield Reference Bible) கீழ் வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"ஆக்கியோன் யார் என்று அறியாத ஒரு நூல் எபிரெய நிருபம் ஆகும். அப்போஸ்தலர் காலத்திற்குப் பின்பு அந்நாளினின்றே இதை எழுதியவர் யார் என்று அறியாத ஒரு நூல் எபிரெய நிருபம். அந்நாட்களினின்றே இதை எழுதியவர் யார் என்ற சொற்போர் நடந்துள்ளது. சில பகுதிகளில் கிரேக்க மொழி நடை பவுலினுடையது போலுள்ளது. 13:23-ல் தீமோத்தேயுவைப்பற்றிக் குறிப்பிட்டிருப்பதால் இதனை பவுல் எழுதியிருக்கலாம் என்கின்றனர் சிலர். இதற்கு வரையறுக்கப்பட்ட சான்றுகள் எதுவுமில்லை. எனினும் எபிரெய நிருபம் திருமறைநூலின் ஒரு பகுதியும், தெய்வீக ஒப்புதலும் பெற்றுள்ளது.

இதன் ஆக்கியோன் அறியப்படாதவர் (Author Unknown) என்பதை ஒத்துக் கொள்ளுவோமாயின், இக்கருத்து பவுலின் இயற்றுரிமைக்கு அநுகூலமாக இல்லை, மாறாக முரணாகவே உள்ளது."[18]

"கானோனிகத்திற்கு (இது தேவன் அருளிய இறைவாக்கே) முக்கியத்துவம் அளிக்கின்ற கிழக்கத்தியர் (அலெக்சாந்திரியர்) இந்நிருபத்தை பவுல் எழுதியதாக ஏற்றுக்கொண்டனர். அதன் நிமித்தமே யூஸிபியசும், இதைப் பவுல் எழுதினார் என்று உறுதிபடக்கூறினார். ஆனால் மேற்கத்தியரோவெனில் (இலத்தீன் சபையார்) ஆக்கியோனுக்கு முக்கியத்துவம் அளிக்காத நிலையில் இதனைப் பவுல் எழுதவில்லையென நம்பினர். இதைக் குறித்து கிரேக்க மொழியியல் வல்லுநரும், மன்ற நூல் மாமேதையுமான வெஸ்ட்காட் (B.F. West Cott) தமது எபிரெய நிருபப் பொழிப்புரையில் இவ்வண்ணம் கூறியுள்ளார்: "கானோனிகத்திற்கு ஆதாரமாகப் பவுலே இதை எழுதினார் என்னுங்கருத்தைக் கடைப்பிடித்தது கிழக்கத்தியர் செய்த ஒரு தவறேயாகும். அதைப்போலவே, இதை எழுதியவர் பவுல் அல்ல என்பதால் இது கானோனிகம் அல்ல என்று பிடிவாதம் செய்தலும் தவறாகும். எபிரெய நிருபம் தேவத்திரு வார்த்தையே (கானோனில்) என ஒப்புதல் அளிக்கப்பட்டது, இதன் ஆக்கியோன் யார் என்னும் அடிப்படையிலன்று."[19]

"இதுவரை நாம் எடுத்துக்கூறின காரணங்களையும், வாதங்களையும் அவ்வண்ணமே விட்டுவிடுவோமாக. இதனை எழுதியவர் பவுல் என உறுதியாகக் கூற இடமில்லை. கிலேமெந்தும் இதை எழுதவில்லை. இது லூக்காவால் எழுதப்பட்டிருக்கலாம் அல்லது பர்னபாவால் எழுதப்பட்டிருக்கலாம் என்பதற்கு, நமக்குப் போதுமான சான்றுகளின்மையால் ஆக்கியோன் யார் எனத்திண்ணமாகக் கூறிட இயலவில்லை என்கிறார் வெஸ்ட்காட்.[20] முனைவர் ரீஸ் (Dr. Rees) என்பவரும் எபிரெய நிருபத்தை ஆக்கியோன் பவுல் அல்ல என்பதற்குரிய சான்றுகளைத் தொகுத்தளித்துவிட்டுக் கடைசியில் கருத்துப் பிழிவாக அவர் "இதை இயற்றியவர் பவுல் அல்ல என்கிற வேத ஆய்வும், அறிமுகமும் இவ்வெண்ணத்தை உறுதிப்படுத்துகின்றன என்கிறார்."[21]

### *ஆக்கியோன் பர்னபாவா?*

ஆப்பிரிக்க நாட்டுத் திருச்சபை மூதாதையராகிய (Church Father) தெர்த்துல்லியன் (Tertullian கி.பி. 170-220) அப். 4:36; எபி. 13:22 ஆகிய வேத வாக்கியங்களின் அடிப்படையில் இந்நிருபத்தை ஆக்கியோன் பர்னபா என்றுள்ளார். "பர்னபா ஒரு லேவியர்" (அப். 4:36). லேவியர் இறை வழிபாட்டு முறைகளை நன்கறிந்தவர்கள். அவ்வறிவு இந்நிருபத்தில் வெகுவாக மிளிர்கின்றது. பர்னபா பவுலின் நண்பனும், பவுலின் முதல் மிஷனரிப்

பயணத்தில் உடன் பயணியுமாவான். (அப். 9:27; 11:25, 13:2-15:35). அவன் தீமோத்தேயுவின் நண்பன் (அப். 14:12; 16:1-3). சிறிதுகாலம் பவுலும் பர்னபாவும் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்திருந்தனர் (அப். 15:39). ஆயினும் பின்னர் அவர்கள் இணைந்தனர் (கொலோ. 4:10; 2 தீமோ. 4:11-மாற்கு). ஆகவே இந்நிருபத்தைப் பர்னபாவே எழுதியிருக்கக் கூடும்.[22]

கிழக்கத்திய சபைகளில் முதல் ஒருசில நூற்றாண்டுக் காலங்களில், பர்னபாவின் நிருபம் (Epistle of Barnabas) என்றழைக்கப்பட்டிருந்த ஒரு நிருபம் நன்கு அறிமுகமாக்கப்பட்டிருந்தது. தெர்த்துல்லியன் மொன்டேனிஸ்டாக மாறிய பின்பும் அச்சபைகளில் இது பர்னபாவின் நிருபமாகவே ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்தது.[23] சீர்திருத்தக்காலத் திருமறை அறிஞர்களாகிய தியோடார்சான், பி. வெஸ் (B. Wess), கிராயூர், G. சல்மோஸ், கிரகறி (Gregory), காடட் (Godet), போன்றவர்கள் இந்நிருபத்தின் ஆக்கியோன் பர்னபாவே என்னும் கருத்துடையவர் ஆவர்.

## *ஆக்கியோன் அப்பொல்லோவா? (அப்.18:24-25)*

1. அப்பொல்லோ யூத சமயத்தினின்று கிறிஸ்தவ விசுவாசியானவன்.
2. சொல்வளம் மிக்கவன்.
3. ஆவியில் அனலுள்ளவன்.
4. கொரிந்து சபையை 'நீர்ப்பாய்ச்சி' வளரும்படி ஊக்குவித்தவன் (1 கொரி. 3:6).
5. விசுவாசிகளுக்கு மிகவும் உதவியாயிருந்தவன்.
6. பழைய ஏற்பாட்டு மறை நூல் மாமேதை.
7. அலெக்சாந்திரியாவில் பிறந்தவன்.
8. தீமோத்தேயுவின் நண்பன்.
9. பவுலுடன், எபேசுவில் தங்கியிருந்ததினால் பவுலின் கருத்துக்களால் அவன் அதிகமாக ஈர்த்துக்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். ஆகவே அப்பொல்லோவின் எழுத்துகள் பவுலின் எழுத்துகளால் ஈர்த்துக் கொள்ளப் படுவது இயல்பே.
10. அப்பொல்லோ இரண்டாம் தலைமுறை விசுவாசிகளைச் சேர்ந்தவன் (எபி. 2:4).
11. கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாகப் போதித்தவன் (அப். 18:25).
12. யூதர்களுடன் பலமாய்த் தர்க்கம்பண்ணி, இயேசுவே கிறிஸ்து எனத் தெளிவுறச் செய்தவன்.
13. ஓர் அப்போஸ்தலன் என்று அறியப்பட்டிருந்தவன் (1 கொரி. 4:9).

14. எபேசுப் பட்டணத்திற்குத் திரும்பி வந்து பவுலுடன் தங்கி, அவனோடு கூட இருந்தவன் (1 கொரி. 16:12).

15. அப்பொல்லோ பயண விருப்பம் கொண்டவன்; பவுலுடன் நட்புறவும் உடையவன்.

16. தீமோத்தேயுவுக்காகப் பவுல் வேண்டிக்கொண்டதைப் பேன்று, தீத்து விடமும் அப்பொல்லோவை அக்கறையோடு கவனிக்க வேண்டிக்கொண்டுள்ளான் (தீத்து 3:13).

17. தீத்துவுக்கு எழுதிய நிருபத்தைக் கொண்டுபோன நியாயசாஸ்திரி சேனாவுடன் அப்பொல்லோவும் கூடச் சென்றிருக்க வேண்டும் (தீத்து. 3:13).

18. பவுலின் மரணத்திற்குச் சற்று முன்பு அல்லது பின்பு அப்பொல்லோ உரோம நகருக்குச் சென்றிருக்க வேண்டும். இந்நிருபத்தில் காணும் இத்தாலிய தேசத் தாரைப் பற்றியக் குறிப்பை அதற்கு ஓர் ஆதாரமாகக் கொள்ளலாம் (எபி. 13:24).

## *அப்பொல்லோவே ஆக்கியோன் என்பதற்குரிய ஏனைய ஆதாரங்கள்.*

சீர்திருத்த காலத்தில் மார்டின் லூதர், இந்நிருபத்தை ஆக்கியோன் அப்பொல் லோவே என உறுதிப்படக் கூறியுள்ளார். மட்டுமன்றி இதற்கு முன்னரும் இந்நிருபத்தை அப்பொல்லோ எழுதியதாகக் கருதிவந்தனர் என மார்டின் லூதரே கூறியுள்ளார். மார்டின் லூதருக்குப் பின்பு டீன் ஆல்ஃபோர்டு (Dean Alford), மவுல்டயோன் (Moultion), ஃபரர் (Farar), ராபர்ட்சன் (A. T. Robertson), கர்ட்ஸ் (Kurtz), வன்ஸ்கி மற்றும் மான்ஸன் போன்ற வேத வல்லுநர்கள் இக் கருத்தையே ஏற்றுக்கொண்டுள்ளனர். சீர்திருத்தக் கால வேதவல்லுநர்களில் கானன், மோன்ட், ரிபியோர் ஆகியோர் இக்கருத்தை ஆதரித்துப் பெரும் ஆய்வுகளை நடத்தியுள்ளனர்.

ஆரம்ப நூற்றாண்டுகளில் அப்பொல்லோவின் பெயரை எவருமே வரை யறுத்துக் கூறாவிடினும், இந்நிருபத்தின் ஆக்கியோனாயிருக்க வேண்டிய தகுதி அப்பொல்லோவுக்கு முற்றிலுமுண்டு.[24] இதற்கு எதிரிடையாக ஆதாரம் எதுவும் இல்லை என K.G. குரியன் அவர்கள் குறிப்பிடுகிறார்.

## *முடிவுரை*

மேற்கூறிய வாதங்கள் இவ்வாறிருக்க, பண்டிதர் ஓரிஜென் "இந்நூலை ஆக்கியோன் இன்னார் என்பதைக் கர்த்தர் ஒருவரே உறுதியாக அறிவார்"[16] எனக் கூறுவதை நாம் ஏற்றுக்கொள்வோமாக. இதினிமித்தமே இன்றைய தேவ பக்தியுள்ள வேதபோதகர்கள், "இந்நிருபத்தை ஆக்கியோன் அல்லது எழுதியவர்" எனப் பொதுவாகக்கூறி, பெயர் குறிப்பிடாது விட்டுவிடுகின்றனர். 2 திமோத்தேயு 3:16,17; 2 பேதுரு 1: 20, 21 ஆகிய வசனங்களில் நாம் தெளிவாகக்

காண்கிறபடி, இந்நிருபமும் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறதென்றும், இது மனித சித்தத்தினால் எழுந்ததல்ல என்றும் உறுதி கொண்டு, நமது சீர் திருந்துதலுக்கென்றும் படிப்பிடினைக்கென்றும் ஆதாரமாயுள்ள தேவ வாக்கியங் களாகவே ஏற்றுக்கொள்வோமாக!

## 3. ஆக்கியோனின் எழுத்து வன்மை

கடுமையான நிந்தைகள், உபத்திரவங்கள், சோதனைகளின் ஊடாகக் கடந்து சென்ற யூதக் கிறிஸ்தவ விசுவாசிகள் (எபி. 10:32, 33) கிறிஸ்துவினிமித்தம் தங்களுக்கிருந்த ஆசாரியமுறை,பலிகள், நியமனங்கள், போன்ற அனைத்தை யும் இழந்துவிட்டதாகக்கருதத் தொடங்கினர். தாங்கள் அனுபவிக்கும் கொடிய உபத்திரவங்களில் சிந்தைகொண்ட இந்த யூத விசுவாசிகள்,கிறிஸ்தவ விசுவா சத்தின் மேன்மைகளைத் தாழ்வாகக்கருதினர். அநேகர் பின்மாறிப் போகும் நிலையிலும் காணப்பட்டனர். இப்படிப்பட்டவர்களை உற்சாகப்படுத்தி, உயிரூட் டம் அருளும்படி பல வதங்களுடன் விளக்கி எழுதியுள்ளார் நூலாசிரியர்.

1. முதலாவது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஆள்தன்மையின் மேன் மையை எடுத்துக் கூறி அதைத் தொடர்ந்து பின் அவருடைய ஊழியச் சிறப்பை பல குறிப்புகளுடன் ஒன்றன்பின் ஒன்றாக விளக்குகின்றார்.

2. அதன் பின், கிறிஸ்துவில் விசுவாசிக்கிற நாம் ஒன்றையும் இழந்துவிட வில்லையென்று எடுத்துரைத்து, நாம் அநேக மேன்மைகளை ஆதாயப் படுத்திக் கொண்டுள்ளோம் என விவரித்து, புதிய கிறிஸ்தவ முறைமைகள் பழைய யூதேய முறைகளைவிட எல்லாவற்றிலும் மேலானதும் சிறப்பானதும் என எடுத்துரைக்கிறார்.

அ. நமக்கு இயேசு என்னும் பிரதான ஆசாரியர் இருக்கிறார் (4:14).

ஆ. அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு ஆத்தும நங்கூரம் இருக்கிறது (6:18, 19).

இ. நமக்கு ஒரு பிரதான ஆசாரியர் இருக்கிறார் (8:2).

ஈ. நமக்கு பரலோகத்தில் அதிக மேன்மையான சுதந்திரமுண்டு (10:34).

உ. நமக்கு ஒரு பலிபீடம் உண்டு (13:10).

ஊ. நமக்கு நிலையான நகரம் உண்டு (13:14).

3. இதைத்தொடர்ந்து மற்ற விசுவாச மக்கள் துன்பம் சகித்துப் பாடுபட்டுள்ளது போன்று இதுவரை அவர்கள் அந்த அளவுக்குப் பாடுகளை இன்னும் சகிக்க வில்லை என்கிறார்.

முனைவர் கேம்ப்பெல் மார்கன் (Dr. Campbell Morgan) என்பார், இந்நிருபத்தில் பவுலின் சிந்தனைகளும், லூக்காவின் எழுத்து வன்மையும் மிளிர்கிறது என்கிறார்.

அறிஞர் காலரிட்ச்சு (Dr. Coleridge) என்பார் இவ்வாறு எழுதுகிறார்: "ரோமருக்கு எழுதின நிருபம் கிறிஸ்தவ விசுவாசத்தின் அவசியத்தை வரையறுத்து, அதை நிரூபித்துக்காட்டியிருக்க, எபிரெயருக்கு எழுதின நிருபமோ,அக்கிறிஸ்தவ விசுவாசத்தின் ஒப்பற்ற மேன்மையினை நிரூபித்துக் காட்டுகிறது. இதை ஆக்கியோன், பழைய முறைமையை இழிவு படுத்திப் பேசியல்ல, மாறாக எவ்வாறு புதிய முறைமையானது பழையதை நிறைவு படுத்துகிறது என்றுணர்த்தி விளக்கியுள்ளார். பழையவை நல்லவைகளாக இருந்தன. ஆனால் இப்பொழுதோ, இப்புதியது பழையதைவிட மேன்மையான தாயிருக்கின்றது."

சிலர் இந்நிருபத்தை "ஐந்தாம் சுவிசேஷம்" என்றழைக்கின்றனர். ஏனெனில் மற்ற நான்கு சுவிசேஷங்களும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இவ்வுலக ஊழியத்தை எடுத்துரைத்திருக்க, இந்நிருபபோ, அவ்வூழியத்தையும் அதனுடன், பரலோகில் அவராற்றும் ஊழியத்தையும்கூட எடுத்துரைக்கிறது.

## 4. இந்நிருபம் யாருக்கு எழுதப்பட்டது?

யூத சமயத்தினின்று மனந்திரும்பி வந்த கிறிஸ்தவ விசுவாசிகளுக்கென்று குறிப்பாக எழுதப்பட்டதே, இந்த எபிரெயருக்கு எழுதின நிருபம் ஆகும். இந் நிருபத்தில் காணும் பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்கள் (3:1), கிறிஸ்துவி னிடத்தில் பங்குள்ளவர்கள் (3:14),சகோதரர்கள் (3:1,12; 13:22), பிரியமானவர்கள் (6:9) என்ற அழைப்புத்தொடர்கள் இதற்கு ஆதாரமாகவுள்ளன.

இந்த விசுவாசிகள் எத்தகைய நிலைமையிலிருந்தனர் என்பதையும் நாம் கருத்திற்கொள்ள வேண்டியது அவசியம். இவர்கள் விசுவாசத்திற்குள் நடத்தப்பட்டு நீண்ட நாட்களாயிற்று (5:11-14). கர்த்தர் மூலமாய் அறிவிக்கப் பட்டதை நேரடியாகக் கேட்டவர்களிடமிருந்து சுவிசேஷச் சத்தியங்களை அறிந்து கொண்டவர்கள் (எபி. 2:4). (இத்துடன் ஒப்பிடவேண்டிய வசனங்கள். அப். 2:4,47; 4:30; 5:12; 6:8; 8:6,13; 14:3; 15:12; 2 கொரி. 12:12). இந்த எபிரெய விசுவாசிகளை முன்னதாக விசுவாசத்தில் நடத்தியவர்கள், இந்நிருபம் எழுதிய காலத்தில் உயிரோடு இல்லை (13:7). இவர்கள் பரிசுத்த ஆவியைப்பெற்று, ஆவிக்குரிய அனுபவங்களைப் அடைந்தவர்களும் ஆவர் (6:4, 5). இவர்கள் அனைவரும் விசுவாசிகளானதால், பல வகைப்பட்ட துன்புறுத்துதல்களையும், இன்னல்களையும் தாங்கிப்பாடுகளைச் சகித்தவர்கள் (10:32-34). ஆயினும்

கிறிஸ்துவைப் பற்றிய படிப்பினையின் தொடக்க நிலையிலேயே நின்று விட்டவர்கள் (6:1). இவர்கள் பிறர்க்கு நற்போதகங்களைக் கற்பிக்கவேண்டிய வர்களாயிருக்க, ஆவிக்குரிய வளர்ச்சியின்றி குழந்தைகளின் நிலையிலேயே தேங்கிவிட்டவர்கள் (5:12,13). கேள்வியில் மந்தமுள்ளவர்கள் (5:11). இவர்கள் தங்கள் விசுவாச வாழ்க்கையில் தற்போது மிகுதியும் பதற்றமுற்று இருப்பவர்கள் (10:35-38). இந்நிருப ஆசிரியரை இவர்கள் முன்னதாகவே நன்கு அறிந்திருந் தார்கள். ஆகையினால் அவர்களை மீண்டும் சந்திக்க இவ்வாசிரியர் விரும்பு கிறார். (13:19-23). இவர்கள் தீமோத்தேயுவையும் முன்னமே அறிந்தவர்களும், இப்பொழுது அவனுடைய நிலையை அறிய விழைவோருமாவார்கள் (13:23). இவர்கள் இறைமக்களுக்கு உதவி செய்வோரும் ஆவர் (6:10). மற்றும் இவர்கள் இத்தாலியா விசுவாசிகளுக்கு அறிமுகமானவர்கள் (13:24). தங்களை வழி நடத்தினவர்களை விட்டுப் பின்மாறிப் போனவர்கள் (13:7). [25]

## அ. எபிரெயநிருப வாசகர்கள் யூதசமயத்தினின்று மனந்திரும்பிய விசுவாசிகள் என்பதற்குரிய சான்றுகள்.

இஸ்ரவேலின் முற்பிதாக்கள் இவர்களுடைய பிதாக்களே ஆவர் (1:1; 3:9). இவர்கள் ஆபிரகாமின் வழியில் தோன்றியவர்கள் என்பது சரீரத்தின் படியான வம்ச வழிமுறைதான் என்பதைக் காட்டுகிறது (2:16).[26] ஆனால் கலாத்தியர் 3:7-ல் வரும் "ஆபிரகாமின் பிள்ளைகள்" என்பது விசுவாசத்தால் பெற்ற உன்னத பதவியினை எடுத்துக்காட்டுகிறது. இந்நிருபத்தை ஆக்கியோன் பலமுறை குறிப்பிட்டுள்ள ஆபிரகாம், மோசே, யோசுவா மற்றும் ஆரோனைப் போன்ற முற்பிதாக்களை, இவர்களும் கனம் பண்ணுகின்றனர், ஆகவே இந் நூல் யூத விசுவாசிகளுக்கென்றே எழுதப்பட்டுள்ளது என்பதும் தெளிவாகிறது.[27] இவர்கள் லேவியர்களின் தொழுகை முறை, ஆசரிப்புக் கூடாரம், ஆலயம் மற்றும் பலிகள் போன்ற யூத இறைவழிபாட்டு முறைமைகளில் நன்கு பழக்க மானவர்கள் என்பதும் வெளிப்படை. இவர்கள் விண்தூதர்களைக் கனம் பண்ணி னவர்களும்,அவ்விண் தூதர்களின் வாயிலாகவே இறைவாக்கைப் பெற்றவர் களுமாவர் (2:2). இவர்கள் தேவன் அருளிய நியாயப்பிரமாணத்தை நேரடியாகப் பெற்றுள்ள சிறப்பான சிலாக்கியமுடையவர்கள். பழைய உடன்படிக்கைக்கு உட்பட்ட திரளான (பழைய ஏற்பாடு) விசுவாசிகளை இவர்கள் நன்கு அறிந் திருந்தவர்களாவர் (எபிரெயர் 11-ம் அதிகாரம்). பிறவினத்து விசுவாசிகளைப் பற்றிய (விருத்தசேதனமின்மை, சிலை வழிபாடு, சிலைகளுக்குப் படைப்பு, யூத-பிறவின விசுவாசிகளுக்குரிய சமஉரிமை போன்றவை) விவரங்கள் எவைகளையும் இந்நிருபத்தில் நாம் காண்கிறதில்லை. 'எபிரெயருக்கு' என்ற

தலைப்பு ஆரம்ப நூற்றாண்டுகளினின்றே பயன் படுத்தப்பட்டு வந்துள்ளதால், இந்நிருபம் யூதக் கிறிஸ்தவர்களுக்கென்று எழுதப்பட்டதே என்பதற்குரிய ஒரு சான்றாகக்கொள்ள வேண்டும்.[28] மோசேயினால் வழி நடத்தப்பட்டு எகிப்தினின்று புறப்பட்டவர்களும், பாலை நிலத்தில் பட்டு விழுந்து போனவர்களும் பிறவினத்தவரல்லவே (எபி. 3:15-17)!

முனைவர் ரீஸ் (Dr. Rees), மான்ஸன் (W. Manson) போன்றோர், இந்நிருபம் யூதக் கிறிஸ்தவர்களுக்கு என்று எழுதப்பட்டதே என்பதைத் தெளிவுபடுத்தி வலியுறுத்தியுள்ளனர்.[29]

## *ஆ. இந்நிருப வாசகர்கள் எவ்விடத்தைச் சார்ந்தவர்கள்?*

இதைப்பற்றி வேத அறிஞர்களுக்கிடையே வேற்றுமையான கருத்துக்கள் நிலவுகின்றன. இந்நிருபத்திற்குப் பிற்காலத்தில் கொடுக்கப்பட்டுள்ள "எபிரெயர் களுக்கு" என்னும் தலைப்பு நீங்கலாக, எவ்விடத்திலுமுள்ள யூதவிசுவாசி களுக்கு என்ற குறிப்பு ஏதுமில்லை. எருசலேம், பாலஸ்தீனா, அலெக்சாந்திரியா, சீரியா, அந்தியோகியா, இத்தாலியா (உரோமை), சிற்றாசியா, சீப்புரு மற்றும் கிரேக்க நாடு போன்ற பன்னாடுகளில் சிதறியுள்ள யூதர்கள் என வேத விரிவுரை யாளர்கள் தாங்கள் எழுதியுள்ள பொழிப்புரைகளில் உட்படுத்தியுள்ளனர். ஆயினும் இவற்றிற்கு ஆக்கப்பூர்வமான வேத ஆதாரங்களில்லை. இந் நிருபத்தில் காணும் உள்ளடக்கத் தகவல்களினின்று, எருசலேமின் சுற்றிடங்களில் வாழ்ந்த யூத கிறிஸ்தவர்களுக்கே என்று இதை எழுதியிருக்கக்கூடுமெனக் கருத இடமுண்டு.

இந்நிருபம் எருசலேமின் சுற்றுப்புறத்தில் வாழ்ந்து வந்த யூதக் கிறிஸ்தவர் களுக்கு எழுதியது என்னுங்கூற்றிற்கு எதிரான சில கருத்துக்களும் உள்ளன. இந்நிருபம் எருசலேமின் சுற்றுப்புறத்தில் உள்ள விசுவாசிகளுக்கு எழுதப்பட்ட தென்றால். அவர்களின் பேச்சுமொழியாகிய *அரமாயிக்* மொழியில் அல்லவா இதை எழுதியிருத்தல் வேண்டும் என்பது வலுவான ஒரு வாதம். மற்றும் இந்த எருசலேம் வட்டாரத்தினர் அருட்செய்தியினை, அப்போஸ்தலர்களிடத்தினின்று நேரில் கேட்டவர்களாயிற்றே?

எருசலேமிலும் அந்தியோகியாவிலும் உள்ள சபையார்களுக்குப் போதித்து வழி நடத்திய சிலர் இருந்தனரல்லவா? அதுபோன்று, இந்நிருபத்தின் வாசகர் களை விசுவாசத்தில் வழி நடத்தினவர்களும் உண்டல்லவா (13:7)?

எருசலேம் அல்லது பாலஸ்தீனாவிலுள்ள சபை கூடிவருபவர்களுக்கு என்று எழுதப்பட்டது என நம்பப்படுகிறது என்கிறார் வெஸ்ட்காட்.[30]

"எபிரெயர் என்னும் சொல் ஒரு குறிப்பிட்ட ஊரையல்ல (இடத்தையல்ல), அது ஒரு தேசீயத்தையே காட்டுகிறது. எபிரெய நிருபம் எருசலேமிலும், அவற்றைச் சுற்றியுள்ள நகரங்களிலுமுள்ள அனைத்து யூதக் கிறிஸ்தவர்களுக் காகவும் எழுதப்பட்டது என்று நாங்கள் அங்கீகரிக்கின்றோம்." – பி. சி. தீசன்.[31]

சுருங்கச் சொல்லின், விசுவாசச்சோரம் ஏற்படும் அளவுக்கு, ஆன்மீக வளர்ச்சி குன்றி, பல திக்குகளில் சிதறிப்போய் குடியிருக்கும் யூதக் கிறிஸ்தவர் களுக்கென எழுதப்பட்டதாகும் இந்நிருபம். ஒருக்கால் புதிய ஏற்பாட்டு விசுவா சிகளோடு நெருக்கமானவர்களும், யூத முறைமைகளால் திருச்சடங்குகளைக் கடைப்பிடித்து. தூய்மையான வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்த "கும்ரான் ஏசேன்" பிரிவுகளைச் சார்ந்த யூதர்களையும்கூட புதிய ஏற்பாட்டுச் சத்தியத் திற்குள் வழி நடத்த வேண்டும் என்பது, இந்நிருபம் எழுதப்பட்டதின் காரணங்க ளில் ஒன்றாயிருக்கக்கூடும்.

## 5. இந்நிருபத்தின் நோக்கம்

1. யூத சமயத்தினின்று வந்துள்ள இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட விசுவாசிகள் தாங்கள் சந்தித்த, பாடு துன்பங்களால் ஏற்படும் உபத்திரவங்களி னிமித்தம் ஆன்மீக மேம்பாடற்று, மனம் சோர்ந்தும், விசுவாச சோரம் கண்டு பதறிப்போன சூழலில், தாங்கள் விட்டு வந்த அந்த யூத சமயத்திற்கே திரும்பிச் செல்லும் ஆபத்தான ஒரு நிலையில், அவர்கள் மனதில் எழுந்த ஐயங்களும் கேள்விகளும் பல, பல. இப்படிப்பட்டவர்களை ஊக்குவித்து அவர்களைச் சத்தியத்தில் வழி நடத்தவும், விசுவாசத்தில் உறுதிப்படுத்தவுமே இந்நிருபம் எழுதப்பட்டுள்ளது.

அ) பழைய உடன்படிக்கை நீங்கவும், ஒரு புதிய உடன்படிக்கை தோன்றவும் காரணம் என்ன? பழைய உடன்படிக்கையும், பலி முறைமை களும், பண்டிகைகளும், ஓய்வு நாள் ஆசரிப்புகளுமெல்லாம் யெகோவா இறைவனால் திருவுளம்பற்றியவைகளல்லவா? நம் இயேசு பெருமான்கூட விருத்தசேதனம் ஏற்றவரும், ஓய்வு நாளைப் பரிசுத்தமாக ஆசரித்த வருமல்லவா?

இந்த நிருபத்தை இயற்றியோனும் "கிறிஸ்தவ விசுவாசம் என்பது, பழைய ஏற்பாட்டு முறைமைகளை நீக்குவதன்று, அதை நிறைவேற்றுவதேயாகும்" என்றே கூறியுள்ளார்!

ஆ) இயேசு கிறிஸ்துவின் பாடுகளும், தாழ்ச்சியும் பெரியதொரு பிரச்சினையை உருவாக்கிற்று. இரட்சிப்பின் அதிபதியான மேசியா துயர் அடையக்கூடுமா?

இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துவது இறைத் தந்தைக்கேற்றதாயிருந்தது (எபி. 2:10).

இ) புதிய ஏற்பாட்டின் கிறிஸ்தவக் கோட்பாட்டின்படி ஒரு தலைமை ஆசாரியனோ, ஆசாரிய முறைமையிலான சடங்காசாரங்களோ ஏதும் இல்லை. அப்படியாயின் லேவிக்கோத்திரத்தாரல்லாத கிறிஸ்து எப்படித் தலைமையாசாரியராவார்?

அவர் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் மாறாத மெல்கிசேதேக்கின் முறையிலான ஆசாரியராயிருக்கிறார் (எபி. 7:17).

2. கிறிஸ்தவ விசுவாசம் யூத விசுவாசத்தைவிட எத்தகைய மேன்மையுடையது என்பதை விளக்கும்பொருட்டே இந்நிருபம் எழுதப்பட்டுள்ளது.

அ) புதிய உடன்படிக்கையின் நாயகர் இயேசு கிறிஸ்து, பழைய உடன் படிக்கை நாயகர்களினின்று எல்லாவற்றிலும் மேலானவரும், சிறப்பான வருமாவர் (எபி. 1:1-7).

ஆ) வான்தூதர்கள் மூலமாகப் பழைய உடன்படிக்கையானது அருளப் பட்டது, ஆனால் புதிய உடன்படிக்கையோ, வான் தூதர்களைப் படைத்தவ ராலேயே ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆகையால் நாம் கேட்டறிந்தவற்றை விட்டு, வழிதவறிப்போகாதவாறு மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் (எபி. 2:1).

இ) மற்றும் அந்த யூத விசுவாசிகள் தங்கள் இருதயங்களைக் கடினப் படுத்தாதிருக்கவும் (எபி. 3:8, 15) இது எழுதப்பட்டுள்ளது.

3. யூதக் கிறிஸ்தவ விசுவாசிகள் பின்மாறிப் போகாமலிருக்க (எபி. 5:11; 6:1, 2) மூன்று முக்கிய எச்சரிப்புகளைக் கொடுத்து அவர்களை உறுதிப்படுத்தி, அறிவுரை வழங்கும்படி இந்நிருபம் எழுதப்பட்டுள்ளது.

அ) புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவ விசுவாசம் உறுதியானதும், எக்காலத் திற்குமுரியதுமாகும். ஆனால் பழைய உடன்படிக்கையோ வழிபாட்டுப் பழக்க வழக்கங்களும், லேவிய ஆசாரியத்துவமும் அடங்கிய ஒரு குறிப்பிட்ட காலத்திற்கே உரியதாகும்.

ஆ) பழைய உடன்படிக்கை குறைவுள்ளது, புதிய உடன்படிக்கை நிறை வானது (எபி. 7:28, 10:12-14). கிறிஸ்துவோவெனில் என்றென்றுமாயுள்ள நித்திய மீட்பை உண்டு பண்ணியுள்ளார் (எபி. 7:17, 24, 25; 9:12). இந்நிலை யில் கிறிஸ்துவின் ஆசாரியத்துவமோ மாறிப்போகாத,என்றென்றும் நிலைத் திருக்கும் ஆசாரியத்துவமாகும் (எபி. 7:24,25). லேவிய ஆராதனை ஒழுங்கு

களைவிட, புதிய ஏற்பாட்டு விசுவாச வழிமுறைமை அனைத்து வகை களிலும் மேன்மையானதாக உள்ளது (எபி. 7:22; 8:6).

இ) பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணமானது ஒன்றையும் பூரணப் படுத்துவதில்லை (எபி. 7:19). மாறாக கிறிஸ்துவின் என்றென்றுமுள்ள ஒரே சிலுவை பலியினை விசுவாசிப்போரனைவரும் என்றென்றைக்கும் பரி பூரணராக்கப்படுகிறார்கள் (எபி. 10:14).

4. புதிய உடன்படிக்கையாகிய இயேசு கிறிஸ்துவின் பலி, பழைய உடன் படிக்கைப் பலிகளினின்றும் எவ்வகையிலும் மேலானது. எனவே, அவர்கள் தேவப் புதல்வரை மிதித்து, உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்று எண்ணி, கிருபையின் ஆவியை நிந்தித்து,கொடிதான ஆக்கினைக்கு ஆளாகா திருக்கவேண்டி,யூதமக்களை எச்சரிக்கவே இந்நிருபம் வரையப் பட்டுள்ளது (எபி. 10:26-29).

5. தேவ கிருபையை எவனொருவனும் இழந்துபோகாதபடி, எச்சரிக்கப் படும்படிக்கே இந்நிருபம் எழுதப்பட்டுள்ளது (எபி. 12:15-29).

6. விசுவாசம் தொய்ந்து போகும் நிலையிலிருந்த யூதக் கிறிஸ்தவ விசுவாசி களை, எச்சரிக்கைகள் வாயிலாகப் புதிய ஏற்பாட்டு விசுவாசத்தில் நிலைத்திருக் கவும், உறுதிப்படுத்தவும், ஜீவ தேவனைப் புறக்கணியாது இருக்கவும் அறிவுரை வழங்கி, அவர்களை வலுப்படுத்தி நிறுத்தும் வகையிலும் இந்நிருபம் எழுதப் பட்டுள்ளது.

## 6. எழுதிய காலமும், இடமும்

இந்நிருபத்தின் உள் அடக்கத்தினின்று இது எக்காலத்தில், எங்கிருந்து எழுதப்பட்டது என்பதை அறுதியிட்டுக் கூறுவதற்கு அரிதாக உள்ளது. எனினும் மறைமுகமாயுள்ள சில குறிப்புகளை இங்கு ஆராய்வோம்.

எழுதிய காலத்தைப் பற்றிக் கருதுகையில், இது தீமோத்தேயு உயிரோடிருந்த காலத்தில்தான் (13:23) என்பது மிகத்தெளிவு. இது முதல் தலை முறையைச் சார்ந்த புதிய ஏற்பாட்டு விசுவாசிகள் வாழ்ந்த காலக்கட்டமாகும் (2:3; 13:7). அவர்களின் ஆன்மீகநிலை குன்றிப்போய், விசுவாசத் தாழ்ச்சி ஏற்படும் நிலையிலிருந்தனர் (10:32). வேத மேதை வெஸ்ட்காட், என்பார் இந்நிருபம் எழுதிய நாட்களிலும், எருசலேம் ஆலயத்தில் லேவியர் தொழுகை முறைகள் முறைப்படித் தடங்கலின்றி நடந்தவண்ணம்தான் இருந்தன (8:4, 13; 9:6-9,10:1; 13:10) என்று குறிப்பிடுகிறார்.[32]

கி. பி. 70-ல் எருசலேம் தேவாலயம் அழிக்கப்பட்டுப்போயிற்று. எருசலேம் பட்டிணம் தீத்து இராயனால் ஆக்கிரமிக்கப்படுகையில், ஆலயமும் நிர்மூல மாயிற்று. எபிரெயர் 10:11-ம் வசனம் நிகழ்கால நிகழ்ச்சியாக குறிப்பிட்டிருக் கிறது. ஆகவே கி. பி. 70-ல் நிகழ்ந்த எருசலேம் ஆலய அழிவிற்குப் பின்னர் லேவியர் தொழுகைகள் தொடர்ந்து நடைபெறுவதற்கு எவ்விதத்திலும் வாய்ப்பில்லை. இத்தகைய சாட்சியங்களால் இந்நிருபம் கி. பி. 70-க்கு முன்னரே எழுதியிருக்கக்கூடுமெனச் சிந்திக்க இயலும். இந்நிருபத்தை ஆக்கியோன் பவுல் எனக் கருதுவோர், இது கி.பி. 64-65 ஆண்டுகளில் எழுதியிருக்கக் கூடுமென்று அநுமானம் செய்கின்றனர். ஆனால் 13:7-ன் அடிப்படையில் இந்நிருபம் எழுதிய காலத்தில் பவுல் கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றெண்ணத்தோன்று கிறது. இந்தக் கண்ணோட்டத்தில், பவுலடியாரின் மறைவுக்குப் பின்னரும், எருசலேம் ஆலயத்தின் அழிவிற்கு முன்னரும், ஏறக்குறைய கி. பி. 67-69 -ம் காலக்கட்டத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பது மறைநூல் சான்றோர் பலருடைய ஒத்த கருத்தாகும்.[33]

இந்நிருபம் எங்கிருந்து எழுதப்பட்டது என்பதிலும் வேத விரிவுரை யாளர்களின் நடுவில் வேற்றுமையான கருத்துக்கள் நிலவுகின்றன. எங்கிருந்து எழுதப்பட்டது என்பதை நாம் வரையறுத்துக்கூறிட இயலாது. வெஸ்ட்காட் என்பாரின் கருத்தும் இதுவே.[34]

நூலாசிரியர் எங்கிருந்து தம் நூலை இயற்றுகின்றாரோ, அங்குள்ள உடன் விசுவாசிகளின் வாழ்த்துதலை, நூலின் வாசகர்களுக்கு அறிவிப்பது ஓர் இயன் முறையாகும் (ரோமர் 16:21; 1 பேது. 5:3). இந்நிருபத்தில் இத்தாலியா நாட்டு விசுவாசிகள் வாழ்த்துதல் வழங்குகின்றனர். இத்தாலிய விசுவாசிகள் வாழ்த்துதல் வழங்குவதால் (13:24) இந்நிருபம் இத்தாலியாவிலிருந்து இயற்றப்பெற்ற தென்பது சிலருடைய கணிப்பு. இவருள் பெரும்பான்மையினரும் பவுலின் இயற்றுரிமையை ஆதரிப்போராவர். ஆனால் இவ்வசனம் RSV, NIV, J. N. டார்பி மொழியாக்கங்களில் "இத்தாலியாவைச் சார்ந்தவர்கள்" அல்லது "இத்தாலியிலிருந்து வந்துள்ளவர்கள்" என உள்ளது. ஆகையால் இந்நிருபத்தை எழுதுகையில், இதை இயற்றியோனிடம் இத்தாலியாவிலிருந்து சில விசுவாசிகள் வந்திருக்கக்கூடும். ஆகவே ஆக்கியோன் தம்மிடத்தில் வந்தவர் களின் வாழ்த்துதலைக் கூட்டி அறிவிக்கின்றாரேயன்றி, இது இத்தாலியா வினின்று எழுதப்பட்டது என்று கூறுவது ஏற்புடையதன்று.[35] திருவிவிலியம் என்கிற புதிய தமிழ் மொழி பெயர்ப்பிலும்கூட (TNBCLC) "இத்தாலியா நாட்டினின்று இங்கே வந்திருப்போர் உங்களுக்கு வாழ்த்துக் கூறுகின்றனர்" (13:24) என்றுள்ளதைக் காண்க.

இவ்வாய்வினின்று இந்நிருபம் எழுதிய இடம் எதுவென்பதற்கு ஆதரவாகக் காணப்படுவது, ஆசியா, சீரியா, மற்றும் எகிப்து என்பவைகளுள் ஓரிடமே யாகும். இதுவே வெஸ்ட்காட்டின் கருத்து.[36]

## 7. எபிரெயர்

'எபிரெயர்', 'யூதர்', 'இஸ்ரவேலர்' என்ற பெயர்கள், நடைமுறையில் ஒரே பொருளுடைய வார்த்தைகளாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆயினும் அவை ஒரே பொருளுடையவை அல்ல. அவை ஒன்றுக்கொன்று சற்றே வேற்றுப் பொருள் கொண்டுள்ள வார்த்தைகளாம்.

***'யூதர்'*** என்பது யூதாவின் வழிவந்த மக்களைக் குறிக்கும். இது இஸ்ரவேலர் அரசு இரண்டாகப் பிரிந்த பின்னரே திருமறையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. யூதா கோத்திரத்தாரும், பெஞ்சமின் கோத்திரத்தாரும் சேர்ந்து யூதேயா தேசம் எனவும், அம்மக்கள் 'யூதர்' எனவும் அறியப்பட்டனர் (2 இரா. 16:6; 25:25). 'யூதன்' என்பதன் பெண்பாலான "யூத ஸ்திரீ" என்ற பதத்தை, அப்போஸ்தலர் 16:1; 24:24-ல் காண்கிறோம்.

***'இஸ்ரவேல்'*** என்ற பெயர் முதன்முதல் பெனியேலிலே தேவன் யாக்கோபுக்கு சூட்டின பெயராகும் (ஆதி. 32:28). யாக்கோபின் பன்னிரண்டு குமாரர்கள் மூலம் பன்னிரண்டு குடும்பங்கள் தோன்றி, அவர்கள் "இஸ்ரவேல் கோத்திரத்தார்" அல்லது 'இஸ்ரவேலர்' என அறியப்படுகிறார்கள். அவர்கள் அரசு இரண்டாக பிரிந்தபோது, பத்துக்கோத்திரத்தார் 'இஸ்ரவேலர்' எனவும், மீதி இரண்டு கோத்திரத்தார் 'யூதேயர்' எனவும் அறியப்பட்டார்கள்.

***'எபிரெயர்'*** என்ற பெயரைத் திருமறையில் முதன்முதல் ஆதியாகமம் 14:13-ல் காண்கிறோம். சிலர் எபிரெயனாகிய ஆபிரகாம் என்ற இப்பெயர், ஆதியாகமம் 11:17-26-ல் குறிக்கப்பட்டுள்ள 'ஏபேர்' என்ற முற்பிதாவுடன் சம்பந்தப்பட்டிருக்கலாம் எனக் கருதுகின்றனர். ஆயினும் 'எபிரெயர்' என்ற சொல்லின் மூல பதத்திற்கு "கடந்து வருதல்" என்பது பொருளாயிருப்பதால், "எபிரெயனாகிய ஆபிரகாம்" என்று கூறியபோது, "கானான் தேசத்திற்குக் கடந்து வந்து குடியிருப்பவன்" எனப் பொருள்கொள்ள வேண்டும். அவன் வழிமுறை வந்த அவனுடைய சந்ததியினர் 'எபிரெயர்' என்றே அழைக்கப்பட்டனர். பவுல் தன்னை "எபிரெயரில் பிறந்த எபிரெயன்" (பிலி. 3:5) என்று சொல்லுகிறான். இதனால் அவன் தன்னை மற்ற இனத்தவருடன் கலப்படமற்ற, தூய்மையான ஒரு எபிரெய வம்சத்தில் பிறந்தவன் எனப்பொருள்கொள்ளுகிறான். புதிய ஏற்பாட்டில் இப்பதத்தை அப். 6:1; 2 கொரி. 11:22; பிலி. 3:5 ஆகிய இடங்களில் காண்கிறோம் – ஜெ. எம். ப்ளானிகான் (J.M. Flanigan).

# பகுதி 1

## புதிய உடன்படிக்கையின் நாயகர் பழைய உடன்படிக்கைத் தலைவர்களைக் காட்டிலும் மேலானவர்

## (1:1 - 7:28)

**எல்லாம்வல்ல இறையோன்** யெகோவாவே யூதர்களின் மறைநூலாகிய பழைய ஏற்பாட்டின் காரண கர்த்தா (முதற்காரணர்) ஆவார். ஆனால் அவர் இதை நேர்முகமாக அன்று, தம்முடைய தீர்க்கதரிசிகளாகிய நடுவர்கள் மூலமாகவே அப்போதைக்கு அப்போது, பங்கு பங்காக வெளிப்படுத்தி எழுதிக் கொடுத்தார். வான் தூதர்கள் வாயிலாக மோசேக்கு அளிக்கப்பட்ட திருச் சட்டமும் (நியாயப்பிரமாணம்), இறைவாக்கினர் (தீர்க்கதரிசிகள்) வாயிலாக அளிக்கப்பட்ட திருவெளிப்பாடுகளும் (தீர்க்கதரிசனங்கள்) அடங்கியதே பழைய ஏற்பாட்டு ஆகமங்களாகும். ஆகவே, தங்களின் வாழ்க்கையின் அடிப் படை ஆதாரமாகிய திருமறையைத் தங்களுக்குத் தந்தருளின, யெகோவாவின் கருவிகளாய்ப் பயன்பட்ட மோசே போன்ற திருத்தூதுவர்களையும், இறை வாக்கினர்களையும் யூதர்கள் அதிக மேன்மையுள்ளவர்களாகக் கருதினார்கள். அதைப்போன்று அவர்கள் பெற்றுக்கொண்ட பழைய ஏற்பாட்டுத் திருமறை நூலையும் இஸ்ரவேலராகிய யூதர் மிகச்சிறப்பாகக் கருதி, உயர்த்தி அதைக் குறித்துப் பெருமிதமும் வைராக்கியமும் கொண்டிருக்கின்றனர்.

அதுவுமன்றி, தங்களை எகிப்தின் சிறையிருப்பினின்று விடுவித்து, சீனாய்மலையில் இருந்து நியாயப்பிரமாணம் என்ற திருச்சட்டத்தை பெற்றுக்

கொடுத்த, மாபெரும் தலைவர் மோசே, மற்றும் தேவன் வாக்களித்துள்ள நாட்டிற்குள் நடத்திச்சென்று அதைத் தங்களுக்குப் பங்கிட்டு வழங்கிய தலைவர் யோசுவா, போன்றோரை இந்த யூதப் பெருமக்கள் மிகவும் மேலானவர்களாக கருதி, கனம் பண்ணி வந்தனர். இதுமட்டுமன்று இறைத்தொழுகை முறைமை யில் தங்களுக்கும், யெகோவா இறைவனுக்குமிடையே நடுவராக நின்ற தலைமை ஆசாரியர்களையும்கூட இந்த யூதர்கள் பெரிதும் மதித்து உயர்த்தி வந்தனர்.

இத்தகைய ஒப்பற்ற புனித இறைப் பின்னணியைக் கொண்ட எபிரெய விசுவாசிகளுக்கு இந்நிருபத்தை இயற்றியவர், புதிய உடன்படிக்கையின் நாயக ராகிய இயேசு கிறிஸ்து, பழைய உடன்படிக்கைத் தலைவர்களினின்றும் மேம்பட்டவர் என்பதைத் திட்டமும் தெளிவுமாக வரைந்து, திருத்தமாக உறுதிப் படுத்திக் காட்டியுள்ளார். இதுவுமன்றி, இறைவனால் முந்தையத் திருத்தொண்டர் களின் வாயிலாக எழுதப்பட்டு வெளிப்படுத்தப்பட்ட பழைய உடன்படிக்கை யைவிட, இறை இயேசுவின் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டு உருவாக்கப் பட்டுள்ள புதிய உடன்படிக்கை எல்லாவற்றையும்விட மிக மிக உயர்வானது என்பதையும் நூலாசிரியர் அறுதியிட்டுக் காட்டுகிறார்.

## I. புதிய உடன்படிக்கையை வெளிப்படுத்தியவர்,

## பழைய உடன்படிக்கையை வெளிப்படுத்திய வர்களிலும் மேலானவர் (1:1-2:18)

இப்பகுதியில், புதிய உடன்படிக்கையை வெளிப்படுத்தியவர், பழைய உடன்படிக்கையை வெளிப்படுத்தியவர்களைவிட எவ்வாறு மேன்மை பெற்றவரானார் என்பதனை இந்நூலாசிரியர் மிகத்தெளிவாகச் சித்திரித்துக் காட்டியுள்ளார். இயேசு பெருமான் வாயிலாகக் கிடைக்கப்பெற்ற இறுதிக்காலத் திருவெளிப்பாடாகிய புதிய ஏற்பாடும், அதன் முறைமைகளும், போதனை களும் மிகவும் சிறப்பும் உன்னதமுமாகும்.

### 1. இயேசு கிறிஸ்து இறைவாக்கினர்களிலும் மேலானவர் (1:1-3)

*"பூர்வகாலங்களில் பங்கு பங்காகவும், வகை வகையாகவும் தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார். இவரை சர்வத்துக்கும் சுதந்திரவாளியாக நியமித்தார். இவரைக் கொண்டு உலகங் களையும் உண்டாக்கினார். இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும்*

*அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலே தாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்தார்." (1:1-3)*

மூல கிரேக்க மொழிதனில் இம்முதல் வசனம் அடுக்குச்சொல்லாக அழகான எதுகை மோனையுடனும், "பொலுமிரோஸ் காய் பொலுட்ரோபோஸ், பாலாய் ஒ தொயோஸ் . . ." என ஆரம்பிக்கிறது. "பொலுமிரோஸ்" என்ற சொல்லுக்கு "காலங்களோடு இணைந்த நிலையில் பற்பல பங்குகளாக" என்றும், "பொலுட்ரோ போஸ்" என்ற சொல்லுக்கு "முறைகளோடு இணைந்து பற்பல வகைகளாக" எனவும் பொருள்படும். இவ்வாறு இவ்வசனம் "பற்பல பங்கு களாகவும், பற்பல முறைகளிலும் தேவன் பண்டைய பிதாக்களிடம் திருவுளம் பற்றினார்" எனக் கவர்ச்சியுடன், யூதப் பெருமக்கள் விருப்பத்துடன் ஏற்றுக் கொள்ளும் வகையில் துவங்குகின்றது.

மலையாளம் மற்றும் சில மொழியாக்கங்களில், "தேவன் பூர்வகாலங்களில் பங்கு பங்காகவும், வகை வகையாகவும் தீர்க்கதரிசிகள் மூலமாய் முற்பிதாக்க ளுக்குத் (முன்னோர்களுக்குத்) திருவுளம் பற்றினார்" என 'தேவன்' என்ற வார்த்தையுடன் ஆரம்பிக்கிறது; ஆங்கிலத்திலும் அவ்வாறே உள்ளது.

இது ஒரு கடிதம் (நிருபம்) எழுதும் முறையின்படி இல்லாது, அதாவது அழைத்தல், அஞ்சலி செலுத்துதல், முன்னுரை போன்ற எதுவுமின்றி, "தேவன்" என்ற சொல்லாகிய ஆதிக் கர்த்தாவுடன் துவங்குகிற, இணையில்லா ஒரு முறை கையாளப்பட்டுள்ளதைக் காணகின்றோம். இது யூதப் பெருமக்கள் விருப்பத் துடன் ஏற்றுக் கொள்ளும் ஒரு முறையாகும்.

## அ) செய்தியின் காரணகர்த்தா தேவனேயாவார் (1:1)

***தேவன்*** (God) என்னுஞ்சொல் இந்நிருபத்தில் 68 முறை பயன்படுத்தப் பட்டுள்ளது. (1) இறைவன் ஒருவர் இருக்கின்றார்! (2) அவரே படைப்பிற் கெல்லாம் ஆதிகாரணர்! (3) அவர் உயிருள்ளவராய் ஜீவிக்கிறார்.

ஆகவே அவர் ***நமக்குத்*** திருவுளம் பற்றினார். அவர் பேசாத காலமே இல்லை. முற்காலத்தில் பேசினார். இப்பொழுது தம் வாக்காகிய திருமறையின் வாயிலாக அவர் பேசுகிறார். ஆகவே அவரே திருச்செய்தியின் உரிமையாளர்.

1. இறைவன் தன் படைப்பின் வாயிலாகப் பேசுகிறார். (யோபு 26:14; சங். 19:1; ரோமர் 1:19, 20).

2. இறைவன் நடுவர்களாகிய திருத்தூதுவர்கள் மற்றும் இறைவாக்கினர் வாயிலாகப் பேசினார்.

3. இறைவன் தம் திருமகன் (இயேசு கிறிஸ்து) வாயிலாகப் பேசினார்.

## ஆ) திருவுளம் பற்றின காலங்களின் வேற்றுமை

*1) "பூர்வ காலங்களில்"* – இது இயேசுபிரான் மனிதனாக வெளிப்படுவதற்கு முந்தையக் காலம் ஆகும். ஆதாமின் நாட்கள் முதற்கொண்டு பழைய ஏற்பாட்டுக் காலம் எனச் சிலர் கூறுகையில், மோசேயின் நாட்களிலிருந்து மல்கியா வரையிலுமுள்ள காலமே பழைய ஏற்பாட்டுக்காலம் என வேறு சில இறை வல்லுநர்கள் கருதுகின்றனர்.

*2) "இந்தக் கடைசி நாட்களில்"* – இது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மனிதனாக வெளிப்பட்ட பின்புள்ள காலம் (எபி. 9:26).

தேவன் தமது திருச்சித்தத்தை வெளிப்படுத்துதல் மூலமாய்க் காலத்தைப் "பூர்வ காலங்கள்" எனவும், "கடைசி நாட்கள்" எனவும் இரண்டாகப் பகுத்து, அந்தந்தக் காலங்களுக்கு ஏற்பத் திருவுளம்பற்றி வந்துள்ளார். உலகத் தோற்றத்தினின்று அதன் வளர்ச்சிக்கு ஒப்ப, ஆதாமுடனும், நோவாவுடனும், மோசேயுடனும், ஆபிரகாமுடனும், பவுலுடனும், இதோ இப்போது நம்முடனும் தேவன் பேசிக் கொண்டிருக்கிறார். இறைவன் தம் வாக்காகிய திருமறையின் மூலமாக இன்றும் பேசிக்கொண்டிருக்கிறார். திருமறைக்கு அப்பாற்பட்டுத் தேவவெளிப்பாடுகள் எவைவும் இக்காலத்தில் இல்லை.

## இ) எவர்கள் மூலம் தேவன் பேசினார்? (1:1,2)

### 1) இறைவாக்கினர் மூலமாய் முன்னோர்களிடம் பேசினார் (1:1)

இறையோன்தாமே இறைவாக்கினர்களை நேரடியாக அழைத்தார். அவ்வழைப்பில் கோத்திரப் பாகுபாடு ஏதுமில்லை. இறைவனே, அருளுரையினையும் அளித்து, அவற்றை அறிவிக்கவல்ல ஏற்ற ஏதுக்களையும் பகிர்ந்தளித்துள்ளார்.

மாட்சிமையுள்ள இறைவன் ஈந்தருளிய திருமறையுரையை மாந்தர்கட்குப் பகிர்கின்ற திருத்தூதுவர்களே இறைவாக்கினர். ஏசாயா, எரேமியாவைப் போல், எபிரெயர்களின் தந்தையாகிய ஆபிரகாம் தீர்க்கதரிசன நூல்களை எழுதாவிடினும், அவன் தீர்க்கதரிசி என்றே அழைக்கப்பட்டுள்ளான் (ஆதி. 20:7). அவனுக்குமுன், ஏனோக்கும் அவ்வாறே அழைக்கப்பட்டான் (யூதா 14:15). எனவே, இங்கே இறைவாக்கினர் என்னும் சிறப்புப் பெயர் பழைய உடன்படிக்கையின் தலைவர்களை ஒட்டுமொத்தமாகக் குறிப்பிடுவதாகும். அவர்கள் அநேகராயிருந்தனர். அவர்கள் வெவ்வேறு காலக்கட்டங்களில், வெவ்வேறு சந்தர்ப்பச் சூழ்நிலைகளில் எகிப்து, பாபிலோன், பாலஸ்தீனா, மற்றும் பெர்சியா போன்ற வெவ்வேறு நாடுகளில் இருக்கையில், அவர்கள் மூலம் இறைவன்

திருவுளம்பற்றினார் (1:2). இவர்கள் அனைவருமே வேறுபாடின்றி தேவனின் அருட்பணியாளர்களாவர் – இறைவாக்கினராவர்.

## *2) திருக்குமாரன் மூலமாய் நம்மோடு பேசுகின்றார் (1:2)*

இவர் இறைவனது திருமகனாவார். ஏதோ ஒரு பங்கின், உரிமையாளராக மட்டுமன்று, அவரே அனைத்துக்கும் சர்வ உடமையாளராக உள்ளார். அவர் இறைவாக்கினர் போன்று இடம், காலம், ஆகிய வரையறையற்று, எல்லாக் காலங்களிலும் எங்கும், எப்பொழுதும் பேசுகிறார். முற்காலத்தில் இறை வாக்கினர் வாயிலாக நம் முன்னோரிடம் பேசின அந்த தேவன்தாமே, இவ்விறுதி நாட்களிலும் நம்மிடம் அவர்தம் திருக்குமாரன் வாயிலாகவே பேசியுள்ளார். ஆகவே இக்காலத்திய அருட்செய்தி மிக மேலானதும் சிறப்புள்ளதுமாகும் (அப். 2:17; 1 பேது. 1:5, 20; 1 யோவான் 2:18). தேவன் திருக்குமாரன் மூலமாகவும், திருக்குமாரனுக்குள்ளும் நம்மோடு பேசுகிறார். ஏனெனில் இத்திருக் குமாரன் தாமே தேவன் நமக்கு அருளிய இறுதிச் செய்தியாக உள்ளார்.

## *ஈ) திருவுளம்பற்றின திருச்செய்தியில் வேற்றுமை*

***"பங்கு பங்காகவும், வகை வகையாகவும்"*** – பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பற்பல முறைகளிலும், பல்வேறு வகைகளிலும் தேவன் பேசினார். இறைவாக் கினர் வாயிலாகவும், தரிசனங்கள் (காட்சிகள், கனவுகள், நிகழ்ச்சிகள்) மூலமாக வும், நேர்முகமாகவும் அவர் பேசியுள்ளார். மோசேயிடம், வனாந்திரத்திலே புகைக் காட்டில், எக்காளமும் பேரொலியும் முழங்க, உரத்த குரலிலும் (யாத். 19:19; உபா. 5:22), எலியாவிடம் மெல்லிய ஒலியிலும் (1 இரா. 19:12), பின்னும் ஏசாயா, எரேமியா, எசேக்கியேல் மற்றும் தானியேல் போன்ற இறைவாக் கினர்களிடம் வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு தேசங்களில், வெவ்வேறு முறைகளிலும் திருவுளம் பற்றினார். இவர்கள் எவர்களுக்குமே நிறைவான, முழுமைபெற்றுள்ள அருட்செய்தி கிட்டவில்லை. இந்த இறைச்செய்திகள் பங்குபங்காக அளிக்கப்பட்டமையால், தேவன் இன்ன இன்ன காலத்தைக் குறித்தாரென்றோ, அந்தந்தக்காலத்தின் சிறப்பு இன்னதென்றோ அவர்களுக்குத் தெளிவாகப் புலப்படவில்லை; அவைகள் அன்றைக்கு, ஒருமுகமாக ஒழுங்கு படுத்தி எடுத்துக்காட்டப்படவுமில்லை.

***"இந்தக் கடைசி நாட்களில்"*** – நாம் தற்போது பெற்றிருப்பதோ, இதனுடன் எதையும் சேர்த்துக்கொள்ள வேண்டிய தேவையிராதவாறு முழுமையாக, முறையாக அருளப்பட்டுள்ளது. தம் திருக்குமாரன் மூலமாய் அருளப் பட்டிருப்பது, குறைவாயுள்ளதை நிறைவுள்ளதாக்கியுள்ள தெய்வீகத் திரு வார்த்தைகளாகும். ஆம்... ! இதுவே புதிய முறைமை, இதுவே புதிய ஏற்பாடு! இதுவே சீரும் சிறப்புமான இறுதிச் செய்தியாம்!

### *உ) தெய்வீக வார்த்தைகளைப் பெற்றுக் கொண்டவர்களின் வேற்று நிலைமை*

பூர்வகாலங்களில், 'பிதாக்களுக்கு' அதாவது இஸ்ரவேலரின் முன்னோர்களாகிய முற்பிதாக்களின் மூலம் பழைய ஏற்பாடு முன்பு கொடுக்கப்பட்டது. இக்கடைசி நாட்களில் 'நமக்கு' அதாவது புதிய ஏற்பாட்டுச் சபையின் காலக் கட்டத்தில் உள்ள விசுவாசிகளாகிய நமக்கு, அதே தேவன் இப்பொழுது வெளிப்படுத்திப் புதிய ஏற்பாட்டைக் கொடுத்துள்ளார்.

இந்தக் கடைசி நாட்களில், குமாரன் மூலமாய் அளித்துள்ள புதிய ஏற்பாட்டுடன் எதையும் கூட்டிச் சேர்க்க வேண்டியதாயிராது, முற்றுப்பெற்றதும், முற்றிலும் முழுமையானதும், மனுமக்களின் மீட்புக்குப் போதுமானதுமாகும். இறை மகனார் மேலானதொரு புதிய உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். இது மட்டுமன்றி, இவர் தேவனை முழுமையாக வெளிப்படுத்தியுமுள்ளார்! "நானே . . . உங்களுக்குச் சொல்லுகிறேன்" என அதிகாரத்துடனும் அவர் கூறினார். பூர்வகாலங்களில் பங்குபங்காகத் திருவுளம்பற்றி அருளிய திருவெளிப்பாடுகள், இப்பொழுது திருமகனார் இறை இயேசு கிறிஸ்துவின் வாயிலாக நிறைவு பெற்றுள்ளன.[1]

### *ஊ) கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேன்மை*

இறைமகன், இறைவாக்கினர்களினும் மேலானவர் என்பதனை நூலாசிரியர் ஏழுவகைக் காரணங்களோடு எடுத்துரைத்து வலியுறுத்துகிறார்:

*1) அவர் சர்வத்துக்கும் சுதந்திரவாளி* – அனைத்திற்கும் அவரே முழு உரிமை உடையவராயுள்ளார் என்பதே இதன் பொருள்.

*2) அவர் உலகங்களையும் உண்டாக்கினார்* – இங்கே 'உலகங்கள்' என்பதைக் 'காலங்கள்' (Ages) என்று பெயர்த்தெழுதலாம். அவர் உலகத்தையும், காலங்களையும், அனைத்தையும் உண்டாக்கினார்.[2] (யோவான் 1:3, கொலோ. 1:15,16; 1 கொரி. 8:6) 'உலகங்கள்' என்ற பன்மைச்சொல் எபி. 11:3-லும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அங்கு இச்சொல்லுக்கு, 'சர்வ பிரபஞ்சம்' (Universe) என்று பொருள் கொள்ள வேண்டும்.

*3) அவரே மகிமையின் பிரகாசம் (சுடரொளி)* – கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இறைமையின் சிறப்பையும், அவருடைய மகிமையின் மேன்மையையும், இயற்கையின் வல்லமையையும், இச்சொற்றொடர் எடுத்தியம்புகின்றது. அலெக்சாந்திரியா நாட்டு 'ஞானம்' (Wisdom) என்ற நூலினின்று, F. F. ப்ரூஸ் என்பார் இந்த மேற்கோளை எடுத்துக் காட்டியுள்ளார்:

"அவர் தேவனுடைய மூச்சும், எல்லா வல்லமையுமாயுள்ளவரின் தெளிவுள்ள மகிமையின் ஒளியும், முடிவில்லாது சொலிக்கும் ஒளியின் திருவெளிப்பாடும், தெய்வீகச் செயலினை எடுத்து இயம்பும் கண்ணாடியும், இறை நன்மையின் முழு வடிவமும் ஆவார்." (யாத். 33:18-20; ஏசா. 40:5; 46:13; 60:1; 2 கொரி. 4:6).

"கதிரவனின் ஒளிக்கதிர் வாயிலாகப் பூமி மிளிர்வதைப் போன்று, தேவனின் மகிமையான ஒளி இயேசு கிறிஸ்து மூலமாய் மனித இதயத்தில் மிளிர்கிறது." -- F.F. ப்ரூஸ்[3] (எசே. 1:28; 10:4; 44:4; யாத். 24:16; 2 கொரி 4:6).

*4) அவர் இறைத்தன்மையின் சொரூபம்* – "அவருடைய உள்ளியலின் சாயல்" ('Impress of His very being') "தேவனுடைய ரூபத்தின் தற்சாயல்". தன்மை என்ற சொல் "ஆள்" (person), "பொருள்" அல்லது "சாராம்சம்" (Substance) என்ற சொற்களின் பெயர்த்தலாகும். இதற்கு "ஆள்தன்மை" என்று பொருள் கொள்ளவேண்டும். இறைவன் யாராக இருக்கின்றாரோ அவர்தாமே, தேவப் புதல்வராகிய இயேசு கிறிஸ்து. இறைவனிடத்தில் என்னென்ன குணாதிசயங்கள் உள்ளனவோ, அவையனைத்தும் சற்றேனும் குறைவின்றி, மங்கிவிடாது தெய்வப் புதல்வரிடம் வெளிப்பட்டுள்ளன. "தெய்வத்தின் தற்சுரூபம்" (கொலோ. 1:15),என்னும் சிறப்புச்சொற்களும் இதனையே சுட்டிக்காண்பிக்கின்றன. இதனை ஒரு நாணயத்தில் உள்ள முத்திரை அல்லது உருவத்துடன் ஒப்பிடலாம். தந்தையராகிய இறைவன் எவ்வாறு தெய்வத்துவம் உள்ளவராக இருக்கிறாரோ, அவ்வண்ணமே தேவப்புதல்வரும் சற்றும் குறைவு ஏதுமின்றி முழு தெய்வத்துவம் உள்ளவராக இருக்கின்றார் என்பதே இதன் பொருள்.

*5) "அவர் சர்வத்தையும். . . தாங்குகிறார்"* – அவர் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறார் (எபி. 1:3). எல்லாமும் அவருக்குள் நிலைகொண்டு நிற்கிறது (கொலோ. 1:17); அவர் தாங்கி, ஏந்தி, சுமந்து, தப்புவிக்கிறவர் (ஏசா. 46:4). எவ்வசனத்தினாலே அவர் அனைத்தையும் படைத்தாரோ,அதே வசனத்தினாலேயே அவர் சர்வத்தையும் தாங்கி காத்துவருகிறார்.

இதைக் குறித்து முனைவர் ஸாபீர் என்பார் கூறியவற்றை, திரு. K. G. குரியன் மேற்கோள் எடுத்துக் காட்டியுள்ளார்.[4]

அ) அவர் வரலாற்றின் இலக்கு ஆவார் – அவரே எல்லாவற்றிற்கும் உரிமையாளர்.

ஆ) அவர் வரலாற்றின் ஆரம்பம் – அவர்மூலம் அனைத்தும் உண்டாயிற்று.

இ) அவர் வரலாற்றிற்கு அப்பாற்பட்டவர் – அவரே மகிமையின் சுடரொளியாக உள்ளார்.

ஈ) அவர் வரலாற்றில் என்றும் உள்ளவர் – அவர் சர்வத்தையும் தாங்குகிறார்.

*6) அவர் பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணினார்* – இயேசு கிறிஸ்து யார்? அவர் எத்தன்மையுடையவர்? அவர் என்னென்ன செய்கிறார் என்பதைச் சுருக்கிய வார்த்தைகளில் தெளிவாக விளக்கிய பின்பு, புதிய ஏற்பாட்டுக் காலத்தில் அவர் மனிதர்களுக்காகச் செய்ததென்ன? அவருக்கும், மனிதர்களாகிய நமக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதை இங்கு எடுத்துக் காட்டுகின்றார்.

"*பாவங்களை நீக்கிவிடும் சுத்திகரிப்பு* (Made purificaton of sin) என்ற பொருளினைவிட, பாவங்களுக்கான *பரிபூர்ண பிராயச்சித்தத்தை* (Making atonement for our sins) (இடைக்கட்டை) அவர் உண்டு பண்ணியுள்ளார் என்பதே இதன் சரியான பொருள்" என்கிறார் ஆர். ஏ. நாக்ஸ் (R. A. Knox)[5]

*7. அவர் மகத்துவமானவருடைய வலது பாரிசத்திலே அமர்ந்தார்* – இதனை இவ்வசனங்களுடன் சேர்த்துப் படிக்கவும். சங்.110:1; மாற்கு 16:19; ரோமர் 8:34; கொலோ. 3:1; எபி. 8:1; 10:12; 12:2.

இயேசு பெருமான் தமது மனித அவதார நோக்கத்தை நிறைவு செய்து, வெற்றிவாகை சூடினார் என்பதை இது சுட்டிக் காண்பிக்கின்றது. இஸ்ர வேலரின் தலைமை ஆசாரியன் அதிதூய அகத்தினின்று (மகா பரிசுத்தமான இடம்) வெளியே வருமட்டும் அங்கே அவன் உட்காரலாகாது (லேவி. 16:17). ஆனால், மெல்கிசேதேக்கின் முறைமையின்படி ஆசாரியரான இயேசு பெருமானோ, தம் ஊழியத்தை நிறைவேற்றி முடித்து அமர்ந்தார்.

இந்நிருபத்தில் இயேசு கிறிஸ்து "உட்கார்ந்தார்" என்று நான்கு முறை சொல்லப்பட்டுள்ளன:

அ) வெற்றி சிறந்தவராக உட்கார்ந்தார் (1:3).

ஆ) பரலோகத்தில் ஆசாரியராக உட்கார்ந்தார் (8:1).

இ) பலியைச் செலுத்தியவராக உட்கார்ந்தார் (10:12).

ஈ) தம் வேலையை முழுமையாக முடித்துவிட்டவராக, தேவ மகிமையின் வலது பாரிசத்தில் அமர்ந்தார் (12:2).

## 2. இயேசு கிறிஸ்து திருத்தூதுவர்களைக் காட்டிலும் மேலானவர் (1:4-15 – 2:5-18)

தேவப் புதல்வராகிய இயேசு கிறிஸ்துவின் சிறப்பியல்புதானே அவருடைய அருட்செய்தியினைச் சிறப்புறச் செய்கிறது. இதற்கு முன் இருந்தவைகளைப் புதிய முறைமையுடன் – ஏற்பாட்டுடன் ஒப்பிட்டு, இயேசு கிறிஸ்துவே எல்லா விதத்திலும் மேலானவர் எனவும், அவர் அருளியுள்ள இப்புதிய ஏற்பாடே நிகரற்றது– ஒப்பற்றது எனவும் நிரூபித்திட இந்நூலாசிரியர் "மேன்மை" (Better) என்ற சொல்லைப் பன்முறை பயன்படுத்தியுள்ளார். "விசேஷித்த" அல்லது "மேலான" ("Better") என்ற ஆங்கிலச்சொல் புதிய ஏற்பாட்டில் 19 முறை உபயோகிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். அவைகளில் 13 முறை இவ் வார்த்தை இந்நிருபத்திலே உபயோகித்துள்ளது. கிறிஸ்துவோடும் அவர் ஏற்படுத்தியுள்ள புதிய முறைமைகளோடும் சம்பந்தப்பட்டவைகளே அச்சிறப்பு களும்,மேன்மை களுமாம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கீழ்க்காணும் ஏழு காரணங்களினிமித்தம் இறைத் தூதுவர்களைப் பார்க்கிலும் மேன்மையுள்ளவர் என்பதை நூலாசிரியர் 4 முதல் 14 வரையுள்ள வசனங்களில் தெளிவுபடுத்திக்காட்டுகிறார்:

1. அவர் சிறப்பான நாமம் உடையவர்.
2. இறை தூதுவர்களும் அவரைத் தொழுது கொள்ளுகிறவராவர்.
3. அவர் கட்டளையிடத் தூதுவர்கள் கீழ்ப்படிகிறவராவர்.
4. அவர் பிதாவானவருக்குச் சமமானவர்.
5. அவர் யாவற்றையும் படைத்தவர்.
6. அவர் என்றென்றும் மாறாதவராயிருக்கிறவர்.
7. அவர் யாவற்றிற்கும் மேலானவராயிருக்கிறவர்.

இவ்விவரங்களை நாம் இங்கு ஒவ்வொன்றாகக் காண்போம்.

*"இவர் தெய்வ தூதரைப் பார்க்கிலும் எவ்வளவு விசேஷித்த நாமத்தைச் சுதந்தரித்துக் கொண்டாரோ, அவ்வளவு அதிகமாய் அவர்களிலும் மேன்மை யுள்ளவரானார்" (வ.1:4).*

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவானவர் இறைத் தூதர்களினின்றும் மேலானவர் என்பதை விளக்கிடும்பொருட்டு, பழைய ஏற்பாட்டினின்று பல மேற்கோள் களை (மோசேயின் நியாயப்பிரமாணத்தினின்று ஒன்று, தீர்க்கதரிசன நூல்களினின்று ஒன்று, சங்கீதங்களினின்று ஐந்து) எடுத்துத் தொகுத்துள்ளார் நூலாசிரியர்.[6]

மோசேக்கு இறைத் திருச்சட்டத்தை (நியாயப்பிரமாணத்தை) இறைவன் நேரடியாகக் கொடாது, விண் தூதுவர்கள் மூலமாகக் கொடுத்தார். அதுவுமின்றி, பழைய ஏற்பாட்டுக் காலக்கட்டத்தில், பல்வேறு இடங்களில் பற்பல காலங்களில் பன்முறை திருத்தூதுவர்கள் காட்சியளித்துள்ளனர் (அப். 7:30,35,38,53; கலா. 3:19). அந்நிலையில் தூதுவர்களும் மேன்மையுள்ளவர்களே. ஆனாலும் இறைமகன் இயேசு கிறிஸ்துவோ அந்த இறைத்தூதுவர்களைக் காட்டிலும் எவ்வகையிலும் மேலானவரேயாவர்.

## *1. விசேஷித்த நாமம் (மேன்மையான பெயர்)*

இந்நிருபத்தில் சுட்டிக்காட்டியுள்ள 13 மேன்மையான காரியங்களை (better things) உற்று நோக்குங்கள்:[7]

1. விசேஷித்த நாமம் (1:4).
2. மேன்மையான நன்மையானவைகள் (6:9).
3. அதிக நன்மையான (மேன்மையான) நம்பிக்கை (7:19).
4. விசேஷித்த உடன்படிக்கை (7:22).
5. விசேஷித்த வாக்குத்தத்தங்கள் (8:6).
6. விசேஷித்த ஆசாரிய ஊழியம் (9:23, 24).
7. விசேஷித்த பலிகள் (9:23).
8. விசேஷித்த சுதந்திரம் (உரிமை) (10:34).
9. மேன்மையான பரமதேசம் (11:16).
10. மேன்மையான உயிர்த்தெழுதல் (11:35).
11. விசேஷித்த நன்மையானதொன்று (11:40).
12. நன்மையானவைகளின் பேச்சு (12:24).
13. நலம் பயக்கும் இரத்தம் (12:24) ஆகியவைகளே இவை.

*"எப்படியெனில், நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெனிப்பித்தேன் என்றும், நான் அவருக்குப் பிதாவாயிருப்பேன், அவர் எனக்குக் குமாரனாயிருப்பார் என்றும், அவர் தூதர்களில் யாருக்காவது எப்போதாகிலும் சொன்னதுண்டா?" (1:5).*

முன் வசனத்தில் குறிப்பிட்ட விசேஷித்த நாமம் (மேன்மையான பெயர்) என்ன வென்பதை இவ்வசனத்தில் பார்க்கின்றோம். அந்தப் பெயர் திருக்குமாரன் (Son-மகன்) என்பதே! வான் தூதர்களைவிட மகத்தான பெயருக்கு உரிமையாளர் கர்த்தராகிய இயேசு ஆவார்.

இறைத்தூதர்கள் தேவகுமாரர் (ஆதி. 6:2). தேவ புத்திரர் (யோபு 1:6; 38:7) என்றெல்லாம் அழைக்கப்பட்டுள்ளனர். அவ்வண்ணமே இஸ்ரவேலரையும் என்னுடைய குமாரன் (ஓசியா 1:10; யாத். 4:22) என்றும் கர்த்தரின் பிள்ளைகள் (உபா. 14:1) என்றும் தேவன் அழைத்துள்ளார். இவையாவும், ஒரு தனி நபரையல்ல, ஒரு ஜனத்தை நோக்கிப் பன்மையில் அழைக்கப்பயன் பட்டவையாகும். இது ஒரு கூட்டத்தாரைக் குறிக்கும் இயற்பெயர் (Generic Name) ஆகும். இது புதிய ஏற்பாட்டு விசுவாசிகளை "இறை மக்கள்" என்று அழைப்பதற்கு ஒப்பானது (ரோமர் 8:16; கலா. 3:26).

ஆனால், எபி. 1:5-ல் நாம் காணும் "என்னுடைய குமாரன்" என்னும் ஒருமைச் சொல், இறைத் திருக்குமாரனை மட்டுமே குறிப்பிடும் சொல்லாகும். இறையோன் மனிதனாக அவதரித்தார். அவரே இயேசுபிரான். அவரே மனிதனாக அவதரித்த இறையோன். இறையோனும், குமாரனும் அவரே. அவருடைய மனித அவதாரத்தினிமித்தமே அவர் "குமாரன்" என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றார். பிதாவாகிய தேவன்தாமே இவரை "நேச குமாரன்" என்றழைத்துள்ளார் (மத். 3:17; லூக். 9:35; 2 பேதுரு 1:17).

### *"நீர் என்னுடைய குமாரன். இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன்" (சங். 2:7)*

இவ்வசனம், இயேசு கிறிஸ்து மனிதனாக உருவெடுத்ததைக் காட்டுகிறது எனவும், அவருடைய உயிர்த்தெழுதலைக் காட்டுகிறது எனவும் இரண்டுவிதக் கருத்துக்கள் இறைமக்களிடையே நிலவுகின்றன. கிறிஸோஸ்தம், தியோடரட், யூனிபியஸ், அலெக்சாந்திரியா கூறிலோஸ் என்னும் திருச்சபைத் தந்தையரும், டார்பி, கெல்லி, வைன், அயன்சைடு, பிரவுன் போன்ற புதிய ஏற்பாட்டுச் சபையைச் சார்ந்த மறை நூல் அறிஞர்களும் கிறிஸ்து மனித உருவெடுத்ததையே இது குறிக்கிறது என்னும் கருத்து உடையவராவர். ஆனால் வீஸ்ட், சாபீர், நியூள், எர்ட்மான் மற்றும் லென்சி ஆகியோர் இது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறிக்கின்றது எனக் கருதுகின்றனர். பவுல் அப்போஸ்தலன் தன் பிரசங்கத்தில் இவ்வசனத்தைக் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலோடு இணைத்துக் கூறியுள்ளதைக் கவனிக்க (அப். 13:32, 33).

இவ்விரண்டு பொருள்மட்டுமன்று, மூன்றாவதொரு பொருள் கொடுப்பாருமுண்டு. "ஜெநிப்பித்தேன்" என்ற சொல் "இன்று நான் உன்னை அனுப்பினேன்" என்பதே அந்தக் கருத்து. இவ்வாறு அம்புரோஸ், சால்வின், கிரேஷியஸ், ஓவன், போன்றோர் இக்கருத்தினைக் கொண்டவர்களாவர்.

'இன்று' என்ற சொல், புதிய ஏற்பாட்டு நிகழ்காலத்தையே குறிக்கிறது. இயேசு பெருமானின் பிறப்பும் உயிர்த்தெழுதலும் உட்பட்டதே அவருடைய மனித அவதாரம் ஆகும் என்று நாம் குறிப்பிட வேண்டும்.

"நான் அவருக்குப் பிதாவாயிருப்பேன், அவர் எனக்குக் குமாரனாயிருப்பார்".- இவ்வசனம் 2 சாமு. 7:14-ன் மேற்கோள் ஆகும். இது, தாவீதின் மகனாகிய சாலொமோனை மட்டுமன்றி, தாவீதின் மரபில் தோன்றிய மேசியாவையும் குறிப்பதாகும் (ஏசா. 9:7; எரே. 23:5; மீகா. 5:2; சக. 9:9; மத். 1:1; லூக்கா 1:32; ரோமர் 1:5).

*"தூதர்களில் யாருக்காவது எப்போதாகிலும் சொன்னதுண்டா?"* – தேவ தூதர்களை ஒருமித்துப் பன்மையில் தேவபுத்திரர், தேவகுமாரர் என்று சொல்லியிருப்பினும், ஏதோ ஒரு தூதனைத் தனிப்பட்ட நிலையில் "என் குமாரன்" என தேவன் ஒருபோதும் கூறினதில்லை. இந்நிலையிலும் இறை மகனார் தூதர்களினும் மேலானவர், சிறப்பானவர் என ஆக்கியோன் தெளிவுபடுத்துகிறார்.

## *2. "வான்தூதர்கள் யாவரும் இயேசு கிறிஸ்துவைத் தொழுது கொள்ளக்கடவர்கள்"*

*"மேலும், நமது முதற்பேறானவரை உலகத்தில் பிரவேசிக்கச் செய்தபோது, தேவதூதர் யாவரும் அவரைத் தொழுதுகொள்ளக்கடவர்கள்" என்றார் (1:6).*

*"முதற்பேறானவரை"* – (சங். 89:27) கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை முதற்பேறானவர் என்றழைத்திருப்பது, உயிர்த்தெழுதலுக்குப் பின்னர் அவருக்கு மனுமக்களோடும், படைப்போடும் உள்ள உடன்பாட்டை எடுத்துக் காட்டும் ஒரு சொல்லாகும் (1 கொரி. 15:25; ரோமர் 8:29; கொலோ. 1:15, 18; வெளி. 1:5).

இயேசு கிறிஸ்துவுக்குப் பிதாவாகிய தேவனோடுள்ள ஐக்கியத்தை வெளிப்படுத்துவதே, "ஒரேபேறான குமாரன்" என்னுந்தொடர் ஆகும். இஸ்ரவேலரை "மூத்த புதல்வன்" (தலை மகன்) என்று கர்த்தர் அழைத்துள்ளதை உற்றுக் காண்க (யாத். 4:22; எரே. 31:9). "பழைய ஏற்பாட்டுக் காலத்தில், தலைப் பிள்ளை உரிமைக்கு தனியொரு அந்தஸ்தும் உயர்நிலையும் இருந்தது. அதை வெளிப்படுத்துவதே தலைப்பேற்றுரிமை ஆகும். தந்தையாரின் மரணத்திற்குப் பின்னர், அவருடைய ஆஸ்திகளையும், அலுவல்களையும் குடும்பத்தின் நன்மைக்கு ஏதுவாக வினியோகிக்கும் உரிமை தலை மகனுக்கே உரியது. தலை மகனும் சொத்தில் அதிகப் பங்கினையும் பெறலாம்." (உபா. 21:15,16; 2 நாளா. 21:3) என்று எடுத்துக் காட்டுகின்றார் வெஸ்ட்காட்.[8]

ஆதாம் முதற்பேறானவன் என்றும், அவனை தேவன் உலகில் தோற்றுவித்த நாட்களில், அவனைத் தொழுதுகொள்ளும்படி இறைவன் தூதர்களைப் பணித்தார். ஆனால் அது நிறைவேறாது போயிற்று எனவும் யூதர்களிடையே ஓர் எண்ணமுண்டு. மிகாவேல் முன்வந்து, இறைவனுடைய சாயலாகப் படைக்கப்பட்ட மனிதனை வணங்கக்கட்டளையிட்டான்; அவனே முதற்கண் வணங்

கவுஞ் செய்தான் என்பது யூத பாரம்பரியத்தில் வந்துள்ள பிறிதொரு வரலாற்றுக் கதையாகும்.[9]

*"முதற்பேறானவர்"* – என்ற பதம், திருமறையில் ஐந்துமுறை, நான்கு பொருள்களில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளதைக் காண்க:

1. சர்வ சிருஷ்டிக்கும் முந்தினபேறுமானவர் (கொலோ. 1:15).

2. மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர் (கொலோ. 1:18; வெளி. 1:5).

3. சகோதரருக்குள்ளே முதற்பேறானவர் (ரோமர் 8:29).

4. மகிமையின் இராஜ்யத்தில் முதற்பேறானவர் (எபி. 1:6).

இப்பெயர், காலத்தோடு இணைந்து லூக்கா 2:7-ல் காண்கிறபடி முதற் பேறானவர் எனப்பொருள்கொள்ளக் கூடியதாயினும், கனம், மகிமை, இடம், பொருள், உரிமை, நிலை ஆகிய யாவற்றிலும் அவர் முன்னிடத்தைப் பெறுபவர் அல்லது முதன்மையானவர் எனப்பொருள்கொள்வதே ஏற்புடையதாகும்.

*"உலகத்தில் பிரவேசிக்கச் செய்தபோது"* – என்னும் இறந்தகால வினைச் சொல், அவரது முதல் வருகையை அல்லது மனித உருவெடுத்ததைக் குறிப்பிடுவதாகும்.

தமிழ் வேதாகமத்தில் வரும் 'மேலும்' என்ற சொல்லை 'மீண்டும்' (again) எனக் கொள்ளலாம். இச்சொல்லும், "தொழுது கொள்ளக்கடவர்கள்" (தொழு வார்களாக) என்னும் எதிர்காலச் சொல்லும், இயேசு பெருமானின் இரண்டாம் வருகையைக் குறிப்பதாகக் கருதுகின்றனர்.

இவ்வாக்கியத்தின் ஆங்கில மொழியாக்கத்தைக் காண்க. "And again when he bringeth the first born into the world" - KJV, "And when he again bringeth in the first born into the world" - NIV. "மேலும், தம்முடைய முதற்பேறானவரைத் திரும்பவும் உலகத்தில் பிரவேசிக்கச் செய்யும்போது" நிசியாவிலுள்ள கிரிகரி (Gregory of Nyssia) என்பார் இவ்வேத வாக்கியம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாவது வருகையைக் குறிப்பிடு வதாக உறுதிபடக் கூறியுள்ளார். இக்கூற்றினை வெஸ்ட்காட் ஒப்புக் கொண்டுள்ளார்.[10]

பல வேதவிரிவுரையாளர்களும் இக்கருத்தினையே கொண்டுள்ளனர். இயேசு கிறிஸ்துவின் முதல் வருகையில் தூதர்கள் அவருக்குப் பணிவிடை புரிந்தனர். (மத். 4:11; லூக்கா 2:9-14; 22:43), மீண்டும் அவர் மகிமையோடு மன்னாதி மன்னராக உலகத்தில் பிரவேசிக்கையில் வான்தூதர்கள் அவருக்குப் பணிவிடை செய்வார்கள் (மத். 16:27; 25:31; 2 தெச. 1:8; வெளி. 5:11; 19:11-16).

'எழுபதின்மர்' (செப்த்திசண்ட்--LXX) கிரேக்க பழைய ஏற்பாட்டு மொழி பெயர்ப்பில், சங். 97:7-11-ம் வசனம் "அவருடைய அனைத்துத் தூதர்களே அவரைத் தொழுதுகொள்ளுங்கள்" அல்லது, "தேவ தூதர்கள் அனைவரும் அவரைத் தொழுவார்களாக" என்னும் பொருள்பட உள்ளது. பழைய ஏற்பாட்டு நூலில் தேவதூதர்கள், தேவனை வணங்கினர் போன்று தேவப் புதல்வராம் இயேசுபிரானையும் வணங்குவார்கள் என்றுள்ளது. பிதாவினைக் கனம் பண்ணு கிறவன், குமாரனையும் கனம் பண்ணுவான்" (யோவான் 5:22, 23). இங்கே திருத்தந்தையாகிய கடவுளும், திருமைந்தனாகிய கடவுளும் உன்னத சரிசம நிலை யில் உள்ளதைக் காண்கின்றோம்.[11]

## *3. "இயேசு கிறிஸ்து கட்டளையிடுபவரும், வான் தூதர்கள் கீழ்ப்படிபவருமாவர்" (1:7; சங். 104:4)*

*"தேவ தூதரைக் குறித்தோ: தம்முடைய தூதர்களைக் காற்றுகளாகவும், தம்முடைய ஊழியக்காரரை அக்கினி ஜுவாலைகளாகவும் செய்கிறார் என்று சொல்லியிருக்கிறது." (1:7)*

"இறைவன் தமது படைப்பாகிய காற்றையும் தீயையும் நமக்காகப் பயன் படுத்துகிறார். தூதர்களைக் காற்றைப்போல விரைவாகவும், தீயைப்போல வல்லமையாகவும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்", என்னுமொரு கருத்து வழக்கிலுள்ளது.[12]

அ) விண் தூதர்கள் இறைவனால் படைக்கப்பட்டவராவர். அந்தத் தூதர்கள் இறைவனின் பணித்தலுக்கு ஏற்பக் காற்றைப்போல விரைவாகவும், தீயைப்போல வல்லமையாகவும் செயல்படுவார்கள்.[13]

ஆ) வான் தூதர்களுக்கு இறைவன் கட்டளையிட்டால், அவர்கள் காற்றாகவும், தீயாகவும் செயல்படுவார்கள் என்னும் ஒரு நம்பிக்கை யூதர்களுக்கு இடையே உள்ளதாக யூதர்களின் பாரம்பரிய நூலாகிய "2 எஸ்றா 8:21, 22"-ல் காண்கின்றோம். ஆகவே வான்தூதர்கள் அவ்வண் ணம் பணிவிடை செய்பவராயிருப்பினும் இயேசு கிறிஸ்துவோ உயர்ந்தவ ராக, அவ்விண் தூதர்களுக்கும் கட்டளையிடுபவராயுள்ளார் என்பதே இப்பகுதியின் கருத்து.[14]

இ) "இறைவன் தம் வான்தூதர்களை இறை தூதுடன் அனுப்புகையில், காற்றைப் போன்று அவர்கள் அதிவிரைவிலும், மகிமையின் வடிவாகிய இறைவனது முன்னிலையில் செயல்படுகையில் தீயைப்போன்று எரிசுட ராகவும் இருப்பார்கள்" என்கிறார் எர்மோன் என்பார்.[15]

### 4. *“இறை இயேசு பிதாவாகிய இறைவனுக்கு நிகரானவர்” (1:8,9; சங். 45:6,7).*

*“குமாரனை நோக்கி தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்கு முள்ளது. உம்முடைய இராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலா யிருக்கிறது. நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுக்கிறீர்; ஆதலால் தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப் பார்க்கிலும், உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார்”. (1:8, 9)*

பிதாவாகிய தேவன், இறைவனாம் திருக்குமாரனை அபிஷேகம் செய்தார் (அப். 10:38). ஓர் அரசவைத் திருமணக் காட்சியைச் சித்திரித்திருக்கும் வகையில் 45-ம் சங்கீதத்தைக் காண்கின்றோம். இந்தச் சங்கீதக்காரர், முதற்கண் மண மகனையும், பின்பு மணமகளையும் குறிப்பிடுகிறார். அச்சங்கீதத்தில் குறிப் பிட்டுள்ள மணமகனை, இங்கு எபிரெய நிருப ஆசிரியர் மேற்கோள் காட்டி யுள்ளார். இவ்வசனம் மேசியாவின் வெற்றிச் சிறப்பினை எடுத்துக் காட்டுகின்றது. “அவர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுக்கிறார்.” இங்கே பிதாவானவர், குமாரனை நோக்கி “இறைவா” என்றழைக்கின்றார்.

அ) பிதாவாகிய இறைவனோடுகூடத் திருக்குமாரனும் இறைவனாகவே உள்ளார்.

ஆ) இறைவன், தன் திருமைந்தனை நோக்கி, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்கும் உள்ளது என்கிறார்.

இ) “நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர்” (வ.1:9). இயேசு பெருமான் தன் இவ்வையக வாழ்க்கையிலும் இவ்வழி முறையையே வழக்கமாக்கிக் கொண்டார்.

ஈ) இறைவன் தமது திருமைந்தனை “ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார்” (1:9). பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினா லும் அவரை அபிஷேகம் பண்ணினார் (சங். 2:6; ஏசா. 61:1; அப். 10:38).

இவ்வரிய உயர்ந்த பதவிகளில் ஒன்றிலும் வானதூதர்களுக்குச் சற்றேனும் உரிமை இல்லையே. ஆகவே இயேசு கிறிஸ்து வான்தூதர்களிலும் எவ்விதத் திலும் மேலானவர் என்பதை நூலாசிரியர் வரையறுத்து நிரூபிக்கின்றார்.

### 5. *“இயேசு கிறிஸ்து எல்லாவற்றையும் படைத்தவர்” (1:10)*

*“கர்த்தாவே, நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர், வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியைகளாயிருக்கிறது.” (1:10)*

இது சங்கீதம் 102:25 -ன் மேற்கோள். "இயேசு கிறிஸ்துவே அனைத்தையும் படைத்தவர்." கண்ணுக்குப் புலப்படுவதும், புலப்படாததுமான அனைத்திற்கும் அவரே படைப்பு காரணர் ஆவார். விண்தூதர்களும் அவருடைய படைப்பே யாவர். அவரே அனைத்துப் படைப்புக்கும், ஆதிகாரண கர்த்தருமாவார் (நீதி. 8:22,23).

## *6. இயேசு கிறிஸ்து மாறாதவராயிருக்கிறார் (1:11,12)*

*"அவைகள் அழிந்துபோம்; நீரோ நிலைத்திருப்பீர், அவைகளெல்லாம் வஸ்திரம் போலப் பழமையாய்ப்போம். ஒரு சால்வையைப்போல அவைகளைச் சுருட்டு வீர். அப்பொழுது அவைகள் மாறிப்போம்,நீரோ மாறாதவராயிருக்கிறீர். உம்முடைய ஆண்டுகள் முடிந்து போவதில்லை என்றும் சொல்லியிருக்கிறது" (1:11, 12).*

உலகமும், அனைத்துப் படைப்புகளும் அழிந்துபோம். படைத்தவரோ மாறாதவராயிருக்கிறார் – அழியாதவராக இருக்கிறார். இறைஇயேசுவின் அழியா, மாற்றமில்லா நிலைத்து நிற்கும் தன்மையைத் தெளிவுறுத்தும் பொருட்டு, சங்கீதம் 102:26-ஐ ஆசிரியர் மேற்கோளாக எடுத்துக் காட்டியுள்ளார். உலகம் அவரா லேயே உண்டாக்கப்பட்டது என்பதை எபி. 1:2-ல் காண்க.

காலத்தில் உருவாக்கப்பட்டவை, காலமெனுங்கடலினிலே மூழ்கிப்போம். அவை அழிவிற்கு உட்படும். அவையெல்லாம் வஸ்திரம்போலப் பழமை யாய்ப்போம். படைத்தவரோ – அவர் காலங்கட்கு அப்பாற்பட்டவர். அவரில் பழைமையும் வீசாது, முதுமையும் ஏறாது. அவர் என்றென்றும் இருக்கிறவ ராகவே இருக்கிறார் – இருப்பார். படைப்புகளெல்லாம் காலவரைக்குட்பட்டவை யாகும். அவற்றிற்கு முடிவுண்டு, அழிவுண்டு. அவற்றைப் படைத்த இறைத் திருமகனோ, அழிவில்லாதவர். "உம்முடைய ஆண்டுகள் முடிந்து போவ தில்லை." காலத்திற்கு அப்பாற்பட்ட கர்த்தர் பெருமானோ என்றென்றும் மாறாதவராவார் (எபி. 13:8). அவரே எதிர்காலத்தில் புதிய வானத்தையும் புதிய பூமியையும் உண்டாக்குகிறவருமானவர் (2 பேதுரு 3:7; வெளி. 21:1).

## *7. "இயேசு கிறிஸ்து எல்லாவற்றிற்கும் மேலானவர்." (1:13,14; சங். 110:1)*

*"மேலும், நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும் வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்று தூதர்களில் யாருக்காவது எப்போதாகிலும் அவர் சொன்னதுண்டா? இரட்சிப்பைச் சுதந்த ரிக்கப் போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா?" (1:13, 14).*

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, மரணத்தினின்று உயிர்த்தெழுந்து, விண்ணுலகிற்கு ஏறிச்சென்று தேவனுடைய வலது பாரிசத்திலே அமர்ந்தார் (அப். 2:35; ரோமர் 8:34; கொலோ. 3:1; எபி. 1:3, 13; 8:1; 10:12; 12:2). இயேசு கிறிஸ்து அனைத்தையும் இயக்குகிறவராயிருக்க, தூதர்களோ பணிவிடை செய்பவராயுள்ளனர் (லூக். 1:19; 1 கொரி. 15:24-27-ஐ காண்க).

“படைப்பின் வரிசையில் வான்தூதர்கள் மனிதர்களினும் மேலானவர்களாவர். ஆயினும் இரட்சிப்பின் வரிசையில், இது முரண்பட்டதாகவே உள்ளது என இப்பகுதி வலியுறுத்தி நமக்குக் கற்பிக்கின்றது.”[16]

இது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையை, வெளிப்படுத்துகின்ற சிறப்பானதொரு வேதப் பகுதியாகும். “தெய்வத் திருப்புதல்வரை இறைவா என்றழைத்து, அவருடைய சிம்மாசனம், செங்கோல், தேவ மகிமை, படைக்கும் ஆற்றல், மாறாமை” என்பவற்றிற்கு இறைவனே சாட்சி கூறியுள்ளார். “இயேசு கிறிஸ்துவின் தெய்வத்தன்மைக்குத் திருமறை வசனங்களில் திட்டமான சான்றுகள் இங்கே திரளாயுள்ளன” என்கிறார் W. E. வைன் என்பார்.[17]

வான் தூதர்கள் உருவாக்கப்பட்டவர்கள் மட்டுமன்று. இயேசு கிறிஸ்துவுக்கும், அவரால் ஈடேற்றம் பெற்றுள்ள இறைமக்களுக்கும் அவர்களே பணிவிடை செய்யும் ஆவிகளாயுமுள்ளனர் (ஆதி. 28:12; 32:1; அப். 5:19; 12:7-9).

## முதலாம் எச்சரிக்கை (2:1-4)

“தெய்வத் திருப்புதல்வர்” என்னும் உயரிய பதவியின் வாயிலாக இயேசு கிறிஸ்து வான்தூதர்களிலும், இறைவாக்கினர்களிலும் மேலானவர் என்பதனைப் பல வண்ணங்களால் சித்திரித்து நம் கண்முன் அழகுறத் தீட்டிக் காட்டிய இந்நூலாசிரியர், அவ்வுன்னதமானவர் மூலமாய்க் கிடைக்கப் பெற்றுள்ள செய்தியின் சிறப்பியல்புகள் எவ்வாறு பழைய ஏற்பாட்டின் செய்திகளிலும் எவ்விதத்திலும் மேலானவையே என்பதையும் தெளிவுறுத்திய பின்னர் அவர் தம் வாசகர்களுக்கு ஓர் எச்சரிப்பை விடுக்கிறார்.

“தாம் நிரூபித்துக்காட்டிய ஓர் உண்மையை மையமாகக் கொண்டு எச்சரிக்கை செய்தல் அல்லது ‘அறிவுரை வழங்குதல்’ இந்நூலாசிரியரின் எழுத்து வன்மையாகும்” – C. R. எர்ட்மான்.[18]

வான் தூதர்களின் வாயிலாகக் கிடைக்கப்பெற்றச் செய்தியினைப் புறக்கணித்தோருக்கு, அதற்கேற்பத் தண்டனை கிடைத்ததெனில், இறைமகன் இயேசுவின் வாயிலாகக் கிடைக்கப்பெற்றச் செய்தியினை அலட்சியஞ்செய்தால் கிடைக்கப்பெறும் தண்டனை எத்தனை, எத்தனை பெரியதும், பயங்கரமுமாம் எனக் குறித்துக் காட்டுகின்றார் இவ்வாசிரியர்.

இந்நிருபத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஐந்து எச்சரிப்புகளில் இதுவே முதலாம் எச்சரிக்கையாம்.

*"ஆகையால் நாம் கேட்டவைகளை விட்டு விலகாதபடிக்கு அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாகக் கவனிக்க வேண்டும். ஏனெனில் தேவதூதர் மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனத்திற்கு. விரோதமான எந்தச் செய்கைக்கும் கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனை வரத்தக்கதாக அவர்களுடைய வசனம் உறுதிப் படுத்தப்பட்டிருக்க, முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவர்களிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும், அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும், பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்ளுவோம்" (2:1-4).*

***ஆகையால்*** – எப்படியெனில், வான்தூதர்கள் மூலமாய்க் கிடைக்கப்பெற்ற பழைய உடன்படிக்கையிலும், இயேசு கிறிஸ்துவாகிய திருக்குமாரன் மூலமாகக் கிடைக்கப்பெற்ற புதிய ஏற்பாடு மிகவும் மேலானது. ஆகையால் . . .

***"நாம் கேட்டவைகளை"*** – 'கேட்டவைகள்' யாவை? பழைய உடன் படிக்கைகளிலும் மேலான புதிய ஏற்பாட்டுச் சத்தியத்தை, வான்தூதர்களிலும் மேலான இறைமகன் இயேசுவின் வாயிலாகச் சொல்லிக் கேட்கப்பட்டவைகள்.

***"விட்டு விலகாதபடி"*** – "வழுவி விடாதபடி" – "நழுவி விடாதபடி" என்பதே இங்கு மூலப்பதத்தின் பொருள் ஆகும். "வழுவி விடாதபடி" என்கிற இத்தொடரை புதிய ஏற்பாட்டில் இவ்விடத்தில் மட்டுமே காண்கிறோம். ஒரு கப்பல் அதன் கடற்பயணப் பாதையை விட்டு விலகி, கடற் சுழற்சியில் அகப் படுவதைக் குறிப்பிடவும் இக்கிரேக்கச் சொல்லையே பயன்படுத்துவார்கள். ஆகையால் ஜாக்கிரதையாக இருக்கக்கடவோம்.

***"மிகுந்த ஜாக்கிரதையாய் (உன்னிப்பாய்) கவனிக்க வேண்டும்"*** (அப். 8:6; 16:14) – இயேசு கிறிஸ்து மூலமாய்க் கேட்ட, அவர் மூலம் கொடுக்கப்பட்ட புதிய ஏற்பாட்டுச் சத்தியத்தைக் குறித்து மிகக் கவனமாயிருத்தல் அவசியம் (உபா. 18:15; அப். 3:22, 23).

***"தேவதூதர் மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனம்"*** – அதுவே இறை வசனம் ஆகும்! ஆனால் அது பழைய ஏற்பாட்டு வசனமாகும் (உபா. 33:2; அப். 7:38, 53; கலா. 3:19). அதன் கட்டளைகளை மதியாது மீறினோரைக் கர்த்தர் அந்தந்தக் காலத்தில் கடுமையாகத் தண்டித்துள்ளார் (யாத். 32:8, 27, 28; எண். 11:1, 33; 15:30-36; உபா. 17:12; 1 கொரி. 10:5-10).

*"கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு"* – தேவன் தமது தூதர்கள் மூலமாய் அறிவிக்கப்பட்ட வார்த்தைகள் மாறாதவையாகும். முன்னே கொடுக்கப்பட்ட பழையதைவிட புதிய ஏற்பாட்டு வார்த்தைகள் மிகவும் மேலானவையாகும். பிதாவாகிய தேவனே மனித வடிவில் தோன்றிய இயேசு கிறிஸ்துவின் மூல மாகப் பேசியிருக்கிறார் என்றல்லவா இது பொருள்படுகிறது (மாற்கு 1:14, லூக்கா 4:18; ஏசா. 61:1; எபி. 1:2).

*"கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டது"* – நூலாசிரியரும் இதன் வாசகர்களும், கர்த்தரிடத்தினின்று நேரில் கேட்டவர்களாவர். கர்த்தரிடத்தினின்று, நேர்முகமாய்க் கேட்டவர்களால் தெரிவிக்கப்பட்டுக் கேட்டறிந்தவர்கள் (லூக்கா 1:1,2). இங்கே புலனாகும் பிறிதொரு வலியுறுத்தலுமுண்டு. பவுல் இயேசு வினிடத்தில் நேரில் கேட்டறிந்தவனாவான் (1 கொரி. 15:3; கலா. 1:12).

*"அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதப் பலத்த செய்கை களினாலும்"* – "அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும்" – என்னுஞ் சொற்றொடர் புதிய ஏற்பாட்டில் 13 முறை வருகிறது (மத். 24:24; யோவான் 4:48; மாற்கு 13:22; 16:20; அப். 2:19, 22, 43; 5:12; 14:3; 15:12; ரோமர் 15:18; 2 கொரி. 12:12; எபி. 2:4).

அடையாளங்களென்பவை நமதாண்டவராலும், அப்போஸ்தலராலும் நிறைவேற்றப்பட்ட அற்புதங்களாகும். இவை இறை சத்தியத்தை உறுதிப் படுத்த இறைவனாலேயே நிறைவேற்றப்பட்டவையாம். உதாரணமாக, ஆண்டவர் 5000 ஆண்களுக்கு (பெண்களும்,பிள்ளைகளும் தவிர) திருப்தியாக ஆகாரம் வழங் கின அற்புதம் (யோவான் 6:1-14), அதைத் தொடர்ந்து "ஜீவ அப்பம்" பற்றிய போதனைக்கு அடித்தளமாகவும்,ஆதாரமாகவும் இருந்தது. இது அம்மக்கள் இப்புதிய தேவ வெளிப்பாட்டை ஏற்றுக் கொள்ளவும் உதவியது; ஆண்டவரின் வார்த்தைகளை நிரூபித்துக் காட்டியது.

அற்புதங்கள் பார்வையாளர்களின் கண்களுக்குமுன் நிறைவேற்றப்பட்ட அதிசயங்கள் ஆகும். கண்களால் கண்டு அறியத்தக்கதாகவே அனைத்து அற்புதங்களும் இருந்தன. இவை பார்க்கிறவர்களின் ஆவலைத் தூண்டிவிட்டு உள்ளத்தின் வாஞ்சையை உருவாக்கிவிடுகிறது. லாசருவை நமதாண்டவர் உயிரோடு எழுப்பியது (யோவான் 11:1-44) இதை எடுத்துக்காட்டும். ஏற்றுக் கொள்ளக் கடினமாகக் காணப்பட்ட இயேசு கிறிஸ்துதாமே உயிர்த்தெழுதலாக உள்ளார் என்ற இறை சத்தியத்தை இது உறுதிப்படுத்திக் காட்டியது. அதிசயங் கள் இயற்கை நியதிகளுக்கு மாறாக விளங்கி, மனித சக்திக்கும் அப்பாற்பட்டு, இறைவனுடைய சக்தியை வெளிப்படுத்துகிறவையாம். இவற்றின் நோக்கங்கள் எல்லாம் சுவிசேஷச் சத்தியங்களை நிரூபிக்கிறவைகளாக அமைந்து, குறிப்பாக

பாரம்பரியமாக அடையாளங்களைத் தேடுகிற யூத மக்களுக்கு (1 கொரி. 1:22) இந்த அற்புத அதிசயங்களும் மறுத்துக்கூற இயலா அடையாளங்களாக விளங்கின. இந்த அற்புத அடையாளங்கள் குறிப்பாக, வேதப்புத்தகம் முற்றுமாக எழுதி விசுவாசிகளின் கையில் கொடுக்கப்படாதிருந்த அப்போஸ்தல காலங்களில், வேத வசனத்தை ஆணித்தரமாக அறுதியிட்டுக்காட்ட உதவும் ஏதுக்களாக விளங்கின. இந்த அற்புதங்கள் மூலம் தேவன் சாட்சி கொடுத்து முடித்துள்ள இன்றைய நிலையில், அந்த அற்புதங்கள் மற்றும் அடையாளங்கள் தேவையற்றதும், நிறைவேற்றி முடிவுபெற்றவைகளுமாகிவிட்டன. நிறைவான வேதவசனம் வந்தபோது, குறைவான அற்புத அடையாளங்கள் ஒழிந்துபோய்விட்டன (1 கொரி. 13:10).

*"தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும்"* – இவ்வசனம் "வரங்களைப் பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியினாலும்" என்றும் "பரிசுத்த ஆவியானவரை வழங்கிப் பகிர்ந்து கொடுத்தார்" எனவும் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன. "ஒரே ஆவியானவர். . . தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்" (1 கொரி. 12:11). "உங்களுக்கு ஆவியை அளித்து, உங்களுக்குள்ளே அற்புதங்களை நடப்பிக்கிறவர்" (கலா. 3:5), என்றும் காண்கிறோம். இங்கே ஆவியைப் பகிர்ந்ததும், ஆவியின் வரங்களைப் பகிர்ந்ததும் என இரு நிகழ்ச்சிகளாக இதனைப் பொருள் கொள்ளலாம் (1 பேது. 1:12). புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகளோ உன்னதத்தினின்று சம்பூரணமாய்ப் பொழிந்தருளிய பரிசுத்தாவியானவரால் அருட்செய்தியை அறிவித்தனர் (அப். 10:44; 19:6).

*"தேவன்தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற . . ."* – "கர்த்தர் அவர்களுடனேகூட கிரியை நடப்பித்து . . . உறுதிப்படுத்தினார்" (மாற்கு 16:20). உறுதியாக்கப்பட்டதும் (எபி. 2:3) சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற (எபி. 2:4) என்று சொல்லியுள்ள இறந்தகால (கடந்தகால) வினைச்சொல்லைக் காண்க. இன்று பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் அடங்கிய நிறைவான தூய திருமறை நூல் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் இவற்றோடே எதையுங்கூட்ட வேண்டிய அவசியம் இல்லை. அதுவுமன்றி அப்போஸ்தலர் காலத்தில் நடைபெற்றாற்போன்று, அடையாளங்களும் அற்புதங்களும் தொடரவேண்டிய அவசரமுமில்லை. இன்று இறைவனே தம் ஆவியானவரால் சாட்சி கொடுக்கிறார் (ரோமர் 8:16; 1 கொரி. 5:1-13).[19]

*"இவ்வளவு பெரிதான இரட்சிப்பு"* – தோற்றத்தாலும், பொருளாலும், இந்த இரட்சிப்பு மிக மேன்மையானது! அதற்குரிய காரணங்களைத்தான் நூலாசிரியர் இங்கு சுட்டிக் காண்பிக்கின்றார். ஒருவன் இரட்சிக்கப்படுவதற்கு ஆவியானவரின் பங்கு சிறிதானதொன்றல்ல என்பதே இதுவரை நாம் மேற்கொண்ட நம்

முடைய ஆய்வினின்று அறிந்து கொண்ட உண்மை. கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டதும், பரிசுத்த ஆவியானவரால் அளிக்கப்பட்டதும், தேவன்தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிய மகிமையான மீட்பு! இவ்வண்ணமாய் மூவொரு கடவுளால் (திரியேக தேவனால்) உண்டான இந்த இரட்சிப்பு, உறுதிப்படுத்தப்பட்டுள்ள இந்த இரட்சிப்பு எத்தனை பெரிய இரட்சிப்பு! ஆம், இது ஒப்பற்ற, சிறப்பான, உன்னத இரட்சிப்பு!

இந்நிருபத்தில் ஏழு நல்ல பெரிய காரியங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவையாவன:

1. இவ்வளவு பெரிதான இரட்சிப்பு (2:4).
2. பெரிய (பிரதான) ஆசாரியர் (4:14; 9:11).
3. பெரிதும் உத்தமமுமான கூடாரம் (9:11).
4. பெரிய (மிகுந்த) போராட்டம் (10:32).
5. பெரிய (மிகுந்த) பலன் (வெகுமதி) (10:35).
6. பெரிய மேகம் போன்ற திரளான சாட்சிகள் (12:1).
7. பெரிய மேய்ப்பர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து (13:20).

***“கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வோம்”*** – அசட்டை பண்ணினால் அல்லது அதற்கேற்றதான கனத்தைக் கொடாவிடில், நாம் எவ்வாறு தப்பித்துக்கொள்ள இயலும் (மத். 22:5; 1 தீமோ. 4:14)? நிராகரிப்போருக்குரிய தண்டனையும் பெரிதாயிருக்கும்! விண் தூதர்கள் மூலமாய்த் திருவசனங்களைப் பெற்றுக்கொண்டோர் அதை நிராகரித்தபோது தண்டிக்கப்பட்டுள்ளனரே (எண். 11:1,33; 15:30-36). அப்படியாயின் தேவனால் தானே தோற்றுவிக்கப்பட்டுள்ள இவ்வளவு பெரிதான இரட்சிப்பையும், அதனைத் தெள்ளத்தெளிவாக விளக்கியுள்ள இந்தப்புதிய ஏற்பாடாகிய முறையினை அலட்சியஞ்செய்தால் – தள்ளிவிட்டால், தப்பித்துக் கொள்ளவும் இயலுமோ?

பவுலின் நிருபங்களில் பொதுவாக, போதனைப் பகுதிகள் முற்பகுதியாகவும், அதைத் தொடர்ந்து புத்திமதியான நடைமுறை ஆலோசனைகள் இரண்டாம் பகுதியாகவும் அமைந்துள்ளன. ஆனால் எபிரெய நிருப ஆசிரியர் முக்கிய வேத சத்தியங்களுக்கிடையே, பற்பல புத்திமதிகளையும், எச்சரிப்புகளையும் இணைத்தே தொகுத்துள்ளார்.[20]

'5

### *ஆ) இயேசு கிறிஸ்து இரட்சிப்பின் அதிபதி (2:5-18)*

இயேசு கிறிஸ்து திருத்தூதர்களிலும் மேலானவராக இருப்பின், அவர் ஏன் மரணமடைய வேண்டும்? விண் தூதர்களுக்கும் மரணமில்லாதபோது, தூதர் களினும் மேலான இயேசு கிறிஸ்து மரணமடையலாமா? இவ்வினா யூத வாசகர் களின் மனதைக் குழப்பிற்று. யூதர்களின் எதிர்நோக்குதல் எப்போதுமே, தாம் எதிர்நோக்கும் மேசியா ஐசுவரியம் மிக்க, சிறப்பான வல்லமை மிக்க ஓர் அரசை அமைப்பார் என்பதேயாகும். ஆனால் இயேசுவோ சிறுமையும், துன்புறுத்தலும் ஏற்று, இறுதியில் சிலுவை மரணத்தையும் அடைந்தார். இது ஏன்?

இவ்வளவு பெரிதான மீட்பை ஏற்படுத்த கிறிஸ்துவின் கல்வாரி மரணம் ஒன்றே தெய்வீக வழியாயிருந்தது என்பதே முன்னர் எழுப்பின வினாவின் விடையாம். அதற்கென இறையோன் தம் திருக்குமாரனைச் சிறிது காலத்திற்கு விண் தூதர்களைவிடத் தாழ்ந்தவராக்கினார். நூலாசிரியர் இப்பகுதியில் தரும் விளக்கம் இதுவே.

இவரே இரட்சிப்பை உருவாக்கினவரும், அதை நிறைவேற்றும்படி இவ் வுலகில் திருமனிதவுரு எடுத்தவரும், இரட்சிப்பின் செயலை நிறைவேற்றி முழுமையாக முடித்தவருமாவார். அவரே இந்த இரட்சிப்பை உறுதிப்படுத்த உயிரோடு எழுந்தவரும், பிதாவினால் அங்கீகாரம் பெற்று, பரலோகம் ஏறிச் சென்றவருமாவார்! ஆம், இவரே இரட்சிப்பின் அதிபதியும், தளகர்த்தருமாவார்!

*(முதலாம் எச்சரிக்கை இத்துடன் முற்றுப்பெறுகிறது)*

## 3. இயேசு கிறிஸ்துவினால் மட்டுமே இரட்சிப்பு (2:5-18)

*''இனிவரும் உலகத்தைக் குறித்துப் பேசுகிறோமே, அதை அவர் தூதர்களுக்குக் கீழ்ப்படுத்தவில்லை. ஒரு இடத்திலே ஒருவன் சாட்சியாக: மனிதனை நீர் நினைக்கிறதற்கும் மனித குமாரனை நீர் விசாரிப்பதற்கும் அவன் எம்மாத்திரம்? அவனைத் தேவ தூதரிலும் சற்றுச் சிறியவனாக்கினீர், மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டி, உம்முடைய கரத்தின் கிரியைகளின்மேல் அவனை அதிகாரியாக வைத்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர் என்று சொன்னான். சகலத்தையும் அவனுக்குக் கீழ்ப்படுத்தினார் என்கிற விஷயத்தில், அவர் அவனுக்குக் கீழ்ப்படுத்தாத பொருள் ஒன்றுமில்லை. அப்படியிருந்தும் இன்னும் அவனுக்குச் சகலமும் கீழ்ப்பட்டிருக்கக்காணோம்'' (2:5-8).*

### *"இனி வரும் உலகம்"*

'உலகம்' என்னும் இச்சொல்லை 'காலம்' அல்லது 'யுகம்' என்றும் மொழி பெயர்க்கலாம். இனி வரும் உலகம் என்பது விண் வீட்டைக் குறிப்பிடுவதல்ல. யூதர்களின் எதிர்நோக்குதலாகிய மேசியாவின் இப்பூவுலக அரசின் காலத்தையே இது குறிக்கின்றது.

மேசியா தாமே ஆட்சி புரிகையில், தலைமைத் தூதனாகிய மிகாவேலும், உடன் தூதர்களும் முன்னுரிமை பெறுபவராவர் என்பது யூதர்களின் நம்பிக்கை. இத்தகையதொரு குறிப்பு சவக்கடல் சுருளொன்றில் உள்ளது.

இக்காலத்தில் தூதர்களின் அதிகாரம் இவ்வுலகில் உண்டு என வேத விரிவுரையாளர்கள் பலர் எண்ணுகின்றனர். பெர்சியாவின் பிரபு,கிரேக்கு தேசத்தின் அதிபதி, அதிபதியாகிய மிகாவேல் (தானி. 10:20, 21; 12:1), இருளின் அதிபதி (எபே. 6:12) என்னும் வேத வாக்கியங்களைக் காண்க.[21]

ஆனால் இனிவரும் உலகம், தூதர்களுக்குரியதன்று, மகிமையுள்ள இறைவன் அதைப் புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களுக்கென்றே கொடுத்துள்ளார். தொடர்ந்து, தேவப்புதல்வரின் மேன்மையை எடுத்துக்காட்டும் எட்டாம் சங்கீதத்தினின்று ஒரு மேற்கோளை எடுத்து இதைத் தெளிவுபடுத்துகிறார் (சங். 8:3-5). இந்த சங்கீதவாக்கியம் எபிரெயத் திருமறையில், "நீர் அவனைத் *தேவனைவிடச்* சிறிது தாழ்த்தினீர்" என மொழிபெயர்த்திருக்க, எழுபதின்மர் கிரேக்க மொழியாக்கத்தில், "நீர் அவனைத் *தேவ தூதனைவிடச்* சிறிது தாழ்த்தினீர்" என்றுள்ளது. சங்கீதத்தில் ஆதாமைக்குறித்துக் குறிப்பிட்டிருப்பதை, நூலாசிரியர் தேவப் புதல்வராம் கிறிஸ்துவைப்பற்றி விளக்கும் நோக்குடன் எடுத்து ஆண்டுள்ளார். "*சிறிது* தாழ்த்தினீர்" என்பதை,"சிறிது காலத்திற்குத் தாழ்த்தினார்" எனப் பொருள்கொள்வோரும் உள்ளனர்.

தூதர்கள் சாவாமையுடையோர் ஆவர். ஆனால் மனிதனோ சாவுக்குட் பட்டவன். இது மனிதனின் தாழ்வாகும். மனிதர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஆட்சியுரிமையும், அதிகாரமும், பிற உரிமைகளும் தூதர்களுக்கு வழங்கப்பட வில்லை (ஆதி. 1:26-28). ஆதாம் தான் பெற்றுக்கொண்ட இப்பெரும் பேறு அனைத்தையும் தன் மீறுதலின் காரணமாக இழந்துவிட்டான். ஆகவே இக் காலத்தில் அவனுக்கு அனைத்தும் கீழ்ப்படிகிறதாகக் காண்கிறதில்லை.

இங்கே 'மனிதன்' என்பது இயேசு கிறிஸ்து எனவும் பொருள் கொள்ள லாம்.[22] கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பிந்தின ஆதாம் எனவும் அழைக்கப் பட்டுள்ளார் (1 கொரி. 15:45,47).[23] முதல் அதிகாரத்தில், "இயேசு கிறிஸ்து திருத்தூதர்களிலும் மேலானவர் என்பதை விரித்துரைத்த நூலாசிரியர், இரண்டாம் அதிகாரத்தில் இயேசு கிறிஸ்து தேவ தூதர்களைவிடச் சிறிது தாழ்த்தப்பட்ட நிலையில் இறங்கி வந்துள்ளதைப் படம்பிடித்துக் காட்டியுள்ளார். ஆம்! அவர் மரணம் கண்ட மனுமகனானார்! அவர் தாழ்வடைந்ததோ மனிதக் கணக்கின்படி ஒரு குறுகிய காலத்திற்கு மட்டுமே ஆகும்! அந்தச் சிறிய காலம் 33 ½ ஆண்டு கள் மட்டுமே!"

சங்கீதம் 8-ல் குறிப்பிட்டுள்ள மனித மேன்மை, ஆதாமில், அவன் பின்வழி வந்த மனித இனத்தில் முழுமையாக நிறைவுறவில்லை. ஆனால் அது மனித னாக வந்த கிறிஸ்தேசுவில் முழுமையாக நிறைவுபெற்றது. முந்தின ஆதாம் இழந்ததை, பிந்தின ஆதாம் திரும்பப் பெற்றுக்கொள்ளுகிறார்.

சங்கீதக்காரன் முன்னுரைத்தவை அனைத்தும், இயேசு கிறிஸ்துவின் ஆயிர மாண்டு அரசாட்சியின் காலத்தில் முழுமையாக நிறைவுபெற உள்ளன. அப்படி யிருந்தும் அவருடைய முதல் வருகையின் இப்பூவுலக வாழ்வினில் அவை சிறிதளவாகிலும் நிறைவேறியுள்ளன என நாம் கருத முடியும். நீர் வாழும் உயி ரினங்களும் (மத். 17:27; லூக்கா 22:34, 60) காட்டு விலங்குகளும் (மாற்கு 1:12,13), வீட்டு விலங்குகளும் (மாற்கு 11:1-7) அவருக்குக் கீழ்ப்பட்டுள் ளனவே![24]

"அனைத்தையும் அவருக்குப் பணியச் செய்தார். அவருக்குப் பணியா மலிருக்க எதையும் விடவில்லை. ஆயினும் அனைத்தும் இன்னும் அவருக்கு அடங்கிப் பணிந்திருக்கக் காணோம்."

"மனுமக்களை இறைமக்களாக்கும் பொருட்டு, இறைமகன் மனுமகனானார்!" இறைவனின் சாயலில் படைக்கப்பட்ட மனிதனை மீட்பதற்காகவே, இறைவன் மனிதனின் சாயலைத் தாமே தரித்துக்கொண்டார்.

## 1. இயேசு கிறிஸ்துவின் தாழ்வின் நோக்கம் (2:9-18)

### *மரணத்தை ருசி பார்த்தல் (2:9)*

*"என்றாலும் தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு, மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடி சூட்டப்பட்டதைக் காண்கிறோம்." (2:9)*

தூதர்களிலும் மேலான இறை இயேசு மரணத்தை ருசி பார்த்ததினால் அவர் சிறிது காலத்திற்குத் தாழ்த்தப்பட்டார். அது பற்றி நாம் இவ்வசனத்தில் மூன்று விதக் குறிப்புகளைப் பார்க்கிறோம்.

### *அ) "கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும்"*

தேவப் புதல்வர் மரணமில்லாதவர்! தூதர்களுக்கும் மரணமில்லை. பாவஞ் செய்த தூதர்கள்கூடச் சாகவில்லை! ஆனால் பாவம்செய்த மனிதனுக்குக் கொடுக் கப்பட்ட கூலியே சாவு. முதல் மனிதனாகிய ஆதாமின் மூலம் இழந்து போனவற்றையெல்லாம் திரும்பவும் பெறத்திருமைந்தர் மனுமகனாக வர, திருச் சித்தங் கொண்டார். தேவப்புதல்வர் என்னும் நிலையில் அவருக்குச் சாவு என்பது ஒரு தாழ்வாகும். ஆயினும் அது மிகக்குறுகிய காலத்திற்கு மட்டுமே தான் என நாம் கவனித்தோம். அவருடைய மரணம் கிருபையின் அடிப்படை யில் நிகழ்ந்ததாகும் (யோவான் 1:14, 16, 17; எபி. 4:16). மரணத்திற்கே தகுதியாயிருந்த மனிதனை அதினின்று மீட்கும் பொருட்டு,தேவன் கொண்ட இறையருளின் பெருக்கம் விவரிக்கக் கூடாதது. அதன் பிரதிபலிப்பாக, மனிதரின் மீட்புக்கென்று இறப்பதற்காகவே இயேசுவை இவ்வுலகில் பிறக்க அனுமதித்தது தேவச் செயலாகும் (மத். 1:21).

*"ஒவ்வொருவருக்காகவும்"* – மனிதனை மீட்பதற்கென்று ஆதாமின் மரபு வழித் தோன்றிய மக்கள் ஒருவர் விடாது ஒவ்வொருவருக்காகவும் (ரோமர் 5:12; 2 கொரி. 5:21) என்று இது பொருள்படும்.

### *ஆ) "மரணத்தை ருசி பார்த்தார்"*

இயேசு கிறிஸ்து பாவமே அறியாதவர் (2 கொரி. 5:21). அவர் பாவம் எதுவும் செய்ததுமில்லை, அவரது வாயினின்று வஞ்சகம் வெளிப்பட்டதுமில்லை (1 பேது. 2:2). ஆயினும் பாவத்தின் கூலியாகிய மரணத்தை,நமக்குப் பதிலாக அவர்தாமே ருசித்து, இறுதியில் அவர் தம் ஆவியை ஒப்புக்கொடுத்தார்.

மரிப்பதற்கென்றே நமக்குரிய மனித சாயலில் இயேசு கிறிஸ்து தோன்றினார். அவர் பாடுகளைத் தாங்கிச்சகித்துச் சாக வேண்டுமென்பதே தேவனின் திருத்

திட்டம். அவர்தாமே தமது மரணத்தைப் பற்றி பன்முறை முன்னுரைத்துள்ளார் (லூக். 24:25-27,44,45; மாற். 9:31). இயேசு கிறிஸ்து தம் அருட்பணியின் ஆரம்பத்தினின்றே, தமது மரணத்தையும், அதன் நிகழ்ச்சிகளின் விவரங்களை யுங்குறித்து அவ்வப்போது அறிவித்தவண்ணமாயிருந்தார் (மத். 16:21).

சாவின் மூலம் அவருக்குத் தாழ்வு நேரிடுமென்பதை அவர் நன்கு அறிந்த வராகவே இருந்தார் (பிலி. 2:6-8). இம்மரணம் அவருடைய இயல்பான மர ணமோ, இரத்தசாட்சியான மரணமோ அன்று. அது பாவத்தின் கூலியாக அவர் ஏற்றுக்கொண்ட மரணம். ஆவி, ஆன்மா, சரீரமெல்லாம் சொல்லொண்ணாத் துன்பங்களையும், பலவகைப் பாடுகளையும், ஆவியில் வேதனையையும் சகித்து, இறுதியில் சிலுவை மரணத்தையும் அவர் மனமார, விருப்புடனே ஏற்றுக் கொண்டார்.

### *இ) "தூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்ட இயேசு"*

மனுமகனாய் உலகில் வந்த இறைமகனின் பெயரே *'இயேசு'* என்ற பெயராகும். இயேசு என்பதற்கு 'இரட்சகர்' என்று பொருள். இது கிரேக்க மொழியில் 'யோசுவா' என்று சொல்லப்படும். 'இயேசு' என்ற இப்பெயர் தேவன்தாமே கொடுத்த ஒரு பெயராகும் (மத். 1:21).

'இயேசு' என்னும் பெயர் இந்நிருபத்தில் இவ்விடத்தில்தான் முதற்கண் எடுத்தாளப்படுகின்றது. இயேசு என்னுஞ்சொல் எட்டு முறையும் (2:9; 4:14; 6:20; 7:21; 10:19; 12:1,24; 13:12), கிறிஸ்து என்னுஞ்சொல் ஆறு முறையும் (3:14; 5:5; 6:1; 9:14,28; 11:26), இயேசுகிறிஸ்து என்னும் சொல் மூன்று முறையும் (10:10; 13:8,21), கிறிஸ்து இயேசு, (3:1) மற்றும் கர்த்தராகிய இயேசு என்னுஞ் சொற்கள் ஒருமுறையும் (13:20) கையாளப்பட்டுள்ளன. சங்கீதப் புத்தகத்தின் மேற்கோளில் வரும் "மனிதனுடைய குமாரன்" (2:6) என்பது இயேசுவைக் குறிப்பதேயாம்.

### *ஈ) "மகிமையினாலும் கனத்தினாலும் முடி சூட்டப்பட்டார்"*

மரணம் என்ற தாழ்வை அனுபவித்த இயேசு பெருமான், இன்று மகிமையும் மாண்பும் அணிந்தவராய் உயர்த்தப்பட்டிருக்கிறார். பாவமே அறியாதவரும், ஜீவாதிபதியுமான அவர் மரணத்தை ருசிக்க வேண்டிய தேவையில்லைதான். ஆனால் ஒவ்வொரு பாவிக்காகவும் அவர் இறந்து உயிர்த்தெழுந்தார் (ரோமர் 8:17; பிலி. 2:9,10).

* 'இறைமகன்' என்ற மகிமையுடனும், 'மனுமகன்' என்ற பதவியும் அணிந்து, அவர் இறை - மனிதனாக உயர்த்தப்பட்டார்.

* எப்பெயருக்கும் மேலான ஒரு பெயரைப் பெற்றுக்கொண்டவராக அவர் உயர்த்தப்பட்டார்.

* தம்மைத்தாமே தாழ்த்தினவருக்கு அருளப்படும் ஒரு சிறப்பு விருது என்ற நிலையில், அவர் "மகிமையும் மாட்சிமையும்" கொண்டு முடிசூட்டப் பட்டவராய் உயர்த்தப்பட்டு, மேன்மை பெற்றார்.

## "தெய்வீகத் திட்டம் நிறைவேறுதல்" (2:10)

*"ஏனென்றால், தமக்காகவும் தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினவர், அனேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டு வந்து சேர்க்கையில் அவர் களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரணப் படுத்துகிறது அவருக்கேற்றதாயிருந்தது" (2:10).*

"அனைத்திற்கும் காரணமானவர் கடவுள். கடவுள் எல்லாவற்றையும் தமக்குத் தாமே உண்டாக்கினார்" (R.C. மொழியாக்கம்).

"யாருக்காக எல்லாம் உள்ளனவோ, யாரால் எல்லாம் உண்டாயினவோ அவர், மகிமைக்கு அழைத்துச் செல்ல விரும்பியபோது, அவர்களுடைய, மீட்பைத் தொடங்கி வைத்த இயேசுவைப் பாடுகளால் நிறைவுள்ளவராக்கியது தகுதியே" (TNBCLC).

அனைத்திற்கும் ஆதி முதலாயிருக்கிற ஏக காரணக்கடவுள் ஒருவரே யாவர். அனைத்திற்கும் இறுதி இலக்கு அவரேயாம். தம் பிள்ளைகள் பலரை மகிமைக்கு அழைத்துச்செல்ல அவர் திட்டமிட்டார். அதற்கென்று இரட்சிப்பின் நாயகரைக் *'கஸ்திகளால்'* நிறைவுள்ளவராக்க வேண்டியிருந்தது.

மகிமையுள்ள இறைவன் மானிடரின் ஈடேற்றத்திற்கென இரு காரியங்களைச் செய்தார்.

### *1) "அனேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டு வந்து சேர்க்குதல்"*

மனிதனை மகிமை பொருந்தினவனாகவே இறைவன் படைத்தார் (ஆதி. 1:26; சங். 8:5,6). உலகம் உண்டாகும் முன்பே தந்தையாகிய இறைவனிடத்தில் புதல்வருக்கு இருந்த உன்னத மகிமை அதுவேயாம் (யோவான் 17:5,22,24). ஆனால், தன் மீறுதலின் நிமித்தமாக, அந்தத் தேவமகிமையை மனிதன் இழந்தான். இம்மகிமையை அவனுக்குத் திருப்பிப்பெற்றுக் கொடுக்க இறைவன் சித்தங்கொண்டார். இதற்கென மகிமையான இறைத் திட்டம் தீட்டினார். மனிதன் இழந்துபோன இந்த மகிமையை இயேசு கிறிஸ்து வாயிலாக மட்டுமே மனித னுக்கு அவர் திருப்பிக்கொடுக்க இயலும் (ரோமர். 8:18; கொலோ. 3:4). இயேசு கிறிஸ்துவின் பாவப்பரிகாரப் பலியினில் விசுவாசம் வைத்து, ஈடேற்றம் பெற்றோர் அனைவரும் அவரைப் போலவே மகிமையுள்ளவராக ஒரு நாளில் மாற்றப்படுவர்.

*"இரட்சிப்பின் அதிபதி"* – இதனை 'அர்க்கிகோஸ்' (Archgos) என்று பெயர்த்தெழுதலாம். ஆயினும் அதிபதி என்று பெயர்த்தலே மிகச்சிறந்த தாயுள்ளது.[25] புதிய ஏற்பாட்டில் இச்சொல் நான்கு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது (எபி. 2:10; 12:1; அப். 3:15; 5:31).[26]

### 2) *"உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துதல்"*

தெய்வீகத் தன்மையில் தேவப் புதல்வர் பூரண நிறைவுடையவர். பூரணம் என்பது அவருக்கு மட்டுமே உரியது. ஆனாலும் அவர் இரட்சிப்பின் அதிபதியாகத் திகழவேண்டுமெனில் "உபத்திரவங்களினாலே பூரணப்படுத்தப்பட வேண்டும்." இது இன்றியமையாததாம். சாவாமையுடைய அவர், சாவினை ருசித்து, அதைப் பருகி, பாடுகளின் நுண்ணுணர்வை அவர் நாடி அடைந்திட வேண்டும் (5:8; 9:14,18,26; 13:12).

"தேவன் இரக்கங்காட்டுவதில் நீதியுள்ளவராயிருக்க வேண்டும். நீதி புரிவதிலும், இரக்கங்காட்டுபவராகவும் அவர் இருத்தல் அவசியம். அவருடைய ஞானத்தில் வல்லமையுண்டு. அந்த வல்லமையில் நீடிய பொறுமையுமுண்டு. பாவிகளுக்காகச் சிலுவையில் அறையுண்ட இயேசுவின் மூலமாய் அது வெளிப்படுகிறது. இந்நிலையில்தானே தேவன் தமக்கே உரிய மகத்தான நிலையில் தம்மை வெளிப்படுத்தியுள்ளார்"[27] – முனைவர் சாபீர்.

### *"மனிதனோடு ஒன்றித்தல்" 2:11-13*

*"எப்படியெனில், பரிசுத்தஞ்செய்கிறவரும், பரிசுத்தஞ் செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள்; இதினிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படாமல். உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதித்துப் பாடுவேன் என்றும், நான் அவரிடத்தில் நம்பிக்கையாயிருப்பேன் என்றும், இதோ நானும், தேவன் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் என்றும் சொல்லியிருக்கிறார்" (2:11-13).*

*"பரிசுத்தஞ் செய்கிறவர்"* – 'பரிசுத்தம்' என்னும் திருமறைச் சொல்லுக்கு, பிரித்தெடுக்கப்படுதல் என்றும் அர்ப்பணஞ்செய்தல் என்றும் இரு பொருள்களுண்டு. இறைவனுக்கெனப் பிரித்தெடுக்கப்பட்டோரும், அவருக்கென்றுப் அர்ப்பணஞ்செய்தோருமாகிய விசுவாசிகளை (ரோமர் 12:1, 2), இயேசு இரட்சகரே பரிசுத்தஞ்செய்கிறவர். அவரது பாடு மரணமாகிய பலியினாலே, தம்மை விசுவாசிப்பவர்களை அவர் பரிசுத்தஞ் செய்கிறார். இதனை எபிரெய நிருபம் நன்கு விளக்குகிறது (9:13,14; 10:10,14,29; 13:12).

*"பரிசுத்தஞ்செய்யப்படுகிறவர்கள்"* – இவர்கள் யார்? இவர்கள் விசுவாசித்தவர்களேயாவர் – விசுவாசத்தினாலே பரிசுத்தஞ் செய்யப்படுகிறவர்கள் (அப். 26:18)! இவர்கள் எப்படிப் பரிசுத்தஞ் செய்யப்படுகின்றனர்? இவர்கள் திருவசனத்தினாலும் (யோவான் 15:3, 17:17), தூய ஆவியினாலும் பரிசுத்தமாகின்றனர் (1 பேதுரு 1:2). இவர்கள் இயேசுவின் திரு இரத்தத்தினாலும் பரிசுத்தமாகின்றனர் (1 கொரி. 6:11; 1 யோவான் 1:7).

ஒரு விசுவாச பக்தனுடைய பரிசுத்தத்தை நான்கு நிலைகளில் நாம் காண முடியும்.[28]

அ) மனந்திரும்புதலுக்குரிய பரிசுத்தம் – (Pre-Conversion Sanctification).

ஆ) பதவிக்குரிய பரிசுத்தம் – மனந்திரும்பினதற்கேற்ற பரிசுத்தம் (Positional Sanctification).

இ) நடைமுறை வாழ்க்கையில் பரிசுத்தம் – (Practical sanctification) (இது நிகழ்காலத்திற்குரியது).

ஈ) முற்றிலும் பழுதற்ற பரிசுத்தம் – (Perfect Sanctification) - (இது இனி வரப்போகும் ஒரு நிலையாகும்).

*"யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள்"*

பரிசுத்தஞ் செய்கிறவருக்கு (திருக்குமாரனுக்கு), இறைவனே தகப்பனாக இருக்கின்றார். அவ்வண்ணமே பரிசுத்தஞ் செய்யப்படுகிறவர்களுக்கும் இறைவனே தகப்பனாக இருக்கின்றார். இவ்விருதிறத்தாருக்கும் இறைவன் ஒருவரே – அவர் தகப்பனாக இருக்கிறார். அனைத்தையும் படைத்தோன் என்கிற நிலையில், இறைவன் அனைவருக்கும், அனைத்திற்கும் தகப்பனாக உள்ளார். ஆதாம் கடவுளின் மகன் – அவனுக்குள் அனைவரும் இறைவனின் பிள்ளைகள் (லூக்கா 3:38; அப். 17:28). ஆனாலும் பாவத்தினிமித்தமாக மனுமக்கள் அனைவரும் பிசாசின் பிள்ளைகளாயினர் (யோவான் 8:44; 1 யோவான் 3:8,10). இத்தகைய அபாத்திரராயிருந்தும், இயேசு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே நாம் இறை மக்களானோம் (யோவான் 1:12; ரோமர் 8:16; கலா. 4:6; 1 யோவான் 3:1). இன்னிலையில் தேவன் விசுவாச இறை மக்களுக்குச் சிறப்பான ஒரு நிலையில் தகப்பனாக இருக்கிறார். இயேசு கிறிஸ்துவின் மனித அவதாரத்தினால், மனித இனத்துடன் அவர் வந்து ஒன்றித்து உள்ளார். இவ்வாறு அவர் தம் ஒரே சிலுவை பலியினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களே அந்த விசுவாசிகள் ஆவர். இவ்வகையில் இறைவன் அனைத்து விசுவாசிகளுக்கும் தகப்பனாயிருக்கிறார். இறைமகனார் இயேசுவுக்கும், இறைமக்களாகிய நமக்கும் பரம இறைவன் ஒரே தகப்பனானார்!

ஆனால், பரம இறைவன் இயேசுவுக்குத் தகப்பனாயிருக்கும் நிலையைப் போன்று, விசுவாசிகளுக்குத் தகப்பனாக இருக்கிறதில்லை. இயேசு கிறிஸ்து, "என் பிதா" என்றழைத்துள்ளாரேயன்றி, நம்மையும் சேர்த்து "நம் பிதா"வென்று ஒரு போதும் அழைக்கவில்லை என்பதைக் கவனிக்க. அவர் விசுவாசிகளையும் சேர்த்துச் சொல்லுகையில், பிரித்தே சொல்லியிருக்கின்றார். "என் பிதா, உங்கள் பிதா, என் தேவன், உங்கள் தேவன்" (யோவான் 20:17). இது குறிப்பிடவேண்டிய ஒரு மேன்மையான திருமறைச் சத்தியமாகும்.

***"சகோதரர் என்று சொல்ல அவர் வெட்கப்படாமல்"***

இயேசு கிறிஸ்து, இவ்வுலகிலுள்ள மனித இனத்தவருள் ஒருவராக இருந் திருப்பின், "நம்மைச் சகோதரர் என்று சொல்ல அவர் வெட்கப்பட வில்லை" என்ற கூற்றில் பெருமைப்பட என்னதானிருக்கின்றது! ஆனால் அவர் தேவத் திருப்புதல்வர்! அவர் புனிதர்! வானங்களுங்கூட அவர் கண்முன் தூயவை யல்ல. எரிதழல்போல் சுடர் விடும் கண்களையுடையவர் அவர். அவரே கண் களுக்குப் புலப்படுவதும், புலப்படாததுமான அனைத்தையும் படைத்தோன் ஆவர். மனித உருவெடுத்த நிலையிலும் சரி, பரிசுத்தமாயிருக்கிறவர் என்ற நிலையிலும் சரி, அவர் எவ்விதத்திலும் உன்னதமானவரேயாவார். அப்படி யிருந்தும், பாவம் நீங்கலாக மற்றவைகளிலெல்லாம், அவர் மனிதராகிய நம் முடன் தம்மை ஒப்பாக்கினார் – சமமாக்கினார். அப்படியிருந்தும் நம்மைச் சகோதரர் என்றழைக்க அவர் வெட்கப்படவில்லை. ஆகா! என்னே அவரது பணிவு! இது எத்தனை ஆச்சரியமான சிறப்பு!!

"இந்நூலாசிரியர் இதனைத் தெளிவுபடுத்த சங். 22:22; ஏசா. 8:17,18 ஆகிய வேத வாக்கியங்களை மேற்கோளாக எடுத்துக் காட்டியுள்ளார் (வ.13). "சகோ தரர்" என்ற சொல் புதிய ஏற்பாட்டில் மூன்று நிலைகளில் பயன்படுத்தப் பட் டுள்ளன:

(1) உடன்பிறப்புச் சகோதரர் (மத். 12:46-48; லூக். 8:20, 21; யோவான் 2:12).

(2) இயேசு கிறிஸ்துவின் சீடர்கள் ஒருவருக்கொருவர் சகோதரர் (மத். 23:8).

(3) ஆன்மீக நிலையில் இயேசுவுடன் ஒன்றித்து நிற்கும் சகோதரர்கள் (மத். 12:49, 50; மாற். 3:33, 35; லூக். 8:21; ரோமர் 8:29).[29]

நம் இயேசு பெருமான் நம்மை அழைத்து உலகினின்று பிரித்து எடுத்து, மீட்டு, தம்முடன் இணைத்து, இறைவனது மேன்மையான நிலையில் நம்மை

அவருடைய பிள்ளைகளாக்கி, தமது அளவில்லா அன்பினாலே நம்மைச் சகோதரர் என்றழைக்க அவர் வெட்கப்படவில்லை.

"இன்று நமக்கும் அவருக்கும் இடையே இருப்பது சகோதர நல்லுறவு ஆகும். நண்பரின் நட்புறவு ஒருகால் நழுவிப் போகலாம். ஆனால் சகோதர உறவோ, நிரந்தரமுள்ளதும், மாற்றம் வராததுமாகும்." (ரிடவுட்டு)[30]

நாம் தேவனின் திருக்குடும்பத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளோம். அதனை நினைவூட்டுவதே புத்திரர் (மகன்/மக்கள்), சகோதரர், பிள்ளைகள் போன்ற அணுகுச் சொற்கள் அல்லது பதவிகள் ஆகும்.

அவர் நம்மைச் சகோதரர் என்றழைத்திருப்பினும், நாம் அவரைச் சகோதரர் என்றழைத்திடும்படியான உரிமையோ தகுதியோ சிறிதாகிலும் நமக்கில்லை. நம்முடைய உண்மையான இந்த அபாத்திரரான, தகுதியற்ற நிலையை நாம் நன்கு உணர வேண்டும்.

## பிசாசானவனை அழித்தல். (2:14-16)

*"ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார். மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனை தமது மரணத்தினாலே அழிக்கும் படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கும் அப்படியானார். ஆதலால் அவர் தேவதூதருக்கு உதவியாகக் கைகொடாமல் ஆபிரகாமின் சந்ததிக்கு உதவியாகக் கைகொடுத்தார்." (2:14-16)*

***"அவரும் அவர்களைப்போல ஆனார்"*** – இயேசு கிறிஸ்துவினுடைய தாழ்வின் நோக்கங்களுள் ஒன்று "மனிதனோடு ஒன்றித்தல்" என்பதாம். அதற்கென அவர் மனித சாயலில், மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவராகுதல் வேண்டும். தேவத்தன்மையினின்று மனிதத் தன்மையை வேறுபடுத்திக் காண்பிக்க, யூதர்கள் 'மாம்சம்' என்னும் வார்த்தையைப் பயன்படுத்தினர்.

மனிதத் தன்மைக்கு (மனிதனுக்கு) சாவு உண்டு. சாவிற்கு உடன்பட வேண்டிய மனிதன் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் படைக்கப்பட்டவன் ஆவான் (மத். 16:17; 1 கொரி. 15:50; கலா. 1:16). சாவிற்குட்படாத வானதூதர்களுக்கு மாம்சமும் இரத்தமுமில்லை. ஆதியிலே வார்த்தையாயிருந்த இயேசு கிறிஸ்து சாவாமையுடையவராவார். அந்த வார்த்தை மனிதனோடு உடன்பட, மாம்சமாயினார் (யோவான் 1:14). இறையோன் மாம்சத்திலே வெளிப்பட்டார் (1 தீமோ. 3:16). அவர் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவராயினார்.

ஆதலால் பாவமில்லாத பூரண மனிதராக, பிந்தின (இரண்டாம்) ஆதாமாகத் தோன்றினார். கன்னி மரியாள் தூய ஆவியானவராலே கருவுற்றார். தெய்வத் திருமகனுக்கென்று இவ்வாறு ஒரு சரீரம் ஆயத்தமாக்கப்பட்டது. காலம் நிறை வேறினபோது ஒரு கன்னிப் பெண்ணிடம் அவர் பிறந்தார். பாவம் நீங்கலாக எல்லாவற்றிலும் நம்மைப்போல அவர் சோதிக்கப்பட்டார்.

*"மரணத்திற்கு அதிகாரியாகிய"* – வாழ்விற்கும், சாவிற்குமுரிய இறுதி அதிகாரி (முடிவான அதிகாரம்) இறைவன் ஒருவரேயாவார் (யோபு 2:6; மத். 10:28; லூக். 12:4,5; வெளி. 1:18). தேவனின் அனுமதியின்றி பிசாசானவனால் எதையும் சாதிக்க இயலாது. தேவன் அனுமதித்தால் மட்டுமே, பிசாசானவன் ஏதோ ஒன்றைச் செய்ய இயலும்.

பாவமும் சோதனையும் ஏற்படுவதற்குரிய ஆதிகாரணம் பிசாசானவனே யாவான். பாவத்தால் சாவு இவ்வுலகத்தில் நுழைந்தது (ஆதி. 2:17; 3:19; யோவான் 8:44; ரோமர் 5:12; 6:23). அவ்வண்ணமே பிசாசானவன் மரணமண்டலத்தில் தனது வல்லமையை நடப்பித்துக் கொண்டு இருக்கிறான். அவனைக் "கொலை காரன்" என்று ஆண்டவர் அழைத்துள்ளார் (யோவான் 8:44).

*"தமது மரணத்தினாலே"* – மரணத்தைக்கொண்டு மரணத்தை அழிப்பது என்பது இயல்பான நிலைக்கு முரணானது. இயல்புக்கு முரணான நிலையில் இயேசு கிறிஸ்து தமது மரணத்தினாலேயே, மரணத்திற்கு அதிகாரியாகிய பிசாசைத் தோற்கடித்து வெற்றி சிறந்தார் (யோவான் 12:31; கொலோ. 2:15; 1 யோவான் 3:14). இவ்வாறு அவர் வெற்றிக்கொடியேற்றினார், ஆம், வெற்றி வாகை சூடினார்!

"பாவங்களினாலான மரணம் + பாவங்களுக்காக வந்த மரணம் = நித்திய ஜீவன்!"

*"அழிக்கும்படிக்கு"* – பிசாசானவன் தோற்கடிக்கப்பட்டான். அவன் இதுவரையிலும் அழிக்கப்படவில்லை. ஆயினும் அவன் அழிக்கப்படுவான் என்பது உறுதி. இறுதியில் கந்தக நெருப்புக் கடலினிலே அவன் தள்ளப்படு வான் (வெளி. 20:10). இங்கே 'அழிக்கும்படிக்கு' என்ற சொல்லுக்குப் 'பல வீனமாக்கும் படிக்கு' என்று பொருள் கொள்ள வேண்டும் (1 யோவான் 3:8).

*"ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே . . . விடுதலை பண்ணும்படிக்கு"* – பாவத்தினாலே மரணமும், மரணத்தைப் பற்றிய பயமும் உண்டாயின. மரண பயம் சாத்தானின் கைகளிலுள்ள ஒரு வலிமையான கருவியாகும் (யோபு 2:4; ஏசா. 38:3). அவன் மனித உள்ளங்களில் மரண பயத்தைத் தூவி விடுகிறான். இயேசு கிறிஸ்துவின் கல்வாரி மரணத்தை, பாவங்களைப் போக்கும் பலியாக அதை விசுவாசிக்கிற எவரும் தேவனின் கடும் தண்டனைத் தீர்ப்பினின்று

விடுதலை பெறுவர் (யோவான் 5:24; ரோமர் 8:1). இயேசு கிறிஸ்து சாவை அழித்துச் சாவாமையை – ஆம் சாவே இல்லாத நீடூழி வாழ்வை – நமக்காகச் சம்பாதித்துத் தந்தருளுகிறார் (2 தீமோ. 1:10).

பாவத்தின் கீழ் விற்கப்பட்டவர்களாக (ரோமர் 7:14), பாவத்திற்கு ஊழியஞ் செய்து (ரோமர் 6:6), தேவனை அறியாது (கலா. 4:8), பெலனற்றதும், வெறுமை யானதுமான வழிபாடுகளுக்கும் (ஆராதனை முறைமைகளுக்கும், கலா. 4:9), இருளின் அதிகாரத்திற்கும் (கொலோ.1:13), மரண பயத்திற்கும் (எபி. 2:15), அடிமை களாக இருந்த நம்மை விடுதலை பண்ணும்படியாகவே, இயேசு கிறிஸ்து மாம்சத் தையும் இரத்தத்தையும் உடையவராக இவ்வுலகத்தில் வந்தார். ஆகவே நமக் கிருந்த மரண பயம் விலகிப் போயிற்று. மரணத்தின் மேல் சாவாமை, இன்பப் புன்னகையுடன் வெற்றி சிறக்கக் காண்கிறோம் (1 கொரி. 15:55; பிலி. 1:21; 2 தீமோ. 4:8).

*"தூதருக்கு . . . கைகொடாமல், ஆபிரகாமின் சந்ததிக்குக் கைகொடுத்தார்"* – இயேசு கிறிஸ்து தம் மகிமையின் சாயலில் இருந்து கொண்டு அவரால் மனித இனத்தை மீட்க இயலாது. இம்மனித இனத்தை மீட்கும் பொருட்டு அவருக்கு மனிதத் தோற்றம் (சாயல்) இன்றியமையாத் தேவையாயிற்று. மனித இனத்தின் மீட்பே, இயேசு கிறிஸ்துவின் மனித அவதாரத்தின் மேலான நோக்கமும், கருப்பொருளுமாகும்.

"ஆதி மேன்மையைக் காத்துக்கொள்ளாத தூதர்களுக்கு அவர் கை கொடுக்கவில்லை".[31] அதாவது, பாவம்புரிந்த தூதர்களைத் தப்பவிடாது சங்கிலி களினால் கட்டி, இருட்டு மூலையின்கீழ் அடைத்து, நரக பாதாளத்தில் எறிந்தார் (2 பேது. 2:4; வெளி. 12:7-9). இங்கே "தூதர்களுக்குக் கைகொடுக்கவில்லை" என்பதற்கு "தூதர்களுக்கு உதவவில்லை" என்று பொருளாகும்.

*"ஆபிரகாமின் சந்ததி"* – இங்கே ஆதாமின் சந்ததியென்றில்லாமல் "ஆபிரகாமின் சந்ததி" என்றுள்ளது. இந்நிருபம் யூதர்களுக்கென்று எழுதி யமையால் இவ்வண்ணமுள்ளது எனக்கொள்க. "ஆபிரகாமின் சந்ததி" என்பது அனைத்துக் கிறிஸ்தவ விசுவாசிகளையுங்கூட குறிக்கும் அல்லவா (கலா. 3:7)? அதற்காகவே இயேசு கிறிஸ்து ஆபிரகாமின் சந்ததியாக யூத மரபிலே உதித்தார் (மத். 1:1).

## *தலைமை ஆசாரியராதல் (2:17,18)*

*"அன்றியும், அவர் ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கேதுவாக, தேவ காரியங்களைக் குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரிய ராயிருக்கும்படிக்கு, எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியதாயிருந்தது. ஆதலால் அவர்தாமே, சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார்" (2:17, 18).*

இதுவே இயேசுகிறிஸ்துவின் ஆசாரியத்துவத்தைப் பற்றி இந்நிருபத்தில் வரும் முதற்குறிப்பு. தேவனுடைய முன்னிலையில் மனிதனுக்கென்று பாவ நிவாரண பலியைச் செலுத்திய பின்பு, மனிதனுக்கென்று பரிந்து பேசுவதே ஆசாரியனின் ஊழியம் ஆகும். மனிதனிடத்தில் இரக்கங்காட்ட வேண்டுமென் றால் சகோதரருக்கு ஒப்பாக (மனிதனுக்குச் சமமாக) தாமும் மனிதனாகவே இருத்தல் வேண்டும். ஆகவேதான் அவர் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் மனித சாயலில் தோன்றினார்.

"பிரதான (தலைமை) ஆசாரியன்" என்ற சொல்லை, 110-ம் சங்கீதத்திலோ, லேவியராகமம் 16-ம் அதிகாரத்திலோ காண்கிறதில்லை. இஸ்ரவேலரின் தலைமை ஆசாரியன், இயேசு கிறிஸ்துவின் ஆசாரிய அருட்பணிக்கு நிழலாக இருந்தான். அந்த நிழலுக்கு மெய்ப்பொருளாக இருப்பவரே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னும் – நம் தலைமை ஆசாரியர். இதனை விளக்கும் பொருட்டே இயேசு கிறிஸ்து தலைமை ஆசாரியர் என்று இங்கு அழைக்கப்பட்டிருக்கிறார்.

***"இரக்கமும் உண்மையுமுள்ள தலைமை ஆசாரியர்"***

இஸ்ரவேலருக்குள் இருந்த தலைமை ஆசாரியருள் சிலர் இரக்கமற்றவர் களாயிருந்தனர் (ஓசி. 4:4-9). ஆனால் தலைமை ஆசாரியர் இரங்கத்தக்கவனா யிருத்தல் வேண்டுமென்பதே தேவ நியதி (எபி. 5:2).

இயேசு கிறிஸ்துவை தலைமை ஆசாரியர் என, இந்நிருபத்தில் 15 முறை சொல்லப்பட்டுள்ளது (2:17; 3:1; 4:14,15; 5:1, 5, 6,10; 6:20; 7:17, 26; 8:2; 9:11, 25; 10:21).

மனிதனுக்கு ஒப்பாக அவர் மனிதனாக உருவெடுத்தார். யூதருக்குக் கொடுக்கப்பட்ட தேவ நியாயப்பிரமாணத்தை முழுமையாக நிறைவேற்றும் பொருட்டு யூத குலத்தில் தோன்றினார்.

*"சோதிக்கப்பட்டு பாடுபட்டார்"* – மனிதனாகத் தோன்றிய அவர் "பாவம் நீங்கலாக எல்லாவற்றிலும் நம்மைப் போலவே சோதிக்கப்பட்டார்" (எபி. 4:15 J N D மெழிபெயர்ப்பு). அவருக்குப் பசியுண்டாயிற்று (மத். 4:2), தாகமுண்டா யிற்று (யோவான் 4:8), அவர் இளைப்படைந்தார் (யோவான் 4:6), பிசாசினால் சோதிக்கப்பட்டார் (மத். 4:1-11), பண நெருக்கடிக்கு ஆளானார் (மத். 17:24-27), பாடுகளுக்கு இலக்கானார் (மத். 16:21,22). இறுதியில் மரணத்திற்குள்ளானார். இவ்வண்ணமாக அவர் எல்லா நிலைகளிலும் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவ ராயிருக்கிறார். சோதிக்கப்பட்டு பாடுபட்டதினாலே அவர் சோதிக்கப்படுகிற மனிதர்களாகிய நமக்கு உதவி செய்ய ஏற்றவரும், வல்லவருமாயிருக்கிறார்.

## II. பழைய உடன்படிக்கையின் அப்போஸ்தலர்களிலும், இயேசு கிறிஸ்து மேலானவர் (3:1-4:13)

இயேசு கிறிஸ்து இறைவாக்கினர்களிலும், திருத்தூதுவர்களிலும் மேலானவர் என்று தெளிவுபடுத்திய பின்பு, இறுதியில் அவரை இந்நூலாசிரியர் இரட்சிப்பின் அதிபதியாகவும், தலைமை ஆசாரியராகவும் விளக்கிக்காட்டுகிறார். யூத இனம் மூன்று காரியங்களில் அதிக மேன்மை பாராட்டுகிறவர்களாவர்.

* ஒன்று, அவர்கள் தேவன் அருளிய திருச்சட்டத்தின் (நியாயப் பிரமாணத்தின்) பாதுகாவலர்கள் (ரோமர் 3:2).

* இரண்டு, தேவனால் வாக்களிக்கப்பட்ட நாட்டின் உரிமை அவர்களுக்குரியது.

* மூன்று, அவர்களுடைய லேவிய ஆசாரிய முறைமை மேன்மையுடையது (ரோமர் 3:1,2; யோசுவா 1:2; யாத். 28:1).

இஸ்ரவேலர்கள் எகிப்தின் அடிமை வாழ்வினின்று விடுதலை பெற்று, வாக்களிக்கப்பட்ட கானான் நாட்டுக்கு நடத்தப்பட்டனர். அப்பயணத்தின்போது, அவர்களை வழிநடத்தித் திருச்சட்டத்தைத் தேவனிடமிருந்து பெற்றுக் கொடுத்தவன் மோசேயேயாவான். மோசேயின் நாட்களுக்குப் பின்பு, வாக்களிக்கப்பட்ட நாடாகிய கானான் தேசத்தைக் கைப்பற்றிக்கொண்டு, அதைப் பன்னிரண்டு கோத்திரத்தார்களுக்கும் யோசுவாவே பகிர்ந்து கொடுத்தான்.

லேவிய ஆசாரியத்துவம் ஆரோனை மையமாகக் கொண்டிருந்தது. மோசே, யோசுவா, லேவியர் ஆகிய இம்மூவரும் தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும்,அனுப்பப்பட்டவர்களும், தேவனுடைய தூதுவர்களும் ஆவர். எனவே இஸ்ரவேல் மக்கள் அவர்களை அப்போஸ்தலர்களென எண்ணிப் பெரிதும் மதித்தனர்.

அத்தகைய எண்ணங்கொண்ட யூதக் கிறிஸ்தவர்களிடம், இயேசு கிறிஸ்து பழைய உடன்படிக்கை அப்போஸ்தலர்களிலும் மேலானவர் என்பதைத் தெளிவாக இங்கு நூலாசிரியர் எடுத்துக் காட்டுகிறார். அப்போஸ்தலருக்குரிய தகுதி இரண்டு, அதாவது அவர்கள் தேவனால் அனுப்பப்பட்டவர்களாக இருக்க வேண்டும், மற்றும் அவர்கள் தேவ தூதுவர்களாகவும் இருக்க வேண்டும்.

### 1. இயேசு கிறிஸ்து மோசேயைவிட மேலானவர் (3:1-6)

*"இப்படியிருக்க, பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே! நாம் அறிக்கை பண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப் பாருங்கள், மோசே தேவனுடைய வீட்டில்*

*எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தது போல, இவரும் தம்மை ஏற்படுத்தினவருக்கு உண்மையுள்ளவராயிருக்கிறார். வீட்டை உண்டு பண்ணினவன், வீட்டைப் பார்க்கிலும் அதிகக் கனத்திற்குரியவனாயிருக்கிறான். அதுபோல மோசேயைப் பார்க்கிலும் இவர் அதிக மகிமைக்குப் பாத்திரராயிருக்கிறார். ஏனெனில் எந்த வீடும் ஒருவனால் உண்டாக்கப்படும். எல்லாவற்றையும் உண்டு பண்ணினவர் தேவன். சொல்லப்போகிற காரியங்களுக்குச் சாட்சியாக மோசே பணிவிடைக்காரனாய் அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான். கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக, உண்மையுள்ளவராயிருக்கிறார். நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும், மேன்மை பாராட்டலையும் முடிவு பரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், நாமே அவருடைய வீடாயிருப்போம்" (3:1-6)*

## அ) வாசகர்களை அழைத்தல் (3:1)

### 1. பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்கள்

*இஸ்ரவேலர்கள் இம்மைக்குரிய* – இறைவனால் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு அழைக்கப்பட்டவர்கள். ஆனால் புதிய ஏற்பாட்டின்படி ஆவிக்குரிய இஸ்ரவேலர்களாக அழைக்கப்பட்ட நாமோ, அதாவது புதிய ஏற்பாட்டு சபை மக்களோ, பரம அழைப்பைப் பெற்றவர்கள் (பிலி. 3:14). இந்தப் பரம அழைப்பினாலே, பரலோக நாட்டினிலுள்ள விண் வீட்டிற்கென நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

### 2. பரிசுத்த சகோதரர்கள்

ஆவியினால் மறுபடியும் பிறந்தவர்கள் அனைவருமே, 'பரிசுத்தவான்' என அழைக்கப்படும் புதிய ஏற்பாட்டு விசுவாசிகளாவர். அவர்கள் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்பட்டிருக்கின்றனர் (ரோமர் 1:2; 1 கொரி. 1:2; 2 கொரி. 1:1; எபே. 1:1; பிலி. 1:1; 4:21; கொலோ. 1:2; 2 தெச. 1:9). ஆம். கர்த்தர் நம்மைப் பரிசுத்த அழைப்பினாலே அழைத்து, பரிசுத்தப்படுத்தியுமுள்ளார்.

***"சகோதரர்கள்"*** – சகோதரன் என்பதற்கு "ஒரு தாய் வயிற்றில் பிறந்தவன்", "உடன் பிறந்தவன்" என்பது பொருள். இச்சொல்லை இந்நிருபத்தில் நான்கு இடங்களில் காண்கிறோம் (2:12; 3:1; 10:19; 13:22). புதிய ஏற்பாட்டு விசுவாசிகள் அனைவருமே ஒரே குடும்பத்தில் தோன்றினோர் – உடன் பிறப்பு – ஆவர். அவர்கள் சகோதரர்கள்! (இந்தச் 'சகோதரர்கள்' என்று உபயோகித்துள்ள இச்சொல்லில் ஆண் பாலரும், பெண் பாலரும் மொத்தமாக அடங்குவர்).

## ஆ) இயேசுவைக் கவனித்துப் பாருங்கள்

*"நாம் அறிக்கை பண்ணுகிற"* – இரட்சிக்கப்படுகையில் நம் உதடுகளினாலே இந்நாமத்தை அறிக்கையிட்டோம் (ரோமர் 10:9; 2 கொரி. 9:13; 1 தீமோ. 6:4; எபி. 3:1; 4:14; 10:23). எங்கேயும், எப்பொழுதும், எவரிடமும் இயேசு கிறிஸ்துவை விசுவாசிகள் சூளுரைப்பது (எடுத்துரைப்பது) அவசியம். இதுவும் அறிக்கை பண்ணுதலேயாம்!

*"அப்போஸ்தலரும், பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து"* – "இரட்சிப்பின் அதிபதியும், பிரதான ஆசாரியரும்" (2:10, 17) என்று சொல்லியதைத் தொடர்ந்து "அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியரும்" என்று கர்த்தர் குறிக்கப்பட்டுள்ளார்.

திருமறை நூலில் இப்பகுதியில் மட்டுமே, இயேசு கிறிஸ்து அப்போஸ்தலர் என்றழைக்கப்பட்டுள்ளார். கர்த்தர் மோசேயை 'அனுப்புவேன்' என்றார் (யாத். 3:10,12). எழுபதின்மர் (செப்திவசிண்ட், lxx) மொழியாக்கத்தில் அப்பகுதியில் அப்பதம் "அப்போஸ்தலர்" என்றே உள்ளது. 'அப்போஸ்தலர்'[32] என்பதற்கு, "பொறுப்புடனும் அதிகாரத்துடனும் அனுப்பப்பட்ட ஒருவர்" (one sent with a commission) என்று பொருள்.[33] மோசே தேவனால் அனுப்பப்பட்ட அப்போஸ்தலர். இஸ்ரவேலரை எகிப்தினின்று விடுவிக்கும் பொருட்டு மோசே தேவனால் அனுப்பப்பட்டான். அவ்வாறே கிறிஸ்துவும் அனுப்பப்பட்டவர் (யோவான் 3:17, 34; 5:36,38; 6:29,57; 8:29; 10:36; 11:42; 17:3).

*பிரதான ஆசாரியர்* – மனுமக்களை மீட்கும் பொருட்டு, பிதாவானவர் தமது திருப்புதல்வரை இவ்வுலகிற்கு அனுப்பினார். ஆகவே அவரும் 'அப்போஸ்தலர்' (அனுப்பப்பட்டவர்) என்று அழைக்கப்பட்டுள்ளார்.

அவர் தமது மீட்பின் கிரியையை நிறைவு செய்துவிட்டு, மரணத்தினின்று உயிர்த்தெழுந்து, பின்னர் பரமேறிச் சென்றுள்ளார். இன்று அவர் தம் மக்கட்கென்று பரிந்து பேசும் தலைமை ஆசாரியராக தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கின்றார். மோசேயும், யோசுவாவும், ஆரோனும் எந்த ஒரு மேன்மையான மெய்ப்பொருளுக்கு நிழல்களாகத் திகழ்ந்து செயல் புரிந்தனரோ; அந்த நிழல் படிவத்தின் மெய்ப்பொருளாக உள்ளவரே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து.[34] பழைய ஏற்பாட்டு அப்போஸ்தலர்களின் பணிகள் இயேசு கிறிஸ்துவில் ஒப்பற்ற நிலையில் நிறைவடைந்து, மேன்மையடைகின்றதைக் காண்கிறோம்.

*"கவனித்துப் பாருங்கள்"* – வேறெங்கும், வேறொருவரையும் கவனியாது இயேசுவை மட்டும் கூர்ந்து கருத்துடன் நோக்குக! அப்போஸ்தலரும் தலைமை

ஆசாரியருமான இயேசுவை மட்டுமே நோக்கக்கடவோம். மோசே, ஆரோன், எருசலேம், ஆலயம், பலிகள் போன்ற திருப்பணிகள் எவற்றையும் கவனியாது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும், அவர்தம் அருட்பணியை மட்டுமே நாம் கவனித்துக் கருத்தோடு பார்க்க வேண்டும் (ஏசா. 45:22; எபி. 12:2).

இயேசுவே தேவ புதல்வர் என அறிக்கையிட்ட பேதுரு, மறுரூப மலையில், இயேசு கிறிஸ்துவோடு சமமாக மோசேயையும், எலியாவையும் நிறுத்தி, உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக மூன்று கூடாரங்களைப் போடுவோம் என்று பேசினான். அதாவது, பேதுரு அம்மூவரையும் சரிசமமாகவே காண்கிறான். அவன் இவ்வாறு பேசுகையில் "இவர் என்னுடைய நேசகுமாரன். இவருக்குச் செவிகொடுங்கள்" என்னும் இறை குரல் ஒலித்ததைக் கேட்டு, சீடர்கள் முகங்குப்புற விழுந்தனர். ஆம்! மோசேயும் எலியாவுமல்ல, இவரே! ஆம்! "இயேசு ஒருவரே பிதாவானவரின் நேசகுமாரன்." பின்னர் அவர்கள் தங்கள் கண்களை ஏறெடுக்கையில் "இயேசுவைத் *தவிர* வேறொருவரையும்" காணவில்லை. இத்தகைய ஆண்டவரையே நாமும் கவனித்துப் பார்க்க வேண்டும். நம் வாழ்வில் எது ஒன்றும், எந்த ஒரு அம்சமும் அவரையே *'கவனித்துப் பார்ப்பதற்கு'* இடையூறாக அமையக்கூடாது.

## *இ) மோசேயும் இயேசு கிறிஸ்துவும் ஓர் ஒப்பீடு (3:2-6)*

### *1. கிறிஸ்து மோசேக்கு ஒப்பானவர்.*

மோசே. . . இஸ்ரவேலரை எகிப்தின் சிறையிருப்பினின்று, விடுதலையாக்கி, பாலைவனப் பயணத்திற்குத் தலைமை தாங்கி, திருச்சட்டத்தைத் தேவனிட மிருந்துப் பெற்றுக்கொடுத்தவன் ஆவான். இந்த மாபெரிய தலைவனிடத்தில் இஸ்ரவேல் மக்கள் கொண்டுள்ள மதிப்பும் மரியாதையும் மட்டில்லாதது (யோவான் 9:28, 29). மோசே உண்மையுள்ளவன்தான். ஒருவரும் இதனை மறுப்பதற்கில்லை. கண்காணிக்கும் பணிவிடைக்காரன் என்ற நிலையில் அவன் முற்றிலும் நம்பிக்கைக்குரியவனே. இவ்வாறு கண்காணிக்கிறவன் உண்மை யுள்ளவனாயிருப்பது கண்காணியின் கடமைதான் அல்லவா (1 கொரி. 4:2)? அதில் பெருமை கொள்ள என்ன அவசியம் இருக்கிறது.

***தேவனுடைய வீடு (இறைவனின் வீடு -- God's house)*** – இங்கே குறிப்பிட்டுள்ள "இறைவனின் வீடு" என்றால் என்ன? இது பற்றி இருவிதக் கருத்துக்கள் உள்ளன. எனினும் இது ஆசரிப்புக் கூடாரமாகிய வீட்டையல்ல. இஸ்ரவேல் மக்களை ஒட்டுமொத்தமாகச் சேர்த்துக் குறிப்பிடுகிற வீடு என்று பொருள் கொள்வதே தகும்.[35]

"என் தாசனாகிய மோசேயோ. . . என் வீட்டில் எங்கும் அவன் உண்மை யுள்ளவன்" (எண். 12:7) என்று கர்த்தர் சாட்சி பகர்கிறார். இயேசு கிறிஸ்து மோசேக்கு முரணானவர் அல்லர். ஆயினும், இயேசு கிறிஸ்து மோசேயைப் பார்க்கிலும் முதன்மையானவர், மேலானவர், பெரியவர், அதிகாரமும் வல்லமை யுமுள்ளவர். இத்துடன் அவர் உண்மையுள்ளவருங்கூட (3:2). அவர் ஒருவரே முற்றும் நம்பத்தக்கவர்.

### *2) கிறிஸ்து பணிவிடை புரிவதில் உண்மையுள்ளவர்*

இஸ்ரவேல் மக்களாகிய இறை இல்லத்தில் மோசேயும் ஒரு நபராகத் திகழ்ந்தான். அவனும் ஓர் இஸ்ரவேல் குடிமகன். ஏன்? அவனை முதற்குடி மகனாகவே கருதலாம். ஆனாலும் அவன் ஒரு மனிதன்தானல்லவா?

ஆனால் இயேசு கிறிஸ்துவோ அவ்வாறல்ல! அவர் வீட்டில் ஒரு வேலை யாளல்லர்; வீட்டின் ஒரு உறுப்பினருமல்லர், அவரே வீட்டை உண்டு பண்ணின வர். ஆபிரகாமின் மூலமாக விசேஷித்த மக்கள் இனத்தைப் பிரித்தெடுத் தவர், அவரே அவர்களுக்கு இஸ்ரவேலரென பெயர் சூட்டியவர். எகிப்தின் சிறையிருப்பு நாட்களில் தம் மக்களின் தொல்லைகளைப் பார்க்கவே பார்த்தவர், அவர்களின் கூப்பிடுதலுக்குச் செவிகொடுத்தவர்; அவரே அவர்களைத் தமது வலது புயத்தின் பராக்கிரமத்தினாலே விடுவித்து வாக்களிக்கப்பட்ட கானான் நாட்டினில் வரவழைத்த தேவத் திருப்புதல்வர். ஆம் அவரே அந்த வீட்டைக் கட்டியவர் – அவரன்றோ இயேசு கிறிஸ்து!! அவர் மோசேயை விட எவ்வகையிலும் பெரியவரே, சிறப்பானவரே! மோசே ஆசரிப்புக் கூடாரத்தை உண்டு பண்ணியவன். இயேசு கிறிஸ்துவோ உலகங்களை உண்டாக்கினார் (1:2). அவர் தமக்காகவும், தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினார் (2:10). 'வீட்டையும்' அவரே கட்டி நிலைநாட்டினார்.

### *3. "மோசே உண்மையுள்ள ஊழியன், இயேசு கிறிஸ்துவோ, தன் சொந்த வீட்டின்மேல் அதிகாரம் பெற்ற திருமகன்" (3:5,6)*

மோசே வீட்டில் ஓர் ஊழியன், ஆயினும் அவன் ஓர் அடிமையல்ல; அவன் பொறுப்பானவன், மதிப்பிற்குரியவன். ஆனால் இயேசு கிறிஸ்துவோ, வீட்டைக் கட்டினவரும், அதிகாரம் பெற்றவரும், வீட்டுக்குச் சொந்தக்காரருமாவார்!

சிறப்பைப் பெற்ற மோசேயின் முகம் மிளிர்ந்தது. அப்படியிருந்தும் அவ்வொளி மங்கிப்போய் விட்டது (2 கொரி. 3:7, 8). ஆனால் வீட்டுக்குச் சொந்தக்கார ராகிய இயேசு பெருமானின் முகத்திலுள்ள மகிமையின் ஒளி ஒருக்காலும் குன்றாது (2 கொரி. 4:6). மனிதருக்கு அவர் ஒளியாக இருக்கிறார் (யோவான் 1:4). உலகிற்கு அவர் ஒளியாக இருக்கிறார் (யோவான் 8:12; 9:5).

*"சொல்லப்படப்போகிற காரியங்களின் சாட்சியம்"* – உபாகமத்தில் மோசே சொல்லியவற்றை இது குறிக்கின்றது என்பது சிலருடைய கருத்து.[36] வேறு சில வேத பண்டிதரோ, இது புதிய ஏற்பாட்டுக் காரியங்களுக்குரிய முன்னோட்ட சாட்சியம் என்கின்றனர் (1:1; 2:3). எனினும் இயேசு கிறிஸ்துவையும், அவர் மூலமாயுள்ள இரட்சிப்பையும் குறித்துள்ள சாட்சியம் என்று இதைப் பொருள் படுத்துவதே அதிக ஏற்புடையது (லூக். 24:27; யோவான் 5:46). மோசேயின் ஊழியமும், ஆசரிப்புக் கூடாரமும், அது சம்பந்தப்பட்ட லேவிய ஆசாரிய ஊழியமும், சொல்லப்படப் போகிற காரியங்களுக்குச் சாட்சியாகவேயுள்ளன.[37] திருமறையில் உள்ளபடியே எதிர்காலத்தில் இயேசு கிறிஸ்துவில் நிறைவுற வேண்டியவற்றின் சாட்சியத்தை மட்டுமே மோசே செயல்படுத்தினான். இயேசு கிறிஸ்துவில் நிறைவுபெற இருந்த பொருள்களுக்கு மோசே உண்மையுள்ள ஒரு சாட்சியாக இருந்தான் (மத். 17:3; எபி. 11:26).

*"கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரன்"* – முதலாம் அதிகாரத்தில் பிதாவோடு சம்பந்தப்படுத்தி 'குமாரனை' வெளிப்படுத்தியிருக்க, இங்கே இறைவனுடைய வீட்டோடு சம்பந்தப்படுத்தி, மேசியா என்று பொருள்படும் 'கிறிஸ்து' என்ற அதிகாரப் பூர்வமான உரிமைப் பெயரைப் பயன் படுத்திக் கூறியிருப்பதைப் பார்க்கிறோம். மோசே வீட்டில் எங்கும் உண்மை யுள்ள ஊழியன், ஆனால் இயேசுவோ, வீட்டின் மேல் முழு உரிமையுள்ள சொந்தக்காரரும் அதிகாரியுமாவார்.

*"நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியமும், மேன்மை பாராட்டலும்"* – "நம்பிக்கையும்" (6:11,18; 7:19; 10:23), அதனால் உண்டாகும் "தைரியமும்" (4:16; 10:19,20,35; 6:11,18; 7:19, 20; 10:23; எபே. 1:18; கொலோ. 1:22). இங்கே குறிப்பிடப்பட்டுள்ளன. நமக்குள்ள நம்பிக்கை ஒன்று மட்டுமே எச்சூழலிலும் நாம் தைரியமுள்ளவர்களாகத் திகழும்படி செய்கிறது.

"நாமே அவருடைய வீடாயிருப்போம்" (1 கொரி. 3:16; 6:19). இக்கூற்று நாம் எவ்வளவாகப் பரிசுத்தமுள்ளோராயிருக்க வேண்டும் என்பதை நமக்கு நினைவூட்டி எச்சரிக்கின்றது.

## இரண்டாம் எச்சரிக்கை 3:7-19

முந்தையப் பகுதியில், வான்தூதர்கள் வாயிலாகக் கிடைக்கப்பெற்ற இறை செய்தியைப் புறக்கணிப்போருக்கு, அதற்கு ஏற்பத் தக்க தண்டனை கிடைத்த தெனில், கர்த்தராகிய இயேசுவின் வாயிலாகக் கொடுக்கப்பட்ட செய்தியினை அலட்சியஞ் செய்வதால் கிடைக்கும் தண்டனை எத்தனை பெரிதும், பயங் கரமும் எனக் குறித்துக்காட்டி, முன்பு அந்த முதலாம் எச்சரிக்கையை (2:4) இந்நூலாசிரியர் தொகுத்தார்.

மோசேயின் உண்மையுள்ள நம்பகத்தன்மைக்கு இசையாது, அவிசுவாசத் தினாலே பாலைவனப்பயணத்தில் தண்டிக்கப்பட்ட இஸ்ரவேலரைச் சுட்டிக் காட்டி, அவர்களை நம் கண்முன் நிறுத்தி, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வின் மேன்மையையும், உரிமையையும், நம்பகத்தன்மையையும் நிராகரித்தால் நேரிடும் பின்விளைவுகளை விளக்கும் வகையில் இப்பகுதி விளங்குகிறது. இவ்வெச் சரிப்பு முந்தையப் பகுதிக்கும், பின்னர் வரும் பகுதிக்கும், ஒன்று போல் ஏற்பு டைய ஓர் எச்சரிக்கையாக அமைந்துள்ளது.

இப்பகுதியை மூன்று பகுதிகளாகப் பிரித்துப் படிக்கலாம்.

1) பரிசுத்த ஆவியானவரின் எச்சரிக்கை (3:7-11).

2) இஸ்ரவேலரின் தோல்வி -- கற்றுத்தரும் எச்சரிக்கை (3:12-14).

3) விசுவாசிகளுக்குரிய பொதுவான எச்சரிக்கை (3:15-19).

## பரிசுத்த ஆவியானவரின் எச்சரிக்கை (3:7-11)

*"ஆகையால், பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறபடியே: இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், வனாந்தரத்திலே கோபமூட்டினபோதும், சோதனை நாளிலும் நடந்தது போல, உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள். அங்கே உங்கள் பிதாக்கள் என்னைச் சோதித்து, என்னைப் பரீட்சை பார்த்து, நாற்பது ஆண்டு காலம் என் கிரியைகளைக் கண்டார்கள். ஆதலால், நான் அந்தச் சந்ததியை அரோசித்து, அவர்கள் எப்பொழுதும் வழுவிப்போகிற இருதயமுள்ள ஜனமென்றும், என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொல்லி என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன் என்றார்" (3:7-11).*

மோசேயின் உண்மையையும், நம்பகத்தன்மையையும் குறித்துச் சொல்லி யதைத் தொடர்ந்து, இஸ்ரவேலரின் நம்பகமற்றக் குணத்தைப் பற்றி இங்குச் சொல்லப்பட்டுள்ளது. இதற்கு ஆதாரமாக சங்கீதம் 95:7-11-ஐ மேற்கோளாக நூலாசிரியர் எடுத்துக் காட்டுகிறார் (யாத். 17:7; உபா. 2:14,15).

*"பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறபடியே"* – வேத வாக்கியங்களை மேற்கோளாக எடுத்துக் காட்டுகையில், அதனை எழுதிய மனிதர்களின் பெய ரைக் குறிப்பிடாமல், தேவக் கண்ணோட்டத்தில் சொல்லியிருப்பது இந்நிருபத் தின் சிறப்பம்சம் ஆகும்.[38] இறைவாக்குகள் ஒருபோதும் மனித சித்தத்தில் உண்டானதில்லை. அவையாவும் தேவ மனிதர் பரிசுத்த ஆவியானவரால் தூண்டப்பட்டு எழுதியவைகளாகும் (எபி. 9:8; 10:15; 2 பேது. 1:20,21).

மோசேயின் உண்மையற்ற, நம்பகமற்ற நிலை அன்று, இஸ்ரவேலரின் இரண்டகமே அவர்களுடைய வீழ்ச்சிக்குக் காரணமாயிருந்தது. அதுபோலவே

இயேசு கிறிஸ்துவின் நம்பகமின்மையால் அன்று, விசுவாசிகளின் அவிசுவாச முள்ள பொல்லாத இருதயமே பின்மாறிப் போவதற்குரிய காரணமாகும்.

*"இன்று அவருடைய சத்தத்தை நீங்கள் கேட்பீர்களாகில்"* (TNBCLC) – இஸ்ரவேலரின் நாற்பதாண்டுப் பாலைவனப் பயணத்தை இங்கு ஆசிரியர் நினைவூட்டுகின்றார். அம்மக்கள், மோசேயிடம் வாதாடி, கர்த்தரைச் சோதித் தனர் (யாத். 17:2, 7). நாற்பதாண்டுகள் கர்த்தரின் செயல்களை நேரடியாகக் கண்டிருந்தும், அதன் நன்மைகளை அனுபவித்த பின்னரும், அவர்கள் பல முறை முறுமுறுத்து, தேவனைச் சோதித்தனர் (எண். 14:20, 22; 20:1; உபா. 2:14,15; சங். 78:40 ; 103:7). தொடர்ந்து முரட்டாட்டம் செய்தனர். இவ்வாறு அவர்கள் தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தினார்கள்.

*"உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்"* – இயல்பான நிலையில், மனித இருதயம் திருக்குள்ளதும், மகா கேடுள்ளதும், கல்லாகக் கடினமானது மாகும். இந்தக் கல்லான இருதயம் திருவசனங்களினால் பண்படுத்தப்பட்டு, சத்தியத்திற்கு இணங்கி, வணங்கிக் கீழ்ப்படிய வேண்டும். தொடர்ந்தும் கடினப் படுத்தலாகாது.

*"அங்கே . . . உங்கள் பிதாக்கள் . . . என்னுடைய இளைப்பாறுதலில் . . . பிரவேசிப்பதில்லையென்று ஆணையிட்டேன்."*

தாங்கள் பெறப்போகும் இளைப்பாறுதலைக் குறித்துக் கர்த்தர்தாமே இஸ்ர வேலருக்கு முன்னுரைத்திருந்தார். ஆயினும் அவர்களுடைய கீழ்ப்படியாமை யினால் அவர்களால் வாக்குத்தத்தக் கானான் தேசத்திற்குள் காலெடுத்து வைக்க இயலாமற் போயிற்று. இஸ்ரவேலருக்கு வாக்களிக்கப்பட்ட இளைப்பாறுதல். கானான் தேசத்தில் அவர்கள் சேர்ந்த பின்னர் பெறவிருக்கும் இளைப்பாறுதலே யாகும் (உபா. 12:9). ஆனால் தங்களது நம்பிக்கையின்மையாலும், கீழ்ப்படி யாமையினாலும், அவர்கள் அதனுள் காலெடுத்து வைக்க முடியவில்லை (உபா. 1:34,35; எபி. 4:3-5). ஆகவே 38 ஆண்டுகள் விசுவாசியாத அம்மக்கள் அனை வரையும் பாலைவனப் பயணத்தில்தானே கர்த்தர் அழித்தார் (உபா. 1:35; 1 கொரி. 10:5-10; எபி. 3:17; யூதா. 5).

புதிய ஏற்பாட்டு தேவமக்களாகிய திருச்சபை விசுவாசிகளாகிய நம்முடைய இளைப்பாறுதலோ (Sabbath = Rest = ஓய்வு) ஆவிக்குரிய பரம இளைப்பாறு தலாகும்.

'கானான்' என்பதை 'பரலோகக் கானான்' என்பாருண்டு. ஆனால் கானான் தேசமடைவதை வெற்றி சிறந்த கிறிஸ்தவ வாழ்க்கையோடு ஒப்புமை செய்வதே ஏற்புடையது."[39] (இதை எபி. 3:14 உடன் ஒப்பிட்டு விளக்கம் காண்க.)

## 2) இஸ்ரவேலரின் தோல்வி கற்றுத்தரும் எச்சரிக்கை (3:12-14)

*"சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாச முள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள். உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனை யினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள். நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக் கையை முடிவு பரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், கிறிஸ்து வினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம்" (3:12-14).*

### *தன்னைத்தானே சோதித்தறிய ஓர் அழைப்பு*

***"ஜீவனுள்ள தேவன்"*** – இஸ்ரவேலரின் யேகோவாவாகிய தேவாதி தேவனை உயிரற்ற சிலைகளினின்று வேறுபடுத்திக் காண்பிக்கத் திருமறையில் இத் தொடர் பன்முறை உபயோகப்படுத்தியிருக்கிறதைக்காண்க (உபா. 5:26; யோசுவா 3:10; 1 சாமு. 17:26; 2 இராஜா. 19:4,16; சங். 42:2; 84:2; எரே. 10:10; 23:36; தானி. 6:20,26; மத். 16:16; யோவான் 6:69; அப். 14:15; ரோமர் 9:26; 1 தெச. 1:9; 1 தீமோ. 3:15). "ஜீவனுள்ள தேவன்" எனும் இத்தொடர் எபிரெய நிருபத்தில், 3:12; 9:14; 10:31; 12:22 ஆகிய நான்கு வாக்கியங்களில் உபயோகிக் கப்பட்டுள்ளது.

***"விட்டு விலகுவதற்கேதுவான"*** – விட்டு விலகுதல் என்பதற்குப் பின் மாறுதல் என்று பொருள். விசுவாசத்தை நிராகரித்துவிட்டு, முரட்டாட்டமுடன், முடங்கி நின்று பின்னோக்கிப் போகுதல்! எபி. 4:16-ல் வரும் 'சேரக்கடவோம்' என்ற சொல்லின் எதிர்மறைச் சொல்லே இந்த "விட்டு விலகுதல்" ஆகும். "அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம்" 'அவிசுவாசம்' என்பவை, காரியங் களைப் புரிந்துகொள்ளுவதில் வரும் அறியாமையல்ல, அது தேவனின் தெளி வான கட்டளையை மனப்பூர்வமாய் மறுதலிப்பதேயாகும் – முனைவர் மார்கன். "அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் தேவனை விட்டு விலகிச் செல்லுகிறது. நேர்மையுள்ள உத்தம இருதயம் தேவனிடம் கிட்டிச்சேர ஆர்வத்துடன் நாடி வருகிறது" (எபி. 10:22).

பார்வோனின் அடிமைத்தனத்தில் பாடுபட்ட இஸ்ரவேல் மக்கள் இளைப் பாறுதலை நாடியே எகிப்தினின்று புறப்பட்டனர். ஆனால் அவர்களுடைய அவிசுவாசம், அவ்விளைப்பாறுதலை அடையத் தடையாயிற்று. ஏன்? அவர்களில் ஒரு சிலர் எகிப்திற்குத் திரும்பிப் போகவும் மனதாயிருந்தனர் (அப். 7:39; எண். 14:3). அவர்கள் மெய்தேவனிடமிருந்து இருதயத்தில் பின்மாறிப் போய் விட்டனர்.

*"பாவத்தின் வஞ்சனையினாலே . . ."* – இங்கே கூறப்படும் 'பாவம்' என்பது அவிசுவாசமேயாகும். 'வஞ்சனை' (ஆதி. 3:13; 2 கொரி. 11:3; 1 தீமோ. 2:14) என்பது பாவத்தின் தன்மைகளுள் ஒன்று. பொய்யான ஒன்றை உண்மையென்று சொல்லி நம்பச் செய்வதே வஞ்சனை: "பாவமானது கற்பனைகளாகிய கட்டளை யினாலே வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு வஞ்சிக்கின்றது" (ரோமர் 7:11).

*"இன்று என்னப்படுமளவும்"* – "இன்று" என்ற சொல், இவ்வதிகாரத்தில் மீண்டும் வசனம் 15-ல் வருகின்றது (சங். 95:8). இங்கே வரும் 'இன்று' என்பதற்கு ஒன்றிற்கு மேற்பட்ட விளக்கங்கள் உள்ளன. இவ்வார்த்தை ஒரு விசுவாசியின் நிகழ்கால வாழ்நாளைக் காட்டுகிறது என்பது ஒருசாராரின் கருத்து. பெந்தெ கொஸ்தே நாள் துவங்கி இயேசு கிறிஸ்துவின் நடு வான வருகை மட்டுமுள்ள "கிருபையின் நாள்" என்றழைக்கும் சபையின் காலக்கட்டத்தை இது குறிக்கிறது என்பது வேறொரு சாராரின் கருத்து (B. F. Westcott). தமது திருக் குமாரன் மூலமாய் நம்மோடு பேசினதும், "இரட்சண்ய நாள்" என்று அழைக்கப் படுவதுமான இந்தக் கிருபையின் காலத்தையே (2 கொரி. 6:2) 'இன்று' குறிப் பிடுகின்றது என்பதே பெருவாரியான வேதவல்லுநர்களால் அங்கீகரிக்கப்பட்ட விளக்கவுரை. இதையே நாமும் ஏற்றுக் கொள்ளலாம்.

*"ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்"* – இது சபையின் போதகர்களோ, மேய்ப்பர்களோ, சபையாருக்குப் போதிக்கிற காரியமன்று. மாறாக, இது ஒருவருக் கொருவர், விசுவாசிகளுக்கிடையே அன்பினாலே ஆன்மீக ஊக்குவித்தலை அளிக்கிற செயல் தொடர்ந்து காணப்படவேண்டிய ஓர் அறிவுரையாகும்.

*"நம்பிக்கையைப் பற்றிக்கொண்டிருங்கள்"* – ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிலும், புதிய ஏற்பாட்டுச் சத்தியத்திலும் ஆதியில் கொண்ட விசு வாசத்தை உறுதியாய்ப் பற்றிக் கொள்ளுதல் வேண்டும். அவர்கள் கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டவர்கள், பங்கு கொண்டவர்கள் என்ற நிலையில் (partici-pator in Christ - RSV & NIV) உண்மையும் உத்தமமுமாக இருந்திருப்பார்களாகில் அந்த நம்பிக்கை இறுதி வரையிலும் குன்றாமலிருந்திருக்கும்.

'கிறிஸ்துவினிடத்தில்' என்பது, 'கிறிஸ்துவோடுகூட' என்று சில மொழி பெயர்ப்புகளில் காணப்படுகிறது. எனினும் 'கிறிஸ்துவினிடத்தில்' என்பதே பொருத்தமாயுள்ளது.

*"முடிவு பரியந்தம்"* – ஒரு விசுவாசியின் இறுதி மூச்சு வரை எனவும், "கிருபையின் நாள்" என்றழைக்கும் சபையின் காலக்கட்டத்தின் முடிவு வரை யெனவும் பொருள் கொள்வாருமுண்டு (வெளி. 2:26,27).

கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு நாம் இரட்சிக்கப்பட்டோம். ஆகிலும் நாம் இருப்பதும், நிலைப்பதும், தேவனின் கிருபையினாலேயாம்.

கிறிஸ்துவின் திரு இரத்தம் என்னும் பெரும் விலைக்கிரயம் கொடுத்து நாம் வாங்கப் பெற்றவர்கள். விசுவாசத்தினாலே இயேசு கிறிஸ்துவின் நாமத்தை அங்கீ கரித்துள்ளோம். இப்பொழுது நாம் தேவ மக்கள் என்பதை நற்கிரியைகளினாலே வெளிப்படுத்துகிறோம். விசுவாசம் என்பதே இரட்சிப்பின் அடித்தளமும் ஆதாரமுமாம். ஆகவே விசுவாசத்தினாலே கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர் களானோம். அத்தகையோர் "முடிவு பரியந்தம்" அவ்விசுவாசத்திலே நிலை நிற்க வேண்டும். யூத விசுவாசக் கிறிஸ்தவர்கள், தங்களுடைய பழைய யூத சமயத்திற்குத் திரும்பிச் செல்லக்கூடாது என நூலாசிரியர் இவ்வாறு கடிந் துரைக்கின்றார்.

## 3. "விசுவாசிகளுக்குரிய பொதுவான எச்சரிக்கை" (3:15-19)

*"இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், கோபமூட்டுதலில் நடந்ததுபோல உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள் என்று சொல்லியிருக்கிறதே. கேட்டவர்களில் கோபமூட்டினவர்கள் யார்? மோசே யினால் எகிப்திலிருந்து புறப்பட்ட யாவரும் அப்படி செய்தார்களல்லவா? மேலும், அவர் நாற்பது ஆண்டுகளாய் யாரை அரோசித்தார்? பாவஞ் செய் தவர்களையல்லவா? அவர்களுடைய சவங்கள் வனாந்தரத்தில் விழுந்து போயிற்றே! பின்னும் என்னுடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லை யென்று அவர் யாரைக்குறித்து ஆணையிட்டார்? கீழ்ப்படியாதவர்களைக் குறித்தல்லவா? ஆதலால், அவிசுவாசத்தினாலே அவர்கள் அதில் பிரவேசிக்கக் கூடாமற்போனார்களென்று பார்க்கிறோம்" (3:15-19).*

95-ம் சங்கீதத்தினின்று முன்பு கூறிய அதே வசனத்தை மீண்டும் நூலாசிரியர் இங்கு எடுத்துக் காட்டியுள்ளார் வ.15. கோபமூட்டினவர்கள் யார்? மோசே யினால் எகிப்தினின்று விடுவிக்கப்பட்டவர்களும், மோசேயின் தலைமையில் பின் சென்றவர்களுமான இஸ்ரவேலர்களேயாவர் (3:16).

***இஸ்ரவேலரின் பின்னடைதலுக்குக் காரணமாயிருந்த மூன்று படிகள்:***

1. அவர்கள் இறைவனுக்குக் கோபமூட்டினர் (வ.16).
2. அவர்கள் இறைவனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்தனர் (வ.17).
3. அவர்கள் இறைவனின் கட்டளைக்குக் கீழ்ப்படியாமற்போயினர் (வ.18).

ஆகவே அவர்கள் தங்கள் இளைப்பாறுதலில் பிரவேசியாமல் பாலைவனத் திலே பட்டுப்போயினர் (மரித்துப் போயினர்). ஏறக்குறைய பதினோரு நாட்களில் 200 கல் தூரத்தைத் தாண்டிக் கானான் தேசத்தை அடைய வேண்டிய அவர்கள், தங்கள் முறுமுறுப்புடன் கூடிய கீழ்ப்படியாமையினாலும், கர்த்தருக்குக் கோப

மூட்டினதினாலும், சுமார் நாற்பது ஆண்டுகள் பாலைவனத்தில் சுற்றி அலைந்து திரிந்தனர். இவையெல்லாம் அனுபவித்திருந்தும், இளைப்பாறுதலை அடையாது, எகிப்திலிருந்து புறப்பட்ட அவர்களில், இருவர் தவிர அனைவரும் வழியிலேயே மடிந்து போயினர்.

***இஸ்ரவேலருக்கு நேர்ந்த பத்துச் சோதனைகளாவன:***

(1) பயம் (யாத். 14:11). (2) முறுமுறுத்தல் (யாத். 15:24). (3) மறுபடியும் இரண்டாம் முறை முறுமுறுத்தல் (யாத். 16:3). (4) கீழ்ப்படியாமை (யாத். 16:19, 20). (5) ஓய்வு நாளை அசட்டை செய்தல் (யாத். 16:27,28). (6) சிலை வழிபாடுகள் (யாத். 32 அதி), (7) அதிருப்தியினாலான முறையீடுகள் (எண். 11:1-3). (8) துர் இச்சை (எண். 11:4,32). (9) அவிசுவாசம் (எண். 14:11). (10) வாக்குவாதம் (எண். 20 : 3) – *முனைவர் சாஃபிர்*

*(இரண்டாவது எச்சரிக்கை இத்துடன் முற்றுப் பெறுகிறது)*

# 2. இயேசு கிறிஸ்து யோசுவாவைவிட மேலானவர் (4:1-13)

## விசுவாசிகளுக்குரிய நித்திய இளைப்பாறுதலின் மேன்மை (4:1-8)

### *1) வாக்குறுதியும் சுவிசேஷமும் (4:1)*

*"ஆனபடியினாலே, அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல், பின்வாங்கிப் போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம்" (4:1).*

இஸ்ரவேல் மக்களுக்கு இறைவன் யேகோவா, அவர்கள் அடையப்போகும், இளைப்பாறுதலைக் குறித்து வாக்குறுதியளித்திருந்தார். ஆனால் அவர்களுடைய அவிசுவாசத்தின் காரணமாக அந்த இளைப்பாறுதல் அவர்களுக்குக் கிடைக்காமற் போயிற்று. இவ்வாறு அருளப்பட்ட அவ்வாக்குறுதிகள் இன்றும் நிறைவேறாது எஞ்சியிருக்கின்றன. எஞ்சிய அந்த வாக்குத்தத்தத்தின் மெய்ப் பொருளோ, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் வழங்கப்படவிருக்கின்ற ஆன்மீக இளைப்பாறுதலாகும்.

"நாம் பயந்திருக்கக்கடவோம்", அல்லது இதை "நாம் ஜாக்கிரதையாக இருக்கக்கடவோம்" என்றும் மொழி பெயர்க்கலாம் (10:27, 31; 12:28). விசுவாசத்தை விட்டு விலகுதல் என்பது மிகவும் நடுக்கத்திற்குரிய பயங்கரமாகும்.

### *2) விசுவாசியாத இஸ்ரவேலரும், விசுவாசித்த சபையின் கால விசுவாசிகளும் (4:2, 3)*

*"ஏனெனில் சுவிசேஷம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதுபோல நமக்கும் அறிவிக்கப்பட்டது; கேட்டவர்கள் விசுவாசமில்லாமல் கேட்டபடியினால், அவர்கள் கேட்ட வசனம் அவர்களுக்குப் பிரயோஜனப்படவில்லை. விசுவாசித்தவர்களாகிய நாமோ அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம்; அவருடைய கிரியைகள் உலகத் தோற்றமுதல் முடிந்திருந்தும், இவர்கள் என்னுடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லையென்று என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன் என்றார்" (4:2,3).*

இப்பகுதியில் வரும் "அவர்களுக்கு", "நமக்கு", "அவர்கள்", "நாம்" என்னும் தொடர்களைக் கவனிக்கவும்.

பண்டைய இஸ்ரவேலர்கள் மோசேயின் மூலமாய் ஒரு நற்செய்தியைக் கேட்டனர். அது எகிப்தினின்று விடுவிக்கப்பட்டு, கானான் தேசத்தில் பிரவேசிப்பதைப் பற்றிய நற்செய்தியாகும். ஆனால் இன்று நாம் கேட்கும், நற்செய்தியோவெனில், தேவத்திருக்குமாரன் மூலமாய்ப் பெறுகின்ற, சாத்தானினின்று விடுவிக்கப்படும் ஆன்மீக மீட்பைப் பற்றிய சுபசெய்தியாகும் (1:2; 2:3). இன்று இச்செய்தியைக் கேட்டு, இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்போர் இம்மையில் மட்டுமல்ல மறுமையிலும், அந்த மெய் இளைப்பாறுதலைப் பெறுகின்றனர்.

***"விசுவாசித்தவர்களாகிய நாமோ அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம்."*** – இங்கே குறிக்கப்படுவது இப்பூமியில் உள்ள கானான் தேசத்தில் பெறவிருக்கும் இளைப்பாறுதல் அல்ல, "என்னுடைய இளைப்பாறுதல்" என்றுள்ள சிறப்புச் சொல்லைக் காண்க (சங். 95:11).

### *3) இளைப்பாறுதல் (4:4-5)*

*"மேலும், தேவன் தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்து ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார் என்று ஏழாம் நாளைக் குறித்து ஓரிடத்தில் சொல்லியிருக்கிறார். அன்றியும், அவர்கள் என்னுடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லை என்றும் அந்த இடத்திலே தானே சொல்லியிருக்கிறார்" (4:4-5).*

படைப்பின் செயலைப் பற்றி ஆதியாகமத்தில் குறிப்பிடுகையில், "சாயுங் காலமும் விடியற்காலமுமாகி" என்னுஞ் சொற்றொடரைக் காண்கிறோம். அங்கே ஒரு கால அளவு உள்ளது. "தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப்

பரிசுத்தமாக்கினார்". அந்த ஏழாம் நாள் இளைப்பாறுதலின் நாள். ஆனால் இந்த ஓய்வு நாளைப்பற்றிக் குறிப்பிடுகையில்,"சாயுங்காலமும் விடியற் காலமுமாகி" என்கிற கால வரம்பு குறிப்பிடப்படவில்லை என்பதைக் கவனிக்கவும் (ஆதி. 2:3). இது படைப்பின் கிரியை நிறைவுற்றதால் (முற்றுப் பெற்றதால்) நேர்ந்த 'மனமகிழ்ச்சி' அல்லது 'பூரித்திருத்தல்' எனலாம் (யாத். 31:17). படைப்பு பரி பூரணமானதாகையால் அவர் அதற்குமேல் எவ்விதக் கிரியையும் செய்ய வேண் டிய அவசியம் காணவில்லை. அப்படைப்புகளெல்லாவற்றையும் அவர் தாங்கி, அனைத்தையும் பராமரித்துக் காத்துக்கொண்டிருக்கிறார். "ஓய்வு நாள் ஆசாரம்", என்பது எகிப்திய அடிமை வாழ்வினின்று இஸ்ரவேலரைக் கர்த்தர் விடுவித்த தின் நினைவாக, கர்த்தருக்கும் இஸ்ரவேலருக்குமிடையே என்றென்றைக்கும் ஓர் உடன்படிக்கையும், அடையாளமுமாய் உள்ளதென்றே கர்த்தர் கூறியுள்ளார் (யாத். 20:11; 31:16,17).

## 4) சுவிசேஷத்தை முதலாவது கேட்டவர்கள் (4:6,7)

*"ஆகையால், சிலர் அதில் பிரவேசிப்பது, இன்னும் வரப்போகிற காரியமா யிருக்கிறபடியினாலும், சுவிசேஷத்தை முதலாவது கேட்டவர்கள், கீழ்ப்படி யாமையினாலே அதில் பிரவேசியாமற் போனபடியினாலும், இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், உங்கள் இருதயங்களைக் கடினப் படுத்தாதிருங்கள் என்று வெகு காலத்திற்குப் பின்பு தாவீதின் சங்கீதத்திலே சொல்லியிருக்கிறபடி, இன்று என்று சொல்வதினாலே பின்னும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்" (4:6 ,7).*

மோசேயின் மூலமாய்ச் சுவிசேஷத்தை முதலாவது கேட்டவர்கள் இஸ்ரவேலரேயாவர். ஆனால் அவர்கள் தங்களது *கீழ்ப்படியாமையினால்* அந்த இளைப்பாறுதலுக்குள் (கானான் தேசத்திற்குள்) பிரவேசிக்கவில்லை. "சிலர் அதில் பிரவேசிப்பது இன்னும் வரப்போகிற ஒரு காரியமாயிருக்கிறது" என்று அவர்கள் எண்ணினர். அதாவது, "வெகு காலத்திற்குப் பின்பு" மோசேயின் காலத்திற்கு ஏறக்குறைய ஐந்நூறு ஆண்டுகட்குப் பின்பு, இஸ்ரவேலரின் மாமன்னரும், இறைவாக்கினருமான தாவீது, தூய ஆவியினால் ஏவப்பட்டு, வெகுகாலத்திற்குப் பின்புள்ளதைக் குறித்து முன்னுரைத்தார். அந்நேரத்திலும் தாவீது "இன்று" என்றுரைத்திருப்பதினால், அதுவரையிலும் அவ்விளைப்பாறு தலில் அவர்கள் பிரவேசிக்கவில்லை என்பது மிகத்தெளிவு!

*"யோசுவா அவர்களை இளைப்பாறுதலுக்குட்படுத்தியிருந்தால், பின்பு அவர் வேறொரு நாளைக்குறித்துச் சொல்லியிருக்கமாட்டாரே" (4:8).*

யோசுவாவின் காலத்தில் இஸ்ரவேலருக்குக் கிடைத்த இளைப்பாறுதல், கானான் தேசத்திற்குள் பிரவேசித்தல் ஆகும். அது இம்மைக்குரியதும்,

தற்காலத்திற்குரியதுமாகும். இது இம்மைக்குரிய கானான் – அது இவ்வுலகத் தேசத்தைப் பற்றியதாகும். எகிப்தினின்று புறப்பட்ட இஸ்ரவேலரின் இரண்டாவது தலைமுறை கானானுக்குள் பிரவேசித்திருந்தாலுங்கூட, அது யோசுவாவின் மூலம் கிடைத்த தற்காலிகமான ஓர் இளைப்பாறுதலேயாகும் (யோசுவா 11:23). ஆனாலும் தேவனுடைய திட்டத்திற்குட்பட்ட மெய்யான இளைப்பாறுதல் இன்றுவரை நிறைவு பெறவில்லை. யோசுவா மூலம் கிடைத்த இளைப்பாறுதல் என்றென்றைக்குமுள்ள மெய்யான இளைப்பாறுதலாயிருக்குமாயின், சில நூறு ஆண்டுகட்குப் பின்னர் வந்த தாவீது "இன்று" என்று சொல்லியிருக்க வேண்டியதில்லையே! யோசுவா அவர்களை ஒரு மெய்யான இளைப்பாறுதலுக்குட்படுத்தவில்லை என்பது தெளிவு!

## 3. விசுவாசிகளுக்கு இனி வரப்போகும் இளைப்பாறுதலின் காலம் (4:9-11)

*"ஆகையால், தேவனுடைய மக்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாயிருக்கிறது, ஏனெனில் அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவன், தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்தது போல, தானும் தன் கிரியைகளை முடித்து ஓய்ந்திருப்பான். ஆகையால், இந்தத் திருஷ்டாந்தத்தின்படி, ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்து போகாதபடிக்கு, நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக்கடவோம்" (4:9-11).*

### 1) "தேவ ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம்" (4:9)

***"தேவ ஜனங்கள்"*** – பழைய ஏற்பாட்டில் தேவ ஜனம் என்பது இஸ்ரவேலரையும், புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவ விசுவாசிகள் அனைவரையும் குறிப்பிடும் ஒரு தொடர் ஆகும்.[40]

"தேவனுடைய மக்களுக்கு இளைப்பாறுகிற (ஓய்வு) காலம் ஒன்று இன்னும் எஞ்சியிருக்கிறது" (NIV).

இவ்வதிகாரத்தில் நாம் மூன்று விதமான இளைப்பாறுதல்களைக் காண்கிறோம்:

1) தேவன் தம்முடைய படைப்பின் கிரியைகளையெல்லாம் முடித்து விட்டு ஏழாம் நாளில் ஓய்ந்திருத்தல் (4:4,10; ஆதி. 2:2).

2) இஸ்ரவேலருக்குக் கானான் தேசத்தில் கிடைத்த இளைப்பாறுதல் (4:8, யோசு. 11:23; 22:4; 23:1).

*(இவையிரண்டும் முடிவுபெற்ற இறந்த கால நிகழ்ச்சிகளாம்.)*

3) தாங்கள் பெற்றுள்ள ஆன்மீக மீட்பினிமித்தமாய் விசுவாசிகள் பெறப்போகும் ஒரு நித்திய இளைப்பாறுதலுண்டு. அது புதிய ஏற்பாட்டு விசுவாசிகளுக்குக் கிடைக்கும் ஆன்மீக இளைப்பாறுதலேயாம். ஒரு பாவி, தனது மீட்பிற்கான அனைத்து கிரியைகளையும் விலக்கி விட்டு, இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தினாலே மட்டும் மீட்கப்பட்டு, ஆன்மீக இளைப்பாறுதலை அனுபவமாக்கிக் கொள்ளுகிறான் (மத். 11:28). ஆன்மீக ஈடேற்றத்தைப் பெற்றுக்கொண்ட, இன்றைய இறைமக்கட்கு ஒரு முடிவில்லாத இளைப்பாறுதலின் காலம் இனிவர இருக்கிறது. இது விசுவாசிகளுக்குரிய நித்திய பரம இளைப்பாறுதலாகும் (4:9).

## *2) இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருப்போம் (4:10,11)*

தேவன் தம்முடைய படைப்பின் செயல்களிலிருந்து, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். அதுபோல, விசுவாசிகள் இயேசு கிறிஸ்துவில் வைத்த விசுவாசத்தினால் இரட்சிக்கப்படுவதற்குரிய அனைத்துச் செயல்களிலுமிருந்தும் ஓய்ந்திருப்பர்.

***ஏழாம் நாளிலே தேவன் ஓய்ந்திருந்தார்*** – மற்றும் மனிதனுடைய பாவத்தினிமித்தமாக "என் பிதா இந்நேரம் வரை செயலாற்றுகிறார். நானும் செயலாற்றுகிறேன்" (யோவான் 5:17), என்று கூறின இயேசு கிறிஸ்துவின் வாயிலாக தம் மீட்பின் செயலை முடித்துவிட்டுப் பிதாவானவர் ஓய்ந்திருக்கிறார்.

***"கீழ்ப்படியாமையினாலே . . ."*** – பண்டைய இஸ்ரவேலரின் முதலாம் தலைமுறை தங்களது கீழ்ப்படியாமையினாலே பாலைவனப் பயணத்தின் போதே மரித்து, பட்டுப்போயினர். இவையெல்லாம் இக்காலத்து விசுவாசிகளுக்கு முன்னடையாளமாயுள்ளன. இத்துடன், கருத்துச் சேர்க்கையுள்ள சில சிந்தனைகளைப் பவுலும் சுட்டிக்காட்டியுள்ளதைக் கவனிக்கவும் (1 கொரி.10:1-12). அவர்கள் இச்சித்தார்கள், விக்கிரக ஆராதனைக்காரராயினர், வேசித்தனம் செய்தனர். கிறிஸ்துவைப் பரீட்சை பார்த்தனர், முறு முறுத்தனர், இவ்வாறு அவர்கள் செய்த செய்கைக்கு அவர்கள் தேவனிடமிருந்து பெற்றுக்கொண்ட தண்டனைகளை நாம் எண்ணிப்பார்ப்போமாக. இவையாவற்றையும் மொத்தமாகக் "கீழ்ப்படியாமை" என்று இங்கு பரிசுத்த ஆவியானவர் விவரிக்கிறார்.

"ஆகவே, நாம் . . ." ஆம்! விசுவாசிகளாகிய 'நாம்' ஜாக்கிரதையாயிருக்கக் கடவோம்.

***"இளைப்பாறுதல்"*** – விண் வீட்டில் நாம் என்றென்றும் கர்த்தருடனேகூட இருப்போம். இடைவிடாமற் தேவனைப் போற்றிப் புகழ்வோம். ஆயிரமாண்டு

அரசாட்சியின் போதும் அவர் தொடர்ந்து நமக்கு என்னென்ன பொறுப்புக்களைத் தருகின்றாரோ நாமறியோம். நிச்சயமாகவே மறுமை வீட்டில் பலவிதப் பணிகளும், பொறுப்புகளும் அவசியம் இருக்க வேண்டும்!

### *3) இறைவாக்கின் சிறப்பியல்பு (4:12,13)*

*“தேவனுடைய வார்த்தையானது, ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும் ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களையும், ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது. அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை. சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்” (4:12, 13).*

இங்கே “வார்த்தை” என்பது, மனிதனாக அவதரித்த திருமகன் இயேசுவல்ல (யோவான் 1:1), கர்த்தர் திருவுளம் பற்றிக் கூறியுள்ள தேவத்திருவசனத்தையே குறிப்பிடுகிறது.

அ) ஜீவனுள்ள வசனம் – இறைவனைப் போலவே இறைவாக்கிற்கும் நூலாசிரியர் “ஆள் தன்மையை” அளித்து விவரித்துள்ளார். கர்த்தர் ஜீவனுள்ளவர். அவருடைய வசனமும் ஜீவனுள்ளதாகும் (அப். 7:38; பிலி. 2:14; 1 பேது. 1:23).

ஆ) வல்லமையுள்ள வசனம் – இறைவாக்கு, செயற்திறன் கொண்ட தேவ வசனமாகும். அது ஒரு போதும் வீண் போகாது (ஏசா. 55:11).

இ) சுருக்கமான வசனம் – சுருக்கமான வார்த்தைகளில், பெருக்கமான இறை சத்தியத்தை உள்ளடக்கிக் கொண்டுள்ளது.

ஈ) உருவக்குத்துகிற வசனம் – இது மனிதனை – அவன் இருதயத்தை உருவக்குத்தி, ஊனையும் கணுக்களையும் பிரித்து உணர்த்துகிறது.

உ) வகையறுக்கிற வசனம் – மறைந்துள்ள நினைவையும், நோக்கத்தையும் வகையறுக்கிறது – வெளியாக்குகிறது.

கர்த்தருடைய வசனம் ஆத்துமாவையும், ஆவியையும், சரீரத்தையும் (கணுக்களையும் ஊனையும்) பகுதி பகுதியாகப் பிரிக்கத்தக்கதும், இதயத்து நினைவுகளை இறைநோக்குடன் வகையறுக்கிறதுமாயுமிருக்கிறது.

“பண்டை நாட்களில், ஆவி (ஆவி – இது ஆன்மாவாகாது) உடலிலுள்ள உயிரின் மையமாகவும், ஆன்மாவை (ஆன்மா – இது ஆவியாகாது) அறிவின்

மையமாகவும் மனிதர்கள் எண்ணி வந்தனர். உயிரோடிருக்கிற ஒருவனில் இவையிரண்டும் ஒருங்கிணைந்து உள்ளன. இவற்றில் ஒன்றினின்று மற்றதைப் பிரித்தால், அதன் விளைவு மரணமாகும்" – முனைவர் பிரவுண்.

திருவசனத்தைப் பற்றி முனைவர் கவுள் என்பார் கூறும் கருத்து இது. "திருவசனம் பாவத்தில் உழல்பவனைக் காயப்படுத்துகிறது. அவிசுவாசியைப் பண்படுத்துகிறது. மாய்மால பக்தனைக் குற்றஞ்சாட்டுகிறது. விசுவாசியைக் கடிந்துரைக்கிறது."[41]

இறைவாக்கின் சிறப்பியல்புகளை வகையறுத்துக் காட்டிய நிருப ஆசிரியர், வாசகர்களின் கவனத்தை இப்பொழுது இறைவாக்கின் மையப்பொருளாயுள்ள இறைமகன் இயேசுவினிடத்திற்குத் திருப்புகிறார்.

கர்த்தருடைய பார்வைக்கு மறைவான எந்தப் படைப்புமில்லை. அவரது பார்வைக்கு அனைத்தும் வெளிப்படையாகவும், திறந்தவையாகவும் உள்ளன. அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் (ரோமர் 4:10-12; 2 கொரி. 5:10). ஆகவே மெய்விசுவாசிகள் இதனை மனதிற்கொண்டு, கர்த்தருக்கும் அவருடைய வார்த்தைகளுக்கும் அஞ்சி, பக்தியுடன் கீழ்ப்படிந்து, சகல ஒழுக்கமுடன் வாழக்கடவோம்.

*(முதற் பகுதி முற்றிற்று)*

# பகுதி 2

# புதிய உடன்படிக்கை நாயகரின் ஊழியமும், அதன் மேன்மையும்

## (4:14 - 7:28)

### I. இயேசு கிறிஸ்து பழைய ஏற்பாட்டு உடன்படிக்கையின் ஆசாரியர்களிலும் மேலானவர் (3:1-4:13)

இயேசு கிறிஸ்துவை இறைவாக்கினரில் ஒருவரென்றோ, மன்னரென்றோ, மேசியாவென்றோவாயினும் யூதர்கள் ஏற்றுக்கொள்ள மனதாயிருப்பினும், அவரை ஓர் ஆசாரியர் என்பதாக அவர்கள் சிறிதும் எண்ணிப்பார்க்க முடியாது (7:14). எனவே, இந்நிருபத்தில் இயேசு கிறிஸ்துவைத் தலைமை ஆசாரியர் என்றும், அவர் எவ்வகையில் யூதமரபில் வந்த மேன்மையானவராயிருக்கிறார் என்பதும் தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கிறது. இந்நிருபத்தில் 1:3; 2:17,18; 3:1 ஆகிய வேதவாக்கியங்களில் இயேசு கிறிஸ்துவின் ஆசாரியத்துவத்தைச் சுட்டிக் காண்பித்த ஆக்கியோன் அதற்குரிய ஆதாரங்களை அடுக்கிவைத்திருக் கின்றார். மற்றும் திருமறை நூலில் கர்த்தருக்கிருக்கும் மேன்மையான முழுத்தன் மையையும் ஆக்கியோன் எடுத்து இப்பகுதியில் காண்பிக்கிறார். இயேசு கிறிஸ்து தலைமை ஆசாரியராயிருக்கின்றார் என்கிற ஐயமற்ற நம்பிக்கையே, விசுவாசி யின் ஆக்கத்திற்கும், ஊக்கத்திற்கும் ஆணிவேர் ஆகும். கிறிஸ்துவின் ஆசாரி யத்துவத்தால் அவிசுவாசிக்கு எவ்வித நன்மையும் இல்லை. அவருடைய ஆசாரி யத்துவ ஊழியம் முழுமையும் விசுவாசிகளுக்கே பொருந்துமாதலால், அது அவர்களை ஊக்குவிக்கிறதாகவும், பெலப்படுத்துவதாகவும் உள்ளது.

## 1. இயேசு கிறிஸ்துவினுடைய ஆசாரியத்துவத்தின் மேன்மை (4:14-16)

*"வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப் போன தேவ குமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருக்கக்கடவோம். நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லா விதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவரா யிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத் தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங்கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத் தண்டையிலே சேரக்கடவோம்" (4:14-16).*

### *அ) இயேசு கிறிஸ்துவின் ஆள் தன்மையின் மேன்மை (4:14)*

1) குமாரன் (1:2, 5, 8; 3:6) இச்சிறப்புப் பெயர் அவர் தேவனாகவும், மேசியாவாகவும் இருக்கிறார் என்பதைக் காட்டுகிறது.

2) இயேசு (3:1; 4:14; 5:9) இயேசு என்ற பதத்திற்கு இரட்சகர் என்று பொருள். கிரேக்க மொழியில் இது யோசுவா என்றுள்ளது.

இப்பெயர், அவருடைய மனிதத் தன்மையையும், பூமிக்குரிய பணிவிடை யையும் எடுத்துக்காட்டுகிறது என்பதை முன்னரே கண்டோம்.

இவ்விரு பெயர்களும், இயேசு பெருமானின் இரண்டுவித இயல்புகளையும், செயல்களையும் சுட்டிக் காண்பிக்கின்றன.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாவீதின் மரபில் தோன்றியவர் (வெளி. 22:16). மற்றும் அவரே தாவீதின் ஆண்டவருமாவார் (மத். 22:43). அவர் பூரண மனித ரானபடியினால், அவருக்கு நம் தேவைகள் அனைத்தையும் அறிய முடிகிறது. அவ்வாறே, அவர் பூரண தேவனாகவுமிருக்கிறார் (ரோமர் 9:5; 1 யோவான் 5:20). ஆகவே நம் அனைவருடைய அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்யவும் அவர் வல்லவராயிருக்கிறார்.

### *ஆ) இயேசு கிறிஸ்துவின் அருட்பணியின் மேன்மை (4:15)*

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்கு ஏறிப் போனார். – இங்கு 'வானங்கள்' என்ற பன்மைச் சொல்லைக் காண்க; ஒன்றிற்கு மேற்பட்ட வானங்கள் உண்டென்று யூதர்கள் மரபு வழியாய் நம்பினர். "மூன்றாம் வானம் வரைக்கும்" எனப் பவுலும் சொல்லியுள்ளார் (2 கொரி. 12:2). இப்பூமியைச் சுற்றிலும் உள்ள காற்று மண்டலமாகிய வானம் (ஓசியா 2:18; மத். 16:2; லூக். 4:25) முதல் வானம் எனவும், அதற்கு அப்பால் ஈர்ப்புச் சக்தியற்று, வெற்றிடமாயுள்ள பரந்த வானவெளி இரண்டாம் வானம் (ஆதி.1:14-18) எனவும், இவைகளுக்கு அப்பால் பரலோக பரமபிதா வாசம் செய்யும் தூய வானம் மூன்

றாம் வானம் (மத். 23:22; யோவான் 14:1-3; வெளி. 4:1) எனவும் பொதுவாக நம்பப்படுகிறது.

மூன்று அல்லது ஏழுவானங்கள் வரை உள்ளதாக வேத பண்டிதர்கள் கருது கின்றனர்[42] எபேசியர் 4:10 காண்க. இயேசு கிறிஸ்து இந்த மூன்று அல்லது ஏழு வானங்களைக் கடந்து, மறுமை மேல் வீட்டின் அதித்தூய அகத்திற்குள் சென்றுள்ளார். இஸ்ரவேலரின் தலைமை ஆசாரியன் திரைச்சீலையைக்கடந்து, மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு ஆண்டுக்கு ஒரு முறை செல்லுவதற்கு ஒப்பாகவே இயேசு கிறிஸ்து வானங்களைத் தாண்டி விண் வீட்டிற்குச் சென்றுள்ளார் (லேவி. 16:15-17; அப். 1:9-11; எபி. 9;24). அவர் இன்று எல்லா வானங்களுக்கும் மேலாக, உன்னதத்திற்கு ஏறினவராயிருக்கிறார் (எபி. 7:26; எபே. 4:8).

### *மகா பிரதான ஆசாரியர் (தனிப்பெரும் தலைமை ஆசாரியர்)*

இஸ்ரவேல் மக்களுக்கு ஆசாரியர்களும், தலைமை ஆசாரியனும் இருந் தனர். ஆனால் கிறிஸ்துவோ மகாபிரதான ஆசாரியர் ஆவார். புதிய ஏற்பாட்டுக் காலத்திலுள்ள அனைத்து விசுவாசிகளைப் பொறுத்தமட்டிலும் அவர்கள் இராஜரீக ஆசாரியர்களாவர். ஆனாலும் சபை ஊழியர்களுக்கோ, மேய்ப்பர் களுக்கோ, போதகர்களுக்கோ உரிய சிறப்புப் பெயராக 'ஆசாரியர்' என்று எவ்விடத்திலும் கூறப்படவில்லை. 'குருக்கள்' போன்ற எந்த ஒரு சிறப்புப் பெயரையும், பட்டங்களையும் நாம் எடுத்துக்கொள்ளவும் கூடாது.

"நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல்", "நம்முடைய குறைபாடுகளைக் கண்டு இரக்கங்காட்ட இயலாதவர் அல்லர்" (TNBCLC மொழியாக்கம்).

இங்கே இரு காரியங்கள் சுட்டிக் காண்பிக்கப்படுகின்றன:

*ஒன்று* – இங்கே பலவீனம் என்று குறிப்பிடுவது பொதுவான மனிதனுடைய பாவ சுபாவத்தையன்று, "பலவீனம் என்பது, மனிதத் தன்மையின் களங்க மில்லா இயல்புகளின் வரம்பாகும். முக்கியமாக மனித வாழ்க்கையில் வரும் வறட்சிகள், சரீர மட்டுப்பாடுகள், மரண துக்கம் ஆகியவற்றை இது குறிக்கும்" – ராபர்ட் ஆன்டேர்சன்.

*மற்றொன்று* – ஆசாரியர் இரக்கங்காட்டக் கூடியவராக இருத்தல் மிக அவசியம். தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுக்கு இது எப்படிக்கூடும் என்பது ஒரு கேள்வியாயினும், அதற்குரிய ஏற்ற பதில் ஒன்றுண்டு. நமது உன்னதத் தலைமை ஆசாரியராக விளங்கும் இயேசு கிறிஸ்துவே நம்முடைய பலவீனங் களில் உண்மையாக இரக்கங்காட்டக் கூடியவர். எப்படியெனில் அவர் மெய்யான தேவனாயிருந்தும், மனித உருவில் மனிதருக்கு ஒப்பானவராக வந்திருந்ததினால், அவர் இரக்கங்காட்ட எவ்விதத்திலும் ஏற்றவராக இருக்கிறார். பாவம் நீங்கலாக, இயேசு கிறிஸ்து நம்மைப் போன்று எல்லாவற்றிலும் சோதிக்கப்பட்டவராயிற்றே!

*"நம்மைப் போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவர்"*

தீமையைச் செய்யத்தூண்டும் பாவத்தின் சுபாவமும் வல்லமையும் அவரிடத்தில் கிஞ்சித்தும் இல்லை. உலக மனுமக்களிடம் உள்ளாற்போன்று பாவத்துடன் சம்பந்தமான எவ்வித ஏவுதலும் இயேசு கிறிஸ்துவினிடம் இல்லை (யாக். 1:14). ஆயினும் சோதனைக்கு அவர் இலக்கானார். வனாந்தரத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, நாற்பது நாளளவும் அவர் பிசாசினால் சோதிக்கப் பட்டார் (மத். 4:1; லூக். 4:2). சிலுவையிலிருந்து 'இறங்கி வா' என்று யூதர்கள் கூச்சலிட்டதையும் அவர் பொருட்படுத்தவில்லை (மாற். 15:30). சோதனைகளின் தோற்றத்திலும், போக்கிலும், விளைவிலும் அவருக்குப் பாவத்துடன் எவ்விதத் தொடர்பும், தொடுதலும் எப்பொழுதும் இருந்ததில்லை. அவர் முற்றுமுடியப் பாவமில்லாதவராயிருந்தார் (2 கொரி. 5:21; 1 பேது. 2:22; 1 யோவான் 3:5). – டீன் ஆல்ஃபோர்டு.[43]

நமது தலைமை ஆசாரியராகிய தனிப்பெரும் இயேசு கிறிஸ்துவோ, சோதனைகளையெல்லாம் வென்று, அவைகள் அனைத்திற்கும் மேற்பட்டவராக விளங்கிச் சாதனையைச் சாதித்தவர் ஆவார்.

1) இயேசு கிறிஸ்துவின் இயல்பான (தனிச்சிறப்பு) நிலை (Stand).

பரலோகமே அவருடைய வீடு (4:14; 1:3; 9:24; 8:1; 10:12; 12:2). அவர் தாமே இறைவனுடைய வலப்புறத்தில் மாண்புடன் வீற்றிருக்கிறார் (மாற். 16:19).

2) இயேசு கிறிஸ்துவின் பதவி (அந்தஸ்து) நிலை (Status or rank).

இவரே "தனிப் பெரும் தலைமை ஆசாரியர்" (WBTC N.T).

இத்துடன் 14-ம் வசனத்தின் விளக்கத்தைக் காண்க.

*விளைவு* – "நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டு பண்ணிய பின்பு (1:3) அவர் வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்கு ஏறிப் போய் (4:14) மகத்துவ தேவ ஆசனத்தின் வலப்புறத்திலமர்ந்தார். தற்போது அவர் (8:1), நமக்காக வேண்டுதல் செய்கிறார்" (7:25).

*அறிவுரை "நமக்கிருக்கிறார்"*– இப்படிப்பட்ட ஒரு தனிப்பெரும் தலைமை ஆசாரியர் நமக்கிருக்கிறார் என்பதே நமது பெலனும், நிச்சயமும், நம்பிக்கையுமாகும்.

*"ஆதலால் நாம் இரக்கத்தைப் பெற. . . கிருபாசனத்தன்டையிலே சேரக் கடவோம். . ." (4:16).*

*"ஏற்ற காலத்தில்"* (தக்கவேளையில்) – "அவருடைய கிருபையில் தக்க

சமயத்தில் அனுகூலம் பெறுகிறோம்" (NEB). "தேவையுள்ள நேரத்தில் அனுகூலம் பெறக் கிருபை பெறுகிறோம்" (NTD). "நம்முடைய தேவைக்குரிய நேரத்தில் உதவி பெறும் கிருபையைப் பெறுகிறோம்" (NIV).

எந்நேரம் நமக்குக் கிருபை தேவையோ, அந்நேரம் அதனைப் பெற்றுக் கொள்ளுதல் ஆகும். ஏற்ற வேளையிலன்றி சற்றேனும் முன்னரோ, பின்னரோ அதை அடைவதில்லை. "இரக்கத்தைப் பெறவும், சகாயஞ் செய்யும் கிருபையை அடையவும்" (அருளைக் கண்டடையவும் - TNBCLC - மொழியாக்கம்).

நமது மீட்பரும், தனிப்பெரும் தலைமை ஆசாரியருமான இயேசு பெருமான், விண் வீட்டில் நமக்காக உள்ளார். அவரிடத்தில் கிருபையும், இரக்கமும், ஆறுதலுமுண்டு. ஆகவே வேத வசனங்களால் நம் குற்றங்கள் உணர்த்தப்பட்டு, ஆவிக்குரிய உதவிகள் பெற்று, "ஏற்ற வேளையில் கிருபாசனத்தண்டையில் நெருங்க நாம் ஏற்ற உரிமையைப் பெற்றிருக்கிறோம்".

***"தைரியமாய்"*** – நமக்கு என்ன சொல்ல வேண்டியவையுண்டோ, அவற்றையெல்லாம் சொல்லுவதற்குரிய உரிமையுடனும், தைரியத்துடனும், குறித்த வேளையில் துணிவோடு அவரிடம் செல்லக்கடவோம். அந்நேரம், "இயேசு கிறிஸ்து மூலமாய் இறைவனுக்கு அனுகூலமான மனப்பாங்கு பெறுவதற்கான கிருபையை" (முனைவர் டேவிட்சன்) நாம் அடைகிறோம்.

பழைய ஏற்பாட்டு முறைமையின்படி லேவிய மரபு வழி வந்த தலைமை ஆசாரியன், ஆண்டுக்கொருமுறை மட்டுமே அதிதூய இடத்திலிருக்கும் கிருபாசனத்தண்டையில் சேருகிறான். இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையுண்டு பலியானபொழுது, தேவாலயத்தின் திரைச்சீலை மேலிருந்து கீழாக இரண்டாகக் கிழித்ததினாலே, கிருபாசனத்தண்டையில் நுழைவதற்குரிய வரம்புகள், தடைகள் யாவும் இப்பொழுது நீக்கப்பட்டுவிட்டன என்பது உறுதியாகிறது. ஆகவே இன்று அனைத்து விசுவாசிகளும் தங்களுடைய தேவைகளுடன், ஏற்ற வேளையில் தைரியமாய், தாராளமாகக் கிருபாசனத்தண்டையிலே செல்லலாமே!

எபிரெயர் 4:14-16 பகுதிக்கு, மலையாள விளக்க உரையாசிரியர் ரி. நி. குரியன் அவர்கள் கொடுக்கும் குறிப்புகளாவன:

நமது தலைமை ஆசாரியரிடம் காணும் ஏழு சிறப்பு அம்சங்கள்.

அ). அவருடைய (1) மனிதத் தன்மை, (2) தேவத்தன்மை, (3) இரக்கம், (4) பாவமின்மை, (5) சேர்கிறவர், (6) சகாயஞ் செய்பவர், (7) கிருபை உள்ளவர்.

ஆ). அவரிடமிருந்து நாம் பெறக்கூடிய நான்கு காரியங்கள்.

(1) இரக்கம் (2) பரிவு (3) கிருபை (4) சகாயம்.

இ). நாம் பெறும் இரு அறிவுரைகள்:

(1) உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக் கடவோம். (2) கிருபாசனத் தண்டையிலே சேரக்கடவோம்.

## 2. தலைமை ஆசாரியருக்குரிய தகுதிகள் 5:1-4

*"அன்றியும் மனிதரில் தெரிந்துகொள்ளப்பட்ட எந்தப் பிரதான ஆசாரியனும் பாவங்களுக்காகக் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தும்படி மனிதருக்காகத் தேவ காரியங்களைப் பற்றி நியமிக்கப்படுகிறான். தானும் பல வீன முள்ளவனான படியினாலே, அறியாதவர்களுக்கும், நெறிதப்பிப் போனவர் களுக்கும் இரங்கத்தக்கவனாயிருக்கிறான். அதினிமித்தம் அவன் ஜனங்களு டைய பாவங்களுக்காகப் பலியிட வேண்டியதுபோல, தன்னுடைய பாவங்களுக் காகவும் பலியிட வேண்டியதாயிருக்கிறது. மேலும், ஆரோனைப்போலத் தேவனால் அழைக்கப்பட்டாலொழிய ஒருவனும் இந்தக் கனமான ஊழியத் துக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை." (5:1-4)*

### *1. தலைமை ஆசாரியன் இரங்கத்தக்கவனாயிருத்தல் அவசியம். (5:1-3)*

### *அ) இஸ்ரவேல் மக்களிடமிருந்து அவன் தேர்வு செய்யப் பட்டவன் 5:1*

யாத்திராகமம் 28:1 காண்க. மோசேயின் நாட்களுக்கு முன்னர், குடும்பத்தின் தலைவர்களே ஆசாரியர்களாயிருந்தனர். நோவா, யோபு, ஆபிரகாம், யாக்கோபு போன்றோர் அதற்கு உதாரணங்களாவர். மோசேயின் நாட்களில், ஆரோனிய ஆசாரியத்துவம் தேவனால் ஏற்படுத்தப்பட்டு நடைமுறையில் கொண்டு வரப்பட்டது. இந்த ஆசாரியர்கள் இஸ்ரவேலருக்கு பிரதிநிதிகளா யிருந்தனர். ஆசாரியன் எவருடைய பிரதிநிதியாக உள்ளானோ, அவர்களோடு அவனுக்கு ஒருமைப்பாடு இருத்தல் அவசியம். தேவனுடைய முன்னிலையில், மனிதனுக்காகப் பரிந்துரை ஆற்ற வேண்டிய ஆசாரியன், அம்மனிதரிடையி லிருந்தே தேர்ந்தெடுக்கப் பட்டவனாயிருத்தல் மிக அவசியம்.

### *ஆ) தேவ காரியங்களுக்கென நியமிக்கப்பட்டவன் (5:1)*

மக்களின் பாவங்களுக்காகப் பலிகளையும், காணிக்கைகளையும் செலுத்து வது ஆசாரியனின் செயலாகும். இரு விதமான பலிகள் உள்ளன. ஒன்று இரத் தத்துடன் கூடியது, பிறிதொன்று அவ்வாறில்லாத சாதாரணக் காணிக்கைகள் — படைப்புகள் (Offerings). இவற்றுள் சில மனப்பூர்வமான காணிக்கைகளு முண்டு. மேலும் அறியாமையினாலும், கைப்பிசகாயும் செய்யும் பாவங்களுக் காக ஏற்படுத்தப்பட்டவைகளே இப்பலிகள். மனப்பூர்வமாய்ப் பாவஞ் செய்கிற வர்களாயிருப்பின், அந்தப் பாவங்களுக்காகச் செலுத்தத்தக்க வேறொரு பலி எதுவும் இல்லை (10:26).

### இ) *"பலவீனமுள்ள மனிதன்"*

ஆசாரியன் ஒருவன் சராசரி மனிதனின் சோதனைகளையும், பலவீனங்களையும் அறிந்திருத்தல் அவசியம், ஆனாலும் இங்கு அவன் பாவ சுபாவமுள்ளவனாயிருக்கலாம் என்று குறிப்பிடப்படவில்லை. பாவத்தின் விளைவான பலவீனங்களையும், தாழ்வுகளையும், மட்டுள்ள நிலையையும் அறிந்தவனாக இருக்கவேண்டுமென்றே இங்குப் பொருள்கொள்ள வேண்டும்.

*"அறியாதவர்கள்"*– இந்த அறியாமை குற்றம் பயக்கும் ஒன்றாகும். "ஒருவன் நான் சட்டத்தை (பிரமாணத்தை) அறியேன்" என்று கூறுவானானால் அது அவனை அதன் தண்டனையினின்று தப்பித்துக்கொள்ள வழிவகுக்காது. இங்கே, தேவசித்தத்தையும், தேவ நெறியையும் அறியாதிருத்தல் என்றே பொருள் கொள்ள வேண்டும்.

***"தன்னுடைய பாவங்களுக்காகவும் பலியிட வேண்டியதாயிருக்கிறது." (5:3)***

இஸ்ரவேலின் தலைமை ஆசாரியன் பாவமுள்ள மனிதர்களிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதால், அவன் தனக்காகவும் பலி செலுத்த வேண்டியிருந்தது. இவ்வாறு அவன் ஆண்டுதோறும் மகாபாவநிவாரண நாளன்று தனக்காகப் பலியிடுவதை இது குறிக்கின்றது.

## *2. தலைமை ஆசாரியன் தேவ அழைப்பைப் பெற்றிருக்க வேண்டும் (5:4)*

"தான் பலவீனமுள்ளவன்" என்றெண்ணுகிற எவனும் இந்தப் பதவியைத் தாமாகவே விரும்பமாட்டான். ஆகவே ஆசாரியன் தேவனாலேயே அழைக்கப்பட்டிருக்க வேண்டும் (யாத். 28:1; லேவி. 8:2; எண். 16:50; 17:5; 18:1; சங். 105:26). ஆரோன் வழிவரும் ஆசாரியன் எவனும் மரணமடையக் கூடியவன். அதன் பின்னர், அவனுடைய வழி மரபினின்று வரும் வேறொருவன் தேவனால் அழைக்கப்படுகிறான் (எண். 20:25; 25:11).

கோராகு ஒரு லேவியன். அவன் ஆசாரியப் பணியை நாடினாலும், அவன் கர்த்தரால் அழைக்கப்பட்டவனல்லன். ஆகவே அவன் தண்டனைக்கு ஆளானான் (எண். 16).[44]

K. G. குரியன் அவர்கள் ஆசாரியர்களைப் பற்றி இங்கே குறிப்பிட்டுள்ள நால்வகைக் குறிப்புகளைக் காண்க:

1) அவர்கள் தேவனால் நியமனம் பெற்றவர்கள்.

2) அவர்கள் தேவ காரியங்களுக்கென நியமனம் பெற்றவர்கள்.

3) அவர்கள் மனிதர்களாதலின், மனிதர்களிடம் இரக்கங்காட்ட வேண்டும்.

4) பலிகளையும் காணிக்கைகளையும் அர்ப்பணஞ் செய்வதே அவர்கள் பணி.

## 3. இயேசு கிறிஸ்துவில் இந்தத் தகுதிகள் எவ்விதம் நிறைவேறின (5:5-10)

இயேசு கிறிஸ்துவை ஓர் ஆசாரியன் என்று யூதர்களால் ஏற்றுக்கொள்ள இயலாது. இதனை எவ்வகைக் கண்ணோட்டத்தில் காண்பினும் அவர்களால் அதை ஏற்றுக்கொள்ள முடிகிறதில்லை. எனவே எபிரெய நிருப ஆசிரியர் இயேசு கிறிஸ்துவினிடத்தில் உள்ள, ஆசாரியனுக்குரிய குணாதிசயங்களை ஒன்றன்பின் ஒன்றாக வலியுறுத்தி இங்கு எடுத்துரைத்துள்ளார். இதுவே இப் பகுதியின் சிறப்பு.

### *i) அழைப்பு - (5:5,6)*

*“அந்தப்படியே கிறிஸ்துவும் பிரதான ஆசாரியராகிறதற்குத் தம்மைத்தாமே உயர்த்தவில்லை, ‘நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன்’ என்று அவரோடே சொன்னவரே அவரை உயர்த்தினார். அப்படியே வேறொரு இடத்திலும் ‘நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர்’ என்று சொல்லியிருக்கிறார்.” (5:5,6)*

தெய்வீக அழைப்பால் ஆரோன் அழைக்கப்பட்ட விதமாகவே, பிதாவாகிய தேவன் தேவப்புதல்வராம் இயேசு கிறிஸ்துவையும் ஆசாரியனாக அழைத்துள்ளார். இயேசு கிறிஸ்து லேவி கோத்திரத்தானாக இல்லாதிருப்பினும், பிதாவானவர் இயேசுவை அழைத்து ஆசாரியனாக நியமித்தார். இயேசுவானவர் இப்பூமிக்குரிய பதவியைத் தாமாகவே எடுத்துக்கொள்ளவில்லை (1:5). அவரைப் பிதாவானவர் எப்படி அழைத்தார்? தீர்க்கதரிசனத்தால் அழைத்தார் என்பதே இதற்குரிய விடை. இயேசு கிறிஸ்து லேவியன் அல்லவே! எவ்வாறு அவரு டைய குமாரத்துவம் “நான் உம்மை ஜெநிப்பித்தேன்.” என்பது உறுதியாக இருந்ததோ, அவ்வாறே அவருடைய ஆசாரியத்துவ ஊழியமும் உறுதியுடையதாக இருந்தது. இது ஓர் அதிகாரமுள்ள அழைப்பாகும். இரண்டாம் சங்கீதத்தில் குமாரனை அங்கீகரித்தவர், 110-ம் சங்கீதத்தில் அவரைப் பிரதான ஆசாரியனாக ஏற்றுக்கொண்டார். அவரை உயர்த்தினார் என்பதற்குப் பதிலாக, “அவருக்கு அளித்தார்”என்றுள்ளது. எபி. 5:5-ல் ‘உயர்த்தினார்’ என்று மொழி பெயர்த்திருக்கும் கிரேக்கப் பதத்திற்கு ‘ஆகுதல்’ – ‘நிறைவேறுதல்’ என்று பொருள். லேவியமரபில் வராத கர்த்தராகிய இயேசுவை, தேவன் எந்த முறைமையின்படி அழைத்தார்? “நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார்.” (சங். 110:4). இது

எப்படிப்பட்ட ஆசாரியத்துவம்? இது இயேசு கிறிஸ்துவினுடைய ஆசாரியத்துவம்; இது இராஜரீக ஆசாரியத்துவமாம். மெல்கிசேதேக்கு இராஜாவாகவும் ஆசாரியருமாகவும் இருந்தவாறே, இயேசு கிறிஸ்துவின் ஆசாரியத்துவமும் இரு நிலைளில் உள்ளது.

### *ii) இப்பதவி இயேசு கிறிஸ்துவுக்கு எவ்வாறு கிடைத்தது?*

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, இந்தத்தலைமை ஆசாரியப் பதவியைத் தம்மில், தாமாகவே எடுத்துக்கொள்ளவில்லை. அவர் மனிதனாக வெளிப்பட்டு, மனிதன் என்ற நிலையில் அவர் தம்மையே வெறுமையாக்கின நிலை, அவர் அடைந்த தாழ்மை, அனுபவித்த துன்ப துயரங்கள், பாடுகள் இவையாவும் இப் பதவிக்கு அவரைத் தகுதியுடையவராக்கின.

***"அவர் மாம்சத்திலிருந்த நாட்களில்..." (5:7)***

*"அவர் மாம்சத்திலிருந்த நாட்களில் தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல் செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு . . ." (5:7).*

ஆதியிலே அவர் வார்த்தையாயிருந்தார். அந்த வார்த்தை தேவனாகவே இருந்தார் (யோவா. 1:1,2). அந்த வார்த்தை மனுவுரு எடுத்தார் (யோவான் 1:14). இவ்வாறு இறைவன் மனுவுருவிலே தோன்றினார் – வெளிப்பட்டார். (1 தீமோ. 3:16).

***"நாட்களில்"*** – அவர் பெத்தலகேம் என்னும் ஊரில் தோன்றியதிலிருந்து, கல்வாரி சிலுவை மரணம் வரையிலுள்ள அவரது வையக வாழ்நாட்கள் முழுவதையும் இது சுட்டிக்காட்டுகிறது.

***"தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி"*** – மரணத்தினின்று என்பதற்கு, 'மரணம்' என்ற ஒன்று சம்பவியாமல், அதாவது "மரிப்பதில் இருந்து" ("from death") என்றல்ல, இது "மரணத்தின் வாயிலாக" என்று பொருள்படும். "மரணத்தினின்று வெளியேறுதல்" ("Out of death") என்பதே இதன் சரியான பொருள் என்பது வேத வல்லுநர்களின் கருத்து. இது உயிர்த்தெழுதல் மூலம் சாத்தியமாகிறது. மார்டின், டார்பி, சாஃபிர், வெஸ்ட் போன்றவர்கள் இக்கருத்தை உடையோராவர்.

இயேசு கிறிஸ்து மரணத்தைக் கண்டு அஞ்சாது, அவ்வேளையையே அவர் வாஞ்சித்து அதற்காகக் காத்துக் கொண்டிருந்தார் (யோவான் 12:7). அவருடைய இவ்வேண்டுதலினால் அம்மரணம் தவிர்க்கப்படவுமில்லை, அப்பாத்திரம் நீக்கப் படவுமில்லை என்பதைக்காண்க.

தாம் "பாவமாக்கப்படுதலையும்" (2 கொரி. 5:21), பிதாவினால் கைவிடப்படுவதையும் அவர் கொடூரமென்றெண்ணி அஞ்சினார். "ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல. உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று மன்றாடினார் (லூக். 22:42). மரணத்தின் வாயிலாக அவர் விடுவிக்கப்பட்டார் எனவும், அவருடைய மன்றாட்டுக்குச் சரியான பதில் கிடைத்தது எனவும், தம்முடைய உயிர்த்தெழுதலின் வாயிலாக அவர் உயர்த்தப்பட்டார் எனவும் கொள்க.

### *"பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி வேண்டுதல் செய்து..." (5:7)*

இதனை வேத வல்லுநர்களில் ஒரு சாரார், "கெத்செமனே"யின் அனுபவம் எனவும், வேறொரு சாரார் சிலுவையின் அனுபவம் எனவும் விளக்குகின்றனர். இது மேசியாவைப் பற்றிய சங்கீதம் 22:24-ன் நிறைவேறுதலாக உள்ளது.[45] இது கெத்செமனேயின் அனுபவமென்றோ, அல்லது கல்வாரியின் அனுபவமென்றோ சொல்லுவதைவிட, இது இயேசு கிறிஸ்து மாம்சத்திலிருந்த நாட்களில் அவரனுபவித்த அனைத்துப் பாடுகளையும் மொத்தமாகக் குறிப்பிடும் வார்த்தைகளாக, இவ்வாசகத்தைப் பொருள் படுத்தலாம்.[46]

யூத சமய போதகர்களின் கூற்றுக்களை ஆதாரமாகக் கொண்டு, அறிஞர் வெஸ்ட்காட் யூதர்களின் ஜெபத்தை மூன்று நிலைகளில் பிரித்துக் காட்டுகிறார்.[47]

1) சத்தமின்றி அழுது ஜெபித்தல் (1 சாமு. 1:10-13).

2) அழுது ஜெபித்தல் (ஓசி. 12:4; எபி. 12:17).

3) உரத்த சத்தத்துடன் உள்ளத்திலிருப்பதை வெளிக்கொட்டுதல் (சக. 12:10-12).

"பெரிய பாவப்பரிகாரப் பண்டிகை நாளன்று, பாவ மன்னிப்புக்காக விண்ணப்பம் செய்கையில், தொலை தூரத்தில் கேட்கும் அளவிற்கு யூதர்கள் உரத்த சத்தமாக அழுது புலம்புவார்கள்" என்கிறார் வெஸ்ட்கோட்டு.

### *"வேண்டுதல் செய்து ... கேட்கப்பட்டு" (5:7)*

குமாரனுடைய வேண்டுதலுக்குப் பிதாவானவர் செவி சாய்த்தார். "எளியவரின் மன்றாட்டைப் புறக்கணிப்பதில்லை. தம்முகத்தைத் திருப்பிக் கொள்வதும் இல்லை. திருப்பிக் கொண்டதும் குறுகிய சற்று நேரத்திற்கு மட்டுமேயாகும். பிதா திருக்குமாரனுக்குச் செவிசாய்த்தார். அதன் விளைவாகவே திருக்குமாரனை உயிர்த்தெழப்பண்ணினார்."

*"அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டு,தாம் பூரணரானபின்பு, தமக்குக்கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணமாகி, மெல்கிசேதேக்கின் முறைமையின் படியான பிரதான ஆசாரியர் என்று தேவனாலே நாமம் தரிக்கப்பட்டார்."* (5:8-10)

***"அவர் குமாரனாயிருந்தும் பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு" (5:8)***

"இயேசு குமாரராயிருப்பினும்" ("Although Jesus is the Son" - *Beck*).

"அவர் தேவனுடைய குமாரராயிருப்பினும்" ("Although He was God's Son")

"அவர் தேவ குமாரராயிருந்தாலும்கூட" (WBTC - மொழியாக்கம்).

"கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தேவத்திரு புதல்வர்" என்பதே இந்நிருபத்தின் சூளுரையாகும் (1:2,5; 5:5; சங். 2:7; மத். 3:17; 17:5; லூக். 3:22; அப். 13:22).

*"குமாரனாயிருந்தும்"* – தேவ குமாரன் பாடுகளை அனுபவிக்கக் கூடாது. அனுபவிக்க வேண்டியதுமில்லை. ஆயினும் "பட்ட பாடுகளினாலே" – அவர் யாருக்காகப் பாடுகளைத் தாங்கினார்? நமக்காகத்தானல்லவோ! ஆம், நமக்காக வேதான்!.

கன்னிமரித் தாயின் கருவறையென்னும் பையூரில் உருவாகி, அங்கேயே தங்கி, மண்ணூரில் தோன்றி, குழந்தைக்குரிய பாடுகளைப்பட்டு வளர்ந்த பின்னர், ஏழ்மையின் பாடுகள் பலவற்றையும் நம் இயேசு ஆண்டவர் அனுபவித்தறிந்தார். பின்பு கெத்செமனேயில் அவர் மிகவும் வியாகுலமடைந்தார் (மத். 26:36-46; லூக். 22:39-46). அன்னாவின் முன்னிலையிலும் (யோ. 18:12-24), காய்பாவின் முன்னிலையிலும் (மத். 26:57. 68; லூக். 22:54, 64), ஏரோதின் முன்னிலையிலும் (லூக். 23:8-11), பிலாத்துவின் முன்னிலையிலும் (யோவான் 18:28-19:16) அவர் ஏளனப்படுத்தப்பட்டு, வையப்பட்டு விசாரிக்கப்பட்டார். எருசலேம் வீதிகளில் (லூக். 23:27-31; யோவான் 19:17) பற்பல வேதனைகளை யடைந்தார். அச்சமயங்களில் அவர் சேவகர்களினாலும் வழிப்போக்கர்களினாலும் ஏளனப்படுத்தப்பட்டு, வையப்பட்டு அவர் அனுபவித்த மனவேதனை. . . ஐயகோ! அளப்பதற்கரியதன்றோ? விவரிக்கவும் இயலுமோ? இவைகளுக்குப் பின்பு கொல்கொதா மேட்டினில், கடுஞ்சாபச் சிலுவை மரத்தில் தொங்கித் தாங்கொண்ணா சரீர வேதனைகளுக்கும், ஆவியின் அங்கலாய்ப்புகளுக்கும் அவர் ஆளாயினார் (மத். 27:29-33; லூக். 23:32-42; யோவான் 19:17). இவ்வாறு நான்கு நற்செய்தி நூல்களிலும் விவரித்துள்ள பலவகையான சரீர, மன, ஆவிக்குரிய பாடுகளின் பிழிச்சாற்றினையே, இங்கு எபிரெயர் 5:8-ல் சுருங்கக் கூறியிருப்பதைக் காண்கின்றோம்.

***"கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு"*** – இவ்வாறு அவர் பாடுகளைப் பட்டதினிமித்தம் இதுவரை அறிந்திராத ஒரு புதிய பாடத்தைக் கற்றுக் கொண்டார் என்பது பொருள் அல்ல. ஒரே மனிதனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளானதைப் போன்று, அநேகர் நீதிமான்களாகும் பொருட்டு ஒருவருடைய கீழ்ப்படிதல் தேவையாயிற்று என்பது இச்செயலில் எடுத்து உணர்த்தப்பட்டுள்ளது.

இயேசு கிறிஸ்து முழு நிறை பூரண உத்தம மனிதர் என்னும் நிலையில், அவர் பூரணக் கீழ்ப்படிதலுடன் வளர்த்தார் (ரோமர் 5:19; பிலி. 2:78). அவர் தெய்வீக நெறிக்கு முழுமனதுடன் முற்றுமாகக் கீழ்ப்படிந்தார் (சங். 40:8). இவ்வாறு அவர் உபத்திரவங்களினாலே பூரணப்பட்டார். பாடுகளைப் பற்றிக் கொண்டு சகித்தலும், ஏகமாகக் கீழ்ப்படிதலும் ஓர் ஆசாரியனுக்குத் தேவையான குணநலப் பண்புகளாகும்.

***"தாம் பூரணரான பின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி" (5:9)***

இயேசு இரட்சகர் தமது கீழ்ப்படிதலை மரணத்தின் மூலமாக வெளிப்படுத்தினார். தமது கீழ்ப்படிதலான இம்மரணத்தின் மூலம்,மனித இனத்திற்கு நித்திய இரட்சிப்பை உண்டாக்கி, அதை இலவசமாக அருளினார். இனி இயேசு கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிற (அவரை விசுவாசிக்கிற) அனைவரும், நித்திய இரட்சிப்பை அவர் மூலம் அடைய இது காரணமாயிற்று (2:9; ஏசா. 2:10).

*"மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான பிரதான ஆசாரியர் என்று தேவனாலே நாமம் தரிக்கப்பட்டார்" (5:10)* – ஏறத்தாழ கி. மு. 2500 ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்திருந்த மெல்கிசேதேக்கு, ஒரு மன்னராவார். அவர் மன்னரும் ஆசாரியருமாயிருந்தார் (ஆதி. 14:18). இறை இயேசுவுக்கு இவ்விரு பதவிகளுமுள்ளன. ஒரு லேவியர் வம்சவழியில் வந்தவரல்லாத இயேசு ஆசாரியனாயிருப்பது நியாயப்பிரமாணத்தின் இயல்பான ஒழுங்குக்கு முறனானது. ஆனால் இயேசு லேவிய முறைமையின்படி ஆசாரியராகாமல் மெல்கிசேதேக்கின் முறையின்படியே ஆசாரியரானார். ஆம், இவ்வாறு அவர் தனிப்பெரும் தலைமை ஆசாரியராக விளங்குகிறார்.

*(இயேசு கிறிஸ்துவின் தலைமை ஆசாரியத்துவத்தைப் பற்றி மேலுமறிய ஏழாம் அதிகாரத்தின் விளக்கவுரையைக் காண்க.)*

# மூன்றாம் எச்சரிக்கை

# 5:11- 6:12

எபிரெயர் 2:17-ல் இயேசு கிறிஸ்துவின் தலைமை ஆசாரியத்துவத்தைப் பற்றிச் சொல்லிய பின்பு, பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலரின் அவிசுவாசத்தினால் நேர்ந்த தண்டனையை இந்நூலாசிரியர் இங்கு நினைவூட்டுகிறார். மீண்டும், 4:14-ல் ஆசாரியத்துவத்தைப் பற்றிச் சொல்லியதைத் தொடர்ந்து வலுவாகக் கூறப்பட்டுள்ள ஓர் எச்சரிப்பைக் கண்டோம்.

## 1. எபிரெய விசுவாசக் கிறிஸ்துவர்களின் தாழ்வும் பின்னடைதலும் (5:11- 6:8)

### *i. அவர்களின் ஆன்மீக வளர்ச்சியின்மை (5:11-14)*

*"இந்த மெல்கிசேதேக்கைப்பற்றி நாம் விஸ்தாரமாய்ப் பேசலாம். நீங்கள் கேள்வியில் மந்தமுள்ளவர்களானபடியால் அதை விளங்கப்பண்ணுகிறது அரிதாயிருக்கும். காலத்தைப் பார்த்தால், போதகராயிருக்க வேண்டிய உங்களுக்குத் தேவனுடைய வாக்கியங்களின் மூலஉபதேசங்களை மறுபடியும் எடுத்துரைக்க வேண்டியதாயிருக்கிறது. நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத் தக்கவர்களானீர்கள். பாலுண்ணுகிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான். பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரணவயதுள்ளவர்களுக்கே தகும்." (5: 11-14)*

ஆழமான ஆன்மீகப் போதனைகளை ஏற்றுக் கொள்ளுமளவிற்கு எபிரெய விசுவாசிகள் வளர்ச்சி பெறவில்லை. ஒரு குறுகிய கால வரம்பிற்குள் முழு வளர்ச்சியடைய இயலாது என்பது உண்மைதான். ஆயினும் படிப்படியாக வளர்ச்சி அடையும் முறையே இயல்பானது. அவ்வளர்ச்சியே நமக்கும் அவசியம்.

***"கேள்வியில் மந்தமுள்ளவர்கள்"*** – மெல்கிசேதேக்கின் ஆசாரிய முறைமையைப் பற்றிப் பல கருத்துக்களைச் சொல்ல வேண்டியுள்ளது என்கிறார் இந்நூலாசிரியர். ஆனாலும் எபிரெயக் கிறிஸ்தவர்களின் ஆன்மீக வளர்ச்சியின்மையால், அவர்களிடம் அவைகளை எடுத்து விளக்குவது கூடாத காரியமாயிருக்கிறது. நாமோ ஆழமான சத்தியங்களைப் புரிந்து கொள்ளுவோமாக. நற்போதனைகளையும், துர்ப்போதனைகளையும் பகுத்தறியும் திறனில்லாத ஒரு நிலையே, ஆன்மீக மந்தநிலை ஆகும்.

ஒரு காரியத்தைப் பயின்று அதில் தேர்ச்சியடைவதில் மூன்று காரணங்களால் இளைப்பு நேரலாம்:

1) காரியத்தின் கடினத் தன்மை.

2) பயில்வோரின் மந்த நிலை.

3) பயிற்றுவோரின் திறன் இன்மை.

*"காலத்தைப் பார்த்தால்"* – அவர்கள் இரட்சிக்கப்பட்ட காலத்தைப் பார்க்குங்கால் (இரட்சிக்கப்பட்டு வெகுகாலமாகியுள்ளதால்), அவர்கள்தாமே இதற்குள்ளாகத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். ஆனால் இவர்களோ இது வரையிலும் ஆரம்பப்பாடங்களையே கற்றுக்கொள்ள வேண்டிய குழந்தை களாக, வளர்ச்சியற்று உள்ளனர். கிறிஸ்தவ வாழ்க்கை வளர்ச்சியற்றுத் தேங்கி யிருக்க வேண்டியதொன்றன்று. நாளொரு மேனியும்,பொழுதொரு வண்ணமு மாக வளர்ந்தோங்கிப் பெருக வேண்டியதொன்றாகும்.

*"மூல உபதேசங்கள்"* – இங்கே தேவ வாக்கியங்கள் என்பது பழைய ஏற்பாட்டையே குறிக்கும். மேசியாவைப் பற்றிப் பழைய ஏற்பாட்டில் குறிக்கப் பட்டிருப்பவை ஆரம்பப் பாடங்களாகும். அவையே போதனை சம்பந்த மான அடித்தளங்கள் அல்லது மூல உபதேசங்கள் ஆகும் (அப். 7:38; ரோமர் 3:2). பழைய ஏற்பாட்டில் வரும் மேசியாவைப் பற்றிய நிழலாட்டமான உருவக சித்திரங்கள் யாவும் மெய்ப்பொருளாகிய இயேசு கிறிஸ்துவில் நிறைவேறி விட்டன. அந்த ஆரம்பப் பாடங்களின் நிறைவேறுதல்களையுங்கூட இந்த எபிரெய விசுவாசிகள் அறிந்தனர் அல்லர்.

*"பலமான ஆகாரமும், பாலுணவும்"* – மூல உபதேசங்களைப் (ஆரம்பப் போதனைகளைப்) பாலெனவும், அவை ஆன்மீக முதிர்ச்சியடையாத குழந்தை களுக்குரியன எனவும் கூறலாம். விசுவாசிகள் ஆன்மீக முதிர்வும் பக்குவமும் அடைந்துத் திகழ வேண்டுமெனவும், இங்கு அறிவுறுத்தப்படுகின்றது. வளர்ந்து பக்குவம் அடைய வேண்டுமெனில் திடமான உணவே தேவை!

இயேசு கிறிஸ்துவினுடைய மெல்கிசேதேக்கின் முறைமையின் படியான ஆசாரியத்துவமும், இதனுடன்,பழைய ஏற்பாட்டின் நிழல் படங்களுக்கு மெய்ப் பொருளாயுள்ள புதிய ஏற்பாட்டுப் போதனைகளும் அடங்கிய ஆழமான சத்தியங்களே பலமான (திட) ஆன்மீக ஆகாரமாகும். குழந்தைகளுக்கு எளிய பாலுணவும் (1 கொரி. 3:1, 2; 1 பேது. 2:2), தேறினவர்களுக்குத் திட உணவுக்கு ஒப்பான ஞானமும் (1 கொரி. 2:6; 14:20; எபே. 4:14; கொலோ. 1:28; 4:12; யாக். 1:4; 1 யோவான் 2:12-14) எடுத்துக்கூட்டி வழங்கப்படல் வேண்டும்.

***"பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறான்" (5:13)***

பேதுரு,"புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல திருவசனமாகிய களங்க மில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள்" (1 பேதுரு 2:3) என்று கூறுவது குழந்தைகளுக்கு, பால் அருந்த இயற்கையாக எத்தனை ஆர்வ மிருக்குமோ, அவ்வண்ணமே திருவசனமென்னும் ஞானப்பாலை அருந்த அல்லது திருவசனத்தில் கற்றுத்தேற ஒவ்வொரு விசுவாசியும் ஆர்வங்காட்ட வேண்டும் என்ற அவ்வறிவுரையே இங்கும் வழங்கப்படுகின்றது.

கொரிந்தியர் நிருபத்தில் வரும் "கிறிஸ்துவுக்குள் குழந்தைகள்" என்பது மாம் சத்திற்குரிய விசுவாசிகளைக் குறித்துக் காட்டுவதாகும் (1 கொரி. 3:1). கொரிந்து சபையாரிடையே காண்பது வாழ்க்கை நெறியின் முறைகேடாகும், அல்லது சாட்சியின்மையாகும். ஆனால் எபிரெயக் கிறிஸ்தவ விசுவாசிகளிடையே காணப்படுவது போதனையறிவில் உள்ள குழந்தைப்பருவ நிலை அல்லது வளர்ச்சியற்ற ஒரு மந்த நிலை ஆகும்.

"நீதியைப் பற்றின போதனை வசனம்" ( NIV) "நீதியின் உபதேசம்" (Wey) "இறைவனுக்கு ஏற்ற வாழ்வு பற்றிய படிப்பினை" (TNBCLC)

பாலுணவும் திடவுணவும் அந்தந்தக் கால வளர்ச்சிக்கு ஏற்றவாறு அவசியம். குழந்தைப் பருவம் இன்பமானதும் மகிழ்ச்சிக்குரியதுந்தான்! ஆயினும் ஆண்டு தோறும் ஏற்ற வளர்ச்சியின்றிக் காலமெல்லாம் குழந்தையாகவே இருப்பது விரும் பத்தக்கதன்று. அது துக்கத்திற்குக் காரணமாக இருக்குமல்லவா? குழந்தை களுக்குக் கடுமையாகப் பயிலவோ, நீதியின் வசனத்தைப் புரிந்து கொள்ளவோ இயலாது. இங்கே திடஉணவே நீதியின் ஞானவசனம் அல்லது நீதியின் ஞானபோதனை என்று சொல்லப்பட்டுள்ளது.

*"பயிற்சியினால் . . . முயற்சி செய்தல் . . ."* – ஆவிக்குரிய வளர்ச்சிக்கு வேத வாக்கியங்களினாலான பயிற்சியும், அதனைச் செயலாற்றும் முயற்சியும் தேவை. குழந்தைகள் நன்மை தீமைகளைப் பகுத்தறிய அறியார்கள். ஆன்மீக வளர்ச்சிக்குகந்த திடஉணவு என்னவென்பதைப் பகுத்தறியும் தகுதியைக் காலப்போக்கில் வளர்ச்சி அடையும்போதே ஒருவன் பெற இயலும்.

## 2) பிரச்சினைக்கு வழிகாணல் 6:1-3

*"ஆகையால், கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களை நாம் விட்டு, செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல், தேவன் பேரில் வைக்கும் விசுவாசம், ஸ்நானங்களுக்கு அடுத்த உபதேசம், கைகளை வைக்கு தல், மரித்தோரின் உயிர்தெழுதல், நித்திய நியாயத்தீர்ப்பு என்பவைகளாகிய அஸ்திபாரத்தை மறுபடியும் போடாமல், பூரணராகும்படி கடந்து போவோமாக. தேவனுக்கு சித்தமானால் இப்படியே செய்வோம்." (6:1-3)*

ஆன்மீக வாழ்க்கையில் போதிய முதிர்ச்சியின்றிக் குழந்தைகளைப் போன்றுள்ள எபிரெயக் கிறிஸ்தவர்கள் இப்பொழுது தேர்ச்சி அடைதல் அவசியம். ஒரு கட்டடம் கட்டுகையில் ஒருதரம் மட்டுமே அஸ்திபாரம் போடப்படுகிறது. மீண்டும் மீண்டும் எவரும் அடித்தளம் இடார். அஸ்திபாரத்தைப் போட்டு அப்படியே ஓய்ந்து விட்டுவிடுவதுமில்லை. மேற்தளங்களையும் மேலே மேலே கட்டுவர். எபிரெயக் கிறிஸ்தவ விசுவாசிகள் மூல உபதேச வசனங்களாகிய அஸ்திபாரத்துடன் நின்றுவிடாது, ஆழமான போதனைகளைப் பற்றிய ஞானம் என்னும் மேற்தளத்தையும் காணும்படிச் சுட்டிக்காட்டி, அவர்கள் சத்தியத்தை அறிகிற அறிவை அடைதல் அவசியம் என்பதே இங்கு ஆசிரியர் எழுதும் அறிவுரை.

மூல உபதேசங்களாகிய ஆறு காரியங்களை இங்கே ஆசிரியர் வரையறுத்துள்ளார். அவற்றை வெஸ்ட்காட் மூன்று ஜோடிகளாகப் பிரித்துள்ளார்:

1) மனந்திரும்புதலும், விசுவாசமும்.

2) ஸ்நானங்களும், கைகளை வைக்குதலும்.

3) உயிர்த்தெழுதலும், நியாயத்தீர்ப்பும்.

முதலிரண்டும் கிறிஸ்தவ போதனையின் ஆரம்பப் பாடங்களாகும். மற்றவை, அவற்றைத் தொடர்ந்து வரவேண்டிய வெளியரங்கமான நெறிமுறைகளும், உறுதிப்படுத்தப்பட்ட விசுவாச நடை முறைமைகளுமாகும். அப்போஸ்தலர்களின் ஆரம்பக்காலப் போதனையுரைகளில் இந்த ஆறு காரியங்களும் அடங்கியிருந்தன என்பது அப்போஸ்தல நடபடி ஆகமத்தில் காணும் உண்மை (அப். 2:38; 4:2,33; 8:16,17).

### *1) "செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல்" (6:1)*

செத்த கிரியைகள் என்பது, உயிருட்டமில்லாத பயனற்ற செயல்களாகும் (6:1; 9:14). கிரியைகளில்லாத விசுவாசத்தைக் குறித்துக் கூறுகையில் யாக்கோபின் நிருபத்திலும் இதே வாசகத்தொடர் வருவதைக் கவனிக்க (யாக். 2:17-26). ஒரு விசுவாசிக்குப் பாவத்துடன் கூடிய தொடர்பு மூன்று நிலைகளில் குறிக்கப்பட்டுள்ளது:

1) பாவங்களில் செத்தவர்கள் (who were dead in sin) (எபே. 2:1-5).

2) பாவத்திற்குச் செத்தவர்கள் (dead to sin) (ரோமர் 6:2).

3) நீங்கள் செத்துவிட்டீர்கள் (பாவ சுபாவமானது இப்பொழுது செத்துப் போயாயிற்று) (கொலோ. 3:3).

இயேசு கிறிஸ்துவின் மூலமாக இரட்சிப்பின் கிரியைகள் நிறைவு பெற்றவுடன், பழைய ஏற்பாட்டுக் கிரியைகள் செத்த கிரியைகளாகிவிடுகின்றன. இன்று அவைகள் உயிரும் ஊக்கமுமின்றி நடைப்பிணமாக உள்ளன. இத்தகைய செயல்பாடுகளினின்று, விசுவாசிகள் திரும்பிவர வேண்டும்.

### *2) "தேவனுடைய பெயரில் வைக்கும் விசுவாசம்"*

யூதர்கள் ஒன்றான மெய்த்தேவனை முழுமனதுடன் விசுவாசித்துத் தொழுது கொள்ளுவோராவர். "ஆபிரகாம் கர்த்தரை விசுவாசித்தான்" (ஆதி. 15:6). புதிய ஏற்பாட்டிற்கு நாம் வருகையில் "தேவன் அனுப்பினவரை விசுவாசிப்பதே, தேவனுக்கேற்ற செயலாயிருக்கிறது" (யோவான் 6:29). இயேசு தேவ குமாரனாகிய கிறிஸ்து என்று விசுவாசித்து, நித்திய ஜீவனை அடையும் படிக்கே இவை எழுதப்பட்டிருக்கின்றன (யோவான் 20:31).

### *3) "ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம்" (6:2)*

இங்கே ஸ்நானங்கள் எனப்பன்மையில் சொல்லப்பட்டுள்ளதைக் குறித்துக் கொள்க. புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களுக்குரிய திருமுழுக்கைப் பற்றிக்குறிப்பிடுகையில் "ஒரே ஞானஸ்நானம்" என்றுள்ளது அல்லவா? (எபே. 4:5). திருமறையில் மூல மொழியினில், இங்கே பயன்படுத்தப்பட்டுள்ள சொல், கிறிஸ்தவத் திருமுழுக்கைக் குறிப்பிடும் வழக்கச் சொல்லாகிய, *"பப்திஸ்மா"* என்னும் கிரேக்கச் சொல்லைப் பயன்ப்டுத்தாமல், யூத மரபுபடியுள்ள பல்வேறு சடங்காச்சாரக் கழுவுதல்களைக் (Ceremonial washings) குறிக்கின்ற *"பப்திஸ்மோஸ்"* என்ற சொல் பன்மையில் பயன்படுத்தப்பட்டுள்ளது (யாத். 30:19-21; லேவி. 16:4, 24; எண். 8:7; மாற். 7:4; எபி. 9:10). ராபர்ட்சன், வைன், F. F. ப்ரூஸ்,லீஸ்ட் ஆகியோர் இக்கருத்தை உடையோராவர். மாறாக வெஸ்காட்,[48] டேவிட்சன், வின்செண்ட், ஆகியோர் இதனோடுகூட யோவான் கொடுத்து வந்த மனந்திரும்புதலுக்கேற்ற தண்ணீர் ஞானஸ்நானமும், கிறிஸ்தவ ஞானஸ்நானமும் இதனில் அடங்குமென்கின்ற கருத்துள்ளவராவர்.

கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு நன்கு அறிமுகமாயுள்ள ஞானஸ்நானங்களாவன:

1) யோவான் கொடுத்து வந்த *மனந்திரும்புதலுக்கேற்ற* ஞானஸ்நானம் (அப். 19:4).

2) ஆண்டவர் தாமே *கட்டளையிட்ட* கிறிஸ்தவ (தண்ணீர் முழுக்கு) ஞானஸ்நானம் (மத். 28:19).

3) பரிசுத்த ஆவியினாலான, ஒரே சரீரத்திற்குள்ளாக ஒருமுறை மட்டும் பெறும் ஞானஸ்நானம் (1 கொரி. 12:13) ஆகியவைகளே.

இவைகள் மூன்றுமே ஆரம்பப் பாடங்களாகிய அஸ்திபாரமே ஆகும்.

இந்நிருபத்தின் வாசகர்கள் யூத மதப் பின்னணியினின்று வந்துள்ள கிறிஸ்தவர்கள் மீண்டும் யூத மார்க்கத்திற்குத் திரும்பிச் செல்வதற்குரிய சூழலும், ஈர்ப்பும் உண்டாயிருப்பதாலும், அவர்கள் ஆன்மீக வளர்ச்சியில்லாதவர்கள் என்பதாலும், "ஸ்நானங்கள்" என்ற பன்மைச்சொல், பழைய ஏற்பாட்டு யூதமரபுக் கழுவுதல்களையும் (Ceremonial washings)[49], பின்னர் யோவான் ஸ்நானகனால் ஏற்பட்ட மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தையும், கிறிஸ்தவ ஞானஸ் நானத்தையும் சேர்த்துக் குறிப்பிடுகின்றது எனக்கருதலாம். இது அவர்களுடைய பழைய, புதிய நிலைகளை நிதானித்து அறிய உதவுமல்லவா?

### 4) "கைகளை வைக்குதல்"

பலிகளுக்குரிய மிருகங்களின்மேல், ஆசாரியனும் அர்ச்சகனும் (பலி செலுத்துபவனும்) கைகளை வைப்பார்கள் (லேவி. 3:2; 1:4). ஒருவரை, குறிப் பிட்ட ஒரு பணிக்கென நியமனம் செய்கையிலும் (எண். 27:8; உபா. 34:9), இஸ்ரவேலரின் மத்தியில் மூப்பர்களை நியமனம் செய்கையிலும், அவர்கள் மேல் கைகளை வைப்பது யூதருடைய வழக்கமாயிருந்தது. புதிய ஏற்பாட்டில் காணும் கைகளைவைக்குதலும், இந்த யூத மரபுகளைத் தழுவியதேயாகும். தூய ஆவியானவரின் நிறைவைப் பெறுகையிலும், கிருபையின் வரங்களைப் பெறுகையிலும் முதல் நூற்றாண்டினில், அப்போஸ்தலர்களிடையே கைகளை வைக்கும் பழக்கம் இருந்ததாகக் காண்கிறோம் (அப். 8:17; 19:6; 1 தீமோ. 4:14; அப். 13:3).

ஆயினும் புதிய ஏற்பாட்டில், "கைகளை வைக்குதல்" என்பதனை நிரந்தர மாக அனுசரிக்க வேண்டும் என்ற ஒரு போதனை, எங்கும் கொடுக்கப்பட வில்லை என்று முனைவர் அயன்சைடு சொல்லியுள்ளது உண்மையே.

### 5) "மரித்தோரின் உயிர்த்தெழுதல்"

இறந்தோரின் உயிர்த்தெழுதலை யூதர்கள் உறுதியாக நம்பி வந்தனர் (யோபு 19:26; ஏசா. 26:19; தானி. 12:2; சங். 90:3; மாற்கு 12:26; யோவான் 5:28). புதிய ஏற்பாட்டிலும் இப்பொருள் சற்றேனும் மங்காத நிலையில் பல இடங்களில், பல கோணங்களில் போதிக்கப்பட்டுள்ளது (ரோமர் 8:11; 1 கொரி. 15:22; 2 கொரி. 5:4; பிலி. 3:21; 1 தெச. 4:16; 1 யோவான் 3:2). இச்சத்தியம் நம்முடைய விசுவாச வாழ்க்கைக்கும், நம்பிக்கைக்கும் ஆணிவேராக உள்ளது.

### 6) "நித்திய நியாயத்தீர்ப்பு" (ஆதி. 18:25; ஏசா. 33:22)

இம்மைக்குரிய வாழ்க்கையில் நடைபெறும் தண்டனைத்தீர்ப்பு தற்காலத்

திற்குரியது. இது தகப்பன் தன் பிள்ளைக்குக் கொடுக்கும் சிட்சையென்றும் சொல்லலாம் (எபி. 12:5). இதனோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், அவபக்தர்கள் பெறும் இனிவரும் நியாயத்தீர்ப்பு நித்தியமானது. அதற்கு ஒரு முடிவு நிலை இராது. யூதர்கள் உயிர்த்தெழுதலையும், நியாயத்தீர்ப்பையும் ஒருமித்தே சிந்தித்து வந்தனர். அவை ஒன்றோடு ஒன்று இணைந்தவைகளாயிருக்கின்றன. மேற்கூறிய மூல உபதேசங்கள் (ஆரம்பப் போதனைகள்) ஆகிய ஆறு காரியங்களும் யூத மத மரபுடன் சம்பந்தப்பட்டவைகளாகும். இவற்றுள் ஒரு சில, கொஞ்சங் குறைய கிறிஸ்தவ விசுவாசிகளுக்கும் ஒரு வகையில் ஏற்புடையவைதாம். அவற்றுள் பழைய ஏற்பாட்டில் உள்ள சிலவற்றை நிழலாக எண்ணினால், புதிய ஏற்பாட்டினில் அவற்றின் மெய்ப்பொருளைத் தெளிவாகக்காண முடியும். ஆரம்பப் பாடங்கள், அஸ்திபார பாடங்கள் பாலுணவுக்கு ஒப்பானவை. ஆகவே முதிர்வடைவதற்கு திடஉணவு இன்றியமையாத்தேவையே. திட உணவு, பாலைப்போன்று எளிதில் சீரணமாகாது. ஆழமான போதனைகள் புரிந்துகொள்ளுவதற்குச் சற்று கடினமாகவே இருக்கும். அதற்குச் சற்று சுய முதிர்ச்சியும் அவசியம்.

*"அஸ்திபாரம்"* – கிறிஸ்துவைப் பற்றின அடிப்படையான உபதேச (ஆரம்பப்பாட) வசனங்களே அஸ்திபாரப் போதனைகளாம். அஸ்திபாரம் போடப்பட்டு முடிவு பெற்றுவிட்டது. ஆகவே இனி வேண்டியது அஸ்திபார மன்று. மேற்தளத்தின் கட்டுமானப் பணிகளேயாகும். இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்திற்கு முன்னுள்ள நிழல்கள், படங்கள் நீங்கிப்போய், இப் பொழுது மெய்ப்பொருள் அமுலுக்கு வந்துவிட்டது. ஆகவே இனி பழைய நிழலான காரியங்களைப் பற்றிப்பிடித்துக் கொண்டிருப்பதில் பயன் ஏதுமில்லை. மெய்ப் பொருளையே பற்றிக்கொள்ள வேண்டும்.

*"பூரணராகும்படி"* – இவ்வாசகம், 5:12-ல் சொல்லியுள்ள திட உணவினால், நாம் பெறும் நிறை வளர்ச்சியைக் காட்டுகிறது. 5:14-ஐ காண்க. மெல்கிசேதேக் கின் முறைமையின்படியான இயேசு கிறிஸ்துவின் ஆசாரியத்துவம், போன்ற வற்றில் உண்டாகும் பூரண அறிவை நாம் அடைய வேண்டும்.[50]

*"கடந்து போவோமாக"* – "முதிர் நிலைக்குச் செல்வோம்", "நாம் முன் னேறிப்போவோம்" என்றெல்லாம் இது பொருள்படும். இனியும் குழந்தைகளா யிராமல் வளர்ச்சியடைவோமாக என்பதே இங்குக் கூறப்படும் வலியுறுத்தலாகும்.

*"தேவ சித்தமனால் இப்படியே செய்வோம்" (6:3)* – இவ்வாறு ஆக்கியோன் யூதக் கிறிஸ்தவர்களை உற்சாகப்படுத்துகிறார். ஆழமான போதனைகளைக் கற்றுத்தேறி யூதக் கிறிஸ்தவர்கள் முதிர் நிலையை அடைய வேண்டும் என்பதே ஆசிரியரின் அயரா வாஞ்சை (6:4-6)!

### *iii)* பின்னடைதலின் விளைவால் நேரும் அபாயம் (6:4-6)

*''ஏனெனில் ஒருதரம் பிரகாசிக்கப்பட்டும், பரம ஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், தேவனுடைய நல்வார்த்தையையும், இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும், மறுதலித்துப் போனவர்கள் தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப் படுத்துகிறபடியால், மனந்திரும்புவதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம்'' (6:4-6).*

அறிந்துகொள்ளுவதற்குக் கடினமான பகுதிகளில், இம்மட்டும் விவாதங்களுக்கும், வேற்றுமையான கருத்துரைகளுக்கும் இலக்கான பிறிதொரு பகுதி திருமறையில் வேறொன்றில்லையெனலாம். “ஐயங்கள் எழுப்பக்கூடிய கடினமான வேதப் பகுதிகளை விளக்குகையில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய அதிக முக்கியமான ஒரு விதிமுறையுண்டு. அதாவது, திட்டமாகக் கூற இயலாதவாறு பொருள் மங்கிய நிலையிலிருக்கும் பகுதிகளைத் திட்டமும் தெளிவுமான வேத வாக்கியங்களைக் கொண்டு மட்டுமே விளங்கும்படி செய்தல் வேண்டும்” – K. G. குரியன்.

இப்பகுதி யாரைக்குறித்துச் சொல்லுகிறது? இரட்சிக்கப்பட்டவர்களையா? இரட்சிக்கப்படாதவர்களையா? இக்கேள்விகளுக்குரிய பதில்களே வேதப் பண்டிதர்களுக்கிடையே சர்ச்சையை மூட்டிவிடும் தீப்பொறியாகப்பறக்கின்றன. இரட்சிப்பு நஷ்டப்படாது (அதாவது இரட்சிக்கப்பட்டவர்கள் ஒரு போதும் தாங்கள் பெற்ற இரட்சிப்பை இழக்கமாட்டார்கள்) என்று போதிப்போரின் கருத்தின்படி, இவர்கள் இரட்சிக்கப்படாதோரும், மாய்மால பக்தர்களுமாவர். சுவிசேஷச் செய்தியைக்கேட்டு, சில காலம் கிறிஸ்துவை அறியக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருந்தாலும் அத்தகையோர் சரியான மெய்விசுவாசத்திற்குள் வராதவர்கள் என்று பொருள் கொள்ளுகிறார்கள்.

இரட்சிப்பு நஷ்டப்பட சாத்தியமுண்டு (அதாவது, பெற்ற இரட்சிப்பை இழந்துவிட முடியும்) என்று போதிப்போரின் கருத்தின்படி, இவர்கள் ஒருதரம் இரட்சிக்கப்பட்டவர்களேயாவர். ஆயினும் பிற்காலத்தில் பாவஞ் செய்ததால் இவர்கள் பெற்ற இரட்சிப்பு நஷ்டமாகி விட்டது, அல்லது தாங்கள் பெற்ற இரட்சிப்பை இழந்துவிட்டனர் என்று இவர்கள் பொருள் கொள்ளுகின்றனர்.

இப்பகுதியினைப் பற்றி, முனைவர் ஜோசப் பார்க்கர் என்பார் நகைச்சுவையோடு இவ்விதம் கூறியுள்ளார்: “இது, ஒரு போர்க்களமாகும். இவ்வேத வாக்கியமென்னும் போர்க்களத்தில், அநேக “கால்வீனிய” போதகர்கள் (இரட்சிப்பு இழந்துவிட *முடியாது* என்போர்) எதிர்த்தரப்பைச் சேர்ந்த திரளான “அர்மீனியப்” போதகர்களை, (இரட்சிப்பு இழந்துவிட *முடியும்* என்போர்) கொன்று குவித்துள்ளனர்.”

இவ்விரு கருத்துக்கள் ஒரு பக்கமிருக்கட்டும். இவ்வதிகாரத்தில் காணும் 9-ம் வசனத்தின் அடிப்படையில் இவர்கள் இரட்சிக்கப் பட்டவர்களென்று சிந்திக்கவும் ஏதுவுண்டு. ஆயினும் "நன்மையானவைகளும் இரட்சிப்புக் குரியவைகளுமான காரியங்கள்" என்று 9-ம் வசனத்தில் கூறியிருப்பது, இவர்கள் இரட்சிக்கப்படாதவர் என்பதையே தெளிவுபடுத்துகிறது.

திரு. K. G. குரியன் தமது எபிரெய நிருப விரிவுரையில் இவ்வாறு கூறியுள் ளார்: "இந்நிருபத்தின் ஆக்கியோன், வாசகர்கள், ஆகியோரின் பின்னணி, நிருபம் இயற்றியதின் நோக்கம், எழுதுவதற்குரிய சூழல், ஆகிய அனைத்தை யும் அலசிய பின்னரே இப்பகுதியைக் குறித்து தெளிவுபட நாம் ஒரு முடிவு கூற இயலும்". ஆம் இது எத்தனை உண்மை.

இப்பகுதியைக் குறித்துள்ள வேற்றுமையான கருத்துக்களை மனதிற் கொண்டு உலகப்புகழ்பெற்ற வேத வல்லுநராகிய ஸ்கொஃபீல்டு, தமது ஒத்து வாக்கிய விளக்க வேதாகமத்தின் கீழ்க்குறிப்பில் இவ்வண்ணம் கூறியுள்ளார்:

"6 முதல் 8 வரையுள்ள வாக்கியங்களில் கொடுக்கப்பட்டுள்ள எச்சரிப்பு களைப் பல முறைகளில் பலர் எடுத்துக் கொள்ளுகின்றனர். இதற்குக் கொடுக் கப்படும் முக்கியமான விளக்கங்களாவன:

(1) கிறிஸ்துவில் விசுவாசிக்கிறவர்களென்று பாவனை செய்து கொண்டிருக்கும் (ஆனால் உண்மையில் இரட்சிக்கப்படாத) சில யூதர் களைக் குறித்ததே இந்த எச்சரிப்பு. இவர்கள் இரட்சிப்பின் படிக்கட்டு வரை நெருங்கி வந்துள்ளனர் எனினும், கிறிஸ்துவின் உண்மையான இரட்சிப்பை அடைந்தார்கள் இல்லை.

(2) இது கற்பனையான ஓர் அனுபவத்தைக் கருத்திற்கொண்டு எழுது கின்ற அறிவுரையாகும். "மறுதலித்துப்போக நேரிடின்" (நெறி பிறழ்ந்து போய்விடின்) (6:5) அத்தகையோரை மனந்திரும்புவதற்கேதுவாய் மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம். அப்படியொரு வாய்ப்பு உண்டாகுமெனில், கிறிஸ்துவை மறுபடியும் சிலுவையில் அறைய நேரும். இது சம்பவிக்க முடியாததே(10:12,14)! அப்படியானால் அவ்வாறு மறுபடியும் சிலுவையில் அறைதல் என்பது சம்பவிக்க முடியாத ஒன்றே!

(3) இயேசு கிறிஸ்துவை மறுபடியும் சிலுவையில், அறைவோர் எனச் சொல்லுமளவிற்கு அவ்வளவு கொடிய பாவச் செயலுக்குட்பட்டவர்களுக் குரியதே இந்த எச்சரிப்பு. ஆகவே அவர்கள் தேவனுக்கு முன் அங்கீகரிக் கப்படாது தங்கள் வெகுமதிகளை இழந்து போவர்.

(4) இந்த எச்சரிப்பு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தோருக் குரியதாயிருந்தும், அவிசுவாசத்தினாலோ, பாவத்தினாலோ ஒரு வேளை பின் வாங்கிப் போய்விடுவாரோ என்னும் அபாயத்திலுள்ளனர். இதனால் அவர்கள் தங்களுடைய இரட்சிப்பை இழந்துபோகவும் ஏதுவாகும்" (N.S.R.B பக்கம் 1315).

யூத சமய முறைமையில் ஊறிப்போன சிலர் கிறிஸ்துவை விசுவாசித்து முன்னேறி வந்தும், சிறிது காலத்திற்குள் தாங்கள் அடைந்த உபத்திரவங்களி னிமித்தம் யூத மார்க்கத்திற்கே மறுபடியும் திரும்பிப் போய் விட்டனர். இவர்களைக் குறித்த, ஐவகைக்காரியங்களை நாமிங்கே காண்போம்:

*1) ஒரு தரம் பிரகாசிப்பிக்கப்பட்டும்* (enlightened) 2 கொரி. 4:4; எபி. 10:32 ஆகிய வேத வாக்கியங்களிலும், 'பிரகாசம்' என்ற இதே சொல் வருகின்றது. இது ஒரு கிறிஸ்தவ அனுபவத்தைக் காட்டுவதாகும்.

"ஒரு தரம் பிரகாசிப்பிக்கப்பட்டும்" என்பதற்கு, சில மொழியாக்கங்களில் "ஒரு தரம் ஞானஸ்நானம் பெற்றும்" என்றுள்ளது. ஜஸ்டின் மார்டின் என்பாரின் காலம் முதற்கொண்டு இக்கருத்து வழக்கிலுள்ளது. இரண்டாம் நூற்றாண்டின் மத்தியில் இக்கருத்தையே பெருவாரியான வேத போதக விளக்குநர்கள் ஏற்றுக் கொண்டிருந்தார் எனத் தெர்த்துல்லியன் எழுதியுள்ளார். எனினும் இக்கருத்து ஏற்புடையதன்று. ஏனெனில் இயேசு கிறிஸ்து என்ற மெய்யான ஒளியினால் மட்டுமே நாம் பிரகாசமடையமுடியும் (யோவான் 8:12; 2 கொரி. 4:3-6; எபி. 10:32; 2 பேது. 1:19).

*2) பரம ஈவை ருசி பார்த்தும்* – மனிதர்களால் அன்றி பரத்தினின்று கிடைக்கப்பெற்றதுமான அனைத்தும் 'பரம ஈவு' (வானகக் கொடை) ஆகும். இயேசு கிறிஸ்து, பரிசுத்தாவியானவர், மறுபடியும் பிறத்தல், பாவ மன்னிப்பு, முடிவில்லாத ஜீவன், நீதி, சமாதானம், விண்ணக மகிமை இவை அனைத்தும் பரம ஈவுகளாகவே உள்ளன.

'பிரகாசிக்கப்படுவதில்லை', "ஞானஸ்நானம் பெறுதல்" என்று கூறுவோர் "பரம ஈவை ருசி பார்த்தல்" என்பதைத் திருவிருந்து (நினைவு கூரும் பந்தி) என்கின்றனர். இங்கே ருசி பார்த்ததாக (சுவைத்ததாக) கூறியிருப்பினும், புசித்த தாகச் சொல்லவில்லையே! இரட்சிப்பு, மற்றும் பரிசுத்த ஆவியாகிய பரம ஈவு என இதைக்கூறலாம். மேலோட்டமாகப் பார்க்கையில் இவர்களும் இரட்சிக்கப் பட்டவர்களாகத் தென்படலாம். ஆனாலும் அவர்கள் மெய்யாக இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெற்றவர்களும், மறுபடியும் பிறந்த அனுபவத்தை பெற்றவரும் அல்லர்.

*3) பரிசுத்த ஆவியை பெற்றும்* – இங்குள்ள "பெற்றும்" என்னுஞ் சொல்லுக்கு கிரேக்க மொழியில் *"மெற்றக்கோஸ்"*(Metachos) என்பதாகும். இச்சொல் புதிய ஏற்பாட்டில் "தோழர்" (எபி. 1:9), "பங்குள்ளவர்கள்" (எபி. 3:14) "கூட்டாளிகள்" (லூக். 5:7), என்றெல்லாம் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஆகவே, 'பரிசுத்த ஆவியைப் பெற்றும்' என்பதினின்று, ஆவியானவரின் செயல்கள் – உதவிகள் – ஓரளவு நடந்தேறியிருந்தும், ஆவியானவர் அவர்களில் நிலையாக வாசமாயுள்ளார் என்று சொல்லவில்லை. ஆவியானவரால் இரட்சிக்கப்படுவதற்கேற்ற செயல்கள் சில நடைபெற்றுள்ளன. அப்படி ஆவியானவரின் செயல்பாடுகள் துவங்கியிருப்பினும், மறுபிறப்படைந்து இரட்சிக்கப்பட்டு ஆவியானவரின் முத்திரை பெறுதலோ, ஆவியானவர் வந்து அவர்களுள்தங்கி வாசம்செய்யவோ இல்லை எனக்கொள்ளலாம்.

ஆகவே அத்தகையவர்கள் ஆன்ம ஈடேற்றம் பெற்றவர்கள் – இரட்சிக்கப்பட்டவர்கள் – என்றெண்ணுவதற்கு இம்மியளவும் இடமில்லை. தேவ ஆவி பிலேயாமின் மேல் வந்தது (எண். 24:2). ஆனால் அவன் இரட்சிக்கப் பட்டவனல்லன். கர்த்தர் பன்னிருவரையும் அழைத்து இருவர் இருவராக அனுப்புகையில், யூதாசும் அவருள் ஒருவனாயிருந்தான் (மாற். 6:7-13); ஆனால் அவன் பிசாசும், (யோவான் 6:70), திருடனும் (யோவான் 12:6), சுத்தமில்லாதவனுமாக (யோவான் 13:10) இருந்தான். கர்த்தர் கோரேசின் ஆவியை ஏவினார் (எஸ்றா 1:4,5). அவர்களெல்லாரும் இரட்சிக்கப்பட்டவர்களல்லர். சிலர் பாவத்தைக் குறித்து உணர்த்தப்பட்டிருக்கலாம். ஆனாலும் அது இரட்சிப்பாகாது. ஏரோது (மாற்கு 6:20), பேலிக்ஸ் (அப். 24:25), ஆகியோர் அத்தகையோராவர். இச்சத்தியத்தை நாம் நன்கு உணர வேண்டும்.

*4) தேவனின் நல்வார்த்தை* – அவர்கள் உயிரூட்டும் வார்த்தையைக் கேட்டனர். அதில் மகிழ்ந்தனர்,எனினும் அதற்குக் கீழ்ப்படிந்து மறுபடியும் பிறந்தவர்கள் அல்லர். தேவ வசனமாகிய வித்து (மாற்கு 4:14) நிலத்தில் விதைக்கப்பட்டிருந்தாலும், வழியருகே விழுந்த விதையும், பாறை நிலத்தில் விழுந்த விதையும், முள்ளுள்ள இடத்தில் விழுந்த விதையும் எவ்வாறு பலன் கொடாது போயிற்றோ (மாற்கு 4:14-20), அவ்வாறே இங்கும் நாம் பொருள் கொள்ள வேண்டும்.

*5) இனிவரும் உலகத்தின் பெலன்களை ருசி பார்த்தும்* – யூத மக்கள் எதிர்நோக்கும் உலகம் மேசியாவின் நல் அரசாட்சியேயாகும். பெலன்கள் (ஆற்றல்கள்) கிரேக்க பதம் *'டூனாமிஸ்'* என்பதற்கு 'பலத்த செயல்கள்', பல அற்புதங்கள் (மத். 11:21) என்று பொருள். இக்கூற்று அற்புத அடையாளங்களைக் கண்டு உலகியற் பெலன்களையும், நன்மைகளையும் நாடும் கிறிஸ்தவத்தைத் தழுவிய கூட்டத்தாரைக் குறிப்பவையாகலாம்.

யூதக் கிறிஸ்தவர்களாக இருந்த இந்நிருபத்தின் வாசகர்கள் ஆன்மீக வளர்ச்சியின்றி, ஆண்டுகள் பல கடந்துபோன சூழ்நிலையிலும், விசுவாச வாழ்க்கையில் இளஞ்சிறார்களைப் போலவே இருந்தனர். ஆகையால் அவர்கள் மெய்யான ஆன்மீக அனுபவம் பெற்றுக் கொண்ட நிலையில் முதிர்ச்சியடைய வேண்டுமென அறிவுறுத்தப்படுவதுடன், நூலாசிரியர் ஓர் எச்சரிக்கையையும் இங்கு விடுக்கிறார் என நாம் இப்பகுதியைப் புரிந்துகொள்ள வேண்டும்.

இதுவரை இப்பகுதியை விரிவாக நாம் கண்ணோக்கியதில், இக்கூட்டத் தினரை, மீட்கப்பட்டவர்களென்றோ, நித்திய ஜீவனைப் பெற்றுக்கொண்டவர் களென்றோ கருத இடமில்லை. யூத சமயத்தினின்று வந்த இவர்கள் பரிசுத்த ஆவியானவரால் கொஞ்சங்குறையப் பாவத்தைக் குறித்து உணர்த்தப்பட்ட வர்கள். இவர்கள் வெளிப்பார்வைக்கு விசுவாசிகளைப் போலவே தென்பட்ட வர்கள். இதுவே நாம் கண்ட தெளிவு. அவர்கள் அனைத்துக் காரியங்களிலும், மெய்யான விசுவாசிகளுடன் ஈடுபாடு கொண்டிருந்தாலுங்கூட, ஆத்துமாவில் பரிசுத்த ஆவியினால் உண்மையாக மறுபடியும் பிறந்தவர்கள் அல்லர்.

*"மறுதலித்துப்போனால்" ('நெறி தவறி வீழ்ந்து விடின்')* – "பின் மாறிப் போனால்" (மலையாளம்) இவர்கள் மெய்யான விசுவாசிகள் அல்லர். ஆகவே அவர்கள் பின்வாங்கிப் போனால், இவர்களை விசுவாசத் துரோகிகள் என்று சொல்லுவதற்கில்லை. ஏனெனில் இவர்கள் முன்னதாக விசுவாச அனுபவத் திற்கு வந்தவர்கள் அல்லவே. ஆனால் இத்தகையாரோடுகூட இருந்த ஒரு சில விசுவாசிகள் ஆன்மீக வளர்ச்சியின்றி, சிறுபிள்ளைகளைப் போலிருந்து, அவர்களும் யூத மதத்திற்கே திரும்பிச் செல்லும் அபாயமுள்ள ஒரு நிலையில் இருந்தனர். அத்தகையோர் விசுவாசத்தை மறுதலித்து, பின்மாறிப் போனால் ஏற்படும் அபாய விளைவை முன்கண்டு நூலாசிரியர் இதைக் கடும் எச்சரிப்பாக எழுதுகிறார் (10:26-31).

### *"தேவ குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து"*

தேவப் புதல்வர் இயேசு பெருமான், தமக்குரியவர்களாகிய யூதர்களுக் காகவே வந்தார். அவருக்குரியவர்களாகிய அந்த யூதர்கள் அவரைப் பிடித்து, சிறுமைப்படுத்தி, சிலுவையிலறையும்படி ஒப்புக்கொடுத்தனர் (அப். 2:23). அது அவர்கள் செய்த பெருந் தீவினையாகும். அவ்வாறே இயேசு கிறிஸ்துவை மறுதலிக்கின்ற யூதக் கிறிஸ்தவர்களும் அதற்கொத்த பாதகத்தையே செய் கின்றனர். அத்தகையோர் கல்வாரி மலையில் ஒரே தரம் நடந்தேறிய இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தை மாபெரும் விலைப்பொருட்டாக எண்ணா தோர் ஆவர்.

***"மறுபடியும்"***

அன்று இயேசு கிறிஸ்துவைக் கல்வாரி சிலுவையில் அறைந்ததற்கு, இத்தகைய கூட்டத்தார் இன்றும் சம்மதம் தெரிவித்து, ஆமாம் போடுவோராக உள்ளனர். ஒத்துத்தாளம் போடும் அந்நிலையில், இவர்களும் இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறைபவரேயாவர். இன்னும் கூடுதலாகச் சொல்லுவோமானால் "நானும் இயேசுவைக் குற்ற விசாரணை செய்தேன், அவன் மெய்யான மேசியாவல்லன். அவனை ஒரு எத்தன் எனவே நான் கண்டேன். அவன் மரணத்திற்குப் பாத்திரவான்." என்று சொல்லுவதற்கு ஒப்பான ஒரு செயலாக இது அமைந்துள்ளது.

***"அவமானப்படுத்துகிறபடியால்"***

இவர்கள் இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தை விட்டு விலகி, இயேசு கிறிஸ்துவின் பலி மரணத்தையே மறுக்கின்றனர். இயேசு கிறிஸ்துவின் கல்வாரி மரணமே வேண்டியதில்லை – லேவிய முறைமையின்படியான பழைய ஏற்பாட்டுப் பலிகளே போதுமானவை என்று கூறி மறுதலிப்போரின் நிலைக்கு இவர்கள் ஒத்தவர்கள். இவ்வாறு இவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஏளனம் செய்கின்றனர்.

***"மனந்திரும்புவதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது"***

இத்தகையோர், விசுவாசத்தை மறுதலிப்பவர்களும், இயேசு கிறிஸ்துவை மறுபடியும் சிலுவையில் அறைபவர்களும், அவரை அவமானப்படுத்துகிறவர்களுமாக உள்ளனர். ஆனால், ஒருவன் எத்தகையக் கொடிய பாதகனாயிருப்பினும், அவன் மனங்கசந்து, தன் பாவத்தை அறிக்கையிட்டால், கர்த்தர் அவனுடைய பாவத்தை மன்னிக்க இரக்கங்கொண்டவராயிருக்கிறார். அந்தப் பாவங்கள் செந்தூரம் போல சிவந்திருந்தாலும், உறைந்த பனியைப் போல வெண்மையாகும் (ஏசாயா 1:18). இயேசு கிறிஸ்துவின் இரத்தம் எல்லாருடைய அனைத்துப் பாவங்களையும் நீக்கிச் சுத்திகரிக்கும் (1 யோவான் 1:7). ஒருவன் பாவஞ் செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார் (1 யோவான் 2:1). கருணைக்குக் கரையில்லாக் கடலாகிய கடவுள், நம்மைக் கிறிஸ்துவினிமித்தம் மன்னித்தருளப் போதுமானவரும், மன்னிக்கிறவருமாயிருக்கிறார்.

***"கூடாத காரியம்"***

எத்தகைய பெரும் பாவியாக இருந்தாலுஞ்சரி, மனங்கசந்து பாவ அறிக்கையிட்டு, விசுவாசத்தோடு இயேசு கிறிஸ்துவின் சிலுவையண்டையில் வருகிறவனுடைய பாவங்களை மன்னிக்கக் கர்த்தரால் கூடும். ஆனாலும், மேலே

நாம் கண்ட அத்தகைய ஒருவன் கர்த்தரண்டையில் வருவதற்குரிய சாத்தியக்கூறு ஏதும் இல்லை என்று இப்பகுதிக்குப் பொருள் கொள்ள வேண்டும்.

## *இயற்கை தரும் ஒரு படிப்பினை (6:7,8)*

*"எப்படியெனில், தன்மேல் அடிக்கடி பெய்கிற மழையைக் குடித்து, தன்னிடத்தில் பயிரிடுகிறவர்களுக்கேற்ற பயிரை முளைப்பிக்கும் நிலமானது, தேவனால் ஆசீர்வாதம் பெறும். முள்செடிகளையும், முள் பூண்டுகளையும் முளைப்பிக்கிற நிலமோ, தகாததாயும், சபிக்கப்படுகிறதற்கேற்றதாயுமிருக்கிறது. சுட்டெரிக்கப் படுவதே அதின் முடிவு" (6:7,8).*

இங்கே, ஒரு குறிப்பிட்ட காரியத்தை வலியுறுத்த இருவகை நிலங்களை உருவகப்படுத்தி, நூலாசிரியர் விளக்கியுள்ளார். ஒன்று, பயிரை முளைப்பிக்கிற நிலம். மற்றொன்று முள் செடிகளையும், முள் பூண்டுகளையும் முளைப்பிக்கிற நிலம். இவ்விருவகை நிலங்களிலும் மழை பொழிகிறது. பயிரிடும் நிலத்திலிருந்து மேலான விளைச்சல் கிடைக்கின்றது. முட்செடிகளை முளைப்பிக்கும் நிலத்தினின்று முட்களும், முட்புதர்களும் முளைத்து எழுகின்றன. 6:4, 5 வசனங்களில் கூறியுள்ளாற்போன்று, இந்த இரண்டாவது தரப்பினர் ஒளியைப் பெற்றும், இறைஈவைச் சுவைத்தும், பரிசுத்த ஆவியில் பங்கு பெற்று இருந்தும், கிறிஸ்துவை மறுபடியும் சிலுவையிலறைந்து அவரை அவமானப்படுத்துகின்றனர்.

அந்தப்படியே ஆகாத உவர் நிலம் அருவருப்பானவற்றையும், வேண்டாதவற்றையும் முளைப்பிக்கின்றது. அத்தகைய நிலமுங்கூட மேல்நிலைத் தோற்றத்தில் அழகிய நிலமாகவே தான் காட்சியளிக்கிறது. இதைப் போலவே, மனந்திரும்பாத ஒரு பாவியும், மனிதக் கண்ணோட்டத்தில் உத்தமனாகத் தென்படலாம். பார்வைக்கு மெய்விசுவாசியைப் போன்றே அவனும் காணப்படுகிறான். ஆயினும் அவனிடத்தினின்று மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளை நாம் எதிர் நோக்க இயலாது. முட்செடிகளையும் முட்புதர்களையும் முளைப்பிக்கிற பயனற்ற நிலம் முட்களையையே பெற்றெடுப்பதைப் போன்று,இரட்சிக்கப் படாதவனும் ஆண்டவர் வெறுக்கும் கசப்புள்ள நஞ்சுக் கனிகளையே கொடுக்கிறான். ஆண்டவரை நேசியாதவன் சபிக்கப்பட்டவன் (1 கொரி. 16:22).

## *"சுட்டெரிக்கப்படுவதே அதின் முடிவு" (6:8)*

"அடிக்கடி கடிந்து கொள்ளப்பட்டும், தன் பிடரியைக் கடினப்படுத்துகிறவன் சகாயமின்றி சடிதியிலே நாசமடைவான்" (நீதி. 29:1). "மனந்திரும்பாமற் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவார்கள்" (லூக்.13:3, 5). "நல்ல கனி கொடாத மரமெல்லாம், வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்" (மத். 3:10); "சுட்டெரிக்கப்படுவதே அதின் முடிவு."

## *எதிர் நோக்குதலும் ஊக்குவித்தலும் (6:9-12)*

*''பிரியமானவர்களே, நாங்கள் இப்படிச் சொன்னாலும் நன்மையானவைகளும், இரட்சிப்புக்குரியவைகளுமான காரியங்கள் உங்களிடத்தில் உண்டாயிருக்கிற தென்று, நம்பியிருக்கிறோம். ஏனென்றால், உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ் செய்ததினாலும், செய்து வருகிறதினாலும், தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்து விடுகிறதற்குத் தேவன் அநீதியுள்ளவரல்லவே. நீங்கள் அசதியாயிராமல் வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும், சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களைப் பின்பற்றுகிறவர்களாயிருந்து, உங்களுக்கு நம்பிக்கை யின் பூரணநிச்சயமுண்டாகும்படி நீங்கள் யாவரும் முடிவுபரியந்தம் அப்படியே ஜாக்கிரதையைக்காண்பிக்க வேண்டுமென்று ஆசையாயிருக்கிறோம்'' (6:9-12).*

### *"பிரியமானவர்களே", "அன்பானவர்கள்", "பிரியமான நண்பர்களே"*

இந்நிருபத்தில் மட்டுமே, இப்படிப்பட்ட வார்த்தைகளைக் கொண்டு அழைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அன்பை வெளிப்படுத்த யோவான் அப்போஸ்தலன் பன்முறை தன் நிருபத்தில் பிரியமானவர்களே என்று அழைத்துள்ளான். இது யூத விசுவாசிகள் மேல் இந்நூலாசிரியர் கொண்டுள்ள பாசத்தை எடுத்துக் காட்டுகிறது. ஆண்டவரும் தம் மக்களிடம் இத்தகைய பாசத்தையே எப்பொழுதும் காண்பிக்கிறார் என்று நாம் அறிவோமாக.

### *"நன்மையானவைகளும், இரட்சிப்புக்குரியவைகளுமான காரியங்கள்"*

இதற்கு முன்னுள்ள வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள கூட்டத்தார் இரட்சிக்கப்பட்டவர் அல்லர் என்பதற்கு இவ்வசனம் ஓர் உறுதியான திட சாட்சியாகும். வாசகர்களின் வளர்ச்சி குன்றிய மந்தமான நிலையினைக் கண்டு நூலாசிரியர் இவ்வாறு எச்சரிக்கிறார். இங்கே "நன்மையானவைகள்" என் றிருப்பது, 6:2-ல் வரும் "பூரணமான நிலையைக்" (ஆன்மீக முதிர்ச்சியைக்) காட்டுகிறது. 6:10 -12 வசனங்கள் எபிரெயக் கிறிஸ்தவ விசுவாசிகளைப் பற்றிய காரியமாகும். அவர்களுடைய வாழ்க்கையில் காணக்கூடிய மேன்மையான பல காரியங்கள் இருந்தன என்பது உண்மையே.

### *"பரிசுத்தவான்களுக்குக் காண்பித்த அன்புள்ள பிரயாசம்"*

எபிரெய விசுவாசிகள் ஆண்டவர் இயேசுவை நேசித்ததுமன்றி, அவர் தம் அடியாரை உள்ளமுடன் உபசரிப்பவர்களுமாயிருந்தனர் (எபி. 10:32-34; 1 தெச. 1:3-10; 1 யோவான் 4:19-21; வெளி. 2:2).

*"அநீதியுள்ளவரல்லவே"* – "கர்த்தர் மகா நீதிபரர்" (யோபு 34:17). அவரிடத்தில் அநீதியில்லை (சங். 92:14). கர்த்தர் நீதியுள்ளவர் (சங். 11:7). அவர் நீதியைச் சரிகட்டுகிறவர் (நாகூம் 1:2). அவனவனுடைய கிரியைகளின்படி, அவனவனுக்கு வெகுமதிகளை அவர் அளிக்கிறவர் (வெளி. 22:12). "அவருடைய திருப்பெயரில் ஒரு கிண்ணம் தண்ணீரைக் கொடுப்பவனுக்கும் அவர் கைம்மாறு கொடாமலிரார்." (மத். 10:42) ஆகவே அவர் அநீதியுள்ளவரல்லவே!

*"அசதியாயிராமல்"* – அசதியென்பது சோம்பலும், முயற்சியின்மையும் ஆகும். வளர்ச்சி குன்றிப்போவதற்கு அவிசுவாசமும், அசதியும் காரணங்களாக அமையும். சோம்பேறி குளிருகிறதென்று உழாமலிருப்பான் (நீதி. 20:4). ஆகையினால் அசதியை ஆரம்பத்திலேயே அப்புறப்படுத்தி விட்டு, அனலாக இருத்தல் அவசியமும் தேவையுமாமே!

***"வாக்குத்தத்தமான ஆசிர்வதங்களைச் சுதந்தரித்துக் கொள்ளுதல்"***

வாக்களிக்கப்பட்டவற்றை நாம் நம்பிக்கையுடன் உரிமைப்படுத்திக் கொள்ள வேண்டும். அது நிறைவுபெறச் சற்று காலம் கடந்தாலும் பொறுமையோடு காத்திருத்தல் மிக அவசியம்.

*"நம்பிக்கையின் பூரண நிச்சயம்"* – துன்புறுகையில் நம்பிக்கை மங்கிப் போகக்கூடும். எனவே துவக்கத்தில் காட்டின உறுதியை விட்டு விலகாமல், இறுதிவரை அவற்றிலே ஆர்வங்காட்டி அசையாதிருப்பதில் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். உறுதி குன்றாநிலை, ஒருவனுடைய ஆன்மீக வளர்ச்சி நிலையை வெளிப்படுத்துகிறது. அவ்வாறு உறுதியாக நிலைத்திராதவர்களை நூலாசிரியர் கடிந்துரைக்கின்றார்.

***(மூன்றாவது எச்சரிக்கை இத்துடன் முற்றுப் பெறுகிறது***

## 4. வாக்குத்தத்தங்களில் உள்ள பற்றுறுதி (6:13-20)

### *ஆபிரகாமின் எடுத்துக்காட்டு (6:13-15)*

*"ஆபிரகாமுக்கு தேவன் வாக்குத்தத்தம் பண்ணினபோது ஆணையிடும்படி தம்மிலும் பெரியவர் ஒருவருமில்லாதபடியினாலே தமது பேரில்தானே ஆணையிட்டு; நிச்சயமாக நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன்னைப் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றார். அந்தப்படியே அவன் பொறுமையாய்க் காத்திருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெற்றான்" (6:13-15).*

பழைய ஏற்பாட்டு விசுவாச வீரரும், இஸ்ரவேலருக்குத் தகப்பனுமான ஆபிரகாமைச் சுட்டிக் காட்டி, அவனைப் பின்பற்றிச் செல்ல இந்நூலாசிரியர் வாசகர்களை வேண்டிக்கொள்ளுகிறார். முன்னோனாகிய ஆபிரகாம் எவ்வாறு தன் நம்பிக்கையில் பூரண நிச்சயத்துடன் உறுதியாயிருந்தான் என்பதை எடுத்துக் காட்டுகிறார்.

*“தமது பேரில் தாமே ஆணையிட்டார்”* – கர்த்தர் ஆபிரகாமுக்கு வாக்குத் தத்தம் பண்ணினதுமன்றி, அதனை ஆணையிட்டு உறுதிப்படுத்தவுஞ் செய் தார். தம்மைவிட உயர்ந்தவர் ஒருவரும் இல்லாத காரணத்தால், கர்த்தர்தாமே தம் பெயராலேயே ஆணையிட்டு, தாம் கூறினதை உறுதிப்படுத்தினார் (ஆதி. 22:16-18).

*“பெருகப்பண்ணுவேன்”* – அவனை எப்படி ஆசீர்வதிப்பார்? பிள்ளைச் செல்வத்தைக் கொடுத்து ஆசீர்வதிப்பார். அவ்வாறு அவர் அவனைப் பலுகிப் பெருகப்பண்ணுவார்.

***“பொறுமையாய்க் காத்திருந்து பெற்றான்”***

ஆரான் என்ற பட்டிணத்தில் குடியிருக்கையில், கர்த்தர் ஆபிரகாமுக்கு வெளிப்பட்டார். இவைகளுக்குப் பின்பு ஆபிரகாம் ஆரானிலிருந்து புறப் பட்டான். ஆரானிலிருந்துப் புறப்படுகையில் அவன் எழுபத்தைந்து வயதுள்ள வனாயிருந்தான். கர்த்தருடைய வெளிப்படுதலுக்கும், ஆரானிலிருந்து அவன் புறப்படுதலுக்குமிடையே எத்தனை ஆண்டுகள் இடைவெளியிருந்ததோ நாமறியோம். ஆரானை விட்டுப்புறப்பட்டு 25 ஆண்டுகள் சென்ற பின்னரே அவனுக்கு ஈசாக்கு பிறந்தான். “நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர் வதிப்பேன்” என்று ஆணையிட்டதைப் பெற்றுக்கொள்ள ஆபிரகாம் நீடிய பொறுமையோடு காத்திருந்து, பின்பு வாக்களிக்கப்பட்டதை வாக்கின்படியே எழுத்தளவாகப் பெற்றுக் கொண்டான்.

அவ்வாறே எல்லா விசுவாசிகளும் நீடிய பொறுமையோடு காத்திருந்து, வாக்களிக்கப்பட்டதைக் கைப்பற்றிக் கொள்ள வேண்டும். இதற்குப் பொறுமை யும், காத்திருத்தலும் இன்றியமையாதவையாம்.

### *கர்த்தருடைய ஆணை (6:16-18)*

*“மனிதர் தங்களிலும் பெரியவர் பேரில் ஆணையிடுவார்கள். உறுதி பண்ணும் படிக்கு, ஆணையிடுதலே சகல விவாதத்திற்கும் முடிவு. அந்தப்படி, தேவனும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர் களுக்குத் தமது ஆலோசனையின் மாறாத நிச்சயத்தைப் பரிபூரணமாய்க் காண் பிக்கும்படி சித்தமுள்ளவராய், ஓர் ஆணையினாலே, அதை நிலவரப்படுத்தி*

*னார். நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக்கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்து நமக்கு இரண்டு மாறாத சிறப்பு அம்சங்களினால் நிறைந்த ஆறுதலுண்டாகும்படிக்கு, எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் அப்படிச் செய்தார்" (6:16-18).*

***"ஆணையிடுதல் (6:16)"*** – இது மனிதர்கள் புரிந்துகொள்ளும் நிலையில் மனித முறைமையின்படி எழுதப்பட்ட ஒரு மனித முறையிலான உரைநடையாகும். பொதுவாக, மனிதர்கள் தாங்கள் எடுத்துச் சொல்லுங் காரியத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு ஆணையிடுதல் வழக்கிலுள்ளது. மனிதர்கள் தங்களைவிடப் பெரியவர் பேரில் ஆணையிடுவார்கள். தம்மிலும் பெரியவர் எவருமில்லாததால், கர்த்தரோ தமது பேரிலேயே ஆணையிட்டார்.

### *"வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை ... ஆணையினாலே ஸ்திரப்படுத்தினார்" (6:17)*

தமது வாக்குறுதியின் உரிமையாளர்களுக்கு, தம் திட்டத்தின் மாறாத தன்மையை மிகவும் தெளிவாய் எடுத்துக் காண்பிக்கும் பொருட்டு ஆணையிட்டு, அவர் தாமே அதை உறுதிப்படுத்தினார்.

எபிரெய நிருபத்தில் மூன்று விதமான ஆணைகளைப் பார்க்கிறோம்:

அ) அவிசுவாசிகளைக் குறித்து ஆணையிடுதல் (3:11).

ஆ) விசுவாசிகளைக் குறித்து ஆணையிடுதல் (6:13).

இ) இயேசுவைப் பற்றிய ஆணை (7:21).

### *இரண்டு மாறாத பிணைப்புகள் (6:18)*

தேவனின் வாக்குறுதிகளும், அவருடைய ஆணையும் மாறாத இரு பிணைப்புகளாகும். "அடைக்கலமாய் ஓடிவந்த" – இத்தொடர் பழைய ஏற்பாட்டில் வரும் அடைக்கலப் பட்டணங்களை நினைவூட்டுகிறது. யோசுவா 20-ஆம் அதிகாரத்தில் ஆறு அடைக்கலப் பட்டணங்களைக் காண்கிறோம். அறியாமல் கைப்பிசகாய் ஒருவனைக் கொன்றவன், கொலை செய்யப்படா மலிருக்க ஏதேனும் ஓர் அடைக்கலப்பட்டணத்திற்குள் ஓடிப்போய் அடைக்கலம் புக வேண்டும் (உபா. 19:6; யோசுவா 20:2).

*நிறைந்த ஆறுதல் (பெருக்கமான ஆறுதல்)* – அடைக்கலப் பட்டணத்தை அடைபவன் தக்க பாதுகாப்புடனும், தைரியத்துடனும் இருக்கிறான். அதைப் போன்றே எதிர் நோக்குதலோடு கூடிய நம்பிக்கையைப் (உறுதியைப்) பற்றிக் கொள்ளுபவனும். பெருக்கமான ஆறுதலைப் பெற்று அனுபவிப்பான்.

## *நித்திய பிரதான ஆசாரியர் (6:19,20)*

*"அந்த நம்பிக்கை நமக்கு நிலையும் உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது. நமக்கு முன்னோடினவராகிய இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நித்திய பிரதான ஆசாரியராய் நமக்காக அந்தத் திரைக்குள் பிரவேசித்திருக்கிறார்" (6: 19,20).*

*"அந்த நம்பிக்கை" (6:19)* – 'அந்த நம்பிக்கை' என்பது விசுவாசத்தோடு கூடிய உறுதியான எதிர்நோக்குதலாகும். நமது கர்த்தர் நம்மைத் தம்முடன் சேர்த்துக்கொள்ள மறுபடியும் வருவார், ஆம்! அவர் வருகிறவர். இன்னுங் கொஞ்சங்காலத்தில் வருவார் – தாமதம் பண்ணார். அதுவே அந்த நம்பிக்கை. கிறிஸ்துவிற்குள் வாழ்பவனுக்கு இந்த முடிவில்லாத நம்பிக்கை உண்டு! கிறிஸ்துவுக்கு வெளியே – அந்த அடைக்கலப் பட்டிணத்திற்கு – புறம்பே வாழ்பவனுக்கோ அது நம்பிக்கையற்ற, அழிக்கப்படும் அகோர முடிவுதான் அல்லவா?

*"ஆத்தும நங்கூரம்"* – பெரும் புயலினின்று ஒரு கப்பலைப் பாதுகாக்க, நங்கூரம் அவசியம் தேவை. அப்படியே வாழ்க்கைக் கப்பலைச் சோதனைப் புயலில் உடைந்து போகாமல் பாதுகாப்பதே, நமது *நம்பிக்கை* என்னும் இந்த நங்கூரம். அந்த நம்பிக்கை என்னும் நங்கூரமே நம்முடைய விசுவாசக் கப்பல் மூழ்கி நாசமடையாது காத்து நிலையும், உறுதியும் குன்றாமல் நிறுத்தவல்லது.

## *இயேசு . . . அந்தத் திரைக்குள் பிரவேசித்திருக்கிறார். (6:20)*

நங்கூரம் நம் கண்களுக்கு மறைவாகக் கடல் நீரில் மூழ்கியிருக்கும். அதைப் போலவே, நமது நம்பிக்கையின் நங்கூரமாகிய கர்த்தராகிய இயேசு பெருமான் திரைக்குள்ளாகச் சென்றிருக்கிறார். அவர் நமக்கு முன்னவராக, முன்னோடியாக அங்கே சென்று உட்சென்றிருக்கிறார். நித்திய மறுமை பேரின்ப வீட்டிற்குள்ளே மனிதன் செல்லுவதற்கான மாபெரும் வழியைத் திறந்தருளியுள்ளார். நாமும் அவ்விடம்தான் செல்ல வேண்டும். நமது மீட்பர் இயேசு, தமது சிலுவை மரணத்தால் நமக்காக நிலைவரமான ஓர் இடத்தை ஆயத்தம் பண்ணியுள்ளார் (« ò £õ £¡ 14:3).

பழைய உடன்படிக்கையின் காலக்கட்டத்தில் தலைமை ஆசாரியனைப் பின்சென்று அதிதூயகத்திற்குள் (மகா பரிசுத்த ஸ்தலம்) செல்ல எவராலு மியலாது. அன்று அது சாத்தியமற்ற ஒன்றாகும்; ஆனால், இன்றோ நமது தனிப்பெரும் தலைமை ஆசாரியராகிய கிறிஸ்துவை நாமும் பின்சென்று, அந்த மறுமை வீட்டினுள் செல்லுவோம் என்பது உறுதியே.

*மெல்கிசேதேக்கின் முறைமையின்படி... ஆசாரியர்*

இயேசு கிறிஸ்து மெல்கிசேதேக்கின் முறைமையின்படி தனிப்பெரும் தலைமை ஆசாரியராயிருக்கிறார். 5:10-ல் சொல்லி நிறுத்திய காரியத்தை நூலாசிரியர் மீண்டும் வாசகர் கவனத்திற்குக்கொண்டு வருகின்றார்.

# II. இயேசு கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான ஆசாரியத்துவம் (7: 1-28)

## 1. மெல்கிசேதேக்கின் முறைமை (7:1-10)

இதுவே இந்நிருபத்தின் மையமாக அமைந்துள்ள அதிகாரம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு நிழல்களாக – உருவகப் படமாகப் பழைய ஏற்பாட்டில் பல நபர்களுள்ளனர். பணிவிடையில் ஆரோனும் (5:5-10), நித்திய தலைமைத்துவத்தில் மெல்கிசேதேக்கும் இயேசு கிறிஸ்துவுக்கு நிழலாகத் திகழ்கின்றனர்.

*வரலாற்று மனிதனான மெல்கிசேதேக்கு (7:1-3)*

*"இந்த மெல்கிசேதேக்கு சாலேமின் இராஜாவும், உன்னதமான தேவனுடைய ஆசாரியனுமாயிருந்தான். இராஜாக்களை முறியடித்து வந்த ஆபிரகாமுக்கு, இவன் எதிர் கொண்டு போய், அவனை ஆசீர்வதித்தான். இவனுக்கு ஆபிரகாம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான். இவனுடைய முதற்பேறாகிய மெல்கிசேதேக்கு என்பதற்கு 'நீதியின் இராஜா' என்றும், பின்பு 'சாலேமின் இராஜா' என்பதற்குச் 'சமாதானத்தின் இராஜா' என்றும் பொருட்படும். இவன் தகப்பனும் தாயும் வம்ச வரலாறும் இல்லாதவன், இவன் நாட்களின் துவக்கமும், ஜீவனின் முடிவுமுடையவனாயிராமல், தேவ குமாரனுக்கு ஒப்பானவனாக என்றென்றைக்கும் ஆசாரியனாக நிலைத்திருக்கிறான்." (7: 1-3)*

திருமறை நூலில் மூன்று இடங்களில் மெல்கிசேதேக்கைக் குறித்து நாம் படிக்கிறோம். அவ்விவரங்களாவன:

1) வரலாற்றில் அவர் சரித்திர புருஷன் (ஆதி. 14:18-20).

2) ஆயிரமாண்டுக்குப் பின்னர், தீர்க்கதரிசனத்தின் அடிப்படையில் மெல்கிசேதேக்கு (சங். 110:4).

3) மீண்டும் ஆயிரமாண்டுக்குப் பின்னர் போதனையின் அடிப்படையில் மெல்கிசேதேக்கு (எபி. 7:1-10; 5:10; 6:20).

இந்த ஏழாம் அதிகாரத்தின் முதல் மூன்று வசனங்கள் ஒரு வரலாற்று உண்மையின் கருத்துப் பிழிவாகும். அடுத்து வரும் மூன்று வசனங்கள்,

அவற்றின் அடிப்படையில் எழுந்து வரும் போதனைகளுமாகும்.

***யார் இந்த மெல்கிசேதேக்கு?***

இவ்வினாவிற்குரிய விடை வேத பண்டிதர்களின் பார்வையில் பல நோக்குடையவை ஆகும்.

அ) இவன் நோவாவின் மகனாகிய சேம் என்பது யூதசமய குருவாயிருந்த ரபீ இஸ்ரவேல் என்பவரின் கருத்து (கி.மு. 135). மார்டின் லூதரும் இதே கருத்தைக் கொண்டிருந்தார்.

ஆ) இவனை காம் என்போரும் உள்ளனர்.

இ) அலெக்சாந்திரிய தேசத்தானும், ஒரு யூதனுமாகிய ஃபைலோ என்பவர், மெல்கிசேதேக்கை ஒருவரலாற்று மனிதனாகவே கருதவில்லை; மெல்கிசேதேக்கு ஒரு கற்பனை மனிதன் என்பது இவர்களது கருத்து.

ஈ) திருச்சபையின் தந்தையருள் ஒருவராகிய ஓரிஜென் என்பார், மெல்கிசேதேக்கை ஒரு வான தூதன் என்று எண்ணினார்.

உ) சிலர் தலைமைத் தூதுவராகிய மீகாவேல் என்கின்றனர்.

ஊ) மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்திருந்த ஐரக்காஸ் என்பவர், மெல்கிசேதேக்கைப் பரிசுத்தாவியானவரின் அவதாரம் எனப் போதித்தார்.

எ) லோகோஸின் – 'வார்த்தையின்' (யோவான். 1:1) அவதாரம் என்பது சிலரின் கருத்து (*லோகோஸ்* = வார்த்தை அல்லது சொல்).

ஏ) தீயோடோட்டு என்பார் மெல்கிசேதேக் பேரவை எனவும், மெல்கி-சேதேக்கு மேசியாவைவிட மேலானவர் எனவும், மேசியா மெல்கிசேதேக்கின் ஒரு நிழல்மட்டுமே எனவும் கற்பித்தார்.

ஐ) இதுவுமன்றி, இவரை ஏனோக்கு, யோபு, என்றெல்லாம் வியாக்கியானம் செய்தோரும் உள்ளனர்.

***மெல்கிசேதேக்கைப் பற்றி மறை நூல் சொல்வதென்ன? (7:1,2)***

அ) அவன் சாலேமின் இராஜா.

ஆ) அவன் உன்னதமான தேவனின் ஆசாரியன்.

இ) அவன் ஆபிரகாமுக்கு எதிர்கொண்டு போனவன்.

ஈ) அவன் ஆபிரகாமை ஆசீர்வதித்தவன்.

உ) அவன் ஆபிரகாமிடமிருந்து பத்திலொருபங்கைக் காணிக்கையாகப் பெற்றவன்.

'மெல்கி', 'சேதேக்கு' என்னும் இரு எபிரெயச் சொற்களின் சேர்க்கையே இப்பெயர் ஆகும். இதற்கு "நீதியின் இராஜா" எனப் பொருள். "சாலேமின் இராஜா" என்பதற்குச் "சமாதானத்தின் இராஜா" என்று பொருள். தேவனின் திருக் குமாரனாகிய இயேசு நமக்கு நீதியும் (1 கொரி. 1:31), சமாதானமும் (எபே. 2:14) ஆக உள்ளார். முதலாவது நீதி, அதனைத் தொடர்ந்து சமாதானம் என்ற இந்த ஒழுங்கைக் கவனிக்க வேண்டும். தேவனின் நீதியின்றி, சமாதானத்தைப் பெற இயலாது (சங். 85:10; ஏசா. 32:17; ரோமர் 5:1).

இஸ்ரவேலரிடையே ஒரே சமயத்தில் இராஜாவாகவும் ஆசாரியனாகவும், அதாவது ஒரே நபர் இரு பதவிகளை வகிக்கயியலாது. மோசே அருளின நியாயப் பிரமாணம் இதற்கு இடம் கொடுப்பதில்லை. இவ்விரு பதவிகளையும் ஒருவரே வைத்திருப்பது தண்டனைக்குரியதாகும். (2 நாளா. 26:16-20). ஆனால், "இஸ்ரவேல்" என்னும் இனம் தோன்றுவதற்கும், ஆபிரகாம் விருத்தசேதனம் பெறுவதற்கும் வெகு நாட்களுக்கு முன்னரே மெல்கிசேதேக்கு வாழ்ந்தவ னாகையால், இந்த நியாயப்பிரமாணத்தின் விதிமுறை மெல்கிசேதேக்கைப் பாதிக்காது.

"சாலேமின் இராஜா" என்ற சொல்லினின்று, இவர் ஒரு இராஜாவாக இருந்தார் எனவும், பகைவரை வென்று, வெற்றியுடன் பவனிவந்த ஆபிரகாமிடமிருந்து, பத்திலொரு பங்கினைக் காணிக்கையாக பெற்றுக்கொண்டதிலிருந்து, மெல்கி சேதேக்கு ஓர் ஆசாரியன் எனவும் நன்கு புலனாகின்றது.

### *ஆபிரகாமை ஆசீர்வதித்தான் (ஆதி. 14:18-20; எபி. 7:1)*

உன்னதமான விண்தேவனுக்கு ஆசாரியனாயிருந்த மெல்கிசேதேக்கு ஆபிரகாமை ஆசீர்வதித்தான். அதுவுமன்றி, அவன் ஆபிரகாமிடமிருந்து பத்திலொரு பங்கைக் காணிக்கையாகப் பெற்றுக் கொண்டான். இதிலிருந்து மெல்கிசேதேக்கு ஆபிரகாமைவிட மேலானவன் என்பது புலனாகின்றது.

*குறிப்பு: எருசலேமின் பூர்வீகப் பெயர் எபூசி என்பதாகும் (யோசுவா 18:28; நியா. 19:10). தாவீதின் நாட்களிலுங்கூட இது எபூசியரின் நகர மாகவே கருதப்பட்டது (2 சாமு. 5:6,7). காமின் நான்காவது மகன் கானான் (1 நாளா. 1:8); கானானின் மூன்றாவது மகன் எபூசியன் (ஆதி. 10:16). இந்த எபூசியனின் மரபு வழியில் வந்தவர்களே எபூசியர்.*

*எருசலேமை ஆண்டுகொண்டிருந்த "அதோனிசேதேக்"கை இணைத் துக்கூறுகையில், அவன் எமோரிய இராஜா என்றழைக்கப் பட்டாலுங் கூட (யோசுவா 10 : 1). அதோனிசேதேக் ஒரு எபூசியன் என்பதே வரலாற்று ஆசிரியர்களின் கணிப்பு. எபிரெய வார்த்தையாகிய **அதோனி-சேதேக்** என்பதற்கு "நீதியுள்ள கர்த்தர்" என்றும், **அடோனிசெடேக்** என்பதற்கு "என்*

*ஆண்டவன் நீதியுள்ளவர்" என்றும் பொருள் (NBD p.15). **சேதேக்** என்பது அந்நாட்டு மன்னர்களின் மரபு வழிப்பெயராகும்.*

*அப்படியென்றால், மெல்கிசேதேக்கு உன்னதமான தேவனின் ஆசாரியன். காமின் வாரிசாகிய மெல்கிசேதேக்கு, இறை இயேசுவுக்கு ஒரு நிழலாக உள்ளான். எனவே, யூத சமயத்தாருக்கும், புறவினத்தாருக்கும், எதிர்காலத்தில் இயேசு கிறிஸ்துவில் விசுவாசிக்கிற அனைவருக்கும், மெல்கிசேதேக்கு மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய ஒருவனாகத் திகழ்கிறான்.*

*இயேசு கிறிஸ்துவுக்கு ஒரு நிழலாக அமைந்துள்ள மெல்கிசேதேக்கு, ஒரு யூதராயிராமல், கானானியப் பரம்பரையைச் சேர்ந்தவர் என்பது விந்தையிலும் விந்தைதானல்லவா!*

### *தகப்பனும் தாயும், வம்ச வரலாறும், துவக்கமும், முடிவுமில்லாதவன் (7:2,3)*

இவ்வசனத்தினின்று அறிந்துகொள்ளும் சிறப்பு யாதெனில், மெல்கிசே தேக்கைப் பற்றி எழுதப்பட்ட விவரங்களுக்கு முக்கியத்துவம் இருப்பதைப் போன்றே, அவனைப் பற்றி எழுதாமல் விடுபட்ட காரியங்களுக்கும் அதி முக்கியத்துவம் உண்டு என்பதுதான். "தகப்பனும் தாயும் இல்லை" என்பதினால் அவன் தாமாகவே தோன்றினான் என்று பொருள் அன்று. அவனுடைய தாய் தந்தையரைப் பற்றிய குறிப்பு ஏதும் சொல்லப்படவில்லை என்றே இங்கு பொருள் கொள்ள வேண்டும்.

யூத இனத்தார் வம்ச வழி அட்டவணைக்கு அதிக முக்கியத்துவம் வழங்கு பவர் ஆவர். வம்ச வரலாற்றிற்கு ஆதியாகமத்தில் அதிமுக்கியத்துவம் வழங்கி யிருப்பது இதற்காதாரமாகும். அப்படியிருக்க வம்ச வரலாறில்லாத மெல்கி சேதேக்கை, புதிய ஏற்பாட்டில் எடுத்துக்காட்டியிருப்பதில், பரிசுத்தாவியான வருக்குத் தனியொரு நோக்கம் உண்டு என்பது கண்கூடு. லேவி கோத்திரத்திற்கு மரபுவழி, வம்சவரலாற்று அட்டவணை இல்லாமலிருக்குமானால், ஆரோன் தலைமை ஆசாரியப் பதவியில் நியமனம் பெற்றிருக்க இயலாது (எஸ்றா 2:62; நெகே. 7:64). மற்றும் மெல்கிசேதேக்கின் தோற்றமும் மறைவும் எழுதப் படவில்லை. அவன் திடீரென்று ஆபிரகாமுக்கு முன்னதாகக் காணப்படுகிறான். அதன் பின்னர் அவனைப்பற்றிய வரலாற்றுக் குறிப்பு ஒன்றையும் நாம் காண் கிறதில்லை. இவனுடைய ஆசாரிய ஊழியத்திற்குத்துவக்கமும் முடிவும் சொல் லப்படவில்லை. இதனடிப்படையில், இவன் துவக்கமும் முடிவு மற்ற தேவத்திரு குமாரருக்கும், அவருடைய "நித்திய ஆசாரிய ஊழியத்திற்கும்" நிழலுருவமாக உள்ளான். இவ்வாறு அவன் இயேசு கிறிஸ்துவாகிய திருக்குமாரருக்கு ஒரு நிழல் படமாக இருக்கிறான் என்று கொள்வதே சரி.

### *மெல்கிசேதேக்கின் மேன்மை (7:4-10)*

*"இவன் எவ்வளவு பெரியவனாயிருக்கிறான் பாருங்கள். கோத்திரத் தலைவனாகிய ஆபிரகாம் முதலாய்க் கொள்ளையிடப்பட்ட பொருள்களில் இவனுக்குத் தசமபாகம் கொடுத்தான். லேவியின் புத்திரரில் ஆசாரியத்துவத்தை அடைகிறவர்களும், ஆபிரகாமின் அரையிலிருந்து வந்த தங்கள் சகோதரரான ஜனங்களின் கையிலே நியாயப்பிரமாணத்தின்படி தசமபாகம் வாங்குகிறதற்குக் கட்டளை பெற்றிருக்கிறார்கள். ஆகிலும், அவர்களுடைய வம்சவரிசையில் வராதவனாகிய இவன் ஆபிரகாமின் கையில் தசமபாகம் வாங்கி, தேவனால் வாக்குத்தத்தங்களைப் பெற்றவனை ஆசீர்வதித்தான். சிறியவன் பெரியவனாலே ஆசீர்வதிக்கப்படுவான். அதற்கு சந்தேகமில்லை. அன்றியும், இங்கே மரிக்கிற மனிதர்கள் தசமபாகம் வாங்குகிறார்கள். அங்கேயோ, பிழைத்திருக்கிறான் என்று சாட்சியம் பெற்றவன் (மெல்கிசேதேக்கு) வாங்கினான். அன்றியும் மெல்கிசேதேக்கு ஆபிரகாமுக்கு எதிர்கொண்டுபோன போது,லேவியானவன் தன் தகப்பனுடைய அரையிலிருந்தபடியால், தசமபாகம் வாங்குகிற அவனும், ஆபிரகாம் மூலமாய்த் தசமபாகம் கொடுத்தான் என்று சொல்லலாம்" (7:4-10).*

### *"இவன் எவ்வளவு பெரியவனாயிருக்கிறான் பாருங்கள்" (7:4)*

மெல்கிசேதேக்கு எவ்வளவு பெரியவன்! யாரைவிட? ஆபிரகாமைவிடப் பெரியவன்! எவ்வகையில்? இரு வகைகளில்: ஒன்று, அவன் கோத்திரத் தலைவனான ஆபிரகாமையே ஆசீர்வதித்தான். இரண்டு, ஆபிரகாமிடமிருந்துப் பத்திலொரு பங்கினைப் பெற்றுக்கொண்டான். எனவே ஆபிரகாமைவிட இவன் பெரியவனாவான்.

*'பாருங்கள்'*– இச்சொல்லைக் "சிந்தித்துப் பாருங்கள்" என மொழிபெயர்த்திருக்க வேண்டும். மெல்கிசேதேக்கு "எத்தனை உயர்ந்தவன் என்பதை எண்ணிப்பாருங்கள்! கவனித்துப்பாருங்கள்!!"

ஆசாரியர் பத்திலொரு பங்கைப்பெற உரிமைபெற்றவர்களாவர். இஸ்ரவேலர்கள், தங்கள் நன்மைகளிலும் பத்திலொரு பங்கை, லேவியருக்கும், லேவியர் ஆசாரியருக்கும் கொடுக்க வேண்டுமென்பதே இறைக் கட்டளையாகும் (லேவி. 27:30; எண். 18:26-36).

### *"லேவியின் புத்திரரில் . . . ஆபிரகாமின் அரையிலிருந்து வந்த ." (7:5)*

மெல்கிசேதேக்கு ஆபிரகாமிடமிருந்து பத்தில் ஒரு பங்கைப் பெற்றான். ஆபிரகாமின் மகன் ஈசாக்கு. ஈசாக்கின் மகன் யாக்கோபு, யாக்கோபின் மகன் லேவி. ஆபிரகாமின் மரபில் தோன்றினவனே லேவி. இந்தப் பொருளில்தான் ஆபிரகாம், மெல்கிசேதேக்குக்கு பத்திலொரு பங்கைக் கொடுக்கும் அந்நேரத்

தில்தானே, ஆபிரகாமின் அரையில் லேவி இருந்தான் எனச் சொல்லியுள்ளது. இக்கண்ணோட்டத்தில் லேவிய ஆசாரியர்களிடமிருந்தும், மெல்கிசேதேக்கு பத்திலொருபங்கைப் பெற்றுக்கொண்டதாகவே கருத வேண்டும்.

### *"வாக்குத் தத்தங்களைப் பெற்றவனை ஆசீர்வதித்தான்" (7:6)*

லேவிய அட்டவணையில் உட்படாதவன் மெல்கிசேதேக்கு. ஆனால், இந்த மெல்கிசேதேக்கு, தேவனின் வாக்குறுதிகளையும், ஆசீர்வதங்களையும் பெற்றவனும், குலத்தந்தையுமான ஆபிரகாமையே ஆசீர்வதித்தான். அந்த ஆபிரகாம், மெல்கிசேதேக்குக்குப் பத்திலொரு பங்கைக் கொடுத்தான். அப்படியானால் மெல்கிசேதேக்கின் மேன்மை எத்தனை உன்னதமானது பாருங்கள்!

### *"சிறியவன் பெரியவனாலே ஆசீர்வதிக்கப்படுவான்"*

ஆபிரகாம் இஸ்ரவேலரின் தகப்பன், அவன் ஒரு தீர்க்கதரிசி (ஆதி. 20:7). ஆனாலும் ஆபிரகாம் ஓர் அரசனோ, ஆசாரியனோ அல்லன், ஆபிரகாமை விட மெல்கிசேதேக்கு மிகப்பெரியவன். இந்தப் பெரியவனாகிய மெல்கிசேதேக்கினாலே, சிறியவனாகிய ஆபிரகாம் ஆசீர்வதிக்கப்பட்டான்.

### *"இங்கே மரிக்கிற மனிதர்கள் . . . அங்கேயோ பிழைத்திருக்கிறான் என்று சாட்சியம் பெற்றவன்" (7:8)*

"யோகெபேத் அம்ராமுக்கு ஆரோனை . . . பெற்றான்" (எண். 26:59). ஒரு பொன் கன்றுக் குட்டியைச் செய்வித்தது, ஆரோன் பெருந்தவறு செய்தான் (யாத். 32:4). மேரிபா தண்ணீரண்டை நடந்த கலகத்தில் அவன் மோசேயோடு சேர்ந்து குற்றவாளியானான் (எண். 20:2-12). லேவிய ஆசாரியர்கள் அனைவருமே மரணத்தால் மாற்றப்பட்டனர். ஆனால் ஆதியாகமம் தரும் விவரங்களிலின்று மெல்கிசேதேக்கு துவக்கமும் முடிவுமில்லாதவன். இந்தப் பொருளில் மெல்கிசேதேக்கு மரணமில்லாதவன். இவையாவும் இயேசு கிறிஸ்துவின் நித்திய ஆசாரியத்துவத்துக்கு நிழல் படமாக உள்ளன.

"நாம் கடந்த காலத்தையே சார்ந்திருக்கின்றோம் என்பதற்கு எங்கே நோக்கினும் அநேகச் சான்றுகளைக் காணலாம். வரவிருக்கும் எதிர்காலத்தையும் நாமே வடிவமைத்துக் கொள்ளுகிறோம். ஒவ்வொருவரும் ஒரு குலத்தின் உறுப்பினரும், அக்குலத்தின் மேம்பாட்டுக்கும் ஊக்கமூட்டும் ஒரு மையமாகவே விளங்குகிறோம்" – வெஸ்ட்காட்.

இங்கு, நான்கு ஐந்து வசனங்களில் கூறியவையே, எட்டாம் ஒன்பதாம் வசனங்களின் வாயிலாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இதை எவரும் மறுக்க முடியாது. மேலும் பத்திலொரு பங்கு வாங்கும் லேவியர்கள் மாண்டுபோகும் மனிதர்கள்; ஆனால் மெல்கிசேதேக்கு உயிருள்ளவர் எனச்சாட்சி பெற்றவன்.

அன்றியும், பத்திலொரு பங்கு வாங்கும் லேவியும், ஆபிரகாமின் வழியாகப் பத்திலொரு பங்கு கொடுத்தான் என்று சொல்லலாம்.

யூதேயப் பின்னனியிலிருந்து வந்துள்ள இந்நிருப விசுவாசிகள், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்மேல் நல்மதிப்புக்கொள்ளும்படி, அவரைத் தாங்கள் மதிக்கும், நியாயப்பிரமாண சட்டத்திட்டங்களுக்கு மேலானவராகவும், தங்களுடைய முற்தகப்பனாகிய ஆபிரகாமின் நல்மதிப்புக்கு உரிய மெல்கிசேதேக்கோடு கிறிஸ்துவை ஒப்பிட்டு, அவரிலும் பெரியவராகக் காட்டி அமைந்துள்ள இப்பகுதி, நூலாசிரியருடைய போதகத்திறமையை எடுத்துக் காட்டுகிறது.

## இயேசு கிறிஸ்து மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான தலைமை ஆசாரியர் (7:11-28)

மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான ஆசாரியத்துவம், வரலாற்றில் உள்ள லேவி கோத்திர ஆசாரிய முறைமையைவிட மேலானது என்பதை நூலாசிரியர் வெவ்வேறு கோணங்களில் வரையறுத்துக் காட்டுகின்றார்.

### *(அ) மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான ஆசாரியத்துவத்தின் மேன்மை (7:11-14)*

*"அல்லாமலும், இஸ்ரவேல் ஜனங்கள் லேவி கோத்திர ஆசாரிய முறைமைக்குட்பட்டிருந்தல்லவோ நியாயப்பிரமாணத்தைப் பெற்றார்கள். அந்த ஆசாரிய முறைமையினாலே பூரணப்படுதல் உண்டாயிருக்குமானால், ஆரோனுடைய முறையின்படி அழைக்கப்படாமல், மெல்கிசேதேக்கினுடைய முறைமையின்படி அழைக்கப்பட்ட வேறொரு ஆசாரியர் எழும்ப வேண்டுவதென்ன...? ஆசாரியத்துவம் மாற்றப்பட்டிருக்குமேயானால் நியாயப்பிரமாணமும் மாற்றப்பட வேண்டியதாகும். இவைகள் எவரைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறதோ, அவர் வேறொரு கோத்திரத்துக்குள்ளானவராயிருக்கிறாரே. அந்தக் கோத்திரத்தில் ஒருவனாகிலும் பலிபீடத்து ஊழியம் செய்ததில்லையே. நம்முடைய கர்த்தர் யூதா கோத்திரத்தில் தோன்றினாரென்பது பிரசித்தமாயிருக்கிறது. அந்தக் கோத்திரத்தாரைக்குறித்து, மோசே ஆசாரியத்துவத்தைப் பற்றி ஒன்றுஞ் சொல்லவில்லையே" (7:11-14).*

***"லேவிய ஆசாரிய முறைமையினாலே பூரணப்படுதல் உண்டாயிருக்குமானால்." (7:11)***

இங்கு நம்முன் எழும் கேள்வி ஒன்றுண்டு. தேவனால் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணம் என்னும் திருச்சட்டத்தின்படி கிடைக்கப்பெற்ற லேவிய ஆசாரிய முறைமை அமுலிலிருக்க, அதனை அப்புறப்படுத்திவிட்டு, மற்றொரு முறைமையைக் குறித்துச் சொல்லுவானேன்? இதற்கு இரு காரணங்களை விடையாகச் சுட்டிக் காண்பிக்கலாம்:

1. ஆசாரியத்துவத்தின் நோக்கம், பூரணப்படுதல் (நிறைவு உண்டாக்குதல்) ஆகும். ஆனால் லேவிய ஆசாரியத்துவத்தால் இந்த நோக்கம் ஈடேறாமற் போயிற்று.

2. லேவிய ஆசாரியத்துவம் தற்காலிகமானது. லேவிய ஆசாரியத்துவம் அமுலிலிருக்கும் காலக்கட்டத்திலேயே, மெல்கிசேதேக்கின் முறைமையான ஆசாரியத்துவமும் முன்னுரைக்கப்பட்டுவிட்டது (சங். 110:4).

*"வேறொரு ஆசாரியர்"* – அதாவது மற்றொருவர் என்பது மட்டுமின்றி, வேறுபட்ட முறைமையின்படியான ஓர் ஆசாரியர் எனவும் இங்கு பொருள் கொள்ள வேண்டும்.

*"மாற்றப்பட வேண்டியதாகும்"* – லேவிய முறைமையின்படியான ஆசாரியத்துவமும், ஆசாரியனும், அதன் நெறிமுறைகளுமெல்லாம், நியாயப் பிரமாணம் என்னும் திருச்சட்ட ஒழுங்குக்குட்பட்டு உள்ளன. ஆனால், மேலே எடுத்துக் காட்டியுள்ள குறைபாடுகளினிமித்தம் அவை அனைத்தும், மாற்றப்பட வேண்டியதாயின.

இயேசு கிறிஸ்து லேவிக்கோத்திரத்தைச் சேர்ந்தவரல்லர், ஆகவே வேறொரு ஆசாரிய கோத்திரம் தேவையெனில், அதற்குரிய விதிமுறைகளும் மாற்றப்பட வேண்டும்.

*"இவைகள் எவரைக் குறித்து சொல்லப்பட்டிருக்கிறது" (7:13)* – மெல்கிசேதேக்கைக் குறித்துச் சொல்லிய யாவும், முன்னுரைத்தவையெல்லாம் மேசியாவையே குறிப்பவையாகையால், அதை இங்கு நூலாசிரியர் தெளிவுபடுத்துகிறார்.

*"வேறொரு கோத்திரத்துக்குள்ளானவர்"* – இயேசு கிறிஸ்து வேறொரு கோத்திரத்தவர் என்பது அவருடைய யூதா கோத்திரத்தைக் குறிக்கின்றது. லேவிய ஆசாரியத்துவமென்பது லேவி கோத்திரத்தோடும், அக்கோத்திரத்தில் தோன்றியுள்ள ஆரோனின் குலத்தோடு மட்டுமே சம்பந்தப்பட்டதாகும்.

### *நம்முடைய கர்த்தர் யூதா கோத்திரத்தில் தோன்றினார் (7:14)*

ஆபிரகாமின் மகனாகிய, ஈசாக்கின் மகனாகிய, யாக்கோபின் மகனாகிய யூதாவின் கோத்திரத்திலே இயேசு தோன்றினார். யூதா கோத்திரத்தோடு லேவிய ஆசாரியத்துவத்திற்கு எவ்வித சம்பந்தமில்லைதான். எனவே யூதா கோத்திரத்திலிருந்து வந்தவர் என்ற நிலையில் இயேசு கிறிஸ்து ஆவியானவர் முன்னுரைத்துள்ளவாறு (சங். 110:4), மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான தலைமை ஆசாரியராக்கப்பட்டார்.

## *ஆ) என்றென்றைக்குமுள்ள முறைமையின்படியான கிறிஸ்துவின் ஆசாரியத்துவத்தின் மேன்மை (7:15-19)*

*"அல்லாமலும், மெல்கிசேதேக்குக்கு ஒப்பாய் வேறொரு ஆசாரியர் எழும்புகிறார் என்று சொல்லியிருப்பதினால், மேற்சொல்லியது மிகவும் பிரசித்தமாய் விளங்குகிறது. அவர் மாம்ச சம்பந்தமான கட்டளையாகிய நியாயப்பிரமாணத்தின்படி ஆசாரியராகாமல், நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று சொல்லிய சாட்சிக்குத் தக்கதாக, அழியாத ஜீவனுக்குரிய வல்லமையின்படியே ஆசாரியரானார். முந்தின கட்டளை பெலவீனமுள்ளதும், பயனற்றதுமாயிருந்ததினிமித்தம் மாற்றப்பட்டது. நியாயப்பிரமாணமானது ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை. அதிக நன்மையான நம்பிக்கையை வருவிப்பதோ பூரணப்படுத்துகிறது, அந்த நம்பிக்கையினாலே தேவனிடத்தில் சேருகிறோம்" (7:15-19).*

தனிப்பெரும் தலைமை ஆசாரியரான நமது இயேசு கிறிஸ்துவின் ஆசாரியத்துவத்தின் போற்றற்கரிய மேன்மை யாதெனில், அது தொடர்ந்து நீடித்துக் கொண்டிருக்கும் முடிவில்லாத ஓர் ஆசாரியத்துவம் ஆகும்.

### *லேவிய ஆசாரியத்துவமும், கிறிஸ்துவின் ஆசாரியத்துவமும் – ஓர் ஒப்பீடு*

| லேவிய ஆசாரியத்துவம் | கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் |
|---|---|
| 1. இது லேவிய முறைமையின் படியானது. | 1) இது மெல்கிசேதேக்கின் முறைமையின்படியானது (7:15). |
| 2. இது நின்று விடக்கூடிய, அழிந்து போகவேண்டிய ஆசாரியத்துவம் (7:17). | 2) இது அழியாத ஜீவனுக் குரியது (7:17). |
| 3. இது மாறிவிடக்கூடியது (7:18). | 3) இது என்றென்றும் நிலைத்து நிற்பது (7:17). |
| 4. இது பெலவீனமுள்ளது (7:18). | 4) இது அதிக நன்மையான நம்பிக்கைக்குரியது (7:19). |
| 5. இது பூரணமானதன்று (7:19). | 5) இது பூரணப்படுத்துகிறது (7:19). |
| 6. இது முழுப் பயனற்றது (7:18; கலா. 2:16). | 6) இது தேவனுக்கு முன் நம்மைக் கிட்டிச் சேர்க்கிறது (7:19). |

### *"மாம்ச சம்பந்தமான கட்டளையாகிய நியாயப் பிரமாணத்தின்படி" (7:15,16,17)*

லேவிய (ஆரோனிய) ஆசாரியத்துவம் நியாயப்பிரமாணத்தின்படி வந்தது ஆகும். (7:10; 14, 16). இது சரீர சம்பந்தமானது. இதற்கு வம்சவழியிலான ஆதாரம் தேவை. இந்த ஆசாரியனுக்கு ஊனமில்லாத உடலமைப்பு அவசியம் (லேவி. 21:16-21). ஆயினும் அவர்கள் ஒரு குறிப்பிட்ட குறுகிய காலத்திற்கு மட்டுமே ஆசாரிய ஊழியத்தில் அமர்த்தப்படுவார்கள். அக்காலத்திற்குப் பின்னர். (சரீர இளைப்பு நேர்வதால்) அவர்கள் அதினின்று ஓய்வு பெறுவர்.

லேவிய ஆசாரியத்துவம் வம்ச வழி அடிப்படையில் (வழி வழி வரிசையாக) வந்து முடிவில்லாமற் தொடரக் கூடியது. ஆனாலும் இம்முறைமையில் ஒரே ஒருவர் நித்திய (நிரந்தர) ஆசாரியராக இருக்க இயலாது. அந்த ஆசாரியத்துவம் ஒருவருடைய மரணத்தைத் தொடர்ந்து, மற்றொருவருக்கு மாறிவிடுகிற ஒரு முறைமையாகும்.

ஆனால் இயேசு கிறிஸ்து, தம்மைத்தாமே பலியாக ஒப்புக்கொடுத்து, இறந்தோரினின்று உயிர்த்தெழுந்தார். அவர் அழியாத ஜீவனுக்குரிய வல்லமையின் படியே ஆசாரியராக உள்ளார். பலியும் அவரே! பலி செலுத்துபவரும் அவரே! அவ்வண்ணம் அவர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி, அழியாத ஜீவனுக்குரிய வல்லமையின்படியே நிலைத்திருக்கிற ஆசாரியரானார்.

"நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர்" (7:17) – இது சங்கீதம் 110:4-ன் மேற்கோள் ஆகும்.

### *"முந்தின கட்டளை பெலவீனமுள்ளதும், பயனற்றதுமாயிருந்ததின் நிமித்தம் மாற்றப்பட்டது" (7:18)*

நியாயப் பிரமாணத்தினாலே ஒருவனும் நீதிமானாகிறதில்லை (கலா. 3:11). சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தால் (எபே. 2:15), மனிதனை விண் வீட்டிற்கு நடத்திச்செல்ல இயலாது. தலைமை ஆசாரியன் மட்டும், அதுவும் ஆண்டிற்கொருமுறை மட்டுமே, அதிதூய அகத்திலுள்ள கிருபாசனத்தண்டை சென்று வந்தான். இதினிமித்தம் இப்பழைய முறைமை பெலவீனமுள்ளதாயிருந்தது. ஆகையால் அம்முறைமையை மாற்றவேண்டியதாயிற்று – அல்லது அதற்கு மேலானதொன்று அவசியமாயிற்று.

### *"அதிக நன்மையான நம்பிக்கையை வருவிப்பதோ பூரணப்படுத்துகிறது" (7:19)*

நியாயப்பிரமாணத்தினாலோ, லேவிய ஆசாரிய முறைமையினாலோ, அதிக நன்மையான நம்பிக்கையை வருவிக்க இயலாது. ஆனால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஏற்படுத்தியுள்ள புதிய ஏற்பாட்டு முறைமையினாலே அந்நல் நம்பிக்கையை வருவிக்க இயலும் (ரோமர் 8:24; 5:2-5). கிறிஸ்து தனிப்பெரும் தலைமை ஆசாரியராயிருப்பதால், அவரை விசுவாசித்து இரட்சகராக ஏற்றுக்கொண்ட அனைவருக்கும் எந்நேரமும் கிருபாசனத்தண்டையில் செல்லும் தகுதியும் உரிமையும் உண்டு (4:16). லேவி கோத்திரத்தார்க்கு மட்டும் என்ற ஒரு வரம்பு இன்றி, இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து மறுபிறப்படைந்து இரட்சிக்கப்படுகிற அனைவருமே ஆசாரியராகும் நிலைபேற்றுரிமை இப்போது அருளப்பட்டுள்ளது (1 பேதுரு 2:5-9; வெளி. 1:6; 5:9). புதிய ஏற்பாட்டுச் சபையில் ஆசாரியர் என்ற தனி ஒரு பிரிவினர் இல்லை. மாறாக, இறை மக்கள் அனைவருமே ஆசாரியராவர். இயேசு கிறிஸ்து ஒரேதரம் பலியானதால், இனி வேறு எவரும் பாவமன்னிப்புக்காக, வேறொரு எத்தகைய பலியையும் செலுத்தித் தீர்க்கவேண்டியதில்லை. இன்றைக்கு அவரே நம் தனிப்பெரும் ஆசாரியராக இருப்பதினால் இனி வேறொரு ஆசாரியர் அவசியமில்லை. ஆம்! இனி வேறோரு ஆசாரியர் ஒருவருமே இல்லை (10:19-22).

### *நன்மையான (மேன்மையான) நம்பிக்கை*

இந்த உன்னத நம்பிக்கையின் பலவிதப் பண்புகளைத் தூய வேதம், பலவாறு விவரிக்கின்றது :

1. பரலோக நம்பிக்கை (கொலோ. 1:14).
2. மகிழ்ச்சியான நம்பிக்கை (1 தெச. 2:19).
3. மகிமையின் நம்பிக்கை (கொலோ. 1:27).
4. இரட்சிப்பின் நம்பிக்கை (1 தெச. 5:8).
5. நல் நம்பிக்கை (2 தெச. 2:16).
6. ஆனந்த பாக்கியமாம் நம்பிக்கை (தீத்து 2:13).
7. நங்கூரமாம் நம்பிக்கை (எபி. 6:19).
8. ஜீவனுள்ள நம்பிக்கை (1 பேதுரு 1:4).
9. சுத்திகரிக்கும் நம்பிக்கை (1 யோவான் 3:3).

கர்த்தரும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவுக்குள்ளாக நமக்கிருக்கும் இந்த நித்திய நம்பிக்கையின் மேன்மைதான் என்னே!

## இ) ஆணையினால் உண்டான ஆசாரியத்துவத்தின் மேன்மை (7:20-22)

*"அன்றியும், அவர்கள் ஆணையில்லாமல் ஆசாரியராக்கப்படுகிறார்கள். இவரோ, நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார். மனம் மாறாமலும் இருப்பார் என்று தம்முடனே சொன்னவராலே ஆணையோடே ஆசாரியரானார், ஆனதால் இயேசுவானவர் ஆணையின்படியே ஆசாரியராக்கப்பட்டது எவ்வளவு விசேஷித்த காரியமோ, அவ்வளவு விசேஷித்த உடன்படிக்கைக்குப் பிணையாளியானார்" (7:20-22).*

### *"அவர்கள் ஆணையில்லாமல், ஆசாரியராக்கப்படுகிறார்கள்" 7:20,21*

எவர்கள். . . ? ஆரோனும் அவன் புதல்வர்களுமே! முந்தினவர் மரணத்தால் மாற்றப்படுகையில், பிந்தினவர் வம்ச அட்டவணையின் அடிப்படையில், அடுத்த ஆசாரியராகிறார் (யாத். 28:1).

*"இவரோ . . . ஆணையோடே ஆசாரியரானார்"* – ஆனால் மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான ஆசாரியத்துவமோ, தேவனுடைய ஆணையினால் உறுதி செய்யப்பட்டதாகும்.

"நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார், மனம் மாறாமலும் இருப்பார்" (சங். 110:4). இச்சங்கீதம், எபிரெய நிருபம் எழுதுவதற்கு ஏறக்குறைய ஆயிரமாண்டுகட்கு முன்னரே தாவீதினால் எழுதப்பட்டதாகும். "இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினால், அவருக்குக் கிடைக்கப்பெற்றுள்ள தலைமை ஆசாரியத்துவம் ஆரோனிய ஆசாரியத்துவத்தைப் பார்க்கிலும் சிறப்பானதும், சந்தான வாரிசுரிமையின் அவசியமில்லாத நிலையில் என்றென்றும் மாறாததுமானது. கிறிஸ்துவில் இந்த ஆசாரியத்துவமோ, கர்த்தர் ஆணையோடுகூடக் கொடுத்தார் என்பதைத் தெளிவுறுத்தும் வகையில், மெல்கிசேதேக்கின் முறைமையின்படியானது என்பதை நூலாசிரியர் உறுதிபடக் காரணங்கள் பல சுட்டிக்காட்டி எடுத்துரைத்துள்ளார்.

### *"விசேஷித்த உடன்படிக்கை" (7:22)*

இந்நிருபத்தில் உடன்படிக்கை என்னுஞ்சொல், இவ்விடத்தில்தான் முதற்கண் வருகின்றது (8:6,8,10,13;10:16; 12:24; 13:20). புதிய உடன்படிக்கைக்குக் கர்த்தர் இயேசுவானவரே காரண கர்த்தர். திருக்குமாரரின் பலியினாலே இது மிகச் சிறப்பான உடன்படிக்கையாகிறது. இயேசு கிறிஸ்துவின் திரு உதிரத்தின் அடிப்படையில் இந்தப் புதிய உடன்படிக்கை துவங்கப்பெற்றுள்ளது.

*"பிணையாளியானார்"* – இது இயேசு கிறிஸ்துவுக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஓர் ஆச்சரியமான பெயராகும். 'பிணை' என்பதற்கு 'உடன்படு' என்று பொருள். 'பிணையாளி' என்பதற்கு 'உடன்பட்டவர்', 'ஈடுசெலுத்துபவர்', 'உறுதியளிப்பவர்' என்று பொருள் கொள்ளலாம்.

புதிய உடன்படிக்கையைத் துவங்குவதற்கும், தொடருவதற்கும் உரிய ஒரே "பிணையாளி" – "ஈடுகொடுப்பவர்" இயேசு கிறிஸ்துவே! அதற்கு அடிப்படை ஆதாரமாகிய பலியும், அதனை நிலை நிறுத்துகிற ஆசாரியரும், அவரேயாவார்.

## *ஈ) மாறிப்போகாத ஆசாரியத்துவத்தின் மேன்மை (7:23-25)*

*''அன்றியும், அவர்கள் மரணத்தினிமித்தம் நிலைத்திருக்கக் கூடாதவர்களான படியால், ஆசாரியராக்கப்படுகிறவர்கள் அநேகராயிருக்கிறார்கள். இவரோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறபடியினாலே, மாறிப்போகாத ஆசாரியத்துவ முள்ளவராயிருக்கிறார். மேலும், தமது மூலமாய்த் தேவனிடம் சேருகிறவர் களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு, அவர் எப்பொழுதும் உயிரோடிருக் கிறவராகையால், அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயிருக்கிறார்'' (7:23-25).*

இத்தகுதி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருவருக்கே உடையது.

### *"மரணத்தினிமித்தம் . . . அநேகராயிருக்கிறார்கள்" (7:23)*

லேவிய முறைமையின்படியான ஆசாரியராயுள்ளோர் மனிதர்களே ஆவர். அவர்களை அந்தந்தக் காலத்தில் மரணம் பறித்துக்கொள்ளுகிறது. இவ்விதமாக மரணத்தினிமித்தம் ஒவ்வொருவராக மாற்றப்பட்டு, தொடரும் புதிய ஆசாரியர் கள் ஒருவர்பின் ஒருவராக அவர்கள் அநேகராயிருக்கிறார்கள். யூத வரலாற்று ஆசிரியனாகிய ஜோசிஃபஸ் எழுதியுள்ள வரலாற்றுக் குறிப்பேட்டில், ஆரோன் முதற்கொண்டு எருசலேம் அழிக்கப்பட்ட கி. பி. 70 வரையிலுமுள்ள காலம் வரை சுமார் 83 ஆசாரியர்கள் அருட்பணி புரிந்துள்ளனர் என்று பதிவு செய்யப் பட்டுள்ளது (Anti xx - x - 1, 227 TEBC Vol. 12).

### *"இவரோ . . . மாறிப்போகாத ஆசாரியத்துவமுள்ளவராயிருக்கிறார்" (7:24)*

இவரது ஆசாரியத்துவம் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறது. இந்த ஆசாரியத்துவத்திற்கு மரபுவழி வாரிசுகளில்லை. ஏனெனில் இவரோ என்றென் றைக்கும் உயிரோடிருந்து நிலைத்திருக்கிறார். உயிர்தெழுதலுக்குப் பின் பரமேறிச் சென்று, தேவனிடம் பரிந்துரைக்கும் ஆசாரியராயுமிருக்கிறார். "என்றென்றைக்கும் உயிரோடிருக்கிற இவர், விசுவாசிகளுக்காக வேண்டுதல் செய்கிறார்" (ரோமர் 8:2).

*'இவரோ'* – என்று சுட்டிக்காட்டப்படும் நபர், மிகமிகச் சிறப்பானவரும் அருமையானவருமாவர். புதிய ஏற்பாட்டில் "இவர்" – "இந்த மனிதர்" என்று குறித்துக்காட்டி உணர்த்தப்படும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எத்தனை மேன்மையானவர்!

இவர் – பாவிகளை ஏற்றுக்கொள்ளும் அருமையானவர் (லூக்கா 15:2)!

இவரோ – தகாதவற்றை நடப்பிக்காத புண்ணியவான் (லூக்கா 23:41)!

இவரோ – என்றென்றும் மாறாத நித்திய ஆசாரியப் பணியைப் பெற்றவர் (எபி. 7:24)!

இவரோ – பாவங்களுக்காக இறை ஏற்புடைய ஒரே ஜீவ பலியைச் செலுத்தியவர் (எபி. 10:12)!

இந்த மனிதன் – தேடி ஆராய்ந்து பார்த்தும்,ஒரு குற்றமும் அற்ற நீதிமான் (லூக்கா 23:4)!

அந்த மனிதன் – இவரைப் போல் கிருபையுள்ள வார்த்தைகளையும் அதிகாரத்துடனும் பேசக்கூடியவர் வேறொருவருமில்லை (யோவான் 7:46)!

***முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்" (7:25)***

இது, பாவிகளாயிருப்பவர்களை நித்தியத் தண்டனையினின்று மீட்டல் என்பதன்று. பாவத்தின் தண்டனையினின்றும், அதின் வல்லமையினின்றும், பாவத்தின் சமூகத்தினின்றுங்கூட ஆவி, ஆத்துமா, சரீரத்தை முற்றுமுடிய இரட்சிப்பது என்று பொருள்படும். அதாவது, ஒருவனை நீதிமான் ஆக்குவதிலிருந்து, மகிமைப்படுத்துவது வரையிலுமுள்ள அனைத்துச் செயல்பாடுகளும் இதில் அடங்கும். இத்தகுதி இவர் ஒருவருக்கே தகும். இவர் பாவிகளுக்குப் பாவநிவாரண பலியாயும், விசுவாசிகளுக்குப் பரிந்துபேசும் தனிப்பெரும் தலைமை ஆசாரியருமாயும், என்றென்றும் நீடித்து நிலைத்திருக்கிறார்.

## *உ) பரிசுத்தமுள்ளவரினால் உண்டான ஆசாரியத்துவத்தின் மேன்மை (7:26-28)*

*"பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும் பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே, நமக்கு ஏற்றவராயிருக்கிறார். அவர் பிரதான ஆசாரியர்களைப் போல முன்பு சொந்தப் பாவங்களுக்காகவும், பின்பு ஜனங்களுடைய பாவங்களுக்காகவும், நாடோறும் பலியிட வேண்டுவதில்லை. ஏனெனில் அவர் தம்மைத்தாமே பலியிட்டதினாலே இதை ஒரே தரம் செய்து முடித்தார். நியாயப்பிரமாணமானது, பெலவீனமுள்ள மனிதர்களைப் பிரதான ஆசாரியராக ஏற்படுத்துகிறது. நியாயப்*

*பிரமாணத்திற்குப் பின்பு உண்டான ஆணையோடே விளங்கிய வசனமோ என்றென்றைக்கும் பூரணரான குமாரனை ஏற்படுத்துகிறது" (7:26-28).*

## "இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார்" (7:26)

இவர் எவ்விதமான பிரதான ஆசாரியர். . . ? இது வரையிலும் கூறப் பட்டுள்ளதும், இனி கூறவிருப்பதுமான ஒப்பற்ற குணப்பண்புகளுடைய தலைமை ஆசாரியரே இயேசு கிறிஸ்து! அவருடைய தூய்மையின் மேன் மையைச் சற்றுக் காண முயல்வோம்!

*1) பரிசுத்தர் (அப். 2 :27 ; 13:35)* – தேவன் என்னும் நிலையில் இயேசு கிறிஸ்து பரிசுத்தர்! வானங்களை விட உன்னதமானவர். வானங்களும் அவர் பார்வைக்குச் சுத்தமானவையல்ல. அத்தகைய முழுமையான தூய பரிசுத்தர். பிதாவாகிய தேவனுக்கும் நிகரான திருக்குமாரன், பூரண பரிசுத்தராகவே இருக்கிறார்.

*2) குற்றமற்றவர்* – மனித குமாரன் என்னும் நிலையில் அவர் குற்றமற்ற வராகத் தீமையற்றவராயிருக்கிறார். காட்டிக்கொடுத்த யூதாஸ் "குற்றமில் லாத இரத்தத்தை நான் காட்டிக்கொடுத்தேன்" என்றான் (மத். 27:4). பிலாத்து "நீங்கள் சாட்டுகின்ற குற்றங்களில் ஒன்றையும் நான் இவனிடத்தில் காண வில்லை" எனக்கூறினான் (லூக். 23:14). ஆம்! அவர் குறைவு இல்லாதவர், பழுது இல்லாதவர், குற்றமற்றவர், முற்றிலும் தூயர், தூயவரே (1 பேதுரு 1:19)!

*3) மாசில்லாதவர் (தீட்டுப்படாதவர்) (லேவி. 21:10-15)* – ஓர் ஆசாரியர் என்று சொல்லப்படத்தக்கவர் மாசில்லாதவராயிருத்தல் அவசியம். மாசும் மருவும் உள்ள இவ்வுலகத்தில் வாழ்ந்தும், மனித குமாரன் சற்றேனும் மாசில்லாதவராக, தீட்டுப்படாதவராயிருந்தார். இது அவருடைய சன்மார்க்கத் தூய்மையைக் காட்டுகிறது. பேதுரு எடுத்துக் கூறுகையில், "மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்து" (1 பேது. 1:19) என்றான்.

*4) பாவிகளுக்கு விலகினவர்* – இவ்வுலக வாழ்க்கையில் அவர் ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் நண்பராயிருந்தார் (மத். 11:19; லூக். 7:34; 15:2). பாவிகளில் அவர் ஒருவராக எண்ணப்பட்டார். பாவிகளிடம் அன்பு கூர்ந்தார். அவர் "பாவிகளின் சிநேகிதர்" என்று அழைக்கப்பட்டவராக இருந்தாலும், பாவிகளின் பண்புகள் யாவற்றினின்றும் அவர் அப்பாற் பட்டவர். இப்பரிசுத்தர் பரமேறிச் சென்ற பின்பு, பாவிகளுக்கு முற்றுமாக விலகி நின்று, இன்றும் விசுவாசிகளுக்காகப் பிதாவினிடம் பரிந்துரைத்துக் கொண்டிருக்கிறார்.

*5) வானங்களிலும் உயர்ந்தவர் (4 : 14)* – இவர் எல்லாப் பெயருக்கும் மேலான நற்பெயரையுடையவர். இவர் விண்ணவரிலும், மண்ணவரிலும், அனைத்து அதிகாரங்களையும் பெற்று, வெற்றிவாகை சூடி, வானகத் தந்தை யாரின் வலப்பக்கத்தில் அமர்ந்து, வானாதி வானங்களிலும் உன்னதரான மாமன்னர்! தேவாதி தேவன்!

***தம்மைத்தாமே பலியிட்டதினாலே இதை ஒரேதரம் செய்து முடித்தார் (7:27)***

ஒரு லேவிய முறையின்படியான ஆசாரியன், முதற்கண் தமது பாவங் களுக்காகப் பலி செலுத்தியாக வேண்டும் (லேவி. 4:3; 16:6). ஆனால் இவரோ – இயேசு கிறிஸ்துவோ முன் வசனத்திற் கண்டாற்போன்று புனிதராகையால், மாசு மருவற்ற தூயவராகையால், தமக்காக எவ்வித ஒரு பலியும் செலுத்த வேண்டிய அவசியமில்லாதவர். ஜனத்தின் பாவங்களுக்காக அவர் ஒருதரம் குற்ற நிவாரண பலியாகத் தம்மையே ஒப்புக்கொடுத்தார் (ஏசா. 53:10). ஆகவே பாவ நிவாரணத்திற்கென வேறொரு பலி இனியும் எஞ்சியிருக்கவில்லை. இயேசு பெருமான் விண்ணகம் சென்ற பின்பு தலைமை ஆசாரியத்துவத்தை ஏற்றுக் கொண்டார். ஆகவே ஒரே பலியும், ஒரே ஆசாரியரும் அவரேதான் என்பதே இவரின் ஒப்பற்ற சிறப்பு!

***"என்றென்றைக்கும் பூரணரான குமாரன் என்னும் பிரதான ஆசாரியர்" ("High Priest a son who has been made for ever pefect")***

நியாயப்பிரமாணம் பலவகையிலும் மட்டுள்ளதே, அது முழுமையானதன்று, குறைபாடுகள் நிறைந்துள்ள மனிதர்களையே அது தலைமை ஆசாரியராக்கி யுள்ளது. ஆனால் நியாயப்பிரமாணத்திற்குப் பின் வந்த, ஆணையோடு கூடிய திருவாக்கோ என்றென்றைக்கும் நிறைவு பெற்ற திருக்குமாரன் இயேசு கிறிஸ்துவை, ஒப்பற்ற குற்றமற்ற தூய தனிப்பெரும் தலைமை ஆசாரியராக ஏற்படுத்தியுள்ளது. என்னே இவ்வாசாரியத்துவத்தின் தனிச்சிறப்பு!

*(இரண்டாம் பகுதி முற்றிற்று)*

# பகுதி 3

# புதிய உடன்படிக்கை பழைய உடன்படிக்கையை விட மேலானது
## (8:1-9:28)

**இதுவரை** பழைய உடன்படிக்கையின் நாயகர்களாகிய மோசே, யோசுவா, ஆரோன், பிற தீர்க்கதரிசிகள், மற்றும் வான் தூதர்கள் போன்றோரை விடக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எவ்வகையிலும் மேலானவர் – சிறப்பானவர் எனத் தெளிவுபடுத்திய நூலாசிரியர்,இப்பொழுது தேவகுமாரன் மூலமாய்த் திருவுளம் பற்றின புதிய உடன்படிக்கையின் மேன்மைகளை எடுத்துக் கூறுகின்றார்.

## 1. புதிய உடன்படிக்கையின் மேன்மை (8:1-13)

இயேசு கிறிஸ்துவின் சிறப்பான ஆள் தன்மைக்கு மெல்கிசேதேக்கும், அவருடைய மேன்மையான அருட்பணிக்கு ஆரோனும் நிழலாட்டமாக உள்ளனர். அவருடைய ஆள் தன்மையின் மேன்மைகளை இவ்வாறு உறுதிபடக் கூறிய நூலாசிரியர், இப்பகுதியில் அவரது ஆசாரிய அருட்பணியின் சிறப்பியல்புகளை ஒன்றின்பின் ஒன்றாக விவரித்துரைக்கிறார்.

### 1. புதிய ஆசாரியரின் மேன்மை (8:1)

*"மேற்சொல்லியவைகளின் முக்கியமான பொருள் என்னவெனில், பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின் வலது பாரிசத்திலே உட்கார்ந்திருக்கிற வருமான ஆசாரியர் நமக்கு உண்டு". (8:1)*

லேவிய ஆசாரியத்துவம் தற்போது அப்புறப்படுத்தப்பட்டு விட்டபடியால், அதின் எல்லாப் பிரமாணங்களும் முறைமைகளும் மாறிப்போய்விட்டன. லேவிய ஆசாரியத்துவம் மட்டுள்ள, குறைவானதொன்றாகும். அந்த ஆசாரியர்கள், அதிதூயகத்தில் (மகா பரிசுத்த ஸ்தலத்தில்) *நின்றுகொண்டே* செயலாற்ற வேண்டும். அவர்களுக்கு அங்கே *அமரும்படி* அனுமதியில்லை. ஆனால் இயேசு கிறிஸ்துவோ தம் அருட்பணியாவையும் நிறைவேற்றின பின்பு, தம் பிதாவின் வலது ஆசனத்தில் உட்கார்ந்தார். இயேசு கிறிஸ்து அரசரும், ஆசாரியருமாவர். ஆதலால் அவர் அதிதூய இடத்தில் நின்று கொண்டு இருக்க வேண்டிய அவசியமில்லை, அவர் அங்கே *அமர்ந்திருக்கிறார்* (1:3; 7:24; 10:12) என்று கூறும் போது, தாம் மனிதனின் பிரதிநிதியாகத் தூய தேவனுக்கு முன்பாக நிறைவேற்ற வேண்டிய தேவையான அனைத்தையும், தேவனுக்கு முன் அங்கீகரிக்கப்படத்தக்க நிலையில், மீட்பின் கிரியையை முழுமையாக நிறைவேற்றி முடித்தார் என்றும், அவற்றை நிறைவேற்றிய நிலையில் இப்பொழுது ஒய்ந்து அமர்ந்திருக்கிறார் என்பதும் தெளிவாகிறது.

## 2. மெய்யான பரலோகக் கூடாரத்தின் மேன்மை (8:2-5)

*"பரிசுத்த ஸ்தலத்திலும், மனிதரால் அல்ல, கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்திலும். ஆசாரிய ஊழியஞ் செய்கிறவருமாயிருக்கிற பிரதான ஆசாரியர் நமக்குண்டு. ஒவ்வொரு பிரதான ஆசாரியனும், காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தும்படி நியமிக்கப்படுகிறான். ஆதலால் இவருக்கும் செலுத்தும்படிக்கு ஏதோ ஒன்று அவசியம் தேவையாயிருக்கிறது. பூமியிலே அவர் இருப்பாரானால் ஆசாரியராயிருக்க மாட்டார். ஏனெனில், நியாயப்பிரமாணத்தின்படி காணிக்கைகளைச் செலுத்துகிற ஆசாரியர்கள் இருக்கிறார்களே. இந்த ஆசாரியர்கள் செய்யும் ஆராதனை பரலோகத்திலுள்ளவைகளின் சாயலுக்கும் நிழலுக்கும் ஒத்திருக்கிறது. அப்படியே, மோசே கூடாரத்தை உண்டு பண்ணப்போகையில். 'மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே நீ எல்லாவற்றையும் செய்ய எச்சரிக்கையாயிரு' என்று தேவன் அவனுக்குக் கட்டளையிட்டார்" (8:2-5).*

***விண் வீட்டிலுள்ள மெய்யான கூடாரம்***

"பரிசுத்த ஸ்தலம்" (8:2; 9:24) – இது இம்மைக்குரியதல்ல, மறுமைக்கே உரியது. குறுகிய தற்காலத்திற்குரியதல்ன்று, முடிவில்லாத எக்காலத்திற்குமான நித்தியத்திக்குரியது. இது கண்ணுக்குப் புலப்படுவதும், புலப்படக்கூடியதுமன்று. விண்ணுலகமோ ஆண்டவருக்குரியது. இம்மண்ணகத்தையோ அவர் மனுமக்களுக்கு அளித்துள்ளார் (சங். 115:16). அந்த விண்ணகமே இந்தப் பரிசுத்த

இடம். நமது தனிப்பெரும் தலைமை ஆசாரியர் பரிந்து பேசுகிற மேன்மையான இடம்!

### *"கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரம்"*

மோசேயின் மூலம் கொடுக்கப்பட்ட ஆசரிப்புக் கூடாரம் வனாந்திரத்தில் நாட்டப்பட்டதாம். விண்ணில் அமைந்துள்ளதோ மெய்யான கூடாரம்; வனாந்தரத்தில் அமைத்ததோ மோசே அமைத்தது. கர்த்தர்தாமே அமைத்ததோ நிழலாக உள்ள வானாந்தரக்கூடாரத்தின் மெய்ப்பொருள். விண்ணுலகக் கூடாரத்தின் நிழலாக அமைந்துள்ள வனாந்தரத கூடாரம் தற்காலிகமானது, நிஜமான கூடாரமோ எக்காலத்திலும் நிலைநிற்பது. நிழலான கூடாரம் இம்மைக்குரியது, நிஜமான கூடாரமோ மறுமைக்குரியது. நிழலான கூடாரம் கண்ணுக்குப் புலப்படுவது, நிஜமான கூடாரமோ இந்தச் சரீரக் கண்களுக்குப் புலப்படாதது!

*"பிரதான ஆசாரியர் நமக்கு உண்டு"* – தனிப்பெரும் தலைமை ஆசாரியரான இயேசு கிறிஸ்து மேற்சொல்லிய மெய்யான கூடாரத்தில் தமது மேலான பணியினைத் தொடர்கின்றார். அவருடைய பணி, நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுதலும், நம் நிலையை தேவனுக்கு முன் எடுத்துரைப்பதுமாகும்.

### *"காணிக்கைகளும் பலிகளும்" (8:3)*

இரட்சகராகிய இயேசு தம்மைத் தாமே பலியாக ஒப்புக்கொடுத்தார். அதுவே மனுமக்களுக்கான பாவநிவாரண பலி. அது சிலுவையில் நடைபெற்று முடிவு பெற்றுள்ள ஒன்று (யோவான் 19:30)! பழைய உடன்படிக்கையின்படியான ஆசாரியர்கள், நிழலுருவமாக அமைந்துள்ள கூடாரத்தில், நிழலாயுள்ள ஒரு முறையிலேயே பலிகளைச் செலுத்தினர். மெல்கிசேதேக்கின் முறைமையின் படியான நமது தலைமைத் திருஆசாரியர் மெய்யான பலியைக் கல்வாரி பலிபீடத்தில் ஒரேதரம் நிறைவேற்றியுள்ளார்.

### *"பூமியிலே அவர் இருப்பாரானால் ஆசாரியராயிருக்கமாட்டார்" (8:4)*

ஆகவே வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குச் சென்றுள்ள தேவ குமாரனாகிய இயேசு என்னும் தனிப்பெரும் தலைமை ஆசாரியர் நமக்கு இருக்கிறார். நமது தலைமை ஆசாரியர் எங்கேயோ, அதுவே நமது ஆராதனைக் கூடம் ஆகும். லேவிய ஆசாரியப்பணி இம்மைக்குரியது; அது பூமியில் நிறைவு பெற வேண்டியது. மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான மெய்யான ஆசாரியத்திருப்பணி நிறைவேற்ற வேண்டிய இடம் விண் வீடாகும்.

***"மலையிலே காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே எல்லாவற்றையும் செய்யும்படி கட்டளையிட்டார்" (8:5)***

இஸ்ரவேல் வரலாற்றின் துவக்கக் காலத்தில், ஆசரிப்புக் கூடாரமும், அதின் தளவாடங்களுமே அவர்களுக்கு ஆன்மீகச் சத்தியங்களைக் கற்பிக்கும் செயல் விளக்கமாக இருந்தன. இவையனைத்தும் நிழல்களாகும்; இவை எடுத்துக் காட்டும் மெய்ப் பொருட்களோ பரலோகத்தில் இருந்தன.

மலையின் உச்சியில், பரலோகக் கூடாரத்தின் மாதிரியைக் கர்த்தர் மோசேக்குக் காண்பித்தார். தேவன் வழங்கிய அனைத்து ஒழுங்கு முறைகளுக்குச் சற்றேனும் மாறுபடாது, எல்லா வகையிலும் அம்மாதிரிக்கு இணங்கவே மோசே வனாந்தரத்தில் ஆசரிப்புக்கூடாரத்தை அமைத்தான். ஆகவே அது மெய்ப் பொருளுக்கு முற்றிலும் ஒத்ததாக இருந்தது. இதைக் குறித்துக்காட்டவே "கர்த்தர் மோசேக்கு கற்பித்தபடியே" கூடாரத்தில் உள்ள ஒவ்வொன்றையும் அவன் செய்து முடித்தான் என்று 40-ம் அதிகாரத்தில் ஏழுமுறை (பரிபூரண எண்ணிக்கை) எடுத்துச் சொல்லுவதைக் கவனிக்கவும். வனாந்தரத்தில் அமைக்கப்பட்ட ஆசாரிப்புக் கூடாரத்தின் மேன்மை இதுவே!

பல்வேறு காரணங்களால் மெய்ப்பொருளாக உள்ள வானகக்கூடாரம் மேன்மையுள்ளதாக விளங்குகிறது. இதற்குப் பூமியில் அமையப்பெற்றுள்ள பழைய கூடாரம் நிழலாக உள்ளது. அங்கே லேவிய முறைமையின்படியான மிருக பலிகளின் இரத்தஞ்சிந்துதல் இல்லை. அங்கே நித்தியப் பிரதான ஆசாரியர் நமக்கிருக்கிறார். தேவனின் பூரணப்பிரசன்னம் அங்கே காணப்படுகிறது.

## 3. "புதிய ஆசாரியத்துவத்தின் மேன்மை" (8:6)

*"இவரோ விசேஷித்த வாக்குத்தத்தங்களின் பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன்படிக்கைக்கு எப்படி மத்தியஸ்தராயிருக்கிறாரோ, அப்படியே முக்கியமான ஆசாரிய ஊழியத்தையும் பெற்றிருக்கிறார்" (8:6).*

பழைய ஏற்பாட்டு ஆசாரியர்கள் லேவியின் குல வழியைச் (கோத்திரத்தைச்) சேர்ந்தவர்கள். அவர்கள் தேவ கட்டளையின் முறைமையின்படியே மிருகங்கள், பறவைகளைப் பலியிட்டு வந்தனர்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து லேவியின் குலத்தைச் சேர்ந்தவரல்லர் எனவே லேவியின் முறைமையின்படியான பலிகளைச் செலுத்தாமல் அவர் தம்மைத் தாமே பலியாக ஒப்புக்கொடுத்தார். இன்று நமக்காகப் பரிந்துபேசுகிற நல்லதொரு நடுவராக (இடையாளாக) அவர் இருக்கிறார் (கலா. 3:19; 1 தீமோ. 2:5).

மத்தியஸ்தர் என்பது இடை மனிதர், அல்லது நடுவர் ஆவர். மத்தியஸ்தன் என்னுஞ்சொல்லை யோபு 9:33-லும் காண்கிறோம். அல்லது, அதுவும் இதனுடன் ஒத்திருக்கிறது என ஜொசிபஸ் கூறியுள்ளார்.[51]

## 4. புதிய உடன்படிக்கையின் மேன்மை (8:7)

*"அந்த முதலாம் உடன்படிக்கை பிழையில்லாதிருந்ததானால் இரண்டாம் உடன்படிக்கைக்கு ஒரு இடம் தேவையில்லையே" (8:7).*

***முதலாம் உடன்படிக்கை*** – கர்த்தர் இஸ்ரவேலரோடு செய்த உடன்படிக்கை, அது முற்றிலும் போதுமானதாயிருக்கவில்லை; எப்படியெனில்:

அ) இது பாவங்களைப் போக்க வலுவில்லாதது.

ஆ) இது நம்பிக்கையை வருவிக்கக்கூடாதது (7:19).

இ) இது வரப்போகும் ஒரு புதிய உடன்படிக்கைக்கு முன்னுரைத்தலாக மட்டுமேயிருந்தது (7:11,17).

உ) இது வேறொரு ஆசாரியர் நியமிக்கப்படுவார் எனவும், ஒரு புதிய உடன்படிக்கை ஏற்படுத்தப்படும் எனவும் எடுத்துரைக்கிறது.

புது (இரண்டாம்) உடன்படிக்கையோ மூன்று காரணங்களால் சிறப்பிடத்தைப் பெறுகிறது:

அ) இது விசேஷித்த வாக்குத் தத்தங்களின் பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன்படிக்கை (8:6).

ஆ) இது விசேஷித்த மத்தியஸ்தரால் கையளிக்கப்பட்ட மேலான உடன்படிக்கை (7:22; 8:6; கலா. 3:14).

இ) இது வரப்போகும் பிழையற்ற முழுமையான மெய்ப்பொருளான உடன்படிக்கை என அந்தப் பழைய உடன்படிக்கை முன்னுரைக்கிறது.

"இந்த (புதிய) உடன்படிக்கை என்றென்றைக்கும் உள்ளது, இது நிபந்தனைகளோடு கூடியதல்ல. இது ஒரு குறிப்பிட்ட இடத்திற்குரியதாயிராமல் அகில உலகளாவியது. இது அனைத்துத் தனி நபருக்குமுரியது, இது ஒரு தேசத்திற்கு மட்டும் உரியதன்று; அனைத்துக்காலத்திற்கும், அனைத்து மக்களுக்குமுரியது. இது மேலோட்டமானதாக இல்லாது, ஆழமாயுள்ள ஒரு முறைமையாகும்"
*– முனைவர் கிரிப்த் தாமஸ்.*

## 5. பழைய உடன்படிக்கை உருவழிந்து போயிற்று (8:8-13)

*"அவர்களைக் குற்றப்படுத்தி, அவர்களை நோக்கி, இதோ கர்த்தர் சொல்லுகிறதென்னவெனில், இஸ்ரவேல் குடும்பத்தோடும், யூதா குடும்பத்தோடும், நான் புது உடன்படிக்கையை ஏற்படுத்துங் காலம் வருகிறது. அவர்களுடைய*

*பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து கொண்டு வரும்படிக்கு நான் அவர்களுடைய கையைப் பிடித்த நாளிலே அவர்களோடு பண்ணின உடன்படிக்கையைப் போல இது இருப்பதில்லை, அந்த உடன்படிக்கையிலே அவர்கள் நிலை நிற்கவில்லையே, நானும் அவர்களைப் புறக்கணித்தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அந்த நாட்களுக்குப் பின்பு நான் இஸ்ரவேல் குடும்பத்தாரோடே பண்ணும் உடன்படிக்கையாவது: என்னுடைய பிரமாணங்களை, அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன், நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள். அப்பொழுது சிறியவன் முதற்கொண்டு பெரியவன் வரைக்கும் எல்லாரும் என்னை அறிவார்கள். ஆகையால் கர்த்தரை அறிந்துகொள் என்று ஒருவன் தன் அயலானுக்கும், ஒருவன் தன் சகோதரனுக்கும் போதிக்க வேண்டுவதில்லை. ஏனெனில் நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து அவர்கள் பாவங்களையும், அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். புது உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதைப் பழைமையாக்கினார்; பழைமையானதும் நாள்பட்டதுமாயிருக்கிறது; உருவழிந்துபோகக்காலம் சமீபித்திருக்கிறது" (8:8-13).*

பழைய உடன்படிக்கையைக் கொடுத்தருளிய தேவன்தாமே, எரேமியா தீர்க்கன் மூலமாய்ப் புதிய ஏற்பாட்டைக் குறித்தும் முன்னுரைத்துள்ளார் (எரே. 31:31-34). எபிரெய நிருப ஆசிரியர் இறைவாக்கினரின் அக்கூற்றை மேற்கோளாக எடுத்துக்கூறி, பழைய ஏற்பாட்டிலேயே ஒரு புதிய முறைமை வாக்களிக்கப்பட்டிருக்கிற தென்பதை இங்குச் சுட்டிக்காட்டுகிறார். புதிய ஏற்பாடு, இரண்டாவது உடன்படிக்கை என்பது மட்டுமல்ல, புதியதோர் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட ஒரு மேன்மையான உடன்படிக்கையுமாகும்.

முதலாம் உடன்படிக்கை நிபந்தனைகளோடு கூடியதாகும். கட்டளைகளைக் கடைப்பிடிப்பவன் அவற்றினால்தானே (பிழைப்பான்) உயிர் வாழ்வான் (கலா. 3:12). பழைய உடன்படிக்கை ஏதோ ஒரு வகைப் புறச்செயலைச் செய்ய வேண்டுமென வற்புறுத்துகிறது. முதலாவது உடன்படிக்கை தன்னில்தானே அகத்தில் அவசியமாயுள்ள மாற்றத்தை உருவாக்குவதில்லை. அது தேவ அன்பையும் கிருபையையும் முழுமையாக வெளிப்படுத்தவும் இல்லை (2 கொரி. 3:7-9).

### *"இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும்" (8:8)*

பழைய உடன்படிக்கையைப் பெற்ற யாக்கோபின் வழி வந்த இஸ்ரவேலர்கள், பிற்காலத்தில் 'இஸ்ரவேலர்', 'யூதேயர்' என இரண்டாகப் பிரிந்து விட்டனர். அதைத் தொடர்ந்து இரு தரப்பினரும் ஒன்றன்பின் ஒன்றாக அன்னிய தேசத்தாரின் ஆக்கிரமிப்பிற்கு ஆளாயினர். அதுவுமன்றி அன்னியர்களால் சிறைப் பிடித்துக் கொண்டும் செல்லப்பட்டனர். முதலாம் உடன்படிக்கையை அவர்கள் மீறினதே இதற்குக் காரணமாகும்.

***"நான் புது உடன்படிக்கையை ஏற்படுத்துங்காலம் வருகிறது" (8:8)***

இஸ்ரவேலர் எகிப்தினின்று விடுவிக்கப்பட்ட நாட்களில் செய்யப்பட்டதே பழைய உடன்படிக்கை. ஆனால் அவர்கள் அந்த உடன்படிக்கையை முரித்துப் போட்டுவிட்டனர் (எரே. 7:24-26; அப். 7:53). எனவே மற்றொரு புதிய உடன்படிக்கையின் இன்றியமையாத தேவை எழுந்தது. அந்தப் புதிய உடன் படிக்கைக்கான காலம் இதோ வருகிறது.

***"அந்த உடன்படிக்கையிலே அவர்கள் நிலை நிற்கவில்லையே" (8:9)***

ஆண்டவர் தங்களுக்குச் சொன்ன அனைத்தையும் மோசே எடுத்துச் சொல்ல, மக்கள் எல்லாரும் சேர்ந்து, ஆண்டவர் சொன்னவற்றையெல்லாம் செய்வோம் என ஏகமாய் உறுதி மொழிந்தனர் (யாத். 19:8). விண் தூதர்களின் வழியாக அவர்கள் இத்திருச்சட்டத்தைப் பெற்றிருந்தும், பின்னர் அவர்கள் அதைப் பின்பற்றவில்லை. "பழைய ஏற்பாடு நிபந்தனைகளுக்குரியது. ஆயினும், அது கிருபையின் அடிப்படையிலேயே ஆனதாகும்."[52]

***"அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன்" (8:10)***

பழைய உடன்படிக்கை, கற்பலகைகளில் எழுதப்பட்டது. அவற்றை அவர்கள் தங்கள் கைகளில் அடையாளமாகக் கட்டிக்கொள்ள வேண்டும், கண் களுக்கு நடுவே தொங்கியாடும்படி வைக்க வேண்டும்; மற்றும் வீட்டின் வாயிற் படியிலும், கதவின் நிலைகளிலும் எழுத வேண்டும் (உபா. 6,8,9). ஆனால் இந்தப் புதிய உடன்படிக்கையையோ, தேவனே அவர்களுடைய *இருதயங் களில்* எழுதுவார் (எரே. 31:33).

பழைய ஏற்பாட்டில் மோசேயின் மூலம் வாக்குத்தத்தம் செய்யப் பட்டவைகள் அனைத்தையும் (யாத். 6:7; லேவி. 26:12), புதிய ஏற்பாட்டின் இக்காலத்தில், இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தினால் நாம் உரிமைப் படுத்திக்கொள்ளலாம் (ரோமர் 5:2,15; கலா. 4:6).[53]

"நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்" (எரே. 31:33) என்று ஏற்கனவே தேவன் முன்னுரைத்தது, இப்பொழுது நிறைவு பெற்றுள்ளது.

***"நான் அவர்கள் தேவனாயிருப்பேன்" (8:10)***

யெகோவா இஸ்ரவேலரின் தேவன் ஆவார். அவர் "தம் சொந்த ஜனத்தின் தேவன்", "இஸ்ரவேலரின் தேவன்". அதுமட்டுமன்று, அவர் சில தனிப்பட்ட மனிதர்களுக்கும் உன்னதமான நிலையில் "ஆபிரகாமின் தேவன், ஈசாக்கின் தேவன், யாக்கோபின் தேவன்" (யாத் 3:6, 15, 16) என அறியப்பட்டிருந்தார். மேலும் அவர் "சேமின் தேவன்" (ஆதி. 9:26), "தானியேலின் தேவன்" (தானி.

6:26), "எலியாவின் தேவன்" (2 இரா. 2:14) என்றும் அறியப்பட்டிருந்தார். இன்றைய புதிய ஏற்பாட்டுக் காலத்திலோ அவர் நமக்குக் கீழ்க்காணும் ஏழு முறைகளில் சிறப்பான தேவனாக விளங்குகிறார்:

1. மகிமையின் தேவன் (அப். 7:2).
2. அன்பின் தேவன் (2 கொரி. 13:11).
3. பொறுமையின் தேவன் (ரோமர் 15:6).
4. ஆறுதலின் தேவன் (2 கொரி. 1:3).
5. சமாதானத்தின் தேவன் (ரோமர் 15:33; பிலி. 4:9).
6. நம்பிக்கையின் தேவன் (ரோமர் 15:13).
7. கிருபையின் தேவன் (1 பேதுரு 5:10).

*"கர்த்தரை அறிந்துகொள் . . . என்று போதிக்க வேண்டியதில்லை" (8:11)*– பழைய ஏற்பாட்டில் குருக்கள் மட்டுமே வேதத்தைக் கற்றறிந்தவராகவும், கற்பிக்கிறவர்களாகவும் இருந்தனர். ஒரு சராசரி இஸ்ரவேலனைப் பொறுத்த மட்டிலும், பழைய ஏற்பாட்டுத் திருமறை நூல் சத்தியங்கள் புலனாகாத ஒன்றாகும் என்றே மக்கள் கருதிவந்தனர்.

ஆனால் புதிய ஏற்பாட்டு இக்காலத்தின் நிலையோ அதினின்று முற்றும் மாறுபட்ட ஒன்றாகும். புதிய ஏற்பாட்டுக் காலத்தில், இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் அனைவரும் யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனன் என்றுமில்லை, ஆணென்றும், பெண்ணென்றுமில்லை, எல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாகவேயிருக்கிறார்கள் (கலா. 3:28). "அவர்கள் தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு சந்ததி!" வேத வாக்கியங்கள் "கற்பலகையில் அல்ல, விசுவாசிகளின் உள்ளங்களாகிய உயிருள்ள பலகைகளிலேயே எழுதப்பட்டுள்ளன" (2 கொரி. 3:3). எனவே அவை அனைவருக்கும் ஆன்மீக அறிவையும், கடவுளைப் பற்றிய ஞானத்தையும் அளிக்கின்றன (ஏசா. 54:13; யோவான் 6:45; எண். 11:29; 1 யோவான் 2:27). வேறொருவர் உரை கற்பித்து, விளக்கிச் சொல்லத் தேவையில்லாதபடி, பரிசுத்த ஆவியானவரே அனைத்து விசுவாசிகளின் உள்ளங்களில் சகலவற்றையும் கற்பித்து, உண்மையை எடுத்து உரைக்கிறார் (1 யோவான் 2:20, 21).

*"பாவங்களையும், அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் (8:12)"* புதிய உடன்படிக்கையின்படி கர்த்தர், மனுமக்களின் அக்கிரமங்களைக் கிருபையாகப் பரிவிரக்கத்தோடு மன்னிக்கிறார். ஆயினும் தேவனுடைய ஒரே

நிபந்தனை, இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிக்கப்பட வேண்டும் என்பதாகும். அவர் அவர்களது பாவங்களையும் அக்கிரமங்களையும் பின்னர் ஒரு போதும் நினையார் (8:12; 9:14; 10:17). பழைய உடன்படிக்கையின் இயலாமையும், புதிய உடன்படிக்கையின் மேன்மையும் இவையேயாம் (9:9; 10:4, 11).

***"புது உடன்படிக்கை என்று சொல்லுகிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார்" (8:13)***

புது உடன்படிக்கை என்பது இஸ்ரவேலர், யூதேயர் என்னும் இருதிறத்தாருக்கும், அனைத்துலகத்துக்கும் உரியதாகும். அதன் வரையரைகள் எல்லையற்றதும், எக்கால, எத்தேசத்தவர்களுக்கும் உரியவையாகும் (8:8). அதன் இயல்புகளும், நிலைகளும் முதலாம் உடன்படிக்கையைப் போன்றதன்று (8:9). இது உள்ளானதும் (8:10) பயனுள்ளதும், நிறைவானதும், விடுதலையினை வரவழைப்பதும் ஆகும் – வெஸ்ட்காட்.[54]

ஆம்! புது உடன்படிக்கை என்றென்றைக்கும் நிலைத்து இருக்கிறது. அது தனி ஒரு நபரைப் பற்றினது, உள்ளானது, ஆவிக்குரியது, மேன்மையானது. இதன் மத்தியஸ்தர் வான் தூதர்களையும், மோசேயையும், ஆரோனையும் விட மேலானவர். அவர் இரட்சகராகிய இயேசு பெருமானாவர்! (2:11; 9:16; 10:29). புது உடன்படிக்கையின் சிறப்பியல்புகள் எவ்வளவு மேலானவை என்று கூர்ந்து பாருங்கள்!

*பழைய, புதிய உடன்படிக்கைகளுக்கிடையே உள்ள*

*வேறுபாடுகளை விவரிக்கும் அட்டவணையை*

*அடுத்த பக்கம் காண்க.*

## 6. பழைய, புதிய உடன்படிக்கைகளுக்கிடையே உள்ள வேறுபாடுகள்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள்ளாக நாம் பெற்றிருக்கும் புதிய உடன்படிக்கையின் மேன்மைகள் எபிரேயர் 8-ம் அதிகாரத்தில் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளன. இந்நிருபத்தில் பயன்படுத்தியுள்ள "விசேஷித்த உடன் படிக்கை" என்ற சொற்றொடர் முதன் முதல் 7:22-ல் எடுத்தாளப்பட்டுள்ளது.

இவ்விரண்டு உடன்படிக்கைக்குமுள்ள வேறுபாடுகளும், இரண்டாவதின் மேன்மையும் இங்கு, கட்டமிட்டு விவரமாக விளக்கப்பட்டுள்ளன.

| பழைய உடன்படிக்கை | புதிய உடன்படிக்கை |
|---|---|
| 1. இது கடினமான, வறட்சியான, பயன் விளைவிக்கக்கூடாத கற்பலகைகளில் எழுதப்பட்டது ஆகும். (யாத். 31:18). அதைப் பின்பற்றுபவர்களுக்கு பயனை உள்ளத்தில் கொண்டு வருவதில்லை. | 1. இது மனிதர்களின் சதையாகிய இருதயத்தில் எழுதப்பட்டுள்ளது (2 கொரி. 3:3). இதினிமித்தம் இப்புதிய இறை மக்களின் எதிர்பார்ப்புகள், உயிரூட்டமுள்ள ஆவிக்குரிய வாஞ்சையாக மாற்றப்பட்டிருக்கின்றன. |
| 2. இது எழுத்தளவிற்குரிய பிரமாணம். ஆகையால் இது உள்ளான பக்தியும், விருப்பமும் அற்று, கண்டிப்பின் பேரில் கைக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. | 2. இது புதியதோர் ஆவிக்குரிய பிரமாணம். இது விசுவாசியின் இருதயத்தில் உயிரோட்டத்தையும் எதிர்நோக்குதலையும், வாஞ்சையையும் உருவாக்கி விடுகிறது. |
| 3. இது ஒரு மரண ஊழியமாக விளங்குகிறது."எழுத்து கொல்லுகிறது" (2 கொரி. 3:6). "கற்பனை வந்தபோது. . . நான் மரித்தவனானேன்" (ரோ. 7:9). | 3. இப்புதிய பிரமாணமோ, ஜீவன், விடுதலை இவைகளுடன் சம்பந்தமுடையதாயிருக்கிறது. "ஆவியோ உயிர்ப்பிக்கிறது" (2 கொரி. 3:6). |
| 4. பழைய உடன்படிக்கை, உண்மையாகவே, மகிமையோடுகூட அமுலாக்கப்பட்டது. இது சீனாய்மலையில் இடி முழக்கங்கள், மின்னல்கள், சத்தங்கள், விண்தூதுவர்கள் இவைகளுடன் சம்பந்தப்பட்ட நிலையில் கொடுக்கப்பட்டது. | 4. புதிய உடன்படிக்கையோ, பழையதைக்காட்டிலும் அதிக மகிமைக்குரியதாயுள்ளது. இந்த மகிமை கொடுக்கப்பட்ட அந்நேரம் துவங்கி நிலைத்திருக்கும் நித்திய பரலோக மகிமையுடையதாயிருக்கிறது (2 கொரி. 3:11). |

| | |
|---|---|
| 5. பழையது குற்றப்படுத்தும் தன்மை யுள்ள உடன்படிக்கையாயிருந்தது. அது கருணை காட்டாது, கொடிய தீர்ப்பை யளிக்கக்கூடியதாயிருந்தது. | 5. புதியதோ, கிருபையின் உடன்படிக் கையாகும். இது நீதியை அருளுவதாய், ஒப்புரவாக்குதலையும், மீட்பையும் கொண்டுவருவதாயுமிருக்கிறது. |
| 6. இது குறுகிய காலத்திற்கு உரியதும், கடந்து போகக்கூடியதுமாயிருந்தது. இதன் மகிமை மங்கிவிடும். இது பழமை யாகிவிடக் கூடியதுமாயிருந்தது. | 6. புதியதோ, நித்தியத்திற்குரியது. இது யெகோவா இறைவனின் பரலோக சிங்கா சனத்திற்கு ஒப்பானதாய், உறுதியானதும், என்றென்றும் நிலை நிற்பதுமாகும். |
| 7. மோசேயின் முக்காடிட்டிருந்த முகத் துடன் இணைந்ததாக இவ்வுடன்படிக்கை விளங்கினது. இம்மகிமை மங்கிவிடக் கூடியதும், மூடிவைக்க வேண்டிய இயல் புடையதாகவும் இருந்தது | 7. புதிய உடன்படிக்கையோ முக்கா டிட்டிராத, பிரகாசமான இயேசு கிறிஸ்து வின் முகத்தின் மகிமையின் ஒளியுடை யதாக விளங்குகிறது. கிறிஸ்துவின் முகத்திலுள்ள மகிமையின் ஒளியின் அறிவைப்பெற்றவர்களாக நாம் இருக்கி றோம் (2 கொரி. 4:6). |

இச்சிறப்பான, மேன்மையான புதிய உடன்படிக்கை, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உறுதியைப் பெற்றதாயிருக்கிறது. அவரே இதன் வாக்குறுதியும், நிச்சயமும், உத்திரவாதியாயுமுள்ளார்.

மேன்மையான இவ்வுடன்படிக்கை ஏழு வகைகளில் சிறப்பானதாகும் (8:10-12):

1. நான் என் பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைப்பேன்.
2. அவர்களுடைய இருதயத்தில் அவற்றை எழுதுவேன்.
3. நான் அவர்கள் தேவனாயிருப்பேன்.
4. அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்.
5. எல்லோரும் என்னை அறிவார்கள்.
6. அநியாயங்களைக் கிருபையாய் மன்னிப்பேன்.
7. அவர்கள் பாவங்களையும், அக்கிரமங்களையும் இனி நினையா திருப்பேன்.

இப்புதிய உடன்படிக்கை, பழையதை மாற்றிப் புதியதைப் புகுத்தும் ஒன்றாக மட்டும் அமையாது, முற்றிலும் மேன்மையும் சிறப்பானதுமான ஒன்றாக விளங்கி (8:6), பழையதோடு சம்பந்தப்பட்ட அனைத்திற்கும் எவ்விதத்திலும்

மேற்பட்டு, சிறந்து உள்ளது. இது ஒரு மேலான வாக்குத்தத்தம் (8:6). இப்பொழுது நமக்கு ஒரு மேன்மையான ஆசாரியத்துவம் உண்டு, ஒரு மேன்மையான பலி செலுத்தப்பட்டுள்ளது (9:23). இப்பொழுது ஒரு மேன்மையான உயிர்த்தெழுதல் உண்டு (11:35). ஒரு மேன்மையான நம்பிக்கை இருக்கிறது (7:19). ஓர் உன்னத, மேன்மையான நாடு நமக்குமுன் உள்ளது (11:16). அனைத்தும் பழையதைவிடக் கூடுதலானவை, சிறப்பானவை, கிறிஸ்து இயேசுவுக்குள் மேலானவையாயுமுள்ளவை (11:40).

விண் தூதுவர்களைவிட மேன்மையான, இறை வாக்கினர்களைவிடச் சிறப்பான, பழைய முறைமையின் நாயகன்மார்களை விட உன்னதமான இறை நாயகனாகிய இயேசு கிறிஸ்துவினாலே நாம் இவற்றைப் பெற்றிருக்கிறோம். மேன்மையான இவருக்குள், "விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்" (11:40).

## II. புதிய உடன்படிக்கையின் அருட்பணி, பழைய அருட்பணியினும் மேலானது (9:1-28)

### 1. பழைய உடன்படிக்கையின் பொருள் (9:1-10)

முந்தைய அதிகாரத்தில் நடுவராக இருக்கின்ற இயேசு கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கையின் பல மேன்மையான நிலைகளை விளக்கியதைத் தொடர்ந்து, இவ்வதிகாரத்தில் லேவியராகமம் 16-ம் அதிகாரத்தை மையமாகக் கொண்டு இயேசு கிறிஸ்துவின் மீட்பின் செயல் முறைகள் விளக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். அதுவுமன்றி, இங்கே பூமியின் கூடாரத் திருப்பணியும், பாலைவனக் கூடாரத்தின் திருப்பணியும் ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

#### *அ. பழைய உடன்படிக்கையின்படியான ஆசரிப்புக் கூடாரம் (9:1-5)*

*"அன்றியும், முதலாம் உடன்படிக்கையானது, ஆராதனைக்கேற்ற முறைமைகளும் பூமிக்குரிய பரிசுத்த ஸ்தலமும் உடையதாயிருந்தது. எப்படியெனில், ஒரு கூடாரம் உண்டாக்கப்பட்டிருந்தது; அதின் முந்தின பாகத்தில் குத்துவிளக்கும், மேஜையும்,தேவ சமுகத்தப்பங்களும் இருந்தன. அது பரிசுத்த ஸ்தலமென்னப்படும். இரண்டாந்திரைக்குள்ளே மகா பரிசுத்த ஸ்தலமென்னப்பட்ட கூடாரம் இருந்தது. அதிலே பொன்னாற் செய்த தூபகலசமும், முழுவதும் பொற்றகடுகளால் பதிக்கப்பட்டிருந்த உடன்படிக்கைப் பெட்டியும் இருந்தன. அந்தப் பெட்டியிலே மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரமும், ஆரோனுடைய*

*தளிர்த்த கோலும், உடன்படிக்கையின் கற்பலகைகளும் இருந்தன. அதற்கு மேலே மகிமையுள்ள கேருபீன்கள் வைக்கப்பட்டுக் கிருபாசனத்தை நிழலிட்டிருந்தன. இவைகளைக் குறித்து விவரமாய்ப் பேச இப்பொழுது சமயம் இல்லை." (9: 1-5)*

### *"பூமிக்குரிய பரிசுத்த ஸ்தலம்" (9:1)*

பழைய உடன்படிக்கையின்படி ஆராதனைக்குரிய சில குறிப்பிட்ட முறை மைகளும், அதின் நிகழிடமுமாகிய ஆசரிப்புக் கூடாரம் நிலைநாட்டப் பட்டிருந்தது. சாலொமோன் எருசலேமில் எழுப்பிய தேவாலயத்தையும் இது குறிக்கும்.

### *ஆசரிப்புகூடாரத்தின் பணி முட்டுச் சாமான்கள் (9:2-5)*

இப்பகுதியில் 2 முதல் 5 வரையுள்ள வசனங்களில் ஆசரிப்புக் கூடாரத்தின் ஒரு சில பணிமுட்டுச் சாமான்களின் ஆன்மீகப் பொருளை நூலாசிரியர் இங்கு மிக அழகாக விவரித்துக் காட்டுகிறார்.

ஆசரிப்புக் கூடாரத்தில் முதலாங்கூடாரம் (பரிசுத்த ஸ்தலம் – தூயகம்), இரண்டாங் கூடாரம் ( மகா பரிசுத்த ஸ்தலம் – அதிதூயகம்) என்னுமிரு பகுதி கள் இருந்தன (9:3, 6, 7). முதலாங்கூடாரம், இரண்டாங் கூடாரத்தைவிட இரு மடங்காக இருந்தது.

### *முந்தின பாகத்தில் பொற்குத்து விளக்கும் சமூகத்தப்ப மேஜையும் இருந்தன. (9:2)*

நிருப ஆசிரியர் தூயகத்திலிருந்த இரு பொருட்களை இங்குச் சுட்டிக் காண பிக்கிறார். ஒன்று பொற் குத்துவிளக்கு, பிறிதொன்று தேவ சமூகத்தப்பங்களை (காணிக்கை அப்பங்களை) வைக்கின்ற மேஜை (9:2; யாத். 25:23-37; 40:24). இவை உலகத்தின் ஒளியும், ஜீவ அப்பமுமாக உள்ள ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்துக் காட்டுபவைகளாகும் (லேவி. 24:6; யோவா. 8:12; 6:35).

### *"இரண்டாந் திரைக்குள்ளே . . ." (9:3)*

இந்தத் திரை தூயகத்தையும் அதி தூயகத்தையும் வரையிட்டுக் காட்டு கின்றது (யாத். 26:31-34). இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரண வேளையில் தேவாலயத்தின் திரை மேலிருந்து கீழ்வரை இரண்டாகக் கிழிந்த (மத். 27:51) சம்பவம் நடந்திருக்கிறது. இது இயேசு கிறிஸ்துவின் சிலுவைப் பலி மரணத்தின் அடிப்படையில் ஒரு விசுவாசி அதிதூயகத்திற்குள் செல்லும் புதியதொரு வழி இப்பொழுது திறக்கப்பட்டுள்ளதைத் தெரிவிக்கிறது.

*"அதிலே பொன்னாற் செய்த தூப கலசம்"* – ஆசரிப்புக் கூடாரத்தில் வைக்கப்பட்டிருந்த சாமான்களைக் குறிப்பிடுகையில், தூப கலசத்தையல்ல தூப பீடத்தையே குறிப்பிட்டிருக்க வேண்டும். இது தூபங்காட்டுவதற்குரிய இடம் எனவும், தூபங்காட்டுவதற்குரிய கருவி எனவும் பொருள் கொள்ளலாம். இங்கே வரும் தூப கலசம் என்னும் சொல்லுக்கு கிரேக்க மொழியில் *'துமியாற்றியோன்'* (Thumiaterion) என்பதாகும். எபிரெய அறிஞர்களாகிய பைலோ, ஜோசிபஸ் ஆகியோர் இவ்வார்த்தைக்கு 'தூப பீடம்' என்னும் பொருளையே கொள்ளுகின்றனர்.

### *தூப பீடத்தின் இடம் (யாத். 30:1,6,7)*

தூயகத்தையும், அதி தூயகத்தையும் வரையறுக்கின்ற திரைக்கு மிக அருகில் தூபபீடம் தூயகத்தினில் வைக்கப்பட்டிருந்தது (யாத். 40:5, 22, 24, 26; 1 இரா. 6:22). மகா பாவநிவாரண நாளின்போது,தூப பீடத்திற்கும் பிராயச்சித்தம் பண்ண வேண்டும் (யாத். 30:10). தலைமை ஆசாரியன் ஆண்டுக்கு ஒரு நாள் மட்டுமே தூபகலசத்துடன், அதிதூயகத்திற்குச் செல்லக் கூடியவனாக இருந்தான் (யாத். 30:10). எனவேதான் எபிரெய நிருப ஆசிரியர் அதிதூயகத்தோடு சேர்த்து இதைச் சொல்லியிருக்கின்றார் என்று வேத பண்டிதர்கள் கருதுகின்றனர்.

இது பற்றி முனைவர் அயன்சைடு கூறியதை, K. G. குரியன் எடுத்துரைத்துள்ளார். அவையாவன "தூப கலசம் என்று இங்கே சொல்லியிருப்பது, தூப பீடத்தைப் பற்றியதே என்பதற்கு இம்மியளவும் ஐயமில்லை. ஆனால் அது தூயகத்தில்தான் உள்ளது என்று ஆக்கியோன் ஏன் சொல்லவில்லை. அதை அதிதூயகத்தோடு சேர்த்துச் சொல்லுவானேன்? அதற்குரிய விடை மிக எளிதாகும். இது கிறிஸ்துவின் ஆள் தன்மைக்கும், அதிதூயகத்தில் நிகழும் இடைநிலைத் திருப்பணிக்கும் தூப கலசம் நிழலாக இருப்பதாலேயாகும். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தூப பீடம் திரைக்கு வெளியே ஆசாரியர் எளிதில் அணுகும்படி மிக அண்மையில் வைக்கப்பட்டிருந்தது. கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் போது ஆலயத்தின் திரை மேலிருந்து கீழ்வரை இரண்டாகக் கிழிந்து போகவே, தூப பீடத்தினின்று கமழும் நறுமணம் அதிதூயகத்தில் வீசும் நிலையில் திரை இருந்த இடத்தின் அண்மையில் தூயகத்திலே இருக்கக் கூடியதாயிற்று. எனவே அதிதூயகத்தோடு சேர்த்துச் சொல்லப்பட்டிருக்கிறது எனக் கொள்க".[55] இந்நிருபம் கிறிஸ்துவின் மரணத்திற்குப்பின் எழுதப்பட்டதாகையால், இன்று நிலவும் இத்தகைய கருத்துடன் நூலாசிரியர் எழுதியுள்ளார் என நாம் உறுதியுடன் கூறலாம்.

### ஆ. பிரதான ஆசாரியன்

எபிரெயர் 9:7-ல் காணும் பிரதான ஆசாரியன் "மாத்திரம்" என்ற பதம் ஒரு முக்கிய கருத்தினை நமக்கு எடுத்துணர்த்துகிறது. இது மற்ற ஆசாரியர்களுக்கு இடையில் பிரதான ஆசாரியன் "மட்டுமே" அதிதூய அகத்திற்குள் பிரவேசிக்கக்கூடியவனாயிருந்தான் என்ற பொருளுடையதாக இருப்பினும், மற்றொரு பெரும் உண்மையை இது உணர்த்திக் காட்டுகிறது. அதாவது நம்முடைய பிரதான ஆசாரியராகத்திகழும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எவ்வாறு அவர் ஒருவரே தனித்தவராக உள்ளார் என்பதையும், "அவர் மட்டுமே" இந்த ஆசாரிய ஊழியத்தை நிறைவேற்றினார் என்பதையும் குறித்துக் காட்டுகிறது. அதற்கு "அவர் ஒருவரே தகுதியானவர்" என்பதை நாம் சுவிசேஷங்களில் காண்கிறோம்.

1. அவர் விண்ணப்பம் பண்ணி ஜெபித்த நேரங்களில் தனித்தவராக "அவர் மட்டுமே" அதைச் செய்தார் (மத். 14:23).

2. அவர் தம்முடைய ஊழியத்தில் தனித்தவராக "அவர் மட்டுமே" அதை நிறைவேற்றினார். பொறுமையோடும், உண்மையோடும் தாழ்மையோடும், அவர் மக்களுக்குப் போதித்தார். கேள்விகள் கேட்கும்போதும், விளக்கம் கொடுக்கும்போதும் அவர் தனித்திருந்தார் (மத். 13:36).

3. தம்முடைய இறைக் குமாரத்துவத்தின் மகிமையில் அவர் 'ஒருவரே' காணப்பட்டார். அவர் 'மட்டுமே' அம்மகிமைக்குப் பாத்திரர் (லூக்கா 9:36).

4. அவர் மேசியாவாக விளங்குவதில் தனித்தன்மை உடையவராவர். அவர் "தனித்து ஜெபம்பண்ணிக் கொண்டிருக்கையில்" அவர் கேட்ட கேள்விக்குப் பேதுரு "தேவனுடைய கிறிஸ்து" என்று பதில் கொடுத்தான் (லூக்கா 9:18-20).

5. தம்முடைய பாடுகளில் அவர் ஒருவராக நின்று, நமக்குப் பதில் ஆளாகப் பாடுபட்டார். "நான்தான் இவர்களைப் போக விடுங்கள்." (யோவான் 18:6-8) என்று கூறுகையில் அவர் தம்மைத் தனிமைப்படுத்திக் கொண்டார். "தன் சகோதரருக்கு அவர் வேற்று மனிதனும் அந்நியனுமானார்" (சங். 69:8). தான் பாடுகளைச் சகிக்கும்படி சென்ற போது "என்னைத் தனித்து விட்டு விடுங்கள்" (யோவான் 16:32) என்று சொல்லித் தனி ஒருவராக, அவர் மட்டுமே நம் அனைவரின் பாடுகளையும் சுமந்தார்.

ஆம், மெய்யாகவே அவர் "தனித்தவராக", "ஒருவராக", "அவர் மட்டுமே", "தனிமையில்", நமக்கும் தூய நீதியுள்ள இறைவனுக்கும் இடையாளாக – தகுதி வாய்ந்த தலை சிறந்தவராக நின்றார். "பிரதான ஆசாரியன் மட்டுமே" என்ற வாசகத்தில், மெய்ப்பொருளாக விளங்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இத்தனித்தன்மைகளும், மேன்மைகள் யாவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

## *இ. பொற்றகடு பொதித்திருந்த உடன்படிக்கைப் பெட்டி (9:4)*

இந்த உடன்படிக்கைப் பெட்டி ஆசாரிப்புக் கூடாரத்தில் வைக்கப்பட்டுள்ள மிக முக்கியமானதொன்றே. இது தேவனின் சமூகப் பிரசன்னத்தைக் குறித்துக் காண்பிக்கிறது. இது "சாட்சிப்பிரமாணப் பெட்டி" எனவும் அழைக்கப்பட்டுள் ளது (யாத். 25:16-21; 1 இரா. 8:9). இப்பெட்டியில் மூன்று பொருட்கள் வைக்கப் பட்டிருந்தன; அம்மூன்றும் ஒரு செய்தியையே கொடுக்கக் கூடியவைகளாகும். இவை இஸ்ரவேல் தேசத்தின் பாவங்களையும், மற்றும் அப்பாவங்களுக்கு ஒரு நிலையான தீர்வையும் கொண்டுவரக்கூடிய மகிமையான ஒருவரைக் குறித்துக் காட்டுபவைகளாகவும் இருந்தன. ஒருவிதச் சிறப்பான முறையில் இம்மூன்றும் உள்ளன.

### *"அந்தப் பெட்டியிலே மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரம் இருந்தது." (யாத். 16:33,34; எண். 17:10)*

பாலைவனப் பயணத்தின் போது இஸ்ரவேலருக்கு உணவாகக் கொடுக்கப் பட்ட மன்னா, மனுக்கோலம் பூண்ட இயேசு கிறிஸ்துவிற்கு அழகியதொரு அடையாளமாகும். இது அவர்களது அவ்வனாந்திர யாத்திரையில் அவர் களுடன் வாசமாயிருந்த யெகோவா இறைவனின் மகிமையான சமூகப் பிரசன்னத்திற்கு அடையாளமாம்; மற்றும் இது இந்த இஸ்ரவேல் மக்களின் முறுமுறுப்பையும், எகிப்தில் அவர்கள் உண்ட உணவையும்,புசித்த இறைச்சி யையும் அவர்கள் ஞாபகப்படுத்தியதைக் குறித்துக் காட்டுகிறது. அவர்கள் "எகிப்தென்கிற இரும்புக்காளவாயிலில்" (1 இரா. 8:51) அனுபவித்த கொடிதான அடிமைத் தனத்தையும், பளுவான வேலையையும், சவுக்கு அடியையும் மறந்து, அங்கு உண்ட சுவையான உணவையே ஞாபகப்படுத்திக் கொண்டனர். கிறிஸ் துவை அடையாளப்படுத்துகிற மன்னாவைக் குறித்து அவர்கள் குற்றம் கண்டு பிடித்தனர். அவர்கள் அதை மதிக்கவில்லை. வரப்போகிற தேவ அப்பமும், ஜீவ அப்பமுமாக உள்ளவரை இது குறித்துக்காட்டுவதினால் தேவனோ அதை அதிகமாகக்கருத்தில் கொண்டார். ஆகையால் மன்னா அவர்கள் முறுமுறுத்த பாவத்தையும். அதற்குப் பரிகாரமாக வரவிருக்கும் கிறிஸ்துவுக்கும் அடையாள மாயிருக்கிறது.

### *"ஆரோனுடைய துளிர்த்தகோல்" (எண். 17:1)*

இஸ்ரவேல் மக்கள் மோசேக்கும், ஆரோனுக்கும் விரோதமாகக் குற்றம் சாற்றியது (எண். 16) ஒரு மகா பெரிய தேசியப் பாவமாகும். இக்குற்றச்சாட்டை ஒரு தேசிய முறையில் யாவரும் வெளிப்படையாக உணர்ந்து கொள்ளத்தக்க வகையில் தேவன் நிரூபித்துக்காட்டினார். ஆரோனுடைய கோல் மட்டுமே

துளிர்த்து, பூப்பூத்து, வாதுமைப் பழங்களைக் கொடுத்தது (எண். 17:8). இது நியாயத்தை வெளிப்படையாக, நிலைநாட்டி புதிய ஜீவனின் அதிசயத் தன்மையை எடுத்துரைக்கிறதாகும். ஆகையால் தேசத்தாரின் பாவத்திற்கு அடையாளமாக இருந்த இந்த துளிர்த்த கோலும் பெட்டிக்குள் வைக்கப் பட்டிருந்தது. இந்த துளிர்த்த கோல் உயிரோடு எழுந்து மகிமையில் வீற்றிருக்கும் கிறிஸ்துவைக் குறித்துக் காட்டுவதாயுள்ளது. மன்னா வைக்கப்பட்ட பொற் பாத்திரமும், ஆரோனின் துளிர்த்த கோலும் உடன்படிக்கைப் பெட்டியினுள் இருந்து வந்ததாகவே யூதர்கள் பாரம்பரியமாகக் கருதி வந்தனர்.

***"உடன்படிக்கையின் கற்பலகைகளும் இருந்தன" (சங். 40:8)***

இதுவும் உடன்படிக்கையின் பெட்டகத்தினுள்தான் வைக்கப்பட்டிருந்தன. இரண்டு கற்பலகைகளில் பதிய வைக்கப்பட்டிருந்த பத்து இறைக்கட்டளைகளை இஸ்ரவேலர் பெறுமுன்னரே முறித்துப் போட்டுவிட்டனர் (யாத். 32. அதி). அவர்கள் வேறு தேவர்களை நாடினர், ஒரு பொற் காளையை வடித்து, உரு வாக்கி, அதைப் பணிந்து கொண்டனர். தேவனுடைய கோபம் இதினிமித்தம் அவர்கள் மேல் பற்றியெரிந்தது. மோசேயும் அதிகமாகக் கோபப்பட்டான். ஒரே ஒரு புண்ணிய புருடர் மட்டுமே இறை கட்டளைகள் அனைத்தையும் முழுமை யாக நிறைவேற்றக் கூடியவர். முதலாம் சங்கீதத்தில் கூறப்பட்டுள்ள ஆசீர் வதிக்கப்பட்ட மனிதர் அந்த இயேசு கிறிஸ்துவே. தேவன் அருளிய இந்த நியாயப்பிரமாணக் கட்டளைகள் அனைத்தையும் முற்றுமுடிய நிறைவேற்றக் கூடியவராயுள்ள கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்காகக் காத்திருந்தன. இதை எடுத்துக்காட்டவே கற்பலகைகளும் உடன்படிக்கைப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்தன. ஆகவே, இம்மூன்று பொருட்களும் கிறிஸ்துவுக்குள் ளாகக் காணப்பட்ட *தெய்வீகப் பராமரிப்பு*, *தெய்வீக அங்கீகாரம்*, *தெய்வீகத் திருப்தி* ஆகியவற்றைக் குறிப்பிடுபவைகளாக இருந்தன.

***"மகிமையுள்ள கேருபீன்கள் . . . கிருபாசனத்தை நிழலிட்டிருந்தன." (9:5)***

*"கேரூப்"* என்னும் எபிரெயச் சொல்லுக்கு, 'உயிரிகள்' என்று பொருள். உடன்படிக்கையின் பெட்டியை மறைத்து வைக்கிற மேல்மூடியே இந்தக் கிரு பாசனம் ஆகும். அதன் இரு பக்கங்களிலும் கேருபீன்கள் ஒன்றுக்கொன்று எதிர்முகமாக தங்கள் சிறகுகளை உயர விரித்துக்கொண்டு இருந்தன. தேவனின் மகிமை கிருபாசனத்தின் மேல் பிரகாசித்தது. கேருபீன்களின் முகங்கள் கிருபாசனத்தைக் குனிந்து நோக்கிக் கொண்டிருந்தன. அவற்றின் செட்டைகள் உயர விரித்துக்கொண்டும்,கிருபாசனத்தை மூடுகிறவையாகவும் ஒன்றுக் கொன்று, எதிர் முகமுடையவையாகவுமிருந்தன (யாத். 25:18-22).

பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்த கற்பலகைகளும், மூடியிருந்த கிருபாசனமும், நியாயப்பிரமாணத்திற்கும், கிருபையின் பிரமாணத்திற்கும் இடையே உள்ள தொடர்பை எடுத்துக் காட்டுகின்றன (எண். 17:1-8; யோவான் 1:17; சங். 85:10; யோவான் 1:17; சங், 85:10).

### ஈ. கூடாரத்தில் நிகழும் நிழலாக அமைந்துள்ள வழிபாடுகள் (9:6,7)

*"இவைகள் இவ்விதமாய் ஆயத்தமாக்கப்பட்டிருக்க, ஆசாரியர்கள் ஆராதனை முறைமைகளை நிறைவேற்றும்படிக்கு முதலாம் கூடாரத்திலே, நித்தமும் பிரவேசிப்பார்கள். இரண்டாங்கூடாரத்திலே பிரதான ஆசாரியன் மட்டும் ஆண்டிற்கு ஒரு தரம் இரத்தத்தோடே பிரவேசிக்க வேண்டும், அந்தப் பலி இரத்தத்தைத் தனக்காகவும், ஜனங்களுடைய தப்பிதங்களுக்காகவும் (பாவங்களுக்காகவும்) செலுத்துவான்" (9:6,7).*

### *"முதலாங் கூடாரம்" (9:6)*

இது தூயகத்தைக் குறிக்கின்றது என மேலே பார்த்தோம். இங்கே தினமும் ஆசாரியத் திருப்பணி நடைபெறுகின்றது (யாத். 27:20; 30:7; லூக்.1:8-11). அதுவுமன்றி ஓய்வு நாள் தோறும், தேவ சமூகத்தப்பங்களை (காணிக்கை அப்பங்கள்) மேஜையின் மேல் இரண்டு அடுக்காக வைக்க வேண்டும் (லேவி. 24:8).

### *"இரண்டாங் கூடாரம்" (9:7)*

இது அதிதூயகத்தைக் குறிக்கின்றது. பிரதான ஆசாரியன் மாத்திரம் ஆண்டுக்கு ஒருமுறை பலிமிருகத்தின் இரத்தத்தோடே அதில் பிரவேசிக்க வேண்டும்.

1) தலைமை ஆசாரியன் மட்டுமே உள்ளே செல்லுவான்.

2) மற்ற எந்த லேவிய ஆசாரியர்களும் உள்ளே செல்லலாகாது.

3) தலைமை ஆசாரியன் மட்டுமே ஆண்டிற்கொருமுறை, ஏழாவது மாதமாகிய திஸ்ரா மாதத்தின் 10-ம் நாள் உள்ளே செல்லுவான்.

4) தலைமை ஆசாரியன் தனக்காக பலி இரத்தத்தோடே நுழைவான். அவன் ஆண்டிற்கு ஒரு நாள் மட்டும் செல்லுவான். அன்று அவன் இரு முறையேனும் செல்ல வேண்டியதாயிருக்கும்.

*முதலாவது* – நெருப்புத் தணலினால் தூபகலசத்தை நிரப்பி, வாசனைப் பொருட்களை நிறைய எடுத்து, தனக்காகப் பாவ நிவிர்த்தி செய்யும்பொருட்டு, காளையின் இரத்தத்தோடுகூட அவன் செல்லுவான் (லேவி. 16:11-14).

*இரண்டாவதாக* – பின்பு அனைத்து இஸ்ரவேல் மக்களுடைய பாவநிவாரண பலியான வெள்ளாட்டுக் கடாவின் இரத்தத்தோடு அவன் செல்லுவான் (லேவி. 16:15).

இதில் மூன்று காரியங்கள் தெளிவாகின்றன:

1) ஒரு குறிப்பிட்ட நாளிலன்றி ஏனைய நாட்களில் தலைமை ஆசாரியனும் கூட அதிதூய அகத்திற்குள் செல்லலாகாது.

2) ஆனாலும்கூட, பலி மிருகத்தின் இரத்தத்தோடு மட்டுமே தலைமை ஆசாரியன் செல்ல வேண்டும்.

3) இந்த இரத்தத் தெளிப்பு ஆண்டுதோறும் அவசியம் நிறைவேற்ற வேண்டியதாயிருந்தது.

## "இவ்வழிபாடுகளின் குறிக்கோள்" (9:8-10)

*"அதினாலே, முதலாங்கூடாரம் நிற்குமளவும், பரிசுத்த ஸ்தலத்திற்குப் போகிற மார்க்கம் இன்னும் வெளிப்படவில்லையென்று பரிசுத்த ஆவியானவர் தெரியப்படுத்தியிருக்கிறார். அந்தக் கூடாரம் (புதிய ஏற்பாட்டு) இக்காலத்திற்கு உதவும் (ஒரு) ஒப்பனையாயிருக்கிறது. அதற்கேற்றபடியே செலுத்தப்பட்டு வருகிற (நியமிக்கப்பட்ட) காணிக்கைகளும், பலிகளும் ஆராதனை செய்கிற வனுடைய மனச்சாட்சியைப் பூரணப்படுத்தக் கூடாதவைகளாம். இவைகள் சீர்திருத்தல் உண்டாகும் காலம் வரைக்கும் நடந்தேறும்படி கட்டளையிடப்பட்ட போஜன பானங்களும், பலவித ஸ்நானங்களும், சரீரத்திற்கேற்ற சட்டங் களுமேயல்லாமல் வேறல்ல" (9:8-10).*

ஆசரிப்புக்கூடாரத்தின் அமைப்பிலும், லேவிய பலி முறைகளிலும் அடங்கியுள்ள ஆன்மீகப் படிப்பினைகள் அநேக அநேகமாகும்.[56]

### *"முதலாங் கூடாரம்" (தூய அகம் 2:8)*

இக்கூடாரம் நிற்குமட்டும் தொழுகையாளர்களுக்கு இரண்டாங்கூடாரத் திற்குள், அதாவது அதிதூய அகத்திற்குள் செல்லும் நேர்வழி திறக்கப்பட வில்லை. தொழுதுகொள்ள வரும் இஸ்ரவேலரை முதலாங்கூடாரம், தூய தேவனுடைய முன்னிலையில், அதிதூய அகத்திற்குள் உட்புக இயலாதபடி தடைசெய்கிறது. இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரண வேளையில், தேவ ஆலயத்தின் திரைச்சீலை மேலிருந்து கீழ்வரை இரண்டாகக் கிழிந்தது (மத். 27:51). ஆம் இயேசு தாமே தமது உடலாகிய திரைச்சீலையைக் கிழித்து, அதி தூய அகத்திற்குள் அனைவரும் நேரடியாகச் செல்லக்கூடிய வண்ணம் திறக் கப்பட்டுள்ள புதியதொரு பாதையை, உரிமையை இது குறித்துக் காட்டுகிறது.

*"பரிசுத்த ஆவியானவர் தெரியப்படுத்தியிருக்கிறார்"* – பழைய, புதிய ஏற்பாடுகள் ஆகிய இரண்டு நூல்களிலும் உள்ள உண்மைகளை நமக்கு வெளிப்படுத்திக் காட்டுபவர் தூயஆவியானவரேயாவார். இங்குப் பரிசுத்த ஆவியானவர் பழைய ஏற்பாட்டு நிழல் பாடங்கள் மூலம் கிறிஸ்துவைப் பற்றிய மேன்மையான மெய்ப்பொருளின் காரியங்களைத் தெளிவுற எடுத்துக் காட்டியுள்ளார்.

***"அந்தக் கூடாரம் இக்காலத்திற்கு உதவுகிற ஒப்பனையாயிருக்கிறது" (9:9)***

இது இக்காலத்திற்குரிய நம்முடைய ஆன்மீகப் போதனைகட்கு ஏற்ற நிழற் பாடமாக அமைந்துள்ளது. இதில் உள்ள பொருட்கள் யாவும், புதிய ஏற்பாட்டுப் போதனைகளை வெளிப்படுத்தும் உருவகங்களாக உள்ளன. ஆசரிப்புக் கூடாரத்தின் தளவாடச் சாமான்கள் மட்டுமின்றி, அங்கே நடைபெறும் முறைமைகளும்கூட, அவ்வாறே நல்ல படிப்பினைகளைத் தரத்தக்கனவாயுள்ளன.

*"காணிக்கைகளும் பலிகளும் ஆராதனை செய்கிறவனுடைய மனச்சாட்சியைப் பூரணப்படுத்தக் கூடாதவைகளாம்"* – மெய்ப்பொருளுக்கு நிழலாக அமைந்துள்ள இந்தக் கூடாரத்தில், மெய்ப்பொருளுக்கு நிழலாயுள்ள காணிக்கைகளும் பலிகளும் செலுத்தி வந்தனர். அவைகள் தொழுதுகொள்ள வருபவர்களின் மனச்சாட்சியை நிறைவு செய்ய முடியாதவையாகவே இருந்தன.

***"இவைகள் சீர்திருத்தல் உண்டாகும் காலம் வரைக்கும்" (9:10)***

மெய்ப் பெருளாயுள்ள இயேசு கிறிஸ்து வெளிப்பட்ட பின்னர், தொடர்ந்துள்ள இப்போதைய கிருபையின் காலத்தையே, 'சீர்திருத்தம் உண்டாகும் காலம்' என இங்கு குறிப்பிட்டுள்ளது.

*போஜன பானங்களும் பலவித ஸ்நானங்களும்* – இத்தொடர் புசித்தல், குடித்தல், கழுவுதல் போன்றவைகளுள் சுத்தமானவை, சுத்தமில்லாதவை என்னும் பலவித லேவிய விதிமுறைகளைக் குறிப்பதாகும் (யாத். 29:4; லேவி 11:25, 28; எண். 8:7; மாற்கு 7:4).

## 2) புதிய உடன்படிக்கையாகிய அருட்பணியின் மேன்மை (9:11-28)

*''கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினால் செய்யப்பட்டதாகிய இந்தப் படைப்பு சம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும், உத்தமமுமான கூடாரத்தின் வழியாகவும், வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டு பண்ணினார்'' (9:11,12).*

### 1. அருட்பணியின் மேன்மை

"ஒன்பதாம் அதிகாரத்தின் முதற் பத்து வசனங்களில் நிழலாக அமைந்துள்ள ஆசரிப்புக் கூடாரத்தைப் பற்றிச் சொல்லியதைத் தொடர்ந்து, 11, 12 வசனங்கள் நிஜமான மெய்ப் பொருளாக உள்ள கூடாரத்தைப் பற்றியும், புதிய ஏற்பாட்டின் நடுவராகிய மெய்யான பிரதான ஆசாரியராக உள்ள இயேசு கிறிஸ்துவின் அருட்பணியின் மேன்மையைப் பற்றியும் எடுத்துரைக்கின்றன. பழைய உடன் படிக்கையின் முறைமைகளினால் நிறைவேற்ற இயலாத காரியங்களை இப்புதிய உடன்படிக்கை நிறைவு செய்து அவற்றை முழுமைப்படுத்தியுள்ளது. இதன் வலிமையையும், மேன்மையையும் இப்பகுதி சித்திரிக்கிறது. புதிய உடன்படிக்கையின் தன்மை, இயேசு பெருமான் என்னும் தலைமை ஆசாரியனின் மேன்மை, விண்ணிலுள்ள உன்னதக் கூடாரத்தின் சிறப்பியல்புகள், செலுத்தப்படும் இரத்தத்தின் சிறப்பும், நன்மதிப்பும், இப்பலியின் வலிமை, இம்மேலான முறைமையின் அருமை, அதின் இனிமையான நித்திய நல் விளைவுகள் யாவும் இங்கு விரித்துரைக்கப்பட்டுள்ளன."

#### அ) *"வரப்போகிற நன்மைகள்" (9:11)*

*"வரப்போகிற"* - என்பது பழைய ஏற்பாட்டுக் கண்ணோட்டத்தில் காண்கையில், இனி வரப்போகிற நன்மைகளாகும். ஆனால் புதிய ஏற்பாட்டு முறைமை இன்று நிறைவேற்றப்பட்டுள்ள கண்ணோட்டத்தில், அவை வந்து விட்ட, நிறைவேற்றப்பட்டுள்ள உண்மைகளாமே!

இயேசு கிறிஸ்துவின் ஆசாரிய அருட்பணியோடு இணைத்துப் பார்க்கையில், ஒருவன் தேவனுடைய திருச் சந்நிதியில் கிறிஸ்துவின் வருகையினால் அவன் பெற்றுக்கொள்ளும் தேவனோடுள்ள ஒருமைப்பாடு, கிடைத்துள்ள மேன்மையான உடன்படிக்கை, குற்றஞ்சாட்டப்படாத சுத்த மனச்சாட்சி, பாவ மன்னிப்பின் உறுதி இவை போன்றவையேயாம்.

### ஆ) விண்ணகக் கூடாரத்தின் மேன்மை

*"கையினால் செய்யப்பட்ட . . . சிருஷ்டி சம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல"* – மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி லேவியர் பணிபுரிகின்ற ஆசரிப்புக்கூடாரத்தையும்,வரப்போகிற நன்மைகளுக்குரிய தலைமை ஆசாரியராகிய இயேசு கிறிஸ்து பணியாற்றும் விண்ணகக் கூடாரத்தையும் நூலாசிரியர் இங்கு ஒப்பிடுகிறார். இது நமக்கு விண்ணுலகினையே திறந்து காட்டுகின்றது. ஆரோன் இவ்வையகத்திற்குரிய கூடாரத்தில் பணி புரிந்தான் (8:5). ஆனால் ஆண்டவர் பணியாற்றுவதோ, பெரிதும் உசிதமுமான விண்ணுலகக் கூடாரமாகும் (9:24; எபே. 2:6).

இது கிறிஸ்து மனித உருவெடுத்ததை, அல்லது அவருடைய சரீரத்தைக் குறிப்பதாகும் என கிரேக்க, இலத்தீன் சபைகளில் உள்ள சில ஆதிச் சபைப் பிதாக்கள் கருதினர்.

### இ) செலுத்தப்படும் இரத்தத்தின் நன்மதிப்பு (9:12)

*"வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலேயல்ல"* – லேவிய முறைமையான ஆசாரியன் வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவற்றின் இரத்தத்தினாலே அதிதூய அகத்திற்குள் சென்றான். ஆனால் இயேசு பெருமானோ, தமது சொந்த இரத்தத்தையே சொரிந்து அப்புண்ணி யத்தின் அடிப்படையில் விண்ணகத்திற்குள் சென்றுள்ளார். இதுவே மனித இனத்தின் மீட்புக்கென்று கொடுக்கப்பட்ட, விவரிப்பதற்கியலா விலையேறப் பெற்ற திருஇரத்தம் ஆகும் (1 பேதுரு 1:18, 19; வெளி. 5:9).

இது இந்நிருபத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தைப் பற்றிய முதற் குறிப்பாகும். இந்நிருபத்தில் கிறிஸ்துவின் இரத்ததைப் பற்றிய ஏழு குறிப்புகள் உள்ளன ; அவையாவன:

1. கிறிஸ்துவின் சொந்த இரத்தம் (9:12).
2. கிறிஸ்துவினுடைய இரத்தம் (9:14).
3. கிறிஸ்துவினுடைய இரத்தத்தினாலே (10:20).
4. உடன்படிக்கையின் இரத்தம் (10:29).
5. தெளிக்கப்படும் இரத்தம் (10:22; 12:24).
6. தம்முடைய சொந்த இரத்தம் (13:12).
7. நித்திய உடன்படிக்கையின் இரத்தம் (13:20).

இவை பொருள் செழிப்புள்ள முக்கிய போதனைகளைக் கொண்டுள்ள குறிப்புகளாகும்.

### ஈ) பலியின் வலிமை (9:12) "ஒரே தரம்"

லேவியனான தலைமை ஆசாரியன் ஆண்டுதோறும் பலி செலுத்தி வந்தான். ஆனால் கர்த்தராகிய இயேசுவோ, என்றென்றைக்குமுள்ள ஒன்றான பலியை, ஒரே தரம் செலுத்தி, ஒரே தரம் மகா பரிசுத்த பரலோக இறை சமூகத்திற்குச் சென்று, நித்திய மீட்பை நிறைவேற்றி முடிவு செய்துள்ளார். மூல கிரேக்க மொழியில் 7-ம் வசனத்தில் வரும் "ஒரு தரம்" என்ற வார்த்தை அன்று, இவ்வசனத்தில் "ஒரே தரம்" என்பதற்குச் சற்று அழுத்தமான வேறொரு பதம் உபயோகிக்கப்பட்டுள்ளது. இது "என்றென்றுமாக ஒரேதரம்" என்ற பொருளுடையதாயுள்ளது. கிறிஸ்து நிறைவேற்றியுள்ள மீட்பின் கிரியை நித்தியப் பயனுடையதாகும்.

### உ) முறைமையின் அருமை

லேவிய ஆசாரியன் ஒவ்வோர் ஆண்டும் திரும்பத்திரும்ப அதிதூய அகத்திற்குள் செல்லுவதும், பின் திரும்பிவருவதுமாக இருந்தான். இயேசுவோ ஒரே பலியை, ஒரே தரம் செலுத்தி முடித்துவிட்டு, ஒரே முறையாக அதிதூய விண்ணகத்திற்குள் சென்றுள்ளார். ஆரோன் சென்றது இவ்வையகத்திற்குரியது; அது சிருஷ்டிப்புடன் சம்பந்தமுடையது. ஆண்டவர் சென்றிருப்பதோ வானகக் கூடாரமும், பரலோகத்திற்குமுரியதுமாகும்.

## 2. இயேசு கிறிஸ்துவின் பலியின் மேன்மை (9:13,14)

*"அதெப்படியெனில், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தமும், தீட்டுப்பட்டவர்கள் மேல் தெளிக்கப்பட்ட கடாரியின் சாம்பலும், சரீரசுத்தி உண்டாகும்படி பரிசுத்தப்படுத்துமானால் . . . நித்திய ஆவியினாலே தம்மைத் தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம், ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம் (9:13, 14).*

### 1) இயேசு கிறிஸ்துவின் பலி மரணம் எல்லாவற்றிலும் மேன்மையுள்ளதாயிருக்கிறது

வெள்ளாட்டுக்கடா, இளங்காளை என்பவற்றின் இரத்தமும், கடாரியின் சாம்பலும், இறந்தவனின் பிணத்தைத் தொட்டதினால் தீட்டுப்படுபவரை சுத்திகரிப்பதற்கும், சிலை வழிபாட்டினாலுண்டாகும் தீட்டை விலக்கவும், பணிமுட்டுப் பாத்திரங்களைத் தூய்மையுடன் சுத்திகரிக்கவும் பயன்படுத்தப் பட்டன (எண். 19:5, 6, 9, 11, 13; 31:22, 23). இவையனைத்தும் சரீர (புறம்பான) சுத்திகரிப்பிற்கு உரியவையாகும். ஆனாலும் அவை மனச்சாட்சியைச் சுத்தப் படுத்த ஒரு போதும் போதுமானவையல்ல!

***2) "இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மேன்மை"***

*"நித்திய ஆவியினாலே"* – இத்தொடர், "பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கின்றது" என்று வைன், நியூள், அயன்சைடு, தி. தி. ப்ரூஸ், ஆகியோரும், இத்தொடர் "இயேசு கிறிஸ்துவின் மனித ஆவியைக் குறிக்கின்றது" என்று வெஸ்ட்காட், ரோபர்ட்ஸன், லன்ஸ்கி, ஆகியோரும் கருதுகின்றனர். பெரு வாரியான வேதவல்லுநரும் இது பரிசுத்த ஆவியானவரைத்தான் குறிப்பிடுகிறது என்ற கருத்துடையவர்களே. அக்கருத்துக்கு முரணாக வலுவான நியாயங் களேதுமில்லை.[57] இயேசு கிறிஸ்து, பரிசுத்த ஆவியானவரால் கன்னி மரியிடம் கருவுற்றார் (லூக்கா 1:35). பரிசுத்த ஆவியானவரால், அற்புதங்களை நிகழ்த்தி னார். (மத். 12:28). அவருடைய மீட்பின் செயலும் அவ்வண்ணமே நடை பெற்றது.[58] இங்கு நாம் மனதிற்கொள்ள வேண்டிய மூன்று முக்கியக் காரியங்கள் உள்ளன:

அ) கிறிஸ்துவின் பலி மரணம் இறைவனின் அனாதித் திட்டத்தின்படி நிறைவேறிற்று.

ஆ) இந்தப் பலி நிறைவேறுமளவும் தம்முடைய கீழ்ப்படிதல், குறிக்கோள், ஆகியவற்றில் இயேசு கிறிஸ்து அதிக உறுதியாயிருந்தார்.

இ) இந்தப் பலியும், அதின் பயனும் ஒருபோதும் அதனுடைய பலனில் குன்றிவிடாது.

லேவிய ஆசாரியர்களின் திருப்பணிகள் உயிரற்றவையாயிருந்தன. உயிருள்ள தேவனுக்கு ஏற்ற முறையில் ஊழியஞ்செய்ய அவற்றால் கூடாதிருந்தது. ஆகவே மனச்சாட்சியில் படிந்துள்ள பாவக்கறைகளைக் கழுவி, தெளிவான களங்கமில்லா மனச்சாட்சியுடனே தேவனைத் தொழுது கொள்ளும் படி செய்ய வல்லமையற்றிருந்தன. ஆனால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஜீவனுள்ள இரத்தமோ இதைச் சாத்தியக்கூறாக்கிற்று.

## 3. புதிய உடன்படிக்கைக்குரிய மத்தியஸ்தரின் மேன்மை (9:15-17)

*"ஆகையால் முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்தி செய்யும் பொருட்டு அவர் மரணமடைந்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்து கொள்வதற்காக, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார். ஏனென்றால், எங்கே மரண சாதனம் உண்டோ, அங்கே அந்தச் சாதனத்தை எழுதினவனுடைய மரணமும் உண்டாக வேண்டும். எப்படியெனில் மரணமுண்டானபின்பே மரண சாதனம் உறுதிப்படும். அதை எழுதினவன் உயிரோடிருக்கையில் அதற்குப் பெல னில்லையே". (9:15-17)*

*மரணமடைதல் (9:15)* – உடன்படிக்கையை உறுதிப்படுத்துவதற்குப் பலி மரணங்கள் இருந்தன (ஆதி. 15:9, 5, 10, 18). இப்பொழுதோ உடன்படிக்கை யின் உறுதிக்கென இயேசு கிறிஸ்துதாமே பலியானார். தமது மரணத்தினாலே ஒரு புதிய ஒப்பந்தத்தை அவர் ஏற்படுத்தியுள்ளார் (ரோமர் 5:10).

*அழைக்கப்பட்டவர்கள்* – ஆன்மீகக் கண்ணோட்டத்தில் பூமியிலுள்ள வம் சங்களோடெல்லாம் இது சம்பந்தப்பட்டதாகும், இவர்கள் ஆபிரகாமின் ஆவிக் குரிய விசுவாசப் பிள்ளைகள் ஆவார்கள் (3:1; ரோமர் 8:30; 1 தெச. 2:11; 5:24).

*"வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நித்திய சுதந்தரம்"* – இது ஆபிரகாமுடன் தேவன் செய்துள்ள ஒப்பந்தத்தோடு சம்பந்தப்பட்டதும், பூமியிலுள்ள வம்சங்களோடெல்லாம் சம்பந்தப்பட்டதுமாகும் (அப். 3:25). மோசேயின் மூலமாய் இஸ்ரவேலர்களோடு செய்யப்பட்டதே முதலாம் உடன்படிக்கை. ஆனால் இப்புதிய ஏற்பாட்டு உடன்படிக்கையோ, இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாகி உலகளாவிய அனைத்து மக்கள் இனத்தோடும் செய்யப்பட்டது ஆகும் (9:15-17).[59]

*நித்திய சுதந்திரம்* – இப்புது உடன்படிக்கை முடிவில்லாத உரிமைக்குரிய உறுதிப்பாத்திரம் ஆகும். இது இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் அமையப் பெற்ற ஒப்பந்த உடன்படிக்கையாகும் (எரே. 31:31; மாற். 14:24; லூக். 22:20; 1 கொரி. 11:25).

இந்நிருபத்தில் நாம் காணும் நித்தியமானவை ஐந்து:

நித்திய இரட்சிப்பு (5:9).

நித்திய நியாயத்தீர்ப்பு (6:12).

நித்திய சுதந்தரம் (9:15).

நித்திய மீட்பு (9:12).

நித்திய உடன்படிக்கை (13:20).

*"புது உடன்படிக்கையின் மத்தியஸ்தர்"* – தம்முடைய சிலுவைப் பலி மரணத்தினிமித்தம் அவர் நமக்கு நடுவரானார். "மரண சாசனம்" – இச்சொல்லை "உயில்" எனப் பெயர்க்கலாம். நம் தமிழ் வேதாகமத்தில் "சாதனம்" என்றுள்ளது. 'சாதனம்' என்பதற்கு 'தாரப்பத்திரம்' என்று பொருள்கொள்ள வேண்டும். இத்தொடர் ஓர் உருவக விளக்கமாக மட்டுமே நாம் கொள்ள முடியும், ஓர் உயில் அமல்படுத்த வேண்டுமெனில், அதனை எழுதியவர் முதலாவது மரணமடைய வேண்டும். இயேசு கிறிஸ்துவின் மரணத்தினால் புதிய உடன் படிக்கை அமுலாயிற்று; அனுபவ உரிமையாயிற்று. பழைய உடன்படிக்கை

கிறிஸ்துவின் ஒரே பலிக்கு நிழலாட்டம் மட்டுமேயாகும். அந்த நிழலோவெனில் பலியினாலும், இரத்தத்தெளிப்பினாலானதுமாகும்.[60]

"இஸ்ரவேலராகிய யூதர்களுக்கு மேசியாவின் சிலுவை மரணம் புலப்படாத ஒன்றாகும்"[61] எனவே நூலாசிரியர், யூதர்களுக்குப் புலப்படும் வகையில் இதனை எடுத்துக் கூறுகின்றார். மரணசாதனம் உறுதிப்பட வேண்டுமெனில், அந்தச் சாதனத்தை எழுதியவர் முதலாவதாக மரணமடைய வேண்டும். புது உடன்படிக்கை என்னும் உயில் (மரண சாதனம்) அமுலாக்கப்படும் பொருட்டு இயேசு கிறிஸ்து பலி மரணமடைந்தார்.

## 4. புது உடன்படிக்கை இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் பிரதிஷ்டை பண்ணப்பட்டது (9:18-22)

*"அந்தப்படி, முதலாம் உடன்படிக்கையும் இரத்தமில்லாமல் பிரதிஷ்டை பண்ணப் படவில்லை. எப்படியெனில், மோசே ஜனங்களுக்கும் எல்லாக் கட்டளைகளையும் (நியாயப்பிரமாணத்தின்படி) சொன்னபின்பு, இளங்காளை வெள்ளாட்டுக் கடா இவைகளின் இரத்தத்தைத் தண்ணீரோடும், சிவப்பான ஆட்டு மயிரோடும், ஈசோப்போடுங்கூட எடுத்து, புத்தகத்தின் மேலும் ஜனங்களெல்லார் மேலும் தெளித்து: தேவன் உங்களுக்குக் கட்டளையிட்ட உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்று சொன்னான். இவ்விதமாக, கூடாரத்தின்மேலும், ஆராதனைக்குரிய சகல பணிமுட்டுகளின் மேலும் இரத்தத்தைத் தெளித்தான். நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்: இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது" (9:18-22).*

முதலாம் உடள்படிக்கை (9:18) 'உடன்படிக்கை', 'சாதனம்' என்ற இரு வார்த்தைகளுக்கு, கிரேக்க மொழியில் *'தியாதேக்கே'* (Diatheke) என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு ஒப்பந்தம், உறுதிப்பாடு என்று பொருள் கொள்ள வேண்டும்.

முதலாம் உடன்படிக்கை என்பது பழைய உடன்படிக்கையாகும். இதுவுங் கூட இரத்தத்தினால் பிரதிஷ்டை செய்யப்பட்டதே. ஆனாலும் அது மிருகங் களின் இரத்தத்தினால் நிறைவேற்றப்பட்டது. பழைய உடன்படிக்கையின் பலிகள் யாவும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஒரே நித்திய பலிக்கு நிழலாக மட்டுமே விளங்கின. பழைய ஏற்பாட்டுப் பலிகள் அனைத்தும், இயேசு கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றிய பாவநிவாரண பலி மரணத்தையே குறித்துக் காட்டு பவையாகவும். மற்றும் அதைக் கனப்படுத்துபவையாகவும் இருந்தன. பழைய ஏற்பாட்டுப் பலிகள் கனமுடையதாய் இருந்தமைக்கு ஒரே காரணம், அது கிறிஸ்துவின் கல்வாரி சிலுவை மரணத்தைச் சுட்டிக் காண்பித்ததினாலேயாம்.

இயேசுவின் சிலுவை மரணத்திற்கு நிழலாக இருந்த மிருகங்களின் பலிகளே விலையேறப்பெற்றதெனில், அதின் மெய்ப்பொருளாக அமைந்துள்ள இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம் எத்தனை சிறப்பும், மேன்மையும் பெற்றதுமாகும்!

***"இரத்தத்தைத் தண்ணீரோடும்"*** – 'மோசே இரத்தத்தை எடுத்து ஜனங்களின் மேல் தெளித்தான்.' (யாத். 24:8) என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அங்கு 'தண்ணீரோடு கூடத் தெளித்தான்' என்று இல்லை. ஆயினும் இதற்கு ஏற்புடைய மற்றொரு வசனம் "ஊற்று நீர் மேல் கொல்லப்பட்ட குருவியின் இரத்தத்திலே தோய்த்து" என லேவியராகமத்தில் சொல்லப்பட்டுள்ளதைக் காண்க (லேவி 14:6). இரத்தத்தைத் தண்ணீரோடுங்கூட தெளித்தான் என்று யாத்திராகமம் 24-ம் அதிகாரத்தில் சொல்லப்படவில்லையென்றாலுங் கூட, ஆசரிப்புக் கூடாரத்தை ஸ்தாபித்தபோது எபிரெய நிருபத்தில் காண்கிறவாறு இரத்தத்தைத் தண்ணீரோடுங்கூட எடுத்துத் தெளித்திருக்கலாம், என யூத வரலாற்று ஆசிரியரான ஜோசிபஸ் கூறுகிறார் (கி.பி. 75)[62].

***"தண்ணீர்"*** – தூய்மைப்படுத்துவதற்கும், பிரித்தெடுப்பதற்கும், தூய ஆவியானவரின் செயற்பாட்டிற்கும் தண்ணீர் ஓர் அழகான நிழலாகும்.

***சிவப்பான ஆட்டு மயிர்*** – ஒரு மிருகம் பலியிடப்பட்டுள்ளதை இது நினைவூட்டுகிறது. இது இயேசுவின் மனிதத் தன்மைக்கு ஓர் அறிகுறியாக அமைந்துள்ளது என மறை நூல் வல்லுநர் கூறுகின்றனர்.

*ஈசோப்பு* – இது வனாந்திரத்தில் காணப்படும் ஒரு சிறு புதர்ச் செடி. சிவப்பான ஆட்டுமயிரும், ஈசோப்பும், இரத்ததைத் தெளிப்பதற்குரிய கருவிகளேயாம்.

சிவப்பான ஆட்டு மயிரும், ஈசோப்பும் கூட யாத்திராகமத்தில் சொல்லப்படவில்லை. எகிப்தில் பஸ்கா பலி செலுத்தி இஸ்ரவேலர் மீட்கப்பட்டு விடுதலையடைந்த போது, "ஈசோப்புக் கொளுந்துகளின் கொத்தை" கொண்டு இரத்தத்தைத் தெளிக்க வேண்டும் என்று இஸ்ரவேலர் கட்டளை பெற்றனர் (யாத். 12:21). அவ்வாறே சிவப்பான ஆட்டுமயிர், ஏசாயா 1:18-ல் சொல்லியுள்ளவாறு பாவக்கறைகளுக்கு அடையாளமாகத் தேவன் குறிப்பிட்டுள்ளார்.

*"புத்தகத்தின் மேலும், ஜனங்களெல்லார் மேலும் தெளித்தான்"* – யாத்திராகமத்தில் மோசே இரத்தத்தை எடுத்து, ஜனங்களின் மேல் தெளித்தான் என்று எழுதியுள்ளது. "புத்தகத்தின் மேலும் . . ." தெளித்தான் என்றில்லை. ஆனால், "மோசே பாதி இரத்தத்தை பலிபீடத்தின்மேல் தெளித்து உடன் படிக்கையின் புத்தகத்தை ஜனங்களின் காது கேட்க வாசித்த பின்னர்

ஜனங்களெல்லார் மேலும் இரத்தத்தை தெளித்தான்", என்று இந்நிருப ஆசிரியர் எழுதியுள்ளாதாக நாம் கொள்ளலாம்.

"புத்தகம் இறைவாக்காக எழுதப்பட்டிருந்தாலுங்கூட மனிதப் பார்வையில் இது ஒரு மனிதச் செயலேயாகும். எனவே அதைச் சுத்தமாக்குவதற்கும் உயிரூட்டலுக்கும், பலி இரத்தம் தேவை. இரத்தத்தினாலே எழுத்து உயிர் பெறுவதை இது எடுத்துக் காட்டுகிறது" – வெஸ்ட்காட்.[63]

### *"ஜனங்களெல்லார் மேலும் தெளித்து . . ." (யாத். 24:8)*

ஊழியப் பிரதிஷ்டையின் போது, ஆரோன் மேலும், அவன் புதல்வர்கள் மேலும் இரத்தம் தெளிக்கப்பட்டது. "ஜனங்களெல்லார் மேலும் தெளித்து" என்பது உடன்படிக்கையின் மக்களாகிய இஸ்ரவேலர் அனைவரையும் குறிப்பதாகும்.

### *உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்று சொன்னான் (9:20)*

மோசே இரத்தத்தைத் தெளித்தான் என்று கூறும்போது, இது ஏதோ ஒரு எளிதான முறையில் சுத்திகரிப்பைப் பெறுகிறது என்று பொருள் அன்று. பலி செலுத்திய மிருகத்தின் இரத்தத்தை எடுத்து, "உடன்படிக்கையின் இரத்தம் இதுவே" என்று அதன் மேன்மையைச் சொல்லித் தெளித்தான். இறைவாக்கைக் கேட்டு, "கர்த்தர் சொன்னபடியெல்லாம் செய்து, கீழ்ப்படிந்து நடப்போம்" என்று வாக்குக் கொடுத்த இஸ்ரவேல் மக்களின் மேல் அவன் தெளித்தான்.

### *கூடாரத்தின் மேலும் . . . சகல பணிமுட்டுகளின் மேலும் 'இரத்தத்தைத் தெளித்தான்' (9:21)*

சிந்தப்பட்ட இரத்தத்தினாலான சுத்திகரிப்பின் வலிமை இங்கே எடுத்துரைக்கப்படுகிறது.

### *"இரத்தஞ் சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது" (9:22)*

இதுவே எக்காலத்திற்கும், எங்குமுள்ள யாவருக்கும் பொருந்தும் ஒரு பொதுவான, உறுதியான, மாறாத இறை நியதியாகும். பொதுவாக சில சுத்திகரிப்புக்குத் தண்ணீரும் (லேவி. 15:16, 17), வேறு சில சுத்திகரிப்புக்கு நெருப்பும் (எண். 31:22, 23, 50) பயன்பட்டாலும், பாவ மன்னிப்புக்கெனச் சுத்திகரிக்கும் இரத்தம் இன்றியமையாத தேவையாகும். எக்காலக்கட்டத்திற்கும் இதுவே இறை நியமனம் என்பது புதிய ஏற்பாட்டில் 1 யோவான் 1:7-9 வசனங்கள் வலியுறுத்துகின்றன.

## 5. பரிபூரணமான பலியும், பரிபூரணரான ஆசாரியரும் (9:23-28)

பூரணமான பலியைச் செலுத்தி அர்ப்பணஞ்செய்யப் பரிபூரணரான ஆசாரியரால் மட்டுமே கூடும். இப்பூரண பலி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணமே. மற்றும் அவரே பூரண ஆசாரியருமானவர்.

### 1) விசேஷித்த பலி (9:23)

*"ஆதலால், பரலோகத்திலுள்ளவைகளுக்குச் சாயலானவைகள் இப்படிப்பட்ட பலிகளினாலே சுத்திகரிக்கப்பட வேண்டியதாயிருந்தது. பரலோகத்திலுள்ளவைகளோ, இவைகளிலும் விசேஷித்த பலிகளினாலே சுத்திகரிக்கப்பட வேண்டியதாமே" (9:23).*

ஆசரிப்புக் கூடாரமும், அதிலுள்ள பணிமுட்டுச் சாமான்களும் இரத்தத்தால் சுத்திகரிக்கப்பட்டு வந்தன. அந்த இரத்தம் மிருகங்களின் இரத்தமாயிருந்தது, அப்படியானால் பரலோகத்திலுள்ளவற்றைக் கையகப்படுத்த எவ்வளவு சிறப்பான தூய திருஇரத்தம் அவசியம்!

இம்மைக்குரிய தற்காலிக, சுத்திகரிப்புக்கு ஒருவேளை மிருகங்களின் பலி போதுமானதாக இருந்திருக்கலாம். ஆனால் மறுமைக்குரிய உரிமைகள் அனைத்தையும் முழுமையாகப்பெற அவை சற்றேனும் போதுமானதாக இராது. நாம் தூய நீதியுள்ள தேவனின் முன்னிலையில் கிட்டிச்சேர, ஒவ்வொரு மனிதனும், இயேசு கிறிஸ்துவின் புனிதச் சிலுவைப் பலியினாலான இரத்தத்தினால் கழுவப்பட வேண்டியதாயுள்ளது.

### 2) "இயேசு கிறிஸ்து புது உடன்படிக்கையின் தலைமை ஆசாரியர்" (9:24-26)

*"அந்தப்படி, மெய்யான பரிசுத்த ஸ்தலத்துக்கு அடையாளமான கையினால் செய்யப்பட்டதாயிருக்கிற பரிசுத்த ஸ்தலத்திலே கிறிஸ்துவானவர் பிரவேசியாமல், பரலோகத்திலே தானே இப்பொழுது நமக்காக தேவனுடைய சமூகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார். பிரதான ஆசாரியன் அந்நிய இரத்தத்தோடே ஆண்டுதோறும் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்கிறது போல, அவர் அநேகந்தரம் தம்மைப் பலியிடும்படிக்குப் பிரவேசிக்கவில்லை. அப்படியிருந்ததானால், உலகமுண்டானது முதற்கொண்டு அவர் அநேகந்தரம் பாடுபட வேண்டியதாயிருக்கும். அப்படியல்ல, அவர் தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும் பொருட்டாக இந்தக்கடைசி காலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார்" (9:24-26).*

*"தேவனுக்கு முன்பாக வெளிப்படச் சென்றுள்ளார்" (9:24)* – லேவிய முறைமையான தலைமை ஆசாரியன் ஆண்டுதோறும் பலியிடப்பட்ட மிருகங்களின் இரத்தத்தோடே அதிதூய அகத்திற்குள் நுழைவதையும், இயேசுபிரான் ஒரே முறை பலியிட்டு, மெய்யான பரலோக அதிதூயகத்திற்குள் ஒரேதரம் என்றென்றுமாக நுழைந்திருப்பதையும் இந்நூலாசிரியர் இங்கே ஒப்பிட்டு கிறிஸ்துவின் மரணத்தின் மேன்மையை எடுத்துக் காட்டியுள்ளார்.[64]

லேவிய முறைமையான ஆசாரியன் நுழைந்தது மனிதக் கரங்களால் கட்டப்பட்ட ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள அதிதூயகத்திலாகும். இயேசு கிறிஸ்து என்னும் இந்தச் சிறப்பான தலைமை ஆசாரியரோ, நமக்காகப் பரிந்துரையாற்றும் பொருட்டு, இறைவனின் திருச்சன்னதி செல்ல, எல்லா வானங்களுக்கும் மேலாக ஏறிச்சென்றிருக்கின்றார் (9: 24; 7:25; ரோமர் 8:34; எபே. 4:10; 1 யோ. 2:1).

இஸ்ரவேலரின் தலைமை ஆசாரியனாகிய ஆரோன் காளையும், ஆட்டுக் கடாவுமாக இரு பலிகளைச் செலுத்தி, அந்நிய இரத்தத்தோடே (9:25) ஆண்டுக்கொருமுறை மட்டும் அதிதூயகத்திற்குள் நுழைந்தான். அந்நேர மெல்லாம் அந்நிய இரத்தத்தோடேயே (அதாவது தன் சுய இரத்தத்துடனல்ல, பிற மிருகங்களின் இரத்தத்துடனேதான்) அவன் செல்லுவான். ஆனால் இயேசு என்னும் நமது தலைமை ஆசாரியரோ, ஒரு தரம் மட்டுமாகவே தம்மைத்தாமே பலியிட்டு, தமது சொந்த இரத்தத்தோடேகூட என்றென்றுமாக *ஒரேதரம்* மெய்யான அதிதூயகத்திற்குள் சென்றுள்ளார். இஸ்ரவேலரின் தலைமை ஆசாரியன் அதிதூயகத்திற்குள் பிரவேசித்தாலும், சிறிது நேரம் மட்டுமே அதனுள் நிற்பான்; இயேசு கிறிஸ்துவோ பரலோகத்திலுள்ள அதிதூய அகத்திற்குள் பிரவேசித்து, இதோ ஏறக்குறைய ஈராயிரம் ஆண்டுகளாகிவிட்டது. ஒரு நீண்ட காலம் "உலகம் உண்டானது முதற் கொண்டு . . ." (9:26) அவர் தொடர்ந்து என்றென்றுமாக அவ்விடத்தில்தானே இருப்பார்.

ஆதாமின் காலம் முதற்கொண்டு பாவம் உலகத்திலிருந்தது. ஆனால் இயேசுதாமே நம் ஒவ்வொருவருக்காகவும் மறுபடியும், மறுபடியும் ஒப்புக் கொடுக்க வேண்டியதாயிராமல், என்றென்றுமாக *ஒரேதரம்* தம்மையே ஒப்புக் கொடுத்தார். அவர் ஒரே தரம் பலியானார் (7:27; 9:12; 10:10)! அவர் என்றென்றுமாக ஒரு தரம் விண்ணகம் என்னும் அதிதூயகத்திற்குள் பிரவேசித்தார்!! உலகத்தின் பாவங்களை நீக்கும் பொருட்டாக இந்தக் கடைசி காலத்தில் ஒரே தரம் வெளிப்பட்டார் (1 பேதுரு. 3:18; 1 யோவான் 1:2)!

"இந்தக் கடைசி காலத்தில்" என்பதனை "யுகங்களின் (காலக் கட்டங்களின்) இறுதியில்" என மொழி பெயர்க்கலாம். கடந்துபோன யுகங்கள் இந்த நிகரற்ற பலியினை *எதிர்நோக்கி* அதைச் சுட்டிக் காண்பித்தன. இந்தக்கடைசி காலமோவெனில் அந்த ஒப்பற்ற ஒரே பலியைப் *பின்நோக்குகின்றது*. இந்தப் பலி பாவ

நிவாரண பலி ஆகும் (9:14, 15); இந்தப் பலி புது உடன்படிக்கையின் பலி ஆகும் (9:15-17).

"இயேசு கிறிஸ்து இம்மண்ணுலகினில் வெளிப்பட்டதினாலே, தேவனுடைய திருப்பிரசன்னமே மனிதர்களிடையில் இப்பொழுது வந்திறங்கியுள்ளது எனலாம். அவருடைய மரணமும், உயிர்த்தெழுதலும், பரமேறுதலும், மானிட வாழ்விலும், உலக வரலாற்றிலும் ஒரு புதிய சரித்திரத்தை, புதிய சகாப்தத்தை உருவாக்கி யுள்ளன."[65]

### *3) மரணமும் நியாயத்தீர்ப்பும் (9:27)*

*"அன்றியும், ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனிதருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே..." (9:27)*

மனிதன் ஒரே முறை சாவுக்கு உட்படுகிறான். அதன் பின்னர் நீதியுள்ள தேவன் அவனுக்கு நியாயத்தீர்ப்பு கொடுக்கிறார். இது தேவனால் தீர்மானிக்கப் பெற்ற ஒன்றாம். இதை எவரும் தவிர்க்க முடியாது. இதை ஒருவரும் மாற்றவும்கூடாது. மரணம் என்பது தேவனுடைய கட்டளையை மீறுவதினால் வரும் இறைதண்டனையே (ஆதி. 3:19; ரோமர் 5:12; 6:23). ஆனால், இம் மரணம் மனித வாழ்விற்கு ஒரு முற்றுப்புள்ளியன்று. மரணத்திற்குப் பின்னர் ஒரு நியாயத்தீர்ப்பும், அதைத் தொடர்ந்து முடிவே இல்லாத எரி நரகமும் உண்டென்று தூய திருமறை தெளிவுபடுத்துகிறது (10:27, 30).

மேற்சொல்லியவற்றை வரையறுத்துக் கூறுகின்ற இந்தத் திருமறை நூல், ஆவியில் மறுபடியும் பிறப்பதை (புதிதாக ஆவியில் பிறப்பதை) குறித்தும் தெளிவுபடுத்துகிறது. இம்மையில் நாம் வாழ்கின்றபோதே தேவனுடைய ஆவியால் மறுபடியும் பிறக்க வேண்டும். இது ஒரு மறுபிறப்பு, அல்லது இச்சரீரத்தில் இருக்கையிலேயே ஆவியில் மறுபடியும் பிறப்பது. இது ஒரு புனர் ஜென்மம் அன்று. (மரித்த பின்னர் அந்த உடலை விட்டு மற்றொரு மிருகம், பறவை, அல்லது மற்றொரு மனிதனாகப் பிறப்பதே புனர்ஜென்மம் என்று அழைக்கப்படுகிறது. எனினும் அவ்வாறு நிகழ்வதில்லை என்பதை அறிக.) இவ்வித்தியாசத்தை நாம் மனதிற்கொள்ள வேண்டும். வேறு சில மதத்தினர் கருதுகிற வண்ணம் இது *பிறவிச்சுழற்சிக்* கொள்கை அன்று.

### *4) நமது தலைமை ஆசாரியர் திரும்பவும் வருவார் (9:28)*

*"கிறிஸ்துவும் (அப்படியே) அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும் படிக்கு ஒரே தரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறவர் களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசன மாவார் (தோன்றுவார்)" (9:28).*

*"கிறிஸ்துவும் ஒரேதரம் பலியிடப்பட்டார்."* – மனுமக்களை மீட்க வந்த இயேசு இரட்சகர் ஒரே தரம், நிரந்தரமாகப் பலியிடப்பட்டார். மனிதனின் "மரணத்திற்குப் பின்னர் நியாயத்தீர்ப்பு" என்பதே தேவ நியதி. ஆனால் இரட்சகர் பெருமானோ பாவிகளாகிய மனுமக்களுக்கு வரவிருந்த பாவத்தின் தண்டனைகள் அனைத்தையும் தமது சரீரத்திலே சுமந்து கொண்டு, சிலுவை மரத்தில் மரணத்தை ஏற்றுக்கொண்டார். இயேசு கிறிஸ்துவின் கல்வாரி சிலுவைப் பலியின் வாயிலாக இறை நீதி வெளிப்பட்டது (ரோமர் 3:25, 26).

*"தமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறவர்கள்"* – இயேசு கிறிஸ்து மனுமக்களின் பாவங்களை நீக்கும்பொருட்டாக மரணத்தை ருசிபார்க்க ஒரே தரம் இப்பூவுலகில் வெளிப்பட்டார் (2:14; ரோமர் 8:3; பிலி. 2:7, 8). இறந்தோரி லிருந்து முதற்கனியாக அவர் உயிர்த்தெழுந்துள்ளதினிமித்தம், இறந்தோரின் உயிர்த்தெழுதலின் நிச்சயத்தை நமக்கு விளங்கப் பண்ணியுமுள்ளார் (1 கொரி. 15:23, 52; அப். 17:31). அந்தப்படி அவர் மீண்டும் வருவார் என்ற நம்பிக்கையோடு நாம் அவருக்காகக் காத்துக் கொண்டிருக்கிறோம் – ஆவலுடன் எதிர்நோக்கி நிற்கிறோம் (ரோமர் 14:9; பிலி. 1:23; 1 தெச. 4:15-17).

இங்குத் "தமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறவர்கள்" என்றிருப்பதால், மிகுந்த ஜாக்கிரதையுடன் காத்துக்கொண்டிருக்கிறவர்களை மட்டும் சேர்த்துக் கொள்ளுவதற்காகத்தான் இயேசு பெருமான் மீண்டும் வருவார் என்றும், அவ்வாறு ஜாக்கிரதையில்லாதோர் கைவிடப்படுவர் என்றும் ஒரு சிலர் கருதி அவ்வாறே போதிக்கின்றனர். இது தவறு. ஏனெனில் திருமறை நூலில் எங்கும் "காத்துக் கொண்டிருக்கிற விசுவாசிகள்" எனவும், காத்திருக்காத விசுவாசிகள் எனவும் இருவகையினராகப் பிரித்து வரையறுக்கிறதில்லை. "காத்துக்கொண்டி ருப்பவர்கள்" என்பது இரட்சிக்கப்பட்டிருப்பவர்களின் ஒரு பொதுவான நிலை யினை எடுத்துரைக்கும் சொற்றொடராகும்.

இஸ்ரவேல் மக்கள் தங்கள் தலைமை ஆசாரியனை எதிர்நோக்கி ஆசாரிப்புக் கூடாரத்தின் முற்றத்திற் நின்றிருந்தனர். புறவினத்தாருக்கு அத்தகையதொரு எதிர் நோக்குதல் இல்லை. அவ்விதமாகவே, மெய் விசுவாசிகள் அனை வரையும் சேர்த்துக் கொள்ள இயேசு கிறிஸ்து மீண்டும் வருவார். அனைத்து விசுவாசிகளும் அவருடைய வருகைக்காக வாஞ்சையோடு காத்துக்கொண் டிருக்கிறார்கள். அவிசுவாசிகளுக்கு இத்தகைய ஓர் உறுதியும், எதிர்நோக்கு தலும் இல்லை. விசுவாசியாத உலக மக்களினின்று விசுவாசிகளைப் பிரித்துக் காட்டும் பகுதியே இந்தக் "காத்துக் கொண்டிருக்கிற விசுவாசிகள்" ஆவர்.

"இஸ்ரவேலர்களின் தலைமை ஆசாரியன், ஆசரிப்புக் கூடாரத்தின் அதி தூயகத்திற்குள் சென்று நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றி முடித்த

பின்னர் வெளியே வரும் வரையிலும் மக்கள் கூடாரத்தின் முற்றத்தில் காத்து நிற்பதைப் போல, வானங்களின் வழியாகப் பரலோகத்திற்குப் போன இயேசு கிறிஸ்து திரும்பிவரப்போவதை நாமும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம்".[66]

*"இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார் (வெளிப்படுவார்)"* – இப்பகுதியில், 'தரிசனமாவார்' என்ற வார்த்தை புதிய தமிழ்ப் பொது மொழியாக்கத்திலும், கத்தோலிக்க மொழியாக்கத்திலும் 'தோன்றுவார்' என்றுள்ளது. ஆங்கில வேதாகமத்திலும் 'தோன்றுவார்' அல்லது 'வெளிப்படுவார்' என்றே உள்ளது. 'தரிசனமாவார்', 'வெளிப்படுவார்' என்பதற்குறிய வேறுபாட்டைக் காண்க.

இயேசு கிறிஸ்து முதலாவது "பாவங்களை நீக்கும் பொருட்டாக ஒரேதரம் வெளிப்பட்டார்"; அதெப்படியெனில் தேவன் தமது திருப்புதல்வரைப் பாவ சரீரத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, சரீரத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்' (ரோமர் 8:3). பாவம் அறியாத இயேசு கிறிஸ்து நமக்காகப் பாவம் ஆக்கப்பட்டார் (2 கொரி. 5:21). அவர் தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார் (1 பேது. 2:24).

இந்தத்தோன்றுதல், பாவத்திற்குப் பரிகாரம் செய்வதற்காக அல்ல; அவருடைய இரண்டாம் வருகையின் நோக்கம் பாவ மன்னிப்புக்காக அன்று; அது பாவத்தைப்பற்றிய எவ்விதத் தொடர்புடையதும் அன்று. இந்நிருபத்தை ஆக்கியோன் இங்குப் பழைய ஏற்பாட்டுப் பிரதான ஆசாரியனுடன், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஒப்பிட்டுப் பேசுவதைக் காணமுடியும். ஆண்டுக்கொருமுறை பாவநிவாரண நாளிலே (யாத். 30:10), பலி இரத்தத்துடன் பிரதான ஆசாரியன் மகாபரிசுத்த ஸ்தலத்திற்குச்சென்று, கிருபாசனத்தின்மேல் இரத்தத்தைத் தெளித்து பாவநிவர்த்தி செய்த பின்னர், வெளியே காத்துக்கொண்டிருக்கிற இஸ்ரவேல் மக்கள் முன்பாக வந்து அவர்களுக்குக் காணப்படுவான். இங்குப் பிரதான ஆசாரியன் கூடாரத்திற்கு வெளியே இருக்கிற இஸ்ரவேல் மக்களுக்கு வெளிப்படுகிறதை, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில், அவருக்காகக் காத்துக்கொண்டிருக்கிற மக்களுக்கு அவர் வெளிப்படுவதை இவ்வசனத்தில் ஒப்பிட்டுக் கூறுவதைக் காணலாம். நம்முடைய பிரதான ஆசாரியராகிய கிறிஸ்து தம்முடையோருக்காக மெய்யான கூடாரமாகிய பரலோகத்தினின்று மீண்டும் வெளிப்படுவார் (பிரத்தியட்சமாவார்), (கிரேக்கச்சொல் *oplomai*). இதுவே "பாவமில்லாமல் தரிசனமாவார்" என்ற சொற்றொடரின் பொருளாகும்.

எபிரெயர் 9:24 முதல் 28 வரையுள்ள வசனங்களில் மூன்று வகையான 'தோற்றங்களைப்' பற்றிச் சொல்லப்பட்டுள்ளன. அவையாவன 'பிரத்தியட்சம்', 'வெளிப்படல்', 'தரிசனம்' (தோன்றுதல்).

## *1) பிரத்தியட்சம் (9:24)*

(கிரேக்கச் சொல் – ***Empanizo எம்பானிசோ***)

இது 'பிரகாசித்தல்' அல்லது 'ஜொலித்தல்' எனப்பொருள்படும். தேவனின் முன்னிலையில், ஆள் தன்மையோடு இயேசு கிறிஸ்து காணப்படுதல். இது தோன்றுதல் அல்லது முன் நிற்றல் ஆகும் (மத். 27:53; யோவான் 14:21, 22). இது அவர் நமக்காகப் பிதாவின் முன்பாக மகிமையின் பிரகாசத்துடன் ஜொலிப் பவராக தம் மக்களுக்காக ஆசாரிய ஊழியத்தை நிறைவேற்றுவதைக் குறிக்கும்.

## *2) வெளிப்படல் (9:26)*

(கிரேக்கச் சொல் – ***Phaneroo ஃபானிரோ***)

இது மறைந்திருந்த ஒன்று 'வெளிப்படுதல்' அல்லது "இருக்கும் வண்ண மாகவே வெளிக்காட்டுதல்" எனப் பொருள்படும். இயேசு கிறிஸ்து மனித அவதாரத்தில் வெளிப்பட்ட வண்ணமாகவே வெளிப்படுதல் (1 தீமோ. 3:16; 1 பேது. 1:20). இது மனித சாயலில் வந்த அவர் இறை நீதியினைப் பிரசங்கித்தும், அறிவித்தும், பாவங்களை நீக்கும்படியாகவும் வெளிப்பட்ட செயல்.

## *3) தரிசனம், தோன்றுதல் (9:28)*

(கிரேக்கச் சொல் –***Optomai ஓப்டோமாய்***)

தெளிவுறக் காணும் வகையில் தோன்றுதல் (அப். 7:2; 9:17). இது வருங்காலத்தில் இனி நிறைவேற வேண்டியதாயுள்ளது. இது அவருடைய ஆட்சியின் உரிமையோடு இணைந்தது. அவர் மகிமையில் வெளிப்பட்டுத் தம் நீதியை உலகில் நிலை நாட்டுவதைக் காட்டும்.

இம் மூன்று வகையான 'பிரத்தியட்சம்', 'வெளிப்படல்', 'தோன்றுதல்' ஆகியவற்றிற்குமுள்ள வேறுபாட்டை நாம் பகுத்து அறிய வேண்டும் வெஸ்ட்காட் (TETH. P. 272).

*(மூன்றாம் பகுதி முற்றிற்று)*

# பகுதி 4

# புதிய உடன்படிக்கைப்பலி, பழைய உடன்படிக்கைப் பலிகளிலும் மேலானது (10:1– 39)

**புதிய உடன்படிக்கையின்** நாயகர் பழைய உடன்படிக்கையின் நாயகர் களிலும் எல்லாவகையிலும் சிறந்தவர், மேலானவர் (1:1-7:28) எனவும், புதிய உடன்படிக்கை பழைய உடன்படிக்கையைவிட மேலானது (8:1 - 9:28) எனவும், இந்நிருபத்தில் தெள்ளத்தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து இந்நூலாசிரியர், பழைய முறைமையான பலிகளின் பயனின்மை யையும், கிறிஸ்து ஒப்புக்கொடுத்த சிலுவைப்பலியின் மேன்மையையும் விளக்குகின்றார்.

அப்போஸ்தலனாகிய பவுலடியாரைப் போன்றே எபிரெய நிருப ஆசிரியரும், மெய்ப்பொருளாயுள்ள புதிய ஏற்பாட்டிற்கு நியாயப்பிரமாணம் நிழலாயுள்ளது என்றே சொல்லியுள்ளனர் (கொலோ. 2:16, 17; 2 கொரி. 4:4; ரோமர் 8:29).

## 1. புதிய ஏற்பாட்டுப் பலி பழைய முறைமையாயுள்ள பலிகளின் மெய்ப்பொருள் ஆகும் (10:1-4)

*"இப்படியிருக்க, நியாயப்பிரமாணமானது, வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாக மட்டும் இருக்கிறபடியால், ஆண்டு தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டு வருகிற ஒரே விதமான பலிகளினாலே,*

*அவைகளைச் செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது. பூரணப்படுத்துமானால், ஆராதனை செய்கிறவர்கள் ஒரு தரம் சுத்தமாக்கப் பட்டபின்பு, இன்னும் பாவங்களுண்டென்று உணர்த்தும் மனச்சாட்சி அவர் களுக்கு இல்லாதிருப்பதினால், அந்தப் பலிகளைச் செலுத்துகிறது நிறுத்தப் படுமல்லவா? அப்படி நிறுத்தப்படாதபடியால், பாவங்கள் உண்டென்று அவை களினாலே ஆண்டுதோறும் நினைவுகூருதல் உண்டாயிருக்கிறது. அல்லாமலும், காளை வெள்ளாட்டுக்கடா, இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்தி செய்யமாட்டாதே.'' (10:1-4)*

### *"நியாயப் பிரமாணம் . . . நிழலாக மட்டுமே உள்ளது" (10:1)*

நியாயப் பிரமாணம் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது (கொலோ. 2:17; எபி. 8:5). இங்கே "நியாயப்பிரமாணம்" என்ற சொல், மோசே கற்பித்த பலி முறைமைகளுக்கடுத்த முறைமைகளைக் குறிக்கின்றது. பழைய ஏற்பாட்டுப் பலிகள் இயேசு கிறிஸ்து தம்மையே ஒப்புக்கொடுத்த சிலுவைப் பலியின் நிழலாக மட்டுமே உள்ளன. நிழலாக உள்ளவற்றை மீண்டும் மீண்டும் எத்தனை முறை செய்தாலும், அவை ஒரு போதும் நிஜமாகா – முழுமையாகா.

*"செலுத்த வருகிறவர்களைப் பூரணப்படுத்தமாட்டாது."* – நிழலாயிருக்கும் பலிகள் அவற்றைச் செலுத்துகிறவர்களை ஒரு போதும் பூரணப்படுத்த முடியாது. தலைமை ஆசாரியன் ஆண்டுதோறும் தமக்காகவும் பலி செலுத்த வேண்டும். இவை பழைய ஏற்பாட்டுப் பலிகளின் பயனின்மையைத்தான் எடுத்துக் காண்பிக்கின்றன.

*"பூரணப்படுத்துமானால். . . அந்தப் பலிகளைச் செலுத்துகிறது நிறுத்தப் படுமல்லவா?"* – பலியினாலே உடன்படிக்கை பண்ணுகிற ஒருவன் தனக்குள் முன்னதாகக் குற்ற மனச்சாட்சியைப் பெற்றவனாயிருக்க வேண்டும். ஆனால். அவ்விதம் பலி செலுத்துகிறவன் அத்தகைய உணர்வைப் பெறாது, பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத் தீர்ப்பைக் குறித்தும் மனதில் உணர்த் தப்படாத நிலையில், மனச்சாட்சி சுத்தமாக்கப் படுவதுமில்லை! ஆகவே அவன், மீண்டும், மீண்டும் பாவஞ் செய்ய உந்தப்படுகிறான். அது மட்டுமன்று, மீண்டும் மீண்டும் பலிகள் செலுத்த வேண்டிய கட்டாய நிலையிலும் அவன் இருக்கிறான். ஒருவன் மெய்யான பாவச் சுத்திகரிப்பை எவ்விதம் பெற்றுக் கொள்ளுவான்? இது இயேசு கிறிஸ்து ஒரேதரம் செலுத்தியுள்ள சிலுவைப் பலி மரணத்தின்மேல் வைக்கும் விசுவாசத்தால் மட்டுமேயாகும் (யோ. 13:10; அப். 15:9; ரோமர் 5:1)!

### *"அப்படி. . . இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்தி செய்ய மாட்டாதே" (10:3,4)*

இறைபடைப்பாயுள்ள உயிரினங்களில் எல்லாம் மனிதன் உன்னதமான வனும், சிறப்பானவனும் ஆவான். அவ்வாறு படைத்தவர் அவனுக்கு ஓர்

ஆன்மாவையும் கொடுத்திருக்கிறார் (சக. 12:1). இவ்வாறு படைப்பின் சிகரமாக உள்ள மனிதனுக்கு, பகுத்தறிவற்ற, ஆன்மாவில்லாத மிருகங்களின் இரத்தத் தினாலே எவ்விதம் பாவ மன்னிப்பைப் பெற்றுத்தர இயலும் (சங். 50:10-16)?

பழைய ஏற்பாட்டுப் பலிகளையும், அதற்குரிய முறைமைகளையும் எடுத்துக் கூறி மோசேயின் மூலம் திருவுளம் பற்றினவர் தேவனேயாவார். ஏனெனில், இறைவனுடைய அநாதித் திட்டத்தின்படி, நியமிக்கப்பட்ட பரிபூரண பலியாக நிறைவு பெற்று விளங்கும் அவரது திருக்குமாரனின் கல்வாரிப் பலி மரணத்தைச் சுட்டிக்காண்பிக்கும் நிழல்களாகவே அவை இருந்தன. ஆகவே அவை வரும் மெய்ப்பொருளின் நிழல்கள் என்பதைவிட, அந்தப் பழைய ஏற்பாட்டு முறைமையான பலிகளுக்கு வேறெந்தச் சிறப்பும் இல்லை.

## 2. பழைய ஏற்பாட்டுப் பலி முறைமைகளின் மெய்ப் பொருளே புதிய ஏற்பாட்டுப் பலி (10:5-10).

முந்தின அதிகாரத்தின், 9:24-28-ம் வரையுள்ள வசனங்களில் நாம் மேலே சுருக்கமாகச் சுட்டிக்காட்டியுள்ள மூன்று வகையான "தோன்றுதல்" அல்லது 'வெளிப்படுத்தல்களை"' மீண்டும் இவ்வதிகாரத்தின் எஞ்சிய பகுதியில் பார்க்கின்றோம் (10:5-37).

9:26 இறந்தகாலம் – கிறிஸ்துவின் மனித அவதாரம் (10:5-10).

9:24 நிகழ்காலம் – பிதாவின் சன்னதியில் கிறிஸ்து பரிந்து பேசுதல் (10:11-13).

9:28 எதிர்காலம் – இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை (10:36-37).

### *i) இயேசு கிறிஸ்துவின் மனித அவதாரம் (10:5-7)*

*"ஆகையால் அவர் உலகத்தில் பிரவேசிக்கும் போது: பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை. ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர் சர்வாங்க தகனபலிகளும், பாவ நிவாரண பலிகளும்,உமக்குப் பிரியமானதல்ல என்றீர். அப்பொழுது நான் தேவனே உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ வருகிறேன். புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன் என்றார்" (10: 5-7).*

10:5-ம் வசனத்தில் *'இதனால்தான்'* என்று நூலாசிரியர் காரணங்காட்டித் தனது விரிவுரையின் அடுத்தப் பகுதிக்குத் திரும்புகிறார். ஆடு, மாடுகளின் பலிகள், மனுமக்களின் பாவங்களைப் போக்கப் போதுமானதன்று. "ஆகையால். . . தேவ சித்தத்தை நிறைவு செய்கிற கிறிஸ்துவின் சரீரபலியே தேவை" என்பதை இங்கு எடுத்துரைக்கிறார்.

*"அவர் உலகத்தில் பிரவேசிக்கும்போது"* – இது மேசியாவின் மனித அவதாரத்தையும் பிதாவுடன் என்றென்றும் அவருக்கிருந்த ஆதி தெய்வீக நிலையையும் (Pre - existence) எடுத்துக் காட்டுகிறது.[67]

*"பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை. சர்வாங்க தகனபலி களும், பாவ நிவாரண பலிகளும் உமக்குப் பிரியமானதல்ல."* – பழைய ஏற்பாட்டு முறைமையின் பலிகளுக்கடுத்த மெய்ப்பொருளைப் புலப்படுத்த, இரு ஜோடியான இணைப் பலிகள் இங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

### *1. முதல் ஜோடி - மிருக பலிகளும், போஜன காணிக்கைகளும்.*

***பலிகள்*** - இது பொதுவாக மிருக பலிகளை, குறிப்பாக சமாதான பலியைக் குறிப்பதாகும். இது ஒரு ஐக்கிய பலி. இதில் யெகோவா இறைவன், ஆசாரிய குடும்பத்தார், மற்றும் பலிசெலுத்துபவனும் அவன் குடும்பமும் பங்கு பெறு கின்றனர். இது ஸ்தோத்திரம் செலுத்துவதாகவோ, ஒரு பொருத்தனையாகவோ, ஒரு ஆராதனையாகவோ செலுத்தப்படும் பலியாகும் (லேவி. 3 அதி; 7:11-35).

***காணிக்கைகள்*** – இதுவும் பொதுவாக எல்லாக் காணிக்கைகளைக் குறிப்பிடு வதாயிருப்பினும் இங்குக் குறிப்பதாகப் போஜனபலியாகிய காணிக்கையைக் குறிக்கும். ஏனெனில் இது பலவகை மெல்லிய மாவைப் பல நிலைகளில் செலுத்துவதாக அமைந்துள்ளது. இது பலி பீடத்திற்கும், ஆசாரியனுக்கும் ஆகாரமாக வழங்கப்படுவதால் போஜன பலியாகிய காணிக்கை எனப்பட்டது. (லேவி. 2 அதி ; 6:14-23).

### *2. இரண்டாவது ஜோடி - சர்வாங்க தகன பலிகளும், பாவ நிவாரண பலிகளும்.*

***சர்வாங்க தகன பலி*** – இது ஆடுகள், காளைகள் அல்லது பறவைகளி லிருந்து செலுத்தப்படும் பலியாகும். இப்பலிகள் எவற்றில் இருந்து எடுக்கப் பட்டாலும் அவை முற்றுமாகத் தேவனுக்குரியது என்பதே இதன் சிறப்பு. இது பலிபீடத்தின் மேல் முற்றுமாக எரிக்கப்படும். இது தேவனுடைய பூரண சித்தத்தை நிறைவேற்றும்படி சரீரம் எடுத்து, இவ்வுலகில் தாழ்ந்து வாழ்ந்து, தம்மையே முற்றுமாகக் காணிக்கையாக ஒப்புவித்தவருக்கு முன் நிழலாக அமைந்துள்ளது (லேவி. 1; 6:8-13).

*பாவ நிவாரண பலி* – இது இரு வகைப்படும். அறியாமையில் செய்து, பின்பு உணர்த்தப்பட்ட பாவங்களை நிவிர்த்தி செய்வதற்காகவும். அறிந்து மனப் பூர்வமாகச் செய்துள்ள பாவங்களை நிவர்த்தி செய்வதற்காகவும் செலுத்தப்

படுவதாகும். இதற்கு ஒரு குறிப்பிடத்தக்க விலக்கு உண்டு (லேவி. 4:31). அறிந்தோ அறியாமையினாலோ செய்த பாவமாக இருப்பினும் பாவம் தண்டனைக்குரியது என்றும், யெகோவா அதை அருவருக்கிறார் என்றும் இப் பலி எடுத்துக்காட்டுகின்றது (லேவி. 4:1-6; 6:24 - 7:7).

இந்த நான்கு சொற்களும் லேவியர் பலி முறைமைகளை நினைவூட்டுபவை யாகும். இந்தப் பலிகள் தேவனோடுள்ள உடன்படிக்கையை எடுத்துக் காட்டுகின்றன.

*"நீர் விரும்பவில்லை. . . உமக்குப் பிரியமானதல்ல"* – இந்தப் பலிகள் தேவனை முழுமையாகத் திருப்திப்படுத்தா. அவர் அதில் பிரியப்படவுமில்லை (ஏசா. 1:11-16). பழைய ஏற்பாட்டு முறைமையின்படியான பலிகளின் பயனற்ற தன்மையை அநேகப் பழைய ஏற்பாட்டு வசனங்கள்தாமே எடுத்துரைக்கின்றன என்கிறார் வெஸ்ட்காட் என்பார். (1 சாமு. 15:22; சங். 50:8; 51:16; ஏசா. 1:10; ஓசி. 6:6 காண்க). இந்தப் பலிகள் தேவனுக்குப் பிரியமாக இல்லை. ஆனால் இவை எந்த உண்மையைச் சுட்டிக் காண்பிக்கின்றனவோ அந்த மெய்ப் பொருளாக உள்ள பலிதானே கிறிஸ்துவின் சிலுவை சரீர பலி. அது இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம். அந்த மெய்ப்பொருளே நிழலாக உள்ள பழைய ஏற்பாட்டுப் பலிகளைக் கனப்படுத்துகிறது.

*"ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர்"* – இது நாற்பதாம் சங்கீதத்தினின்று எடுத்துள்ள ஒரு மேற்கோளாகும்.

எபிரெய மறை நூலில் "என் செவிகளைத் திறந்தீர்" (சங். 40:6) என்றுள் ளது. ஆனால் (எழுபதின்மர்) கிரேக்க மொழியாக்கதில் "ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர்" என்றுள்ளது.[69] எபிரெய நூலாசிரியர் இந்த மேற்கோளைக் கிரேக்க மொழியாக்கத்தினின்றே எடுத்துள்ளார் எனக்கொள்ள வேண்டும்.

சங்கீதம் 40:6-ல் "என் செவிகளைத் திறந்தீர்" என்பதற்கு யாத். 21:6; உபா. 15:17 ஆகிய வசனங்களில் வரும் "அடிமையின் காதைக் குத்துதல்" என்னும் செயல்பாட்டுடன் எவ்விதத் தொடர்புமில்லை.[70] என்று கருதுவாருமுண்டு.

செவி என்பது, மனித உடலில் உள்ள கேள்வியைக் கேட்கும் ஓர் உறுப் பாகும். ஏசா. 50:4-ன் கடைசிப் பகுதியில் "நான் கேட்கும்படி என் செவியைக் கவனிக்கச் செய்கிறார்" என்றிருப்பதோடு இது ஓரளவு ஒத்திருக்கிறது.[71]

தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற ஒரு சரீரமும் அவருடைய கட்டளையின் சத்தத்தைக் கேட்கச் செவியும் தேவை. சரீரம் மேசியாவின் மனித அவதாரத்தை குறித்துக்காட்டுகிறது.

*"அப்பொழுது – அச்சமயத்தில்"* ('Then' or "At that time") *(10:7)* –தேவனுக்கு உகந்த பலியைச் செலுத்த, பழைய ஏற்பாட்டுக் காலத்தில் நியமனம் செய்யப்பட்டிருந்த மிருகங்களின் பலிகளினால் கூடாமற்போன 'அப்பொழுது' அல்லது 'அக்காலத்தில்' என்று இதைப் பொருள் கொள்ள வேண்டும்.

*"உம்முடைய சித்தத்தின்படி செய்ய இதோ வருகிறேன்"* – இது நூலாசிரியரின் சொல்லன்று, மாறாக இது மேசியாவின் கூற்றாகும். தேவ சித்தத்தை நிறைவு செய்ய இறைமகன் மனுமகனாக வந்தார். அவர் விருப்புடன், மகிழ்ச்சியுடன் மனப்பூர்வமாக, ஒரு சரீரம் உடையவராக வந்தார். (லூக்கா 22:42; யோவான் 4:34; 6:38; 8:29; பிலி. 2:8). முன் குறிக்கப்பட்டிருந்த ஆதி இறை தீர்மானத்தின்படி, நீண்ட நாட்களாகக் காத்திருந்ததின் அடிப்படையில் அவர் வந்தார். ஆம் "இயேசு கிறிஸ்து வந்தார்". 1 தீமோ. 1:15 "நான் வந்தேன்" (யோவான் 10:10) என்று கூறி அவர் வந்தார். முதல் மகனாகிய ஆதாம் தோல்வியைத் தழுவிய இடத்தில், இரண்டாம் – கடைசி – ஆதாமாகிய கிறிஸ்து வந்து, மேலான வெற்றி சிறந்து விளங்குகிறார் (யோவான் 17:4).

*"புஸ்தகச் சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது" (10:7)* – நியாயப் பிரமாணப் புத்தகச் சுருளில் சங்கீதம் 40:7-ல் கூறியுள்ள வார்த்தைகளைச் சொல்லியுள்ளவாறு அவர் இவ்வுலகில் மனிதனாக வந்தார். நியாயப்பிரமாணப் புத்தகங்களில் எழுதியிருப்பவற்றை முற்றிலும் நிறைவேற்றிடவே மேசியா இப்பூவுலகில் வந்தார் (மத். 5:17; லூக். 24:44; யோவா 1:45; 5:39).

## *ii) கிறிஸ்து நிறைவேற்றிய பாவ நிவாரண பலி (10:8,9)*

> *"நியாயப் பிரமாணத்தின்படி செலுத்தப்பட்டு வருகிற பலிகளைக் குறித்து மேற்சொல்லியபடி பலியையும் காணிக்கையையும் சர்வாங்க தகன பலிகளையும் பாவ நிவாரண பலிகளையும் நீர் விரும்பவில்லை, அவைகள் உமக்குப் பிரியமானதல்ல என்று சொன்ன பின்பு, 'தேவனே உம்முடைய சித்தத்தின்படி செய்ய இதோ வருகிறேன்' என்று அவர் கூறினார். இரண்டாவதை நிலை நிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப் போடுகிறார்." (10:8,9)*

முழுமையற்ற பழைய ஏற்பாட்டு முறைமையிலான பலிகள் இறைவனுக்கு உகந்த திருப்தியைச் செய்பவையன்று. அவை சில அவசியத்தை மட்டும் எடுத்துக்காட்டுகின்றன. தேவ சித்தத்தை நிறைவு செய்து அவரை மகிழ்வித்து, அவருக்குப் பிரியமான பலியை விருப்புடன் செலுத்தவே, தேவனுடைய திருப்புதல்வர் மனித உருவை எடுத்தார். பழைய ஏற்பாட்டுப் பலிகளும், தொன்று தொட்டு உள்ள வழக்கங்களுக்கும் உட்பட்ட முதலாம் உடன்படிக்கையை நீக்கி, அதை மாற்றியமைத்து, அதற்குப் பதிலாக ஒரு புதிய உடன்படிக்கையை அவர் ஏற்படுத்தியுள்ளார்.

### *iii) கிறிஸ்துவின் பலி பரிசுத்தப் படுத்துகிறது (10:10)*

*"இயேசு கிறிஸ்துவின் தூய சரீரம் ஒரே தரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்" (10: 10).*

*"ஒரே தரம் பலியிடப்பட்டதினாலே. . ."* – பழைய உடன்படிக்கையின் பலி முறைமைகள் முழுமையற்றவையாயிருந்தன. எனவே ஒரு நிறைவான, முழுமையான பலியைச் செலுத்த இயேசு பிரான் மனித உருவில் தோன்றினார். மனித இனத்தின் பாவத்தைச் சுமந்தொழிக்க அவர்தாமே பலியானார். இதன் சிறப்பு யாதெனில், இது ஒருதரம் மட்டும் செலுத்தப்பட்டு நிறைவேற்றப்பட்ட ஒரே முழுமையான பலி என்பதாம் (7:27; 10:10). இனி எவ்விதப் பலியும் செலுத்த வேண்டிய அவசியமில்லை, இயேசு கிறிஸ்து எல்லோருக்காகவும், ஒரேதரம், நிறைவான ஒரே பலியாகத் தம்மையே விருப்புடன் ஒப்புக்கொடுத்து இப்பலியைச் செலுத்தினார்.

*"நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்"* – இந்தப் பலியின் நோக்கம் பரிசுத்தமாக்கப்படுதலேயாகும். இயேசு கிறிஸ்து தமது ஒரே பலியினாலே நம்மைப் பரிசுத்தமாக்கினார் (யோவா. 17:19; 1 கொரி. 6:11). லேவி முறைமையின்படியான பலிகளினாலேயுண்டான சுத்திகரிப்பு, சிறிது நேரத்திற்கேயுரியதாகும். அவை மனச்சாட்சியை என்றென்றும், முற்றுமாகச் சுத்திகரிக்கப் போதுமானவையல்ல. ஆனால், இயேசு கிறிஸ்து ஒரே தரம், தம்மையே முழுமையான முறையில் பலியிட்டுள்ளதினாலே, அவர் தம் பிள்ளைகளை என்றென்றைக்குமாகப் பூரணப் படுத்தியிருக்கிறார் (9:14; 10:10, 14).

***நாம் பெறும் பரிசுத்தமாக்கப்படுதல் மூன்று நிலையிலானது:***

1, ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறோம் (1 பேதுரு 1:2), இது மனித இருதயத்தில் பரிசுத்த ஆவியானவரின் செயலினால் தேவன் நடப்பிக்கும் ஒரு கிருபையின் செயல்.

2. திருவசனத்தினாலே பரிசுத்தமாக்கப்படுகிறோம் (யோவான் 17:17). இது அனுதின வாழ்க்கையில், திருவசனங்களினாலான தொடரும் அனுதினச் சுத்திகரிப்பு.

3. இரத்தினாலான சுத்திகரிப்பும் உண்டு. இது இவ்வசனத்தில் குறிக்கப் பட்டிருக்கும் சுத்திகரிப்பாம். இது அவருக்குரியவர்களாகிய நம்மை இவ் வுலக மக்களினின்றும் பிரித்து, தனித்துத் தூய்மையாக நிறுத்துகிறது (1 யோவான் 1:7-9).

## 3. கிறிஸ்துவின் ஒரே பலியும், அதன் மேலான தன்மைகளும் (10:11-18)

*"அன்றியும், எந்த ஆசாரியனும் நாடோறும் ஆராதனை செய்கிறவனாயும் பாவங்களை ஒருநாளும் நிவிர்த்தி செய்யக்கூடாத ஒரேவித பலிகளை அனேகந்தரம் செலுத்துகிறவனாயும் நிற்பான். இவரோ, பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி, என்றென்றைக்கும் இறைவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்து, இனித் தம்முடைய சத்துருக்களைத் தமது பாதபடியாக்கிப் போடும் வரைக்கும் காத்துக்கொண்டிருக்கிறார். ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார். இதைக் குறித்துப் பரிசுத்த ஆவியானவரும் நமக்குச் சாட்சி கூறுகிறார். எப்படியெனில், அந்த நாட்களுக்குப் பின்பு நான் அவர்களோடே பண்ணும் உடன்படிக்கையாவது; நான் என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய இருதயங்களில் வைத்து, அவைகளை அவர்களுடைய மனதில் எழுதுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்பதை உரைத்த பின்பு, அவர்களுடைய பாவங்களையும் அவர்களுடைய அக்கிரமங்களையும் நான் இனி நினைப்பதில்லை என்பதைச் சொல்லுகிறார். இவைகள் மன்னிக்கப்பட்டதுண்டானால், இனிப் பாவத்தினிமித்தம் பலி செலுத்தப்படுவதில்லையே" (10:11-18).*

### *i) பழைய பலிகளின் பயனின்மை (10:11)*

***பழைய முறைமையிலான ஆசாரிய பலிகளின் மட்டுள்ள தன்மைகளாவன:***

1) நாடோறும் ஒரே வித பலிகள் அநேகந்தரம் திரும்பத் திரும்பச் செலுத்தப்பட வேண்டும்.

2) அவை பாவங்களை முழுமையாக ஒருக்காலும் நிவிர்த்தி செய்யக்கூடாதவை. இது துக்கமான ஒரு நிலை. அவை பாவ நிவாரண பலி எனவும், குற்ற நிவாரண பலி எனவும் அழைக்கப்பட்டன. ஆனால் அவை குற்றங்களை மூடிப்போட்டனவேயன்றி, அவற்றை அகற்றி விடவில்லை.

3) ஆசாரியன் நின்று கொண்டே செயலாற்ற வேண்டும் (உபா. 10:8). அங்கே அமரும்படி அவனுக்கு ஓர் இடம் ஒதுக்கப்படவில்லை. அங்கே அவன் உட்கார அனுமதியில்லை. இது முடிவற்று தொடர்ந்து செய்து கொண்டேயிருக்கும் ஒரு பலி முறையாயிருந்தது.

### *ii) கிறிஸ்து நிறைவேற்றின பலியின் மேன்மை (10:12-14)*

***கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நிறைவேற்றின புதிய முறைமையிலான பலியின் மேன்மைகள்:***

1) இது திரும்பத் திரும்பச் செய்ய வேண்டிய தேவையில்லாதபடி, ஒரேதரம் செலுத்தப்பட்ட, முடிவுபெற்ற உன்னத பலி.

2) லேவிய ஆசாரியர்கள் நின்று கொண்டேயிருந்தனர் (உபா. 10:8). இவரோ, பலியைச் செலுத்திய பின்பு என்றென்றைக்குமாகத் தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார். இதன் முற்றுப் பெற்ற தன்மையை இது தெரிவிக்கிறது.

3) இவர் வெற்றிச் சிறந்தவர், ஆம் இவர் இராஜரீக ஆசாரியர் (சங். 110:4).

4) இவர் தம்முடைய ஒரே பலியினாலே என்றென்றைக்கும் பூரணப்படுத்தி யிருக்கிறார்.

"பூரணப்படுத்தல்" (முழுமைப்படுத்துதல்) என்ற சொல் இந்நிருபத்தில் பன்முறை உபயோகித்துள்ளதைக் கவனிக்கவும். இவ்வசனங்களில் எந்தெந்தப் பொருளில் இவ்வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதைச் சிந்தித்துத் தியானிக்கவும் (2:10; 5:9, 14; 7:11, 19, 28; 9:9; 10:14; 11:40).

### *iii) பழைய ஏற்பாட்டில் முன்னுரைத்தவை அனைத்தும் இயேசு கிறிஸ்துவில் முழுமையாக நிறைவேறியுள்ளன (10:15-18).*

***"பரிசுத்த ஆவியானவரும் நமக்குச் சாட்சி சொல்லுகிறார்" (10:15)***

வேதவாக்கியங்களை மேற்கோளாகக் எடுத்துக் காட்டுகையில், அதை எழுதியவர்களைப் பார்க்கிலும், தேவனுடைய நோக்கத்திற்கே முன்னுரிமை அளித்திருப்பது இந்நிருபத்தின் சிறப்பம்சம் ஆகும். (3:7-ன் விளக்கத்தைக் காண்க).

"நான் என் நியாயப்பிரமாணத்தை, அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன்" (எரே. 31:34). பழைய இறைவாக்கினரின் கூற்றுகளினின்று இந்நூலாசிரியர் இம்மேற் கோளை எடுத்துள்ளார் (10:16; 8:8-12).

***"பாவங்களை. . . நினைப்பதில்லை" (10:17)***

புதிய ஏற்பாட்டின் மேன்மையான ஆசீர்வாதம் "பாவ மன்னிப்பு" என்பதாகும். கிருபையினாலுண்டான மீட்பின் இறை திட்டமும் செயல்பாடுகளும் தேவனிடத்தில் துவங்கியது. தேவ குமாரனின் ஒரே பலியினால் அது நிறைவு பெற்றது. தூய ஆவியானவரின் சாட்சியால் அது உறுதிப்படுத் தப்பட்டுள்ளது.

"பரிபூரணமான ஒரே பலியினாலே பாவப் பரிகாரத்தை ஏற்படுத்திப் பாவங்களைப் போக்கிவிட்டதினாலே, இனியொரு பலி தேவையில்லை. ஆகவே தான் பாவங்களையும் அக்கிரமங்களையும் நினைப்பதில்லை என்று கூறியுள்ளார்." – ஜாண் கால்வின்.

***"இனிப் பாவத்தினிமித்தம் பலி செலுத்தப்படுவதில்லையே" (10:18)***

புதிய ஏற்பாட்டு இறையருள் அருளப்பட்டுள்ள நிலையில், பழைய உடன்படிக்கையின் பலிகளுக்கு இனியொரு இடமில்லாது போய்விட்டது. பாவ மன்னிப்பிற்குரிய பரிபூரணமான (முழுமையான) செயல்கள் இயேசு கிறிஸ்துவினால் நிறைவேறிவிட்டபடியினால், பழைய உடன்படிக்கை முறைமையின் படியான அனுசாரமான பலிகளுக்கு இனி எவ்விதத் தேவையும் இல்லை! இனி அவற்றிற்கு இடமும் இல்லையே! ஆம், இனி ஓர் இடமுமில்லை! பழைய ஏற்பாட்டுப் பலிமுறைமைகளனைத்தும் இப்பொழுது முற்றுப் பெற்றுவிட்டன (யோவான் 19:30).

## II இயேசு கிறிஸ்துவே தேவனின் திருச் சமூகத்திற்குச் செல்லுவதற்குரிய ஒரே பாதை (10:19-25)

### 1. புதியதும் ஜீவனுள்ளதுமான பாதை (10:19)

*"ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால்" (10: 19).*

***"ஆகையால் சகோதரரே . . ."*** – அனைத்து விசுவாசிகளையும் சேர்த்துப் பொதுவாக ஒரே நிலையில் சகோதரரே என்று நூலாசிரியர் அழைக்கிறார்.

***"மாம்சமாகிய திரையின் வழியாய்"*** – பாவ நிவாரண பண்டிகையின் நாள் மட்டுமே, ஆண்டுக்கொருமுறை லேவிய தலைமை ஆசாரியன் அதிதூய அறையை மறைத்திருந்த திரையை நீக்கி உள்ளே செல்வான். மெய்யான அதிதூய ஸ்தலம் பரலோகமேயாகும். அந்த அதிதூய ஸ்தலத்திற்குள் செல்ல இயேசுவானவர் தாமே தன் மனிதவதாரத்தில் ஏற்றுக்கொண்டிருந்த சரீரமாகிய திரையைக் கிழித்துள்ளார். அவ்வண்ணமாக அவர் புதியதும், உயிருள்ளதுமான ஒரு நல்ல பாதையை நமக்கென்று திறந்து வைத்துள்ளார்.

இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரண வேளையில், எருசலேம் தேவாலயத்தின் திரைச்சீலை மேலிருந்து கீழ்வரை இரண்டாகக் கிழிந்தது (மத். 27:51). "இந்தத் திரைச்லை 70 அடி நீளமும். 30 அடி அகலமும், 4 அங்குலம் கனமுமாக இருந்தது" (ஜோசிபஸ்). இந்தத் திரை கிழிந்துவிட்டதால் இப்பொழுது தங்கு தடையின்றி அதிதூய அகத்திற்குள் செல்லும் வழி திறந்துவைக்கப் பட்டு விட்டது. பரத்தினின்று இறங்கி வந்த இயேசு கிறிஸ்து தாம் வந்த வண்ணமாகவே பரமேறிச் சென்றுள்ளார். "நானே வழி. . . என்னாலேயன்றி ஒருவனும்

பிதாவினிடத்தில் வரான்" என்று நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பறைசாற்றியுள்ளார் (யோவான் 14:6). படைப்புக் கடவுளின் திருச்சன்னதிமுன் செல்ல மனிதனுக்கு பாதையேதும் இல்லாதிருக்கையில், பரம தந்தையின் பாசமிக்கத் திருப்புதல்வர் ஒரு புதிய பாதையை நமக்கு இப்பொழுது திறந்து தந்துள்ளார்.

## 2. புதிய பாதையின் வாயிலாகப் பெறுகின்ற மேலான உரிமைகள் (10:20-22அ)

*"அந்த மார்க்கத்தின் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே, நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும், இறைவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும், துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும். . ." (10:20-22 அ).*

இயேசு பெருமான் தம்மைத்தாமே பலியாக ஒப்புக்கொடுத்துள்ள அடிப்படையில், பரத்திற்குச் செல்லுவதற்குரிய புதியதொரு பாதை இப்பொழுது திறக்கப்பட்டுள்ளது. அவரை நம்புவோருக்குரிய உரிமைகளும், கடமைகளும் அளவிடற்கரியவை. நூலாசிரியர் அவற்றில் ஒருசிலவற்றை இங்கு எடுத்துரைக்கின்றார். அந்த மார்க்கத்தின் வழியாய் அதிதூய அகத்திற்குள் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே இப்பொழுது நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறது.

பழைய உடன்படிக்கையின் நாட்களில், தலைமை ஆசாரியன் மட்டும் ஆண்டுக்கொருமுறை, அதாவது பாவ நிவாரணப் பண்டிகை நாளன்று, பலி மிருகத்தின் இரத்தத்துடனேகூட அதிதூய அகத்திற்குள் பிரவேசிப்பான். அதுவும் அவன் நடுக்கத்துடனேயே அவ்வாறு செல்ல வேண்டும்! ஆனால் புதிய ஏற்பாட்டு விசுவாசிகளாகிய நாமோ, தக்க வேளையில் உதவிபெறக்கூடிய மிகுதியான அருளை அடைய, கிருபாசனத்தண்டையில் இவ்வாறு செல்லும் தைரியத்தை இப்பொழுது பெற்றுள்ளோம் (4:16).

### *"மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறார்" (10:21)*

இயேசு கிறிஸ்து நமது தலைமை ஆசாரியராக ஜீவிக்கிறார். அவர் நமக்காகப் பரிந்து பேசுகிறவராகவும் இருக்கிறார். (1 யோவான் 2:1). அவர் தேவனுடைய வலது பாரிசத்தில் அமர்ந்துள்ளார். சீடர்கள் புறப்பட்டு உலகெங்கும் போயினர் (மாற். 16:19, 20). சீடர்கள் புறப்பட்டுப் போகத் தைரியங்கொண்டது, அவர் உன்னத நிலையில் சகல அதிகாரத்துடனும், வல்லமையுடனும் இன்று அமர்ந்துள்ளதினாலேயே யாகும்.

***அவருடைய இரத்தத்தினாலே நமக்குக் கிடைத்த உரிமைகள் (10:22அ)***

*1. "துர்மனச்சாட்சி நீங்கிற்று"* – ஊழியஞ் செய்வதற்கென்று நம் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த இரத்தமேயாகும்.

*2. "தெளிக்கப்பட்ட இருதயம்"* – கிறிஸ்துவின் தூய திருஇரத்தத்தால் தெளிக்கப்படுதல் என்று இது பொருள்படும். இரத்தந்தெளிக்கப்படுதலைக் குறித்து அப்போஸ்தலனாகிய பேதுருவும் கூறியுள்ளான் (1 பேது. 1:2). பழைய உடன்படிக்கையின் காலத்தில் மோசே இரத்தந்தெளித்தான் (லேவி. 8:19,23,24,30).

*3. "சுத்த ஜலத்தால் கழுவப்பட்டவர்கள்"* – லேவிய ஆசாரிய முறைமையின்படி பாவ நிவாரண பண்டிகை நாளன்று தலைமை ஆசாரியன், ஆசாரிய ஆடைகளை அணியுமுன், தண்ணீரினால் குளிப்பாட்டப்பட வேண்டும். (லேவி. 16:4). புதிய ஏற்பாட்டில், மறுபடியும் பிறத்தல் குளிப்பதோடும், சுத்திகரிப்பு கழுவுதலோடும் ஒப்பிடப்பட்டுள்ளது (யோவான் 13:8, 10; தீத்து. 3:5). திருவசனத்தைக் கொண்டுள்ள தண்ணீர் முழுக்கைப் பற்றியும் பவுல் கூறியுள்ளார் (எபே. 5:26).

இப்பொழுது ஆலயத்தின் திரை கிழிந்துள்ளநிலையில், தூயஇடத்தில் உள்ள பொற்குத்து விளக்கின் ஒளியும், அதிதூயஸ்தலத்தில் மிளிரும் தேவ மகிமையும் சங்கமமாகியுள்ள ஓர் அற்புத ஒளியினுள் நாம் செல்லுகிறோம் (1 பேது. 2:9).

## 3. விசுவாசிகளின் கடமைகள் (10:22 ஆ - 25)

*"உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம். அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம், வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே. மேலும் அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து. சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம். நாளானது சமீபித்திருக்கிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்ல வேண்டும்" (10:22ஆ - 25).*

மேற்கூறிய சிறப்பான உரிமைகளைப் பெற்றுக் கொண்ட (10:20-22) விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தில் முழு நிச்சயத்தோடும், நம்பிக்கையில் அசைவில்லாமலும் இருந்து, அவரவர் தத்தம் கடமைகளைச் செய்வதில் உறுதியாக இருக்க வேண்டும்.

### i) *"சேரக்கடவோம்" (10:22)*

பழைய ஏற்பாட்டுக் காலத்தில், வராதே! கிட்டிச் சேராதே! நெருங்காதே! தொடாதே! என்னும் எச்சரிப்புகளும், கடிந்துரைத்தல்களுமிருந்தன (யாத். 3:5; 19:12). ஆனால் புதிய ஏற்பாட்டு இக்காலத்தில், இயேசு கிறிஸ்துவின் இரத்தத் தினாலே தேவனின் திருச்சன்னதி முன் கிட்டிச் சேரும் உரிமையையும்,சிலாக் கியத்தையும் நாம் பெற்றுள்ளோம். எனவே ஏற்ற வேளையில் இரக்கத்தைப் பெற தேவத் திருச்சன்னதி முன் நெருங்கி வரக்கடவோம் – தைரியமாகச் சேரக்கடவோம்!

### ii) *நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் உறுதியாயிருக்கக் கடவோம் (10:23)*

இந்த நம்பிக்கை என்பது, விசுவாசத்தைக் குறிப்பிடாமல், எதிர்நோக்கு தலோடுகூடிய நம்பிக்கையை (எதிர் பார்ப்பை) குறிப்பிடுவதாகும். விசுவாசி களாகிய நமக்கு நல்லதொரு எதிர்காலமும், அதைப் பற்றின மகிமையான, ஜீவனுள்ள நம்பிக்கையும் உண்டு என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இதனால் நாம் உற்சாகம் பெற வேண்டும்.

எபிரெய நிருப ஆசிரியர் நம்பிக்கையைக் குறித்து, திட்டமும் தெளிவுமாகத் தம் நிருபத்தின் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார் (3:6; 6:11, 18, 19; 7:19). நமது நம்பிக்கையின் அஸ்திபாரம் கர்த்தருடைய வாக்குறுதிகளேயாகும். (6:13, 14; 8:6). அவற்றை நாம் பற்றிக்கொள்ளல் வேண்டும். இந்த மாறாத நம்பிக்கைக் கேதுவான (1 தீமோ. 1:1; கொலோ. 1:27) வாக்குறுதிகளை வழங்கியவர் உண்மை யுள்ளவர் (1 கொரி. 1:9; 10:13). ஆகையினால், நமது நம்பிக்கையை அறிக்கை யிடுகிறதில் அசைவில்லாது உறுதியாக இருக்கக் கடவோம்.

### iii) *ஒருவரையொருவர். . . கவனிப்போம். (10:24,25)*

*1) அன்பு* – விசுவாசிகள் ஒருவர்க்கொருவர் அன்பு காட்ட வேண்டும். "நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்" (யோவான். 13:34) என்பதே கர்த்தர் நமக்குக் கொடுத்துள்ள கட்டளை (1 யோவான் 3:23).

*2) நற்கிரியை* – நற்கிரியைகளால் ஒருவரும் இரட்சிக்கப்படுவதில்லை. ஆனால் இரட்சிக்கப்பட்டுள்ள இறை மக்கள் நற்கிரியைகள் செய்வதைத் தங்கள் கடமையாகக் கருத வேண்டும். (எபே. 2:10; 1 தீமோ. 3:2; 5:10, 25, 6:18; தீத்து. 2:7, 14; 3:8, 14; 1 பேது. 2:12). நற்கிரியைகளே இரட்சிக்கப் பட்டுள்ளதின் வெளிப்பாடு ஆகும். இரட்சிப்புக்கு – மறுபிறப்புக்கு *முன்* நற்கிரியைகள் அல்ல, இரட்சிக்கப்பட்ட அனுபவம் அடைந்த *பின்பே* தூய

ஆவியின் உதவியால் நற்கிரியையாகிய பலிகளைச் செலுத்த வேண்டும் (எபி. 13:16).

*3) புத்தி சொல்லுதல்* – (10:25) புத்தி சொல்லுதலின் மூலமாக விசுவாசிகள் நல்ல பலன் பெற்றுக்கொள்ளுகின்றனர். இதனால் நாம் பிறரைப் பயன் அடையச் செய்கிறோம்,பயனுள்ளவர்களாக்குகிறோம்.

### *iv) "சபை கூடி வருதலை விட்டு விடாதிருப்போம். . ." (10:25)*

சபை கூடி வருதலின் முக்கிய நோக்கம் இறைவனைத் தொழுது கொள்ளுதலேயாகும். தங்களை மீட்ட கர்த்தருக்கு நன்றி சொல்லி, அப்பம்பிட்டு அவரை நினைவுகூர்தலே அதன் சிறப்பம்சம். நட்புடன் உறவாடுதல் (ஐக்கியம்),வரம் பெற்றவர்களிடமிருந்து ஆன்மீக நன்மைகளைப் பெறுதல், ஒருவருக்கொருவர் அறிவுரை வழங்குதல், ஆற்றித் தேற்றுதல், உற்சாக மடைதல் போன்றவற்றால் ஆன்மீக மேம்பாடு அடைய, "சபை கூடி வருதல்" இன்றியமையாததாயுள்ளது. ஆகவே சபை கூடி வருதலை நாம் ஒரு போதும் விட்டு விடலாகாது. மாறாகச் சபை கூடிவருதலை விட்டுவிடுதலின் மூலம் நம் ஆன்மீக மேம்பாடு குன்றி, விசுவாசிகளுக்கிடையே இருக்க வேண்டிய நட்புடன் கூடிய உறவாடுதல் தளர்ந்துபோய், விசுவாசத்தினின்று நழுவிவிட வாய்ப்புண்டு. ஆகையினால் சபை கூடிவருதலை நாம் ஒருக்காலும் விட்டுவிடலாகாது; அதை நாம் புறக் கணிக்கலாகாது.

*"நாளானது சமீபித்து வருகிறது"* – இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் நாள் சமீபித்து வருகிறது (ரோமர் 13:11; 1 தெச. 5:4). எனவே நாம் அதிக உற்சாகத்துடன் இவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும் (10:22இ-25).

*சேரக்கடவோம்* – நம்பிக்கையைப் பற்றிப் பிடித்துக் கொள்வோம், ஒருவரிலொருவர் அன்புகூருவோம், நற்கிரியைகளைச் செய்வதில் தளராதிருப்போம், அதில் பெருகுவோம். சபை கூடி வருதலில் ஒழுங்காகப் பங்கெடுத்து, ஒரு சரீரமாய் இணைவோம். ஒருவருக்கொருவர் அறிவுரை கூறி உற்சாகப்படுத்துவோமாக.

## நான்காவது எச்சரிக்கை (10:26-31)

*"சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ் செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்ப்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும். மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன், இரக்கம் பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே. தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்த மென்*

*றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப் பாருங்கள். பழிவாங்குதல் எனக்குரியது; நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றும், கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பார் என்றும் சொன்னவர் இன்னாரென்று அறிவோம். ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே" (10:26-31).*

எபிரெயர் 10:26-31-ஐ எபிரெயர் 6:4-8 உடன் ஒப்பிட்டுக் காண்க.

### *"சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு" (10:26)*

பிதாவாகிய தேவனுக்கும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குமுரிய இயல்பான தெய்வீகக் குணாதிசயங்களுள் ஒன்று "சத்தியம்" ஆகும். இவ்விடத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பாவநிவாரண பலியினாலன்றி, மனித இனத்திற்குப் பாவ மன்னிப்பும் ஆன்மீக ஈடேற்றமும் இல்லையென்பதையே சத்தியமென நாம் பொருள் கொள்ள வேண்டும். இயேசு கிறிஸ்துவையும், அவருடைய பாவ நிவாரண பலியினால் கிடைக்கும் ஆன்மீக இரட்சிப்பையும், அதனால் உண்டான சகல நுணுக்கங்களையும் தெரிந்து கொள்ளுதலையே "சத்தியத்தை அறியும் அறிவு" என ஆசிரியர் கூறுகிறார்.

### *மனப்பூர்வமாய்ப் பாவஞ் செய்கிறவர்களாயிருந்தால் (10:26)*

இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம் ஒன்றே பாவ மன்னிப்பை அடைய ஆதாரமாயுள்ளது. சுவிசேஷ சத்தியத்தைக் கேட்டு இரட்சிப்பின் வழியைப் பற்றின இவ்வறிவினைப் பெற்றுக்கொண்ட பின்னர், பழைய பயனற்ற லேவியப் பலி முறைமைகளுக்குத் திரும்பிச் செல்லுவதென்பது, மனப்பூர்வமான பாவம் – அதாவது சுவிசேஷத்தின் கருத்துப் பிழிவை அறிந்த பின்னரும் அதை விட்டு விலகி, நியாயப்பிரமாணச் சம்பிரதாயங்களுக்குத் திரும்புவது கொடிய பாவம். இந்தப் பாவம், மனப்பூர்வமாக ஆற்றும் பாவம்!

விசுவாச மறுதலிப்பு (apostate) என்பது முன்னதாகத் தெரிந்திருக்கிற ஒன்றைத் தள்ளிவிடுதல் அல்லது புறக்கணித்து விலகுதல் என்பதாம். சத்தியத்தைப் பற்றின அறிவை பெற்றுக்கொள்ளுதல் என்பது, சத்தியத்தை ஏற்றுக் கொள்ளுதல் (சொந்தமாக்கிக்கொள்ளுதல்) ஆகாது. சத்தியத்தைப் பற்றின அறிவை ஒருவன் பெற்றிருந்தும், அதை அவன் இதயபூர்வமாக ஏற்றுத் தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ளாதிருக்கக்கூடும்.

இதற்கு யூதாஸ்காரியோத்து ஒரு நல்ல மாதிரியாவான். அவன் ஆண்டவருடைய அனைத்து போதனைகளையும் கேட்டு, அவருடன் கூடவே இருந்தவன். அவர் கூறிய பற்பல உவமைகளையும் அதன் விளக்கங்களையும் ஏனையப் பதினொருவர் போன்றே கேட்டு அறிந்தவன். பாவம், இரட்சிப்பு,

கிருபை, விசுவாசம், நம்பிக்கை, நித்தியம் ஆகியவற்றைப்பற்றிய நற்போதனை களையும் அதன் விளக்கங்களையும்,போதனை மூலமாக மட்டுமன்று, ஆண்ட வர் நிகழ்த்திய அதிசய அற்புதங்கள் மூலமாகவும் தெளிவாகத் தெரிந்தவன். ஆயினும், எனைய சீடர்களைப்போல அதை அவன் தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ளவில்லை. ஏனைய சீடர்களுக்கு இருந்த சந்தர்ப்பச் சூழ்நிலைகள், சம நிலையில் அவனுக்குமிருந்தன. ஆயினும், மற்ற பதினொருவரும் அவற்றை மனதார, விருப்புடன் ஏற்றுக்கொண்டிருக்க, இவனோ அச்சத்தியத்தை ஏற்றுக் கொள்ளாது புறக்கணித்து விட்டான். பணத்தின் பற்று ஆண்டவர்மேல் செலுத்த வேண்டிய அன்பை மேற்கொண்டது. இவ்வுலகத் திடபொருட்களின்மேல் இருந்த அவனுடைய ஆசை, ஆவிக்குரிய உன்னதமானவற்றை வேண்டாம் என விலக்கி வைத்து விட்டது. இவ்வுலகச் செல்வம், நித்திய உலக ஆவிக்குரிய மறுமைச்செல்வத்தைப் புறக்கணித்துவிட்டது. நித்திய இரட்சிப்புக்குரிய வழியினைத் தெள்ளத்தெளிவாக அவன் அறிந்தவனாக இருந்தும், அதை அவன் ஏற்க மறுத்து விட்டான். இது மனப்பூர்வமாக நிகழ்த்திய விசுவாசத்துரோகம்.

தேவன் பழைய யூதேய மார்க்கத்திற்குரிய பலி முறைகளைத் தள்ளி விட்டு, கிறிஸ்துவின் சிலுவைப் பலியினைத் தெரிந்து கொண்டுள்ளார். ஆதலால், சிலுவைப் பலியினைத் தள்ளிவிடுகிறவன் கொடுந்தண்டனையாகிய தீர்ப்பைப் பெறுவது உறுதி.

*"வேறொரு பலி இனியிராது"* – இயேசு கிறிஸ்து ஒரேதரம் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்துள்ள சிலுவைப் பலியை நிராகரித்து விட்டால், பாவங்களினிமித் தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியெதுவும், என்றும், எங்கும் இல்லை.

*"நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதி களைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்" (10:27)* – விசுவாச சத்தி யத்தை மறுதலிப்போருக்கு வரும் தண்டனை இங்கு விவரிக்கப்பட்டுள்ளது; இது உறுதி. ஒருவனுடைய பாவங்களைத் தம்முடைய சரீரத்தில் சுமந்து, சிலுவை யில் பலி செலுத்தியுள்ள இரட்சகரைப் புறக்கணித்துத் தள்ளுவது, அவன் தனக் குரிய நியாயத்தீர்ப்பைத் தானே வருவித்துக்கொள்ளுவதாகும். இதற்கு வேறொரு ஆதாரம் தேவையில்லை. *"பட்சிக்கும்"* என்பது அவர்களுக்குரிய நியாயத் தீர்ப்பின் கொடுமையைக் காட்டுவதாகும். இது விசுவாச சத்தியத்தை உதறித் தள்ளுவோருக்குக் கொடுக்கப்படும் எச்சரிப்பு (10:28, 29). இப்படிப்பட்டவர்கள் மேல் நியாயத்தீர்ப்பு சுமரும் என்பதை இந்நூலாசிரியர் கடுமையாக எச்சரிக்கிறார்.

### *"இரண்டு மூன்று சாட்சிகள்" (10:28)*

அவசியம் கீழ்ப்படிய வேண்டியதும், கீழ்ப்படியாதே போனால் கடும் தண்ட னைக்கு உட்படத்தக்கதாக உள்ள இறை சட்டதிட்டங்களுக்கு,அதாவது மோசே யின் ஆகமங்களுக்கு வாசகர்களின் கருத்தை நிருப ஆசிரியர் திருப்புகிறார்.

செய்யப்படும் குற்றம் இரண்டு அல்லது மூன்று சாட்சிகளினால் உறுதிப்படுத் தப்படுமானால் மெய்யாகவே குற்றம் சுமரும் (உபா. 17:6; 19:15); தண்டனை அடைதல் உறுதி. இதை இந்நிருப வாசகர்களாகிய எபிரெயர்கள் நன்கு அறிந்த வர்களே. ஆகையால் வாசகர்களுக்கு இதை நினைவூட்டி, இத்தகையோர் செய்யக்கூடிய *மூன்று பெருங்குற்றங்களை* ஆசிரியர் இங்கு எடுத்துரைக்கிறார்.

### *1) "தேவகுமாரனைக் காலின் கீழ் மிதித்தல்" (10:29)*

மோசேயை மறுதலிப்பது என்பதே பெரும் பாவம். அப்படியானால் இறைத் திருக்குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை மறுதலித்தல் எத்தனை அதிகக் கொடுமை! மோசேயின் நியாயப்பிரமாணங்களைத் தள்ளிவிடுதல் அதிகக் கேடானதாகும். அப்படியானால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷ நல் வார்த்தை களைத் தள்ளிவிடுதல் எவ்வளவு அதிகம்! இயேசு கிறிஸ்துவை மறுதலித்தல் (6:6) என்பது அவ்வாறு மறுதலிப்பது மட்டுமன்றி, தேவத்திருக்குமாரன் என்னும் அவருடைய உயர்ந்த உரிமையைக் காலின்கீழாக்கி அவமதிப்பதாகும். இது மாபெரும் கொடிய குற்றம் அல்லவா?

### *2) "தன்னைப் பரிசுத்தஞ் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்று எண்ணுதல்" - (10:29)*

விசுவாச சத்தியத்தை மறுதலிப்போர், தொடர்ந்து உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்று எண்ணுகின்றனர். பலி மிருகங்களின் இரத்தத்தினால் பழைய உடன்படிக்கை அமைந்துள்ளது (யாத். 24:8; எபி. 9:20). இதைவிட எவ்வகையிலும் மேன்மையாயுள்ள இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் இப்பொழுது இந்தப் புதிய உடன்படிக்கை உருவாகியுள்ளது (மத். 26:28; மாற்கு 14:24; லூக். 22:20; 1 கொரி. 11:25). மனிதன் தேவனின் திருச்சன்னதி முன் கிட்டிச்சேரக்கூடிய ஒரே வழி, இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலான புதிய உடன்படிக்கை ஒன்று மட்டுமே!

*"பரிசுத்தஞ் செய்த உடன்படிக்கையின் இரத்தம்"* – இது ஒரு வழக்குச் சொல்லாகும். அனைத்து மனித இனத்தையும் பரிசுத்தஞ்செய்வதற்கெனச் சிந்தப்பட்டதே இயேசு கிறிஸ்துவின் இரத்தம். அதனை விசுவாசிக்கிற எவருக்கும் சுத்திகரிப்பையுண்டுபண்ண அது காரணமாயுள்ளது. இந்த இரத்தத்தை விசுவாசியாதோருக்குச் சுத்திகரிப்பைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு, வேறு எந்த ஒரு இரத்தமுமில்லை, மார்க்கமுமில்லை. கிறிஸ்துவின் சுவிசேஷமாகிய விசுவாச செய்தியைத்தெரிந்து கொண்ட பின்னர், அதை விட்டு விலகிச் சென்றவர்களைச் சுத்திகரிக்க வேறேயொரு இரத்தமும் இல்லை. ஆகவே இச்சொல்லை ஒரு பொதுவான வழக்குச் சொல்லாகவே இவ்விடத்தில் ஆசிரியர் பயன் படுத்தியுள்ளார்.

*அசுத்தம் என்று எண்ணுதல்* – இறைஞானத்தில் கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள இந்தப் புதிய உடன்படிக்கையின் இரத்தமாகிய சுத்திகரிப்பின் செய்தியை நுண்ணிய அறிவோடு அறிந்த பின்னரும், அதை வேண்டாம் என விட்டுவிலகுதல், அவர் சிந்திய உடன்படிக்கையின் இரத்தத்தை மிதித்து அவமதிக்கிறவன் ஆகிறான் எனப்பொருள்படுகின்றது. அவனைப் பொறுத்த மட்டிலும் அந்த இரத்தம் பயனற்றதாய்ப் போய்விடுகிறது.

### *3) "கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன்"*

புதிய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவருக்குக் "கிருபையின் ஆவி" என்று இவ்வொரு இடத்தில் மட்டுமே சொல்லப்பட்டுள்ளது. "நித்திய ஆவி" என்று சொல்லப்பட்டிருப்பதும் இந்த நிருபத்தில் மட்டுமேயாகும் (9:14). தூய ஆவியானவர் மூலமாகத் தேவனுடைய கிருபை வெளிப்படுத்தப்படுகின்றது. இந்நூலாசிரியர், தூய ஆவியானவரின் ஆள்தன்மையை வெளிப்படுத்த அதிகக் கவனம் செலுத்தியுள்ளதைக் கவனிக்கவும்.

மனுமக்களுடைய மீட்பின் செயலில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய திரியேக தேவன் செயலாற்றியுள்ளார். பரிசுத்த ஆவியானவருடைய செயலைப் புறக்கணிப்பது என்பது, மகிமையுள்ள திரியேக தேவனைப் புறக்கணிப்பதற்கு ஒப்பாகும் (யோவான் 5:23). தேவ குமாரனைக் காலின்கீழ் மிதித்து, உடன் படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணுகிறவன் கிருபையின் ஆவியையும் நிந்திக்கிறான் (2 பேது. 2:10).

ஒருவனுடைய மனக்கண்களுக்கு முன் சுவிசேஷ நற்செய்தியைக் கொண்டு வந்து நிறுத்தி, அதனை அவனுக்குப்பிரகாசிக்கச்செய்து, பாவத்தைக் குறித்து கண்டித்துணர்த்தி (யோவான் 16: 8), இரட்சகர் இயேசுவைச் சுட்டிக்காட்டுகிறவர் இப்பரிசுத்த ஆவியானவரே. ஆகையால் சுவிசேஷத்தைப் புறக்கணிக்கிறவன் கிருபையின் செய்தியை அருளும் பரிசுத்த ஆவியானவரை நிந்திக்கிறான்.

பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த புகழ் மிக்க சமய நெறியாளரும், வேத அறிஞரும், கிறிஸ்தவ இலக்கியப் பணியாளருமான, ஜாண் ஓவன் (John Owen), என்பார் இவ்வாறு கூறியுள்ளார்: "பாவ நிவாரணத்திற்கென மேலும் ஒரு பலியைச் செலுத்த, இறைவனுக்கு மற்றொரு மகன் இல்லை. ஆகவே இறை திருமகனார் இயேசுவின் மேலான சிலுவைப் பலியை நிராகரிப்பவனுக்கு, இனி ஒரு விடிவு காலம் என்றும் இல்லை; வேறு ஒரு வழியுமில்லை. அதைப் போன்றே கிருபையின் ஆவியை நிந்தித்து நிராகரிப்பவனின் உள்ளத்தில் இந்தப் பலி மரணத்தை அனுபவப்படுத்துவதற்கு மற்றொரு பரிசுத்த ஆவியும் இல்லை".[72]

*"கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பார்" (10:30)* – விசுவாசத்தை மறுதலிப்போர் பெறும் தண்டனை மிகப் பயங்கரமாயிருக்கும். அந்நிய தேவர் களை நாடுவோர், கொலை செய்யப்பட வேண்டுமென்பதே பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தின் விதிமுறை ஆகும் (உபா. 17:3, 7). அதற்கு ஒப்பான தண்டனையை இங்கும் நாம் காண்கிறோம் (உபா. 32:35, 36; ஆமோ. 3:2; ரோமர் 12:19).

*"ஜீவனுள்ள தேவனின் கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே" (10:31). "ஜீவனுள்ள தேவன்"* – இச்சொல் நான்குமுறை இந்நிருபத்தில் பயன் படுத்தப் பட்டுள்ளது (3:12; 9:14; 10:31; 12:22). கர்த்தர் செயலாற்றுபவரும், நியாயம் தீர்ப்பவரும் ஆவார். அவர் இடும் தண்டனை மிகப் பயங்கரமாயிருக்கும் (2 சாமு. 24:15,16; 1 நாளா. 21:13). இயேசு கிறிஸ்துவை மறுதலிப்பதும், கிருபை யின் ஆவியை நிந்திப்பதும் கொடூரமான தண்டனைக்குரிய செயலாகும் என்பதை நூலாசிரியர் இங்கு வலியுறுத்துகிறார்.

*"பயங்கரமாயிருக்குமே"* – இப்பதத்திற்குரிய கிரேக்க வார்த்தை 10:27லும், 12:21லும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது தேவனுடைய நியாயத்தீர்ப்பின் கொடுமையையும், சீனாய் மலையில் மோசே கண்ட காட்சியின் பயங்கரத்தை யும் குறித்துக் காட்டுகிறது.

நம்முடைய தேவன் ஜீவிக்கிற தேவன். பிற மக்களின் கற்பனைக் கடவுள் களைப் போன்று ஜீவனற்ற நிலையில் அவர் செயலற்றும் ஒருவர் அல்லர். அவருக்கு நியாயம் தீர்க்க ஜீவனும், சக்தியும், சத்துவமும் உண்டு. அப்படிப் பட்டவருடைய கரங்களில் விழுவது எத்தனை எத்தனை பயங்கரம்!

இப்பகுதியில் கூறப்பட்டிருக்கும் பாவம், ஒரு நீதிக்கேடு, சன்மார்க்கக் கேடு ஆகிய ஒழுக்கக்கேடுகள் அல்ல. மனிதர்களை மேற்கொள்ளுகின்ற – வழுவி விழுந்து விடும் ஒரு குற்றம் அன்று. ஒருவரைச் சபையில் இருந்து புறக்கணித்துத் தள்ளி வைக்கத்தக்க ஒரு பாவமும் அன்று. இது விசுவாசக் கேடாகிய கொடிய பாவம். இது வெளிப்படுத்தப்பட்டுள்ள இறை திட்டத்தை, இறை சத்தியத்தைப் புறக்கணித்துத் தள்ளிவைக்கும் மகா கொடிய பாவம். சத்தியங்களைச் சார்ந்த விவரங்களை முழுமையாக அறிந்திருந்தும், விருப்போடு, வேண்டுமென்றே அதை விலக்கிவிடுதலாகிய மகா பெரிய பாவம்.

இந்த எச்சரிப்பும் 6-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள எச்சரிப்பைப் போன்றதே. கிறிஸ்துவைப் பற்றிய சத்தியத்தைத் தள்ளி, யூதேய முறைமை களை ஏற்பதென்பது செய்யக் கூடாத ஒரு பெருங்குற்றமாகும். தேவன் பழைய ஏற்பாட்டுப் பலிகளைத் தள்ளிவிட்டு மேன்மையான, ஒப்பிட இயலாத கிறிஸ்து

வின் சிலுவைப் பலியைப் புகுத்தியுள்ளார். இவையனைத்தையும் அறிந்திருந்தும் விருப்புடன், தெரிந்த நிலையில் இறை வெளிப்பாட்டை – சத்தியத்தை வேண்டாம் எனத் தள்ளிவிடுவது மகா கொடிய பாவம். அப்படிப் பட்டவன் அதமாவான் – அழிந்துபோவான், என்றுங் கெட்டழிவான். அவனுக்கு விடிவு காலமேயில்லை.

*(நான்காவது எச்சரிக்கை இத்துடன் முற்றுப்பெறுகிறது)*

## III உறுதியாக நிலைத்திருப்பதற்குரிய அறைகூவல் (10:32-39)

### 1. விசுவாசிகள் கடந்த கால வாழ்க்கையை நினைத்துக் கொள்ளுதல். (10:32-34)

*"முந்தின நாட்களை நினைத்துக் கொள்ளுங்கள், நீங்கள் பிரகாசமாக்கப் பட்டிருந்த அந்த நாட்களில் உபத்திரவங்களாகிய மிகுந்த பேராட்டத்தைச் சகித்தீர்களே. நிந்தைகளாலும் உபத்திரவங்களாலும், நீங்கள் வேடிக்கையாக்கப் பட்டதுமல்லாமல், அப்படி நடத்தப் பட்டவர்களுக்கு பங்காளிகளுமானீர்கள். நான் கட்டப்பட்டிருக்கையில் நீங்கள் என்னைக் குறித்துப் பரிதபித்ததுமன்றி, பரலோகத்தில் அதிக மேன்மையும் நிலையுள்ளதுமான சுதந்திரம் உங்களுக்கு உண்டென்று அறிந்து, உங்கள் ஆஸ்திகளையும் சந்தோஷமாய்க் கொள்ளை யிடக் கொடுத்தீர்கள்" (10:32-34).*

*"முந்தின நாட்களை நினைத்துக் கொள்ளுங்கள்" (10:32)* – பின்வாங்கிப் போக மனதாயிருப்பவர்களை நூலாசிரியர் எச்சரிக்கிறார். இயேசு கிறிஸ்து வினிமித்தம், எபிரெய விசுவாசிகள் அளப்பதற்கரிய துன்பத்திற்கு ஆளாயினர். வேதனைகளையும், சோதனைகளையுந் தாங்கினர். அவர்கள் எல்லையில்லாத் துன்பத்திற்கு இலக்காயினர். "அவருடைய பாடுகளுக்குப் பங்காளியாயினர்" (1 பேதுரு 4:13). ஆனாலும் அக்காலத்தில் அவர்கள் உறுதி குன்றாமல் நின்றனர். அந்த முந்தின நாட்களை நினைத்துக் கொள்ளுங்கள் என்று நூலாசிரியர் அவர் களைத் தூண்டி உற்சாகப்படுத்தி விடுகிறார்.

*"நீங்கள் பிரகாசமாக்கப்பட்டிருந்த அந்த நாட்கள்"* – ஒருவன் பிரகாச மாக்கப்படுவது தூய ஆவியானவராலாகும் (6:4; 1 கொரி. 12:7). அவன் ஆவியானவரால், பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக்

குறித்தும் கண்டித்து உணர்த்தப்படுகிறான். அப்பொழுது இயேசு கிறிஸ்து என்கிற மெய்யான ஒளியால் பிரகாசிக்கப்படுவான் (யோவா. 8:12; 2 கொரி. 4:3-6; 2 பேது. 1:9).

*வேடிக்கையாக்கப்படுதல் (10:33)* – வான தூதருக்கும், உலக மனிதருக்கும், உலகம் அனைத்திற்கும் தேவ மக்களாகிய விசுவாசிகள் வேடிக்கைப் பொருளாக்கப்படுகிறார்கள். இது உலக சரித்திரத்தில் *என்றும்* நடைபெறுவதாக உள்ளது (1 கொரி. 4:9).

*"பங்காளிகளுமானீர்கள்"* – இவ்வாறு துன்புற்றோருக்குப் பக்கதுணையாயிருந்தீர்கள். "கட்டப்பட்டவர்களாயிருக்கிறவர்களுக்குப் பரிவும் இரக்கமும் காட்டினீர்கள்" (10:34). சிலர் சிறையிடப்பட்டனர், வேறு சிலர் அவர்களைக் காணச் சென்றனர் (மத். 25:36). அவர்களிடம் பரிவிரக்கங்காட்டியும், அவர்களுக்காக இடையறாது மன்றாடியும், உதவிகள் செய்தும், சிறைவாச அனுபவத்தைப் பெற்றும் அவர்களுடைய துன்பத்தில் பங்காளிகளாயினர்.

*"ஆஸ்திகளை சந்தோஷமாய்க் கொள்ளையிடக் கொடுத்தீர்கள்" (10:34).* பரலோகத்தில் அதிக மேன்மையும் நிலைத்துள்ளதுமான பலவித உடமைகள் உண்டு. அவை பூச்சியும், துருவும் கெடுக்காததும், திருடரும் கன்னமிட்டுத் திருடாததுமான விண்ணுலகச் செல்வங்கள்! அவற்றையறிந்து மகிழ்வுற்றனர் (மத். 6:19, 20). அக்காலத்தில் தேசத்தை ஆட்சி செய்கிறவர்களே விசுவாசிகளின் ஆஸ்திகளைப் பறிமுதல் செய்தனர். அப்படிப் பறிமுதல் செய்யப்படும்போது அவர்கள் அவ்விழப்பை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு சகித்தனர்.

## 2) விசுவாசிகள் நிகழ்கால வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டியவைகள் (10:35,36)

*"ஆகையால், மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டு விடாதிருங்கள். நீங்கள் தேவ சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது" (10: 35, 36).*

*தைரியத்தை விட்டு விடாதிருங்கள்* – தைரியம் என்பது விசுவாசிகளுக்கு வேண்டிய ஒரு மேன்மையான குணமாகும். பேதுருவும் யோவானும் பேசுகிற தைரியத்தைக் கண்டு. . . ஆச்சரியப்பட்டனர் (அப். 4:13). கிறிஸ்துவுக்குள்ளாக ஒருவர் காட்டும் தைரியம் பிறருக்கும் தைரியத்தை ஊட்டுகிறது! பயப்படுகிறவர்கள் பிறரையும் கோழைகளாக்கி விடுவர் (உபா. 20:8).

இந்நிருப வாசகர்களாகிய இவர்கள் நிகழ் காலத்திலும் தைரியம் காட்ட வேண்டும். அவ்விசுவாசிகள் அநேகப் பாடுகளைத் தாங்கிய முன் நாட்களிலும் தைரியத்தைக் கடைப்பிடித்தனர். இப்பொழுதும் தைரியமும் பொறுமையும் அவர்களிடம் தொடர வேண்டுமென்பதே ஆசிரியரின் அறிவுரை. "இவற்றிற்குப் பெரிய கைம்மாறு உண்டு. எனவே வாக்களித்ததைப் பெற்றுக்கொள்ள மன உறுதியும் பொறுமையும் அவசியம்."

*பொறுமை* – "உபத்திரவம், பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறது என்று அறிந்து உபத்திவங்களி லேயும் மேன்மை பாராட்டுகிறோம்" (ரோமர் 5:3, 4; 2 தெச. 3:5; 2 தீமோ. 2:12; வெளி. 1:9; 3:10).

அவர்கள் முற்காலத்தில் கிறிஸ்துவினிமித்தம், சொல்லொண்ணாத துன்புறுத்தல்களையும், போராட்டங்களையும், வேடிக்கையாக்கப்படுதலையும் தாங்கிச் சகித்தனர். எனினும் சிறையிடப்பட்டவர்களுக்குப் பரிவிரக்கங் காட்டி னர்! துன்புற்றோருக்குப் பக்க துணையாக நின்றனர்! உடைமைகளைப் பறி கொடுத்தனர்! இவற்றையெல்லாம், தைரியத்தோடும், நீடிய பொறுமையோடும் ஏற்றுக் கொண்டு சகித்தனர். நாமும் அவ்வாறே முன்னேறிப் போவோமாக!

### 3. விசுவாசிகள் ஒளிமயமான எதிர்காலத்தை எதிர்நோக்குதல் (10:37-39)

*"வருகிறவர் இன்னுங் கொஞ்சக் காலத்தில் வருவார் தாமதம் பண்ணார். விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின்வாங்கிப் போவானானால் அவன் மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார். நாமோ கெட்டுப்போகப் பின் வாங்குகிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக் கிறோம்" (10:37-39).*

**"வருகிறவர் இன்னுங்கொஞ்சக் காலத்தில் வருவார்" (10:37)**

கர்த்தர் புறப்பட்டு வருவார் (ஏசா. 26:21). இயேசு கிறிஸ்துவின் இரண்டாவது வருகையைப் பற்றிய நம்பிக்கை தேவனுடைய சித்தத்தைச் செய்யும்படி நம்மை உந்திவிடுகிறது (எபே. 6:6; 1 பேது 2:15, 17; 4:19). அவருடைய இரண்டாம் வருகையைப் பற்றிய மகிமையான நம்பிக்கை விசுவாச வாழ்க்கைக்கும், உபத்திரவத்தில் பொறுமையோடு நிலைத்திருத்தலுக்கும் இன்றியமையாத் தேவையாகும். ஆண்டவருடைய இரண்டாம் வருகையின்போது, நாம் அவருக்கு ஒப்பாக மறுரூபமாகுதல், சாவாமை, நித்தியப் பேரின்பம் ஆகியவை களைப் பெற்றுக்கொள்ளுகிறோம் (பிலி. 3:31; 1 பேது. 1:13; 1 யோவா. 3:2).

***"தாமதம் பண்ணார்"*** – "தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தங்களைக் குறித்துத் தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" (2 பேது. 3:9). அவர் தாமதித்தாலும் அவருக்காகக் காத்திரு. அவர் நிச்சயமாய் வருவார். ஆயினும் அவர் தாமதிப்பதில்லை (ஆப. 2:3).

### *"விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" (10:36)*

விசுவாசம் என்பது மீட்கப்பட்டவர்களின் வாழ்க்கைத் தத்துவமாகும். எனவே விசுவாசிகள் உண்மையுள்ளவர்களாயுமிருக்க வேண்டும் (ஆப. 2:4; ரோமர் 1:17; கலா. 3:11 காண்க).

***"பின் வாங்கிப் போவானானால்"*** – பயத்தினிமித்தமும், நிந்தையினிமித்தமும் பின்மாறிப் போதலும், சத்தியத்தினின்று வழுவிப் போதலும் அழிவுக்குக் காரணமாகும். வாழ்க்கையிலும், போதனையிலும் பின்வாங்கிப் போவோர் சிறை பிடிக்கப்பட்டவர்களைப் போலாவர். அத்தகையோர் கைதிகள் போல இருப்பர்.

***"என் ஆத்துமா பிரியமாயிராது"*** – என் உள்ளம் பிரியமாயிராது, அதாவது அவனில் நான் பூரிப்பு அடையமாட்டேன் என்று இது பொருள்படும். "நாமோ" இது பின்வாங்குவோரினின்றும் விசுவாசத்தில் நிலைத்திருக்கிற விசுவாசிகளைப் பிரித்துக் காட்டுகின்றது. "அவர்கள்" பின்வாங்குவோர் ஆவர். "நாம்" நிலைத்திருப்போர் ஆவோம். விசுவாசிகளின் முடிவு அழிவிற்குரியதல்ல, பாடுகளும், நிந்தைகளும் அவர்களுக்குரிய சிறப்பான ஓர் உரிமையாகும். எனவே துன்பங்களைக் கண்டு துவண்டு போகாமல் நாம் விசுவாசத்தை உறுதியாய்ப் பற்றிக் கொள்ளுவோமாக.

*(நான்காம் பகுதி முற்றிற்று)*

# பகுதி 5

## விசுவாச வாழ்க்கையின் மேன்மை (11:1 – 12:29)

### விசுவாசியின் இயல்பு நிலை (11:1-3)

**புதிய உடன்படிக்கையின்** நாயகர் பழைய உடன்படிக்கையின் நபர்களைவிட மேலானவர் (1:1; 7:28) எனவும், புதிய உடன்படிக்கை பழைய உடன் படிக்கையைவிட அதிகச் சிறப்பானது (8:1; 9:28) எனவும், புதிய உடன் படிக்கைப் பலி, பழைய உடன்படிக்கைப் பலிகளைவிட உன்னதமானது (10:1-39) எனவும், தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டிய பின்பு, அதைத் தொடர்ந்து விசுவாச வாழ்க்கையின் மேன்மையைப் பற்றி நூலாசிரியர் பட்டிய லிட்டுக் காட்டியுள்ளதே இந்த ஐந்தாம் பகுதி ஆகும்.

“விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்படுதல்” என்ற போதனை புதுமையான ஒன்றன்று; பழைய ஏற்பாடும் அதனையே எடுத்தியம்புகிறது (ஆப. 2:4). அந்த விசுவாசத்தினால் நீதிமான்கள் ஆக்கப்பட்டோர், அந்த விசுவாசத்திலேயே தங்கள் வாழ்க்கையை உறுதிப்படுத்த வேண்டும். அதை அந்த விசுவாசத் தினாலேயே நடைமுறைப்படுத்தவும் வேண்டும். இவற்றைப் பழைய ஏற்பாடு, திட்டமும் தெளிவுமாக எடுத்துரைக்கின்றது. “விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்” என்னும் இறைவாக்கினை மையமாக வைத்து, பழைய உடன் படிக்கையின் வரலாற்று நபர்கள் பலரை வரிசையாக நம்முன் அலங்காரமாகப் பவனிவரச் செய்து, அவர்களுடைய விசுவாச செயல்களைச்சுட்டிக்காட்டி, நம் நம்பிக்கையைத் தூண்டிவிடுகிறார் நூலாசிரியர்.

உலகத்தின் ஆன்மீக வரலாறு என்பது விசுவாசத்தின் வெற்றி வரலாறு ஆகும்.[73] அந்த வரலாற்று விசுவாச வீரர்களைத் தொகுத்து, அவர்களுடைய

விசுவாசக் கிரியைகளைச் சுட்டிக் காட்டுவதே இப்பகுதி. பரம அழைப்புக்குப் பங்குள்ள பரிசுத்த சகோதரர்கள் (3:1), எவ்வாறு விசுவாசத்தினால் பரம வாழ்க்கையை இவ்வுலகில் நடத்திக் காட்டினார்கள் என்பதை நூலாசிரியர் பாங்குடன் பட்டியலிட்டுக் காட்டி, நம்மைப் பரவசத்திற்குள்ளாக்கி உற்சாகப்படுத்துகிறார்.

பதினோராம் அதிகாரத்தை வெஸ்ட்காட் இவ்வண்ணம் பகுத்துள்ளார்:

1. விசுவாசத்தின் விளக்கமும், விளைவுகளும் (வ. 1, 2).

2. பழைய உலகின் தீர்க்கதரிசனப் பதிவேட்டில் காணும் விசுவாசம் (வ. 3-7).

3. முற்பிதாக்களிடத்தில் காணப்பட்ட விசுவாசம் (வ. 8-22).

அ) விசுவாசத்தின் அடிப்படையில் கீழ்ப்படிதலும், பொறுமையும்.

ஆ) விசுவாசத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்ட பலிகள்.

4. விசுவாச வாழ்க்கையில் எழுந்த போராட்டமும் வெற்றியும் (வ. 23-31).

5. இஸ்ரவேலரின் தேச வாழ்க்கையில் செயல்பட்ட விசுவாசம் (வ. 32-38).

6. முடிவுரை (வ. 39, 40).

## I. விசுவாசத்தின் இயல்பு நிலை (11:1-3)

*"விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. அதினாலே முன்னோர்கள் நற்சாட்சி பெற்றார்கள். விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக் கப்பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள், தோன்றப் படுகிறவை களால் உண்டாக வில்லையென்றும் அறிந்திருக்கிறோம்." (11:1-3)*

பதினோராம் அதிகாரத்தில் விசுவாசம்; என்னும் சொல் ஏறக்குறைய 25 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

### 1. விசுவாசத்திற்கு ஒரு விளக்கம் (11:1)

தேவ நம்பிக்கைக்கு ஆதாரம் விசுவாசம். விசுவாசத்திற்கு ஆதாரம் தேவனுடைய வாக்குகளும் வாக்குறுதிகளும் ஆகும். விசுவாசத்தில் உறுதி யாய்ப் பற்றிக்கொண்டால் மட்டுமே, தேவ நம்பிக்கைக்கு நிலையான இடம் உண்டு. விசுவாசம் என்பது இருளுள்ள வெற்று வெளியில், கண்களை மூடிக் கொண்டு குதிப்பதற்கு ஒப்பாகாது.

விசுவாசம் என்பது, காணப்படாத – கண்களால் காணவும், காதுகளால் கேட்கவும், கைகளால் தொடவும் இயலாத – காரியங்களை உண்மையெனக் கண்டு, கேட்டு, உணர்தல் ஆகும். எதிர் காலம் காணாத ஒன்றாகும். ஆயினும் அதை நாம் விசுவாசத்தால் காண்கின்றோம். "கண்ணுக்குப் புலப்படாத காரியங்களை உற்றுப் பார்த்து அறியும் கண்களே விசுவாசம்" (11:27).

(1) விசுவாசம் வருங்காலத்தை உண்மையாக்குகிறது. (2) விசுவாசத்தினாலே ஒரு விசுவாசி தேவனுக்கு முன்பாக ஏற்றுக்கொள்ளப்படுகிறான். (3) அறிவுக் கெட்டாதவைகளை விசுவாசத்தினாலே நாம் அறிந்து கொள்ளுகிறோம்.[74] தேவன் திருவுளம் பற்றியுள்ள திருவெளிப்பாட்டில், இறை வார்த்தையில் இவை யாவும் அடங்கியுள்ளன.

விசுவாசத்தினாலே தேவன் உலகங்களைப் படைத்தார் என்றும், அவரே சரித்திரத்தின் கர்த்தாவென்றும், அவரே தீர்க்கதரிசன நிறைவுக்கு உற்பத்திக் கர்த்தாவென்றும் நாம் அறிந்து கொள்ளுகிறோம்.

## 2. விசுவாசத்தின் சான்று (11:2)

பழைய ஏற்பாட்டு விசுவாசிகளாகிய நம் முன்னோர்கள் இதற்கு ஏற்ற சாட்சிகளாக உள்ளனர். அவர்கள் விசுவாசத்தால் தேவனுக்கு முன்பாக ஏற்றுக் கொள்ளப்பட்டனர். அதனால் அவர்கள் தேவனிடமிருந்து நற்சாட்சியையும் பெற்றனர்.

## 3. விசுவாசத்தின் ஆதாரம் (11:3)

காண்பவையல்ல, காணப்படாதவையே விசுவாசத்திற்கு ஆதாரமாயுள்ளன. "உலகங்களெல்லாம் கடவுளின் திருச் சொல்லால் உண்டாயின என்றும், ஆகவே காணாதவற்றினின்று காண்பவை உண்டாயிற்று" என்றும் விசுவாசத்தால் உணர்கிறோம் (R. C. மொழியாக்கம்). அளப்பதற்கரிய இந்த அண்ட சராசரங்களையெல்லாம் தேவன் தமது வார்த்தையினால்தானே உருவாக்கினார்.

படைப்புக்கு முன்னிருந்த ஏதோ சில வேதிப் பொருள்களைக் கொண்டு இவ்வுலகம் உருவமெடுக்கவில்லை என்பதை நாம் அறிய வேண்டும். இச்சிறிய வசனம் திடப்பொருள்வாதம் (Meterialism), படிப்படியான வளர்ச்சி பரிணாமக் கோட்பாடு (Evolution), அனைத்திறைக் கோட்பாடு (Pantheism) ஆகியவற்றை யெல்லாம் பலமாகவும் வலுவாகவும் கண்டனஞ்செய்கிறது.

அத்தகைய பற்பல மனிதக் கோட்பாடுகள் அனைத்துமே, திருமறை நூலுக்கு முரணானவையாம். கண்ணுக்குப் புலப்படுவதும் புலப்படாததுமான அனைத்து மூலப் பொருட்களையும் கர்த்தர் தாமே படைத்திருப்பதுமன்றி, அவற்றைக்

கொண்டு இந்த எழில்மிக்க பரந்த உலகை வடிவமைக்கவுஞ் செய்தார் (ஆதி. 1:1; ரோமர் 1:20). 'விசுவாசம்' என்பது பகுத்தறிவுக் கோட்பாட்டிற்கு முரணாகாது. கண்ணுக்குப் புலப்படாத மூலப் பொருட்களினாலே இவ்வுலகம் படைக்கப் பட்டுள்ளது. எண்ணுதற்கரிய அம்மூலப் பொருட்களின் சேர்க்கையினால் அவை கண்ணுக்குப் புலப்படுகின்றன என்று நாம் விசுவாசிக்கிறோம்.

இங்கே, தேவனுடைய திருவெளிப்பாட்டை நாம் காண்கின்றோம். "படைப் பின் செயல் எவ்விதம் நடைபெற்றுள்ளது" என்பதைப் படைத்தோன் ஒருவரேயன்றி பிறிதொருவரால் எடுத்து விவரிக்க இயலுமா? படைப்பின் செயலுக்குச் சாட்சிகளாக நின்றவர்கள் எவருமில்லையே! எனவே தேவன் தாமே அதை வெளிப்படுத்தியிராவிட்டால், இதனை நாமறிந்துகொள்ள வழி யேதுமில்லை. ஆகையினால், தேவனுடைய திருவெளிப்படுத்தல்களை விசுவாசியாமற் போனால், படைப்பு எவ்வாறு நிகழ்ந்ததென்பதை எவராலும் ஒருபோதும் அறிந்துகொள்ள இயலாது (B. F. W.) .

கண்ணுக்குப் புலப்படாத மூலப்பொருட்களும், கண்ணுக்குப் புலப்படும் உலகமும் அதன் நிறைவும் இறைவனின் திருச்சொல்லால் உண்டாயின என்ற உண்மையைத் திருமறை நூல் ஒன்றினின்றே நாம் அறிகின்றோம்.[75]

## II. விசுவாச வாழ்க்கைக்குத் திரளான சாட்சிகள் (11:4-40)

இறைவனால் வரையறுக்கப்பட்ட விசுவாசத்தின் மேன்மையும், விசுவாசத் தின் செயலாக்கமும், விசுவாசத்தின் சாட்சியமும் இங்கே விரித்துரைக்கப் பட்டுள்ளன. அதற்கென யூதர்களும், புறவினத்தாருமாகிய ஒரு சிலரின் கவர்ச்சியான அணி வகுப்பை நூலாசிரியர் நம் கண்கள் முன்பாகப் படம்பிடித்து நிறுத்திக் காட்டுகிறார்.

இவ்வணிவகுப்பில் ஆபேல் முதல் இராகாப் வரை அடங்குவர். அதைத் தொடர்ந்து விசுவாசத் தகுதிக்கு ஏற்ற ஆறு நபர்களின் பெயர்கள் மட்டும் குறித்துக் காட்டப்பட்டுள்ளன. இவ்வணிவகுப்பில் பங்கு பெறும் பதினாறு நபர்களில் இரண்டு பெண்களும் இடம் பெற்றுள்ளனர். அதைத் தொடர்ந்து பெயர் குறிக்கப்படாத எண்ணற்றோர் விசுவாசப்பயிற்சியில் நிலை நின்று, அதினிமித்தம் சொல்லொண்ணாத் துன்பங்களை அனுபவித்தவராவர். அவர்களில் சிலர் தங்கள் விசுவாசத்திற்காக மரித்துச் சாட்சி கொடுத்துள்ளனர்.

இந்த அழகிய கவர்ச்சியான அணிவகுப்பில் முன்னதாக நடந்து வரும் முதல் மூவர் – ஆபேல், ஏனோக்கு, நோவா ஆகியோர் – ஜலப்பிரளத்திற்கு முன்பு வாழ்ந்தவர் ஆவர். தேவ கோபத்தினால் உலகம் நீரினால் அழிக்கப்

படுவதற்குக் காரணமாயிருந்த நிறைவான அட்டூழியமும், அநியாயமும் நிறைந்திருந்த உலகில் அவர்கள் விசுவாசத்தினால் தங்களைக் கறை படுத்திக் கொள்ளாது, நீதிமான்களென்று இவர்கள் நிரூபித்துக் காட்டியவராவர்.

## 1. ஆபேல் முதல் நோவா வரை (11:4-7)

*"விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியைத் தேவனுக்குச் செலுத்தினான், அதினாலே அவன் நீதிமானென்று சாட்சி பெற்றான். அவனுடைய காணிக்கைகளைக் குறித்துத் தேவனே சாட்சி கொடுத்தார். அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்"* (11:4).

ஆபேல் என்ற எபிரெய வார்த்தைக்குச் 'சுவாசம்', அல்லது 'காற்று' என்று பொருள். அவன் விசுவாசத்தினாலே தேவனுக்கு ஏற்புடைய தொழுகையைச் செலுத்தினான்.

### *i) "ஆபேல். . . மேன்மையான பலியைச் செலுத்தினான்"*

ஆபேலின் பலி ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கும், காயீனின் பலி ஏற்றுக் கொள்ளப்படாததற்கும் உள்ள காரணங்களை F. F. ப்ரூஸ் இவ்வாறு விளக்கு கின்றார். "இது பற்றி வேத விரிவுரையாளர்களுக்கிடையே ஒருமித்த கருத்து இல்லைதான். இங்கே பலி செலுத்தப்பட்ட பொருளின் சிறப்பன்று, அப்பலியில் வெளிப்பட்ட *விசுவாசமே* சிறப்பானது (ஆதி. 4:13,14). ஆதாமுக்குத் தேவன் தோலுடை அணிவித்ததின் வாயிலாக, பலிகள் பற்றிய தெய்வீகத் திட்டங்கள் ஏற்கெனவே வெளிப்பட்டிருந்தன. ஆபேல் இத்திருவெளிப்பாட்டை விசுவாசித்த நிலையில் தன் மந்தையின் தலையீற்றுகளிலும், கொழுமையான வைகளிலும் சிலவற்றைக் கொண்டு வந்தான் (அதாவது பலியிட்டு இரத்தம் சிந்தினான்). ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கீகரித்தார்."

*"நீதிமானென்று சாட்சியும் பெற்றான்"* – விசுவாசத்தினாலே தேவனுக்கு உகந்த பலியைச் செலுத்திய ஆபேல் நீதிமானென்ற சாட்சியும் பெற்றான். அதாவது அவன் செலுத்திய பலியாகிய காணிக்கையைக் கர்த்தர் அங்கீ கரித்ததின் அடிப்படையில் அவன் நற்சாட்சி பெற்றான். ஆபேலின் செயல் கள் நீதியுள்ளவைகளாயிருந்தன (1 யோவா. 3:12). கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாமே ஆபேலை நீதிமான் என்று சாட்சியும் கொடுத்துள்ளார் (மத். 23:35).

*"தேவன் தாமே சாட்சி கொடுத்துள்ளார்"* – ஆபேலின் பலியைக் கர்த்தர் ஏற்றுக்கொண்டதைக் கண்ட காயின், தனது பலி ஏற்றுக் கொள்ளப்படாததால் எரிச்சல் அடைந்து, தம்பி ஆபேலைக் கொலை செய்தான். இப்படிக் காயீன், மனித வரலாற்றில் முதலாவது கொலைகாரன் ஆனான்.

ஆபேலின் மரணம் உலகம் கண்ட முதல் மரணம். அதுவொரு கொலை யினிமித்தம் உண்டாயிற்று. இது தேவனுக்குக் காணிக்கைகள் செலுத்துவதின் அடிப்படையில் ஏற்பட்ட மரணம். அதாவது தேவ ஆராதனையின் பெயரில் இக்கொலை நடைபெற்றது. தேவனே இதற்குச் சாட்சியும் கொடுத்துள்ளார். இது பாவத்தின் விளைவால் நடைபெற்றது. இது பதிவு செய்யப்பட்ட பாவச் செயல் ஆகும். இது தேவனுக்கும், ஆபேலின் பெற்றோருக்கும் எவ்வளவு பெரிய வேதனையை உருவாக்கியிருக்கும்.

*"அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்"* – ஆபேல் மனித வரலாற்றில் முதல் இரத்த சாட்சியானான். அவன் இன்றும் வேத வாக்கியங்களின் வாயிலாக நம்முடன் பேசிக் கொண்டே இருக்கிறான் (ஆதி. 4:10; எபி. 12:24). அவன் விசுவாச வாழ்க்கைக்குச் சாட்சியாக நின்ற முதல் மனிதன்; அவனே தன் விசுவாசத்திற்காக இரத்த சாட்சியானவனுமானான்.

### *ii) "விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டான்"*

*"தேவன் அவனை எடுத்துக் கொண்டபடியினாலே, அவன் காணப்படாமற் போனான். அவன் தேவனுக்குப் பிரியமானவனென்று, அவன் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்னமே சாட்சி பெற்றான். விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால் தேவனிடம் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்" (11:5,6).*

ஏனோக்கு (பிரதிஷ்டை) - இவன் ஆபேலுக்கு சுமார் ஐந்நூறு ஆண்டு களுக்குப் பின்னர் விசுவாச வாழ்க்கை வாழ்ந்தவன்.

*"கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான்"* **(யூதா. 14, 15)** – ஆதாமுக்கு ஏழாந் தலைமுறையான ஏனோக்கு வருங்காரியங்களைக் குறித்து முன்னறி வித்தான். ஏனோக்கு வருங்காரியங்களை முன் உரைப்போனாக (தீர்க்கதரிசி யாக) இருந்தான். இது சுமார் கி.மு. 100-ம் ஆண்டுகளுக்கு முன் வேதாகமத்தைச் சாராத வேறொரு யூத மரபு நூலாகிய ஏனோக்கின் நூலினின்று (1:9) எடுத்த ஒரு மேற்கோளாகும்.

***அவன் தேவனுடன் சேர்ந்து நடந்தான் (ஆதி. 5:22)*** – எவ்விதப் பின்மாறுதலுமின்றி ஏனோக்கு முந்நூறு ஆண்டுகள் கர்த்தருக்கு உகந்த விதமாய் அவருடன் இணைந்து நடந்து, புதல்வர் புதல்வியரைப் பெற்றான். கர்த்த ரோடுள்ள அவனது நடக்கை, ஏனோக்கின் விசுவாசத்தை வெளிப்படுத்திற்று. அவனுடைய இவ்வுலக வாழ்க்கை, இந்த நடக்கைக்கு எவ்விதப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. தனக்கிருந்த இறையச்சம், இறை நட்பு, இறைவனைப் பற்றிக் கொள்ளுதல், இறைவனுக்குக் கீழ்ப்படிதல் என்பவற்றைத் தன் அன்றாட நடக்கையின் வாயிலாக ஏனோக்கு தெளிவாக வெளிப் படுத்திக்காட்டினான்.

*மரணத்தைக் காணாமற் எடுத்துக் கொள்ளப்பட்டான் (11:5; ஆதி. 5:24)* – விசுவாசத்தால் வாழ்ந்த அவன் மரணம் என்றால் என்ன என்று அறியாது தேவனால் எடுத்துக் கொள்ளப்பட்டான். அவனுடைய எடுத்துக் கொள்ளப்படுதல் திருச்சபை எடுத்துக் கொள்ளப்படுதலுக்கு ஒரு நிழலாக அமைந்துள்ளது என்பதைக் காண்க.

*“எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்னமே சாட்சி பெற்றான்”* – கர்த்தருக்குப் பிரியமாயிருத்தலே ஒரு விசுவாசியின் குறிக்கோளாக இருக்க வேண்டும். அது அவனுடைய மரணத்திற்குப் பின்னர் உற்றார் உறவினரால் பிரகடனம் செய்யப்படுவதொன்றன்று. இம்மை வாழ்க்கையில்தானே நற்சாட்சியை ஒவ்வொரு விசுவாசியும் பெற்றிருக்க வேண்டும்.

*“விசுவாசமில்லாமல் தேவனிடத்தில் பிரியமாயிருப்பது கூடாத காரியம்” (11:6)* – கர்த்தரை அணுகிச் செல்கிறவன், ஜீவனுள்ள தேவன் உண்டென்று விசுவாசிக்க வேண்டும். அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்கு, கைம்மாறு அளிக்கிறார் என்று விசுவாசிக்க வேண்டும். ஒரு விசுவாசிக்கு அவரே மகா பெரிய வெகுமதியாக இருக்கிறார் (ஆதி. 15:1).

### *iii) விசுவாசத்தினாலே நோவா*

> *“தற்காலத்திலே காணாதவைகளைக் குறித்துத்தேவ எச்சரிப்புப்பெற்று, பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டு பண்ணினான். அதினாலே அவன் உலகம் ஆக்கினைக்குள்ளானதென்று தீர்த்து, விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்குச் சுதந்திரவாளியானான்” (11:7).*

*“விசுவாசத்தினாலே. . . காணாதவைகளைக் குறித்து”* – நோவா காலத்து ஜலப்பிரளயத்திற்கு முந்தின காலத்தில் மழை பெய்யவே இல்லை. அக்காலத்தில், பூமியினின்று தோன்றிய பனிபோன்ற நீர் பொலிவு, பூமியையெல்லாம் நனைத்து வந்தது (ஆதி. 2:6). எனவே நோவா அதுவரை மழையைப் பார்த்ததே இல்லை. அவ்விதம், கண்டிராத மழையைப் பொழியச்செய்வேன் என்று கர்த்தர் சொல்லியதை சொல்லியவாறே நோவா விசுவாசித்தான் (11:7; ஆதி. 7:4).

*“தேவ எச்சரிப்புப் பெற்றான்”* – கர்த்தர் நோவாவிடம் பேசினார். தம்மிடம் பேசியது கர்த்தர் என்று அவன் விசுவாசித்தான். அந்த எச்சரிப்பில் அடங்கியுள்ள ஒரு சிற்றெழுத்துக்கோ, அதில் காணும் ஒரு புள்ளிக்கோ மாற்றம் ஏதுமின்றி, அது அவ்வண்ணமே நடைபெறும் என்று நம்பி நோவா விசுவாசித்தான்.

ஆபிரகாமின் மரபுவழித் தோன்றியவரே எபிரெயர் ஆவர். அவர்கள் மேன்மையான ஒரு குலம். ஆபிரகாமுக்கு முன்பு உலக மக்களிடையே சிறப்பு வாய்ந்த எபிரெயக் குல மக்கள் இல்லாமலிருக்க, எபிரெயனாயிராத நோவா

விற்குத் தேவ எச்சரிப்புக் கிடைக்கப்பெற்றது. இது எத்தனைச் சிறப்பு. நோவா, தாம் பெற்ற எச்சரிப்பை மற்ற மக்களுக்கும் அறிவித்துத் தன் பொறுப்பை உண்மையுடன் நிறைவேற்றினான்.

*"பயபக்தி"* – நோவாவின் காலத்தில் பெரும்பான்மையான மக்களும் தேவனை நிந்தித்துத் தீய வாழ்க்கை நடத்தி வந்த சூழ்நிலையில்,நோவாவின் இதயம் பயபக்தியினால் நிறைந்திருந்தது.

*"பேழையை உண்டு பண்ணினான்"* – நோவாவின் செவிகள் கர்த்தருடைய எச்சரிப்பின் சத்தத்தைக் கேட்டன; இருதயம் கர்த்தரை விசுவாசித்தது; கரங்கள் பேழையை உண்டு பண்ணச் செயல்பட்டன. நோவாவின் உதடுகளோ நீதியைப் பிரசங்கித்தன. அவ்வண்ணம் நோவாவின் இதயமும், காதுகளும், உதடுகளும், கரங்களுமெல்லாம் தேவன்மேல் உள்ள விசுவாசத்தையும் பயபக்தியையும் பறைசாற்றின. நோவா கட்டியது ஒரு பேழை, அதனை ஒரு கப்பல் எனவே கூறலாம். எனினும், கப்பலை நடத்தும் எந்த ஒரு கருவியையோ, ஓட்டுவதற்குப் பயன்படுத்தும் கோல், துடுப்பு, பாய்மரம், நங்கூரம் ஆகியவற்றைப் பற்றியோ, எதையுமே நாம் காண்கிறதில்லை. கர்த்தருடைய வார்த்தைகளைத் தவிர நோவாவை வழிகாட்ட வேறெதுவும் இல்லை. இதுவே விசுவாசத்தின் அருமை யான செயல் வடிவம்.

"ஆபேலின் ஆட்டுக்குட்டி கிறிஸ்துவின் பலி மரணத்திற்கு ஒரு நிழல் எனில், நோவாவின் பேழை தேவனின் கொடிய நியாயத் தீர்ப்பிலிருந்து மீட்கப்பட்ட மக்கள் கூட்டத்திற்கு ஓர் அடையாளமாகும்" – K. G. குரியன்.

*"அவன் உலகம் ஆக்கினைக்குள்ளானதென்று தீர்த்தான்"* – இவ்வாறு உலகைக் கண்டனம் செய்தான். அல்லது அவன் உலகத்தைக் குற்றஞ் சுமத்தினான். இது "உலக மக்களின் பாவத்தைக் குறித்துக் கடிந்துரைத்தான்," என்று பொருள்படும்.

*"விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்குச் சுதந்திரவாளியானான்"* – நோவா நீதிமானும் உத்தமனுமாயிருந்தான் (ஆதி. 6:9). அவன் நீதியைப் பிரசங்கித்தான் (2 பேது 2:5). திருமறையினில் முதற்கண் நோவாவே 'நீதிமான்' என்றழைக் கப்பட்டிருப்பவன். 'கிருபை' என்னும் சொல்லும், திருமறையில் முதன் முதற் பயன்படுத்தியிருப்பது நோவாவோடு சம்பந்தப்பட்டுத்தான் என்பது குறிப் பிடத்தக்கது. இவ்வுலக அதிகாரங்களும், பெரு மக்களும் பல்வேறு விருது களைத் தனிப்பட்டோருக்கு வழங்குகின்றனர். ஆனால் இங்கு உன்னத தேவனே நோவாவுக்கு 'நீதிமான்' என்ற உயரிய விருதை அளிக்கிறார்.

## 2. ஆபிரகாம் முதல் யோசேப்பு வரை (11:8-22)

### *i) ஆபிரகாமும் சாராளும் (8-19)*

*''விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்திரமாகப் பெறப்போகிற தேசத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போனான்'' (11:8).*

'ஆபிரகாம்' (திரள் ஜனத்தின் தகப்பன்) – கல்தேய பட்டணமாகிய ஊர் என்ற இடத்தில் பிறந்தவன் (ஆதி. 11:31). இவன் ஆதாமுக்குப் பின் வழி வந்த இருபதாவது தலைமுறையைச் சேர்ந்தவன். இவனுடைய முன்னோர்கள் சிலை வழிபாடு செய்தவர்கள்.

***"ஆபிரகாம். . . அழைக்கப்பட்டான்"*** – சிலைகளையும், சந்திரனையும் வழிபட்டுவந்த ஒரு குடும்பத்தினின்று ஆபிரகாம் அழைக்கப்பட்டான் (யோசுவா 24:2). அவன் மனமுவந்து அவ்வழைப்பை ஏற்றுக்கொண்டு கீழ்ப்படிந்தான். தேவனுக்கு இணங்கித் தன்னை முற்றுமாக ஒப்புக்கொடுத்தான்.

***"போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போனான்"*** – ஆபிரகாமுக்கு, தான் போகவேண்டிய இடம் இன்னதென்று முன்னமே வெளிப்படுத்தப்படவில்லை. போகுமிடம் எங்கு என்றோ, அந்த இடம் எப்படிப்பட்டது என்றோ அவன் அறியாமலிருந்தும், அதைக்குறித்து அறிந்துகொள்ள விரும்பாமலேயே கர்த்தருடைய வார்த்தைகளுக்குச் செவிசாய்த்து, விசுவாசத்தினாலே புறப்பட்டுச் சென்றான்.

*''விசுவாசத்தினாலே அவன் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலே பரதேசியைப் போலச் சஞ்சரித்து, அந்த வாக்குத்தத்தத்திற்கு உடன் சுதந்தரராகிய ஈசாக்கோடும், யாக்கோபோடும், கூடாரங்களிலே குடியிருந்தான். ஏனெனில், தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான்'' (11:9, 10).*

***"வாக்களிக்கப்பட்ட நாட்டில், பரதேசியைப் போல வாழ்ந்தான்" (அப். 7:5)*** – ஆபிரகாம் தனக்கு வாக்களிக்கப்பட்ட நாட்டைக் கைப்பற்றிக்கொள்ள எவ்வித முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. இது அருமையான நல்லதொரு மாதிரி. விசுவாசிகள் இவ்வுலகினில் அந்நியரும் பரதேசிகளுமாயிருக்கின்றனர் (1 பேது. 2:11). "நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது" (பிலி. 3:20). இச்சத்தியங்களை ஆபிரகாம் தன் வாழ்வில் நிரூபித்துக் காட்டினான்.

***"கூடாரங்களிலே குடியிருந்தான்"*** – அடிக்கல் நாட்டி, அஸ்திபாரம் போட்டு, மேற்தளங்கட்டிய ஓர் உறுதியான கட்டிடத்தில் ஆபிரகாம் குடியிருக்கவில்லை. இத்தகைய உறுதியில்லாத சாதாரண, தற்காலிகமான எளிமையான ஒரு கூடாரத்தில் அவன் குடியிருந்தான்.

இன்றைக்கொரு இடம், நாளையொரு இடம் என்று கூடாரத்தைப் பெயர்த்து, பெயர்த்து நகற்றி நகற்றிப் போட்டு, அவன் தன் வாழ்க்கையை விசுவாசத்தில் நடத்தி நம் அனைவருக்கும் நல் மாதிரியானான்!

*"அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான்"* – கூடாரத்திற்கு அஸ்திபாரமில்லை, கட்டடத்திற்கு அஸ்திபாரமுண்டு. அவன் குடியிருந்தது அஸ்திபாரமில்லாத கூடாரம். எதிர் நோக்கியதோ நல்ல வலிமையான திட அஸ்திபாரங்கள் உள்ள நகரம். தற்காலத்திற்குரிய இந்தக்கூடார வாசம், பிற் காலத்தில் பெறவிருக்கும் நகரத்தைப் பற்றிய அவனுடைய எதிர் நோக்கு தலுக்கு விசுவாசத்தினாலான ஆதாரமாயிருந்தது.

### *ii) சாராளின் விசுவாசம் (11:11)*

*"விசுவாசத்தினாலே சாராளும் வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவ ரென்றெண்ணி, கர்ப்பந்தரிக்கப் பெலனடைந்து, வயது சென்றவளாயிருந்தும் பிள்ளைபெற்றாள்" (11:11).*

சாராள் என்பதற்கு 'உலகத்திற்கு இராணி' என்று பொருள். ஆபிரகாமின் விசுவாசம் நிறைவுபெற சாராளின் விசுவாசமும் அவசியமாயிருந்தது (ரோமர் 4:19; ஏசா. 51:1,2; ஆதி. 18:13-15). தனது சரீர வலிமையின்மையை அவள் மறந்து, வாக்களித்த கர்த்தருடைய வார்த்தையின் வல்லமையைச் சாராள் விசுவாசித்தாள்.

*"விசுவாசத்தினால் சாராள் முதிர் வயதில் ஒரு மகனை ஈன்றெடுக்க ஆற்றல் பெற்றாள்"* – சாராள் முதிர்வயதில் ஒரு பிள்ளையை ஈன்றெடுக்கப் பெலனடைந்தாள், ஏனெனில், வாக்களித்தவர் நம்பிக்கைக்குரியவர் எனக் கருதிக் காத்திருந்தாள், கர்த்தர் குறித்திருந்த காலத்தில் ஒரு புதல்வனை விசுவாசத்தால் பெற்றாள் (ஆதி. 21:2).

### *iii) ஒருவனாலே. . . மிகுந்த ஜனங்கள் பிறந்தார்கள்*

*"ஆனபடியால், சரீரம் செத்தவனென்று (உயிரற்றவனென்று) எண்ணத்தகும் ஒருவனாலே வானத்திலுள்ள பெருக்கமான நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரையிலுள்ள எண்ணிறந்த மணலைப் போலவும் மிகுதியான மக்கள் பிறந்தனர்" (11:12).*

*"சரீரஞ்செத்தவனென்று எண்ணத்தகும் ஒருவனால்" (உயிரிழந்தவர் போலிருந்தவர்)* – இக்காலத்தோடு ஒப்பிடும்போது என்றோ காலமாகியிருக்க வேண்டிய முதுமை! நீரற்று இலையுதிர்ந்து, கனிகளற்று, கிளைகளெல்லாம் பட்டுப்போய் வேரோடு பிடுங்கப்பட வேண்டிய ஒரு மரமாகக் காணப்பட்ட ஆபிரகாம் அவன்! நரைதிரையோடு கூடிய தள்ளாடும் வயதான ஆபிரகாமைக் கர்த்தர் ஒரு தகப்பனாக்கினார். ஆம் உலர்ந்த எலும்பு உயிர்பெற்றது. காய்ந்த

கருவாடுகள் நீரில் துள்ளிக் குதித்தன. மலடியாக இருந்த மனோவாவின் மனைவி (நியா 13:2, 24), அன்னாள் (1 சாமு. 1:2, 6, 27), சகரியாவின் மனைவி எலிசபெத்து (லூக்கா 1:7, 36) போன்றோர் கர்த்தருடைய வாக்கின்படி பிள்ளை பெற்றனர். கன்னியாயிருந்த மரியாளும்கூடப் பிள்ளை பெற்றாள். “தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை” (லூக்கா 1:37); “தேவனால் எல்லாம் கூடும்” (மத். 19:26).

*“பெருக்கமான நட்சத்திரங்களைப் போலவும் எண்ணிறந்த மணலைப் போலவும் ஜனங்கள் பிறந்தார்கள்”* – ஆபிரகாமின் நூறாவது வயதில் இறை வாக்கின்படியாக சாராள் அவனுக்குப் பெற்ற மகன், ஈசாக்கு மூலமாகவே ஆபிரகாமின் வாரிசுகளாக எண்ணற்ற மக்கள் திரள் பெருகி வானத்து விண் மீன்களைப் போலவும், கடற்கரை மணலைப் போலவும் பெருகவே பெருகினர்.

இந்நிருபத்தின் பதினோராம் அதிகாரத்தின், 13-முதல் 16-வரையுள்ள வசனங்கள், விசுவாசிகளின் சுயதேசத்தையும் தேவனுடைய நகரத்தையும் பற்றியவை ஆகும். அவற்றைச் சிந்திக்குமுன், 17-முதல் 22-வரையுள்ள வசனங்களில் கூறியுள்ள எபிரெய முன்னோர்களின் விசுவாசத்தைப் பற்றிய மேலுஞ் சில காரியங்களைச் சிந்தித்து உணர்வது நமது படிப்பினைக்கு அதிக உதவியாக இருக்கும்.

## *எபிரெய முன்னோர்களின் விசுவாசத்தைப் பற்றிய மேலும் சில விவரங்கள் (11:17-22)* (13-16 பக் 194)

### *ஆபிரகாம். . . சோதிக்கப்பட்டபோது*

*“மேலும் விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சோதிக்கப்பட்டபோது ஈசாக்கைப் ðL ò£è åŠ¹, ªè£´ ^î£¡ ” (11:17).*

ஆபிரகாம் மூன்று முறை சோதிக்கப்பட்டான். இதினாலே, அவன் விசுவாசத்தில் உறுதிப்படுத்தப்பட்டான். முதலாம் சோதனை – கல்தேயப் பட்டணத்தினின்று புறப்பட்டதில்; இரண்டாம் சோதனை – முதிர் வயதில் மகன் பிறப்பான் என்பதை நம்புவதில்; மூன்றாம் சோதனை – அப்படிப் பெற்ற மகனைப் பலியிடச் சொல்லிய போது உண்டானது.

*“ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும் என்று அவனோடே சொல்லப் பட்டிருந்ததே, இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்களைப் பெற்றவன் மரித்தோரி லிருந்தும் எழுப்ப தேவன் வல்லவராயிருக்கிறாரென்றெண்ணி” (11:18).*

“உன் பெயர் நீடிக்க, ஈசாக்கின் வழியாய் உனக்கு மக்கள் பிறப்பார்கள்” என்று கர்த்தர் கூறியிருக்க, அந்த ஒரே மகனைப் பலியிடுவதென்பது மிக அரிதான ஒன்றாகும். ஆனாலும் வாக்குறுதிகளை உறுதியாக நம்பிய நிலையில்

ஆபிரகாம், கர்த்தருடைய கட்டளையை நிறைவேற்றத் தயங்கவில்லை, ஏனெனில் தேவன் மரித்தோரினின்று தன் மகனை எழுப்ப வல்லவர் என்று ஆபிரகாம் உறுதியாக விசுவாசித்திருந்தான்.

*"தனக்கு ஒரே பேறானவனையே பலியாக ஒப்புக்கொடுத்தான். மரித்தோரிலிருந்து அவனைப் பாவனையாகத் திரும்பவும் பெற்றுக் கொண்டான்" (11:19).*

**"பாவனையாகப் பெற்றுக் கொண்டான்" அல்லது "மரித்துப் பின்பு உயிரோடு எழுந்தவனைப் போலப் பெற்றுக்கொண்டான்"**

பலியிடும்படி சொல்லப்பட்ட ஈசாக்கு மரணமடையவில்லை; எனவே எழுத்தின்படியாக அவன் உயிர்த்தெழவில்லை. ஆனால் ஆபிரகாம், ஈசாக்கை மெய்யாகவே பலியிடுவதென்று இதயத்தில் நிர்ணயித்துக் கொண்டான். இதயத்தைப் பார்க்கிற கர்த்தர், ஈசாக்கு ஆபிரகாமினால் பலியிடப்பட்டதாகவே எண்ணினார். (ஆதி. 22:14). பலிபீடத்தில் கிடத்தப்பட்ட ஒரு மிருகம் ஒரு போதும் திரும்பி உயிர் பெற்று வருவதில்லை. ஆனால் ஈசாக்கு திரும்பி வந்தான்; எழுந்து வந்தான். இந்த எழுப்பப்படுதல் உயிர்த்தெழுதலுக்குச் சாயலாக உள்ளது. இந்த நிகழ்ச்சியைத் தூய ஆவியானவர் உயிர்த்தெழுதலாகவே காண்கிறார்.

*"விசுவாசத்தினாலே ஈசாக்கு, வருங்காரியங்களைக் குறித்து யாக்கோபையும் ஏசாவையும் ஆசிர்வதித்தான்" (11:20).*

ஈசாக்கு என்பதற்கு 'நகைப்பு' என்று பொருள். ஆபிரகாமின் நூறாவது வயதில், சாராள் அவனுக்குப் பெற்ற மகன் ஈசாக்கு.

1) அவன் தேவனுடைய வாக்குறுதிகளை விசுவாசித்தான்.

2) அவன் விசுவாசத்தினாலே தான் பெற்ற வாக்குறுதிகளின் ஆசீர்வதங்களை யாக்கோபுக்கு வழங்கினான் (ஆதி.27:28-33; ரோமர் 9:10-13).

3) அவன் விசுவாசத்தினாலே வருங்காரியங்களைக் குறித்து ஏசாவையும் ஆசீர்வதித்தான்.

*"விசுவாசத்தினாலே யாக்கோபு தன் மரண காலத்தில் யோசேப்பினுடைய குமாரர் இருவரையும் ஆசீர்வதித்து, தன் கோலின் முனையிலே சாய்ந்து தொழுது கொண்டான்" (11:21).*

யாக்கோபு என்பதற்கு எத்தன் என்று பொருள். இவன் ஈசாக்குக்கும், ரெபெக்காளுக்கும் பிறந்த இரண்டாம் மகன். ஈசாக்கு ஆசீர்வதிக்கையில் இந்த யாக்கோபுக்கு அதிக ஆசீர்வாதம் கிடைத்தது.

விசுவாசத்தினாலே யாக்கோபு, யோசேப்பினுடைய குமாரர்களிருவரையும் ஆசீர்வதித்தான்.

*"விசுவாசத்தினாலே யோசேப்பு இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தை விட்டுப் புறப்படுவார்களென்பதைப் பற்றித் தன் அந்திய காலத்தில் பேசி, தன் எலும்பு களைக் குறித்துக் கட்டளை கொடுத்தான்" (11:22).*

யோசேப்பு என்பதற்குப் பெருக்கம் என்று பொருள், யாக்கோபுக்கு, இராகேல் பெற்ற இரண்டு குமாரர்களின் மூத்தவன் யோசேப்பு.

ஏறத்தாழ நான்கு நூற்றாண்டுகட்குப் பின்னர் நடைபெறப் போகின்றவற்றை யோசேப்பு விசுவாசத்தினாலே முன்னதாகக் கூறியதை மேற்சொல்லிய வசனத்தில் காண்கின்றோம்.

i) யோசேப்பு 17-ம் வயதில் தன் சகோதரர்களால் எகிப்தியர்களின் கையில் விற்கப்பட்டான். 93 ஆண்டுகள் எகிப்தில் வாழ்ந்தான். பார்வோனுக்குச் சரிசமமாக யோசேப்பும் கனப்படுத்தப்பட்டிருந்தான். ஆனாலுங்கூட அவன் தேவனால் வாக்களிக்கப்பட்ட நாட்டையே நாடியிருந்தான். அவனுடைய எண்ணங்களும் நம்பிக்கையும் அதைப் பற்றினதாகவே இருந்தன. இது அவனுடைய விசுவாச எதிர்நோக்கை விளக்கிக் காட்டுகிறது.

2) இஸ்ரவேலர்கள் எகிப்தினின்று புறப்பட்டு, தேவன் ஆபிரகாமுக்கு வாக்குக் கொடுத்த நாட்டை அடைவர் என அவன் விசுவாசித்திருந்தான் (ஆதி. 50:24).

3) யோசேப்பின் மரணத்திற்குப் பின்னர் தன் எலும்புகளைக் கானான் தேசத்திற்கு எடுத்துச் செல்லவேண்டுமென்று அவன் ஆணையிடுவித்துக் கொண்டான் (ஆதி. 50:25).

4) யோசேப்பு 110-ம் வயதில் காலமானான். அவனுடைய சரீரத்தைப் பரிமள வர்க்கங்கள் இட்டு ஒரு பெட்டியிலே வைத்து வைத்தார்கள் (ஆதி. 50:26).

5) யோசேப்பின் எலும்புகளை மோசே தன்னோடு கூட எடுத்துக் கொண்டு போனான் (யாத். 13:19).

6) இஸ்ரவேலர்கள் கொண்டு வந்த யோசேப்பின் எலும்புகளைச் சீகேமிலே அடக்கம் பண்ணினார்கள் (யோசுவா 24:32).

மேற்குறித்த மூவரும், தங்கள் வாழ் நாட்களின் இறுதியில், ஆசீர்வதிக்கை யில் கூறியவையாகும். இவை அவர்களுடைய நம்பிக்கையின் எதிர்நோக்கு தலையும், விசுவாசத்தையும் வெளிப்படுத்துகின்றன.

இனி நாம் எபிரெயர் 11:13-16 வசனங்களுக்குத் திரும்புவோமாக.

எபிரெய முன்னோர்களைப் பற்றிச் சொல்லிய பின்பு வரும் குறிப்புகளாவன:

*"இவர்களெல்லாரும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக் கொண்டு, பூமியின் மேல், தாங்கள் அந்நியரும் பரதேசியுமாக உள்ளோம் என அறிக்கையிட்டு திட விசுவாசத்தோடே மரித்தார்கள். இப்படி அறிக்கையிடுகிறவர்கள் சுயதேசத்தை நாடிப் போகிறோமென்று தெரியப்படுத்துகிறார்கள். தாங்கள் விட்டு வந்த தேசத்தை நினைத்தார்களானால், அதற்குத் திரும்பிபோக அவர்களுக்குச் சமயங்கிடைத்திருக்குமே. அதையல்ல, அதிலும் மேன்மையான பரம தேசத்தையே விரும்பினார்கள், ஆகையால் தேவன் அவர்களுடைய தேவன் எனப்படுவதற்கு வெட்கப்படுகிறதில்லை. அவர் அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம் பண்ணினாரே" (11:13-16).* (11-17-22) பக்-191,192,193

***"இவர்கள். . . வாக்குத்தத்தங்களை அடையாமல்"*** – எபிரெயப் பிதாக்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டை அடையவில்லை, அதனைக் கைவசப்படுத்த எந்த முயற்சியையும் மேற்கொள்ளவுமில்லை. வாக்களிக்கப்பட்ட நாட்டினில், "கூடாரங்களில் குடியிருந்தனர்". தங்களுக்கு அவசியமாக வேண்டிய இடத்தை விலைகொடுத்து வாங்கினர். இவ்வாறுத் தாங்கள் "பரதேசிகள்" என்பதை உறுதிப்படுத்தினர்.

***"தூரத்திலே அவைகளைக் கண்டு. . ."*** – தூரத்திலே என்னுஞ்சொல் இடத்தின் தொலைவையல்ல, காலத்தின் தொலைவையே காட்டுகின்றது. "வாக்குறுதி நிறைவேறுவதற்கு நெடுங்காலத்திற்கு முன்னர்" என்று இதைப் பொருள் கொள்ள வேண்டும்.

***"பூமியின் மேல் அந்நியரும் பரதேசிகளும்"*** – வாக்களிக்கப்பட்ட நாட்டினில் வாழ்ந்தும், அதனை அவர்கள் சுய தேசம் என்றெண்ணவில்லை. கானான் தேசம் ஆபிரகாமின் வாரிசுகளுக்காக வாக்களிக்கப்பட்டதேயாகும் (யாத். 6:4; லேவி. 25:23). ஆயினும் இந்த முற்பிதாக்களுக்கு அது வேற்றிடமாகவே, அந்நிய இடமாகவே இருந்தது.

***"விசுவாசத்தோடே மரித்தார்கள்"*** – அவர்களுடைய இம்மை வாழ்வினில் அவர் வாக்குத்தத்த தேசத்தை அடையவில்லை, இறுதி மூச்சு வரையிலும் அடையவில்லை. அப்படியிருந்தும் அவர்களுடைய விசுவாசம் குன்றிப் போகவில்லை. என்றாவது ஒரு நாள் தங்கள் சந்ததியரான வாரிசுகள் அதை அடைந்தே தீருவர் என்ற அசையாத நம்பிக்கை கொண்டிருந்தனர்.

***"அந்நியரும் பரதேசிகளும்" என்று அறிக்கையிட்டனர்*** – பண்டைய நாட்களில் ஒரு தேசத்தின் குடியிருப்பின் அடிப்படையில் இரு தரப்பினர் இருந்தனர். ஒரு தரப்பினர் மண்ணின் மைந்தர்கள். பிறிதொரு தரப்பினர் அந்நியரும் பரதேசிகளும். . ! அந்நியரும் பரதேசிகளும், வேற்று நாட்டினர்; அத்தேசத்தில் அவர்களுக்கு நிலையான குடியிருப்பு இல்லை. சொந்தமான

இடமோ உறவு பந்தங்களோ, நிரந்தரமான வீடோ இன்றி அவர்கள் அலைந்து திரிபவர்கள். அவர்கள் அங்கு மதிப்பு மரியாதையற்று வாழ்ந்தனர். எபிரெய முன்னோர்கள், தங்களுடைய நிலையிதுவே என்றெண்ணி, விசுவாசத்தோடே அதை அறிக்கையிட்டு மரித்தனர்.

இவ்வாறு அறிக்கையிட்டு அவர்கள் தாம் வாக்கருளிய சுய தேசத்தை நாடுவோர் என்பதை வெளிப்படுத்திக் காட்டினர். தாங்கள் விட்டு வந்த தேசத்தை அவர்கள் நினைக்கவும் இல்லை; திரும்பிப்போக நாடவும் இல்லை. வாக்களிக்கப்பட்ட நாட்டைப் பற்றிய தங்களுடைய நம்பிக்கையான விசுவாசம், அவர்களை ஒருக்காலும் பின்னோக்கிப் போக இடங்கொடுக்கவில்லை.

*"தேவன் அவர்களுடைய தேவனெனப்பட வெட்கப்படவில்லை" (11:16)*– இப்படி அந்நியர்களாகவும் பரதேசிகளாகவும் அலைந்து திரிந்து, கனவீனப் படுபவர்களுமாயிருந்த அவர்களுடன் சம்பந்தப்பட்டு, தேவன் தம்மை "இஸ்ரவேலரின் தேவன்" என்று சொல்ல வெட்கப்படவில்லை.

கிறிஸ்துவுக்குப்பின் இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த கிறிஸ்தவர்களைப் பற்றி எழுதப்பட்டிருப்பதை வின்சென்ட் என்பார் தமது நூலினில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். "அவர்கள் அந்நிய நாட்டவர்களைப் போலத் தாய் நாட்டினில் குடியிருக்கின்றனர். அவர்கள் குடிமக்களைப் போன்று அல்ல, அலைந்து திரிந்து, எந்தத் தேசிய காரியங்களிலும் பங்கேற்காமல், அந்நியரைப்போல அனைத்தையும் சகித்து வாழ்ந்தனர். எந்த நாடும் அவர்களுக்குச் சுயதேசமாக இல்லை; எந்தத் தேசமும் அவர்களுக்கு அந்நிய இடமாகவே இருந்தது" (Word Sudies, Vol. 4, p. 522). இதைப் போன்றே பண்டைய இஸ்ரவேல் முற்பிதாக்களும் வாழ்ந்து வந்தார்கள்.

***"அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம் பண்ணினாரே"*** – கானான் தேசம் அவர்களுடைய வாழ்க்கையின் சம்பூரணமன்று. அவர்கள் ஒரு நித்திய வானுலக நகரத்திற்காகக் காத்திருந்தனர்.

## 3. மோசேயும் ஏனையோரும் (11:23-31)

ஆதியாகமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஜலப் பிரளயத்திற்கு முன்பும் பின்புமாய் வாழ்ந்த எழுவரை எடுத்துக் காட்டி, விசுவாச வாழ்க்கையின் உன்னத மான அனுபவத்தைத் தெளிவுறுத்திய நூலாசிரியர் திருச்சட்டத்தைப் பெற்றுத் தந்த மோசேயையும் வேறு சில விசுவாச வீரர்களையும் நம் முன் நிறுத்துகிறார்.

மோசே லேவி கோத்திரத்தைச் சார்ந்தவன், லேவியின் மகன், கோகாத், அவனுடைய மகன் அம்ராம். அம்ராமுக்கு யோகெபேத் பெற்ற மகனே மோசே. மோசே என்பதற்கு தண்ணீரினின்று எடுக்கப்பட்டவன் என்று பொருள். மோசே

என்ற பெயரை இந்நிருபத்தில் ஏறக்குறைய பத்து முறை காண்கிறோம். மோசேக்கு இஸ்ரவேலின் வரலாற்றில் ஓர் உன்னதமான இடம் அளிக்கப் பட்டிருந்தது. விசுவாசத்திற்கு எடுத்துக்காட்டாக ஆபிரகாமுக்கு அடுத்தபடியாக மோசேயும் உள்ளான்.

*''மோசே பிறந்தபோது, அவனுடைய தாய் தகப்பன்மார் அவனை அழகுள்ள பிள்ளையென்று கண்டு, விசுவாசத்தினாலே, இராஜாவினுடைய கட்டளைக்குப் பயப்படாமல் அவனை மூன்று மாதம் ஒளித்து வைத்தார்கள். விசுவாசத் தினாலே மோசே தான் பெரியவனான போது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவ சந்தோஷங்களை அநுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய மக்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்து கொண்டு இனிவரும் பலன் மேல் நோக்கமா யிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான். விசுவாசத்தினாலே அவன் அதரிசனமானவரைத் தரிசிக்கிறது போல உறுதியாயிருந்து, இராஜாவின் கோபத்துக்குப் பயப்படாமல் எகிப்தை விட்டுப் போனான். விசுவாசத்தினாலே, முதற்பேறானவைகளைச் சங்கரிக்கிறவன் இஸ்ரவேலரைத் தொடாதபடிக்கு, அவன் பஸ்காவையும் இரத்தம் (நிலைக்கால்களில்) பூசுதலாகிய நியமத்தையும் ஆசரித்தான்'' (11:23-28).*

## 1) "மோசேயின் பெற்றோரின் விசுவாசம்"

யோகெபேத் பிள்ளையைப் பெற்று "அது அழகுள்ள பிள்ளையென்று கண்டு" (11:23) – "அவர் அழகான குழந்தையாகவும் தேவனுக்கு இனிமையான வராகவும் இருந்தார்." (WBTC மொழியாக்கம்) "அவர் கடவுளுக்கு உகந்தவரா யிருந்தார்" (R.C. மொழியாக்கம்) "அவன் ஒரு சாதாரணக் குழந்தையல்லவென்று அவர்கள் கண்டபடியினாலே" (NIV) குழந்தை மோசே தேவபார்வையில் இனிமையானவனாக, அழகுள்ளவனாக இருப்பதைப் பெற்றோர் கண்டனர். இதினிமித்தம் அவனுடைய தாயும் தகப்பனும் விசுவாசத்தினாலே அவனை ஒளித்து வைத்தனர்.

அவர்கள் அரச ஆணைக்குப் பயப்படாமல் மூன்று மாதங்கள் ஒளித்து வைத்தனர் (யாத். 1:16, 22; 2:2; அப். 7:20) தேவனுக்கு மோசேயைக் குறித்த தனி நோக்க முண்டு என்று அவர்கள் விசுவாசித்திருக்கக்கூடும்.[76]

அம்ராமுக்கு தெய்வீக வெளிப்படுத்துதல் கிடைத்தது என்கிறார் ஜொசிபஸ். "பார்வோனின் புதல்வி, குழந்தை மோசேயைப் பார்வோனிடம் கொண்டு வந்த போது மன்னர், தமது கீரிடத்தை எடுத்து அதன் தலையில் வைத்தார்" என்று ஜோசிபஸ் எழுதியிருக்கிறார் (Anto. 11:210, 233).

*2) "மோசேயின் விசுவாசம்" (11:24-28)*

*"பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்தான்" (11:24)* – வரலாற்று ஆசிரியர்களின் கூற்றின்படி "முதலாம் தொத்மெஸின் மகளும், இரண்டாம் தொத்மெஸின் மனைவியுமானவளால், வளர்க்கப் பட்டவன் மோசே, பிற்காலத்தில் எகிப்தின் அரியாசனத்திலமர்ந்த, அட்ஷப் சூட்டின் மகன் என்னும் அந்தஸ்தில் வளர்க்கப்பட்ட மோசே, பார்வோனின் பேரன் என்ற பதவியை வேண்டாமென்று வெறுத்தது எத்தனை பெரிய தியாகம்!" இதுவே தேவனுக்கு உண்மையான ஒப்புவித்தல் ஆகும்.

*"தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்து கொண்டான் . . . கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான்."* – அக்காலத்தில், 'எகிப்து' செல்வங்கொழிக்கும் நாடாகச் சிறந்து, உலக வல்லரசாக விளங்கிற்று. அச்செல்வங்கள் பார்வோனின் மகளின் மகன் என்னப்பட்ட மோசேக்கும் கிடைக்கக் கூடியதாயிருந்தன. ஆனால் அவற்றை விட விண்ணுலகச் செல்வங்களே மேலானவை என்று விசுவாசித்த மோசே, கிறிஸ்துவின் நிந்தையை மேன்மையான பொக்கிஷமெனக்கருதித் தனக்கு இலாபமாயிருந்தவற்றையெல்லாம் கிறிஸ்துவின் பொருட்டு இழிவும் இழப்பும் எனக்கருதினான் (பிலி. 3:7).

"கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தை" என்று ஆசிரியன் இங்கு குறிப்பிட்டிருப்பது, இனி வருங்காலத்தில் தன்னைப் போல "ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே, உன் சகோதரரிலிருந்து எழுப்பப்போகிறேன்" (உபா.18:15,18). என்று கிறிஸ்துவைப் பற்றித் தேவன் அருளிய வாக்கை முற்றிலும் விசுவாசித்து அவர் நிமித்தம் நிந்தையைச் சகிக்க ஆயத்தமாக இருந்தான் என்று பொருள் படும். இதையே பேதுரு அப். 3:22-லும், ஸ்தேவான் அப். 7:37-லும் அவிசுவாசிகளாயிருந்த யூதத் தலைவர்களிடம் எடுத்துரைக்கின்றனர். நம் ஆண்டவரும் மோசே தன்னைப்பற்றி எழுதியிருப்பதைக் குறிப்பிடுகிறார் (யோவான். 5:46).

*"இராஜாவின் கோபத்துக்குப் பயப்படாமல் எகிப்தை விட்டுப் போனான்" (11:27).* மோசே எகிப்தை விட்டு வெளியேறினான் என்று திருமறை நூலில் இருமுறை குறிக்கப்பட்டிருக்கிறது. பார்வோனுக்குப் 'பயந்து' அவன் முன்னிலையினின்று ஓடிப்போனான் (யாத். 2:11-15). பார்வோனின் கட்டளைக்கும், சினத்திற்கும் "பயப்படாமல்" எகிப்தை விட்டு வெளியேறினான் (எபி. 11:27). இங்கே பஸ்காவைப் பற்றியும் இரத்தம் நிலைக்கால்களில் பூசுதலாகிய உடன்படிக்கையையும் குறித்துக் குறிப்பிட்டிருப்பதால், இந்த வெளியேறுதல், எகிப்தினின்று விடுவிக்கப்பட்ட இஸ்ரவேலரோடுள்ள பயணத்தோடு சம்பந்தப்பட்டது என்று கருதுவதே சரியாகும். மோசே, பன்முறை பார்வோனைச்

சந்தித்துப் பேசியதும், "என் ஜனத்தை அனுப்பிவிட வேண்டும்" என்று தேவன் நேரடியாகப் பேசுவதுபோல் கேட்டுக் கொண்டதும், கடைசியாக இரத்தம் நிலைக் கால்களில் பூசுதல், எகிப்தைவிட்டுப் புறப்படுதல், ஆகிய இவையாவுமே மோசேயின் அஞ்சாமைக்குச் சிறப்பான எடுத்துக்காட்டுகளாகும். அவன் இந்த அஞ்சாமையை எப்படிப் பெற்றுக் கொண்டான்? கண்களினால் காணக்கூடாத தேவனை விசுவாசத்தினாலே அவன் கண்டதினாலேயாகும் (11:27; யாத். 3:2-10).

*"விசுவாசத்தினாலே. . . பஸ்காவையும் இரத்தம் பூசுதலாகிய நியமத்தையும் ஆசரித்தான்"* – விசுவாசத்தாலன்றி இவற்றை ஒருக்காலும் ஒருவனும் நிறைவேற்ற இயலாது.

சில எபிரெயக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவை விட்டு விலகி, மோசேயைச் சார்ந்து நிற்க விரும்பினர். இவ்வாறு பின்னிட்டுப் போக விரும்பிய எபிரெயக் கிறிஸ்தவர்களும், கிறிஸ்துவினிமித்தம் நிந்தையைச் சுமக்க வேண்டு மென்பதை, அவர்களுடைய மதிப்புற்குறிய தலைவனையே மாதிரியாகக்காட்டி இந்நூலா சிரியர் இங்கு அறிவுறுத்துகிறார் (அப். 5:41; 1 பேது. 4:16).

### 3) இஸ்ரவேல் மக்களின் பொதுவான விசுவாசம் (11:29,30)

*"விசுவாசத்தினாலே அவர்கள் சிவந்த சமுத்திரத்தை உலர்ந்த தரையைக் கடந்துபோவது போலக் கடந்து போனார்கள். எகிப்தியர் அப்படிச் செய்யத் துணிந்து அமிழ்ந்து போனார்கள். விசுவாசத்தினாலே எரிகோ பட்டணத்தின் மதில்கள் ஏழுநாள் சுற்றிவரப்பட்டு விழுந்தது" (11:29, 30).*

இச்சம்பவங்களின் மூலம் இஸ்ரவேல் மக்களின் பொதுவான விசுவாசத்தைக் காண்கிறோம். இது மோசேயின் சிறப்பான தனி விசுவாசத்தோடு இணைத்து எழுதப்பட்டுள்ளது. விசுவாசத்தினாலே பஸ்காவைக் கொண்டாடியதைப் போலவே, அத்தகைய விசுவாசத்தினாலே உலர்ந்த தரையைக் கடப்பதைப் போன்று, கொந்தளித்துப் பிரவாகிக்கும் செங்கடலையும் அவர்கள் எளிதாகக் கடந்தனர்.

*"சிவந்த சமுத்திரம் (அல்லது) செங்கடல்" (11:29)* – "செங்கடலைக் குறித்து. நாம் முதற்கண் யாத். 10:190-ல் காண்கிறோம். வரலாற்று நூல்களிலும் சங்கீதங் களிலும் இச்சொல்லை ஏறக்குறைய 20 முறை காண்கிறோம். தீர்க்கதரிசன நூல்களில் செங்கடலைக் குறித்த எவ்விதக்குறிப்பும் இல்லை." – K. G. குரியன்.

மோசேயின் தலைமையில் எகிப்தினின்று புறப்பட்ட இஸ்ரவேல் மக்கள் அனைவரும் மோசேயின் விசுவாசச் செயலில் உட்பட்டவராவர் (3:16; யாத். 3:16, 17). மோசேயின் விசுவாசமே அவர்களைச் செங்கடலுக்குள் நடத்திற்று. செங்கடலின் அருகில் இஸ்ரவேலரைப் பின் தொடர்ந்துவரும் எகிப்தியர்களைக்

கண்டு அவர்கள் மிகவும் கலங்கினர் (யாத். 14:11,12). அப்பொழுது மோசே அவர்களை நோக்கி, "அஞ்சாதிருங்கள். . . இன்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் மீட்பைப் பாருங்கள்" என்றான் (யாத். 14:13). "கர்த்தர் இரவு முழுவதும் கீழ்க் காற்றினால் கடலை ஒதுங்கும்படிச் செய்து அதனை உலரப்பண்ணினார். தண்ணீர் பிளவுண்டு இரு பிரிவுகளாயின. இஸ்ரவேலர்கள் கடலின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்து கடந்து போயினர்" (யாத். 14:21, 22). கடல் நீர் இரு புறமும் மதிலைப் போல் நின்று கொண்டிருக்க விசுவாசத்தினாலன்றி அதின் நடுவாக நடந்து செல்லுதல் என்பது கூடாத காரியம் (ஏசா. 43:16; 51:10; சங். 106:9; 114:5).

***"எகிப்தியர்கள்"*** – எகிப்தியர்களும் இஸ்ரவேலர்களைப் பின் தொடர்ந்து கடலின் நடுவே கடந்துபோகத் துணிந்து அழிந்து போயினர் (யாத். 14:23-28). விசுவாசிகளின் பாதையில் அவிசுவாசிகள் செல்லுவது ஆபத்தாகும். இங்கே இஸ்ரவேலரைக் காத்த அதே கடல், எகிப்தியர்களை விழுங்கியது அதற்கொரு சான்றாகும் (யாத். 15:12). இஸ்ரவேலர்கள் கர்த்தருடைய வார்த்தைகளைப் பற்றிப் பிடித்துக்கொள்ளும்வரை அவர்களுடைய விசுவாச உறுதி குன்றாம லிருந்தது (1 கொரி. 5:7; 10:1-3).

இஸ்ரவேல் மக்களைப் பற்றிச் சொல்லாமல் விடுபட்டுப் போனவை – அவர்களது நாற்பது ஆண்டுப் பாலைவனப் பயணத்தின் தொடர் நிகழ்ச்சிகளில், விசுவாசத்தினாலே நிறைவேறிற்று என்று குறிப்பாக எடுத்துச் சொல்ல ஒரு நிகழ்ச்சியும் இல்லை. ஆகவேதான் அவை விடுபட்டுப் போனதாகக் கருதலாம்.

***"எரிகோ. . . விழுந்தது"*** – எரிகோ என்பதற்கு "பேரீந்துப் பட்டணம்" (நறுமணப் பட்டணம்) எனப் பொருள். யோர்தானைக் கடந்த இஸ்ரவேலர்கள் முதற்கண் கண்ட நகரம் 'எரிகோ' ஆகும். இஸ்ரவேலர்கள், போர் ஆயுதங்க ளின்றி, இரத்தம் சிந்துதலின்றி ஆர்ப்பரிப்பின் சத்தத்தால், அப்பட்டணத்தைக் கைப்பற்றினர். இஸ்ரவேலர்கள் ஆரவாரமாய் ஆர்ப்பரிக்க எக்காளம் முழங்கிற்று. இதோ மதில்கள் கட கட, மட மட வென்று இடிந்து விழுந்தன! உடனே அவர்கள் தங்களுக்கு நேராக உள்ள திறப்பின் வழியாகப் பட்டணத்தில் நுழைந்து அதனைப் பிடித்தனர்.

இவ்வுலகத்திற்கு "எரிகோ நகரம்" ஒரு நிழல். நாம் விசுவாசத்தினாலே உல கத்தின் மேல் வெற்றி சிறக்க வேண்டும், என்றும் ஆன்மீகப் படிப்பினையை இங்கே காண்கிறோம் (எபே. 6:2; 1 யோவான் 5:4,5).

### *"விசுவாசத்தினாலே இராகாப் சேதமாகாதிருந்தாள்"*

*"விசுவாசத்தினாலே இராகாப் என்னும் வேசி வேவுகாரரைச் சமாதானத்தோடே ஏற்றுக் கொண்டு,கீழ்ப்படியாதவர்களோடே கூடச்சேதமாகாதிருந்தாள்" (11:31).*

இராகாப் என்பவள் எரிகோவில் வாழ்ந்திருந்த ஒரு விலை மகள். ஜோசிபஸ், இவளை "ஒரு சத்திரத்தின் காவலாளி" என்று எழுதியுள்ளான். இவள் யோசுவா அனுப்பிய ஒற்றர்களை உபசரித்து, அவர்களைப் பாதுகாத்தாள் (யோசுவா 2:1-21). இஸ்ரவேலின் தேவனைக்குறித்து, அவள் கேட்டறிந்த காரியங்கள் அவளை அப்படிச் செய்யத்தூண்டியிருக்க வேண்டும் (யோசுவா 2:9-11; 6:25).[77]

'இராகாப்' என்ற பதத்திற்கு 'விசாலம்' என்று பொருள். திருமறையில் வரும், சிறந்த அழகிகளில் இராகாபும் ஒருத்தி என்பதே வரலாற்று ஆசிரியரின் கணிப்பு. சாராள், அபீகாயேல், மற்றும் எஸ்தர் ஆகியோரும் நல்ல அழகிய மகளிராவர். மத். 1:5; யாக். 2:25 ஆகிய வேத வாக்கியங்களிலும் இராகாபின் பெயர் கூறப்பட்டிருக்கிறது. இதன் பின்பு இராகாப் சல்மோனின் மனைவி யாகிறாள். தாவீது மன்னனுக்கும், மனித குமாரன் என்னும் நிலையில் இயேசு கிறிஸ்துவுக்கும் மூதாட்டியாகி, நம் மீட்பரின் வம்சவரலாற்றுப் பட்டியலில் இராகாப் என்ற, இப்பெண்மணியும் இடம் பெறுகிறாள். அதுமட்டுமன்று, இவ்விசுவாச வீரரர்களின் பட்டியலிலும் ஒரு வீராங்கனையாக அவள் திகழ்கின்றாள்!

இராகாப் ஒரு புறவினத்தவள். அவள் மீட்கப்பட்டு நமதாண்டவரின் தலை முறைப் பட்டியலிலும், விசுவாச வீரர்களின் பட்டியலிலும்,சேர்க்கப்பட்டிருப்பதினால், இயேசு கிறிஸ்துவின் மூலம் பெறும், இரட்சிப்பில் யூதர்கள் மட்டுமின்றி புறவினத்தாரும் உட்படுவர் என்பதை இது நமக்குத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

## 4. விசுவாசச் செயல் முறைகளுக்கு மேலும் சில எடுத்துக்காட்டுகள் (11:32-38)

### *ஒரு சில நியாதிபதிகளும், தீர்க்கதரிசிகளும் இதில் அடங்குவர் (11:32)*

*"பின்னும் நான் என்ன சொல்லுவேன்? கிதியோன், பாராக், சிம்சோன், யெப்தா, தாவீது, சாமுவேல் என்பவர்களையும் தீர்க்கதரிசிகளையுங்குறித்து நான் விவரமாகச் சொல்ல வேண்டுமானால் காலம் போதாது" (11:32 மூலத்திற்கு ஒத்த மொழிபெயர்ப்பு).*

இஸ்ரவேலர்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டை அடைந்ததிலிருந்து, அரசர் ஆட்சியின் துவக்க நாள் வரையிலுமுள்ள முன்னோருள் அறுவரின் பெயர்கள் இந்த விசுவாச வீரரர்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. நியாதிபதிகளின் நூலிலிருந்து நான்கு பெயர்களும், சாமுவேலின் முதலாம் நூலிலிருந்து இருவரின் பெயர்களும் உள்ளன.

இவருள் ஐவர் நியாதிபதிகள், ஒருவர் மன்னர். ஆயினும் இந்த அறுவருமே தத்தம் காலத்தில், இஸ்ரவேலரை ஆளுகை செய்தவர்களேயாவர். இப்பெயர்கள் முறையே பழைய ஏற்பாட்டில் வரும் வரிசை முறையின்படியல்ல என்பதும் இங்கு குறிப்பிட வேண்டும். பழைய ஏற்பாட்டு வரிசை முறையின்படி இவர் களின் பெயர்கள் முறையே பாராக் (மின்னல்), கிதியோன் (வெட்டுகிறவன்), யெப்தா (கர்த்தர் விடுவிக்கிறார்), சிம்சோன் (சூரியனைப் போன்றவன்) (நியா. 4:14; 6:34; 11:29; 13:24; 1 சாமு. 1:20) சாமுவேல், தாவீது (பிரீதியானவன் ரூத். 4:22; மத். 1:6) என்ற வரிசையில் இருக்க வேண்டும்.

தாவீது முதன்மையானவன்; தாவீதை இராஜாவாக அபிஷேகம் பண்ணுவதில் சாமுவேல் சம்பந்தப்பட்டவன். இவ்விருவரும் இந்தப் பெரிய விசுவாசப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது இயற்கையே.

### *அவர்கள் பெற்ற வெற்றிகள் (11:33-35அ)*

*"விசுவாசத்தினாலே அவர்கள் இராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்துப்போட்டார்கள், அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள், பட்டயக் கருக்குக்குத் தப்பினார்கள், பலவீனத்தில் பெலன் கொண்டார்கள், யுத்தத்தில் வல்லவர்களானார்கள், அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள், ஸ்திரீகள் சாகக்கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடெழுந்திருக்கப் பெற் றார்கள், வேறு சிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு. . ." (11:33-35-அ).*

இவ்வதிகாரத்தில் பலர் அடைந்த வேதனைகளையும், அதினிமித்தம் அவர்கள் செய்த வீரதீர சாதனைகளையும் காண்கிறோம். வேறு சிலர் வேதனை களினின்று விடுதலை பெறாமற்போய்விடினும், இறுதி மூச்சுவரையிலும் உண்மையிருந்தனர். இவையனைத்தும் விசுவாசத்தினாலானதாகும். ஆனாலும், அவர்களுடைய பெயர்களோ, விவரங்களோ இங்கு குறிப்பிடப் படவில்லை. இந்நிருபம் மேலும் விரிந்து நீண்டு போகாமலிருக்கும் பொருட்டுச் சுருங்கக் கூறிக் குறித்துக்காட்டி, குறுக்கியுள்ளார் நூலாசிரியர்.

*"இராஜ்யங்களை ஜெயித்தார்கள்" (11:33)* – சீகோனையும், ஓகையும், வென்றதும், யோசுவாவின் நாட்களில் பெற்ற வெற்றிகளும், தாவீது பெற்ற வெற்றிகளும் இவற்றிலடங்கும்.

*"நீதியை நடப்பித்தார்கள்"* – முடியாட்சி ஆயினும் இவ்வரசர்கள் நீதியை நடப்பித்தார்கள் (1 சாமு. 12:4; 2 சாமு. 8:15; 1 நாளா. 18:14; சங். 101). இவை ஆள்கிறவர்களின் நீதி நேர்மையை எடுத்துக் காட்டுபவையாகும்.

*"வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள்"* – தாவீதைப் போல பலர் நல் வாக்குத்தத்தங்களைப் பெற்றனர் (அப். 13:23; 2 சாமு. 7:11-13).[78]

*"சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள்"* – சிம்சோன் ஒரு சிங்கத்தைக் கிழித்து எறிந்தான் (நியா. 14:6). தாவீது சிங்கத்தின் தாடையைப் பிடித்து அடித்துக் கொன்று போட்டான் (1 சாமு. 17:35). தானியேலைச் சேதப்படுத் தாதபடி கர்த்தர் சிங்கத்தின் வாயைக் கட்டிப் போட்டார் (தானி. 6:22).

அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள் (11:34). அடிமைத்தன தேசமாகிய பாபிலோனில், நெபுகாத்நேச்சாரின் கட்டளையை மீறி சாத்ராக், மேஷாக், ஆபேத் நேகோ ஆகியோர் தீச்சூளையில் எறியப்பட்டனர். ஆனால் அவர்கள் தீயின் நடுவில் உலாவினர் (தானி. 3:20-25). அவர்களைத் தீ எத்தீங்குஞ் செய்யவில்லை; தீயின் வாசனைகூட அவர்கள் மேல் காணவில்லை (தானி. 3:27; 1 பேது. 4:12; 1 மக்கா. 2:59; 4 மக்கா 16:3; 18:12).

*குறிப்பு: மக்கா என்பது மெக்கபீஸ் புத்தகம்: இது தள்ளப்பட்ட ஆகமங்களில் ஒன்று. இஸ்ரவேலரின் சரித்திரத்தில் காணப்பட்ட அநேக விவரங்களை விளக்கும் ஒரு புத்தகம்.*

*"பட்டயக் கருக்குக்குத் தப்பினார்கள்"* – எலியா, யேசபேலின் கையிலிருந்தும் (1 இராஜா 19:2), எலிசா ஆகாபின் மகன் யோராமின் கையிலிருந்தும் (2 இரா. 6:31), எரெமியா, யோயாக்கீமின் பட்டயக்கருக்கிலிருந்தும் (எரே. 36:19, 26) தப்பினார்கள்.

*"பலவீனத்தில் பெலன் கொண்டனர்"* – மனாசே வம்சத்தில் மிகவும் வலுக் குன்றிய, எளிய, சிறிய குடும்பத்தில் தோன்றிய கிதியோன், 300 ஆட்களைக் கொண்டு பெரிய வெற்றியைப் பெற்று, அனைத்து இஸ்ரவேல் மக்களையும் விடுவித்தான் (நியா. 6:15); சிம்சோனும் பலவீனப்பட்ட நிலையிலும் *பெலன்* பெற்றான் (நியா. 16:28-30). எசேக்கியா தன் பலவீனத்தில் *பெலன்* கொண்டான். (2 இராஜா. 20).[79]

*"யுத்தத்தில். . . சேனைகளை முறியடித்தார்கள்"* – மோசே, யோசுவா, காலேபு, கிதியோன், சிம்சோன், தாவீது மற்றும் யோனாத்தான் ஆகியோர் "கர்த்தரே யுத்தத்தில் வல்லவர்" (யாத். 15:3) என்ற விசுவாசத்தினாலே, அந்நியருடைய சேனைகளுக்குள் பாய்ந்து சென்று, முறியடித்து தங்களுக்கு வெற்றிகளைக் குவித்தார்கள் (உபா. 32:30; யோசு. 23:10; 1 சாமு. 14:6; 2 நாளா. 20:15). கிதியோன் முதல் மக்கபேயர்கள் வரை இந்த வீர வரலாற்றினில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளனர்.

*"ஸ்திரீகள் தங்களுடையவர்களை உயிரோடெழுந்திருக்கப் பெற்றார்கள்"* – சாறிபாத்து விதவை (1 இராஜா. 17:17-24), சூனேமியாள் (2 இராஜா 4:36,37), ஆகியோர் இறந்த தம்முடைய பிரியமானவர்களை உயிருடன் எழுந்து வரக் கண்டார்கள். நாயீன் ஊர் விதவை (லூக். 7:11), மரியாள், மார்த்தாள் (யோவா. 11:44, 45), யோப்பாப் பட்டணத்து விதவைகள் (அப். 9:38, 41) ஆகியோர், இறந்துபோன தம்முடையவர்களை உயிருடன் எழுந்துவரக்கண்ட புதிய ஏற்பாட்டு வீரப் பெண்களாவர்.

*"வேறு சிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு" (11:35)* – சாரிபாத் விதவை, சூனேமியாள் ஆகியோரின் பிள்ளைகள் மரணமடைந்த பின் உயிரோடு எழுந்தனர். அவ்வண்ணம் எழுந்தவர்கள் மேலும் சிறிது காலம் வாழ்ந்து பின்னர் இயல்பான மரணத்தை எய்தினர். இறப்பிற்குப் பின்னருள்ள மகிமையான வாழ்க்கையைப் பற்றிப் பழைய ஏற்பாட்டில் மங்கலான வெளிச்சமே உண்டு. பேராசிரியர் F. F. ப்ரூஸ் தனது எபிரெய நிருபப்பொழிப் புரையில் இவ்வண்ணம் கூறியுள்ளார்: "விண்ணுலக வாழ்க்கையைக் குறித்துத் தெளிவாக எதையும் பழைய ஏற்பாட்டில் காண்கிறதில்லை. பரலோக வாழ்க்கை யைக் குறித்த எதிர்நோக்குதலை அல்ல, தேவன் தங்களுக்கு வாக்கருளி ஈந்த கானான் தேசத்தில் நீடிய ஆயுளோடு வாழ்வதே இஸ்ரவேல் மக்களின் பொது வான நம்பிக்கையாக இருந்தது".

உயிர்த்தெழுதலைக் குறித்து ஆதியாகமத்தில் மறைமுகமாகச் சொல்லப் பட்டிருந்தாலும், "நான் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரின் தேவ னாக இருக்கிறேன்" (யாத். 3:6) என்னுங்கூற்றில் உயிர்த்தெழுதலைப் பற்றிய சத்தியமும் அடங்கியுள்ளது என்று ஆண்டவர் இயேசு கிறிஸ்து சுட்டிக் காண் பித்தார் (மத். 22:31, 32). உயிர்த்தெழுதல் மற்றும் மகிமையான நம்பிக்கையைப் பற்றிய விசுவாசம் யூதர்களின் மத்தியில் நிலவியிருந்தது. அது யூத வம்சத்தில் உதித்த பேர் பெற்ற மக்கபேயருடைய நாட்களிலே (கி. மு. 167 முதல் ரோமர் ஆட்சியில் யூதேயா ஒரு மாகாணமாக உருவாகும் வரை) நிகழ்ந்த துன்புறுத்த லேயாம். அதன் பின்னர் அது யூத மதத்தின் முக்கிமான போதனையாயிற்று. சதுசேயர் மட்டும் அதனை நம்பவில்லை. கி. பி. 70-ல் நடைபெற்ற எருசலேமின் அழிவோடு அச்சதுசேயர் கூண்டோடு அழிந்து போயினர்."[80]

## *அவர்கள் ஏற்றுக்கொண்ட சித்திரவதைகள், பாடுகள் (11:35 ஆ-38)*

*"விடுதலை பெறச் சம்மதியாமல் வாதிக்கப்பட்டார்கள். வேறு சிலர் நிந்தை களையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அனுபவித்தார்கள்" (11:35ஆ, 36).*

விசுவாசத்தை நிராகரிப்பதன் மூலம் கிடைக்கும் விடுதலையை இவ்விசுவாச வீரர்கள் விரும்பாமல், நிந்தைகளையும், துன்பங்களையும் அனுபவித்து மரணத்தையும் மனதார ஏற்றுக்கொண்டனர் (2 மக்கா. 7:7, 8). இங்கு எரேமியாவின் அனுபவத்தைக் கண்நோக்கிப் பார்ப்போமாக (எரே. 20:2,7; 37:15).

***"கல்லெறியுண்டார்கள்"*** – இது இஸ்ரவேலரின் தண்டனை வழங்கும் ஒரு முறையாகும். அவர்கள் தீர்க்கதரிசிகளையும் கல்லெறிந்து கொன்றனர் (2 நாளா. 24:20, 21; மத். 27:31; லூக் 11:49; அப். 7:52). பவுலும் ஒருமுறை கல்லெறியுண்டதாகக் கூறுகிறான் (2 கொரி. 11:25).

***வாளால் அறுப்புண்டார்கள்*** – "அவர்கள் வாளால் துண்டிக்கப்பட்டுப் போனார்கள்" விசுவாசத்தினாலே சிலர் பட்டயக்கருக்குக்குத் தப்பினார்கள் (11:34). வேறு சிலர் வாளால் அறுக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். எரேமியா வாள்முனைக்குத் தப்பினான் (எரே. 26:24).

***"பரீட்சை பார்க்கப்பட்டார்கள்"*** – தேவனாலும் தேவ போதனையிலும் உள்ள விசுவாசத்தை மறுத்தால் ஏராளமான நன்மைகளைப் பெறலாம் என்கிற, உலக மக்களின் வாக்குறுதிகளால் நேர்ந்த மனப்போராட்டத்தை இது குறிப்பிடுவதாக இருக்கலாம்.

***"பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள்"*** – சிலர் வாள்முனைக்குத் தப்பினாலும் வேறு சிலர் வாள் முனைக்கு இரையாயினர். எரேமியா உயிர் தப்பினான். ஆனால் உரியா கொல்லப்பட்டான் (எரே. 26:23). யூதர்களின் வரலாற்றின்படி மனாசேயின் ஆட்சிக் காலத்தில் ஏசாயா வாளால் வெட்டப் பட்டுக் கொலை செய்யப்பட்டான் (The matyrdom of Isaiah 5:1).[81]

*"செம்மறியாட்டுத் தோல்களையும், வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக் கொண்டு திரிந்து குறைவையும், உபத்திரவத்தையும் துன்பத்தையும் அநுபவித்தார்கள்" (11:37-ஆ).*

எலியா மயிர் உடையைத் தரித்திருந்தான் (2 இராஜா. 1:8). இது அவனுடைய வெளியுடையாக இருக்கலாம். ஆனால், மிருகங்களில் தோல்களைப் போர்த்திக் கடினமான வெயில் நேரத்தில் பாலை நிலத்தில் அலைய விடுகிற ஒரு தண்டனைமுறை அக்காலத்தில் வழக்கிலிருந்தது. அப்படிப்பட்டோர் தாளவொட்டாத கடும் வெப்பத்தால் தாக்கப்பட்டு மணல் மேடுகளில் மடிந்து விழுவர்.

***"உலகம் அவர்களுக்குப் பாத்திரமாக இருக்கவில்லை"*** – விசுவாசத்தினிமித்தம் பலவித கொடூரமான தண்டனைக்கு ஆளாயினர். வாள் முனையினாலும், நெருப்பினாலும், சிறையிருப்பினாலும், கொள்ளையினாலும் மடிந்தோர் ஆயிரமாயிரமாவர் (தானி. 11:32, 33).

*வனாந்தரங்களிலும், மலைகளிலும், அலைந்து திரிந்தார்கள்* – தாவீது ஆரேத் என்னும் காட்டிலும், சீப் வனாந்தரத்திலுள்ள காட்டிலும், அதுல்லாம் என்னும் குகையிலும், காட்டிலும் அலைந்தான் (1 சாமு. 22:1,5; 23:15). எலிசா போன்றோர் மலைகளிலும், குகைகளிலும் அலையுண்டு தங்கி வாழ்க்கை நடத்தினர் (1 இராஜா. 18:8,13; 19:9). அதுவுமின்றி அந்தியோக்கஸ் எபிபானஸின் நாட்களில் மக்கபேயர்கள் பட்டதுன்பங்கள், மிகவும் கொடுமை நிறைந்தவையாக இருந்தன (1 மக்க. 2:29-38; 2 மக்க. 5:27; 6:10. *202-ம் பக்கம் குறிப்பைக்காண்க*).

இறையச்சத்துடன், இறைவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, அவருக்கு உகந்தவராய் வாழ்பவர்கள், உலக மக்களுக்கு உகந்தவராய்க் காணப்படமாட்டார்கள். உலகத்தாரின் சம்பிரதாயங்களையெல்லாம் புறக்கணித்து, அதின் சமுதாய முறைமைகளைக் கடைபிடிக்காதவர்களுக்கு உலகத்தாரின் எதிர்ப்புகளும் தீமைகளும் வருவது இயல்பேயாகும். விசுவாசத்தினிமித்தம் அவர்கள் அடைந்த துன்பங்கள் அளவிடற்கரியன. உலகத்தின் பார்வையில் விசுவாச பக்தர்கள் கனம் பெறமாட்டார்கள் (யோவான் 15:18,19; 17:14). மகா தேவனும், உலக இரட்சகருமான இயேசு பெருமானை விசுவாசிப்போர் பெறும் மேலான நல்ல பங்கு துன்பமும் துயரமுமே! ஏளனமும் ஏமாற்றமுமே!! கொலையும், கொடுமையுமே!!!

## 5. விசுவாசத்தின் பூரண நிறைவு (11:39,40)

*"இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சி பெற்றும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமற் போனார்கள். அவர்கள்* ***நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு*** *விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்" (11:39, 40).*

பழைய ஏற்பாட்டுப் பக்தர்கள் விசுவாசத்தால் கண்டவற்றை, புதிய ஏற்பாட்டுப் பக்தர்களாகிய நாம் நேரில் கண்டு, அதை உணர்ந்து அனுபவிக்கின்றோம். அவர்களைப் பார்க்கிலும் மேன்மையான உரிமைகளும் பதவிகளும் புதிய ஏற்பாட்டு விசுவாசிகளுக்கு அருளப்பட்டிருக்கின்றன (மத். 13:17; 1 பேது. 1:12; 2:9). ஆயினும் முன்னோடிகளான அவர்கள், **"நம்மைவிட்டு விட்டு மேன்மையான ஓர் இடத்தைப் பெறப்போவதில்லை"**. நம்முடன் இணைந்தே அவர்களும் அந்த முழுமையை அடைவர்.

***"இவர்களெல்லாரும். . ."*** – ஆபேல் முதலான அநேகரை, அதாவது, மனிதனின் படைப்பிலிருந்து அநேகர் மேலேயுள்ள சிறப்புப் பட்டியலில் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளனர். 'எல்லாரும்' என்ற சொல்லில் இங்கு பெயர் குறிக்கப்பட்டோரும், அவ்வாறு குறிப்பிடப்படாதோரும் அடங்குவர். இத்தகைய அனைவரும் விசுவாசத்தினாலேயே நற்சாட்சி பெற்றனர்.

*"வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமற் போனார்கள்"* – ஆபிரகாம் பொறுமையோடு காத்திருந்த பின்பே வாக்களித்ததைப் பெற்றுக் கொண்டான் (6:15) என்று கூறிய நூலாசிரியர், இங்கே அவ்வாறு வாக்களிக்கப்பட்டதை அடையாமறபோனார்கள் என்று கூறுகிறார். இவை ஒன்றுக்கொன்று முரண் பாடாகக் காணப்படுகின்றனவா? இல்லை.

தம் ஜனத்திற்கு கர்த்தர் அநேக வாக்குறுதிகளை அருளியுள்ளார். ஆபிர காமுக்கு வாக்களித்ததை அவன் விசுவாசத்தினாலே பெற்றுக் கொண்டான். தொடர்ந்து, அவ்னுடைய வம்சத்தாருக்கு அளித்த வாக்குறுதிகள் அநேகம், அவற்றுள் சில கிறிஸ்துவில், நிறைவு பெற வேண்டியவையாகும். அது வரையிலும் அவர்கள் பொறுமையுடன் காத்திருக்க வேண்டியுள்ளது. அதுவரை அவை நிறைவேறாதவையாகவே இருக்கின்றன.[82] இதினிமித்தம் அத்தகைய வாக்குத்தத்தங்கள் நிறைவேறும் வரை அவர்கள் பொறுமையோடு காத்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் உள்ளது.

பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாட்டின் நிழல்; புதிய ஏற்பாடு, பழைய ஏற்பாட்டின் நிஜம். பழைய ஏற்பாட்டின் நிழல்கள் இயேசு கிறிஸ்துவில் தான் பூரணம் அடைகின்றன. அனைத்து வாக்குத்தத்தங்களையும், பழைய ஏற் பாட்டுப் பக்தர்களும், புதிய ஏற்பாட்டுப் பக்தர்களும் சேர்ந்து ஒருமித்தே கிறிஸ்துவுக்குள்ளாகக் கண்டடைய வேண்டும். இதினிமித்தமே "நம்மையல் லாமல் அவர்கள் பூரணராகாதபடிக்கு" என்று இந்நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு பழைய ஏற்பாட்டு விசுவாச பக்தர்கள் தங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை, இதுவரை அடையாமற் போனார்கள். ஆயினும் இனி அடைவார்கள்.

*"அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு"* – "நம்மோடு சேர்ந்தா லொழிய அவர்கள் நிறைவு பெறலாகாது" (R. C. மொழியாக்கம்). அவர்கள் நம்மையின்றிப் பூரணமடையமாட்டார்கள். "அவர்கள் நம்மோடு கூட அல்லாமல் (நாமின்றி) இரட்சிப்பின் பூரணப்படுதலைப் பெறாமலிருக்க" (மலையாள திருப்புதல்), என்று இது பொருள்படும். பழைய ஏற்பாட்டுப் பக்தர்களும், புதிய ஏற்பாட்டுப் பக்தர்களும் ஒருமித்துப் பூரணராவர்.

### *"விசேசித்த நன்மையானதொன்றை. . ." (11:40)*

அவர் விசுவாசித்திருக்கிற நமக்கு நியமித்திருப்பது, சாதாரணமான, அல்லது சராசரித் தன்மையானதொன்றன்று. அவை மிக நன்மையானவைகளும், சிறப்பும் மேன்மையானவைகளும் ஆகும். அவையாவன அதிக நன்மை (7:19), விசே ஷித்த பலி (9:23), அதிக மேன்மை (10:34), மேன்மையான உயிர்த்தெழுதல் (11:35) ஆகியவை ஆகும்.

"வேற்றுமையான காலங்களில் உலகத்தில் வாழ்ந்தாலும், விண் மகிமையில் ஒருமித்தே பங்குடையவர்களாவோம்". இரட்சிப்பின் நிறைவான "உயிர்த் தெழுதல்" என்னும் மகிமை என்றும் ஒன்று போன்றேயிருக்கும்.[83]

ஆவி, ஆத்துமா, சரீரம் குற்றமற்றதாக வெளிப்படுவது ஒன்று போன் றிருக்கும். பழைய உடன்படிக்கை விசுவாசிகளும், புதிய உடன்படிக்கை விசுவாசிகளும், ஒருமித்தே நன்மைகளை அடைவர். அவர்களுக்கென்று "ஒன்றை" நியமித்தார். நமக்கு விசேஷித்த நன்மையானதொன்றை நியமித்தார். கதிரோனின் சுடர்வேறு! விண்மீனுக்கு விண்மீன் சுடரில் வேறுபடுகிறது. இவ்வாறே பழைய ஏற்பாட்டுப் பக்தர்களும், புதிய ஏற்பாட்டுப் பக்தர்களும் வெவ்வேறு வித மேன்மைகளை அடைவர்.

## III. விசுவாசத்தில் நிலைத்திருத்தல் (12:1-29)

### 1. விசுவாசத்தின் குறிக்கோளும், நியமனமுமான இயேசு கிறிஸ்துவும் (12:1,2)

*"ஆகையால், மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க பாரமானயாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு. . ." (12:1).*

#### *1) துணிவைப் பெறுதல்*

எண்ணிக்கைக்கு அடங்காத திரளான சாட்சிகளான அநேக விசுவாச வீரர்களின் பெயர்களை, மேகத்தோடு ஒப்பிடப்பட்டுள்ளதை நாம் பதினோராம் அதிகாரத்தில் கண்டோம். அவர்களும், மேலும் பெயர் சொல்லப்படாது குறிக் கப்பட்டவர்களும், விடுபட்டுப் போன எண்ணிக்கைக்கு மேற்பட்டோரும் இவற் றுள் அடங்குவர். நம்மைச் சூழ்ந்து நிற்கும் இந்தப் பெரிய திரள் கூட்டம் நமக்குப் பெரும் துணிவைத்தருகிறது. அவர்கள் விசுவாசத்துடன் ஓடி, ஓடி, களைத்து ஒடுங்கிக் காணப்பட்டாலும், வெற்றியுடன் ஓட்டத்தை முடித்தவர்கள். வீரதீர வெற்றிகளைக் குவித்தவர்கள். அவ்வாறே நாமும் நாடி, ஓடி வெற்றி காண்போமாக! பவுல் அப்போஸ்தலன் கூறுவதைக் கவனிக்கவும் (2 தீமோ. 4:8).

#### *2) சுமைகளைக் களைதல்*

*"பாரமான யாவற்றையும். . ."*– பந்தயத்திடலில் ஓடுவோர், தங்கள் ஓட்டத் திற்கு தடைவராதபடி சுமைகள் யாவற்றையும் உதறித்தள்ள வேண்டும். அவர்கள் சுமையானதும், இருகப்பிடிக்கக்கூடியதுமான உடைகளை அகற்றி

ஓடுவர். பந்தயத்தில் போட்டியிடுகிறவர்கள் அனைவரும் தங்களை எல்லா வகையிலும் ஒடுக்கிக்கொள்ளுவார்கள் (1 கொரி. 9:25-27). தங்களுடைய சரீர எடையைக்குறைக்கும் பொருட்டு கொழுப்பு உணவைத்தவிர்ப்பர். சீரான ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிப்பர் (2 தீமோ. 2:5). தூய மன நலங்காக்க வீணான எண்ணங்களையும், வேண்டாத எண்ணங்களையும் கைவிடுவர்.

ஒருவருக்குச் சுமையாக இருப்பது வேறொருவருக்குச் சுமையாக வேண்டுமென்ற கட்டாயமில்லை. இதைக் குறித்து வேத விளக்குநராகிய F. W. கிராண்ட் என்பார் இவ்வாறு கூறியுள்ளார்: "தேவையில்லாத ஒன்றைத் தேவையென்றெண்ணி நாம் எடுத்துக்கொள்ளுவது ஒரு சுமையாகும். அது ஒரு கடமையன்று; கடமையென்பது ஒருபோதும் சுமையாகக்கூடாது. சில மனிதர்கள் வீண் சுமையை, அவசியமற்றதைச் சுமந்து கொண்டு அதனைக் கடமை என்று தவறாகச் சொல்லிக்கொள்ளலாம். இக்காலத்தில் காணும் பலவித நூதன வாழ்க்கை முறைகளும், பிறர் நடுவில் பகட்டாகவும், ஆடம்பரமாகவும்தான் வாழவேண்டுமென்று ஒருவன் கொள்ளும் பெருமிதமும் அவனுக்குச் சுமைகளைப் பெருக்கும். இப்படிப்பட்டவை நம் ஓட்டத்தைப் பாரமும், கடினமுமாக்குகின்றன." இதனுடன் கால்வினின் கருத்துக்களையும் எடுத்துக்கூறுகிறார் K. G. குரியன்: "கிறிஸ்துவின் திருப்பெயரில் ஓடவேண்டிய அனைவருமே, தடைகள் யாவற்றையும் முதலாவது தவிர்க்க வேண்டும். நாம் ஓட்டத்தைத் துவக்கவே பிந்திவிட்ட சூழலில் உள்ளோம். மேலும் பிந்துவதற்குரிய எதையும் நம் வாழ்வில் அனுமதிக்கக் கூடாது".[84]

*"நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு"* – "நெருக்கமாய் ஒட்டிக்கொள்ளும் பாவம்" (RSV). ஏறக்குறைய பன்னிரு நிலைகளில் இதனைப் பெயர்க்கலாம் என்கிறார் புதிய ஏற்பாட்டு கிரேக்க அறிஞருள் புகழ்மிக்க முனைவர் இராபர்டஸ் என்பார்: "நம்மைச் சுற்றியுள்ள ஒரு குறிப்பிட்ட பாவத்தைச் சொல்லவில்லை. எந்தப் பாவமும் பந்தைய ஓட்டத்திற்கு ஊறு விளைவிக்கும். இது விசுவாசத்தை மறுதலிப்போருக்கு எச்சரிக்கை தரும் நிருபமாதலின், இது விசுவாசம் பின்னடைவதற்குரிய அவிசுவாசத்தைக் குறிப்பிடலாமென்பதே அநேக வேத விளக்குநர்களின் கருத்து (ரோமர் 13:2; எபே. 4:22; கொலோ. 3:8). "சுற்றி நெருங்கி நிற்கிற" ("*eperistatos*") என்னும் கிரேக்கச் சொல், புதிய ஏற்பாட்டில் இவ்வோர் இடத்தில் மட்டுமே உபயோகப்படுத்தப் பட்டுள்ளது.

## விசுவாசத்தின் அதிபதி

### *3) "விசுவாசத்தைத் துவக்குகிறவர்"*

*"விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி. . ." (12:1).*

"நம்பிக்கையைத் தொடங்கி வழிநடத்துபவர்" (திருவிவிலியம் பொதுமெழி பெயர்ப்பு) "முன்னோடியும் பூரணப்படுத்துபவரும்" (RSV). "கர்த்தாவும் பூரணப் படுத்துபவரும்" (NIV). "விசுவாசத்தின் நாயகர்" (மலையாளம்).

இவ்விசுவாசம் இறை இயேசுவினால் துவக்கம் பெற்று, அவரால் நிறைவு பெறுகிறது. விசுவாசத்தின் காரண கர்த்தரும், ஆதாரமும் அவரேயாவர். இயேசு கிறிஸ்து "இரட்சிப்பின் அதிபதி" யாக இருப்பதைப் போல (2:10), விசுவாசத்தின் அதிபதியாகவும் இருக்கிறார்.

*"முடிக்கிறவருமாயிருக்கிற"* – துவக்கமும் அவரே; முடிவும் அவரே. "உங்களில் சிறந்ததொரு வேலையைத்தொடங்கியவர் அதனைத்தொடர்ந்து. . . நடப்பித்து, நிறைவுபெறச் செய்வார்" (பிலி. 1:5). நம்மில் நற்கிரியையைத் துவங்குகிறவர், விசுவாசத்தைத் தொடங்குகிறவர் அதை வளர்த்து, பெருகச் செய்து, இறுதி வரை அதைக் காத்து நிறைவு செய்கிறவராகவும் இருக்கிறார்.

### *4) "விசுவாசத்தால் நோக்கிப் பார்த்தல்"*

*"இயேசுவை நோக்கி. . ."*– இயேசு என்ற இச்சொல் திருக்குமாரனின் மனிதத் தன்மையையும், அவர் ஏற்றுக்கொண்ட தாழ்மையையும் குறித்துக்காட்டுகிறது.

"பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப் பாருங்கள்" (3:1).

தேவ தூதர்கள், இறைவாக்கினர், மோசே, ஆரோன், யோசுவா, ஆலயம், பலிகள், வழிபாட்டு முறைமைகள் மற்றும் திரளான சாட்சிகள் போன்ற எவரையும் எதையும் கவனியாமல், இயேசுவை மட்டுமே முன் நோக்கிக் கண்டுகொண்டு நாம் ஓடக்கடவோம். நமது ஓட்டத்தின் இலக்கும், நமது அதிபதியும், நம்மை நிறைவு படுத்துகிறவரும் இயேசு ஒருவரேயாவார். அவரை தேவத்திருமகன் என்று அறிக்கையிட்ட பேதுரு (மத். 16:16), ஆறு நாட்க ளுக்குப் பின்னர் மறுரூப மலையில் மோசே, எலியா, என்னும் இருவருடனே இயேசு நிற்கிறதைக் காண்கிறான். அப்பொழுது அவன் மூன்று கூடாரங்களைப் போடுவோம் என்றான். பேதுரு தான் என்ன சொல்கிறான் என்பதை அறியாமல், திருக்குமாரனைப் பழைய ஏற்பாட்டு மத்தியஸ்தருக்கும், தீர்க்கதரிசிக்கும் சரி சமமாக்கிவிட்டான். அவ்வமையம் "இவர் என்னுடைய நேசகுமாரன்,

இவருக்குச் செவி கொடுங்கள்" என்று மேகத்திலிருந்து ஒரு சத்தமுண்டாயிற்று. இதைக் கேட்ட சீடர்கள் முகங்குப்புற விழுந்தார்கள். பின்னர் கண்களை ஏறெடுத்து நோக்குகையில் இயேசுவையன்றி வேறு எவரையும் காணவில்லை. ஆம்! இறைவாக்கினைக் கேட்டுக் கொண்டு,விசுவாசக் கண்களை உயர்த்திப் பார்ப்போமாகில் கர்த்தர் இயேசு ஒருவரை மட்டுமே நாம் காண்போம். அவர் ஒருவரே என்றும், எப்பொழுதும், எவர்களிடையிலும் மேன்மையானவரும், சிறப்பானவரும், தனித்து நிற்பவரும் ஆவர்.

விசுவாச வாழ்க்கையில் வேறெந்தக் குரலையும் கேளாமல், மகா தேவனும் இரட்சிப்பின் அதிபதியுமாகிய இயேசு கிறிஸ்து ஒருவரை மட்டுமே நாம் காண்போமாக, கவனிப்போமாக! அவருக்கே நாம் செவிகொடுப்போமாக!!

## *5) விசுவாசத்தினாலே ஓடுதல்*

*"நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" (2:1).*

இந்நூல் ஆசிரியர் கிறிஸ்தவ வாழ்க்கையை ஓர் ஓட்டப் பந்தயத்திற்கு ஒப்பிடுகிறார். ஓடுவதும், அவ்வோட்டத்தில் வெற்றி பெறுவதும் எளிதான தன்று. பலர் ஓட்டத்தைத் துவக்கினாலும், சிலர் அதைப் பாதியிலேயே நிறுத்தி விடுகின்றனர். நம்பிக்கையின்மையும், பயிற்சியின்மையும், முயற்சியின்மையும், மற்றும் பிற இடையூறுகளும் தோல்வியைத் தழுவச்செய்து விடுகின்றன. அன்றாடப் பயிற்சி மிகவும் அவசியம். உறுதி மனப்பான்மையும், விடா முயற்சியும் அவசியம். பந்தயத் திடலில் தத்தம் தடங்களில் மட்டுமே ஓட வேண்டும். உடன் ஓடுநர் சதிசெய்து, நம்மை விழச் செய்யலாம். எனவே விதி முறைகளை விட்டு விலகாமல் கவனமாக, ஒழுங்காக ஓட வேண்டும். "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை (கிறிஸ்துவை) நோக்கி ஓடவேண்டும்" (பிலி. 3:14). கிறிஸ்தவ வாழ்க்கையை ஓட்டத்தோடு ஒப்பிட்டு எழுதியிருப்பதைக் கொரிந்தியர்க் கெழுதிய நிருபத்திலுங்காண்கிறோம் (1 கொரி. 9:24, 25).

"நமக்கு" என்னுஞ் சொல்லால் இந்நிருப வாசகர்களோடு ஆசிரியர் தம்மை இணைத்துக் கொள்ளுகிறார்.

*"பொறுமையோடே ஓடக்கடவோம்"* – திருவிவிலியம் பொதுமொழி பெயர்ப்பில் "மன உறுதியோடே ஓடுவோமாக" என்று உள்ளது. இந்தப் பந்தய ஓட்டத்தில் வெற்றியைப் பெற *மனஉறுதி* மிக அவசியம். பீதியென்னும் சூறாவளி வீச வாய்ப்புண்டு. மற்றும் பலவித இடையூறுகள் குறிக்கிடும்.

ஓட்டத்தின் இலக்கு – இயேசு கிறிஸ்துவே.

ஓடும் களம் – கிறிஸ்தவ வாழ்க்கை.

ஓடும் வீரர்கள் – விசுவாசிகள்.

ஓட வேண்டியதின் முறைமை – சுமைகளையும், பாவங்களையும் உதறித்தள்ளிவிட்டுக் கிரமமாக ஓட வேண்டும்.

ஓடும் திடலில் சாட்சிகள் – ஓடிவெற்றிபெற்ற பழைய ஏற்பாட்டுப் பக்தர்கள்.

## *6) விசுவாசத்தின் அதிபதியே ஏற்ற நல்மாதிரி*

*"அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, இறைவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்"* (12:2).

***சந்தோஷத்தின் பொருட்டு*** – உலகத் தோற்றத்திற்கு முன்னரே திருக் குமாரனுக்கு இருந்த மகிமையிலும், பிதாவோடுள்ள ஐக்கியத்திலும் பிரவேசிக்க விருக்கின்ற சந்தோஷம் (யோவான் 17:5,13; 1 பேதுரு 1:11). இவை மட்டுமன்றி தமது செயலினாலுண்டான பயனைக் காண்பதிலுள்ள சந்தோஷத்தையும் இது காட்டுகிறது (ஏசா. 53:10, 11). ஆண்டவருடைய ஜெப மன்றாட்டிலும் நாம் இதைக் காண்கிறோம் அல்லவா? "அவர்கள் என் சந்தோஷத்தை நிறைவாய் அடையும்படி இதைச் சொல்லுகிறேன்" (யோவான் 17:13).

***சிலுவையைச் சகித்து*** – சாபத்திற்கும் அவமானத்திற்குமுரியதொரு ஏளனச் சின்னமே சிலுவை. கி. மு. 5-ஆம் நூற்றாண்டிலிருந்தே உலகில் சிலுவை மரணம் அமுலிலிருந்தது. கி. மு. 2-ஆம் நூற்றாண்டில் கார்த்தேஜு நாட்டைக் கையகப்படுத்திய உரோமானியப் பேரரசு கார்த்தேஜிலிருந்து வந்த சிலுவை மரணதண்டனையைத் தங்கள் நாட்டிலும் அறிமுகப்படுத்தினர். இந்தத் தண்டனை மிகக்கொடுமையானது மட்டுமின்றி, அவமானத்திற்கும் சாபத்திற் குரியதுமான ஒன்றாம். எனவே உரோமர் ஓர் உரோமானியக் குடிமகனுக்கு இந்தத் தண்டனையை வழங்க மாட்டார்கள். அடிமைகட்கும் மிகக்கொடிய குற்ற வாளிகளுக்கும் மட்டுமே இத்தண்டனையை வழங்கி வந்தனர். "ஒரு உரோ மானியக் குடிமகனுடைய சரீரம், மனம், கண்கள், காது இவற்றினின்றெல்லாம் சிலுவையின் பெயர் அகற்றப்படட்டும்" என்று சீசர் அரசன் கூறியுள்ளான்.[85]

ஆனால், நம் கர்த்தரோ, தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல் சிலுவை மரணத்தைச் சகித்தார்; அவரே பெருமான்!

***வீற்றிருக்கிறார் (1:3, 13; 8:1; 10:12; 12:2)*** – "விசுவாச வாழ்க்கையின் முடிவு மகிமையான சிங்காசனமாமே" (ஸ்டுவர்ட்டு). "இயேசு கிறிஸ்து உட்கார்ந் திருக்கிறார்", எனவே சீடர்கள் புறப்பட்டுப் போயினர். ஆண்டவர் அமர்ந்து ஓய்ந்திருக்க, சீடர்களாகிய நாம் கிரியை செய்கிறோம். இயேசு உட்கார்ந்தார் என்பது சீடர்களுக்கு அதிகமாக ஊக்கமளித்தது (மாற்கு 16:19, 20). அவர்

நமக்குத் தேவையான யாவற்றையும் நிறைவேற்றி முடித்து 'அமர்ந்தார்', என்பது மட்டுமல்ல, அவர் இன்று அமர்ந்துள்ள இடம் – அதாவது தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசம் என்ற இடம் மிகச் சிறப்புடைய மேன்மையான ஓர் இடமாகும். சகல வல்லமைகளும், அதிகாரங்களும், மேன்மைகளும் நிறைந் துள்ள ஓர் இருப்பிடமாகும். ஆகவேதான் அதன் பயன்களை நாம் இப்பொழுது விசுவாசத்தாலே முழுமையாக அனுபவிக்கிறோம்.

## 2. விசுவாசிகளின் கடமைகள் (12:3,4)

### *1) நினைத்தல்*

*"ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக் கொள்ளுங்கள்" (12:3).*

"அவரைச் சிந்தையில் இருத்துங்கள்" என்பது R.C. மொழியாக்கம். ஆங்கிலத்தில் ("Consider Him") "கருத்துக்கொள்க" என்பதாகும். அதற்கு "ஆழ்ந்த யோசனை செய்", "ஆழ்ந்து கருத்தில் கொள்" என்று பொருள் கொடுக்கலாம். இச்சொல் புதிய ஏற்பாட்டில் இவ்விடத்தில் மட்டுமே உபயோகப் படுத்தப்பட்டுள்ளது. விசுவாசிகள் மனம் சோர்ந்து போகாமலிருக்க, பாவிகளால் தமக்குண்டான எண்ணிலா எதிர்ப்பையும், துன்பங்களையும் தாங்கிய இயேசு வையே நோக்கிப் பார்த்துக்கொண்டும், அவரையே கருத்தில் கொண்டும், வாழ வேண்டும். அவர்பட்ட பாடுகளே அவரைப் பின்பற்றும் நம்மைப் பலப்படுத்தப் போதுமானதாயுள்ளன; அவையே நமக்கு உயிரூட்டம் கொடுக்கக் கூடியதுமாம்.

### *2) ஆயத்தப்படல்*

*"பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தஞ் சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே" (12:4).*

பந்தயத்திடலில் ஓடுகிற ஓர் உவமானத்தினின்று விலகி, போர்க்களத்தில் நடக்கும் போராட்டத்தை இந்நூலாசிரியர் இப்பொழுது சுட்டிக்காட்டுகிறார். இங்கே போராட்டம் என்பது குத்துச் சண்டையை நினைவூட்டுவதாகும். பாவத் துக்கு ஆள் தன்மையைக் கொடுத்து உருவகிக்கின்றார் ஆசிரியர். கலாத்தியர் 5-ல் வரும் மாம்சத்திற்கு எதிரான போராட்டத்தையோ, எபேசியர் 6-ல் வரும் பிசாசுக்கு எதிரானப் போராட்டத்தையோ அல்ல, மாறாக இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் நிமித்தம் எதிரிகளிடமிருந்து வரக்கூடிய போராட்டத்தையே இங்கு சுட்டிக் காண்பித்துள்ளார். விசுவாசிகளுக்கு அடிக்கடி வருகின்ற உபத்தி

வரங்களும் இன்னல்களும் இவையே. விழிகளை இழந்தோர், ஊனமுற்றோர், உயிரிழந்தோர், உடமைகளைப் பறிகொடுத்தோர், சிறை சென்றோர், கொடிய விலங்குகளுக்கு இரையானோர், கொதிக்கும் எண்ணையிலே எறியப்பட்டோர், தீயிலிடப்பட்டோர், இப்படிப்போராட்டத்தின் உபத்திரவப்பட்டியல் நீண்டு, நீண்டு செல்லுகிறது.

***"இரத்தஞ் சிந்தப்படத்தக்கதாக இன்னும் எதிர்த்து நிற்கவில்லை"*** – விசுவாசத்தை உறுதியாகப் பற்றிக் கொண்டதினிமித்தம் துன்பங்களையும், மரணத்தையும் அனுபவித்த விசுவாச வீரர்களின் பட்டியலை முன் அதிகாரத்தில் வரிசைப்படுத்திய எபிரெய நிருப எழுத்தாளர், எபிரெயக் கிறிஸ்தவர்களைப் பார்த்து நீங்கள் இரத்தச் சாட்சிகளாக மரிக்க வேண்டிய நிலை உங்களுக்கு இதுவரை வரவில்லையே என்கிறார். ஒருவேளை மிகக் கொடூரமான உபத்திரவக் காலங்கள் வரக்கூடும். ஆகையினால் அவற்றை ஏற்றுக்கொள்ள ஆயத்தப்பட வேண்டுமென்கிறார்.[86] பதினோராம் அதிகாரத்தில் வரும் விசுவாச வீரர்கள் விசுவாசத்தைப் பற்றிக்கொண்டதால் கர்த்தரால் முத்திரிக்கப்பட்டனர். "பாவஞ் செய்வதைவிடச் சாவதே நல்லது" என்றெண்ணி, விசுவாசக் கிறிஸ்தவ வாழ்க்கையில் பரிசுத்தத்தை முடிவு பரியந்தம் கடைபிடிப்போமாக.

## 3. "விசுவாசத்தின் பயிற்சி" (12:5-17)

### *1) தண்டனையால் பயிற்றுவிக்கும் முறை (12:5-17)*

*"அன்றியும் என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே. அவரால் கடிந்துகொள்ளப்படும் போது சோர்ந்து போகாதே, கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்துத் தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறது போல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள். நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார். தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ? எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக்கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிப்பிள்ளைகளாயிருப்பீர்களே" (12:5-8).*

சரீர சம்பந்தமான தகப்பன்மார் தரும் தண்டனையை இங்கு காண்கிறோம். முதற்கண் பிள்ளைகளுக்குரிய அறிவுரை வழங்கப்படுகிறது (12:5-8).

***"கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே"*** – விசுவாச வாழ்க்கையில் வரும் சில கடினப் பயிற்சிகளும், அவர்களின் சீர்திருத்தலுக்கென்று தேவன் அனுமதிக்கும் பயிற்சிகளுமாகிய துன்பங்களைக் கண்டு எபிரெய விசுவாசிகள் துவண்டு போயினர். வல்ல பரம பிதாவே நம் தகப்பன் என்றும், நாம் அவரு

டைய பிள்ளைகள் என்றும் இவை நிரூபிக்கின்றன. ஆகவே அவருடைய விருப்பு வெறுப்புகளை நாம் நன்கு அறிந்திருக்க வேண்டும். 12:5, 6 வசனங்கள், நீதிமொழிகளினின்று (நீதி. 3:11) எடுத்த மேற்கோள்களாகும்.

கர்த்தர் கண்டித்துத் திருத்துவதை நன்குணர்ந்து நாம் நீதியின் பாதைகளில் நடக்க வேண்டும்.[87]

*"தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ?"* – தேவ மக்களுக்கு இரு வகையான தண்டனைகளுண்டு. ஒன்று, நம்முடைய தவறுகளுக்கு நாம் பெறுகின்ற நியாய மான தண்டனை. மற்றொன்று, நாம் நீதியின் பாதைகளை விட்டு விலகா மலிருப்பதற்கென்று தரப்படும் தண்டனை. இவை நாம் பயிற்சி பெற்று, தேர்ச்சி அடைய மிகவும் அவசியமானவையாகும். தண்டனைக்குக் காரணமாயிருந்த தேவ விருப்பத்தை நாம் தெரிந்துகொள்ளாவிடில், நமக்கு அவிசுவாசமும், ஆன்மீகச் சோர்வும் நேரும். நாம் பரம இறைவனுடைய பிள்ளைகளாயிருப் பதால் அவர் நம்மை நேசிக்கிறார். எனவேதான் அவர் நம்மைத் தண்டிக்கிறார்.

*"வேசிப்பிள்ளைகளாயிருப்பீர்களே"* – அவர் நம்மைத் தண்டியாமற் போனால் நாம் பிள்ளைகளல்ல, வேசிப் பிள்ளைகளாகவே கருதப்படுவோம்.

"வேசியின் பிள்ளைகள்", "அடிமையானவளிடத்தில் அல்லது வேசியினிடத் தில் பிறந்த பிள்ளைகள்". இவர்கள் அவனுடைய குடும்பத்தின் உறுப்பினர்கள் ஆக முடியாது. அவர்கள் குமாரர்களாயிராமல், மறுமனையாட்டியிடம் பிறந்த வர்களாயிருப்பர். முனைவர் கோள் என்பார், கர்த்தர் தம் பிள்ளைகளுக்குக் கொடுக்கும் நான்கு வகையான தண்டனைகளைக் கோடிட்டுக் காட்டியுள்ளார்.[88]

i) ஆன்மீகக் கிருபைகள் பெருகும் பொருட்டு ஆபிரகாமுக்கு உண்டான சோதனைகளைப் போன்றவை. அவை தீமைக்காக அல்ல, மாறாக விசுவாசத்தை விருத்தி செய்பவைகளாகும்.

ii) சில வேளைகளில் சீர்ப்படுவதற்கென்று தேவன் தண்டிக்கிறார் (சங். 119:67).

iii) அகந்தைக்கும், மேட்டிமைக்கும் எதிரான நடவடிக்கை. பவுலடியார் அகந்தை கொள்ளாது தாழ்மையுள்ளவராயிருக்கும் பொருட்டு, கர்த்தர், பவுலடியாரின் சரீரத்தில் ஒரு முள்ளைக் கொடுத்திருந்தார் (2 கொரி. 12:7).

iv) யோபுவைப் போன்று. சொந்தப் பக்தியிலும், நீதியிலும் தற்பெருமை நேரும் போது, கர்த்தர் தண்டித்துத் திருத்துவார். தகப்பன் தண்டியாத பிள்ளைகளுண்டோ?

### 2) சரீர சம்பந்தமான தகப்பன்மார் தரும் தண்டனைகளும். ஆவிகளின் தகப்பன்மார் தரும் தண்டனைகளும் (12:9,10அ)

*"அன்றியும், நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும்போது, அவர்களுக்கு நாம், அஞ்சி நடக்கிறவர்களாயிருக்க,நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்க வேண்டுமல்லவா? அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்சக்காலம் சிட்சித் தார்கள்" (12:9, 10).*

*"சரீரத்தின் தகப்பன்மார்கள்" (12:9)* – ஆபேலுக்கு ஆதாமும், ஈசாக்குக்கு ஆபிரகாமும், தாவீதுக்கு ஈசாயும், எப்படித் தந்தையராக இருந்தனரோ, அவ்வண்ணமே நமக்கும் சரீர சம்பந்தமாகத் தந்தையர் உள்ளனர். இந்த உறவு தற்காலத்திற்குரியது.

*ஆவிகளின் தகப்பன் (12:9)* – தேவனுக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஒரு சிறப்புப் பெயர். நீதிமான்களின் ஆவி என்று காண்கிறோம் (12:23). அவர் ஆவிகளுக்கு தேவன் என்றும் காண்கிறோம் (எண். 16:22; 27:17).

சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைத் தண்டிக்கையில் நாம் அவர்களுக்கு அஞ்சி நடக்கின்றோம்.[89] அத்தண்டனை தற்காலத்திற்கும், சொற்பக் காலத் திற்கும் மாத்திரமேயாகும். அது சரீரத்துடன் சம்பந்தமுடையதாகும். இவ்வுலக வாழ்வையும், இம்மைக்குரிய நன்மைகளையும் கருதி சரீரத்தின் தகப்பன்மார்கள் தரும் தண்டனைகளுக்குப் பயப்படுகிறோமென்றால், ஆவியின் பிதாவானவர் என்றென்றுமுள்ள நித்திய, நிலைவரமான நன்மைகளுக்காகத் தண்டிப்பாரே யானால், அதற்கு நாம் எவ்வளவாய் அஞ்சி நடக்க வேண்டும். சரீரப் பிரகார மான தகப்பன்மார்கள் தண்டிக்கையில் தவறுகள் உண்டாகலாம். ஆனால் ஆவியின் தகப்பனாகிய, தேவன் தண்டிக்கையில் எவ்விதத் தவறுகளும் நேரா.

### 3) ஆவிகளின் தகப்பன் தரும் தண்டனையின் விளைவு (12:10-11)

*"இவரோ, தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார். எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாகக் காணாமல் துக்கமாய்க் காணும், ஆகிலும், பிற் காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்" (12:10, 11).*

*இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு* – இங்கே பரிசுத்தம் என்ற சொல் ஒரு பொதுச் சொல்லாக அன்று தேவனின் தெய்வீகத் தன்மையின், குணமாகிய பரிசுத்தத்தைக் குறிப்பிடுவதாகவே, பல வேத விரிவுரையாளர்களும் கருதுகின்றனர். அவருடைய இக்குணம் அவரு டைய பிள்ளைகளிடத்திலும் காணப்பட வேண்டும்.

*"எந்தத் தண்டனையும் இப்பொழுது இன்பமாயிராமல்"* – ஆம், அது துன்பமாகத்தான் தோன்றும். ஆயினும் அவ்வாறு பயிற்றுவிக்கப்பட்டவர்கள் பின்னர் அமைதியையும் நீதிவாழ்வையும் பயனாகப்பெறுவர் (12:11; மத். 5:10-12; 2 தெச. 1:4). நம் தேவன் நம்மைத் தண்டிப்பதன் மூலம் நாம் இரு நன்மைகளைப் பெறுகிறோம். ஒன்று, நாம் தேர்ச்சி பெற்று இறைவனுடைய பரிசுத்தத்தில் பங்கு பெறுகிறோம். மற்றொன்று அமைதியையும், நீதி வாழ்வையும் பயனாகப் பெறுகிறோம்.

"நமது நன்மைக்கென்று இறைவன் அமைதியாக நமது மனச்சாட்சியில் உணர்த்துகிறார். ஆனால் தற்காலத்தில் உரத்த குரலில் உரைக்கின்றார். துன்பங்கள் என்பது கேள்வியை இழந்த மக்களை விழிப்படையச் செய்யும். அது தேவனுடைய ஒலிபெருக்கிக் குழல் ஆகும்" – C. S. லூயிஸ்.[90]

## *4) நடைமுறை வாழ்க்கையும் நமது கடமையும் (12:12,13)*

*"ஆகையினால், நெகிழ்ந்த கைகளையும், தளர்ந்த முழங்கால்களையும் நீங்கள் திரும்ப நிமிர்த்தி, முடமாயிருக்கிறது பிசகிப்போகாமல் சொஸ்தமாகும்படிக்கு, உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செவ்வைப்படுத்துங்கள்" (12:12-13).*

*"ஆகையினால். . ."* – மேற்கூறியவற்றோடு வேறு சில காரியங்களையும் ஆசிரியர் தொகுத்துக் கூறுகிறார். வாழ்க்கையின் பொதுவான நன்னெறிகளை நம்முடைய கவனத்திற்குக் கொண்டு வந்த ஆசிரியர் அவற்றோடு சேர்த்து, கிறிஸ்தவ நெறி முறைகளையும் இங்கு எடுத்துக்காட்டுகிறார். விசுவாசிகள் அதற்கேற்ப வாழ்ந்துகாட்ட வேண்டும். விசுவாசிகளின் வாழ்க்கை முறைமை, அவிசுவாசிகளின் வாழ்க்கை முறைமைகளைப் போலிருக்கலாகாது.[91]

*திரும்ப நிமிர்த்தி* – நெகிழ்ந்த கைகளை வலிமைப்படுத்துங்கள், தளர்ந்த முழங்கால்களை உறுதிப்படுத்துங்கள் (ஏசா. 35:3). ஆம்! பயத்தால் நெகிழ்ந்து போன கைகளையும், தளர்ந்த முழங்கால்களையும் திடப்படுத்த வேண்டும்.

*"உங்கள் பாதங்களுக்கு வழியைச் செவ்வைப் படுத்துங்கள்"* – நமக்குப் பின் வரும் தலைமுறைகளுக்கு, ஊறு நேராத வகையில் முன் மாதிரியாயிருந்து விசுவாசத்தில் எவரேனும் வலுவற்றவராயிருப்பின், அவர்களைத் தட்டிக் கொடுத்து பெலப்படுத்த வேண்டும். இவ்வாறு நாம் பிறருக்கும், வரும் தலைமுறைக்கும் நல் வழியைச் செவ்வைப்படுத்தி ஆயத்தப்படுத்த வேண்டும்.

## *5) பற்றுறுதியின் தேவை (12:14-17)*

*"யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள். பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே. ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்து போகாதபடிக்கு யாதொரு கசப்பான வேர் முளைத்து எழும்பிக் கலக்கமுண்டாக்குகிறதினால். அநேகர்*

*தீட்டுப்படாதபடிக்கும், ஒருவனும் வேசிக்கள்ளனாகவும், ஒருவேளைப் போஜனத்துக்காகத் தன் சேஷ்ட புத்திர பாகத்தை விற்றுப்போட்ட ஏசாவைப் போலச் சீர்கெட்டவனாகவும் இராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள். ஏனென்றால், பிற்பாடு அவன் ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக் கொள்ள விரும்பியும் ஆகாதவனென்று தள்ளப்பட்டதை அறிவீர்கள். அவன் கண்ணீர் விட்டு கவலையோடே தேடியும் மனம் மாறுதலைக் காணாமற் போனான்" (12:14-17).*

***யாவரோடும் சமாதானமாயிருக்கவும்*** *( Follow after peace)* – ***சமாதானத்தைப் பின்பற்றுங்கள்*** – பட்டிதொட்டிகளிளெல்லாம் பறைசாற்றப் படுகிறதொன்றே சமாதானம் ஆகும். இங்கே, சமாதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டியதின் அவசியத்தை அறிவுறுத்துகிறார் ஆசிரியர்.

விசுவாசிகள் மூன்று நிலைகளில் சமாதானம் பெற்றவர்களாயிருக்க வேண்டும். எப்படி?

1. முதற்கண் கர்த்தரிடத்தில் நாம் சமாதானம் பெற்றிருக்க வேண்டும் (ரோமர் 5:1; எபே. 2:14; கொலோ. 1:20).

2. பின்னர், விசுவாசிகள் ஒருவரோடொருவர் சமாதானமுள்ளவர்களாய் இருக்க வேண்டும் (மாற்கு 9:50).

3. அதனைத் தொடர்ந்து, விசுவாசிகள் உலகத்தாராகிய அவிசுவாசிகள் அனைவரோடும் சமாதானமாயிருக்க வேண்டும் (மத். 5:9; ரோமர் 12:18).

***"பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்"*** – இங்கே சமாதானத்துடன் பரிசுத்தத்தை இணைத்துச் சொல்லியிருக்கிறது. விசுவாசிகளிடத்தில் அவசியம் இருக்க வேண்டிய சிறப்பான ஒரு குணமே பரிசுத்தம். கர்த்தர் பரிசுத்த முள்ளவர். அவர் தூய்மையாக இருக்கிறவண்ணமாகவேதான் நாம் அவரைக் காண்போம் (1 யோவான் 3:2). ஆகவே, அவரைப் போலவே நாமும் பரிசுத்தத் தோடு இருத்தல் அவசியம். விசுவாசிகள் உலகில் வாழ்பவர்கள்தான், ஆயினும் அவர்கள் உலகைச் சார்ந்தவர்களல்லர் (யோவான் 17:14). பரிசுத்தத்தைத் தவிர்த்து நிலவும் சமாதானம் மெய்ச்சமாதானமன்று. பரிசுத்தத்தைத் தன் வாழ்க்கையில் வெளிப்படுத்த இயலாத ஒருவனை, கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கிறான் என்று எப்படிக்கூற இயலும் (1 கொரி. 6:9; 1 தெச. 4:3; 1 பேது. 1:15)"?[92] சமாதானமும் பரிசுத்தமும் நமது ஆன்மீக நிலையை உறுதிப்படுத்தும் அம்சங்களாகும் (2 கொரி. 7:1).

***"கர்த்தரைத் தரிசிப்பதில்லை"*** – பரிசுத்தமுள்ளவர்கள் மட்டுமே கர்த்தரைக் காண்பார்கள். ஆவியினால் மறுபடியும் பிறந்தவர்கள் மட்டுமே பரிசுத்த முள்ளவர்கள். அவர்கள் கர்த்தரைக் காண்பார்கள் (1 யோவா. 3:3) .

தொடர்ந்து 15,16 வசனங்களில் விசுவாசிகள் கவனத்திற் செலுத்த வேண்டிய மூன்று காரியங்கள் உள்ளன. அவைபற்றிய எச்சரிப்பும் கொடுக்கப்பட்டுள்ளன.

1. தேவ கிருபையை இழந்து போகாதபடி எச்சரிக்கையாயிருங்கள்.

2. யாதொரு கசப்பான வேர் முளைத்தெழும்பி, தீட்டுப்படுத்தாதபடி எச்சரிக்கையாயிருங்கள்.

3. வேசிக் கள்ளனாக இராதபடி எச்சரிக்கையாயிருங்கள்.

*1) "தேவ கிருபையை இழந்து போகாதபடி எச்சரிக்கையாயிருங்கள்" (12:15)*

"விசுவாசத்திலிருந்து வழுவி விடாதபடி ஜாக்கிரதையாயிருங்கள்." அப்போஸ்தலனாகிய பவுல் தேவ கிருபையைக் குறித்துப் பன்முறை கூறியுள்ளான். ". . . கிருபையை நீங்கள் விருதாவாய்ப் பெறாதபடிக்கு" (2 கொரி. 6:1), "கிருபையினின்று விழுந்தீர்கள்" (கலா. 5:4), கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள் (எபே. 2:5). நான் கிருபையினாலே இருக்கிறேன் (1 கொரி. 15:10) என்பவைகள் அவற்றுள் சில. கிருபையின் பல்வேறு அம்சங்களை நாம் கவனித்துக்கொள்ளுதல் நன்மை பயக்கும்.

நாம் கிருபையினாலே இரட்சிக்கப்பட்டோம் (எபே. 2:5). அது கிரியையினாலே உண்டாயிருந்தால் அது கிருபையாயிராது (ரோமர் 11:6). இதனையே கிருபையினாலான இரட்சிப்பின் போதனை என்று அழைக்கிறோம். இந்த இறை போதனையினின்று விலகுவதையே "தேவ கிருபையை இழந்து போதல்" என்னும் வாசகம் குறிக்கிறது.

*2) யாதொரு கசப்பான வேர் முளைத்தெழும்பி . . . தீட்டுப்படுத்தாதபடி எச்சரிக்கையாயிருங்கள் . . ."*

அந்நிய தேவர்களை (புறவினத்தார் பெயர் சொல்லிக் கூப்பிடுகிற தேவர்கள்) வழிபடுவதைக் குறித்துப் பேசுகையில், நஞ்சையும் எட்டியையும், முளைப்பிக்கிற வேர் என்று மோசே குறிப்பிட்டுள்ளான் (உபா. 29:17, 18). இவ்வாறு கசப்பும் எட்டியும் முளைப்பிக்கிறதற்கு நாம் சீமோனை ஓர் உதாரணமாக எடுத்துக்காட்டலாம் (3:12; அப். 8:23).[93]

பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலுக்கு அளித்துள்ள முன்னறிவித்தலை இது காட்டுகிறது. நஞ்சையும் எட்டியையும் முளைப்பிக்கிற வேர் (உபா. 29:17, 18) என்பது அன்னிய தேவர்களைப் பின்பற்றி வழிபடுவதற்குரிய இதயக் கடினம் உள்ளோரைப் பற்றியதாகும். உலகத்தாரின் சீர்கேடான வாழ்க்கையோடு ஒத்துவாழ விரும்புகின்ற கிறிஸ்தவர்களுக்கெதிரான முன்னறிவித்தலுமாகும். கிருபையை விட்டுப் பின்னடைதல் நேர்ந்தாலன்றி உலக ஆசாபாசங்களுக்கு

இறங்கிச் செல்ல இயலாது. அப்படிச் செல்கிறவன் ஆன்மீக வட்டாரத்தில் கலகத்தை ஏற்படுத்துகிறான். முதலில் தாங்கள் அருவருப்புகளில் இறங்கி. பின்னர் பிறரையும் அதில் இழுத்துச்செல்வர்.

*3) "வேசிக்கள்ளனாக இராதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்"*

சிலை வழிபாட்டைக் குறித்து இங்கு குறிப்பிடுகையில் அது தகாத அருவருப்பான,பால் உறவுச் சீர்கேடாக (Sexually immoral) சித்திரிக்கப்பட்டுள்ளது. எபிரெய நிருப ஆசிரியர் அதையே பொருள் கொள்ளுகிறார் என்பது ஒரு சாராரின் கருத்து. மற்றொரு சாரார், ஏசா விபச்சாரம் செய்ததாகத் திருமறையிலெங்கேயும் கூறவில்லை என்ற கருத்துடையவராவர்.

ஆனால் வேறு சில வேத விரிவுரையாளர்கள் இக்கருத்தை நிராகரிக்கின்றனர். அவர்கள், ஏசா, ஏத்தியரின் புதல்வியரைத் திருமணம் செய்ததை, தகாத உறவெனக் கூறுகின்றனர்.[94]

ஏசா என்பதற்கு ரோமமுள்ளவன் என்று பொருள் (ஆதி. 25:28-34; 27:1-39), மற்றும் சில வேதபகுதிகளினின்று, ஏசாவின் வாழ்க்கையை நாம் அறிந்து கொள்ள முடியும். ஈசாக்கின் இரட்டைப் பிள்ளைகளில் மூத்தவன் ஏசா. ஒரு நாள் பசியோடு வீட்டிற்கு வந்த ஏசா, தன் சகோதரன் சமைத்துக் கொண்டிருந்த ஒரு வாய்ச் சிவப்புப்பயற்றங் கூழுக்காகத் தன் தலைப் பேற்றுரிமையை விற்றுப் போட்டான். அதினிமித்தம் உலகச் சொத்துகளுக்குமட்டுமின்றி, குடும்பத்திற்குரிய ஆசாரியத்துவம் போன்ற ஆவிக்குரிய மேலான தலைச்சன் பொறுப்புக்களையும் இழந்துவிட்டான். அது மட்டுமா? மேசியாவின் தலைமுறைப் பட்டியலில் பெயர் சேர்க்கப்படுதல் என்னும் பேராசீர்வாதத்தையும் அவன் இழந்துவிட்டான்.[95]

யூதர்களின் பழங்கால இலக்கிய நூல் ஒன்றில் ஏசா அநேக பாவங்களைச் செய்துள்ளதாகக் கூயுள்ளது என்று வில்லியம் பார்க்ளே என்பார் கூறுகிறார்:

"ஏசா மாம்ச இச்சை உடையவனாக, சரீரத்தின் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கினான். இரட்டையருள் ஒருவனாகிய அவனிடம், யாக்கோபு தாயின் வயிற்றில் இருந்தபோதே அவன் குதிங்காலைப் பிடித்தவனாக இவ்வாறு கூறினான்: சகோதரரே, நம் முன் இரு உலகங்களுண்டு. மக்கள் மயமான இந்த உலகமும், இனி வரவிருக்கும் உலகமும், ஜடப் பொருள் மயமான இவ்வுலகத்திலுள்ள புசித்தல், மணம் புரிதல், மற்றும் பிள்ளை பெறுதல் போன்றவை இனி வரவிருக்கும் உலகினிலிராது. உனக்கு விருப்பமிருப்பின் இந்த ஜடப் பொருள் மயமான உலகத்தை நீ எடுத்துக்கொள்; இனி வரவிருக்கும் உலகத்தை நான் எடுத்துக் கொள்வேன். அது போலவே ஏசாவும் வரவிருக்கும் உலகத்தை

நம்பாது இந்த உலகத்தையே விரும்பினான். அது முதற்கொண்டு யாக்கோபு தலைப் பேற்றுரிமையைக் கைவசப்படுத்த ஏற்ற தருணத்தை எதிர் நோக்கிக் காத்திருந்தான்."

தனது தலைப்பேற்றுரிமையை நழுவவிட்ட ஏசா, நித்திய ஆசீர்வாதங் களையே இழந்துவிட்டான். அந்த யூத இலக்கிய நூலில் ஏசா செய்த ஐந்து பாவங்கள் சொல்லப்பட்டுள்ளன. ஒன்று, இறைவனைத் தொழுதுகொள்ளுவதில் முறைகேடு; இரண்டு குற்றமில்லாத இரத்தஞ் சிந்துதல்; மூன்று தகாத திருமணம் புரிதல்; நான்கு இனி வரவிருக்கும் உலகத்தை நம்பாமை; ஐந்து தலைப் பேற்றுரிமையை இகழ்தல்.[96]

மேற்கூறியவைகளைத் தொடர்ந்து, ஏசாவுக்கு நேர்ந்த வேதனையுடைய முடிவைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார் நூலாசிரியர்.

*"அவன் கண்ணீர் விட்டு, கவலையோடே தேடியும் மனம் மாறுதலைக் èÉí ÉñÝ«ðÉì £¡ " (12:17).*

ஏசா, ஆசீர்வாதத்தைப் பெற ஆகாதவனென்று தள்ளப்பட்டதை, எபிரெய விசுவாசிகள் நன்கறிவர். பிற்காலத்தில் ஏசா தனது தவற்றினின்று திருந்தி, தன் தவற்றை எண்ணி வருந்திக் கண்ணீர் விட்டுக் கவலையோடே தேடியும் மனம் மாறுதலைக் காணாமற் போனான். யார் மனம் மாறவில்லை? இவ்வசனத்தில் 'அவன்' யாரைக் குறிக்கிறது? ஏசாவா, ஈசாக்கா? ஏசா இம்மட்டும் கண்ணீர் விட்டுக் கதறியும் ஈசாக்கின் கல்மனதில் எவ்வித மாறுதலும் நேரவில்லை. ஆசீர்வாதங்களை – தலைப்பேற்றுரிமையை – யாக்கோபுக்கு வழங்கியதில் ஈசாக்குக்கு அனுதாபமே நேரவில்லை. இந்த வசனம், ஓர் அமெரிக்க மொழி பெயர்ப்பில், "தன் தகப்பனுடைய மனமாறுதலில் தனக்கு எந்த இடமும் இல்லாமற்போயிற்று" என்று திருப்பப்பட்டுள்ளது. அதன் பொருள் யாதெனில் தகப்பனிடம் மனம் மாறுதலுக்கு இடம் இல்லாமற்போயிற்று, இன்னொரு மொழியாக்கத்தில், "ஆசீர்வாதத்தை ஏசாவுக்குக் கொடுக்காது யாக்கோபுக்குக் கொடுத்ததைப் பற்றி ஈசாக்குக்கு அனுதாபம் தோன்றவில்லை" என்றுள்ளது. நியூள், வீஸ்ட், A. T. றாபர்ட்சன், அயன்சைடு, G. H. வாங், போன்றோர் இக்கருத்தை உடையவராவர்.

***"அவன் கண்ணீர் விட்டான்"*** – இதைப்பற்றி உளவியல் லிங்கனின் கூற்று குறிப்பிடத்தக்கதாகும். "ஏசா அழுததின் காரணம், அவன்தன் தலைப்பேற் றுரிமையை விற்றதால் வேதனைப்படவில்லை. ஆனால் அதைத்தான் நஷ்டப் படுத்தி விட்டோமே எனக் கண்ணீர் விட்டான். அவன் பாவியானதால் தனக் குரியவற்றிற்காகத் துக்கப்பட்டு அழவில்லை, மாறாக, இழப்பைச் சகித்துக் கொள்ள முடியாததினிமித்தமாகவே அழுதான்.[97] இங்கே ஈசாக்கைப் பற்றி

எதையுங் கூறவில்லை என்பதும் உண்மையே.[98] எனவே, எபிரெய விசுவாசி களும், தற்காலத்திற்குரிய நன்மைகளுக்காக எக்காலத்திற்குமுரிய பேராசீர் வாதங்களை அற்பமாக எண்ணலாகாது என்று இங்கு வலுவாக எச்சரிக்கப் படுகின்றனர். எபிரெய விசுவாசிகள் கிருபையை இழக்காமலும், கலக்கத்தை உண்டாக்குகிற கசப்பான வேரை முளைப்பிக்காமலும், ஏசாவைப் போலத் திரும்பப்பெற முடியாத தவற்றினைச் செய்யாமலும் இருக்கவேண்டு மென்பதே ஆசிரியரின் மனப்பூர்வமான வேண்டுகோளும், எச்சரிப்புமாகும்.

## 4. இரு உடன்படிக்கைகள் – ஓர் ஒப்பீடு (12:18-24)

இந்நிருபத்தின் மையச்செய்தி இங்கே இறுதி நிலைக்கு வருகின்றது. இப்பகுதியில் வையகத்திற்குரிய சீனாய் மலைக்கும், விண்ணகத்திற்குரிய சீயோன் மலைக்குமுள்ள வேற்றுமையை வர்ணச்சித்திரமாக வரைந்து காட்டுகின்றார் நூலாசிரியர். 'நடுக்கம்', 'இரக்கம்' என்னுமிரு அனுபவங்களைக் கொண்டு விளக்கும் இரு உடன்படிக்கைகளின் சிறப்பியல்புகளை விளக்கிக் கூறுகிறார் ஆக்கியோன்.[99]

### *1) பழைய உடன்படிக்கையின் தோற்றமும், நடுக்கம் மூலம் நிகழ்ந்த நிகழ்வுகளும் (12:18-21)*

*''அன்றியும், தொடக்கூடியதும், அக்கினி பற்றி எரிகிறதுமான மலை யினிடத்திற்கும், மந்தாரம், இருள் பெருங்காற்று, ஆகிய இவைகளிடத்திற்கும், எக்காள முழக்கத்தினிடத்திற்கும், வார்த்தைகளுடைய சங்கத்தினிடத்திற்கும், நீங்கள் வந்து சேரவில்லை. அந்தச் சத்தத்தைக் கேட்டவர்கள் பின்னும் தங்களுக்கு வார்த்தை சொல்லப்படாதபடிக்கு வேண்டிக்கொண்டார்கள். ஏனெனில் ஒரு மிருகமாகிலும் மலையைத் தொட்டால், அது கல்லெறியுண்டு, அல்லது அம்பினால் எய்யுண்டு சாக வேண்டுமென்று சொல்லப்பட்ட கட்டளையைச் சகிக்க மாட்டாதிருந்தார்கள். மோசேயும், நான் மிகவும் பயந்து நடுங்குகிறேன் என்று சொல்லத்தக்கதாக அந்தக் காட்சி அவ்வளவு பயங்கர மாயிருந்தது'' (12:18-21).*

சீனாய் மலையைக் குறித்து யாத்திராகமத்தில் (19:1-19; 20:18-21) நாம் காண்கிறோம். இம்மலையில் இருந்துதான் இஸ்ரவேலர்கள், மோசேயின் வாயிலாக நியாயப்பிரமாணம் என்னும் இறை திருச்சட்டத்தைப் பெற்றுக் கொண்டனர்.

இஸ்ரவேலர்கள் எகிப்து நாட்டினின்று விடுதலையடைந்த பின்பு புறப்பட்டு சீனாய் மலையை அடைந்தனர் (யாத். 19:1). அது பற்றிய பத்துக் காரியங்களை எபிரெய நிருப ஆசிரியர் இங்கே குறிப்பிடுகிறார் (யாத். 19:12-19; உபா. 4:11,12; 5:5,25).

1) இம்மலை தொடக்கூடியது. அதாவது, ஜடப்பொருள் ஆகும். ஆயினும் தொடாதே என்பது தேவ கட்டளை (12:18,20; யாத். 19:12).

2) அக்கினி பற்றியெரிந்தது (12:18; யாத். 19:18).

3) மந்தாரம் (மேகங்களால் மூடிய மந்தாரம்) காணப்பட்டது (12:18).

4) இருள் கவ்வியிருந்தது (12:18).

5) பெருங்காற்று அடித்தது (12:18).

6) எக்காள சத்தம் கேட்டது (12:19).

7) வார்த்தைகளுடைய சத்தம் (12:19), கர்த்தருடைய குரலொலியைக் கேட்ட சந்தர்ப்பம் (உபா. 5:24), இவையெல்லாம் நடுங்கவைப்பவையாகும்.

8) அந்தச் சத்தத்தைக் கேட்டவர்கள் பின்னும் தங்களுக்கு இத்தகைய வார்த்தை சொல்லாதபடிக்கு வேண்டிக்கொண்டார்கள் (12:18, 19; உபா. 5:25-27).

9) ஒரு மிருகமாகிலும் மலையைத் தொட்டால் அதுவும் சாக வேண்டும் (12:20). மலை பரிசுத்தமாகவும் தனிமையாகவும் பிரித்துவைக்கப்பட்ட ஒரு சிறப்பான இடமாக இருந்தது. அதனைத் தொடலாகாது என்பது தேவ கட்டளை. தொடுவோர் மரண தண்டனைக்கு ஆளாவார்கள் (12:20).

10) மோசேயும் பயந்து நடுங்கினான் (12:21).

*"மோசேயும் பயந்து நடுங்கினான்"* – என்று எபிரெய நிருப ஆசிரியர் எழுதியுள்ளார். ஸ்தேவானும் தனது சொற்பொழிவினில் இதனை எடுத்துக் கூறினான் (அப். 7:32). யாத். 20:18-ல் இஸ்ரவேலர்கள் பயத்தினால் பின்வாங் கியதைப் பார்க்கிறோம். அங்கே மோசே பயந்ததாகச் சொல்லவில்லை. ஆனால் பொன்னாலான கன்றுக்குட்டியை வார்ப்பித்துப் பலி செலுத்திய சந்தர்ப்பத்தில் கர்த்தர் இஸ்ரவேலர்கள் மேல் கொண்டிருந்த கோபத்திற்கும் உக்கிரத்திற்கும் மோசே பயந்திருந்தான் என்று சொல்லியுள்ளது (உபா. 9:19). யாத். 20:18-ல் இஸ்ரவேலர்கள் பயந்ததாகச் சொல்லியுள்ளது. இந்நேரம் மோசேயும் பயந்த தாக ஒருவேளை இஸ்ரவேலரின் பாரம்பரியக் கதைகளில் காணப்படலாம். இல்லையேல், எபிரெய நிருப ஆசிரியர் யாத். 20:18-ஐயும், உபா. 9:19-ஐயும் இணைத்துக் கூறியிருக்கலாம் என்பதும், சில வேத அறிஞர்களின் கணிப்பு.[100]

## *2) புதிய உடன்படிக்கையின் மேன்மைகள் (12:22-24)*

*"நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகர மாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரமான தேவ தூதர் களினிடத்திற்கும், பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின்*

*சர்வ சங்கமாகிய சபையிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளிடத்திற்கும், புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப் பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்" (12:22-24).*

இங்கு, இந்தக் கிருபையின் காலத்தில், புதிய ஏற்பாட்டு விசுவாசிகள் அடைகின்ற எட்டுவகையான அரிய காரியங்கள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

இவ்வெட்டையும் நான்கு ஜோடிகளாகப் பிரிக்கலாம்:

1. மலையும், நகரமும்.
2. தூதர்களும், சபையும்
3. நியாதிபதியும், நீதியான மனிதனும் (ஆபேல்).
4. மத்தியஸ்தரும், தெளிக்கப்பட்ட இரத்தமும்.

### *1) சீயோன் மலை*

இது எருசலேமிலுள்ள நான்கு குன்றுகளுள் ஒன்று. முன்பு சீயோன் மலை எபூசியருக்குச் சொந்தமானது. அதனைத் தாவீது பிடித்துக் கொண்டான் (2 சாமு. 5:6-9). பின்பு அது தாவீதின் நகரம் என்று அழைக்கப்பட்டது. கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி அங்கே இருந்ததினால் அது கர்த்தரைத் தொழுகிற இடமாக மாறிற்று. எனவே கர்த்தருடைய நகரம் என்றும் அதை அழைத்தனர் (2 சாமு. 6:17; 1 இராஜா. 14:21; சங். 46:4). தொடர்ந்து எருசலேம் சீயோன் என்றே அழைக்கப்பட்டது (சங். 20:2; 48:2). இந்த சீயோன் மலையினில் தான் சாலொமோன் ஆலயத்தைக் கட்டினான் (சங். 78:68,69). 'சீயோன்', தேவ பிரசன்னத்தைக் காட்டுகிறது. பழைய ஏற்பாட்டுப் பக்தர்கள் தொலைவிலேயே நின்றனர். புதிய ஏற்பாட்டுப் பக்தர்களோ, கிறிஸ்துவினிமித்தம் கிருபையால் தேவனருகினில் வந்துள்ளனர்.

### *2) ஜீவனுள்ள தேவனின் நகரமாகிய பரம எருசலேம்*

எருசலேமைச் சீயோன் என்றழைத்திருப்பினும், சீயோனில் ஆலயம் கட்டப்பட்டிருந்தாலும், எருசலேம் நகரம் என்பது, நான்கு மலைக் குன்றுகளின் மேல் கட்டப்பட்டுள்ளது என்பதை நாம் மனதிற்கொள்ள வேண்டும். அவை சீயோன், ஓபேல், அக்கிரா, பெசெத் என்றழைக்கப்படும் நான்கு குன்றுகளாகும். இங்கே நூலாசிரியர், ஆலயத்தைக் கட்டிய அந்தக் குறிப்பிட்ட ஓர் இடத்தைக் கூறியதைத் தொடர்ந்து, ஜீவனுள்ள தேவனின் நகரமாகிய எருசலேமையும் கூறியுள்ளார்.

கலாத்தியருக்கெழுதிய நிருபத்தில் பவுல் சீனாய் மலையையும், எருசலேமையும் உதாரணப்படுத்தியுள்ளான் (4:24-26).

பண்டிகைகள் ஆசரிக்கப்படும் எருசலேம் நகரத்திலே, இஸ்ரவேலர்கள் ஆண்டிற்கு மூன்று முறை வந்துசேர வேண்டுமென்பது கர்த்தருடைய கட்டளை (உபா. 16:16). அவ்விதம் பண்டிகையை ஆசரிக்கும் பொருட்டு பழைய ஏற்பாட்டுப் பக்தர்கள் பூமிக்குரிய எருசலேமில் கூடுவார்கள். ஆனால் புதிய ஏற்பாட்டு விசுவாச மக்களாகிய நாமோ, புதிய எருசலேமாகிய பரலோக பரிசுத்த நகரத்தில் என்றென்றும் குடியிருக்கும்படி அழைக்கப்பட்டுள்ளோம் (வெளி. 21:2)

### *3) தேவ தூதர்களிடத்திற்கும்*

இத்தூதர்களின் கூட்டம் எண்ணிக்கைக்கு அடங்காத கூட்டம் ஆகும் (1:14; வெளி. 5:11; 19:10; 22:9; லூக்கா 2:13).

### *4) பரலோகத்தில் பெயர் எழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சபையினிடத்திற்கும் (12:23; லூக். 10:20; வெளி. 13:8)*

பழைய ஏற்பாட்டுக் காலத்தில், கர்த்தர் இஸ்ரவேல் மக்களை ஒருமித்து, "என் மூத்த புதல்வன்" என்று கூறியுள்ளார். ஆனால் "பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்கள்" என்ற பன்மைச் சொல்லாக இங்கே சொல்லப்பட்டுள்ளது.

இங்கு சபை என்பதற்கான கிரேக்கச் சொல், புதிய ஏற்பாட்டில் மற்ற இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள *"எக்கிலிசியா"* என்பதன்று, மாறாக *"பனகுரிஸ்"* என்ற கிரேக்க வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்குப் "பண்டிகை ஆசரிக்கக் கூடுதல்" எனப் பொருள்படும்.

### *5) "யாவருக்கும் நியாதிபதியாகிய தேவ முன்னிலையில்"*

இறைவன் சர்வ லோகத்திற்கும் நீதியரசராக – நியாதிபதியாக இருக்கிறார் (ஆதி. 18:25). அவர் எல்லோரையும் நியாயம் விசாரிக்கிறவர். அவர் நீதியுள்ள நியாதிபதியாக நேர்மையாகத் தண்டிக்கிறவருமாயிருக்கிறார் (எபி. 4:13; 10:30).

### *6) பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகள்*

கர்த்தராகிய இயேசுவின் கல்வாரிப் பலியை விசுவாசிக்கிறவன் மட்டுமே என்றென்றைக்கும் பூரணப்படுத்தப்படுவான் (10:14). பழைய ஏற்பாட்டுப் பக்தர்கள் நம்மோடு கூட இணைந்தே பூரணராக்கப்படுவர் (11:40). எனவே பூரணராக்கப்பட்ட நீதிமான்கள் என்பது புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களையே காட்டுகிறது என்கின்றனர், வேத விரிவுரைஞர்களாகிய நியூர், இங்கிளீஷ் போன்றோர்.

### *7) புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தரராகிய இயேசுவினிடத்திற்கும் (12:24)*

நியாயப் பிரமாணம் மோசேயின் மூலமாகக் கொடுக்கப்பட்டது. அவருடைய பிறப்பில் இப்பெயர் அவருக்குச் சூட்டப்பட்டது (மத். 1:21). கிருபையும், சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின (யோவா. 1:17). ஆகவே புதிய ஏற்பாட்டின் மத்தியஸ்தர் இயேசு கிறிஸ்துவேயாவார் (7:22; 8:6,8; 9:10, 15). இவர் உலகத்தாரால் புறக்கணித்துத்தள்ளப்பட்டவர். விசுவாசிக்கிற நமக்கோ விலையேறப்பட்டவர்.

*"இயேசு"* (1 தீமோ. 2:5) – இந்தச் சொல் இயேசு கிறிஸ்துவின் மனிதத் தன்மையைக் காட்டுகிறது. அவர் ஒருவரே இறைவனுக்கும் மனிதர்களாகிய நமக்குமிடையே நடுவராக இருந்து மத்தியஸ்த ஊழியத்தை நிறைவேற்றியவர்.

### *8) நன்மையானவைகளைப் பேசுகிற. . . தெளிக்கப்படுகிற இரத்தம் (12:24)*

காயீனால் கொலை செய்யப்பட்ட ஆபேலின் இரத்தம், இது பழிவாங்கும்படி முறையிட்டுக்கொண்டிருக்கிறது (ஆதி. 4:10). "ஆபேலின் இரத்தத்தைப் போலன்றி நன்மையானவைகளுக்காகக் குரலெழுப்பும் இயேசுவின் இரத்தத்தினால் தெளிக்கப்பட்டிருக்கிறீர்கள்" (TNBCLC மொழியாக்கம்).

"மற்றெல்லாவற்றைக் காட்டிலும் நன்மையானவற்றைப் பேசுகிற தெளிக்கப்படும் இரத்தம்."

இது "இயேசுவின் இரத்தம்" (10:20), "கிறிஸ்துவினுடைய இரத்தம்" (9:14), "நித்திய உடன்படிக்கையின் இரத்தம்" (13:20) என்று இந்நிருபத்தில் சொல்லியிருக்கிறது.

ஆபேலின் இரத்தம், பழிவாங்கும் இரத்தம். அது எவருக்குமே நன்மை கொண்டுவராது. ஆயினும் யூதர்கள் அதில் பெருமைபட்டுக்கொண்டனர். அப்படியானால் இயேசு கிறிஸ்துவின் திரு இரத்தமோ எல்லாப் பாவத்தினின்றும் நம்மைத் தூய்மைப்படுத்துகிறது. இவையாவும் புது உடன்படிக்கையின் மூலம், புதிய ஏற்பாட்டு விசுவாசிகள் பெற்றுள்ள எண்வகைச் சிறப்புகள் ஆகும்.

## ஐந்தாவது எச்சரிக்கை (12:25,26)

*"பேசுகிறவருக்கு நீங்கள் செவி கொடுக்கமாட்டோமென்று விலகாதபடி எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில், பூமியிலே பேசினவருக்குச் செவி கொடுக்க மாட்டோமென்று விலகினவர்கள் தப்பிப்போகாமலிருக்க, பரலோ*

*கத்திலிருந்து பேசுகிறவரை நாம் விட்டுவிலகினால், எப்படித் தப்பிப் போவோம். அவருடைய சத்தம் அப்பொழுது பூமியை அசையப்பண்ணிற்று, இன்னும் ஒருதரம் நான் பூமியை மாத்திரமல்ல, வானத்தையும் அசையப் பண்ணுவேன் என்று இப்பொழுது வாக்குத்தத்தஞ்செய்திருக்கிறார்'' (12:25,26).*

### *1) பேசுகிறவருக்கு. . . விலகாதபடி எச்சரிக்கையாயிருங்கள் (12:25)*

பிதாவாகிய தேவன் பேசுகிறார் (1:1; ஆதி. 12:7; 15:1).

அவர் திருமகன் இயேசு கிறிஸ்து மூலமாய் பேசுகிறார் (1:2).

தூய ஆவியானவர் பேசுகிறார் (3:7; வெளி. 2:11, 27,29; 3:6,11,13,22).

சீனாய் மலையில் தூதர்கள் வாயிலாக இறைவன் பேசியதற்கு, செவி கொடாமற் போனவர்கள் தக்க தண்டனையைப் பெற்றார்கள். அப்படியானால் பரலோகத்திலிருந்து, வந்த தம் திருக்குமாரன் மூலம் இன்று பேசுவதைப் பற்றி நாம் கவலையற்றிருப்போமானால் எப்படித் தண்டனைக்குத் தப்பித்துக் கொள்வோம் (2:1-4).

*"அவருடைய சத்தம்... பூமியை அசையப் பண்ணிற்று"* – நியாயப் பிரமாணத்தை வழங்குகையில் சீனாய் மலை முழுவதும் மிகவும் அதிர்ந்தது (யாத். 19:16; 20:10). "சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார், கொஞ்சக் காலத்துக்குள்ளே இன்னும் ஒருதரம் நான் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் வெட்டாந்தரையையும் அசையப்பண்ணுவேன்" (ஆகாய் 2:6; 2 பேரு. 3:10-12).

*ஐந்தாவது எச்சரிக்கை முற்றுப்பெறுகிறது.*

## 5. புதிய உலகத்தோற்றம் - "இன்னும் ஒரு தரம்" (12:27-29)

*"'இன்னும் ஒரு தரம்' என்கிற சொல்லானது அசையாதவைகள் நிலைத்திருக்கத் தக்கதாக அசைவுள்ளவைகள், உண்டாக்கப்பட்டவைகள் போல மாறிப்போம் என்பதைக் குறிக்கிறது. ஆதலால் அசைவில்லாத இராஜ்யத்தைப் பெறுகிறவர் களாகிய நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக் கொள்ளக்கடவோம். நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே"(12:27-29)!*

*மாறிப்போம்* – படைத்தவை அனைத்தும் அசைந்து அழிந்துபோம். அசையாதவையே நிலைத்திருக்குமென்பது ஒரு பொதுவான கூற்றாகும் அசையாதவை என்று ஒன்றிருந்தால் அதுவே நிலைத்திருக்கும். ஆனால்

அசையாதவை என்று ஒன்று எங்கேயுமில்லையே. கண்களுக்குப்புலப்படா தவையாக இருப்பினும் எல்லாமே இதோ இரு நிலைகளில் அசையத்தானே செய்கின்றன.

| பழையவற்றின் மறைவு | புதியவற்றின் தோற்றம் |
|---|---|
| பழைய (இன்றைய) பூமி ஒழிந்துபோம் (வெளி. 21:1). | புதிய பூமி தோன்றும் (12:28; ஏசா. 65:17). |
| பழைய உடன்படிக்கை மாறிப்போயிற்று. | புதிய உடன்படிக்கை தோன்றிற்று. |
| பழைய பலி முறைகள் மாறிப்போயின. | புதிய ஒரே பலி நிறைவேறி முடிந்தது. |
| பழைய ஆலயம் அழிந்துவிட்டது. | புதிய ஆலயம் தோன்றிற்று. |
| பழைய தலைமை தேவாலய ஆசாரிய முறை மாறிப்போய் விட்டது. | புதிய தலைமை ஆசாரியர் "மெல்கிசேதேக்கின் முறை" தோன்றியுள்ளது. |
| பழைய ஆசாரியன் மாறி விட்டான். | புதிய தலைமை ஆசாரியர் என்றும் மாறாதவர். |

### *நாம் செய்ய வேண்டுவதென்ன? (12:28)*

"நாம் நன்றியுள்ளவர்களாய் இருப்போம், நன்றியுணர்வோடும், இறைப் பற்றோடும் அச்சத்தோடும் கடவுளுக்கு, உகந்த முறையில் அவருக்கு வழிபாடு செய்வோம். ஏனெனில் நம் ஆண்டவர், அழிக்கும் நெருப்பைப் போன்றவர்" (திருவிவிலியம் பொது மொழியாக்கம்).

அ. நாம் பயத்தோடும் பக்தியோடும் நடக்க வேண்டும்

ஆ. பிரியமாய் ஆராதனை செய்ய வேண்டும்.

இ. கிருபையைப் பற்றிக்கொள்ள வேண்டும்.

*"நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறார்"* – "நம் கடவுள் சுட்டெரிக்கும் நெருப்பாக இருக்கிறார்" (R.C. மொழியாக்கம்) (உபா. 4:24; ஏசா. 10:17; 33:14 காண்க).

"கிருபையைப் பற்றிக் கொள்ளுவோருக்கு இறைவன் தயவும் இரக்கமும் உள்ளவராயிருக்கிறார். *நீதியால்* தண்டித்தாலும். *அன்பினால்* அரவணைக் கின்றார். கிருபையினின்று வழுவுவோருக்கு அவர் அக்கினியைப் போலிருக்

கிறார். அவரது மகிமையும், தூய்மையும், பாவத்திற்கு விரோதமான கோபமும் இதில் வெளிப்படுகிறது."

## இறுதி அன்பின் அறிவுரை (13:1-25)

இந்நிருபத்தின் முக்கிய செய்திக்கோவை 12 -11-ம் அதிகாரத்துடன் முற்றுப் பெறுகிறது. இந்த 13-ம் அதிகாரமானது, ரோமர் நிருபத்தின் 15,16 அதிகாரங் களைப் போல் இருக்கிறது என்கிறார் வெஸ்ட்காட் என்பார்.

இங்கே நூலாசிரியர் சில முக்கியமான குறிப்புகளை நமக்கு அறிவுறுத்து கின்றார். மொழி நடையில் மாறுதல் இல்லையெனினும், சிறப்பு அம்சமாகச் சிலவற்றைக் குறிப்பிடுகையில் நாமிங்கே அதற்குரிய ஓர் அடையாளத்தைப் பார்க்கின்றோம்.[101]

வேத வல்லுநராகிய வெஸ்ட்காட் இவ்வதிகாரத்தை மூன்று செய்யுள் நடையாகப் பிரித்துள்ளார்.[102]

1) சமூக ரீதியான கடமைகள் (12:1-6).

2) சமய ரீதியான கடமைகள் (12:7-17).

3) ஆக்கியோனின் தனிப்பட்ட போதனைகள் (12:18-25).

## I. உடன் சகோதரர்களோடுள்ள நம் கடமைகள் பற்றிய ஓர் அறிவுரை (13:1-6)

*"சகோதர சிநேகம் நிலைத்திருக்கக் கடவது. அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள். அதினாலே சிலர் அறியாமல் தேவ தூதரையும் உபசரித்த துண்டு. கட்டப்பட்டிருக்கிறவர்களோடே நீங்களும் கட்டப்பட்டவர்கள் போல அவர்களை நினைத்துக்கொள்ளுங்கள். நீங்களும் சரீரத்தோடிருக்கிறவர் களென்று அறிந்து, தீங்கநுபவிக்கிறவர்களை நினைத்துக் கொள்ளுங்கள், விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாகவும், விவாக மஞ்சம் அசுசிப் படாததாயுமிருப்பதாக, வேசிக்கள்ளரையும், விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார். நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள். நான் உன்னை விட்டு விலகு வதுமில்லை. உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக் கிறாரே. அதினாலே நாம் தைரியங்கொண்டு கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனிதன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லலாமே" (13:1-6).*

நடைமுறை வாழ்க்கையில் நாம் கடைபிடிக்க வேண்டிய ஐவகைக் காரியங்களை ஆசிரியர் இங்கே சுட்டிக் காண்பிக்கின்றார்.

## *1. சகோதர அன்பில் நிலைத்திருங்கள் (13:1)*

*"பிலதெல்பிய"* என்ற கிரேக்கச் சொல்லின் பொருளே "சகோதர அன்பு" ஆகும். இத்தொடர் புதிய ஏற்பாட்டில் ரோமர் 12:10; 1 தெச. 4:9,10; 1 பேது. 1:22; 2 பேது. 1:7 ஆகிய வசனங்களில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு யூதன் இன்னொரு யூதனைச் சகோதரன் என்றே எண்ணுகின்றான் (உபா. 23:19). அவ்வண்ணமே புதிய ஏற்பாட்டிலும் ஆவிக்குரிய கிறிஸ்தவ விசுவாசிகள் அனைவருமே ஒருவருக்கொருவர் – சகோதரர்கள் – உடன் பிறப்புகளாவர். எனவே இந்தச் சகோதர அன்பில் நிலைத்திருத்தல் மிக அவசியம். நாம் சகோதரர்களாக இருக்கும்போது மட்டுமே கிறிஸ்தவர்களாக இருக்க இயலும் என்கிறார் கால்வின். "சகோதர அன்பு அதன் உண்மையான ஒளியிலும் எழிலிலும் இன்று பூமியில் காண்பதரிது" என்று ஜாண் ஓவென் என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

## *2. விருந்தோம்பலை மறவாதிருங்கள் (13:2)*

யூதர்களும் புறவினத்தாரும் விருந்தோம்பலில் அதிக ஆர்வங்காட்டினர். புதிதாய் வருபவரை உணவு முதலியவற்றால் உபசரிப்பது, மனித சமுதாயத்தின் சிறப்பான குணாதிசயமாகும். கிரேக்கத் தேவனாகிய ஸியூஸை "அந்நியர்களின் பாதுகாவலர்" (Zeus, the patron of strangers) என்றழைப்பார்கள். அந்நியரை உபசரித்தல் என்பது முற்காலத்தில் மட்டுமின்றி எக்காலத்திற்கும் இன்றியமையாத தேவையாகும்.[103]

முதற் நூற்றாண்டில் கிறிஸ்தவ விசுவாசிகள் அருட் செய்தியை அறிவிப்பதற்கென்றோ, துன்புறுத்தல்கள் நிமித்தமோ மற்றும் பிற அலுவல்களினிமித்தமோ பயணப்படுகையில், அவர்களை ஏற்றுக்கொண்டு உபசரிக்க வேண்டியது, அந்தந்த இடத்தைச் சார்ந்த விசுவாசிகளின் பாங்காக இருந்தது (ரோமர் 12:13; 1 பேது. 4:9; 3 யோவான் 5). சபையின் மூப்பர்களிடம் காணப்பட வேண்டிய நல்லியல்புகளில் இந்த விருந்தோம்பல் மிக முக்கியமான தொன்றாகும் (1 தீமோ. 3:2; தீத்து. 1:8).

***"சிலர் அறியாமல் தேவ தூதரையும் உபசரித்ததுண்டு"*** – அதாவது தங்கள் இல்லத்திற்கு வருகை தந்துள்ளோர் தேவ தூதர்கள்தாம் என்று அறியாதிருந்தாலும், அவர்களையும் அன்புடன் உபசரித்தனர். அவர்கள் அதற்கான ஆசீர்வாதங்களையும் பெற்றனர். இங்கே, ஆபிரகாமும் தேவ தூதரையும்

உபசரித்ததாகக் குறிப்பிட்டுள்ளதை ஞாபகப்படுத்திக் கொள்க (ஆதி. 18:2-8); லோத்தும் அவ்வாறே உபசரித்ததுண்டு (ஆதி. 19:1-3).

பொதுவாகக் கிறிஸ்தவர்கள் விருந்தோம்பலில் அதிக ஆர்வங்காட்டு கின்றனர் என்பது மகிழ்ச்சிக்குரியதொன்றாகும்.

### *3. சிறைப்பட்டுள்ளவர்களோடும், தீங்கனுபவிக்கிறவர்களோடும் நீங்களும் சிறைப்பட்டுத் தீங்கு அனுபவிக்கிறவர்களாக நினைத்துக் கொள்ளுங்கள் (13:3)*

கிறிஸ்தவர்களுள் சிலர் காவலில் வைக்கப்பட்டு, தீங்கும் அநுபவித்து வந்தனர். அப்படித் தீங்கநுபவிப்போரை நினைத்துக்கொள்ள வேண்டு மென்கிறார் ஆசிரியர் (10:32-33). "தீமோத்தேயு விடுதலையாக்கப்பட்டான்" என்று இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது (13:23). இதனைச் சில வேத அறிஞர்கள் சிறையிலடையப்பட்டு, பின்னர் விடுதலையாக்கப்பட்டான் என்றே எண்ணு கின்றனர். அப்படிப் பொருள் கொள்ளுவோமாயின், நாமும் அதே மன நிலை யுடையோராயிருந்தால்தான் தீங்கனுபவிப்போரிடம் பரிவிரக்கங்காட்ட இயலும். ஆதித்திருச்சபை சிறையிலடைக்கப்பட்டோருக்காக அன்றாடம் மன்றாட்டை ஏறெடுத்து வந்தது (அப். 12:5) .

"கிறிஸ்துவினிமித்தம், கிறிஸ்தவ விசுவாசிகளில் ஒருவர் காவலிலோ, துன்பத்திலோ, இருப்பதாகக் கேட்கநேரின் ஏனைய விசுவாசிகள் அவர் களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதுடன், அவரைச் சிறையினின்று விடுவிக்கக் கூடுமாயின் அதனையுஞ் செய்தனர்." என்று, சிறந்த சொற்பொழி வாளராகிய *அரிஸ்டைடிஸ் (Aristides)* கூறியுள்ளதாக, *வில்லியம் பார்க்ளே* என்பார் கூறியுள்ளார். இவ்விடத்தில் ஆண்டவர் கூறியுள்ள மத்தேயு 25:43-ம் வசனத்தை நினைவுகூர்வோமாக.[104]

### *4. திருமணம் அனைவருக்குள்ளும் கனமுள்ளதாய் இருப்பதாக (13:4)*

"திருமணத்தை அனைவரும் உயர்வாக மதியுங்கள், மணவறைப் படுக்கை மாசுறாமல் இருக்கட்டும். காமுகரும், விபசாரத்தில் ஈடுபடுவோரும் நம் கடவுளின் தீர்ப்பிற்கு ஆளாவர்" (திருவிவிலியம் பொதுமெழிபெயர்ப்பு)

திருமணத்தை அனைவரும் கனமாய் எண்ணுதல் வேண்டும். திருமணம் தேவனால் நியமிக்கப்பட்டுள்ளது. பால்வினை மாசுறாமற் தூய்மையாயிருக்கவும், ஆகாத பால்வினைக்குத் தண்டனை கொடுப்பதும் இன்றியமையாத் தேவை யாகும் (1 கொரி. 6:15-17; 7:2-5). வேசிக்கள்ளரும், விபசாரக்காரரும் நியாயந் தீர்க்கப்படுவர்.

"வேசி" – பணத்திற்காகத் தகாத உடலுறவை மேற்கொள்ளுகிற விலை மகள். மேலும் திருமணத்திற்கு முன் தகாத உடலுறவு – வேசித்தனம்.

"விபசாரம்" – (விப = மாற்று, சாரம் = நடை) தங்கள் சரீர இச்சைகளைத் தீர்த்துக்கொள்ளும்பொருட்டு மகளிர் பிற ஆடவரோடோ, ஆடவர் பிற மகளிரோடோ, தீய உறவு கொள்ளுதல், அல்லது சோரம் போகுதல். இது பணத்திற்காக அன்று தகாத இச்சையான தாகத்தைத் தணிப்பதற்காகவே எனலாம்.

திருமணத்திற்கு பின் – தகாத உறவு – விபச்சாரம் என்பதாம்.

"ஹில்லேல் (Hillel) என்னும் சமயப் போதகர், யூதர்களுக்கிடையே திருமண ரத்து செய்வதை அதிகமாக ஊக்குவித்தார்."[105]

இயேசு பெருமான் அத்தகைய பேர்வழிகளைக் கண்டித்துள்ளார் (மத். 19:4). இல்வாழ்க்கையைச் சீரழிப்போரையும் சோரம் போவோரையும், இறைவன் நியாந்தீர்ப்பார் (1 தெச. 4:6).

திருமறை நெறிமுறைகட்கு எதிராக, இல்வாழ்க்கையைச் சீர்குலைப்பது பெருத்த அவமானச் செயலாகும்; தண்டனைக்குரியதுமாகும்.

## *5. பொருளாசையை விட்டு விலகி வாழுங்கள் (13:5)*

பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது (1 தீமோ. 6:10). ஆகவே விசுவாசிகள் பண ஆசையை விட்டு விலக வேண்டும். இருப்பதைக்கொண்டு சிறப்புடன் வாழும் இலக்கணம் படித்தவனே மெய் விசுவாசி. போதுமென்ற மனமே, பொன்செய் மருந்து ஆகும். இச்சிந்தையே நமக்கு அவசியம் (1 தீமோ. 6:8; பிலி. 4:11). பொருளாசைக்காரனுக்குக் குற்ற உணர்வு ஏற்படுவது அரிது. பொருளாசைக்காரன் எந்தப் பாவத்தையும் அறிக்கையிடுவான். ஆயின், பொருளாசை என்னும் பாவத்தை ஒப்புக்கொள்ளான்.

"நமது வாழ்க்கை வசதியை இன்னுங்கொஞ்சம் செம்மைப்படுத்த வேண்டுமென்ற விருப்பமோ, அதற்கென நாம் கையாளும் நியாயமான வழிமுறைகளோ இதற்கெதிரல்ல, நமது வாழ்க்கையின் தேவைகளைப் புறக்கணிப்பதோ, உலகினில் நமக்கு அனுமதிக்கப்பட்டுள்ள தேவையான காரியங்களிலுள்ள வெறுப்போ, மெய்யான மன நிறைவு அல்ல. கர்த்தரே நமது உரிமை எனவும், அவர் நமக்குத் தருபவையே உத்தமம் எனவும், அதுவே போதும் என்ற எண்ணத்தில்தான் மெய்யான மன நிறைவு அமைந்துள்ளது. பணத்தைப் பற்றிய தகாத விருப்பத்திற்கு எதிரானதே இது" – முனைவர் பிரிவுண்.

சபை மூப்பருக்கு அவசியம் இருக்க வேண்டிய நல்லியல்புகளில் மற்றொன்று, பண ஆசையற்றிருப்பதாகும் (1 தீமோ. 3:3).

***நான் ஒருபோதும் உன்னைக் கைவிடுவது இல்லை.***

"நான் ஒரு போதும் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை." இது பழைய ஏற்பாட்டு முன்னோர்களுக்கு அளித்த உறுதிமொழியாகும். முதலில் மோசேயிடமும் (உபா. 31:8), பின்பு யோசுவா விடம் (யோசுவா 1:5) கர்த்தர் இத்தகைய வாக்கை நல்கியுள்ளார். அதினாலே நாம் தைரியங்கொண்டு கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனிதன் எனக்கு என்ன செய்வான் என்று திடமனதுடன் சொல்லலாமே. இதற்குச் சமமான ஒரு வசனம் சங்கீதம் 118:6-ல் காண்கிறோம். ரோமருக்கெழுதிய நிருபத்திலும் இதன் அலையோசையைக் கேட்கிறோம் (ரோமர் 8:31).

## II. ஆவிக்குரிய நமது கடமைகள் பற்றிய அறிவுரை (13:7-21)

### 1. நடத்தினவர்களை. . . பின்பற்றுங்கள் (13:7,8)

*"தேவ வசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள். இயேசு கிறிஸ்து, நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்" (13:7,8).*

சமூக ரீதியான கடமைகளை நினைவூட்டிய ஆசிரியர், இப்பொழுது நமது கவனத்தை ஆவிக்குரியக் கடமைகளுக்குத் திருப்புகிறார்.

***'நடத்தினவர்கள்'*** – ஆவிக்குரிய நடத்துநர்களைக் குறித்து இதே அதிகாரத்தில் மேலும் இருமுறை சொல்லப்பட்டுள்ளது. நடத்துநர்கள் என்பது. தங்களை எஜமான்களாக எண்ணி ஆள்வோரைக் குறிப்பதன்று. கற்பித்து, அன்புகாட்டி, அரவணைத்து, ஆற்றித் தேற்றி, ஆக்கமும் ஊக்கமும் அளித்து, முன்னேற்றப் பாதைக்கு நடத்திச் செல்லுபவரையே இது குறிப்பதாகும். எபி ரெயக்கிறிஸ்தவர்களை முதற்கண் இரட்சிப்புக்குள் நடத்தி, விசுவாசத்திலே உறுதிப்படுத்தியவர்கள், காலமாகி விட்டனர் (2:3; 13:7); ஆனாலும் நிகழ் காலத்தில் நடத்துவோர் சிலர் உயிரோடுள்ளனர் (13:17, 24).[106]

அவ்வாறு எபிரெய விசுவாசிகளைத் துவக்கத்தில் இரட்சிப்புக்குள் நடத்தியவர்களையும், நிகழ்காலத்தில் விசுவாசப் பாதையில் நடத்துகிறவர் களுமாகிய இருதரப்பினர்களையும் இவ்வதிகாரத்தில் நாம் பார்க்கின்றோம்.

***அவர்களுடைய நடக்கையின் முடிவை. . . சிந்தித்துப் பின்பற்றுங்கள்***

விசுவாசத்தில் உறுதியும், உண்மையுமுள்ளவர்களாய் சாவு வரையிலும் நிலைத்திருந்து, இரத்தச் சாட்சிகளானவர்களை இது குறிப்பதாயிருக்கலாம்.

ஸ்தேவானையும், யாக்கோபையும் போல (அப். 7:59,60; 12:2) துவக்கத்தில் எபிரெயக் கிறிஸ்தவர்களை நடத்தியவர்களும், துன்புறுத்தப்பட்டு தேவ சாட்சிகளாக மரித்திருக்கலாம். அவ்வண்ணம், தேவ வசனத்தினிமித்தமும், தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்படும் வரையிலும் அவர்கள் காட்டிய மெய்விசுவாசத்தையும், முன்மாதிரியையும், நாம் பின்பற்ற வேண்டு மென்கிறார் நூலாசிரியர்.

## *"இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்" (13:8)*

இயேசு கிறிஸ்து என்ற பெயரை இந்நூலாசிரியர் மிக அரிதாகவே பயன் படுத்தியுள்ளார் (10:10; 13:8). இப்பூமியில் உடனிருக்கும் நடத்துநர்களைப்பற்றிச் சொல்லிய பின்பு, மனித இனத்தின் தன்னிகரற்ற தனிப்பெரும், ஆவிக்குரிய அதிபதியை ஆசிரியர் சுட்டிக்காண்பிக்கின்றார். பூமிக்குரிய நடத்துநர்கள், தற்காலத்திற்குரியவர்கள், அவர்கள் காலமாகிக் கடந்து செல்வர்; ஒருசிலர் சென்றும் விட்டனர். ஆனால் கிறிஸ்து பெருமானோ காலங்களை உருவாக்கி யவர். காலவரையறையற்று எக்காலத்திலும், அவர் மாறதவராயிருக்கிறார்.

*"நேற்றும் இன்றும் என்றும்"* – இதனைக் கருவாகக் கொண்ட பல வசனங் களை நாம் திருமறையில் காண முடியும். 'நேற்றும்' என்பது பழைய ஏற்பாட்டுக் காலத்தையும், 'இன்றும்' என்பது அருட்செய்தியை அறிவிக்கின்ற கிருபையின் காலத்தையுங் காட்டுகின்றது – கால்வின் .

நாளை என்பது என்றென்றும் ஆண்டவரோடு இருக்கப்போகும் நீடு காலமாகும்.

இயேசு கிறிஸ்துவின் (மனித உருவெடுத்த) திருப்பணியோடு இதைச் சம்பந்தப்படுத்திக் கூறுகையில், 'நேற்று' – ஒரே பலியினாலே பாவ மன்னிப்பை ஏற்படுத்தினார். 'இன்று' – கிருபாசனத்தில் வீற்றிருக்கிறார்.

"நேற்று (ஆதியிலே) தேவ ரூபமாயிருந்தார் (பிலி. 2:6). இன்று அவர் மனித சாயலானார் (பிலி. 2:7). ஆதியிலே இருந்த தேவ இயல்போடு மனித இயல் பையும் பிரிக்க இயலாத வண்ணம் அவர் ஏற்றுக்கொண்டார். மரணத்தின் அனுப வத்திற்கும், மரண மண்டலத்திற்கும் அவர் வருகை தந்தார். உயிர்த்தெழுந்தவர் – பரமேறி பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்" – *G.H. வாங்.*

மாந்தரெல்லாரும் மாறி விடுபவர்களே! மாட்சிமையுள்ள இறை இயேசுவோ என்றென்றும் மாறாதவராயிருக்கிறார் (சங். 102:27; ஏசா. 48:12).[107]

நேற்று இயேசு கிறிஸ்து பலியானார் (5:7); இன்று தலைமை ஆசாரியராக இறை முன்னிலையில் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார் (4:15; 7:25;

1 யோவான் 2:1). அவருடைய ஆசாரியத் திருப்பணி என்றும் மாறாதது (7:24).[108] நாளை மீண்டும் அவர் வந்து நம்மைத் தம்முடன் சேர்த்துக்கொள்வார்!

## 2. அந்நிய போதனைகள் (13:9)

*"பலவிதமான அந்நிய போதனைகளால் அலைப்புண்டு திரியாதிருங்கள். போஜன பதார்த்தங்களினாலல்ல. கிருபையினாலே இருதயம் ஸ்திரப்படுகிறது. நல்லது; போஜன பதார்த்தங்களில் முயற்சி செய்கிறவர்கள் பயனடைய வில்லையே" (13:9).*

இது நியாயப்பிரமாண சம்பந்தமான, தொன்றுதொட்டு வந்துள்ள வழக்கங் களைக் குறிப்பதாகும். கிருபையை விட்டு (கலா. 1:6-9), மனிதருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதனையாகிய பலவிதக் காற்றி னாலே அலைகளைப்போல அடிப்பட்டு அலைகிறவர்கள் (எபே. 4:14). முதல் நூற்றாண்டிலிருந்தே இத்தகைய அந்நிய போதனைகளாகிய புயற்காற்றுகள் திருச்சபைக்குப் பெரும் சவாலாகவே இருந்துள்ளன. எனவே திருச்சபை எக்காலத்திலும் இக்காரியத்தில் மிக எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

***"போஜன பதார்த்தங்களில் பலனடையவில்லையே"*** – உணவு பற்றிய முறைமைகளினாலன்று, கிருபையினாலே உள்ளம் உறுதிப்படுவதே நல்லது. உணவு பற்றிய முறைமைகளினால் ஆன்மீக ஈடேற்றமோ, உள்ளத்தின் உறுதிப் பாடோ அடைவது இயலாத காரியம். கிறிஸ்துவை மறுத்துவிட்டுத் திருச்சட்டத் தின்படியான உணவு பற்றிய முறைமைகளில் பின்னிட்டுத் திரும்பிச் செல்லுவது பயனற்றதாகும் (ரோமர். 14:14,15; 1 கொரி. 6:13).

## 3. பலிபீடமும் பலிகளும் (13:10-16)

### *1) கிறிஸ்துவின் பலி (13:10,11)*

*"நமக்கு ஒரு பலிபீடமுண்டு, அதற்குரியவைகளைப் புசிக்கிறதற்குக் கூடாரத்தில் ஆராதனை செய்கிறவர்களுக்கு அதிகாரமில்லை. ஏனென்றால், எந்த மிருகங்களுடைய இரத்தம் பாவங்களினிமித்தமாகப் பரிசுத்த ஸ்தலத் துக்குள் பிரதான ஆசாரியனாலே கொண்டு வரப்படுகிறதோ, அந்த மிருகங் களின் உடல்கள் பாளயத்துக்குப் புறம்பே சுட்டெரிக்கப்படும்" (13:10,11)*

***"நமக்கு ஒரு பலிபீடமுண்டு"*** – இந்தப் பலிபீடம் இயேசு கிறிஸ்து நமக்காக தம்மைத் தாமே கொடுத்து முடித்த பலியைக் காட்டுகிறது. பலிபீடத்தின்மேல் பலிமிருகத்தைச் சுட்டெரிக்கப்படுவதன்றி, அதின்மேல் வைத்து ஒரு மிருகத் ததையும் கொலை செய்வதில்லை (லேவி. 16:27; 4:12; 8:17; 9:11).

முந்தையக் காலத்தில் இஸ்ரவேலருக்கு ஆலயம், ஆசாரியன், பலிபீடம் எல்லாமிருந்தன. அந்தப் பழைய பலி பீடம், இயேசுவின் சிலுவை மரணத்திற்கு நிழலாக மட்டுமிருந்தது. ஆனால் இந்தப் பலிபீடமோ, அதாவது சிலுவை மரணமோ, அந்த நிழலுக்கு நிஜமான மெய்ப் பொருளாக உள்ளது.

பாவப் பரிகாரப் பண்டிகையின் மகா நாளன்று ஜனத்தின் பாவ நிவாரண பலியின் இரத்தத்தைத் திரைக்கு உட்புறமாகக் கொண்டு சென்று, உள்ளேயும் கிருபாசனத்தின் மேலும் தெளிக்க வேண்டும் (லேவி. 16:25). இவ்வாறு இரத்தம் எடுக்கப்பட்ட பலிமிருகங்களைப் பாளயத்தின் வெளியே கொண்டு போய் அவற்றின் தோலையும், மாம்சத்தையும், சாணியையும் நெருப்பிலே சுட்டெரிக்க வேண்டும் (16:27) . அதனை ஒருவனும் புசிக்கலாகாது, முற்றிலும் நெருப்பிலே எரிக்க வேண்டும்.

*"அந்தப்படியே, இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ் செய்யும்படியாக நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார்" (13:12).*

*"நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார்"* – பாவ நிவாரணத்திற்கெனப் பலியிடப்பட்ட காளை வெள்ளாட்டுக்கடா என்பவற்றின் உடல்கள் பாளயத் துக்கு வெளியே வைத்து எரிக்கப்பட்டு வந்தன (லேவி. 4:12; 8:17; 9:11; 16:27). அவ்வண்ணமே இயேசு கிறிஸ்துவும் நகர வாசலுக்கு வெளியே பாடுபட்டார் (யோவான் 19:17-20).

தொழுநோயாளி (லேவி. 13:36), 'தேவனை நிந்தித்தவன் (லேவி. 24:14), ஓய்வு நாளை மீறுகிறவன்' (எண். 15:35) ஆகியோர் பாளயத்துக்கு வெளியே தள்ளப்பட வேண்டியவர்களாவர். அவ்விடத்தில் குற்றவாளிகளாகிய அவர்கள் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும். இதுவே இறைக் கட்டளை. மாசு மறுவற்ற தேவ ஆட்டுக் குட்டியாகிய இயேசு கிறிஸ்துவை ஒரு கொடிய குற்றவாளி யைப் போல நகர் வாயிலுக்கு வெளியே கொண்டுபோய், கொல்லும்படி சிலுவை யில் அறைந்தனர்.

லேவியர் தலைமை ஆசாரியன் பாவ நிவாரண பலி மிருகத்தின் இரத்தத் தோடு அதி தூயகத்திற்குள் செல்லுவதைப்போல, இயேசு தம் சொந்த இரத்தத் தைக் கொண்டே விண்ணகத்திற்குள் சென்றுள்ளார் (9:12,24:10:20).

## *2) நமது நாட்டமும் தேட்டமும் (13:13,14)*

*"ஆகையால், நாம் அவருடைய நிந்தையைச் சுமந்து, பாளயத்துக்குப் புறம்பே அவரிடத்திற்குப் புறப்பட்டுப் போகக்கடவோம். நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை, வரப்போகிறதையே நாடித் தேடுகிறோம்" (13:13,14).*

*அவரிடத்திற்குப் புறப்பட்டுப் போகக்கடவோம் (13:13)* – நாமும் அவர் பட்ட நிந்தையை ஏற்று அவரிடம் போய்ச் சேருவோமாக. மத சம்பிரதாயப் பழக்க வழக்கத்தை விட்டு வெளியேறுவோம். யூத மத குருக்கள் அசுத்தமென்றெண்ணிய இடம், இன்று இயேசு பெருமான் வாயிலாக நமக்குப் பரிசுத்தமாக்கப் பட்டுள்ளது. மனிதனது பார்வையில் இன்று நாம் தொழுதுகொள்ளுமிடத்திற்குத் தனிச் சிறப்பேதுமில்லை. இயேசு கிறிஸ்து எங்கே இருக்கின்றாரோ அவ்விடமே தனிச்சிறப்பு வாய்ந்தது. அதுவே மெய்யான புனித இடம். நாம் அவரண்டையிலேயே செல்லுவோமாக!

*"வரப்போகிறதையே நாடித் தேடுகிறோம்" (13:14)* – உலகின் புகழ் மிக்க பெருநகரங்கள் எவையுமே நிலையானவையல்ல என்பது ஒரு வரலாற்று உண்மையாகும். எருசலேம் உலகின் பழமை வாய்ந்த ஒரு மாநகரம். மன்னர்களின் மணவாட்டியும், இறைவாக்கினர்களின் தாயுமென்றழைக்கப்படுகின்ற நகரம். இதைக் குறித்து யூதர்கள் அளவற்ற பெருமை கொண்டுள்ளனர். இந்தப் பழமை மிக்க நகரம் பன்முறை எதிரிகளின் ஆக்கிரமிப்புக்கு இரையாயிற்று. எதிரிகள் இந்நகரத்தைச் சூறையாடினர். கி. பி. 70-ல் உரோமர் வந்து எருசலேமை முற்றுகையிட்டு அதை அழித்தனர்.

இவ்வுலக எருசலேம், பரம எருசலேமுக்கு ஒரு நிழல் மட்டுமேயாகும். நாமோ, அழிவிற்குட்பட்டதும், நிழலானதுமான மண்ணிற்குரிய எருசலேமிலன்று, அதன் மெய்ப்பொருளாகிய பரம எருசலேமினிலே வாழுவோராவோம். நமது குடியிருப்பும் அங்கேதான் உள்ளது (பிலி. 3:20). இங்கே நாம் பரதேசிகளாக வாழ்கின்றோம். நமது நிலையான உறைவிடமாகிய பரம எருசலேமையே நாம் நாடிச் செல்லுவோமாக.

## 3) ஸ்தோத்திர பலி

> *"ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்" (13:15).*

***"அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனி"*** – வேறு சில மொழியாக்கங்களில், "அவருடைய நாமத்தை அறிக்கையிடுகிற உதடுகளின் கனி" என்றுள்ளது. இயேசு கிறிஸ்துவின், மகிமையையும், மாட்சிமையையும், அவருடைய குணாதிசயங்களையும், அறிக்கை செய்தும், போற்றியும் உதடுகளின் கனியாகிய நன்றியறிதலின் அறிக்கைகளை அவர் மூலமாய் எப்போதும் செலுத்தக்கடவோம்.

'உதடுகளின் கனி' – ஓசியா 14:2-ல் "உதடுகளின் காளைகளைச் செலுத்துவோம்" என்றுள்ளது (சங். 50:23; ஏசா. 57:19). இது கவனிக்கத்தக்கது.

*"ஸ்தோத்திரப்பலி"* – இது ஸ்தோத்திரம் செலுத்துவதாகிய பலி ஆகும். தேவனுக்கு முன்பு புதிய ஏற்பாட்டு விசுவாசிகள் *அனைவரும்* ஆசாரியர்களாவர் (1 பேதுரு 2:9; வெளி. 1:6; 5:10). இயேசு கிறிஸ்து நமது தலைமை ஆசாரியர் ஆவர். லேவியர் பாரம்பரியத்தின்படியான ஆசாரிய முறைமையோ, மிருகங்களைப் பலியிடுதலோ இன்று இல்லையென்றாலும், நாம் செலுத்தவேண்டிய பலிகளுண்டு. நமக்கு நாமே பலி செலுத்துவதற்குரிய உரிமையுமுண்டு. நமக்கிந்த நற்பேற்றினையளித்த இயேசு கிறிஸ்துவின் மேன்மையும், இப்புதிய உடன்படிக்கையின் மேன்மையும் போற்றற் கரியவையாமே!

*"எப்போதும்"* – யூதர்கள் சில குறிப்பிட்ட *இடத்தில்*, குறிப்பிட்ட *நாட்களில்*, சில குறிப்பிட்ட *வேளைகளிலுமே* பலிகளைச் செலுத்தி வந்தனர். நாமோ *என்றும், எங்கும், எப்பொழுதும்,* செலுத்தும் உரிமையைப் பெற்றுள்ளோம்.

***எபிரெய நிருபத்தில் வரும் பத்துக் கட்டளைகள்***

1) உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப்போனவனாகக் காணாதபடிக்குப் பயந்திருக்கக் கடவோம் (4:1).

2) நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக் கடவோம் (4:11).

3) நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக் கடவோம் (4:14).

4) நாம் இரக்கத்தைப் பெறவும் . . . சகாயஞ்செய்யும் கிருபையை அடையவும்,கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம் (4:16).

5) விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம் (10:22).

6) ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம் (10:25).

7) இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமை யோடே ஓடக்கடவோம் (12:1).

8) நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக் கொள்ளக்கடவோம் (12:28).

9) நாம் அவருடைய நிந்தையைச் சுமந்து, பாளயத்திற்குப் புறம்பே அவரிடத்திற்குப் புறப்பட்டுப் போகக்கடவோம் (13:13).

10) உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்பொழுதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம் (13:15).

மேற்கூறிய வசனங்களிலெல்லாம் "செய்யக் கடவோம்" (ஆங்கிலத்தில் Let us) என்று பணிக்கும் கட்டளைகளாக வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

***நன்மை செய்யவும் தான தர்மம் பண்ணவும் மறவாதிருங்கள் (13:16)***

*"அன்றியும் நன்மை செய்யவும், தான தர்மம் பண்ணவும் மறவாதிருங்கள்; இப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்" (13:16).*

உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியோடு சேர்த்துச் சொல்லப் பட்ட வையே, நன்மை செய்தலும், தான தருமம் பண்ணுதலும் ஆகும். விசுவாசிகள் பிறருக்கு உதவி புரிவதிலும், தாம் பெற்றுள்ள நன்மைகளைப் பிறருக்குப் பகிர்ந்து கொடுப்பதிலும் முன் நிற்க வேண்டும் (யாக்கோ. 1:27; கலா. 6:9; எபே. 2:10; 2 தெச. 3:13; தீத்து. 2:14; 3:8). இத்தகைய உதவி, கர்த்தருக்குச் சுகந்த வாசனையாகவும், உகந்த பலிப்பொருளாகவும் உள்ளது என்கிறான் பவுல் அப்போஸ்தலன் (பிலி. 4:18).

"நமது தேவ நம்பிக்கையை அறிக்கை செய்வதின் மூலம் நாம் நம் பாடுகளைத் தாங்குவோராயிருப்பின், ஸ்தோத்திரம் ஒரு பலியாக மாறுகின்றது. நன்கொடையின் வாயிலாக அந்நன்கொடையாளர் தரித்திரனாக மாறிவிடின் அதுவும் ஒரு பலியேயாகும்" – G. H. லாங்.[109]

## 4. கீழ்ப்படிந்து அடங்குங்கள் (13:17)

*"உங்களை நடத்துகிறவர்கள் உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத் தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப் படிந்து அடங்குங்கள், அவர்கள் துக்கத்தோடே அப்படிச்செய்தால் அது உங்க ளுக்குப் பிரயோஜனமாயிருக்க மாட்டாதே" (13:17).*

"உங்கள் தலைவர்களுக்குக் கீழ்ப்படியுங்கள், அவர்களுக்குப் பணிந்திருங் கள். உங்களைக் குறித்துத் தேவனுக்குக் கணக்குக்கொடுக்க வேண்டும் என்றிருப்பதால், அவர்கள் உங்கள் ஆன்ம நலனில் விழிப்பாய் இருக்கின்றனர். இப்பொறுப்பு அவர்களுக்கு மகிழ்ச்சியானதாய் இருக்கும்படி நடந்து கொள்ளுங்கள். மனத்துயர் தராதீர்கள். அவர்களுடைய துயரம் உங்களுக்கு நலம் பயக்காது" – R.C. மொழியாக்கம்.

"நடத்துகிறவர்கள்" – இச்சொல் மூப்பர்களாகிய மேய்ப்பர்களைக் குறிப்ப தாகும். அவர்கள் ஆளுவோரல்லர், அன்பினால் நடத்துபவராவர். கட்டளை யின் மூலமாயன்று, கரங்கொடுத்தும், கரம் பிடித்தும் நடத்துவோராவர். "அவர். . . ஆட்டுக்குட்டிகளைப் புயத்தினால் சேர்த்து, அவற்றை அன்போடு எடுத்து அரவணைத்து, கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார்" (ஏசா. 40:11) என்பதற்கு ஒப்பாக அவர்கள் நடத்துபவர்கள். அவர்கள் அரியாசனத்தில் அமர்ந்து ஆணை பிறப்பிப்பவரல்லர். அருகே உடனிருந்து அரவணைப்பவர்

கள். இறைவாக்கின்படி செம்மையான வழியைக் காட்டி மந்தைக்கு மாதிரியா யுள்ள மேய்ப்பர்களாகத் திகழுபவர்கள் (1 பேது. 5:3); அவர்களே நல்ல நடத்துநர்கள்.

***உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்கள்***

அதாவது, அவர்கள் உங்களைக் குறித்துத் தேவனுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டும் என்றே இது பொருள்படும். பிற மந்தையைச் சார்ந்தவர்கள் என்னென்ன செய்தார்கள் என்றோ, பிற ஆத்துமாக்களைப் பற்றிய கணக்கைத் தேவனுக்குக் கொடுக்க வேண்டும் என்பதன்று, மாறாகத் தம் மந்தையைச் சார்ந்த ஆடுகளின் ஆன்மீக நலனுக்காக மூப்பர்கள் 'நடத்துநர்கள்' என்னும் நிலையில் அவர்கள் என்ன செய்தார்கள் என்பது பற்றிய தத்தம் கணக்குகளைத் தேவ னுக்கு முன்பாக ஒப்புவிக்க வேண்டும் (ரோமர் 14:12; 1 பேதுரு 4:5).

***"அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்"***

முன்னமே "உங்களை நடத்தினவர்களை நினைத்துக் கொள்ளுங்கள்" (13:7) என்ற ஆசிரியர், இங்கே "நடத்துகிறவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்" (13:17) என்று மந்தையிலுள்ளவர்களுக்கு நல் ஆலோசனை தருகிறார்.

"கீழ்ப்படிந்து அடங்குங்கள்" என்றால், நடத்துகிறவர்களைக்கண்டு, பயந்து நடுங்கி நடத்துநர்களெல்லாம் ஒரு மேலான வகுப்பினர் என்றும்,நடத்தப்படு கிறவர்களெல்லாரும் ஒரு கீழ்நிலை வகுப்பினர் என்றும் பொருளல்ல, அன்பி னால், ஆம் கர்த்தருக்குப் பயந்து கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்றே இது பொருள்படும். நடத்துகிறவர்கள், தங்கள் பணிகளை மகிழ்ச்சியுடனும் சீராகவும் செய்ய மந்தையில் உள்ள அனைத்து விசுவாசிகளின் ஒத்துழைப்பும் கூட்டுறவும் மிகவும் அவசியம்.

விசுவாசிகள் அமைதியோடு, ஆண்டவருக்கு அஞ்சி நடந்து, ஆவியின் ஆறுதலோடும் அனுசரணையோடும் ஒத்துழைத்தாலன்றி, மூப்பர்களாகிய நடத்துநர்கள் பயனுடன் அவர்தம் பணியைச் செய்ய இயலாது.

## 5. ஜெபத்திற்கான அறை கூவல் (13:18,19)

*"எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள், நாங்கள் நல்மனச்சாட்சியுள்ளவர் களாய் எல்லாவற்றிலும் யோக்கியமாய் நடக்க விரும்புகிறோமென்று நிச்சயித் திருக்கிறோம். நான் அதிசீக்கிரமாய் உங்களிடத்தில் வரும்படிக்கு நீங்கள் இப்படி வேண்டிக்கொள்ளும்படி அதிகமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்" (13:18, 19).*

### *எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள் (13:18)*

தங்களுக்காக ஜெபிக்கும்படி ஆசிரியர் கேட்டுக்கொண்டதிலிருந்து ஆசிரியருக்கும் எபிரெய விசுவாசிகளுக்குமிடையேயுள்ள நெருக்கமும், பொறுப்புள்ள நட்பும் இருப்பது புலப்படுகின்றது.

இவ்வேண்டுகோள் பவுலின் நிருபங்களில் பன்முறை வருகின்றதைக் கவனியுங்கள் (ரோமர் 15:31,32; 2 கொரி. 1:11; எபே. 6:18; கொலோ. 4:4; 1 தெச. 5:25; 2 தெச. 3:2). இறை ஊழியர்களுக்கு, விசுவாசிகளின் ஜெப ஒத்துழைப்பு இன்றியமையாத ஒன்றாகும். ஆசிரியர் இரு காரியங்களுக்காக ஜெபிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறார்: ஒன்று, நல் மனச்சாட்சியுள்ளவர் களாய் நடக்கவும், இரண்டு, நூலாசிரியர் வாசகர்களிடத்தில் அதிசீக்கிரமாய் வரும் வாசல் திறக்கப்படும்படியும் ஜெபிக்க ஏவிவிடுகிறார்.

***நல்மனச்சாட்சி*** – ஒருவன் இரட்சிக்கப்படுகிற அதே வேளையில், சுத்திகரிக் கப்படுகின்றான். ஆனாலும் அவன் வசனத்தின்படி செய்ய வேண்டிய காரியங் களையும் கடமைகளையும் செய்து முடிக்கையிலேயே மனச்சாட்சி மேம்படு கின்றது.

### *நான் அதி சீக்கிரமாய் உங்களிடத்தில் வரும்படிக்கு (13:19)*

"வெகு சீக்கிரத்தில் நான் உங்களிடத்தில் வந்து சேரும்படிக்கு", "உங்களிடம் கூடிய விரைவில் நான் வந்து சேரும்படி" (TNBCLC), "நான் உங்களுக்குச் சீக்கிரமாய் மீண்டும் கிடைப்பதற்கு" என்றும் சில திருப்புதல்களில் உள்ளன.

எபிரெய நிருப ஆசிரியர் எபிரெயர்களில் ஒருவர். அவர் தற்பொழுது, வேறோர் இடத்தில் உள்ளார். அவர் வாசகர்களிடத்தில் சீக்கிரத்தில் வருவதற்கு ஏதோ ஓர் இடையூறு உள்ளது. ஒருவேளை நோயாகக்கூட இருக்கலாம். வசனம் 13:23-ன் படி இந்த இடையூறு சிறைவாசமன்று என்பது தெளிவு. தற்பொழுதுள்ள இடையூறு நீங்க அவர் ஜெபிக்க வேண்டுமென்கிறார்.[110]

# III. முடிவுரை

## 1. இறுதி வாழ்த்துரை (13:20,21)

*''நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தினாலே ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரான நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து ஏறிவரப்பண்ணின சமாதானத்தின் தேவன், இயேசு கிறிஸ்துவைக் கொண்டு தமக்கு முன்பாகப் பிரியமானதை உங்களில் நடப்பித்து, நீங்கள் தம்முடைய சித்தத்தின்படி செய்ய உங்களைச் சகலவித நற்கிரியையிலும், சீர்பொருந்தின வர்களாக்குவாராக; அவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென்'' (13 : 20, 21)*

"நித்திய உடன்படிக்கையின் இரத்தம்" (13:20) (மத். 26:28; எபி. 9:20 காண்க).

***"ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரான நம்முடைய கர்த்தராகிய இயேசு"*** – இது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையையும், பெருமையையும் எடுத்துக்காட்டும் பெயராகும். எபிரெய விசுவாசிகள் பலவற்றைப் பறி கொடுத்திருந்தனர். ஆனாலும், ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவில் வெளிப்பட்ட இறை அன்பிலிருந்து அவர்களைப் பிரிக்க எந்த ஒரு சக்தியாலும் இயலாது (ரோமர். 8:38,39).

***"பெரிய மேய்ப்பர்"*** – இயேசு "நானே நல்ல மேய்ப்பன்" என்று தம்மையே வெளிப்படுத்தினார். ஆனால் எபிரெய நிருப ஆசிரியர், இயேசுவைப் பெரிய மேய்ப்பர் என்றழைக்கிறார். நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன்னுயிரைக் கொடுத்தார். இறந்தோரினின்று உயிர்த்தெழுந்த பின்னர், அவர் பெரிய மேய்ப் பராய்த் திகழ்கின்றார். பெரிய மேய்ப்பர் என்பது அவரது உயிர்த்தெழுதலைக் குறிக்கும் சிறப்புப் பெயராகும்.[111]

***மரித்தோரிலிருந்து ஏறிவந்தவர்*** – இந்நிருபத்தில் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப் பற்றிக் கூறியிருப்பது இவ்வசனத்தில் மட்டுமேயாகும்.

***சமாதானத்தின் தேவன்*** – இத்தொடர் பவுலின் நிருபங்களிலும் உபயோகித் திருப்பதைக் காண்க (ரோமர் 15:33; பிலி. 4:9; 1 தெச. 5:23). சமாதானத்தின் ஊற்றும், சமாதானத்தின் காரண கர்த்தரும், சமாதானத்தைத் தருபவரும் தேவனேயாவார். பாவ நிவாரணதிற்கெனத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தவரும் இறந்தோரினின்று உயிர்த்தெழுந்தவருமான இயேசு கிறிஸ்துவே நமக்குச் சமாதானத்தைத் தந்துள்ளவர் (யோவா. 14:27; ரோமர் 5:1; எபே. 2:14; கொலோ. 1:20).

***பிரியமானதை. . . நடப்பித்து. . . தம்முடைய சித்தத்தின்படி செய்ய (13:21)*** – தேவ சித்தத்தைச் செய்வதே விசுவாசியின் கடமை. கர்த்தர் தம்முடைய தய

வுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உண்டாக்குகிறவ ராயிருக்கிறார் (பிலி. 2:13). கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப் பாருங்கள் என்று பவுல் கூறியுள்ளான்.

*"அவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக"* – அவருக்கு மகிமை உண்டாவதாக. பிதாவாகிய தேவனுக்கா, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கா? இருவிருவருக்குமே மகிமை உண்டாவதாக என்று பொருள் கொள்ளுவதே சிறப்பு (ரோமர் 16:27; 1 பேதுரு 4:11; வெளி. 5:13).

*'ஆமென்'* – இது ஒரு எபிரெயச் சொல்லாகும். இயேசு கிறிஸ்துவின் ஒரு சிறப்புப் பெயராக இதை யோவான் எடுத்து எழுதியுள்ளார் (வெளி. 3:14). திருமறை நூலின் பெருவாரியான மொழியாக்கங்களிலும் – அபூர்வமான சில இடங்கள் நீங்கலாக 'ஆமென்' என்ற சொல் அவ்வண்ணமே பயன்படுத்தப் பட்டுள்ளது. இச்சொல் "ஆம், அப்படியே ஆகக்கடவது"; "மெய்யாகவே" என்ற பொருள் கொண்டிருக்கிறது. இவ்வார்த்தை ஆதி. 15:6-ல். விசுவாசித்தான் (believe) என்றும், ஏசா. 65:16-ல், (சத்திய தேவன்) மற்றும் இது அப்படியே ஆகும் (So be it) எனவும் பெயர்க்கப்பட்டுள்ளன. ஓர் உண்மையை உறுதிபட உள்ளது என்று காண்பிக்கும் பொருட்டு கர்த்தர் தாமே இச்சொல்லைப் பயன் படுத்தியுள்ளார். புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலருடைய நடபடிகள், யாக்கோபு, 3 யோவான் ஆகிய நூல்கள் நீங்கலாக, ஏனைய நூல்கள் அனைத்துமே 'ஆமென்' என்ற சொல்லுடன் முற்றுப்பெற்றுள்ளன.

## வாழ்த்துதலும் ஆசி வழங்குதலும்
## (13:22-25)

### *1. ஆசிரியரின் தனிப்பட்ட குறிப்புகள் (13:22,23)*

*"சகோதரரே, நான் சுருக்கமாய் உங்களுக்கு எழுதின இந்தப் புத்திமதியான வார்த்தைகளை நீங்கள் பொறுமையாய் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக் கொள்ளுகிறேன். சகோதரனாகிய தீமோத்தேயு விடுதலையாக்கப்பட்டா னென்று அறிவீர்களாக, அவன் சீக்கிரமாய் வந்தால், அவனுடனே கூட நான் வந்து உங்களைக் காண்பேன்" (13:22,23).*

*"சுருக்கமாய்"* – ஒரு சிலர், பொருளின் முக்கியத்துவத்தைப் பார்க்கையில் இந்த நிருபம் சுருக்கமாய் எழுதப்பட்டுள்ளது என்கின்றனர். வேறு சிலர் "சுருக்கமாய்" என்னுங் கூற்று, பதிமூன்றாம் அதிகாரத்தை மட்டுமே குறிக்கின்றது என்று எடுத்துக்கொள்ளுகின்றனர்.

ஒரு மணி நேரத்தில் படித்து முடித்துவிடக்கூடியது இந்நிருபம்! ஆனால் இந்த நிருபத்தில் கூறப்பட்டுள்ள கருப்பொருளோ முடிவே இல்லாதது என்பதே மாபெரும் உண்மையாகும்.[112] எனவே இது மிகச் சிறப்பான ஓர் இடத்தைப் பெறும் ஒரு நிருபமாக விளங்குகிறது.

***"புத்திமதியான வார்த்தைகள்"*** – புதிய ஏற்பாட்டில் உள்ள 27 நூல்களுள், 21 நிருபங்கள் போதனைகளோடு கூடிய அறிவுரை நூல்கள் என்ற பகுதியாக உள்ளன. அவற்றுள் போதனை சம்பந்தப்பட்ட நிருபங்களில் உட்பட்டதே எபிரெயருக்கு எழுதிய நிருபம் (முன்னுரை காண்க).

***"சகோதரனாகிய தீமோத்தேயு விடுதலையாக்கப்பட்டான்"*** – பவுல் தீமோத்தேயுவைச் சகோதரன் எனவும் அழைத்துள்ளான் (2 கொரி. 1:1). தீமோத்தேயு காவலில் வைக்கப்பட்டதாக, பவுல் எங்கேயுங் குறிப்பிடவில்லை. எனவே விடுதலையாக்கப்பட்டான் என்பதற்கு காவலினின்று விடுதலை யாக்கப்பட்டான் என்று பொருளாகாது. ஏதோ ஒரு குறிப்பிட்ட காரியத்திற்கு என்று அனுப்பப்பட்டிருப்பதைக் (Sent away on some commission) குறிப்பதாகும். அந்தக்காரியத்தினின்று விடுவிக்கப்படுவதையே "விடுதலை யாக்கப்பட்டான்" என்னுஞ் சொற்றொடர் காட்டுகின்றது என்கின்றனர் சில மறை நூல் வல்லுநர்கள்.[113]

***"சீக்கிரமாய். . . நான் வந்து, உங்களைக் காண்பேன்"*** – இதே நடையில் தான் பவுலும் தன் நிருபங்களில் எழுதியுள்ளான் (ரோமர் 1:11; 1 தெச. 2:17; 3:6, 10). பிலிப்பியர், கொலோசெயர், பிலேமோன், ஆகிய நிருபங்களைப் பவுல் எழுதுகையில், தீமோத்தேயுவும் பவுலோடுங்கூட ரோமாபுரியில் இருந்திருக்கக் கூடும். அதன் பின்பு. தீமோத்தேயுவை எபேசு பட்டணத்திலிருப்பதாகக் காண்கின்றோம் (2 தீமோ. 4:9).

## *2. வாழ்த்துதலும் ஆசி வழங்குதலும் (13:24,25)*

*"உங்களை நடத்துகிறவர்களையும், பரிசுத்தவான்கள் யாவரையும் வாழ்த் துங்கள், இத்தாலியா தேசத்தார் யாவரும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லு கிறார்கள். கிருபையானது உங்களனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்" (13:24, 25).*

***"நடத்துகிறவர்களை . . . வாழ்த்துங்கள்" (13:24)*** – நடத்தினவர்களை நினைத்துப் பின்பற்றுங்கள் (13:7). நடத்துகிறவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங் குங்கள் (13:17). கடைசியாக, வாழ்த்துங்கள் என்கின்றார் ஆசிரியர் (13:24). நடத்துகிறவர்கள் இருமடங்கு மதிப்பிற்குரியவர்கள் (1 தீமோ. 5:17). அவர்களை வாழ்த்துவதற்கு ஆசிரியர் முந்துகிறார். அதோடுகூட எல்லாப் பரிசுத்தவான் களையும் வாழ்த்துகிறார்.

*"இத்தாலியா தேசத்தார் யாவரும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்"* – "இத்தாலிய நாட்டுச் சகோதரர்கள் உங்களுக்கு வாழ்த்துக் கூறுகின்றனர்" (TNBCLC மொழியாக்கம்). "இத்தாலியாவில் இருந்து வந்துள்ள சகோதரர்கள்" என்று ஆங்கில புதிய திருப்புதலில் உள்ளது. இக்கூற்றினின்று இந்நிருபம் இத்தாலியில் அல்லது உரோமாபுரியிலிருந்து தான் எழுதப்பட்டது என உறுதியாகக்கூற இயலாது. இந்த நிருபத்தை எழுதுகையில், இத்தாலியா நாட்டினின்று சில சகோதரர்கள், நூலாசிரியரிடத்தில் வந்திருந்தனர். ஆகவே திருமுகத்தின் இறுதியில், அவர்களுடைய வாழ்த்துதலையும் ஆசிரியர் சேர்த்து எபிரெய விசுவாசிகளுக்கு அறிவிக்கின்றார்.

### *"கிருபையானது உங்களனைவரோடுங்கூட இருப்பதாக" (12:25)*

இது அக்காலத்திய கடிதமெழுத்துக்கலையின் சிறப்பான முறையாகும். பவுல் அப்போஸ்தலனும் இத்தகைய ஆசிகூறி தனது நிருபங்களை நிறைவு படுத்தியுள்ளான் (ரோமர் 16:20; 1 கொரி. 16:23; கலா. 6:18; எபே. 6:24; 2 தெச. 3:18). எபிரெய நிருப ஆசிரியருக்கும் இது விதிவிலக்கன்றே!

*"கிருபை"* – நமது தகுதியின்மையைப் பாராமலும், எவ்விதக் கைம்மாற்றையும் எதிர் நோக்காமலும் கர்த்தர் காட்டும் ஈவைக் கிருபை எனலாம். ஆம் கால, தேச வேற்றுமையின்றி ஆசீர்வதிப்பதற்கான தேவ அருளை நாம் பெற்றிருப்பது எத்தனை பெரிய சிறப்புப் பாருங்கள் (ஆதி. 6:8; வெளி. 22:21)! ஆகையினால் நாம் தக்க வேளையில் உதவக்கூடிய அருளைக் கண்டடையவும், இரக்கத்தைப் பெறவும் இறையருளாளரின் அரியணையை அணுகிச்செல்லத் துணிவோமாக!

*ஆமென்! அப்படியே ஆகக்கடவது!*

**எபிரெயருக்கு எழுதின நிருபத்தின் விளக்கவுரை**

**நிறைவு பெறுகிறது.**

# மேற்கோள் அடிக்குறிப்புகள்

பற்பல எழுத்தாளர்களின், வேதப்பண்டிதர்களின் எழுத்துகளையும் மற்றும் கருத்துகளையும், மேற்கோள்களையும் இவ்விரிவுரையின் நெடுகிலும் காணலாம். இவற்றை எடுத்துள்ள எழுத்தாளர்கள், புத்தகங்களின் விவரங்கள் இங்கு கொடுக்கப் பட்டுள்ளன.

**Introduction**


1 H.C. Thissan, Int. p.297.
2 H.C. Thissan, Int. Vol. p.294.
3 F. F. Bruce, The Epistle to the Hebrews, p.xi.
4 H.C. Thissan, Int. p.301.
5 The International Standard Bible, Vol.II, p.664.
6 Usibias (BC 265 - 339).
7 F. F. Bruce, The Epistle to the Hebrews, Ind. p.lxvi.
8 Ecclesiastical History, Vol.25.
9 B. F. Westcott,. The Epistle to the Hebrews, ixxii.
10 B. F. Westcott,. The Epistle to the Hebrews, ixxii.10.
11 F. F. Bruce, The Epistle to the Hebrews, Ind. xxxix.
12 H.C. Thissan, Int. p.300.
13 H.C. Thissan, Int. p.300.
14 H.C. Thissan, Int. p.300.
15 B. F. Westcott, Ex p.lxii.
16 The International Standard Bible, Vol.II, p.665.
17 B. F. Westcott, The Epistle to the Hebrews, lxii.
18 New Scofield Reference Bible; Introduction to Hebrews.
19 B. F. Westcott, The Epistle to the Hebrews, p.lxxi.
20 B. F. Westcott, The Epistle to the Hebrews, p.lxxviii.
21 Dr Rees "The Eplistle to the Hebrews. ISB, Enclopedia p.1355.
22 The Bible Knowledge Commentary, Vol.II p.778.
23 Zahn ITNT Vol.II p.303,304.
24 K.G. Kurian, Malayalam Exposition on Hebrews.

25 B. F. Westcott, The Epistle to the Hebrews,. P.xxxvi.
26 The Expositors Bible Commentary, Vol.XII, p.4-Hebrews.
27 H.C. Thissan, Int. p.302.
28 H.C. Thissan, Int. p.302.
29 J Moffat, H Windiscb and Good Speed are of this opinion.
30 B. F. Westcott, The Epistle to the Hebrews, p.xxxvi-xii.
31 H.C. Thissan, Int. p.302.
32 B. F. Westcott, The Epistle to the Hebrews, p.xlxx.
33 H.C. Thissan, Int. p.304.
34 B. F. Westcott, The Epistle to the Hebrews, p.xiii.
35 F.F. Bruce, The Epistle to the Hebrews, p.415.
36 B. F. Westcott, The Epistle to the Hebrews, p.xliv

**Body of the Book**

1 F.F. Bruce, The Epistle to the Hebrews, p.3.
2 F.F. Bruce, The Epistle to the Hebrews, p.4.
3 F.F. Bruce, The Epistle to the Hebrews, p.5.
4 K.G. Kurian, Malayalam Exposition on Hebrews, p.24.
5 F.F. Bruce, The Epistle to the Hebrews, p.7.
6 F.F. Bruce, The Epistle to the Hebrews, p.11.
7 The Expositors Bible Commentary, Vol.XII p.16.
8 B.F. Westcott, The Epistle to the Hebrews, p.23.
9 F.F. Bruce, The Epistle to the Hebrews, p.16.
10 B.F. Westcott, The Epistle to the Hebrews, p.22.
11 The Bible Knowledge Commentary, Vol.II, p.22.
12 NIV Study Bible.
13 WMC The Bible Exposition Commentary, Hebrew p.17.
14 F.F. Bruce, The Epistle to the Hebrews, p.18.
15 K.G. Kurian, Malayalam Exposition on Hebrews, p.30.
16 F.F. Bruce The Epistle to the Hebrews, p.25.
17 K.G. Kurian, Malayalam Exposition on Hebrews.
18 K.G. Kurian, Malayalam Exposition on Hebrews.
19 The Expositors Bible Commentary, Vol.II p.268.
20 Vincent.

21 F.F. Bruce, The Epistle to the Hebrews, p.33.
22 The Bible Exposition Commentary, Vol.II, p.282.
23 The Bible Exposition Commentary, Vol.II, p.283.
24 The Bible Exposition Commentary, Vol.II, p.283.
25 The Bible Knowledge Commentary, Vol.II, p.784.
26 The Expositors Bible Commentary, Vol.XII, p.26.
27 K.G. Kurian, Malayalam Exposition on Hebrews.
28 The Expositors Bible Commentary, Vol.XII, p.26.
29 The Expositors Bible Commentary, Vol. XII, p.27.
30 K.G. Kurian, Malayalam Exposition on Hebrews..
31 The Bible Exposition Commentary, Vol.II, p.284.
32 The Bible Exposition Commentary, Vol.II, p.285.
33 Life of Moses, Philip.
34 TEPT p.74.
35 The Bible Knowledge Commentary, Vol.II, p.786.
36 The Expositors Bible Commentary, Vol.XII, p.32.
37 F.F. Bruce, The Epistle to the Hebrews, p.58 .
38 K.G. Kurian, Malayalam Exposition on Hebrews, p.53.
39 The Expositors Bible Commentary, Vol. XII. P.42.
40 The Expositors Bible Commentary, Vol.XII, p.43.
41 K.G. Kurian, Malayalam Exposition on Hebrews, p.63.
42 The Epistle to the Hebrews.
43 K.G. Kurian, Malayalam Exposition on Hebrews, p.67.
44 In 174 BC Jason and Menelaus were appointed as the High Priest by the Antiochus IV.
45 The Bible Knowledge Commentary, Vol.II, p.793.
46 F. F. Bruce, The Epistle to the Hebrews.
47 B.F. Westcott, The Epistle to the Hebrews, p.126.
48 B.F. Westcott, The Epistle to the Hebrews, p.115,116.
49 B.F. Westcott, The Epistle to the Hebrews, p.145.
50 K.G. Kurian, Malayalam Exposition on Hebrews, p.81.
51 B.F. Westcott, The Epistle to the Hebrews, p.215.
52 B.F. Westcott, The Epistle to the Hebrews, p.220.

53 F. F. Bruce, The Epistle to the Hebrews, p.173.
54 The Epistle to the Hebrews, p220,221.
55 K.G. Kurian, Malayalam Exposition on Hebrews, p.120.
56 K.G. Kurian, Malayalam Exposition on Hebrews.
57 The Epistle to the Hebrews, p.205.
58 K.G. Kurian, Malayalam Exposition on Hebrews, p.126.
59 B.F. Westcott, The Epistle to the Hebrews, p.264.
60 F. F. Bruce, The Epistle to the Hebrews, p.213.
61 B.F. Westcott, The Epistle to the Hebrews, p.265-301.
62 B.F. Westcott, The Epistle to the Hebrews, p.268.
63 F.F. Bruce, The Epistle to the Hebrews, p.268.
64 B.F. Westcott, The Epistle to the Hebrews,
65 B.F. Westcott, The Epistle to the Hebrews, p.275.
66 B.F. Westcott, The Epistle to the Hebrews, p.276.
67 B.F. Westcott, The Epistle to the Hebrews, p.309.
68 The Expositors Bible Commentary, Vol.XII, p.98.
69 The Bible Knowledge Commentary, Vol.II, p.803.
70 F. F. Bruce, The Epistle to the Hebrews, p.232.
71 F. F. Bruce, The Epistle to the Hebrews, p.233.
72 John Owen, *The Holy Spirit,* p.28.
73 B.F. Westcott, The Epistle to the Hebrews, p.349.
74 B.F. Westcott, The Epistle to the Hebrews, p.349.
75 F. F. Bruce, The Epistle to the Hebrews, p.284.
76 The Expositors Bible Commentary, Vol.XII, p.124.
77 The Expositors Bible Commentary, Vol.XII, p.128.
78 The Epistle to the Hebrews, p.334.
79 F. F. Bruce, The Epistle to the Hebrews, p.336.
80 F. F. Bruce, The Epistle to the Hebrews, p.339.
81 Assention of Isiah.
82 The Expositors Bible Commentary, Vol.XII, p.132.
83 The Expositors Bible Commentary, Vol.XII, p.133.
84 K.G. Kurian, Malayalam Exposition on Hebrews.
85 F. F. Bruce, The Epistle to the Hebrews, p.352-363.

86 F. F. Bruce, The Epistle to the Hebrews, p.357.
87 The Expositors Bible Commentary, Vol.XII, p.136..
88 K.G. Kurian, Malayalam Exposition on Hebrews, p.182.
89 The Expositors Bible Commentary,, Vol.II, p.132-138.
90 F. F. Bruce, The Epistle to the Hebrews, p.361.
91 The Expositors Bible Commentary, Vol.XII, p.138.
92 The Expositors Bible Commentary, Vol.XII, p.139.
93 F. F. Bruce, The Epistle to the Hebrews, p.366.
94 The Expositors Bible Commentary, Vol.XII, p.140.
95 K.G. Kurian, Malayalam Exposition on Hebrews, p.186.
96 The Epistle to the Hebrews, p.183,184.
97 K.G. Kurian, Malayalam Exposition on Hebrews, p.183,184.
98 The Expositors Bible Commentary, Vol.XII, p.140.
99 B.F. Westcott, The Epistle to the Hebrews, p.409.
100 The Expositors Bible Commentary, Vol.XII, p.141; and B.F. Westcott, The Epistle to the Hebrews, p.372.
101 . The Expositors Bible Commentary, Vol.XII, p.145.
102 B.F. Westcott, The Epistle to the Hebrews, p.429.
103 F. F. Bruce, The Epistle to the Hebrews, p.389.
104 The Letters to the Hebrews, p.192.
105 B.F. Westcott, The Epistle to the Hebrews, p.431.
106 F. F. Bruce, The Epistle to the Hebrews, p.395.
107 K.G. Kurian, Malayalam Exposition on Hebrews, p.195.
108 F. F. Bruce, The Epistle to the Hebrews, p.396.
109 K.G. Kurian, Malayalam Exposition on Hebrews, p.204.
110 F. F. Bruce, The Epistle to the Hebrews, p.400.
111 The Letters to the Hebrews,, p.201.
112 F. F. Bruce, The Epistle to the Hebrews, p.413.
113 F. F. Bruce, The Epistle to the Hebrews, p.414.

*மோரியா வெளியீடு:*

# வேதாகமப் போதனைக் கோட்பாடுகளும் நடைமுறை ஒழுங்குகளும்

இறைவனின் சீரிய குணநலன்களையும், மனிதனைப் பற்றிய அவரது நோக்கத்தையும் எடுத்தியம்பும் நூல் தூய திருமறை யாகும். நிலைபேறான விண்வீட்டினை அவன் அடைவதற்கான வழியினை, ஈடேற்றாளராகிய இயேசு கிறிஸ்து எங்ஙனம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்பதனையும், அதை அவன் எவ்வாறு பற்றிக்கொள்ள வேண்டும் என்பதனையும் திருமறையே தெளிவாக விளக்குகிறது. அவ்விதப் பற்றுறுதி (விசுவாசம்) கொண்ட இறை மக்களது வாழ்க்கை, ஐக்கியம், ஊழியங்கள், மற்றும் திருச்சபையைக் குறித்த ஒழுங்குகள் ஆகியவை திருமறை நெடுகிலும் பரவிக்கிடக்கின்றன. அவற்றை ஒன்று கூட்டி, வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்கு ஒப்பாக இந்நூல் எடுத்தளிக்கிறது. கிறிஸ்தவப் பெருமக்கள் அவற்றைக்கற்றறிந்து, தங்களது வாழ்க்கை நடைமுறையில் கைக்கொண்டு சிறக்கவும், இன்றைய இளைய தலைமுறைக்குக் கற்பிக்கவும், இந்நூல் பேருதவியாக இருக்கும். வாங்கி பயனடைவீர்!

**விலை: ரூ. 35/–**

**மோரியா ஊழியங்கள்**
தபால் பெட்டி எண். 2540
செனாய் நகர்
சென்னை - 600 030

**மோரியா ஊழியங்கள்**
பெத்தனி சுவிசேஷ மன்றம்
16, வடக்க தெரு, மன்னார்புரம்
திருச்சி - 620 020

# இவர் எவ்வளவு பெரியவர்

## எபிரெயர் நிருபத்திற்கு விளக்கவுரை



**திருமறையின்** புத்தகங்களுக்கு விரிவுரையாக அமையும் தமிழ் வெளியீடுகளில் இது முதன்மை இடத்தைப் பெறுகிறது. இதன் ஆசிரியர் தன் நுண்ணிய அறிவுடனும், பரந்த அனுபவத்துடனும், பல ஆங்கில விரிவுரை களையும், ஆராய்ச்சி நூல்களையும் துருவி ஆய்ந்து, இதனைப் பயனுள்ள வகையில் அழகுற எழுதியுள்ளார். போதனை ஆழமுள்ள எபிரெய நிருபத்தில் அடங்கியுள்ள சத்தியங்களையும், பழைய உடன்படிக்கையில் நிழல் உருவங்களாக அமைந்துள்ள நபர்கள், முறைமைகள், பண்டிகைகள் இவைகள் சுட்டிக்காட்டும் மெய்ப்பொருளையும் எளிமை யாகவும், தெளிவாகவும் விவரித்துள்ளார்.

இந்நிருபத்தில் அடங்கியுள்ள இறைச்சத்தியங்களை எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் பகுதி பகுதியாகப் பிரித்து, பத்தி பத்தியாக விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்நூலாசிரியர் பற்பல ஆசிரியர்களின் எழுத்துக் களை மேற்கோள்காட்டி, தன் சிந்தனைகளுக்கு வலுகொடுத்திருக்கிறார். வேதபண்டிதர்களுக்கிடையில் பிரச்சனைக்குரிய பாகங்களுக்குத் தகுந்த விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன. ஆங்காங்கே காணப்படும் சிக்கல்களைப் போக்கி, எச்சரிப்புக்களைக் கொடுத்து விசுவாசிக்குத் தேவையான ஆவிக்குரிய வளர்ச்சிக்கு ஆதாரமாக்கி படிப்பினைகளைக் கொடுத்துள்ளார்.

*வேதாகம விளக்கவுரை*

**மோரியா ஊழியங்கள்**
தபால் பெட்டி எண் 2540
சென்னை – 600 030.

விலை ரூ.120/-

1282
Bible Book Club
120.00